# அவள்

லா. ச. ராமாமிருதம்

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : அக்டோபர் 1995

திருநாவுக்கரசு தயாரிப்பு

விலை : ரூ. 90-00

நேரு அச்சகம் 43 அம்மையப்பன் தெரு சென்னை-600 014

# சமர்ப்பணம்

அம்மா

ஹைமவதி

சிவஜனனி

# சொர்க்க வாசல்

இன்று ஜனனி வருகிறாள். ஹோசூரிலிருந்து வந்து கொண்டேயிருக்கிறாள். இதோ வந்துவிடுவாள். வந்து விட்டாள். வாசலில் ஆட்டோ நிற்கும் சத்தம் கேட்கிறது. அதற்குமேல் என்னால் தாங்க முடியவில்லை. வாசலுக்கு விரைகிறேன். கண்ணனும் ஷோபாவும் இறங்கிக்கொண் டிருக்கிறார்கள்.

''பாப்பூ! யாரு வரா பாரு!''

குழந்தையின் கண்களில் ஒருகணம் திகைப்பு. உடனேயே அடையாளம் வந்துவிட்டது. ''க்றீச்!'' என்று கொக்கரித்த வண்ணம் என்னிடம் பாய்கிறாள். அந்த வேகம் என்னால் தாங்க முடியவில்லை. விழுந்து விடுவேனோ? இல்லை, சமாளித்துக்கொண்டு விட்டேன்.

''செல்லக்குட்டித் தாத்தா!'' கன்னத்துடன் கன்னம் வைத்துக்கொள்கிறாள். என் கன்னங்களைத் தன் கைகளில் பற்றி இழுத்து முத்தமிடுகிறாள். எலும்பு உருகுகிறது.

''குத்துது தாத்தா!''

என் வாழ்க்கையின் வட்டக்கோடின் ஆரம்பப் புள்ளியைப் பேத்தி வழி மீண்டும் தொட்டுவிட்டேன் எனத் தோன்றுகிறது.

ஏதோ ஞாபகம் வந்து என் கைகளினின்று அவசர மாய் இழிகிறாள்.

"சீகாந்த் எங்கே? சின்னியக்கா எங்கே?"

தோளைக் குலுக்கிக்கொண்டு உடம்பை ஆட்டிக் கொண்டு உள்ளே ஓடுகிறாள்.

அவள் செய்கைகளை, அங்க அசைவுகளைப் பார்த்துக் கொண்டிருந்தாலே எனக்குப் போதும். அவளாவே வந்து என்மேல் ஆசையாக மோதும் சமயங்களே போதும் ஆனந்தம் கண்டுவிடுகிறேன். இன்னும் ஒரு வாரத்துக்கு அவள் ப்ரஸன்னம் என்னுள் ஒளிரிக்கொண்டிருக்கும்.

வரைந்த கோடு மாதிரி ஸன்னமாயிருக்கிறாள். இன்னும் கொஞ்சம் சதைப்பிடிப்பாயிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்கும்! சாப்பிட ரொம்பவும் படுத்தறாள்.

இன்னும் இரண்டு பூர்த்தியாகவில்லை. கொள்ளைப் பேச்சு. ப்ரமிக்கும்படி அஸாத்யமான ஞாபகம்.

மாலைப் பொழுது காற்று வாங்க வாசற்குறடில் உட்கார்ந்திருக்கிறோம். காற்றும் தயை புரிகிறது.

குழந்தை உள்ளேயிருந்து வருகிறாள்.

வீட்டுக்கு வேலியுள், குறடோரமாயிருக்கும் பிள்ளையார் கோயில் வாசற்படியில் நெற்றியை வைத்துக் கொண்டு, "பிள்ளையாரப்பா! பாட்டி, தாத்தாக்கு ஓம்பு சரியாப் போணும்!" என்று வேண்டிக்கொள்கிறாள்.

அவள் அப்பனும் ஆயியும் சொல்லிக் கொடுத்த வார்த்தைகள்தான். வார்த்தைகள் மற்றவரது. ஆனால் வேண்டிக்கொள்ளும் நம்பிக்கை அவளுடையது. பிள்ளை யாரப்பா அவள் சொன்னபடி கேட்பார். அவளுக்குச் சந்தேகமே கிடையாது. நம்பிக்கையை, அதன் பெயர் நம்பிக்கை என்று அறியாது. ஆனால் நம்பிக்கைக்கும்

முற்பட்டு அகிலமெங்கும் பரவி இயங்கிக்கொண்டு அவள், தன் பங்குக்குப் பிறவியுடன் கொணர்ந்திருக்கும் மூலாதார சக்தியின் அசத்ய நாடி அது. இன்னும் யோசித்தால் இப்போது அவளே அதுதான்.

இனிமேல்தான் நம் மாசுகள், அழுக்குகள் படிந்து, பிசுக்கேற வேண்டும். அதற்குமுன்னரே ஜனனி உன் துல்லியத்தில் உன் தரிசனம் கிட்டுகிறதே, நான் பாக்ய வான்

எங்கள் வாசல் பிள்ளையார் சக்தி வாய்ந்தவர். அவர் உண்டிக்கு அவ்வப்போது போடும் காசுக்கு அவர் நிறைவேற்றும் கோரிக்கைகள் மிகப் பெரியன. நிச்சயமாய் அவர் ஹைமவதியின் பேச்சுக்குக் கூடவே செவி சாய்க்கிறார் என்றே எங்கள் அபிப்பிராயம். "எனக்கு இதில் நம்பிக்கையில்லை, அதில் நம்பிக்கை யில்லை" என்று எங்களுள் பீற்றிக் கொள்பவர்கூட, தமக்காக அவளை வேண்டிக்கச் சொல்லி தம் காரியங் களைச் சாதித்துக் கொள்வதுமுண்டு. உறவின் பிசுக்குக்கு எங்கள் பிள்ளையார் அப்பாற்பட்டவரல்ல; அவளுக்கு அவர் தாக்ஷண்யப்படக் காரணமிருக்கிறது.

பத்துப் பன்னிரண்டு வருடங்களுக்கு முன் ஒருநாள் மதியம் நான் பழைய காயிதங்களின் வழி என் பழைய நினைவுகளைப் புரட்டிக்கொண்டு அவைகளில் ஊன்றி யிருக்கையில்:

"லாசப்பா, லாசப்பா! இதைப் பாருங்களேன்! பாருங்களேன்!!"

கத்திக்கொண்டே கிணற்றடியிலிருந்து ஓடி வந்தாள். அவளுக்கு உடல் பதறிற்று. கண்கள் ஒளி வீசின. குழந்தை முகமாகிவிட்டாள். ஏந்திய கைகள் நடுங்கின. அவைகளுள் ஒரு குட்டிப் பிள்ளையார் விக்ரஹம். அவள் பரபரப்பு என்னையும் தொற்றிக்கொண்டது.

"எங்கே கிடைச்சுது?"

"நேத்து, கிணத்துலே தூர் வாரித்தா, வெளியில் கொட்டியிருந்த சேறை நோண்டிண்டிருந்தேன். அவ் வப்போ கிணத்துள் விழுந்துடறதே சில்லுண்டி சாமான் கள் கிடைக்காதா? இவர் கிடைச்சார்."

உடனேயே பிள்ளையாருக்குக் கோவில் கட்ட ஆரம்பித்துவிட்டாள். ஹைமவதியின் உற்சாகம் அபூர்வமானது. ஆரம்ப சூரத்துடன் நின்றுவிடாது. யார் கேலி பண்ணினாலும் அவளுக்கு அக்கறையில்லை. சாமான்கள் உடனே அவளுக்கு எங்கேதான் கிடைக்குமோ?

வாசல் குறடோரமாய் ஒன்றரை அடி உயரத்துக்கு அவள் கையாலேயே இரண்டு மண் சுவர்கள் எழுப்பி, மேலே ஒரு ஜாதிக்காய்ப் பலகையைக் கூரை பதித்து உள்ளே பிள்ளையார் எழுந்தருளி விட்டார். இரவே மடியாய் கொழுக்கட்டை நைவேத்யம்.

ஓரிரு மாதங்களுக்குப் பின்னர், வீட்டைப் பழுது பார்க்க நேர்ந்தபோது கொல்லன், பிள்ளையாருக்குத் தன் காணிக்கையாக, உருப்படியாகச் செங்கல் சுவர்கள் எழுப்பி, மேலே கூரையெழுப்பி, பிள்ளையாருக்குக் கோவில் கட்டித் தந்துவிட்டான்.

ஹைமவதிக்குக் கண் கண்டது கை செய்யும். உடனே செய்துவிட வேண்டும்.

"சோம்பல் பட்டோம்னா, அப்புறம் மொச மொசாத் தான்."

* * *

மாலை, சரவணன் வந்தான்.

"ஆயாக் கிழவி செத்துப் போச்சி."

"எப்படி?"

"மத்யானம் மூணு மணியிருக்கும். நாளைக்கு எடுப் பாங்க." குரலில் எந்த உணர்ச்சியுமில்லை. சேதி சொன்ன தோடு சரி. எதிர்பார்க்கவும் முடியாதோ? ஒரு வருடம் படுக்கையாக் கிடந்தால் இதுதான் கதியா?

பாலில் தண்ணீர் ஊற்றினாளோ, தண்ணீரில் பாலை வார்த்தாளோ, அதையும் குடித்துத்தானே பதினெட்டு வருடங்களாக எங்கள் குடும்பம் வளர்ந்திருக்கோம்? 'ஆயாப் பால்' என்றே வீட்டில் வழக்கில் வந்துவிட்டது.

உடல் வசத்திலிருக்கும்போது, வீட்டுக்கு வந்து கொண்டிருக்கையில், ஹைமவதியிடம் சொன்னாளாம்: "நான் செத்துட்டா, ஐயாவும் நீயும் என் பொணத்தைப் பார்க்க வரணும். பொண்ணு வேணாம். கொளந்தை பயந்துக்கும்."

ஆகவே நாளைக்கு ஆயா வீட்டுக்குப் போய்த்தான் ஆகனும். ஆயா சொல்லை நிறைவேற்றியாகணும். இது என்ன ஆயாமேல் அன்பா? இது எந்த நம்பிக்கையைச் சேர்ந்தது? இது முழுக்கவே மூடம் ஆகுமோ?

No, it is a point of honour. அப்படியென்றால் என்ன? உயிருக்குக் கொடுக்கும் கௌரவமா? சாவுக்குக் கொடுக்கும் கௌரவமா? சாவும் சேர்ந்துதானே உயிர்? மனம் இப்படியே போராடிக்கொண்டிருக்கும்.

*　　　*　　　*

எங்கள் குலதெய்வத்தை முதன்முதலாக நான் பார்த்த அநுபவம் இப்போது ஏனோ சம்பந்தா சம்பந்தமில்லாமல் (?) நினைவுக்கு வருகிறது.

நான் அப்போது பையன். ஒரு சமயம் சென்னையி லிருந்து லால்குடிக்கு அண்ணா—அப்பாவை அண்ணா என்றுதான் அழைப்போம்— குடும்பத்துடன் வந்து, ரயிலி

விருந்து இறங்கினதும், மூட்டை முடிச்சுக்களையும் மற்ற வரையும் மாட்டு வண்டியில் ஏற்றி அனுப்பிவிட்டு, என்னை மட்டும் அழைத்துக்கொண்டு கோவிலுக்கு வந்ததும் நேரே அம்மன் சன்னதிக்குச் சென்றோம். மாலை மணி நாலு இருக்கலாம்; இன்னும் கூட்டம் சேர வில்லை. சன்னதியில் நாங்கள் இருவர் மட்டுமே.

"ராமாமிருதம், லால்குடியில் நமக்கு இருக்கும் சொத்தே இவள்தாண்டா!" அண்ணா அப்படிச் சொன்ன போது எனக்குக் கொஞ்சம் வேடிக்கையாயிருந்தது. ஆனால் அண்ணா ஏன் கண் கலங்கறார்? ஏன் குரல் தழு தழுக்கிறது? பெருந்திருவின் முதல் தரிசனம் எனக்கு அன்றுதான்... அவளைப் பார்த்து எனக்குத் தோன்றிய முதல் எண்ணம்! வருஷக்கணக்கில் இப்படியே நிஎனுண் டிருக்காளே! இவளுக்குக் கால் வலிக்காதா?

"நம் சொத்தே இவள்தாண்டா!"

கேட்டு வருடங்கள் எழுபதுக்கு மேலாச்சு. ஆனால் நெருப்பில் எழுதியதாய் வாக்கியம் இன்னும் நெஞ்சில் கனிந்துகொண்டிருக்கிறது.

* * *

குழந்தை குடுகுடென ஓடிவருகிறாள். என்னைப் பிடித்துக்கொண்டு மேடைமீது ஏறுகிறாள்.

"தாத்தா பக்கத்துலே தாச்சுக்கணும்!".

இருவருக்கும் மேடையில் இடம் காணாது. ஒடுக் களித்து, ராணிக்கு எப்படியோ இடம் விடுகிறேன்.

"தாத்தா போத்திவிடு."

ஏற்கெனவே மின்சாரம் அம்பேல். புழுங்கித்தள்ளு கிறது. ஆனால் கேட்கமாட்டாள். என் சவுக்கத்தை அவள்மேல் போர்த்துகிறேன்.

"நீயும் போத்திக்கோ."

போர்த்திக்கொள்ளப் பார்க்கிறேன்.

''என்ன தாத்தா இழுத்துட்டியே!''

''இல்லை, போர்வை உன்மேலேதான் இருக்கு.''

சற்று நேரம். முரண்டல். அப்புறம் சமாதானம்.

''தாத்தா கண்ணை மூடிக்கோ.''

''நீ?''

''நானும் மூடிக்கறேன்.

மூடிய கண்களுடன் குழந்தை முகத்தில் புன்னகை படருகிறது, விக்ரஹம் சிரிக்கிறது.

இருவருமே வாய்விட்டுச் சிரிக்கிறோம்.

''தாத்தா நா இனிமே அயவே மாட்டேன். சிரிக்குவேன்.''

குழந்தாய், நீ அழுதாலும் எனக்கு ஒரு அழகுதான்.

என் கைகள் கூம்புகின்றன. அதைப்பார்த்து, அவளும் கும்பிடுகிறாள்.

திடீரென்று நினைத்துக் கொண்டு எழுகிறாள்.

''தாத்தா, சீகாந்தைக் கண்டிக்குவணும். என்னைக் கிள்ளறான்.

புது வார்த்தை சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். போர்வையைக் களைந்துவிட்டுப் புறப்படுகிறாள்.

''சீகாந்தை என்னடா ஹூம் சொல்லிட்டு வரப் போறேன்.'' தூக்கம் மறந்தாச்சு, தாத்தா மறந்தாச்சு, ஓடுகிறாள்.

குழந்தைகளின் எந்தச் செயலிலுமே எப்படி ஒரு பதுமை, அலுக்காத அழகு மிளிர்கிறது. அவர்கள் மழலையில் பாஷை புத்துயிர் கொள்கிறது. புதுச் சொற்கள் பூக்கின்றன. சப்தம் சட்டையுரிக்கிறது.

*  *  *

சொந்த ஊரானாலும் லால்குடி மண்ணை அடிக்கடி மிதிக்கிறேன் என்று சொல்ல முடியாது. வயிற்றுப் பிழைப்புத்தான் ஆளை அம்மானை ஆடிவிடுகிறதே!

சிந்தாமணி, மெயின் கார்டு கேட், திருச்சி டவுனைத் தாண்டினதும் லால்குடிக்கு மகிழ்ச்சியான பிரயாணம். இருபது வருடங்களுக்கு முந்திய நிலையைச் சொல்கிறேன்.

பஸ் வேகத்தில் ஒரு பக்கம் வாழைக் கொல்லைகள், எதிர்ப்பக்கம் தென்னஞ் சோலைகள் பாய்ந்து செல்கின்றன. ஒரு பக்கம் பாளம்பாளமாய, பசும்பொன் தகடுகளாய், பாவாடை மடிகள்போலும் வாழையிலைகள் ஆடுகின்றன, அசைகின்றன. எதிர்ப்பக்கம் தென்னை மட்டைகள் சாமரம் வீச, மட்டைகளினிடையே, முண்டும் முடிச்சுமாய் இளநீர்க் குலைகள் ஏக்கம் பயக்கின்றன.

"வாங்கோ! வாங்கோ! சோழம் பார்க்க வாங்கோ!" இயற்கை மங்கை வரவேற்கிறாள்.

இடையிடையே பாலங்களினடியில், தனித்தனித் துறைகளில் ஆடவரும் பெண்டிரும் நீராடுகின்றனர். புடவையை ஒற்றைச் சுற்றில் மார்பில் அழுத்திச் சொருகிக் கொண்டு, தைரியமாய் நடுத் தண்ணீரில் நீந்துகின்றனர். துளையல் வெறியில், அவர்கள் உறிஞ்சி உமிழும் தண்ணீர், மத்தாப்பு வீச்சில் மீண்டும் தண்ணீரில் விழுகிறது.

அங்கங்களின் 'விண்விண்' செழிப்பு, ஆடைகளின் வர்ணங்கள், வாய்க்காலைச் சூழ்ந்த பசுமையுடன் இழையும் ஜாலங்களுடன் சேர்த்து வானத்தின் மந்தாரத்தையும் குழைய ரங்கோலி.

ஆற்று மணலுக்கப்பால், சோலைகளின் நடுவினின்று, அதோ அகன்றதோர் கோபுரம் கம்பீரமாய் எழுகிறது. ஸ்ரீரங்கம். உடனே பின்னால் திரும்பிப்பார் பிரம்மாண்டமான விலங்கு படுத்திருப்பது போல், மலைக்கோட்டை. அறியாமலே அஞ்சலியில் சிரமேல் குவிகின்றன.

இவைகளின் நடுவே காவேரிப்பாட்டி பாரியாகப் படுத்திருக்கிறாள். புதுவெள்ளம் அவளுடைய நரை கூந்தலாக, அலை அலையாய், சடைசடையாய் நுரை நுரையாய்க் கனத்துப் புரள்கிறது.

அம்மாடி! பிரம்மாண்ட ஓவியம். இதைத் தீட்டிய தூரிகை வீச்சில் நான் எம்மாத்திரம்! அல்ல, சின்னஞ்சிறு சுழி. ஆனால் இதில் என் இடம் கண்டுகொண்டபின் நானிலாது இந்த ஓவியம் பூரணமில்லை. எவனுமே அவனவன் இடத்தில் பூரணத்தின் பங்கு. பூரணத்துக்குப் பூரணம் தந்தபடி, பூரணத்துடன் இழைந்து இயங்கும் இந்தப் பேறு கிடைக்க, அதை உணர என்ன தவம் செய்தேனோ!

எந்தக் கவிதையும் யாருடைய சொந்தக் கவிதையில்லை.

எல்லாம் அவள் மாலையிலிருந்து உதிரும் இதழ்கள்.

விழும் இதழ்களை உண்டவன் பாக்யவான்.

ஏனெனில், அப்போது அவள் கண்கள் பூமியின் கவிதைக்குத் திறக்கின்றன.

உள்ளமெல்லாம், உள்ளே உடல் பூரா கமகமக்கிறதே!

பூமியின் கவிதையில் ஒரு வரியாக விளங்கக்கூட நான் ஆசைப்படவில்லை. என்ன பேராசை அசட்டுத் துணிச்சல்! ஆனால் ஆகாசத்தையே ஆலிங்கனம் செய்யும் ஆசைக்கு அடங்கல் ஏது?

ஒரு வார்த்தையாக? ஒரு சொல்? ஊஹூம் அத்தனைத் தகுதிக்கு எங்கே போவேன்? என் பேத்தி வந்திருக்கிறாளே, ஜனனியின் மனோவிலாசமும் விசாலமும், ஐக்கியமும்தான் ஆகாயத்தையும் உள்ளடக்கும். ஏனெனில் அவள் நிர்மலத்திலிருந்து வந்திருக்கிறாள்.

லால்குடி போம் வழிக் காட்சிகள் பயக்கும் உள்ள நெகிழ்ச்சி, என்னுடையது மட்டுமன்று ஒவ்வொரு காவிரியானுடையதுமே.

இதோ ஆனைக்கா கடந்து, இதோ வாளாடி, ஆங்கரை, எனச் சோலைகள் வழி இடங்கள் தாண்டி பஸ், 'சடக்'கென்று திருச்சி நெடுஞ்சாலையிலிருந்து சிறுதையூருள் திரும்பி உடனே பஸ் நிலையத்தில் நின்றதும், லாலகுடி வந்தாச்சு.

தளர்ந்த வயோதிகத்தில், கோவில், ஊர் நடுவே நிற்கிறது. லால்குடியின் ஹ்ருதயம். ஏன், என் முன்னோர்களின் வழி வழி ஹ்ருதயம். கோபுரத்தைப் பார்க்கையில் நெஞ்சை என்னவோ செய்கிறது. காலடியில் பூமி விட்டாற்போல். காரணம் எனக்கு வயதாகிவிட்டது மட்டுமன்று.

அம்மன் சன்னதியில் நுழைகையில் மெத்தென்று ஒரு அமைதி, ஆசிபோல் என்மேல் இறங்குவதை உணர்கிறேன்.

''என்னடாப்பா, வந்தாயா!'' பெந்துப்பாட்டியின் மோனக்குரல் நெஞ்சில் தங்கமோதிரம் தெறித்து விழுந்தாற்போல் இசைக்கிறது.

இதெல்லாம் என் எண்ணம்தான் என்று வாதிப்பவருக்கு ஒன்று சொல்கிறேன். தெய்வமே பாவனை தானே! கல்லில் என்ன இருக்கிறது? தொன்றுதொட்டு, காலம் காலமாய், வழிவழி வந்து அந்தக் கல்லுக்குள் குடிகொண்டுவிட்ட பாவனையில்தான் வாழ்வே (தெய்வம் உண்டா இல்லையா எனும் சர்ச்சை உள்பட) இயங்குகிறது.

ஸ்வாமி பெயர்: ஸப்தரிஷீசன்

அம்பாள்: ப்ரவர்த்த ஸ்ரீமதி (தமிழ் பெருந்திரு)

என் தகப்பனார் பெயர்: சப்தரிஷீசன்

அம்மா பெயர்: ஸ்ரீமதி

இந்தப் பெருமிதமும் இது தரும் பலமும்தான் என்னை இன்னும் தாங்கிக்கொண்டிருக்கிறது.

எங்கள் குடும்பத்துக்கும் இந்தக் கோவிலுக்குமிடையே பின்னிப் பிணைந்திருக்கும் உறவு அதுவே தனி வரலாறு. ஐதிகம் படைத்தது. என் முன்னோர் காலத்தில் ப்ரசித்தி பெற்றது.

*　　　*　　　*

உள்ளிருந்து கேட்கிறது. அந்தச் சின்ன உருவுக்குள் என்ன உர்த்தண்டமான குரல்!

"நான்— நான்— செல்லக்குட்டித் தாத்தாவுலே ஹேமாப் பாட்டியைப் பாக்குவேன்."

என்ன சொல்கிறாள்? அது எப்படி முடியும்? அதைப் பற்றி அவளுக்குக் கவலையில்லை. என்ன நினைத்தாள், என்ன வெளி வருகிறது? சொற்களுடன் விளையாடு கிறாள், பொருத்திப் பார்க்கிறாளா? அல்ல குழந்தை வாய்மூலம் அர்த்தநாரீச தத்துவமா?

எல்லாம் நீயே நினைத்துக்கொள்; நீயே சந்தோஷப் படு.

*　　　*　　　*

எழுத்தாற்றல்—அதிலும் சிலரிடம் காணும் தனித்வம் ருத்ராப்சம் என்றே நினைக்கிறேன். பிறப்பித்த நிமித்தம் நிறைவேறும்வரை சிருஷ்டியால் என்னிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கும் சக்தி. இது அழிக்கும் ஊழித் தீ அன்று.

பட்டறையில் எஃகு உருவாவதுபோல் நெஞ்சின் உலையில் காய்ச்சி அடித்துத் தீட்டிப் பதப்படுத்தி சொல்லுக்கு மந்திரம் ஏற்றும் ஆக்க சக்தி.

ஏன் விமர்சகர்கள், ஏறக்குறைய என் அறுபது ஆண்டு எழுத்தில், நான் சொல்லும் விஷயத்தில் குடும்பத்தை விட்டு நான் இன்னும் வெளி வரவில்லை என்று சொல் கிறார்கள். உண்மை. இப்போது அறிகிறேன், நான் என் முன்னோர்களின் சரித்ரீகன். அவர்களுக்கும் குலதெய்வத் துக்கும் இடையே மர்ம வசிய (mystic) உறவு பற்றியும், அவர்கள் அவளைச் சுற்றினார்களா? அல்ல அவளும் அவர்களைச் சுற்றிக் கொண்டிருந்தாளா எனும் கேள் விக்குப் பதிலைத் தேடலைப் பதிவு செய்வதற்கென்றே எழுத்து என்னிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்று இன்று என் அந்தியின் மந்தாரத்தில் தோன்றுகிறது

இந்தக் காரியத்தில் அவளின் தன்மையை ஆய்வது தரும் இன்பமும் கண்டுவிட்டேன்.

என் முன்னோர்கள் என்கையில் என் பாட்டனார் தலைமுறை பற்றிச் சொல்கிறேன்.

அவர்கள் அதீதமானவர்கள் There was a streak of abnormality about them. ஒவ்வொருவா பின்னாலும் ஒரு கதையிருந்தது. ஒரு சிலர் அவர்கள் காலத்திலேயே legends ஆகிவிட்டார்கள். என் பாட்டனார் வரகவி. கனவில் பிள்ளையார் வந்து வாயில் கற்கண்டு போட்ட தாகக் கண்ட மறு நாளிலிருந்து பாட ஆரம்பித்து விட்டார். அவர் தங்கை—என் தாய்வழிப் பாட்டி—அவளும் கவி. என் பாட்டனார் மூத்த சகோதரர், எழுதப் படிக்கத் தெரியாதவர், குடும்பத்தில் உதவாக்கரை, அவருக்கு அம்பாள் தரிசனமானாள்.

என் பாட்டனாரின் தாயாரிடம் எங்கள் குலதெய்வம் (பெருந்திரு, ப்ரவர்த்த ஸ்ரீமதி) ஒரு மண்டலம் ப்ரஸன்ன

மாயிருந்தாளாம். என் பாட்டனாரின் பெற்றோர்கள் கோயிலில் தினம் அர்த்தஜாம தரிசனம் பண்ணிவிட்டு—அந்த நாளில் அர்த்த ஜாமம் என்றால் அர்த்த ஜாமம் தான், இரவு 11-00, 11-30 மணி—பிறகுதான் ராச் சாப்பாடு. அப்படி அறுபது வருடங்கள். (எனக்கு அறுபது வருடங்கள் எழுத்து. எல்லாமே தவம்தானே!)

ப்ரஸன்னமென்றால் தெய்வம் தலைவிரித்து ஆட வில்லை. குறி சொல்லவில்லை. பாட்டி எழுதப் படிக்கத் தெரியாதவள். ஒருநாள் விடியற்காலை விழித்தெழுந் ததும், ஸம்ஸ்கிருதமாய் வேதங்களிலிருந்தும் உபநிஷத் களிலிருந்தும் வாயிலிருந்து கொட்டினவாம். (இதையே பூர்வ ஜன்ம வாசனையின் நிரூபணமாய்க் கொள்ள லாமா?) ஊரே 'கொல்'லாகிவிட்டது. பக்க வட்டாரங் களிலிருந்து புலவர்களும் விற்பன்னர்களும் வந்து அவளைக் கேள்விகள், விளக்கங்கள் கேட்டு, சந்தேகங்கள் தெளிவடைந்து அதிசயித்து நின்றனராம். கூடமே 'ஸதஸ்' ஆகிவிட்டது. அந்த நாற்பது நாட்களும் ஏதேதோ அதிசயங்கள் நேர்ந்தனவாம். பாட்டியின் உள்ளங்கையில் சக்கரம் தோன்றிற்றாம். சொல்ல வந்தது யாதெனில், என் எழுத்தில், என் வம்சாவளிக்கும் பங்கிருக்கிறது.

* * *

ஏன் பிறந்தேன்?

எங்கிருந்து வந்தேன்?

எங்கே போகிறேன்?

—புத்தி வளர்ச்சியின் இன்றியமையாத, ஓயாத கேள்விகள். சிந்தனையின் ஓயாத உறுத்தல். இந்தக் கேள்விகளுக்குப் பதில் தேடலின் அடிப்படைக்கு ஆரம்ப அனுமானம்தான் தெய்வம்! ஒரு விளிப்பு; பயணத்தின் திசைமானி. அந்தத் திசைமானியை இயங்க வைக்கும் காந்தம் ஆண், பெண் அறிவது எதிலும் அவன அவள்

உறவின் விளைவாய் புலனத்தை ஈன்று இயக்கும் ஆதி சக்தி. தாயில் துவங்கி, பெண்மையின் அத்தனை உறவுகளின் விஹாரஸம் அவள்.

ராமகிருஷ்ண பரமஹம்ஸர் கூறும் சத்ய மாயை என்னென்று சற்றே புரிகிறது.

சத்யம் எவற்றிலும் ஊடேயிருந்து கொண்டு அவ்வப்போது தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் தன்மைகளும் பேதங்களும், உருவங்களும், நாமங்களும், கேள்விகளும் ஸத்ய மாயை. அவள் சத்தியம் (நீ அவனாய்ப் பார்த்தாலும் சரி, அவளாய்ப் பார்த்தாலும் சரியே! அவனும் அவளே.) ஸத்ய மாயா லீலா விநோதினியும் அவளே. (''செல்லக்குட்டித் தாத்தாவிடம் ஏமாப் பாட்டியைப் பாக்குவேன்!'')

அவளை உள்நோக்கில் தேட, வியக்க, வியப்பை வளர்க்க, என்றும் அவள் அருகாமையில் நித்யத்வத்தை உணர, ஒவ்வொரு குடும்பத்துக்கும் குலதெய்வம் தேவை. எங்களுக்குப் பெருந்திரு, ப்ரவர்த்த ஸ்ரீமதி, லால்குடி அம்பாள். விக்ரஹத்தைக் காட்டிலும் என்றுமே ஆவாஹனம் மிகப் பெரிது. அதுதான் அவள்.

சாப்பிட்டுக்கொண்டிருக்கிறேன்.

பிறந்த மேனியில், பின்னால் கை கோர்த்துக் கொண்டு, ப்ரஸமாய் பாடிக்கொண்டு என்னைச் சுற்றிச் சுற்றி வருகிறாள்.

> ''சோனாப் பாப்பா நானே!
> தங்கப் பாப்பா நானே!
> குட்டிப் பாப்பா நானே!
> ஜனனிப் பாப்பா நானே!''

மனம் எனக்கு உச்சரிக்கிறது.

நீ குழந்தை
அறிவுக்கு முன்னாய நிர்மலம்
மாசறு பொன்
நீ தெய்வம்

குழந்தையும் தெய்வமும் கொண்டாடுமிடத்தில்.

* * *

தெய்வம் என்று ஒன்றைத் தனியாகக் காண்போம், கண்டதைச் சொல்வோம் என்று எனக்குத் தோன்ற வில்லை. இது தெரிந்துதான் அப்பவே கண்டவர் விண்டிலர் விண்டவர் கண்டிலர் என்று விட்டனர்.

தெய்வம் இருக்கிறதோ இல்லையோ, தெய்வீகம் நிச்சயம் உண்டு.

தெய்வீகம் ஒரு அனுபவம். பிறவியின் உரிமை, ஆனால் எந்த சமயத்தில், எப்படி நேரும் என்று முன் கூட்டி அறிய முடியாதது. விசும்பினின்று 'விர்ர்'ரென்று இறங்கும் ராஜாளியின் சிறகு வீச்சு. ஒரே சமயத்தில் ஒருங்காய் பயம், த்ரில், கால்வாரல், ஆனந்தம். அது நேர்வதே, அதைத் தாங்கிக்கொள்ள அந்தப் பிறவிக்கு வந்திருக்கும் பக்குவ நிலையின் அடையாளம். அதன் நீடிப்பு ஒரு தருணம் மட்டுமே இருக்கலாம். ஆனால் தருணம் என்பது விதிப்பயன். நித்யத்வத்தினின்று உதிர்ந்த கண்ணீர்த் துளி. அவள் மாலையிலிருந்து உதிர்ந்த ஸ்படிக மணி. அடியே பெருந்திரு! அம்மா என் தாயே! ஆனால் தருணம் நேர்வதற்கும் என்னை ஊடுருவுவதற்கும்கூட அவள் அருள் வேண்டும்.

தீயினுள் விரலை வைத்தால்
நின்னைத் தீண்டும் இன்பம் தோன்றுதடா

என்றானே அதுதான் அது. அருள், அனுமானம், அனுபவம் மூன்றும் தனியறக் குழைந்துவிட்ட நிலைதான்

தருணத்தின் தரிசனம். My discovery of my genius. ஐயோ சொல்ல வல்லியே, தவிக்கிறேனே! அடியெடுத்துக் கொடேண்டி!''

* * *

அனந்த நாராயணன் எனும் இளைஞன் என்னைப் பார்க்க வந்துகொண்டிருக்கிறான். எங்கள் அலைவரிசை பல விஷயங்களில் ஒன்றாயிருப்பதே எங்கள் நட்பின் நீடிப்புக்குக் காரணம்.

வயது ஏற ஏற, குமிழிகள் ஒவ்வொன்றாய் வெடிக்கும்போது, திகைப்பாயிருக்கிறது.

''சே, வாழ்க்கையில் என்ன இருக்கிறது?'' என்று ஒரு சமயம் வாய்விட்டுச் சலித்துக் கொண்டபோது, சொன்னான்.

''சில அழகான மக்களைச் சந்திக்கிறோம், அதற்குத் தான் வாழ்க்கை''.

Life is there, because we meet in it some beautiful people'' அவன் சொன்னது இதுதான்.)

எவ்வளவு உண்மை! அர்த்தங்களை வீணாகத் தேடிக் கொண்டு, ஏமாந்து, நொந்து அதற்குப் பிறர்மேல் ஏன் பழி போட வேண்டும்? எண்ணத்தின் அவ்வப்போதைய துலக்கத்தில் கிடைக்கும் தரிசனங்களும், சந்தோஷங்களும் போதாதா?

அவரவர் பூத்ததற்குத் தக்கப்படி.

அழகு என்றபோது, அனந்து, சதையாழ அழகை மட்டும் குறிக்கவில்லை.

தெய்வம் மனுஷ்யரூபேண!

உடல் சுத்தம் (அதனமூலம் மனச்சுத்தம் வரும்போது வரட்டும்), எதிலும் ஆர்வம், எதிலும் நேர்த்தி காண்பதில் முனைப்பு, சின்னச் சின்னப் பொருள்களை, பெரிய

பெரிய விஷயங்களின் சின்னங்களாய்க் காணல், அதன் வழி ஐக்யபாவம், உள்ள நெகிழ்ச்சி, மௌனம்—இவை, இவை போன்ற தன்மைகள், அழகுகள், இயல்பாகவே வாய்த்திருந்தாலும் சரி, விசுவாசத்துடன் பயின்றாலும் சரி, இவை தெய்விகத்தின் சாயல்கள், அவளுடைய வாஸங்கள். அவள் வருவாள், வருகிறாள், வந்து கொண்டேயிருக்கிறாளின் முன் குறிகள், இந்தப் பரிமளங்களை நுகரக் கொடுத்து வைத்திருப்பது அவரவர் பூத்த தற்குத் தக்கபடி.

இன்னும் வரவில்லையா? இன்றில்லையேல் நாளை. நாளைக்குத்தான் வரை கிடையாதே,தெரியுமோல்லியோ?

அட அசடே, நேற்று ஏது, நாளை ஏது, என்றும் இன்றுதான். அவள் உன் பின்னால் நின்று கொண்டிருக்கிறாள். அவள் மூச்சு உன் தோளில் பட்டுக்கொண்டே தானிருக்கிறது. அவளை நீ அடையாளம் கண்டுகொள்ளக் காத்திருக்கிறாள். அவள் காட்டும் ப்ரபஞ்சக் கண்ணாடியில் எப்போ உன் பிம்பத்துக்குப் பதில் அவள் தெரிகிறாளோ—அப்பவே தருணம் நிகழ்ந்துவிட்டது.

அவள் தருண்யை

தெய்வம் மனுஷ்யரூபேண:

*　　　*　　　*

கூடத்தில் போட்டிருக்கும் நாற்காலியில் ஏற முயன்று கொண்டிருக்கிறாள்.

நான் அவளைப் பார்ப்பதைப் பார்த்துவிட்டாள்.

தரையில் ஒரு கால், ஒரு கால் நாற்காலி மேல். முகத்தை என் பக்கம் திருப்பி, தலையை ஒரு பக்கமாய்ச் சாய்த்துக்கொண்டு என்னைப் பார்க்கிறாள். ஒரு கண்ணை மறைக்கும் பிரிமயிரினூடே என்மேல் விழுந்து, கனிவுடன் கபடு கலந்து நெஞ்சை அள்ளும் பார்வை. அருள் பார்வை அவள் பார்வை. ஸாஹஸி.

அவளை வாரி அணைத்துக்கொள்ள எழும் ஆசையை சிரமப்பட்டு அடக்கிக்கொள்கிறேன்.

தருணம் கலைந்துவிடும்.

சென்ற வருடம், ஸாஹித்ய அகாதெமி ஆதரவில், மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் என்னுடைய சிறுகதை ஒன்றைப் படிக்கச் சென்றிருந்தேன். திரும்பி வரும் வழியில் லால்குடியில் இறங்கி பாக்கியாகிவிட்ட சில ப்ரார்த்தனைகளைச் செலுத்த வாய்ப்பு.

இரவு Delux பஸ்ஸில் கிளம்பினோம். ஹைமவதி ஜன்னலருகே, நான் அவள் பக்கத்தில், பின் ஸீட்டில், மகனும் மகளும்.

அம்மாவுக்கும் உங்களுக்கும்தான் ட்ரிப் ஜாலி என்று பின்னாலிருந்து காயத்ரி கிண்டல் பண்ணுகிறாள்.

ப்ரயாணம் என்றுமே எனக்கு அலுத்ததில்லை. ஆனாலும் இளவயதின் உற்சாகம் இப்போ காண முடியுமா?

வயதின் தனிமையை, அலுப்பை நான் ஒப்புக் கொள்ள அஞ்சினாலும் எனக்குக் கட்டாயமாய், வேளைக்கு வேளை, விதவிதமாய் சந்தர்ப்பங்களால் உணர்த்தப்படுகிறது. ஆனால் ஒரு நாளைப்போல, வீட்டில் சேர்ந்தாப்போல் அடைந்து கிடப்பதிலிருந்து சில நாட்களேனும் விடுதலை கிடைக்குமல்லவா? அந்த சந்தோஷம் இருக்கத்தான் செய்கிறது. வேற்று இடங்கள் வேற்று முகங்கள் எனும் மாறுதலில் மனம் லேசாகிறது. Battery recharge ஆகிறது. என்னைப்பற்றி எனக்குப் புது எடைகள் கிடைக்கின்றன. அதனாலேயே மற்றவரைப் பற்றிக் கிடைப்பதும் இன்றியமையாததுதானே!

வாழ்க்கையே ஒரு Voyage of Discoveries—and re-discoveries.

நான் எப்படியோ, ஹைமவதிக்குக் குஷிதான். முகம் வெளிச்சம் போட்டிருக்கிறது. அது தவிர, தன் சந்தோஷத்தை மலிவாக அவள் வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அவளுடைய பிறந்த வீட்டின். சொந்த ஊரின் பழைய நினைவுகளைப் பேசிக்கொண்டு...

ஹைமவதியிடம் சில விசேஷ குணங்கள் இருக்கின்றன. ஏற்கெனவே தெரிந்தவைதான் என்றாலும், அவைகளின் உயரியத்தைப் புதிதாய் இப்போதுதான் கண்டுபிடித்துக் கொண்டிருக்கிறேன். ஆத்மாவின் பிரயாணத்தில் இதுவும் ஒரு அம்சம் போலும்!

படு சுத்தம். **A great letter-writen** தினக்குறிப்பு (டையரி) எழுதுகிறாள். தான் உண்டு, தான் எழுதும் கடிதங்கள், டையரி உண்டு, தான் படிக்கும் புத்தகங்கள் உண்டு என்று பிறர் வழிக்குப் போகமாட்டாள். அவள் கடிதம் எழுதுகையில் முகத்தில் குழுமும் மனமுனைப்பில் (**Concentration**) ஒரு தினுசான அழகு. குழந்தைத்தனம், முகத்துக்கு வருகிறது. இப்பவே கொஞ்ச நாட்களாகக் கவனித்து வருகிறேன். தோற்றத்தில் ஒரு தினுசான தோரணை வந்திருக்கிறது.

அம்மாவும் பெண்ணும் அம்பத்தூரிலிருந்து மாம்பலம் 'ஷாப்பிங்' கிளம்பும்போது, பெரியவள் தோளில் பையை மாட்டிக்கொண்டு (அதில் குடிதண்ணீர் பாட்டில்) 'டீக்'காக உடுத்திக்கொண்டு (சாதாரணப் புடவைதான்) இருவரில் அவள்தான் 'ஸமார்ட்டாகத் தெரிகிறாள்.

ஹைமவதிக்கு வாழ்க்கையில் சுவாரஸ்யம் குன்றவில்லே. சுவாரஸ்யம் என்பது வயதில் இல்லை, மனநிலையென்று அவளிடம் தெரிகிறது. தன் புடவைகளை எத்தனை தடவைதான் எடுத்து எடுத்துப் பார்த்துப் பார்த்து மடித்து மடித்துப் பாலிதீன் பைகளில் போட்டு காத்ரெஜ்ஜில அடுக்குவாளோ?

அவளுடைய கிராமத்து நினைவுகள் கேட்கக் கேட்க அலுக்கவேயில்லை. வேப்பிலை அடிக்காமலே அவை களைக் கொட்டுகிறாள். சில விஷயங்களில் அவளுடைய ஞாபகசக்தி அபாரமாயிருக்கிறது. எங்கெங்கோ காலங் களின் மூலைமுடுக்குகளிலிருந்து விஷயங்களை, பெயர் களை எடுக்கிறாள். அந்தச் சம்பவங்களை அவள் சொல் லும்போது அவளைப் பார்க்க, எனக்கு சற்று ஆச்சர்யம், கொஞ்சம் வேடிக்கை, ஒரு தினுசான சந்தேஷமாயிருக் கிறது. கிராமப் பண்பு பற்றி ஒரு தனி வரலாறே எழுது மளவுக்கு அவளிடம் அத்தனை நினைவுகள், விஷயங்கள் மண்டிக் கிடக்கின்றன என்று இப்போதுதான் அறி கிறேன். அவைகளை ஒரு புத்தகமாய்ப் படுத்த வேளை வர வேணும்.

மற்ற வேளைகளில் அவளுடைய இனங்கெட்ட கோபங்கள், பிடிவாதங்கள், அரித்துப் பிடுங்கியே தன் காரியங்களைச் சாதித்துக் கொள்ளும் நூறு சத சுயநலம், இவைகளுக்குச் சிரிக்கத் தெரிந்துகொண்டு விட்டால், **Hymavathy is really great.**

'உங்கள் ரோசத்தை வெச்சுண்டு என்ன பண்றது, காலணாவுக்கு உபயோகம் உண்டா? கை கொட்டிச் சிரிப்பாள். "அது அது வரப்போ சிரிச்சுத் தட்டிக் கழிச் சுண்டு போவேண்டியதுதான். உங்கள் மாதிரி புழுங்கிண் டிருந்தால் ஒரு நாள்கூட வாழ முடியாது. விடு, அது அது அவ்வளவுதான்—இதுதான் என் Policy" என்பாள்.

பெருந்திருவுக்குச் சார்த்துவதற்கென்று காயத்திரி தியாகராயநகர் சென்று புடவை வாங்கி வந்தாள். பாலிஸ்டர் அரக்குக் கலரில் ஒன்பது கெஜம். அதைப் பார்த்தவுடன் அவள் அம்மைக்கு ஆசை பிறந்துவிட்டது. "எனக்கும் இது மாதிரியே ஒண்ணு—ஆனால் பணத்துக்கு எங்கே போறது? குடும்பத்தில் ஏகப்பட்ட செலவு"

என்று தனக்குத்தானே சமாதானமாகும் சமயத்தில், வாங்கிக் கொடுக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றி விட்டது. வாங்கி வந்ததும் என்ன சந்தோஷம்! "நீயும் கோவிலுக்கு வரும்போது இதைக் கட்டிக்கொள்" என்றேன். சற்று தயங்கிவிட்டு,

"மாட்டேன் அம்பாளோடு போட்டியா? அபராதம், அபராதம்!" தவடைகளில் ஒரு கையில் மாறி மாறித் தட்டிக்கொண்டாள்.

இது பக்தியா, பயமா, குழந்தைத்தனமா? மூட நம்பிக்கையா?

அபிஷேக தினத்தன்று வேறு ஏதோ பட்டா, பனாரஸ்ஸா? அறியேன். ஒன்பது கஜம் கொசுவம் வைத்துக் கட்டிக்கொண்டு வந்தாள். 'ஜம்'மென்று இருந்தாள். லேசான கம்பீரம் தானே வந்துவிட்டது.

அம்பாளின் அபிஷேகம் பார்க்க, கர்ப்பக்ருஹத்தில் அம்பாளுக்கு வெகு அருகாமையில் நிற்க, குருக்கள் அழைத் தார். வர மறுத்துவிட்டாள். கர்ப்பக்ருஹத்துக்கு வெளியே கிராதி போட்டிருக்கும் இடத்துக்கு வந்து தரையில் உட்கார்ந்துவிட்டாள். அவளுக்குள் ஏதோ நடைமுறை (Code of Conduct) வைத்திருக்கிறாள்.

* * *

மதுரையில் நாங்கள் தங்கியிருந்த ஓட்டல் அறைக்குத் திருமதி பாதிமா, அன்று மாலை தன் கணவருடன் வந்தாள்.

திருமதி பாதிமா ஜேஸுமணி 'லா. ச. ராவின் சிறு கதைகள்—ஆக்கமும் உருவும்' (அல்லது இது போன்ற) தலைப்பில் Ph. D ஆய்வுரை எழுதியிருக்கிறாள். தேர்வுக் குழுவுக்கு ஆய்வுரை போயிருக்கிறது. என் பார்வைக்கு அதைக் கொண்டு வந்தாள். பைண்டு பண்ணி திண்டு மாதிரி புத்தகம்.

இருக்கும் நேரத்தில் என்னால் முழுக்கப் படிக்க முடியாது. வெள்ளோட்டம்கூட விட முடியாது. கண்ணோட்டம்தான் முடிந்தது. திருமதி பாதிமா நன்றாகச் செய்திருந்தாள். புத்திசாலித்தனமாகச் செய்திருந்தாள் என்பது முக்கியமில்லை. முதலில் இந்த விஷயத்தை ஆய்வுக்கெடுத்துக்கொண்டதே அவளுடைய துணிச்சலுக்குச் சான்று. புரியாத எழுத்தாளன் என்று எனக்குப் பேராச்சே! ஆங்காங்கே என்னை quote பண்ணியிருப்பதை அடுத்தடுத்துச் சேர்ந்தாற்போல் பார்க்கையில் எனக்கு ஒரு விதமாய்த் திகைப்பாயிருந்தது.

''என்ன பாதிமா, இதையெல்லாம் நானா சொன்னேனா? சொல்லியிருக்க முடியுமா?''

அவள் புன்னகைகூடப் புரியவில்லை. பணிவுடன் ''நீங்கள் என்னிடம் அவ்வப்போது பேசினதையெல்லாம் ஒலிப்பதிவு ஆயிருக்குதே! டேப் இருக்குது. இல்லாவிட்டால் இவ்வளவு பெரிய workஐ நான் எப்படி செஞ்சிருக்க முடியும்?'' என்றாள்.

''எனக்கே இவையெல்லாம் ப்ரமிப்பாயிருக்கின்றன'' என்றேன்.

''ஐயா (மதுரை பாஷை, மரியாதை, பல சமயங்களில் அற்புதமாயிருக்கிறது), நீங்கள் வெளியிட்டிருக்கும் எண்ணங்கள், சிந்தனைகள் பல, எங்கள் எண்ணத்தின் சக்திக்கு அப்பாற்பட்டவை. அதேபோல், அவை வெளி வந்திருக்கும் சொல் உருவம், வார்த்தைக் கட்டுக்களும் எங்களால் நினைத்துக்கூடப் பார்க்க முடியாது. இவை உங்கள் மூலம் வெளி வருவதற்கென்றே ஆண்டவன் உங்களைப் பிறப்பித்திருக்கிறார்'' என்று சொல்லி, உடனேயே என் பாதங்களைத் தொட்டுத் தன் கண்களில் ஒற்றிக்கொண்டாள்.

மெய்சிலிர்த்துப் போனேன். நான் பெருமை உணரவில்லை. ஒருவிதமான லேசான பயம்தான் தெரிந்தது.

அதே சமயம் ஒரு அமைதி, ஆசிபோல் எங்கள்மேல் இறங்கியது. ஒரு 'வெறிச்'. இது நம்பிக்கை இழந்த சூன்ய 'வெறிச்' அன்று. தன்னுள் யாவற்றையும் அடக்கி நிறைந்து, கவித்வமான விசனத்துடன் தன்னிகரற்ற தனிமை கொண்ட அரூபத்தின் 'வெறிச்'. இதுவேதான் தருண நிலையோ? அவள் இப்படியும் தன்னைக் காண்பித்துக்கொள்வாளோ? கொள்கிறாளா?

மேலோட்டத்திலேயே தெரிந்தது. பாதிமா, ஆய்வுக் கட்டுரையில் (தான் அறிந்தோ அறியாமலோ லா.ச.ரா. எனும் மனிதனுக்கு லா.ச.ரா.வின் அரூபத்தைச் சாறாய்ப் பிழிந்து எடுத்து அதன் எடையைக் காண்பித்திருந்தாள். என் அரூபம் எனும் என் விசுவரூபத்தை என் உள்ளுணர்வுக்கு முன் நிறுத்தியிருந்தாள். அவரவர்க்கு அவரவர் தருணத்தில் அவரவர் அரூபம் தன்னை அடையாளம் காட்டும் அதுதான் அவள்.

பாதிமாவும் அவள் கணவரும் விடைபெற்றுக் கொண்டு போய்விட்டார்கள். ஆனால் அவள் சொன்னது மேலும் சிந்தனையைத் தூண்டிற்று.

பாதிமா கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவள். அந்த மதக் கோட்பாடின்படி Judgment Day என்று ஒரு நாள் உண்டு. கர்த்தரின் தீர்ப்புகள். கேப்ரியல் எனும் தேவதூதனின் எக்காளத்தின் ஊதலில், இறந்தவர் அனைவர் உயிர்பெற்று அவரவர் கல்லறையினின்று எழுந்து கடவுள் முன் நிற்பர்.

''உனக்கு வாழ உயிர் கொடுத்து உலகுக்கு அனுப்பினேனே, அங்கு உன் உயிரோடு என் செய்தாய்?'' என்று ஸர்வ பிதா ஒவ்வொருத்தராய்க் கேட்பார். அவரவரின் பதிலுக்கேற்ப (அவரிடம் எதையும் மறைக்க முடியாது) தீர்ப்பும் தண்டனையும் வழங்கப்படும்.

அப்போது என் முறை வருகையில் 'நீ என்ன செய்தாய்' என்று அவர் கேட்கையில், சொல்வேன்; சொல்ல முடியும. ''இதோ என் எழுத்தின் மூலம் உங்களுடைய நாம ரூபத்துக்கு, ரூபநாமமாக என் வாணாள் முழுவதும் உங்களுக்கு என் அர்ச்சனை.'' அவர் என்னை தூக்கி மடியில் வைத்துக் கொள்வார். இப்படி நினைப்பதில் ஒரு தென்பு, நிறைவு. என்னிடம் ஒப்படைக்கப்பட்ட எழுத்தை ஒழுங்காக, அவர் பெயரில் பயன்படுத்தியிருக்கிறேன் எனும் உணர்வே போதும். இதுவே என் விதிப்பயனைக் கண்டதுதான்.

ஆனால் இப்படி நினைப்பதில்கூட ஏதேனும் அர்த்தமிருக்கிறதோ?

பாதிமா நோக்கில் ''அவர்.''

என் பாஷையில் ''அவள்.''

எனக்கொரு ஆசை: அதை வெளியிட இங்கேதான் சமயம். என் இறுதி வேளை நெருங்கிக்கொண்டிருக்கும் சமயத்தில் இதுவே என் பெரிய ஆர்வம். கடைசிவரை எழுத்தில் ஈடுபட்டிருந்தேன் என்கிற Image உடன் உயிர் நீத்தல் வேண்டும். ஆனால் அது என் இஷ்டத்தில் இல்லையே. அந்தக் காலத் தருமப்படி சுத்த வீரன் படுக்கையில் சாகலாகாது. மரணம் வாழ்க்கையின் மானபங்கம் என்று எனக்கு ஒரு கருத்து உண்டு. நீண்ட நோய் வாய்ப்பட்டு, வாணாள் முழுவதுமாகச் சேமித்த கௌரவமும் பெருமையும் கரைந்து போவதை எப்படி விரும்ப முடியும்? உண்மையில் மரணத்துக்குப் பயப்படுகிறோமா, வாழ்வுக்குப் பயப்படுகிறோமா? குழப்பமாயிருக்கிறது. இதென்ன இயற்கையின் நியதியுடன் சண்டை போடுவது என்ன முட்டாள்தனம்! எனக்குத் தோன்றவில்லையா? ஆனால் மனம் எண்ணாமல் இல்லையே! எல்லாம் அவளுக்குத் தெரியும். அவள் என்ன சத்தியம் மறந்தவளா? அவளுக்கே விட்டுவிடுகிறேன். விட்டுவிடாமல் வேறு என்ன செய்ய முடியும்?

*　　*　　*

மாலை.

குழந்தை, அறையில் ஜன்னலை ஒட்டிய மேடைமீது தனியாக அமர்ந்திருக்கிறாள். வெளியே, உயரத்தில், பறிக்க முடியாததனால் விட்ட செம்பருத்திப் பூக்கள் சிரிக்கின்றன. அவள் கைகள் மடிமீது உறங்குகின்றன. பொம்மை போன்று அவளுடைய செதுக்கிய வார்ப்படம். வெளியே இறங்க ஆரம்பித்துவிட்ட அஸ்தமனக் கோடுகள், நிழல்களுடன் இழைந்து, கூடவே தனித்தும் தெரிகிறது.

வெளியே நிற்கிறேன். ராணியின் ஆலோசனையைக் கலைக்க தைரியமில்லை, மனமில்லை. அத்தனை சிறிய உருவினுள்ளும் யோசனையின் பெரிய உலகத்துக்கு இடம் உண்டோ? என்ன யோசிப்பாள்? அவள் முகத்தில் எந்த சலனமுமில்லை. அதனாலேயே மரியாதைக்குரியவள் ஆகிறாள்.

என்னைப் பார்த்துவிட்டாள். அதனால் உள்ளே வருகிறேன்.

"தாத்தா, அம்மா எப்போ வருவா?"

ஷோபா, அவள் பெற்றோர்களைப் பார்க்கப் போயிருக்கிறாள்.

"இதோ வந்துடுவா."

"அப்பா, எப்போ வருவா?"

கண்ணன் புத்தகங்கள் வாங்கப் பட்டிணம் போயிருக்கிறான்.

"இதோ வந்துடுவான்."

"சின்னியக்கா எப்போ வருவா?"

காயத்ரி மார்க்கெட்டுக்குப் போயிருக்கிறாள்.

"ஸ்ரீகாந்த் எப்போ வருவான்?"

ஸ்ரீகாந்த் க்ளாஸ்ஸுக்குப் போயிருக்கிறான்.

"ஸ்ரீகாந்தைப் பாக்கணுமே!" அவள் கண்கள் சஞ்சலிக்கின்றன.

எனக்குப் பயம் வந்துவிட்டது. இவள் பாட்டு வைத்தால் என்னால் எப்படி சமாளிக்க முடியும்?

நல்லவேளை, பைக் சத்தம் கேட்கிறது.

அவள் முகத்தில் 'சுர்ர்'— வெளிச்சம் வந்துவிட்டது.

"ஸ்ரீகாந்த்! ஸ்ரீகாந்த்!"

வெளியே ஓடுகிறாள், தோளை குலுக்கிக்கொண்டு.

* * *

என்னதான் என் தேடல் தத்துவமானாலும், இதை மறுக்க முடியாது. சமுதாயத்தில் பிறந்து, சமுதாயத்தில் வளர்ந்து, சமுதாயத்தில் மடிகிறோம். நான் சமுதாயத்தைத் துறக்கச் சித்தமாயிருந்தாலும், சமுதாயம் என்னைச் சும்மா விடாது. கடமை என்கிற கட்டாயம் கொண்டு சமுதாயம் தன் உறவுகளைப் பாதுகாத்துக் கொள்கிறது. அபூர்வமான வேளைகளில், கடமையும் ஆன்மிகமும் ஒற்றுமையில் சந்திக்கையில், நல்வாழ்வு, நல்லுணர்வு அந்த சமயத்துக்கு நேர்கின்றது.

ஆனால் இந்த ஆனந்தம், பரவச நிலை நிரந்தரமாகயிருக்க முடியாது. எண்ணத்தை முயற்சியால் நிறுத்தி வைத்துக்கொள்ள முடிந்தாலும் முடியலாம். ஏதோ ஒரு க்ஷணம், தற்செயலில் அமைந்தால் உண்டு. ஆனால் அதன் தூய்மையும் அனுபவமும் உயிரின் கதகதப்புடன் அந்தந்த சமயத்துடன் திருப்தி அடைவதே சரி, வாழ்க்கையில் தருணங்கள்தாம் உண்டு. அவைகளை நம்பித்தான் வாழ்கிறோம். வாழ முடியும்.

என்ன தேடினேன், தேடிக் கொண்டிருக்கிறேன் என்பதே இப்போது குழப்பமாயிருக்கிறது. கேள்விக்குப்

பதில் தேடுகையிலேயே, பதில் என்னைத் தேடுவதுபோல் பாசாங்கு பண்ணிக் கொண்டிருக்கிறதா? கிட்டினாற் போல் கிட்டி எட்டச் சிரிக்கிறதும் அதன் சுபாவம் ஒன்றை ஒன்று துட்டாரமாலை சுற்றல். அன்று பாலப் பெரியவாளிடம் பேசினபோது, நம் இடையே ஒரு மூன்றாவது ஆள், அதன் உருவத்தில, நம் எண்ணங்கள், பேச்சு, செயல் யாவற்றுக்கும் சாக்ஷியாக மௌனமாகப் புன்னகை புரிந்துகொண்டு நிற்கிறதே, அதுதான் அவளோ?

*　　　*　　　*

தஞ்சாவூரிலிருந்து லால்குடிக்குப் பஸ்ஸில் போம் வழியில், ஒரு பெரும் வெட்ட வெளியில் ஒரு ராக்ஷஸக் கூடம் விஸ்தீரணத்துக்கு ஏறக்குறைய ஆள் உயர ஆழத்துக்கு, காய்ந்துபோன இளநீர் குடுக்கைகள் மட்டையுடன் குவிந்திருக்கின்றன. எங்கெங்கோ பயிராகி எவரெவரோ ஏதேதோ சூழ்நிலையில் வெட்டிக் குடித்துத் தூக்கியெறிந்து பல்லாயிரக்கணக்கில் இங்கு சேர்ந்திருப்பது வியப்பைத் தூண்டுகிறது. இதே வழி சிந்தனையை ஓடவிடில் ஒவ்வொரு மட்டையும ஒரு கதை சொல்லும். இதுவும் அவளுடைய விளையாட்டுவிஷமம்தான். எதிலும் அவள் ப்ரஸன்னத்தைக் காணத் தெரிந்துகொண்டால், எதிலும் சுவாரஸ்யம் காண மனதைப் பழக்கிக்கொண்டால் எல்லாம் மனநிலைதான். மனதின் தடம் மாற்றம் தான். அதனால்தான் தேடலுக்கும் அவளுக்கும்—அதாவது நம் ஆசையில் அவளைப் பார்க்கும் பாவனைக்கும் முடிவேயில்லை.

ஆம் பக்தி என்பதே என்ன? அதுபற்றி நிறைய நினைக்கிறேன்; நினைத்துக்கொண்டேயிருக்கிறேன்: பக்தி பண்ணும் பொருள்மேல் நிறைய அன்பு, இன்னும் முழுக்கப் புரியாததால் அதன்மேல் புதுமை, ஆச்சர்யம், லேசான பயம், அந்தப் பொருளை அறியத் தீவிர ஆர்வம்—இத்தனையின் கலவையின் விளைவாய் உள்ள நெகிழ்ச்சி.

''இதோ நம் வீட்டில் காய்த்தது'' என்று என் மனைவி, தன் இரு கைகளின் அள்ளலில் பச்சைப் பசேலென்று அவரைக்காய்களைக் கொட்டுகிறாள். என் கையில் எடுத்து மார்புடன் அணைத்துக் கொள்கிறேன். என் விழிகள் நிறைகின்றன. இதுவும் எனக்குப் பக்தியில் சேர்ந்ததுதான். அவளுடைய சிருஷ்டியின் செருக்கு, அவளுடைய முன்றானைக் கொடுக்கு, என்மேல் படுகிறது.

ஏதோ ஒரு வாக்கியத்திலோ; சொற்றொடரிலோ பதத்திலோ, அல்லது இரு பதங்களினிடையே தொக்கி நின்ற அணுநேர மௌனத்திலோ, ஒரு பெருமூச்சிலோ, படித்தபின் விழியில் நடுங்கும் கண்ணீரின் பளபளப்பிலோ, அவள்தான் அப்படித் தோன்றித் தெரிகிறாள். உள்ள நெகிழ்ச்சியின் சொகு சொகுப்பில் நடந்து வருகிறாள். ஜல் ஜல் சதங்கையொலி.

இந்த சிந்தனையின் தொடர்பில் ஒன்று கேட்கிறேன். முற்றும் துறந்த துறவி சங்கரன் ஏன் பெண்ணைப் பூஜிக்கிறான்? இந்த உலகமே, நீ காணும் வாழ்க்கையே மாயம் என்று தூக்கி எறிந்தவனாயிற்றே?

''நீ காமாக்ஷி, நீ சாரதா, நீ சக்தி, நீ பெண்.''

* * *

''என்னடா பண்ணறீங்க? என்னை அடிக்காதீங்கடா, கிள்ளாதீங்கடா! பாப்பா நான் பாவண்டா!''

அந்தப் பெரிய பேச்சு, குழந்தை வாயில் கேட்கையில், அதில் செறியும் அந்தப் பாசாங்கு, கொஞ்சல், அற்புதமான இனிமை—ஸ்தம்பித்துப் போகிறேன். அவளை ஒட்டுக் கேட்கையில் இதுவரை கிடைக்காத இன்பம் எய்துகிறேன்.

''ஹல்லோ! யார் பேசறது? ஜான் பேசறதா (ஹோசூரில், எதிர்வீட்டு ஜான் இவளைவிட ஒரு வயது சிறியவன்-பத்துமாதப் பாப்பா டெலிபோன் பேசுகிறாள்,

டார்ச்சு லைட்டை வாயில் வைத்துக்கொண்டு) நான் ஜனனி பேசறேன். என்னா பண்ணறே? சாப்பிடறியா? சமத்தா, படுத்தாமே சாப்பிடு. இங்கே சின்னியக்கா இருக்கா. சீகாந்த் இருக்கான். யஹாமா இருக்கு. நோக்கு அக்கா எப்போ பொறப்பா? சரி நா வெச்சுடறேன். நீயும் வெச்சுடு. வெச்சுட்டியா?''

தன் முக்யப்பற்றி வந்திருக்கும் ப்ரக்ஞையை எப்படி அனுபவிக்கிறாள்!

* * *

தஞ்சாவூரிலிருந்து வரத் தாமதமாகிவிட்டது. காலை மணி 11.30க்குதான், எங்கள் முன்னிலையில் அபிஷேகம் ஆரம்பிக்கிறது.

அபிஷேகத்தில், அதன்மேல் தோற்றமான உபசாரம் மட்டுமல்ல. வேறு தாத்பர்யங்களும் அடங்கிய செளந்தர்ய உபாஸனையைச் சேர்ந்ததென்றே நினைக்கிறேன். சிற்பி சிலையை சிருஷ்டிப்பது போன்று, கலைஞன் ஓவியம் தீட்டுவது போன்று. அடுத்தபடியாக அபிஷேகம் செய்பவரின் ஆசாரம், காட்டும் சிரத்தை மூலம், அல்ல அபிஷேகத்தின்மூலம், அபிஷேகிக்கப்படும் உருவத்தின் அழகுகளின் தன்மைகள், பல கோணங்களில் வெளிப்படு கின்றன. அவைகளின் அந்த மூர்த்தத்தின் பாவனைகளை யும் படிக்க முடிந்தவர்கள், நுண்ணுணர்வு படைத்தவர், கற்பனையில் தரிசனம் காண்பவர்கள். I Consider image-nation as an extension of the present. It is an aspect of truth

முதலில் எண்ணெய்க் காப்பில் அவள் அங்கங்கள் பளபளக்கின்றன. அங்கங்கள் 'மின் மின்' தெறிக்கின்றன. என் தகப்பனார் என்னிடம் வளர்த்திருந்த பாவனைப்படி வயோதிக ரூபத்தில் இருப்பாள் என்று நினைத்தது தவறு. நன்றாக இருக்கிறாள். அவள் ஆள் உயரத்துக்கேற்றபடி உண்மையை ஒட்டியே இருக்கிறாள்.

—C

சீயக்காயின் சுகந்தத்தில துலங்குகிறாள்—என் இதயத்தின் துலக்கமே! (The clean sing of my heart )

பாலாபிஷேகத்தில் புலுபுலு புஷ்பமாய் மிளிர்கிறாள். பெரிய புஷ்பம்!—என் இதயத்தின் அமுதமே! (The milk of my heart!)

தயிர் அபிஷேகத்தில் (யாரிடமும்) மறைந்திருக்கும் ஒரு முரட்டுத்தனத்தை வெளிக்காட்டுவதுபோல் தோன்றுகிறாள்—என் இதயத்தின் ததியே! (The curd of my heart!)

இளநீர் அபிஷேகத்தில், மர்மத்தின் ஸல்லாவில் லேசாக மங்கித் தெரிகிறாள். என் இதயத்தின் மர்மமே! (My Princess, veised in my story!)

பன்னீர் அபிஷேகத்தில் பரிமளிக்கிறாள். என் இதயத்தின் பரிமளமே! (The perfume of my heart!)

பஞ்சாமிர்தத்தில் மதமதக்கிறாள். என் இதயத்தின் பஞ்சாமிர்தமே! (The Yoluptions fruits of my heart!)

தேன் அபிஷேகத்தில் விட்டு விட்டு ஒளி வீசுகிறாள். என் இதயத்தின் தேனே! (The honey of my heart!)

மஞ்சள் அபிஷேகத்தில் மங்கலம் வீசுகிறாள். என் இதயத்தின் மங்கலமே! (My heart's propixiousness!)

சந்தனாபிஷேகத்தில், சந்தனத்திலே ஸே உடுத்தி, தோரணை, தபாக்னி, உடனே சாந்தம், மயக்கு, தூய்மையின் கலவையில் ஜ்வலிக்கிறாள். என் இதயத்தின் சந்தனமே! (The sandal of my heart!)

[என் முதல் காதல் ஆங்கிலத்திலும் அர்ச்சிக்கிறேனே! மறு சமயம் உண்டோ இல்லையோ?]

அவ்வப்போது உபசாரமாய்க் காட்டும் கற்பூரத்தின் சுடரொளியில் அவள் புன்னகையில் வெற்றியும் கருணையும் ப்ரகாசிக்கின்றன. என் இதயத்தின் சுடரே (The flame of my heart!)

பிறகு தண்ணீரை அவள்மேல் வீசிக் கொட்டுகையில், கசடுகள் களைகின்றன. சுத்தமாய், பத்திரமாய், பக்தியுடன் துடைத்துவிட்டு, குருக்கள் புதுப் புடவையைக் கொசுவம் வைத்துக் கட்டுகிறார். அம்பாள் அந்த சமயத்துக்கு அவளுடைய ப்ரபையிலிருந்தே புறப்படுவது போல் ப்ரமை தட்டுகிறது. ப்ரமைதான். ஆனால் இந்தப் பிரமைகளே அவள்மேல் உண்மையான பிரேமையுடன் கண்டு கொண்டேயிரு. ஒருநாள், உன் ப்ரமை, ப்ரமாணம் ஆகும்போது ஆச்சர்யப்படாதே. ஆச்சர்யப்பட்டுத் தருணத்துக்கு அபசாரம் இழைக்காதே.

பிறகு ஸஹஸ்ரநாம அர்ச்சனை. வெள்ளிக் கவசத்தில் அவள் ராஜாத்தியாக விளங்குகிறாள். எனக்குத் தோன்றுகிறது, இதுமாதிரி சமயங்களில் இதுமாதிரி நினைவுகளுக்கு மனம் தன்னை விட்டுக் கொடுக்க வேண்டும். அதற்குப் பழக்கிக்கொள்ள வேண்டும். மனம் எப்பவுமே தன்னை முழுக்க விட்டுக் கொடுப்பதில்லை. ஆனால் மனத்தை அடித்து விரட்டி அடக்க முடியாது. மனம் ஒரு அராபிக் குதிரை. மனமே இரக்கம் பார்த்து ஒத்து உழைக்க அதைப் பாகுபடுத்தத் தெரிய வேண்டும்.

அவளை அலங்காரத்தில் காண்கையில் தோன்றுகிறது. இவள்மேல், இந்தக் குடும்பம், சந்ததி சந்ததியாக, அவரவர் தனித்தனி அவள்மேல் பொழிந்திருக்கும் அன்பில், பாவனைகளில். தன் வழியில் கலந்துகொண்டு எவ்வளவு அழகாயிருக்கிறாள்? இவள் எங்கள் பெருந்திருவாய் மட்டும் இப்போது இல்லை. யாராய் வேணுமானாலும் இருக்கட்டும். பாவனையின் உருவேற்றத்தில், எத்தனை அழகு, செருக்கு, சக்தி பெற்றிருக்கிறாள்! அவனவன் தனக்கென்று ஒரு கனாக் காண்கிறான். இந்தக் கனா வெறும் இஷ்டங்களுக்கும் ஆசைகளுக்கும் அப்பாற்பட்டது. ஏதோ ஒரு சமயத்தில் அத்தனை கனாக்களும் திரண்டு ஒன்றாகிவிட்ட ஒரே

களா. அதை சாசுவதப்படுத்தும் இடையறா முயற்சியே வாழ்க்கை. இதற்கு என்ன வேணுமானாலும் பெயர் கொடுத்துக்கலாம்! நான் பேணும் கனவின் பிரதிநிதி இவள். கடவுளும் இவளே. காதலும் இவளே. இவளே என் தெய்வம், என் தேவி!

குடும்பத்துக்குக் குடும்பம் குலதெய்வம் வேண்டும். பரம்பொருளின் சர்வ வியாபகமான அருவத்தை அந்த மறுக்க முடியாத உண்மையைப் புரிந்து கொள்வதற்கு, புரிந்துகொண்டதை ஏற்றுக்கொள்ளும் மனப் பக்குவத்தைப் பெற ரூப வழிபாடு, வழி, ரூப ப்ரக்ஞை வேண்டும். ரூப ப்ரக்ஞையிலிருந்து நாமப்ரக்ஞை அடைந்து, அதுவே அவள் அருளில் ஸ்வயாகார ப்ரக்ஞையாக மாறவேண்டும், முழுமையான நிபந்தனைகளற்ற ஸ்வயாகார ப்ரக்ஞை. அதுவே அனுபவமாக ஊடுருவுகையில், அதைத் தாங்க முடியாது. நாம் சாதாரணமானவர்கள். அன்றாட சக்தியில வாழ்பவர்கள். அதற்குக் குலதெய்வமே, கை கொடு!

அபிஷேகம் அலங்காரம், அர்ச்சனை நைவேத்யம், எல்லாம் முடிந்தபின்னர் குருக்கள் ஒரு வசீகரமான சம்பிரதாயத்தைச் செயலுக்குக் கொணர்ந்தார்.

எங்களை சன்னதியில் உட்காரவைத்து, அம்பாள் மேல் சாற்றிய மாலைகள் இரண்டையெடுத்து எங்களிடம் கொடுத்து எங்களை மாலை மாற்றிக்கொள்ளச் சொன்னார். சந்தனப்பேலாவில் அபஷேக சந்தனத்தை நீட்டி உபசரித்தார் ஒரு தட்டு நிறைய அம்பாள் பிரசாதம். தேங்காய் மூடி, வெற்றிலைப் பாக்கு, நிறைய பழம், பூச்சரங்கள் கொடுத்தார்.

தொண்டையை என்னவோ செய்கிறது. ஆச்சு போச்சு, நல்லதோ எங்கள் பொல்லாதோ, சண்டையோ

சமாதானமோ, இன்று நாற்பத்திஏழு வருடங்கள் எங்கள் மணவாழ்க்கை ஓடிவிட்டது. அவள் உதட்டோரங்களில், வெற்றி துளிக்கிறது. முகத்தில் ஒரு குழந்தைத்தனம்.

"இன்னும் மூணுவருடங்களில் நமக்குக் கல்யாணமாகி ஐம்பது வருஷம், உங்களுக்கு சதாபிஷேகம்" என்கிறாள். அவள் நோக்கில் அது ஒரு சாதனை. கூடவே அந்த விசேஷத்தின் லோகாதாயமான லாபங்களின்மேலும் கண் இருக்கலாம். இருக்கட்டுமே எப்படியும் அவள் பெண்தானே!

ஆனால், இச்சமயம் நான் பார்ப்பது, இவள் தன் தாய்க்கு மகள், உடன்பிறப்பாளுக்குச் சகோதரி, என் மனைவி, பிறகு தன் குழந்தைகளுக்குத் தாய், அடுத்துப் பேத்தியின் பாட்டி, அவள் குணத்தின் நல்ல சமயங்களில் எனக்கு ஆலோசகி, இப்போது எனக்குச் சினேகிதி எனப் பெண்மையின் ஆசிரமங்கள் அத்தனையும் வகித்து விட்டாள், வகிக்கிறாள். ஒருவேளை நான் தேடும் அவளேதான் இவளோ? இவளேதான் அவளோ? ஆகவே தன் முறையில் வணக்கத்துக்குரியவள்.

நெஞ்சில் குங்கிலியம் மணக்கிறது.

கர்ப்பக்கிருஹத்திலிருந்து அவளுடைய சலுகைப் புன்னகையின் ஒளி என்மேல் படர்வதை உணர்கிறேன்.

*　　*　　*

"வாங்கோ அப்பா, எழுந்திருங்கோ. நமஸ்காரம் பண்றோம். வண்டிக்கு நேரமாச்சு" கண்ணன் வீபூதி மடலை நீட்டுகிறான்.

மௌனமாய் எழுந்திருக்கிறேன். கனாப்போல வாரம் ஓடிப்போச்சு. விழிப்பை எதிர்பார்த்து வயிற்றைச் சுருட்டிச் சுருட்டிப் பயந்துகொண்டிருந்த நாள். திகில் வேளையே வந்தாச்சு.

மூவரும் நமஸ்கரிக்கின்றனர். குழந்தை ஏன் நமஸ் கரிக்கணும்? கண்ணன் ஏற்பாடு, இப்படியெல்லாம் 'ட்ராமா' பண்ண அவனுக்குப் பிடிக்கும்.

நமஸ்காரத்திலிருந்து குழந்தை எழுந்து நின்று கை களைத் தூக்குகிறாள். தூக்கணுமாம்! தூக்கிக்கொள் கிறேன். என் கன்னங்களை இரண்டு கைகளிலும் பிரட்டி இழுத்துப் பிடித்து முத்தமிடுகிறாள்.

"செல்லக் குட்டித் தாத்தா!"

'ஓ' போடும் குஷியிலிருக்கிறாள்.

குரல் 'சட்'டென மாறுகிறது.

"என்ன தாத்தா அழுவறே?" உதட்டைப் பிதுக்கு கிறாள்.

நான் வாய் திறக்கவில்லை. திறந்தால் உடைந்து விடுவேனோ? என்று பயம். அவள் அம்மை மெதுவாக என் பிடியிலிருந்து குழந்தையை விடுவித்து வாங்கிக் கொள்கிறாள்.

"வா பாப்பூ, பஸ்ஸுலே 'ஓ' போவோமே!"

"நேக்கு செல்லக்குட்டித்தாத்தா வேணும்!" குழந்தை திமிருகிறாள். யார் அவளை விடுகிறார்கள்? விடமுடியும்? வாசலில் 'பைக்' ஸ்டார்ட் ஆகிவிட்டது.

"செல்லக் குட்டித்தாத்தா வேணும்! தாத்தா! தாத்தா!"

அந்தக் குரல் தூரத்தில் ஓயும்வரை, அந்தத் திக்கைப் பார்த்துக்கொண்டு வாயடைத்து நிற்கிறேன்.

அடுத்தமுறை அவள் வரும் வரை, எத்தனையோ கவலைகள், கவனங்களின் புதைவிலிருந்து நெஞ்சில் எதிரொலித்துக் கொண்டிருக்கும்.

# 2

இந்தத் தொகுப்பின் 'அவள்' எனும் தலைப்புக்கு உந்துதலாயிருந்தவை எங்கள் குலதெய்வம் பெருந்திருப் பிராட்டியும், இதன் முதன் மூன்று கதைகளா, கட்டுரை களா என இனம் நிர்ணயிக்க முடியாதபடி அவை அமைந்துவிட்டன. மொத்தமாய்ச் சொன்னால்—உரத்த சிந்தனைகளும்தான்.

இந்த முதன் மூன்று ஆக்கங்களுக்குக் கிடைத்த ஆதரவு கண்டு "இதே தலைப்பில் இன்னமும் எழுதினால் என்ன?" என்று அப்படியே நாலைந்து கதைகள் எழுதி யதும் "அவள்" என்கிற ஒரே தலைப்பு குழப்பமாயிருக் கிறது. கதைக்குக் கதை வேறு காண வாசகர்கள் சிரமப் படுவார்கள். (வாசகர்கள் சிரமப்படுகிறார்களோ இல்லையோ)—வெளியிடுபவர்கள் ஆட்சேபித்தார்கள்.

நாற்பது வருடங்களுக்கு முன் இதழ்கள் எனும் வரிசையில் கதைகள் எழுதினேன். ஒரே தலைப்புக்கு அப்போது சர்ச்சை எழவில்லை. ஆனால் அவை கதைத் தொகுதியாக வெளிவந்தபோது, அடையாளம் கண்டு பிடிக்க சிரமம் எனக்கே தெரிந்தது. தனித்தனித் தலைப்பு களின் உசிதம் உணர்ந்தேன். தலைப்புகளும் பொருத்த மாகவே அமைந்தன. மடிப்பு விசிறியை ஒரே வீச்சில் பிரித்தாற்போல "அவள்" எனும் ஸ்வரூபத்தின் விசிறல் தான் இந்தத் தொகுப்பின் முழு உள் அடக்கமும்.

"அவள்"—தலைப்பின் நோக்கமும் பொருளும், பெண்ணின், பெண்மையின் தன்மைகளை, எனக்கென்று வாய்த்த எழுத்தின் கோணத்திலிருந்து பார்ப்பதுதான்.

நான் ஒன்றும் புதிதாய்ச் செய்துவிடவில்லை. இருந்தாலும் நானும் செய்கிறேன் என்கிற பிரியமும் பெருமிதமும் தான்!

உலகின் மூன்று சிறந்த நாவல்களில் ஒன்றாய்க் கருதப்படும் ANNA KARENINA''வை எழுதிய இலக்கிய மேதை, தத்துவ ஞானியை ''பெண்ணின் மனதைப் பற்றி உங்களுக்குத் தெரிந்ததென்ன?'' என்று யாரோ கேட்டபோது, உடனேயே அவர் மிரண்டாற்போல அவசரமாய்க் கைவிரித்து ''ஐயையோ எனக்கு இன்னமும் ஒன்றும் பிடிபடவில்லை'' என்றாராம். அவருக்கு எதிர் நாம் எந்த மூலை?

ஆனால் இது மறுக்க முடியாதது. ''அவள்'' அனுப் பற்ற ஆழம் காணமுடியாத விஷயை.

ஏற்கெனவே என் கதைகளில் பெரும்பாலும், பெண்மையின் மாண்பைத்தான் சித்தரிக்கின்றன. என் பல கதைகளின் முக்கியமான பாத்திரங்களினூடே, என் தாயைத்தான் காண்கிறேன். இதற்கு அடிப்படைக் காரணமாக என் பெற்றோர்களும் என் முன்னோர்களின் பின்னணியும்தான் இருக்கக்கூடும். முந்திய பக்கங்களில் அவர்களின் விசேஷத் தன்மைகளை, இங்கு இடம் கிடைத்ததுக் கேற்பச் சொல்லியிருக்கிறேன். என் மற்றையக் கதைகளில், விவரமாகவே அவர்கள் வருகிறார்கள். ''பாற்கடல்'' எனும் சுய வரலாறில் அப்பட்டமாகவே வருகிறார்கள்.

வெகு நாட்களுக்கு முன்னர், பேச்சு வாக்கில் நண்பர் சொன்னது ஞாபகம் வருகிறது. ''நம்மால் முடியாத காரியம் ஒன்றை அவர்கள் செய்கிறார்கள். அதை அவர்களால் தான் முடியும். நம்மைப் பெற்றெடுக்கிறார்கள்'' தாயின் பெருமை பற்றியும், தாய்மையின் விளைவாய்க் கிளை பிரியும் எத்தனையோ உறவுகளைப் பற்றியும் சிந்திக்க—ஏன், தியானமே செய்யத்தக்க முறையில் இதை விடச் சூத்திரமாய்ச் சொல்ல முடியாது.

தாய், மனைவி, உடன்பிறந்தாள், காதலி, நண்பி, வேசி, குழந்தை, பாப்பா, பாட்டி, வைப்பாட்டி, இன்னும் பல உறவுகளூடேயும், மூர்க்கம், குரூரம், கோபம், கருணை, பேதைமை, வெகுளித்தனம் இன்னமும் ஏதேதோ குணங்களூடேயும் அவர்களின் தாய்மை சரடு ஓடுகின்றது.

சொல்லிய உறவுகளையும் தாண்டி, அவைகளிலேயே, எதிர்பாராத சமயங்களில் இடங்களில், சூட்சும நிலைகள் தோன்றிக் களவு காட்டுகின்றன.

ஒரு புருவ உயர்த்தல்
தனி ஒளி வீசின விழிகளின் மேல்
சட்டெனச் சாளரம் விழுந்த இமைகள்
உதட்டோரத்தில் ஒரு குழிவு
நமக்குக் காரணம் தெரியாது
ஆனால் மயக்கம் காட்டும்
விரல் நுனி முத்திரை
திடீர்ப் பல் லொளியில் வீண் ஒளி.

சொல்லிக்கொண்டே போகலாம். பேச்சைக் காட்டிலும் கலம் பேசும் பாஷைகள்; அவை பிடிபடாதவை. ஆனால் ராகத்துக்கு அநுஸ்வரங்கள் போல, இன்றியமையாதவை.

ஆண் எப்பவுமே சுபாவத்தில் பெருந்தன்மையான பிராணி. A noble animal லக்ஷியவாதி. அதனாலேயே அசடு. ஆனால் ஸ்திரீ யதார்த்தவாதி, மண்டை ஆகாயத்தில் ஆயிரம் கிறங்கினாலும், அவள் பாதங்கள் பூமியில் ஊன்றியே இருக்கும். அந்தந்த நிலைக்கு உடனே தன்னைச் சரிப்படுத்திக்கொண்டு விடுவாள். சப்பாத்தியில் எந்தப் பக்கம் வெண்ணெய் தடவியிருக்கிறது என்று அவளுக்குத் தெரியும். கடைசியில் வெற்றி அவளுடையதே.

எல்லாம் தெரிந்தும் ஒன்றுமே அறியாத அப்பாவித் தனமும் அவளிடம்தான் பாசாங்கிலாமல் இருக்கமுடியும். இதுவேதான் அவளுடைய Mystic qualityயோ?

அவள் எல்லாவற்றிற்கும் சாக்ஷியானவள். ஆனால் தான் நிரூபணைக்கு அப்பாற்பட்டவள். ஒரே சமயத்தில், எதிர் மறைகள் தன்னில் பொதிந்தும் புதைந்தும் இருப்பவள். பட்டைவிட நளினமானவள். ஆனால் பட்டு நூல் போன்று உரமானவள்.

இந்தத் தன்மைகள் தனித்தனியாவும், ஒருங்காகவோ அழுத்தமாக விழுந்திருக்கும், அல்லது விழுந்திருப்பதாக நான் நினைத்துக்கொண்டிருக்கும் கதைகளை, இந்தத் தொகுப்பில் சேர்ந்து பார்க்கிறீர்கள்.

தெய்வம் மனுஷ்யரூபேண: என்கிற வாக்கைத்தான் இந்தக்கதைகள் உறுதிப்படுத்துகின்றன. அதுமட்டுமன்று, அவள் இயங்குகையில், அவள்கூட அறியாமல், அவளிட மிருந்தும் வெளிப்படும் ஸௌந்தர்ய சூக்ஷ்மங்களை, இந்தப் பக்கங்களின் ஒட்டுமொத்தத் தாக்கமாய் உணரவோ, அதனால் அனுபவிக்கவும் நிகிழ்ந்திடில், 'நான் பெற்ற இன்பம் வையகம்......'

இலக்கியம் என்பதே என்ன? சதை உரிந்த பார்வை யுடன் உள்ள நெகிழ்ச்சியும் இழைவதன் விளைவாய தரிசனம்தானே! ஆனால் அதற்கும் அவள் அருள் வேண்டும்.

ஆதிசங்கரர் ஸௌந்தர்ய லஹரியில் சொல்கிறார்: உன்னுடைய வாக்கைக் கொண்டே அல்லவா உன் ஸ்தோத்திரம் அமைந்தது.

பண்டை மொழியில், ''வெல்லப் பிள்ளையாரைக் கிள்ளியே பிள்ளையாருக்கு வெல்லம் நைவேத்யம்.''

* * *

கூடத்தில் ஒரே ரகளை. எட்டிப்பார்க்கிறேன்.

என் மருமகளை இப்படிப் பார்த்தில்லை, கூந்தல் அவிழ்ந்து (அவிழ்த்துவிட்டிருக்கிறாள், பின்னிக்கொள்ள. அவள் கூந்தல் அவள் செருக்கு; நியாயமாகவே) முகக் கோடுகள் கலைந்து நெரிந்து கண்கள் நெருப்பைக் கக்கு கின்றன. முகம் குங்குமம்.

"சனியனே, என்கிட்ட வராதே, தொலைந்து போ!"

பிடித்துத் தள்ளிய தள்ளலில், குழந்தை நாலடி எட்டப் போய் விழுகிறாள். அவளை அப்படி என்ன கோபம் செய்தாள்?

பாப்பா அழுதுகொண்டே எழுந்து அவளிடம் போகிறாள்.

"அம்மா! அ—ம்—மா ஆ—ஆ—ஆ!"

வீட்டுக்கு வீடு இந்தக் காக்ஷி இல்லாத இடமே இல்லை. உலகம் பூராவே சொல்வேன். ஆனால் இதிலுள்ள கவிநயம் கண்டு, நின்று யோசித்தீரோ?

அடித்தாலும் நீதான்.

காலாந்த காலம், கற்பாந்த காலம் இந்த உண்மை, குழந்தைக்கு எப்படித் தெரிந்திருக்கிறது! அதுதான் தாய்ப்பால் ஊட்டிய உபதேசம்.

அந்த ஆச்சர்யம், அற்புதம், கவித்வம், சோகம், அழகு, ரகஸ்யம், வெளிச்சம் எல்லாம் ஒன்று சேர்ந்து என்னை அமுக்குகையில், விழிகள் பெருகுகின்றன. கூடவே உள்ளூர ஏதோ ஆனந்தம் பொங்குகிறது. சிரிக்கிறேன்.

அடித்தது
அழுதது
தேறுவது
எல்லாம்
அவள்.

**லா. ச. ராமாமிருதம்**

Plat 242, கதவு எண் 1, கிருஷ்ணன் தெரு,
ஞானமூர்த்தி நகர், அம்பத்தூர்.
சென்னை—600 053.

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | அம்மா | 1 |
| 2. | அவள் | 16 |
| 3. | சங்குபுஷ்பம் | 25 |
| 4. | ஜ்வாலாமுகி | 35 |
| 5. | பிரியதர்சனி | 46 |
| 6. | என் பிரியமுள்ள சிநேகிதனுக்கு | 56 |
| 7. | உச்சி வெய்யில் | 87 |
| 8. | தோடு | 103 |
| 9. | ஜனனி | 122 |
| 10. | தாக்ஷாயணி | 161 |
| 11. | அமலி | 188 |
| 12. | த்வனி | 202 |
| 13. | கறந்த பால் | 254 |
| 14. | தாய் | 271 |
| 15. | அன்புள்ள ஸ்நேகிதிக்கு | 275 |
| 16. | துளசி | 290 |
| 17. | வீம்புக்கு மருதாணி | 302 |
| 18. | அபூர்வ ராகம் | 310 |
| 19. | தரிசனம் | 339 |
| 20. | கமலி | 350 |
| 21. | ஒரு முத்தம் | 364 |
| 22. | அலைகள் ஓய்வதில்லை | 383 |
| 23. | சூடிக்கொண்டவள் | 397 |
| 24. | இந்திரா | 400 |
| 25. | ஸ்த்ரீ | 407 |
| 26. | மோனாம்பரி | 412 |
| 27. | லூசி | 419 |
| 28. | இன்று, நேற்று, நாளை | 433 |
| 29. | தாயம் | 463 |
| 30. | பாற்கடல் | 487 |

# அம்மா

அம்மாவின் மடி பிதுங்கிற்று. ஆனாலும் அம்மா வுக்குத் திருப்தியில்லை. அவரைப் பந்தலின் இன்னொரு பக்கம் ஏணியைப் போட்டாள்.

என்ன அம்மாப் பெண்ணே, இன்னும் பறிக்கணுமா? பறிச்சதே யதேஷ்டமா...?

அம்மா, ஏணிமேல் ஏறிக்கொண்டே, ''நமக்கு மட்டும் இருந்தால் ஆயிடுத்தா? சங்கராந்தியுமதுவுமா, மத்தவா ளுக்கும் கொடுக்க வேண்டாமா?''

''மத்தவாளா? அது யாருடா மத்தவாள்? அண்ணா வுக்கு—அதுதான் அப்பா, அப்பாவை அண்ணாவென்று அழைப்போம்— அண்ணாவுக்குத் திகைப்பு. ஆனால் அண்ணா இடக்காகவும் பேசுவார்.

''ஏன், எதிர்த்தாம் பக்கத்தில் உடையார் வீடு, இடையன் வீடு; வேலைக்காரி குடும்பம், பால் பொங்கித் தான்னு விசாரிக்க வரவா, இவாள்ளாம் உங்களுக்கு மனுஷாளாப் படல்லியா?

''சரிதான், ஊரையே வளைச்சுப் போட்டாச்சா? நாளைக்கு எல்லார் வீட்டிலேயும்தானே பால் பொங்கறது, நீ வேறே சீர்கொடுத்து அனுப்பணுமா?''

''உங்கள் வாக்குப்படியேதான் இருக்கட்டுமே! வருஷத்துக்கொரு நாள். எல்லாரும் சந்தோஷமாயிருக்கணும்னே ஒரு நாள். ஊரே கல்யாண வீடு. நம்மிடம் இருக்கறதைப் பங்கிட்டுப்போமே!''

அதுதான் அம்மா.

* * *

இது எங்கள் சொந்த ஊர் இல்லை. சென்னையில் அண்ணா, உடம்பு சீர்குலைந்து போய், ஆரோக்யத்தைத் தேடி, குடும்பத்தோடு வயிறு பிழைக்க வந்த ஊர். அப்பா பள்ளிக்கூட (ஆறாம் வகுப்பு வரைதான்) ஹெட்மாஸ்டர். கூடவே போஸ்ட் மாஸ்டர். அவர் பெயரே தபாலாபீஸ் வாத்தியார்.

எதிர்வீட்டு முதலியார்தான் இந்த வீட்டுக்குச் சொந்தக்காரர். மூட்டையும் முடிச்சுமா, குழந்தையும் குட்டியுமா, இரவு முதன்முதலாக அண்ணாவும் அம்மாவும் வண்டியிலிருந்து இறங்கியபோது, முதலியாரும் அவர் மனைவியும் எங்களை வரவேற்க வாசலில் காத்திருந்தனர்.

முதலியாரும் அவர் மனைவியும், கோவில் உற்சவத்தில் முன்னால் போமே, ஆள் உள்ளே புகுந்துகொண்டு போமே பூதப் பொம்மைகள்! அதுமாதிரி.

''என்ன முதலியார், நான் திருப்பித் திருப்பிக் கேட்டு எழுதியும், வாடகையைப் பற்றியே ஒண்ணும் தெரிவிக்கவில்லை?''

முதலியார் மார்மேல் கட்டிய கைகளுடன், ''இங்கெல்லாம் அப்படியொண்ணும் கண்டிப்பு கிடையாதுங்க. மாலை வேளையில் வீட்டுக்கு விளக்கேத்தி வைக்க மஹாலச்சுமி வந்தால் போதுங்க. அம்மாவைப் பார்த்தாலும் அப்பிடித்தான் இருக்காங்க.''

முதலியார் பிரமாதமாகப் பேசுவார். ஆனால் அவர் மனமும் அவர் உடலைவிடப் பெரிது.

* * *

மிக மிகச் சிறிய வீடு. இரண்டே சின்ன அறைகள் சமையலறையையும் சேர்த்து. ஆனால் அந்தப் பிரம்மாண்டமான கொல்லையைப் பார்த்த அம்மாவால் சும்மா இருக்க முடியவில்லை. முதலியார் வீட்டிலிருந்து கடப்பாரையும் மண்வெட்டியும் வாங்கிக்கொண்டாள்.

வந்த ஒரு வாரத்துள் கொல்லைப்புறத்துக்கு முகமே மாறிவிட்டது. அத்தனையும் அம்மா.

அவளே கொம்புகளை நட்டுப் பந்தல் போட்டாயிற்று. நாளடைவில் அவரைக்கொடியும் படர ஆரம்பித்துவிட்டது. பந்தலின் நிழலில் நாங்கள் விளையாடுவோம். அங்கிருந்து தொங்கும் புடலையைப் பார்த்து எங்களுக்கு வியப்பாயிருக்கும்.

''தொடாதேங்கோ துஷ்டைகளா?'' அம்மா சமையலறையிலிருந்து இரைவாள். ஆனால் நாங்கள் தொடுவோம். ஒருதடவை ஒரு புடலை தானாவே பந்தலிலிருந்து கழன்று கீழே தொப்பென்று விழுந்து, அதோ வாழை நட்டிருக்கும் இடத்துக்குச் சரசரவென்று போய் ஜலதாரையுள் மறைந்தது. அம்மா ஓடிவந்து எங்களை மூர்க்கமாக அணைத்துக்கொண்டு அன்று மாலை எல்லோருக்கும் சுத்திப் போட்டாள்.

கொல்லையின் ஒரு மூலையில் மாட்டுக் கொட்டகை. ''அம்மா...'' கலியாணி கத்துகிறது. அதற்கு மடிகனம் தாங்காமல் துளிக்கிறது. இன்னும் சற்று நேரம் பார்த்துவிட்டு, குப்பன் வராவிட்டால், அம்மாவே கறந்துவிடுவாள்.

அம்மாவுக்குக் கண் கண்ட தெய்வம் பசு.

அவள் புத்திசாலி என்றதால் மட்டுமே அல்ல.

அவளால் சும்மாயிருக்க முடியாது.

அவள் சுபாவமே அப்படி.

அம்மா.

* * *

தினம் சாயங்காலம் அம்மா காய்கறித் தோட்டத்தைச் சுற்றி வருவாள், வலது கை சுட்டுவிரலும் நடுவிரலும் மேலுதட்டைப் பொத்தியபடி. அது அவளுடைய மானரிஸம்.

வெண்டைச் செடி எதிரே நிற்பாள். அங்கு ஏதோ பேச்சு நடக்கும் என்றே என் கருத்து. பாஷை நமக்குப் புரியாதது. மாலைக் காற்றின் ஜாலமோ அதன் சொந்த மான அசைவோ, செடி எட்டி அம்மாவை தொட முயல்வதுபோல எனக்குத் தோன்றும். அம்மா நகர்வாள். செடி படபடவெனத் தலையை ஆட்டும்.

அம்மா காதண்டை இடித்துக் 'கிசுகிசு'த்துத் தவிக்கும் அவரைக்கொடியை அம்மா மெல்லத் தூக்கி பந்தலில் தொற்ற விடுவாள்.

ஓ, அம்மாவுக்கும் அவள் செடிகளுக்குமிடையே நிச்சய மாகப் பேச்சு இருந்தது; சந்தேகமேயில்லை. ஆனால் பாஷைதான் நமக்குப் புரியாதது.

* * *

முதல் காய்ப்பைப் பறித்ததும் அம்மா, என்னிடம் சொல்லி அனுப்பி முதலியார் தம்பதிகள் வந்தனர்.

வந்ததும், "முதலியார், இந்தாங்கோ இது உங்களுடையது உங்கள் வீட்டு மண்."

சிவபாக்கியம் முன்றானையை ஏந்தி அதில் வாங்கிக் கொண்டாள்.

முதலியார் இரண்டு கைகளையும் கூப்பிக்கொண்டு, ''மண்ணை வெச்சிட்டு என்ன செய்யறதுங்க? அதைப் பொன்னாக்கும் கை யாருடையது? அம்மா வந்த அன்னிக்கே சொன்னேனே, வீட்டுக்கு மஹாலச்சுமி வந்தாச்சுன்னு.''

முதலியார் பிரமாதமாய்ப் பேசுவார்.

ஆனால் அவர் கண்கள் இப்போது துளும்பின. கூடவே புன்னகையில் கன்னங்கள் நெகிழ்ந்தன. முதலியாரும் அவர் மனைவியும் பக்கத்தில் பக்கத்தில் ஜோடி யானைக்குட்டிகள்.

* * *

நாங்கள் இருபது வருடங்கள் இந்தக் கிராமத்தில் வாழ்ந்தோம். எங்கள் குழந்தைப் பருவம், பிள்ளைப் பருவம் இங்குதான் கழிந்தன. பிறகு மேலே படிக்கச் சென்னைக்கு நாங்கள் பையன்கள் சிற்றப்பா வீட்டுக்குச் சென்றாலும், மைக்கல்மஸ், கிறிஸ்துமஸ், கோடையென அவ்வப்போது விடுமுறைக்கு என்று திரும்பிவிடுவோம். அப்போது இங்கிருக்கும் நேரமெல்லாம், விடுமுறை கழிந்ததும் சென்னைக்குத் திரும்பணுமே என்ற கசப்பு. சென்னையில் இருக்கும்போது, மறு விடுமுறைக்குக் காத்திருக்கும் நாட்கள்.

அப்படியொரு காலம்.

எங்கள் வாழ்க்கையிலேயே சந்தோஷமான சத்தான நாட்கள் இந்த வீட்டில்தான். எளிமையான வாழ்க்கையில் களங்கமற்ற சந்தோஷங்கள்.

* * *

தினப்படி எனக்கொரு வியப்பு. அம்மா எப்போ குளித்தாள்? ஏனெனில், நாங்கள் என்ன சுருக்க எழுந்திருந்தாலும் அதற்கு முன்னேயே அம்மா குளித்திருந்தாள். விடிகாலையில் எழுந்துவிடுவாள்.

"வசுதேவ பாலனே அசுரகுல காலனே எழுந்திரும்
யசோதா நந்தனே நந்தகுமாரனே பிருந்தாவன
நவநீத சோரனே எழுந்திரும்" [லோலனே

வெட வெட குளிருக்குத் தலைமேல் இழுத்துப் போர்த்திய கம்பளியுள், கிருஷ்ணன் பேரைச் சொல்லி எங்களை எழுப்பும் பாட்டு எட்டும். அம்மாவின் நட மாட்ட சத்தங்கள் கேட்கும்.

அம்மா குரல் வேய்ங்குழல் போன்றது. சற்று உச்ச ஸ்தாயியில், சற்றுத் திகட்டும் இனிப்புடன்...

கம்பளியுள் முதல் விழிப்பில் கேட்கும் இந்த முதல் ஓசைதான், அன்றைய, அன்றன்றைய நடப்புக்குக் கணித்த ஸ்ருதி என்று இப்போது நினைத்துக்கொள். எனக்கு மிகவும் பிடிக்கிறது.

* * *

ஆம், நினைத்துப் பார்ப்பதென்பதே ஸ்ருதி மீட்டல் தானே. சிந்தனையின் இசைவில், சிந்திக்கும் விஷயங்கள். அவைகளின் சூட்டின் அவசரமும் ஆத்திரமும் பின்னோக்கில் தணிந்து, தன் தன் இடத்தில் விழுந்து அமைதி பெற்று விடுகின்றன.

இதில் அம்மா, அவளைப்பற்றி நான் எண்ணும் போதெல்லாம்—அவளை எண்ணாத நாட்களே இல்லை—அவளுடைய ஸ்வரஸ்தானத்தில், அவளுடைய எண்ணத்தில், பேச்சில், செயலில், சந்தோஷங்களில், துயரங்களில் தீர்மானமாக, கச்சிதமாக, உள்ளத்தின் வானில் ப்ரகாசிக்கிறாள்.

* * *

நான் தவங்கிடந்து பெற்ற பிள்ளை. திலோமம் பண்ணி, விரதங்கள் முழித்து ராமேசுவரம் போய்...

இத்தனை அருமையாக நான் பிறந்தபோதிலும், அம்மாவிடம் தனிக் கொஞ்சல்கள் சலுகைகள் நான் அனுபவித்ததாக அந்தச் சின்ன வயது முதற்கொண்டே ஞாபகம் இல்லை.

—பள்ளி விட்டு வந்ததும், ஸ்லேட்டையும் புத்தகங் களையும் வீசியெறிந்துவிட்டு அம்மா மடியில் விழுந்ததாவோ,

—''அடி கண்ணே! படிச்சுக் களைச்சுப் போயிட் டியா?'' என்று அவள் என்னை வாரிக்கொண்டதாவோ,

—சாதத்தைப் பிசைந்து எங்களுக்கு கையில் போட்ட தாவோ,

—'என்ன குழந்தையை இப்படிப் போட்டு அடிக் கறேளே!' என்று எனக்குப் பரிந்துகொண்டு வந்ததாவோ,

—''நீ சமர்த்து, கெட்டிக்காரன்'' என்று என்னை நேரில் பாராட்டினதாவோ,

—பிறரிடம் பெருமைப்பட்டுக் கொண்டதாவோ, ஊஹூம்...

அதற்கெல்லாம் பாட்டிதான் சரி. வீட்டுக்குப் பாட்டி கட்டாயம் வேணும்.

ஆனால் அம்மா, பாட்டியான பிறகும், பாட்டியாக இல்லை. எனக்கு ஆச்சரியமாயிருக்கும், ஏமாற்றமா யிருக்கும், ஆத்திரம் வரும்.

ஆனால்—

ஆ, இது எனக்கு மிக்கப் பிடித்தமான சொல்.

சொன்ன புத்திகள், போதித்த கோட்பாடுகள், அச் சுறுத்திய கட்டுப்பாடுகள், பழக்கவழக்கங்கள் எல்லாவற் றையும் ஒரே கணத்தில் தூக்கியெறிந்து, கலகத்துக்குக் கொடி நாட்டும் சொல்.

ஆனால் அம்மா எதையும் வெளிக் காண்பித்துக் கொள்ளமாட்டாள்.

அது அவள் சுபாவம்.

தீபாவளி சமயத்தில் தலையில் ஒரு கை எண்ணெய் வைப்பாள்.

விளையாட்டிலோ, மேலே ஏறிக் கீழே விழுந்து அடி பட்டுக்கொண்டு வந்தால், காயம் பட்ட இடத்தில் தேங்காய் எண்ணெய் தடவுவாள்.

இதுபோன்ற அத்யாவசியங்களுக்கன்றி, அம்மாவுக்குப் பிள்ளைகளையோ பேரக் குழந்தைகளையோ தொட்டு உறவாடும் பழக்கம் இல்லை.

ஒருசமயம் பேச்சுவாக்கில்: "இந்த நாள் எதற்கெடுத்தாலும் ருஜு கேட்கிறது. தன்னம்பிக்கையில்லாத நாள். யாருக்கு எதை ருஜுப்படுத்தியாகணும்? என்னை உனக்கா? உன்னையே உனக்கா? நேர்மையில்லாத நாள்!"

ஏன் அப்படிச் சொன்னாள்? அப்போது புரியவில்லை. ஆனால் அவள் குமுறல் மட்டும் தெரிந்தது, முகத்தில் குழுமிவிட்ட குங்குமத்தில்! குரலில் தெறித்த அனலில்.

ஏன், ஏன்?

இப்போ புரிகிறது.

கொஞ்சம், கொஞ்சம்.

இப்படித்தான், சூத்திரம்போல் எதையேனும் சொல்லிவிட்டுச் சும்மாவாகிவிடுவாள். கேட்டாலும் சொல்லமாட்டாள். "என்னவோ அப்போ தோணித்து, சொன்னேன், போயேன்!"

*   *   *

நண்பர்களுடனோ, ஆபீஸ் அலுவலிலோ வேறு எக் காரணமோ, என் வழக்கநேரம் மீறி நான் வீடு திரும்ப

நேர்ந்தால் அம்மா வாசலில் உட்கார்ந்திருப்பாள். நானும் உள்ளே போகாமல் பக்கத்தில் உட்கார்ந்துகொள்வேன். உள்ளே ஒரே ரகளையாயிருக்கும்.

பேசமாட்டோம். பேசத் தோன்றவில்லை.

தனிமையே ஒரு அழகிய பூ. விரிந்த பூவின் இதழ்கள் மீண்டும் படுதாயிறங்கும் இருளில் எங்கள்மேல் குவிந்து, அதனுள் நாங்கள் அந்த மோனத்தின் இதவுக்கும் 'மெத்' துக்கும் இனி எங்கே போவேன்?

எதை, யாருக்கு ருஜுப்படுத்தியாகணுமா என்ன அம்மா பாஷையில்?

நாங்கள் இருந்த இந்த நிறைவுநிலை பாஷைக்குக் கிட்டாது. அப்பாற்பட்டது. ஆனால் இப்படியும் ஒரு நிலை உண்டு என்று தெரிகிறது. அலைதாண்டிய அமைதி. ஆனால் கடல்.

அம்மா பெருமூச்செறிகிறாள்.

* * *

''அம்மா, கடவுள் இருக்கிறார் என்பதில் உனக்கு நம்பிக்கையிருக்கிறதா?''

அம்மா பிரம்பு நாற்காலியில் சாய்ந்தபடி, மேலுதட்டின் மேல் வலது சுட்டுவிரலையும் நடுவிரலையும் வைத்தபடி எங்கோ யோசனையிலிருந்து மீண்டாள். ''ஊங்?''

''கடவுள்மேல் உனக்கு நம்பிக்கையிருக்கா?''

கையை விரித்துக் குறுஞ்சிரிப்புச் சிரித்தாள்.

நீண்ட நேரத்துக்குப் பிறகு, ' திருடனுக்கும் கன்னக்கோல் சார்த்த ஒரு மூலை வேணுமில்லையா?''

நான்தான் ஏற்கனவே சொல்லிவிட்டேன், அம்மா புதிர் மாஸ்டர்.

ஆனால் அவளைக் குற்றம் சொல்வதில் அர்த்தமில்லை. எந்தப் பேருண்மைக்கும் 'பளிச்'சான வெளிச்சம் கிடையாது.

ஒளியுள் நிழலாய்
நிழலுள் ஒளியாய்
ஒளியும் நிழலுமாய்
ஒளியில் நிழலில்
ஒளிந்து கொண்டு
களவு காட்டும்
மாய நிர்வாணம்
இல்லை
நிர்வாண மாயம்.

சத்யமாயை என்று ராமகிருஷ்ண பரமஹம்சர் சொல்கிறார்.

தான் அறிந்தோ அறியாமலோ இந்தக் களவு காட்டும் பாஷையால் அம்மாவும் இதற்கு உடந்தை.

* * *

பத்து நாட்களுக்குமுன் ஓரிரவு, தூக்கமிலாது, புரண்டு கொண்டிருக்கையில், எண்ணங்களின் கடையலில் 'தொப்புள்கொடி' என்று ஒரு சொற்றொடர் தோன்றிற்று.

(மனம் எப்போத்தான் சும்மாயிருக்கிறது, சும்மா விட்டது?)

ஆம், கொடியை அறுத்துவிட்டாலும், அதுவாய் அறுந்தாலும் அல்ல இற்று விழுந்தாலும் கொடி உறவின் பிணைப்பு விட்டுப் போவதில்லை.

போவதேயில்லை.

அகிலத்தையே அப்படி ஒரு தொப்புள் கொடி சுற்றிக் கொண்டிருக்கிறது. அதன் மறுபெயர் அம்மா.

* * *

அம்மா, நான் அறிந்த அவள் இளமையிலேயே சற்றுக் கொழ கொழவென்று இருப்பாள். சந்தனச் சிவப்பு.

வெள்ளைப் பசு.

நாளடைவில், கூந்தலின் கறுகறு, சாம்பல் நிறமாக மாறி, அது அலை நுரையாகி, மஞ்சள் பூத்து, சமுதாயம் நெற்றியில் அழித்துவிட்டாலும், பிறவியின் மங்கலம் தழைத்து, வாழ்க்கையின் அடிமேல் அடிக்கு வைத்த பெயர் அனுபவம் மேல் பூத்த புற்றினுள், தன் விரக்தியின் தனிமையில் வீற்றிருந்தாள்.

விரக்தியா? வீம்பா?

அம்மா பெயர் ஸ்ரீமதி.

வாழ்க்கையில் அம்மா ரொம்ப அனுபவித்துவிட்டாள். சின்ன வயதிலேயே பெற்றோர்களை இழந்து, திருமணமான பின், பங்களூரில் குடித்தனம் பண்ணுகையில் ஒரே வார இடைவெளியில் தம்பிகள் இருவரையும் ப்ளேக்கில் இழந்து அம்மாவும் அண்ணாவும் கோடைவிடுமுறைக்குச் சென்னைக்கு வந்திருந்த சமயத்தில், அண்ணா திடீரென்று இறந்துபோனார்.

அந்த வாரத்துக்குள்ளேயே, வீட்டு மாப்பிள்ளை, ஜுரத்தில்.

அம்மா கிராமத்துக்குத் திரும்பவேயில்லை. பிள்ளைகளுடன் தங்கிவிட்டாள்.

சில வருடங்கள். இன்னொரு பெண்ணை ஜுரத்தில் இழந்தாள்.

அடுத்த வருடம், என் தம்பி, மாரடைப்பில். குடும்பத்தின் தூண்.

"ஆண்டவனே, உனக்குக் கண் இல்லையா?" கதறுகிறோம். துடிக்கிறோம். தூற்றுகிறோம். அடுத்தே "விதி

யாரை விட்டது?'' என்று கண்ணீரைத் துடைத்துக்கொள்கிறோம். தத்துவம் பேசுகிறோம். சிரிக்கிறோம்.

விவஸ்தைகெட்ட ஜன்மா. ரோசம் கெட்ட பிழைப்பு.

ஆனால் திருடனுக்கும் கன்னக்கோல் சார்த்த மூலை வேண்டும்.

* * *

என் சுசப்பில் நான் சொல்கிறேன்.

ஆனால் அம்மாவிடமிருந்து இதுவரை ஒரு வார்த்தை வந்ததில்லை.

அம்மா வெளிக் காண்பித்துக் கொள்ளமாட்டாள். அது அவள் சுபாவம்.

ஆனால் இப்போதெல்லாம் அவ்வப்போது நெஞ்சைத் தடவிக்கொள்வாள்.

'விடமுண்ட கண்டன்' தேவாரத்தில் வருகிறதோ?

உள்ளே இறங்கவில்லை.

''என்னம்மா பண்றது?''

''நெஞ்சை அடைக்கிறது சரியாப் போயிடும். குடிக்கத் தண்ணீர் கொடேன். ஊம், அம்மாடி! சரியாப் போயிடுத்து Gas அடைச்சிருக்கு.''

* * *

ஆனால் சரியாய்ப் போய்விடவில்லை. இந்த நெஞ்சடைப்பு மாதம் ஒரு முறையிலிருந்து இரு முறையாகி, அப்புறம் வாரம் இரு முறை, அப்புறம் தினம், எப்போ வேணுமானாலும் வேளையே கிடையாது.

உயிர் விடுதலைக்குத் தயாராயிருக்கிறது. உடல்தான் லேசில் அதை விடுவதில்லை. உயிரோடு பூமியில் விழுந்த

திலிருந்து இத்தனை காலம் உயிருடன் பழக்கம், உடல் தன் அழிவை லேசில் ஒப்புக்கொள்வதில்லை. பிடியை லேசில் விட மறுக்கிறது.

* * *

"எங்கே ஆபீஸுக்குக் கிளம்பறியா?"

"ஆமாம்"

"ஒரு நிமிஷம் என்னை உன்மேல் தாங்கிக்கோயேன். அதனால் என் அவஸ்தை குறையப் போவதில்லை, மனசுக்குத்தான் ஏதோ ஆறுதல். அம்மாடி!"

"ஒரு வேடிக்கை பார்த்தையா? அன்று நீ குழந்தையா இருந்தபோது மடியில் வளர்த்திண்டேன். இன்று என் வேளையில் உன் தோள்மேல் சாஞ்சுக்கிறேன். கணக்கு சரியாப்போச்சு இல்லே?"

லேசாகச் சிரிக்கிறாள்.

* * *

அன்று—என்றோ.

கிராமத்துக்குப் போயிருந்தேன். பழைய நினைவுகளின் ஈர்ப்பு அங்கே, நாங்கள் விட்டுப் போன கிராமம் இல்லை. மின்சாரம், வானொலி, ஒலிபெருக்கி, இரைச்சல் எல்லாம் புகுந்தாச்சு. நாட்டில் கிராமங்களே இப்போது இல்லை. அது ஆறுதலுமில்லை.

எதிர் வீட்டில் முதலியார், அவர் குடும்பம்? இடமே சிதிலமாயிருந்தது.

ஸில்லி. நீ வரும்வரை காத்திருப்பார்களா? என்ன எதிர்பார்க்கிறாய்? காத்திருக்கணுமா?

எங்கள் வீடு, ஆவலுடன், ஆசையுடன் வாசற்படி மிதித்ததும் குரைத்துக்கொண்டு ஒரு நாய் வெளியே வந்தது.

"உஷ்—down, down, ஜிம்மி. யார் சார் நீங்க? யார் உங்களுக்கு வேணும்?"

"யாரும் வேண்டாம்" என் குரலில் அழுகையே நடுங்கிற்றோ என்னவோ? "இங்கே சின்ன வயசில் நாங்கள் குடியிருந்தோம். சும்மாப் பார்க்க"—

"அப்படியா வாங்க, வாங்க!"

ஆனால் அங்கே பாக்க என்ன இருக்கிறது? அவரைப் பந்தலையும், செடிகளையும், மாட்டுக் கொட்டாயும்—

மடையா

இல்லை, நான் இந்த சமயத்துக்கு மன்னிப்புக்கு உரியவன். சில சமயங்களில் எண்ணத்தின் வார்ப்படம் எண்ணும் அவாவில் விழும் வேகத்தில், கனத்தில், காலம் கூட அதனடியில் சிக்கிக்கொண்டு அழுந்திவிடுகிறது. நேரம் என்னவோ சொற்பம்தான். ஆனால் இந்தப் ப்ரமை நிகழ்ந்தது நிகழ்ந்ததுதான். அதுவரை நாம் பாக்யவான்கள் ஆவோம்.

இடம் சாய அடியாக மாறியிருந்தது. ஒருபக்கம் சாயம் ஏற்றிய நூல்கள் கற்றை கற்றையா கொடியில் உலர்ந்துகொண்டிருந்தன. அங்கங்கே தரையில் சாயம் குட்டை குட்டையாத் தேங்கி நிரந்தரமாய்த் தங்கிவிட்ட துர்நாற்றம்.

ஆனால் அதோ என்ன?

சுவரோரத்தில் ஒரு அவரைக்கொடி, நட்டுவைத்த ஒரு கொம்பில் சுற்றிக்கொண்டு ஏறி அந்தரத்தில், துளிர் சுருண்டு தத்தளித்துக் கொண்டிருந்தது. தூக்கிவிட்டால், ஓட்டுக் கூரைமேல் தொற்றிக்கொள்ளும்.

"அட நீ எப்போ வந்தே?"

இப்போ எனக்கு நன்றாகப் புரிந்தது, அம்மாவுக்கும் அவள் செடிகளுக்குமிடையே பாஷை.

கண்ணீர் மறைத்தது.

தலையைக் குனிந்துகொண்டு, சாமர்த்தியமாக வெளியேறி விட்டேன்.

உலகத்துக்கெல்லாம் ஒரே தொப்புள் கொடி.

அம்மா.

# அவள்

சமீபத்தில் நண்பர் ஏ. கே. பாலுவிடமிருந்து—மணக்காலில் இருக்கிறார்—தபால் வந்தது. எனக்குப் பிறந்த நாள் வாழ்த்துடன், பெருந்திருவின் போட்டோ படம் அனுப்பியிருந்தார். போட்டோ படம் என்றால் போட்டோ மாதிரிப் படம் பின் என்ன, மூலவரைப் புகைப்படம் எடுக்க விடுவார்களா?

ஆனால் படம் தத்ரூபமாக இருந்தது. எங்கள் குலதெய்வத்தை நேரே பார்க்கிற மாதிரியே தோன்றிற்று. நான் லால்குடி போய் ஐந்து வருஷங்களுக்கு மேலாகிறது.

முன்பெல்லாம் இரண்டு வருஷங்களுக்கு ஒரு முறையேனும் அந்தப் பக்கம் போய் வர நேரும்; அல்ல, வாய்ப்பு ஏற்படுத்திக்கொள்வேன். எனக்கு இயல்பாவே ஊர் சுற்றும் பித்து உண்டு.

தஞ்சாவூர், திருச்சி, லால்குடி, மதுரை, நாகர்கோயில், திருவனந்தபுரம், கன்யாகுமரி—அப்படி ஒரு ரோந்து. க்ஷேத்ராடனம் இல்லை (இருந்தால்தான் என்ன?) அங்கங்கே தங்கி, நண்பர்களைச் சந்திக்க, இலக்கியம் பேச, அரட்டையடிக்க, எண்ணங்களைப் பகிர்ந்து கொள்ள, புதுமுகங்கள் பார்க்க, புதுமுகம் பழைய முகம் எல்லா முகமும் ஒரு முகம் எனும் உண்மை தெளிய, அதில் ஆச்சர்யமுற, அந்த ஆச்சர்யத்தின் இன்பத்தில் திளைக்க.

ஆனால் எங்கு சுற்றினாலும் என் வளைக்குத் திரும்புகையில், என் வாழ்வின் படுகையாய், என் பூமியின் வண்டல் மண்ணாய், தழை எருவாய், பரம்பரையாய்த் தோய்ந்து அவள் தான் திகழ்கிறாள்...

பெருந்திரு!

படம் வந்ததிலிருந்து, தினமும் விடிகாலை, பல் துலக்கியதும், உதிரி விபூதி தரித்துக்கொண்டு, பூஜை அலமாரியண்டை போய் நிற்கிறேன். அலமாரியடியில் ஸ்ரீகாந்த் படுத்திருக்கிறான். இடற வேண்டாமென்று என்னதான் ஜாக்கிரதையாயிருந்தாலும்—

''அப்பா தட்டுத் தடுமாறிண்டு வந்து விளக்கைப் போட்டு இந்த நேரத்துக்கு என்ன கழுத்தையறுக்கறார்?''

பையன் எரிந்து விழுந்துகொண்டு போர்வையை இழுத்துத் தலையை மூடிக்கொள்கிறான்.

ஆனாலும் அங்கே நிற்கிறேன். முகத்தை நீட்டிப் படத்தை உன்னிப் பார்க்கிறேன்.

திருவாசியை அடைத்துக்கொண்டு ஆள் உயரத்துக்குச் சிலை. கர்ப்பக்ருஹ இருளில் முகத்தின் கருமையில் எந்த மூலவருக்குத்தான். முகலக்ஷணங்கள் தனியாகத் தெரிகின்றன? மூக்குத்தி, தாடங்கம்; கை, பாத கவசங்கள், அணிவித்திருக்கும் தோம்பின் சிவப்பு; ஆனால் முகம் மட்டும் ஒரு கருப்புப் பூச்சுதான்.

இந்தப் படத்திலும் அப்படித்தானிருக்கிறது. அதனாலேயே நேரே பார்க்கிற மாதிரியிருக்கிறது.

படத்தில் அவள்; எதிரே நான். இப்படி நாங்கள் நிற்கையில் எங்கள்மேல் ஏதோ நூற்பு படர்வதுபோல் தோன்றுகிறது. எண்ணத்தின் கடையலில் உண்டானது தானானாலும், இழை அதன் அத்தனை ஸன்னத்தில் புலனுக்கு நெருடுவதுபோல உணர்வு.

உலகுக்கெல்லாம் ஒரே தொப்புள் கொடி.

அங்கு விட்டு அகல்கிறேன். இந்தப் பிணைப்பின் நம்பிக்கையுடன் என் நாள் துவங்குகிறது.

எனக்குப் பத்து பன்னிரண்டு வயதிருக்கும்.

ஒரு சமயம், மாலை.

சென்னையிலிருந்து, லால்குடி வந்து இறங்கியதும், முதல் காரியமாய், அண்ணாவுடன்— அப்பாவை அண்ணாவென்று அழைப்போம்— கோவிலுக்குப் போனதும் அம்மன் சன்னிதியில் நாங்கள் நின்றதும்.........

''ராம், இவள்தாண்டா நம் சொத்து, நம் எல்லாமே இவள்தான்'' என்று அண்ணா சொன்னது, இன்னமும் செவியில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஏன் கண்ணைத் துடைத்துக்கொள்கிறார்? எனக்கு வியப்பாயிருக்கிறது. (கொஞ்சம் சிரிப்பும் கூடவோ?) அந்தத் தருணத்தையறிய அப்போது நான் தக்கனாயில்லை. அல்ல, இப்போ மட்டும் என்ன செய்கிறோம்? நேரங்களை வாழ்வின் ஜபமணி களாக அடையாளம் கண்டுகொள்ளாமல், அல்ல தெரிந்தும், அவை விரலுக்கிடையே மணலாகவே சரிந்து விடுகின்றன.

அண்ணாவின் நம்பிக்கை பொறாமையாய் இருக்கிறது.

அம்மா சமாச்சாரம் வேறு. அண்ணா மாதிரி அவள் கரைந்துபோவள் அல்லள். அவளுக்குக் கோயிலுக்குப் போய்ப் பழக்கமில்லை. போனால் வெறுமென கை கூப்புவளே ஒழிய, நமஸ்காரம் பண்ணியதாக எனக்கு நினைவு இல்லை. அம்மா நமஸ்காரம் பண்ணினாலும் பாந்தமாயிருக்காது என்றே என்னுள் ஓர் எண்ணம். அவளுக்குப் பிறர் பண்ணித்தான் பார்த்திருக்கிறேன்.

ஒரு சமயம் அண்ணா சிராத்தத்தன்று:

"ஆமா, நீயும் இருவத்தி ஆறு வருஷமாப் பண்ணிண்டிருக்கே. நீ இறைக்கிற எள்ளும் தண்ணிக்கும்தான் இன்னும் அண்ணா காத்திண்டிருக்காராக்கும்! எங்கானும் இன்னொரு ஜன்மா எடுத்திருப்பார். ஆனால் நமக்கு முன்னாலிருந்தவா பண்ணிண்டிருந்திருக்கா. நீயும் பண்ணுன்னு காண்பிச்சுட்டுப் போயிருக்கா. அதனால பண்ணறோம். இதைத் தவிர நமக்கென்ன தெரியும்? நமக்கு ஒரு வருஷம் பிதுர்க்களுக்கு, தேவர்களுக்கு ஒரு நாள்னு வாதம் வேறு இருக்கு."

அம்மா என்ன சொல்கிறாள்? திவசம் பண்ணு என்கிறாளா? வேண்டாம் என்கிறாளா? இல்லை, முன் சுவடுகளைப் பற்று என்கிறாளா?

"ஒண்ணு தெரியுமா, ராமாமிருதம்! பற்றவைக்க நெருப்புக்குச்சி ஒண்ணு போதும்." இதென்ன திடீர் என்று, சம்பந்தா சம்பந்தமில்லாமல்? இல்லை சம்பந்த மிருக்கிறதா? இறப்பு ஒன்றுதான் திண்ணம், மற்றவை யெல்லாம் யூகமும் தர்க்கமும் என்கிறாளா? அவள் சொல்லில் சூசகம் ஏதோ ஒளிந்து கொண்டிருக்கிறது.

இன்னொரு சமயம்—ஓ, அம்மாவுக்கும் எனக்கு மிடையே நிறைய சமயங்கள் உண்டு. "அம்மா கடவுள் இருக்கிறார் என்பதில் உனக்கு நம்பிக்கை இருக்கிறதா?" அம்மா, பிரம்பு நாற்காலியில் சாய்ந்தபடி மேல் உதட்டின் மேல் வலது சுட்டு விரலையும் நடுவிரலையும் வைத்தபடி எங்கோ யோசனையிலிருந்து மீண்டவளாய், "...ஊங்...?"

"கடவுள் மேல் உனக்கு நம்பிக்கை உண்டா?"

கையை விரித்துப் புன்னகை புரிந்தாள்.

சற்று நேரத்துக்குப்பின் "திருடனுக்கும் கன்னக் கோல் சார்த்த ஒரு மூலை வேணுமில்லையா?"

அம்மா புதிர் மாஸ்டர்.

ஆபிஸிலிருந்து திரும்பும் வேளைக்கு இன்று இரவாகிவிட்டது.

சட்டையைக் கழற்றி மாட்டுகையில் அவள் வந்து காதைக் கடித்தாள். "அம்மா இன்னி முழுக்க சாப்பிடல்லே. இலையில் உட்கார்ந்தவா, சாதத்தைத் தொடாமலே எழுந்து போயிட்டார்."

அம்மாவுக்கு உடம்புக் கோளாறு என்று தனியாகத் தெரியவில்லை. அம்மா இன்னும் படுத்த படுக்கையாக வில்லை. ஆனால் அவளுடைய வேளைகள் தடுமாற ஆரம்பித்திருக்கின்றன. அவள்மேல் மூட்டங்கள் அடிக்கடிக் கவிகின்றன. இது முடிவின் ஆரம்பம்! இம்மி இம்மியாக அவள் எங்களை விட்டு நழுவிக் கொண்டிருக்கிறாள் என்று உள்மனசு சொல்றது. என் செய்வது? வாழ்க்கையே இப்படித்தான், இதுதான் தெரிகிறது. ஆனால் என் செய்வேன்?

"வயதாகி விட்டதோன்னோ?"

இதுதான் மற்றவர் சமாதானம்.

ஆனால் இதுதான் சமாதானமா?

கட்டிலில் உட்கார்ந்திருந்தாள். என்னைக் கண்டதும் லேசான புன்னகையில்லை. நான் வந்ததே பதியவில்லை. சுவரைப் பார்த்துக்கொண்டு என்னவோ யோசனை.

பக்கத்தில் உட்கார்ந்தேன்!

"அம்மா, உடம்பு சரியில்லையா?"

"அட, எப்போ வந்தே? இல்லையே, சரியாத்தானேயிருக்கேன்!"

"இல்லை ஏதோ யோசனையாயிருக்கே!"

''ஓ, இருக்கேனா என்ன?''

மௌனம்.

சற்றுப் பொறுத்து மனமில்லாத பேச்சில் ''இன்னிக்கு எதிர் வீட்டிலே அடுப்பு புகையல்லே போல இருக்கு.''

இப்பப் புரிந்தது.

'யாரும் வெளியிலேயே வரல்லே. உள்ளேயே முடங்கிக் கிடக்காப்போல இருக்கு.'' ''புருஷன் வயண மில்லாட்டி ஒரு சமயம் இல்லே ஒரு சமயம் இது நேர வேண்டியதுதானே?''

அம்மாவின் பார்வை என்னை ஆழ்ந்து சிந்தித்தது. சற்றுக் குழிவான கண்கள், விளக்குபோல் திரி போன்ற விழிகள். என் பார்வை பின் வாங்கிற்று.

''இப்படித்தான் நேரும்னா நேர்வது நியாயம் என் கிறையா? நஞ்சானும் குஞ்சானுமா...'' வாயடைத்துப் போனேன்.

பெருமூச்செறிந்தாள். எழுந்து உள்ளே போய் வெளி வந்தபோது கையில் பையோடு வந்தாள். பை கனத்தது. மெதுவாக வாசற்படியிறங்கிச் சென்றாள்.

சுவரில் பல்லி, விட்டிற் பூச்சிகளை வேட்டையாடிக் கொண்டிருந்தது. 'லபக் லபக்.' வன நியாயம், வன நியாயத்திலிருந்து குவாயட் வரை எங்கெங்கோ யோசனை திரிந்தது.

அம்மா திரும்பி வந்தபோது அவள் முகத்தில் மூட்டம் கலைந்திருந்தது. பிரகாசமாகவேயிருந்தது. வந்து என் அருகே உட்கார்ந்தாள். மஞ்சள் பூத்த நரை. சிங்கப்பிடரி. இப்பவும் நல்ல அடர்த்தி. பெருமையாயிருந்தது.

''இன்னிக்கு வழிபண்ணினதால் இவாள் பிரச்சினை தீர்ந்துவிடவில்லை. இது வழியும் இல்லை. எனக்குத் தெரியும். ஆனால் இன்று போச்சா. நாளைக் கதை

நாளைக்கு. வாழ்க்கையே அப்படித்தானேயிருக்கு! ஏதோ நம்மால் முடிஞ்சது. எல்லாம் சுருண்டு படுத்துக் கிடக்கு. ஆனால் மாமி எழுந்து நடமாட ஆரம்பிச்சுட்டா.

ராமாமிருதம், இப்பத்தான் எனக்கு நினைப்பு வரது. உங்கள் பாஷையில் 'பயங்காரமா'ப் பசிக்கிறது. சாப்பிட வரையா? நாம் ரெண்டுபேரும் சேர்ந்து உட்கார்ந்து எத்தனை நாளாச்சு?''

அம்மா, உன் நம்பிக்கை எந்த வகையைச் சேர்ந்தது?

அவள் இங்கேயும் எங்கேயோ ஊடுருவி நிற்கிறாள். எங்கேயென்றுதான் பிடிபடவில்லை.

நாங்கள். அதாவது என் முன்னோர் காலத்திலிருந்து என் குடும்பம்—எங்களில் அவரவர் தனித்தனியாவோ, ஒருங்கோ, அவ்வப்போது அவளைப் பார்க்கும்போதெல் லாம் சாந்தஸ்வரூபியாகத்தான் காட்சியளிக்கிறாள்.

சன்னிதியுள் நுழையும்போதே, துளும்பாத ஓர் அமைதியில் அமிழ்வதுபோல உணர்ச்சி. திருவாசியை அடைத்துக்கொண்டு ஆள் உயரத்துக்குத் தன் குழந்தை களுக்காக, உலகத்தின் துயரத்தையே தாங்கிக்கொண்டு நிற்கிறாள். எத்தனை வருஷங்களாக நிற்கிறாய்? தோளும் காலும் வலிக்கல்லே?

பெருந்திருத்தாய்
இல்லை. அதற்கும் மேலே.
ஆசை சீமதிப் பாட்டி
அம்மா பேர் ஸ்ரீமதி
இந்தக் குடும்பத்தில்
வழிவழியாய் ஸ்ரீமதி.

ஒன்பது மணிக்கே கண் செருக ஆரம்பித்துவிட்டது. (!) சேகரும் ஸ்ரீகாந்தும் 'night show' போவதாகச் சொல்லிக்கொண்டது தண்ணீருக்கடியில் நானிருக்கக் கேட்ட மாதிரியிருந்தது. தூங்கிப்போய்விட்டேன்.

தூக்கம் திடீரென்று வந்த மாதிரியே விழிப்பும் வெடுக்கென வந்தது. பையன்கள் இன்னும் வரல்லே? கண், சுவர்க் கடியாரத்தின் மேல் சென்றது. மணி ஒண்ணு. அவர்கள் திரும்ப இன்னும் அரைமணி ஆகும்.

இதுபோல் நான் தூங்கியதில்லை. கனவற்ற ஆழ்ந்த நித்திரை. ஓடும் ஜலத்தில் குளித்தெழுந்தார் போன்ற புத்துணர்ச்சி. பார்வையில் கூடச் சதை உரித்தாற் போன்று ஒரு தெளிவு, சுத்தம், 'பளிச்'. ஜன்னல் கம்பி களின் வழி வடிகட்டினாற் போன்று உள்விழுந்த தெருவிளக்கின் வெளிச்சத்தில் அறைச் சுவர்கள், பூவிதழ் ம்ருதுவில் குளுமையுடன் 3-D யில் பிதுங்கின. உவமை உருவகமாகிவிட்ட கவித்வம் கமழ்நிலை.

கண்கள் தாமே மூடிக்கொண்டன. மறுபடியும் தூக்கத்துக்குத் திரும்ப இல்லை. சொல்லத் தெரியாத உள்ருசியின் சுகத்தில் எஃகுத் தந்தியில் உச்சஸ்வரம்—ஸ்வரம்கூட இல்லை, அதிலும் ஒரு துளித்வனி நாத மண்டலத்தையும் தாண்டி மோனத்துள் பிரவேசிக்கப் போம் விளிம்பு நிலை—இந்த அனுபவத்தின் சூக்ஷ்மத்தை விவரிக்கும் முயற்சியில் சொல்லே தன் தந்தி அறுந்துவிடும் போல் விதிர் விதிர்க்கிறது. இது தடமே வேறு.

திடீரென லால்குடியில் அம்மன் சன்னிதியில் கர்ப்பக் ருஹத்தில் அம்பாளுக்கு மிகக் கிட்ட நிற்கிறேன். குருக்கள் இருந்தால் அனுமதிக்கமாட்டார். அத்தனை கிட்ட. இப்பவும் மூக்கு, முழி தனித்தனி தெரியவில்லை. ஒரே கறுப்புப் பூச்சுதான். ஆரஞ்சு பட்டுப்புடவை உடுத்தி யிருக்கிறது.

அப்போது அவள் வயிறு பாகத்திலிருந்து ஆள்கள் புறப்படுகிறார்கள்.

அண்ணா.

அம்மா.

என் தம்பி, தங்கை,

பாட்டனார், பாட்டி.

கொள்ளுத் தாத்தா, கொள்ளுப்பாட்டி.

கொள்ளுப்பாட்டியிடம் அம்பாள் பிரத்யக்ஷமான தாக அந்த நாள் லால்குடிக்கே பிரசித்தம்.

நான் அவளைப் பார்த்ததில்லே. பார்த்திருக்க முடியாது. ஆனால் கொள்ளுத் தாத்தாவையும் பெந்துப் பாட்டியையும் அடையாளம் கண்டு கொள்கிறேன்.

எப்படியென்று தெரியவில்லை. ஆனால் அது எனக்கு ஆச்சர்யமாயில்லை.

அம்மாவைப் பெற்ற பாட்டி. அவள் ஒரு ஸ்ரீமதி. இவளையும் எனக்குத் தெரிய வழியில்லை. ஏனெனில் அவள் இறந்த பின்தான் அம்மாவுக்குத் திருமணம். என்ன சிவப்பாயிருக்கிறாள்!

இன்னும் யார் யாரோ வந்து கொண்டிருக்கிறார்கள்—தெரிந்தவர், தெரியாதவர். ஆனால் எல்லாரும் தெரிந்தவரே. கர்ப்பக்ருஹம் கலியாணக் கூடமாகி எல்லாரும் நடமாடுகிறார்கள். ஆனால் பேச்சு இல்லை.

ஒரு எலி அகண்ட விளக்கிலிருந்து அம்பாள் தோள் மேல் தாவிக் குதித்து, மேல் ஏறித் தலையை அடைந்து, கிரீடத்திலிந்து பிரபைக்குத் தாவி ஓடுகிறது. இதுவும் எனக்கு ஆச்சர்யமாயில்லே, அதிர்ச்சியாயில்லை. நியதியுடன் இதுவும் இழைந்துதான் இருக்கிறது.

எல்லோரும் என் குழந்தைகள்.

அவள் சொல்லவில்லை.

ஆனால் தெரிகிறது.

உலகம் பூரா ஒரே தொப்புள் குடி.

சட்டெனக் காட்சி மறைந்தது.

பையன்கள் திரும்பிவரும் பைக் சத்தம் கேட்கிறது.

# அவள்-II

# சங்கு புஷ்பம்

கொஞ்ச காலமாக அனந்தநாராயணன் எனும் ஓர் இளைஞர் என்னைப் பார்க்க வருகிறார் தனக் கென்று தனி அபிப்ராயம் கொண்டவர்தான். மிக மிக என்னைக் காட்டிலும் நாணயத்தின் மறுபக்கத்தைத் தெரிந்திருப்பவர். (இந்தக் காலத்து இளைஞர்கள் எங்களை அனுபவத்தில் மிஞ்சிவிடுகிறார்கள். அவசர யுகம் அல்லவா!) ஆயினும் பல சமயங்களில் எங்கள் ஸ்ருதிகள் இணைகின்றன. சில இடங்களில் த்வனிகள் கூடச் சந்திக்கின்றன.

முன் கதையில், (கதை ஏது? சொந்த அனுபவம்) எனக்கு நேர்ந்த கனவை அவரிடம் சொன்னபோது, அவர் சொன்னது என்ன தெரியுமா?

"At that moment you had entered the world of Innocence" என்று.

எனக்குச் சற்றுத் 'திக்'கென்று ஆகிவிட்டது.

"ஒரு சாத்யமில்லாத நிலையைச் சொல்கிறாய்" என்றேன்.

"ஏன் சாத்யமில்லை? உங்கள் பாஷையிலேயே அவரவர் பூத்ததற்குத் தக்கபடி நீங்கள் கண்டது உங்க-

ளுடைய தனி உரிமையென்று நான் சொல்லவில்லை. அவரவர் வேளை நேர்கையில், அவரவர் பக்குவ நிலைக் கேற்றபடி. எல்லாருக்கும் இது உண்டே!''

என் தனிமையில் அவர் கூற்றை மேலும் சிந்தித்தேன்.

**Innocence!** இதற்கு நேர்த் தமிழ்—நிஷ்களங்கம்! நிரபராதித்வம்!! அப்பாவித்தனம்!!! ஊ...ஹூம். திருப்தி யாயில்லை. அனந்தநாராயணன் குறித்தது குழந்தை நிலையையா? ஆப்பிளைப் புசிக்கு முன் ஆதாம் ஏவாளின் தன்மையையா? விளக்குச் சுடரில் பார்வை நிலைக்குமுன் குழந்தை நிலையையா? படத்தில், ராமகிருஷ்ணரின் அரைக்கண் செருகலில் அந்தப் பார்வையைச் சந்திக் கிறேன். எதிலுமே குறியிலாத பார்வை.

சிந்திக்கச் சிந்திக்க அந்த அனுமான மண்டலம் அச்சத் தைத்தான் தருகிறது. அங்கே ஒரு 'வெறிச்' இருக்கு மென்று நினைக்கிறேன். ஆனால் அர்த்தமுள்ள 'வெறிச்', 'ப்ளாங்' ஸ்லேட். ப்ரக்ஞை ஸ்திதி. சூன்யமன்று, பூஜ்யம். எல்லாம் உள் அடங்கிய பூஜ்யம். தன்னந் தனிமை. சிருஷ்டியே அங்கிருந்துதான் ஆரம்பிக்க முடியும். அங்கிருந்துதான், என் வழிமுறை முன்னோர்களை, பரம்பரை முதல்வனையே, பார்க்காமலே அடையாளம் கண்டுகொள்ள முடியும்.

எழுத்தில் என் ஸாதகம் ஆரம்பித்த நாள் முதல்—ஏன், இன்று வரையிலும்தான், எனக்கு ஓர் எண்ணம் உண்டு. ஸாதகம் முற்ற முற்ற அவசிய, அனாவசியத்தின் பாகுபாடுகள் தேறத் தேற, அந்தத் தீர்வையின் விளைவாய், எழுத்து குறுகி, இன்னமும் குறுகி, கடைசி யாக அறவே மறைந்துபோய், புரட்டும் ஏடுகள் பார்க்கக் காலி; ஆனால் பூரா எழுத்தின் சக்தியின் விறுவிறுப்பு.

என்ன அசட்டுத்தனமான சபலம்! வெளியில் சொல்லக் கூட வெட்கக்கேடு என்று படுகிறது. ஆனால் நிஜமாகவே முட்டாள்தனம்தானா? என்கிற சந்தேகமும் நசுவலாக

வலிக்கிறது. பாம்பு வயதாக ஆக, உடல் குறுகி, விஷம் கூடி, மண்டையில் மாணிக்கம் அப்பதான் உண்டாகிறது. பாம்பு மண்டையில் மாணிக்கம் சர்ச்சைக்குரிய விஷயமா யிருக்கலாம்; கட்டுக்கதையாகத் தோன்றலாம். ஆனால் கதையில்லாமல் வாழ்க்கையே இலலை, முடியாது.

தாத்பர்யம் பார்க்கையில், தியானத்தின் பாதையும் இதுதானே! எண்ணங்களைப் படிப்படியாக அடக்கி, ஒவ்வொன்றாய் விலக்கி, ஒரே எண்ணமாய் முகப்படுத்தி—இதுவன்றி தியானம்! யாது?

சுலபமாகச் சொல்லிவிட்டேன். ஆனால் செயல்பாடில் ஓர் இம்மிகூட முன் நகர முடியவில்லை. ஏதேனும் அற்புதம் நிகழ்ந்தாலே ஒழிய, எஞ்சியிருக்கும் இந்த ஆயுசில் தியானத்துக்கு எனக்குக் கொடுப்பனை கிடையாது எனத் தெரிந்துவிட்டது. தியான நிலை கிடைத்துவிடும் என்று நான் நினைப்பதே என் அறியாமை யின் திமிர். எனக்குக் கிடைக்காததால் தியானம் கட்டுக் கதையாகிவிடுமா? நம் காலத்திலேயே வாழ்ந்த பகவான் ராமகிருஷ்ணர், ரமணர், விவேகானந்தர் இவர்களை மறுத்துவிட முடியுமா? ஸங்கீத மும்மூர்த்திகளும் அப்படித் தானே! ஸங்கீத யோகிகள்.

''உன் முழு மூச்சுடன் நீ தேடினால், மூன்று நாள் களில் உனக்குத் தெய்வம் சித்தி'' என்று ராமகிருஷ்ணர் அடித்துக் கூறுகிறார். இவர்கள் எல்லோரும் இன்னும் கதையாகிவிடவில்லை.

''முயற்சி செய்! செய்! செய்துகொண்டேயிரு! தோற்றுப்போனால், உன் தோல்வியை என்னிடம் கொண்டு வா!''

இது கீதாசார்யனின் உரையென்று அந்நாள் த்ரிவேணி' ஆங்கிலக் காலாண்டுப் பத்திரிகையில்

(ஆசிரியர்: ராமகோடீஸ்வர ராவ்) கண்ட இந்த அற்புதமான குறள், நினைவில் இன்னமும் கொடி சுற்றிக்கொண்டிருக்கிறது.

தோல்விக்கும் வெற்றிக்கும் அளவுகோல் எது? தரமானி என்ன?

தோல்வியும் வெற்றியும் வாழ்க்கையின் ஊஞ்சல் வீச்சின் இருமுனைகள். வீச்சுக்கேற்ப முனைகள், அவ்வப்போது மாறிக்கொண்டேயிருக்கும். பிறந்துவிட்டால் வாழாமல் முடியாது. வாழ்வதற்குத்தான் பிறவி.

இரண்டுமே மனநிலைகள்தாம் என்பது மறுக்க முடியாத வாதம். ஆனால் இதை உணர்வதற்கு, உணர்ந்த பின், உணர்ந்ததை நிர்வகிப்பதற்கு இன்னொரு மனநிலை வேண்டும். அதற்கு மனதைச் சமைக்கும் சந்தர்ப்பங்களுக்கும் பங்குண்டு என்றாலும் கூடவே, விழிப்பும் தன்னம்பிக்கையும் 'தயார்'உம் பழகாது சாத்யமாகாது. நம்பிக்கை—ஆ!

The wisdom of India. Asia and China (எழுதியது Lin you Tang) சொல்கிறது.

"கடவுள் முதலில் தன்னைப் படைத்துக்கொண்டு, பிறகு உலகைப் (உலகங்களை) படைத்தார். (இந்த வாக்கு நம் வேதங்களிலிருந்து எடுக்கப்பட்டது. அதையும் இன்றைய பாமரர்— நாம் பிறர் மூலம்தானே தெரிந்து கொள்கிறோம்!)

கடவுள் எனும் தனிநிலைக்கும் முன்னிலை பிரம்மம் என்று சொல்கிறோம். இந்த நீண்ட காலம் எழுத்துடன் பழகி, அது எனக்குத் தந்த பாஷையில் பிரக்ஞை என்கிறேன். ப்ரக்ஞைக்கும் முன் நிலை? எனக்கு அனுமான சக்தி இதற்குமேல் எட்டவில்லை. தோற்றுப்போகிறது.

ஒரு நண்பர் வீட்டுக்குப் போயிருந்தேன். குழந்தையைக் கொண்டுவந்து மடியில் வைத்தார்கள். வேற்று முகமில்லை. என் கன்னத்தைத் தொட்டுச் சிரித்தது.

"என்ன?" என்று அதன் மோவாயைப் பிடித்துக் கொஞ்சினேன்.

"நா—நா"— என்றது, தன் மார்மீது சுட்டுவிரலால் தொட்டுக்கொண்டு என்ன என்று கேட்டது, அதற்கு அடி எடுத்துக் கொடுத்தமாதிரி ஆகிவிட்டது,

"நா—நா—"

ஜொள் கொட்டி மார்பை நனைக்கிறது. முன்மயிர் அடையாய் நெற்றியில் விழுந்து கண்ணைக் குத்துகிறது. மார்பில் விரலை அழுத்திக்கொண்டு, "நா—நா—" தன்னை ஸ்தாபித்துக்கொள்ள அது படும் அவஸ்தையைப் பார்க்க வேடிக்கையாயிருந்தது. உடனே ஆச்சர்யமாக இருந்தது.

"கடவுள் தன்னைத்தானே சிருஷ்டித்துக்கொண்டார்" எனும் கூற்று லேசாகப் புரிகிற மாதிரியிருந்தது. அதை விட அந்தத் தாக்கம் பெரிதாயிருந்தது.

சிருஷ்டி, அதன் இயக்கம் எல்லாமே 'நான்'இன் உச்சரிப்பும், விஸ்தரிப்பும்தானே! நம்பிக்கை, 'நானி'ன் பக்க பலம் நேற்று இருந்தேன். இன்று இருக்கிறேன். நாளையிருப்பேன். என்றும் இருப்பேன்" இதுதானே நம்பிக்கை! 'நான்' இன் ஸ்தாபிதம். நம்பிக்கை எனும் சொல்லுக்கு வேர்ச் சொல்லே 'நான்'தானோ?

நேற்றைய 'நான்' இலிருந்து இன்று நான் கவிதையை சிருஷ்டிக்கிறேன்.

இன்று: "நான்" என்னை விஸ்தரிக்கிறேன்.

நாளை: நேற்றைய கவிதையுடன் இன்றைய விஸ்தரிப்பைத் தொடர்ந்து என்னை உச்சரிக்கிறேன். நம்பிக்கையில்

என்னை வரவேற்கிறேன். நாளைய 'நான்'இன் மறு பெயர் நம்பிக்கை. என்றும் எனக்கு அழிவு இல்லை. தேடினாலும் இல்லை.

சொற்கள், செய்கைகள், வாழ்க்கை, பிறவி, மரணம், உலகு, சிருஷ்டி, அழிவு—எல்லாம் 'நான்' இன் உச்சரிப்பு 'நான்'க்கு அர்ச்சனை. நானுக்கு நான் அர்ப்பணம்.

ஒரு ஸ்ரீலங்கன் என்னை பார்க்க வந்திருந்தார். பேச்சு, அவர் நாட்டு நிலைமைபற்றித் திரும்பாமல் முடியவில்லை.

''நான் இந்தியாவுக்கு வந்து இரண்டு மாதங்கள் ஆகின்றன. மகனைப் பள்ளியில் சேர்க்க வந்தேன்.''

''என்ன படிக்கிறான்.''

''பத்தாவது சேரப் போகிறான்.''

''பத்தாவதுக்கா வந்தீர்கள்? ஏதாவது காலேஜுக்கு ப்ரயத்னம் பண்ணுகிறீர்கள் என்று நினைத்தேன்.''

''காலேஜா? பள்ளிகள் எல்லாம் எப்பவோ மூடியாச்சு. பையன்களுக்குப் படிப்புக் கிடையாது. எல்லாரும் போருக்குப் போகிறார்கள்.''

பேச்சை மாற்றும் முறையில், ''உங்கள் நாட்டு இலக்கியம் எப்படி இருக்கிறது?''

''உரைநடையைக் காட்டிலும் கவிதை நன்றாயிருக்கிறது. அங்கே புதுக்கவிதை மிகச் செழிப்படைந்திருக்கிறது.''

''அப்படியா?'' (கவிதையில் நான் சூன்யம்)

''இதோ பாருங்கள் ஒரு புதுக்கவிதை. துப்பாக்கியைத் தூக்கிவிட்ட ஒரு குழந்தை வாயில் கவிஞன் தன் வார்த்தைகளை வைக்கிறான். 'என் விரோதிகளை என் நண்பர்கள் எனக்குக் காட்டுவார்கள். அப்போது நான் சுடுவேன்

இதில் பாருங்க அந்தப் பிள்ளைக்கு தன் விரோதிகள் யார் என்றுகூடத் தெரியாது. ஆனால் துப்பாக்கி தூக்கி விட்டது. இதைவிடப் பரிதாபம் என்ன வேண்டும். எங்கள் நிலைமை இப்படித்தானிருக்கிறது. நண்பர்கூட யார் என்று அறியோம். இந்தக் கவிதையில் அதுவும் சூசகமாக உணர்த்தப்பட்டிருக்கிறது. அல்லது நாம் அறிய வேண்டும்.''

அவர் கொடுத்த விளக்கம் எனக்குத் 'திக்'கென்று ஆகி விட்டது.

தொடர்ந்தார்.

''நண்பர் யார், விரோதி யார்? அறியாமலே தினம் மரணத்துடன் புழங்கிக் கொண்டிருக்கிறோம். மரணம் அண்டை வீட்டில் தங்கியிருக்கிறான். எந்தப் பக்கத்துக்கு அண்டை? முன் வீடா. பின் வீடா, பக்கத்திலா? தெருக் கோடியிலா? Death is my neighbour. அவ்வப்போது கதவைத் தட்டுகிறான், இடிக்கிறான், உடைக்கிறான். அதனால் திறந்துவிட முடியுமா? ஆயினும் அண்டை வீட்டு உறவாச்சே!''

சிரித்தார். ஆனால் அந்தச் சிரிப்பில் கசப்பு இல்லை. எனக்கு ஆச்சர்யமாயிருந்தது.

''இத பாருங்க. மனைவி சமையல் செய்துகொண்டிருப்பாள். திடீரென்று அபாயச் சங்கு ஊளையிடும். அடுப்பைத் தணிக்கக்கூட நேரமிருக்காது. ஓடி ஒளிந்து கொள்வோம். ALL CLEAR ஒலித்து வெளிவந்து பார்த்தால் வாணலியில் பண்டம் தீய்ந்துபோயிருக்கும். அடுப்பு எரிஞ்சுட்டிருக்கும். சில சமயங்களில் குண்டு விழாமலே அடுப்பிலிருந்து தீ இசை கேடாய்ப் பற்றிக் கொள்ளவும் வழி உண்டு. இதுதான் மரணத்தின் அண்டை வீட்டு உறவு.

மரணத்திற்குத் தனிப் பயம், அதன்மேல் சீற்றம் எல்லாம் எங்களுக்கு விட்டுப்போச்சு. தினம் அத்துடன் வளைய வருகிறோம். அதுதான் தெரியும். இது உறவு தானே! வீட்டுள்ளேயே தகப்பன் மகனுடன் பேசாமல், மகன் தாயோடு பேசாமல், சகோதரர்கள் பேசிக் கொள்ளாமல் குடும்பங்கள் இல்லையா? காரியங்கள் நடக்கவில்லையா அதுபோன்ற உறவு **Daeth My Brother, Who will not speak to em, but is waiting to embrace me...**

நான் ஒரு வீடு கட்டினேன். நாலு லட்ச ரூபாயில் வட்டிக்கு வாங்கிக் கட்டினேன். பால் காய்ச்சிக் குடித்தா யிற்று. நாளைக்குக் குடிபுக வேண்டும். மறுநாள் மூட்டை முடிச்சுக்களுடன் போய்ச் சேர்ந்தால் வீட்டைக் காணோம். ஒரு சுவர்கூட அடையாளத்துக்கு இல்லை. தரைமட்டம்.

எப்படியிருந்திருக்கும் உங்களுக்கு? என்னால் நினைத்துப் பார்க்க முடியல்லே. அசட்டுக் கேள்வி. மன்னித்து விடுங்கள்.

''அதைத்தான் சொல்ல வருகிறேன். நீங்கள் நினைக்கிற பாதிரியில்லை. புது வீட்டுக்கு அண்டைக் காரன் bomb விழுந்ததில் இறந்துபோனான். மோசம் போயிட்டான். நான் உயிருடன் இருக்கிறேன் அல்லவா! அது நன்றிக்குரிய விஷயம் அல்லவா!—அடுத்து அதே மூச்சில் ஆவேசத்துடன், ''அப்பவும் நாங்கள் லா.ச.ரா வைப் படிப்போம்.''

அதிர்ந்துபோனேன். என்னை அறியாமல் என் கைகள் கூப்பிக் கொண்டன எனக்குக் குரல் தழுதழுத்தது. ''என்னையும் உங்களையும் சேர்த்துச் சொல்லாதீர்கள். நீங்கள் செயல் வீரர்கள். நான் என் மூலையில் உட்கார்ந்து கொண்டு தட்டான் சுத்தியால் எழுத்தைத் தட்டிக் கொண்டு என்னத்தைச் செய்துவிட்டேன்?''

''நீங்கள் நினைக்கிற மாதிரியில்லை. எங்கள் நாட்டில் நிறைய மக்கள் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். கல்வியை மேலும் மேலும் படித்துக்கொண்டேயிருப்பதுதான் எங்கள் முதலீடு. எங்களுக்கு மனிதர்கள் வேண்டும்; உறவு வேண்டும். மரணத்தின் அருகாமையே எங்கள் உறவை இன்னும் இறுகப் பிணைத்துவிட்டது. எழுத்தைக் காட்டிலும் மனித உறவுக்குப் பிணைப்பு எது? காலம், இடம், கடல் தாண்டியும் எழுத்தால்தானே நாம் ஒருவரையொருவர் தொட்டுக்கொள்ள முடிகிறது! இதோ இந்தப் புத்தகம் உங்கள் நாவல் 'கழுகு'—புத்தகத்தை எடுத்து ஆட்டினார். விலை ரூ 20-50 போட்டிருக்கிறது. எங்கள் நாட்டில் இதற்கு இதுபோல் நாலு பங்கு விலை. அப்படியும் கிடைத்தால், வாங்கிப் படிப்பவர்கள் இருக்கத் தான் இருக்கிறோம்.''

இது 'நான்' இன் ஆவேசம் இல்லையா?

நம்பிக்கையின் தரிசனம்.

நம்பிக்கையிலிருந்து விளைவது தைரியம். ஹெமிங்வே தைரியத்தை (Courage is) 'Grace under Pressure' என்கிறான். வீடு எழும்பினதும் சாரத்தைத் தட்டிவிடுவது போல நம்பிக்கையைத் துறந்த தைரியம் விரக்தி.

துல்லியமான 'நான்'

இலங்கை நண்பர் இதைத்தான் சித்திரிக்கிறார். அல்ல அதுவாவே விளங்குகிறாரா?

படுக்கப் போமுன் அவள் எதிரே நிற்கிறேன். ஒரு சின்னப் படத்திலிருந்து தர்க்க ரீதியில், விசுவரூபம் எடுத்த ஸர்வ ''நான்''—அந்த அருவ 'நானை' இதோ என் சிறுமையில் என்னால் ஜரிக்க முடியாது. எதிர்நோக்கி, அண்ணாந்து நோக்கி, முறையிட்டுக்கொள்ள, என்

தென்புக்கு அவ்வப்போது பார்த்துக்கொள்ள எனக்கு அவள் வேண்டும். ஸ்ரீமதி என் பெந்துப்பாட்டி. திருவாசியை அடைத்துக்கொண்டு ஆள் உருவத்தில், தலைமுறை தலைமுறையாக எனக்காக நின்றுகொண்டிருக்கிறாள்.

"அம்மா, நீ லோகமாதா, உனக்கு தாய் யார்?"

"......"

"உனக்குத் தாயில்லையா?"

"......"

"நீ அனாதி. ஆனால் அனாத பந்து."

லேசாக மின்சார விளக்கு மங்குகிறது. (லோடு மாறும்) இன்று காலை படத்து ஆணிக் கொக்கியில் சொருகிய சங்கு புஷ்பம் வதங்கி விழுகிறது.

அவளுடைய பதில்.

# ஜ்வாலாமுகி

எண்ணங்களைத் தோற்றுவிக்கவில்லை. தாமே தோன்றுகின்றன. தோன்றிய வண்ணமிருக்கின்றன என்றே எண்ணுகிறேன். எண்ணங்களின் உற்பத்தி இடம், மனம் என்று கொள்வோமானால், மனதினால் இயங்காமல் முடியவில்லை. அந்த இயக்கத்தை ஓரளவு கட்டுப் படுத்தலாமோ என்னவோ, அறவே தவிர்க்க முடியவில்லை. நான் எழுத்தாளன். எண்ணங்கள் என்னை இழுத்துச் செல்லும் வழியில் அவ்வப்போது அவை காட்டும் ஆசைமுகங்களில் என்னை இழந்து அவற்றைத் துரத்திச் செல்கிறேன். அப்புறம் ஒருநாள், அப்படிக் காட்டிய அத்தனை முகங்களும் ஒருமுகம், அது அவள் முகம் என்று உணர்ந்தேன், அடையாமுகம், பாராமுகம், கிட்டாநிலை. ஆனால் அதனால் தேடல் தீவிரம்தான் அடைகிறதன்றி, அலுக்கவில்லை, அடங்கவில்லை.

அவள் யார்?

மேல்கூற்றில் ஒரு மாற்றம். எண்ணத்தை நான் தோற்றவில்லை. ஆனால் எண்ணங்கள் தோன்றுவது தெரிந்தபின், நானும் எண்ணங்களைத் தோற்றுவிக்கிறேன். நான் தோற்றுவிக்கும் எண்ணத்துக்கு என் இஷ்ட உருவைக் கொடுக்க முயல்கிறேன். இஷ்டமும் எண்ணம் தான். எண்ணத்தின்மேல் எண்ணத்தை ஏற்றுகிறேன், பிறகு அந்த எண்ண உருவைச் செயல்படுத்திப் பார்ப்பது

என்பது இன்னொரு எண்ணம்; எண்ணத்தின்மேல் எண்ணம் பெருக்கி, அவை நடுவே சிக்குண்டு உழல்கிறேன். எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி மனம் புண்ணாகி, அந்தப் புண்ணில் அவ்வப்போது புத்துயிர் கொள்கிறேன். அது அவள் லீலை.

அவள் யார்?

“நீ யார்?”

“யார் என்று எண்ணுகிறாய்?”

கேள்விக்குப் பதில் கேள்வி, கண்ணாமூச்சியில் விளையாட்டின் பொருமலில், சிந்தும் கேலியில், புலி நகங்கள் விரித்தபடி ஒன்றையொன்று வளைய வருகின்றன. இதயத்தின் ரணமேடை அவற்றின் விளையாட்டு அரங்கம்.

கேள்வியும் பதிலும் அலைகள். அலைதாண்டிய கடலில்தான் அமைதி என்று சொல்கிறார்கள். ஆனால் நடுக்கடலில் புயல் நேரவில்லையா? புயல் அடிக்கையில் மலையுயரம் அலைகள் எழும்பவில்லையா? கப்பலைப் பம்பரமாய் பின்னவில்லையா? நெருப்புக் குச்சியாய் ஒடிக்கவில்லையா? ஆகவே அலைகள் ஓய்வதுமில்லை, அமைதியும் நிரந்தரமில்லை. அப்படித்தானே? சொல், நீயே சொல்லடி!

எனக்குத் தெரியும் நீ சொல்லமாட்டாய், பேசவே மாட்டாய். புயலின் நடுவில், அமைதிப் புள்ளியில் பத்திரமாய் வீற்றிருக்கிறாய். உன் பத்திரத்தில் புன்னகை புரிகிறாய். உள்ளம், ஆவி, யாவும் கொள்ளை கொள்ளும் புன்னகை. எல்லாம் தெரிந்து, எல்லாம் உள் அடங்கி, நீ பேசமாட்டாய். ஏனெனில், உண்மை என்றுமே ஊமை.

நீ யாவும் அறிந்தவள். நீ உண்மை. நீ ஸௌந்தர்யை. நீ சாந்தி. இன்னமும் என்னதான் முயற்சி செய்தாலும் என்னால் சாதிக்க முடியாத ஏதேதோ ஆசைகளை,

லக்ஷியங்கள், கற்பனைகள், தீர்த்துக்கொள்ள முடியாத தாபங்களை உருவேற்றி, என் நம்பிக்கையின் பலத்தில் அத்தனையும் ஒருமுகமாய எண்ணத்தின் தீவிரம் நீ.

ஆனால் நீ, நீயே உண்டானாயா அல்லது என் எண்ணத்தின் தோற்றுவிப்பா? புரியவில்லையே!

என்னிடம் கொஞ்சகாலமாக ஓர் இளைஞர் வந்து கொண்டிருக்கிறார். "எதுவுமே—எண்ணங்கள் உள்பட யதேச்சை (Spontaneous) அன்று. எண்ணங்களைத் தோற்றுவிக்கும் கருவி, மனம். அந்த எண்ணங்களைச் சேமித்து வைத்துக் கொள்ளும் கருவி, மூளை. மனம் வேறு மூளை வேறு"—இது அவர் கருத்து.

"அப்படியானால் மனம், மூளை இவைக்கு மூலம்?"

"ஓ, அது, அந்தப் படுகை, மிக்க ஆழமானது, ஆதாரமானது,"

லேசாகச் சிரிப்பு அவர் உதடுகளில் அரும்பு கட்டு கிறது. அவர் பற்கள் வரிசையாயிருக்கின்றன. தர்க்க ரீதியில் அவர் சரியாயிருக்கலாம். ஆனால் எனக்குச் சமாதானமில்லை.

"நீ கண்டாயா?" என்று எப்படிக் கேட்க முடியும்?

சரி, நீதான் அந்தப் படுகையா?

பதில் கிடைக்காவிட்டாலும் கேள்வியே உறுதுணை தான்.

தேடல், சீண்டல், நாடல், வேண்டல், ஏங்கல், முன்னேறல், பின்வாங்கல், இடறிவிடுதல், தடுக்கிவிழல், தள்ளிவிழல், இவைக்கெல்லாம் தத்துவம் கற்பித்தல், நியாயம் சாதித்தல், அதையே கொள்கையாகக்

கொண்டாடல், அதைப் பிறர்மேல் கட்டாயமாய்ச் சுமத்தல், பக்கம் பக்கமாய் எழுதுதல், பக்கம் பக்கமாய்ப் பேசுதல்,—என்னதான் இவை அத்தனையும்?

என்னையே நான் ஏமாற்றிக்கொள்ளல்.

ஆனால் இத்தனையின் அடியிலும் கடைசிவரை அனுபவிப்பது வேதனை.

ஏகலைவன் அம்புபோல், எண்ணக்கால் ஒன்றுவிடாது துளைத்து, என்—எண்ணத்தை வியாபித்துவிட்ட புற்று நீ.

ஆ, கண்டு கொண்டேன். நீ என் ஆசைமுகம் இல்லை. ஆசைமுகமாயிருந்தால், உன் ஆயிரம் ஜாக்ரதையிலும், நீயோ நானோ ஏமாந்த சமயம் என் ஆசை முகத்தைக் கண்டிருப்பேன்.

நீ நினைவுமுகம். மனித பரம்பரையின் நினைவில், தனித்தனியாவும், தலைமுறை தலைமுறையாகவும் ஜன்மேதி ஜன்மமாய் ஊறிப்போன முகம். உனக்குத் தனி முகம் இல்லை. முகமேயில்லை. முகத்தின் இடத்தில், என் ஆசையில் பொருத்தி வைத்து மனதுள் முடிந்தால் பார்த்துக்கொண்டு, முடியாவிட்டால் கோபித்து, ஏமாந்து, ஏங்கி, அழுது குமுறுமுகம். அதனால் நீ—

ஓர் இடத்தில் மீனாக்ஷி, ஓர் இடம் விசாலாக்ஷி, ஓர் இடம் அகிலாண்டேஸ்வரி, எனக்குப் பெருந்திரு.

ஒரு சமயம் அம்மா, உடனே சோதரி, மனைவி, காதலி, என் குழந்தை, நண்பன் ஏதேதோ சொல்லத் தெரிந்த, தெரியாத உறவுகள்; ஒவ்வோர் உறவும், அவ்வப்போது, அதனதன் பிறவி.

ஜன்மேதி ஜன்மமென்று சுலபமாகச் சொல்லி விட்டேன். ஆனால் பார்க்கப்போனால் ஜன்மமென்பது ஒரு நீண்ட நினைவுச் சரடுதானே! பிறவியென்றும் மரண

மென்றும் மாறி மாறி ஆங்காங்கே முடிச்சுகள் விழுந்த சரடு. அந்த நினைவின் தொடர் தெரியாதபடி பிறவியும் மரணமும் தடுத்துவிடுகின்றன அவ்வளவுதான். ஆனால் சரடு சரடுதான். பிறவியையும் மரணத்தையும் ஊடுருவிய அந்தச் சரடாய் திகழ்கிறாய், விளங்குகிறாய் அப்படித் தானே?

வேடிக்கை பார். தெளிவு அவ்வப்போது கிடைப்பது போல் காட்டினாலும், உறுதிப்படுத்த உன்னையே அணுக வேண்டியிருக்கிறது. ஆனால் நீ, விளக்கமாட்டாய். தெளிவிலிருந்து தோன்றும் புதுமூட்டங்களில் புதைந்து ஸ்புடத்தில் வெந்து கொண்டிருக்கிறேன். தவமென்பதே இதுதானோ?

உன்னை நான் ஏன் 'அவள்' என்று அழைக்கிறேன்? நீ 'அவளாய்'த்தானிருக்க வேண்டுமா? 'அவனா அல்லது அது'வாக இருக்கக்கூடாதா? ஒருவேளை நான் பெண்ணாய்ப் பிறந்திருந்தால் என் ஆசைமுகத்தில் 'அவனாய் வாய்த்திருப்பாயோ?'

ஒன்று கேட்கிறேன். முற்றும் துறவி சங்கரன், பெண்ணை ஏன் பூஜிக்கிறான்? நீ காமாக்ஷி, நீ சாரதா, நீ சக்தி. ஆனால் நீ பெண்தானே? அதுவும் சுகம், துக்கம், ஜனனம், மரணம் உலகமே மாயை என்று பாய்ச்சிகை யையும் கட்டாணையும் கையின் ஒரு வீச்சில் கலைத்து விட்டு, இதன் நியாயம் என்ன? நான் தத்துவத்தில் வல்லேனல்லேன், எதைப் பேசினாலும், கேட்பதானாலும் எழுத்தின் ஒரு வழிதான் அறிவேன். என் கேள்வி, விசாரணை, வேதனை, அவ்வப்போது தெளிவு, அமைதி, புண், புண் ஆறல், தவம் எல்லாமே எனக்கு எழுத்துதான். வேறு அறியேன்.

லலிதா ஸஹஸ்ரநாமத்தில், நாமத்துக்கு நாமம் உன்னைப் புகழ்கிறான்.

ஸௌந்தர்ய லகரியில் அங்கம் அங்கமாக வர்ணிக்கிறான்.

'அம்பா சாம்பவி சந்திரமௌளி
ரபலாபர்ணா உமா பார்வதி
காளி ஹைமவதி ஸிவாத்ரிநயனா
காத்யாயனீ பைரவி
ஸாவித்ரி 'நவயௌவனா ஸுபகரீ...'

அர்த்தம் முழுக்க ஆகவில்லை. (வேண்டுமா என்ன?) ஆனால் வரிக்கு வரி சொற்களை, நாக்கில் உருட்டிச் சுவைப்பதே ஒவ்வொரு சமயமும் புது அனுபவம். என்ன இது தேவி? எனக்கு நினைவுமுகம் அவனுக்குக் கண்ட முகம் ஆகிவிட்டாயா?

இல்லை. நீ யாருக்கும் நினைவுமுகம்தான். உன் தன்மையே அப்படித்தான். ஆனால் அவரவர் நினைவின் ஆழம் வெவ்வேறு. அவரவருக்கு நீ தென்படும் விதங்களும் அந்தந்த ஆழத்துக்கேற்பத்தானே!

'ஜ்வாலாமுகி'

நினைத்துப் பார்க்கிறேன். "ஜெவ ஜெவ" உன் முகம் —(சங்கரனே சொல்கிறான் தியானத்துடன் கற்பனையும் சேர வேண்டும்) கோபத்தினாலா? கோபம் யார் மேல்? ஆனால் உன் கோபத்துக்குக் காரணமும் வேண்டுமா? வெட்கமா? நீ ராஜராஜேஸ்வரி ஆளும் வம்சம். வெட்கம் என்று உண்டு என்று அறியாயோ? ஆனால் நீ பெண். ஆனதால் நீ அறியாமலும் நாணம் உன் அணிகலன். அதனால் நீ ஜ்வாலாமுகி, கன்யாகுமரி, தபஸ்வினி. அதனால்—

'ஜ்வாலாமுகி.'

சங்கரன் எனும் துறவி எனக்குப் புரியவில்லை.

ஆனால் சங்கரன் எனும் கலைஞனைப் புரிகிறது.

நான் சங்கரன் இல்லை.

ஆனால் இருவரும் எழுத்து வர்க்கம்தானே!

அன்றொரு நாள் உனை நான் சந்தித்தேன். உன்னைப் பார்க்கவில்லை; உன்னோடு பேசவில்லை. புரிந்துகொள். இல்லை, நான் எனக்குப் புரிந்துகொள் கிறேன் இப்போது நான் சொல்லப்போகும் முறையில் உன்னைக் காட்டிக்கொண்டதே நீதானே, உனக்குப் புரியாதது எனக்கென்ன புரியப்போகிறது? நீ விரும்பு வதும் இந்தச் சரணாகதம்தானே!

ஒரு நாள் மாலை உலாவில், ஒரு மைதானத்தை ஒற்றையடிப் பாதைவழி கடந்துகொண்டிருக்கையில், ஒரு பச்சைப் பாப்பா—இரண்டு வயது இருக்காது—நீல கவுன், இரட்டைப் பின்னல், முன்நெற்றிமேல் செண்டு மல்லி, "கமகம்," தன்னந்தனியாக உட்கார்ந்தபடி கைகளைக் கொட்டிக்கொண்டு என்னைப் பார்த்ததும் "பூவா பூவா" என்னவோ குளறிக்கொண்டு, வாய் நிறையச் சிரித்துக் கொண்டு முகத்தைத் திருப்பி என்னத்தையோ பார்த்து, மீண்டும் என்னைப் பார்த்து.

"பூவா பூவா"—

அவள் முகம் வழி என்முகம், தானே திரும்பியதும்—

—இதோ ஒருகால்வீச்சு எட்டலில் பச்சைப்புல் அடரில், மூன்று விரல் தடுமனுக்கு, நீளம் என் உயரத்துக்கு மேல், கட்டுக்கட்டாய் முடைந்து தரையில் கிடத்திய பின்னல் மூச்சு விடுவது போல்......

**NO! NO!**

குழந்தையை அப்படியே அள்ளிக்கொண்டேன். ஆனால் கால்கள் செயலிழந்துவிட்டன. அதன் தூக்கிய படம் அவளைப் பார்க்க, என்னைப் பார்க்க, நான் அதனைப் பார்க்க குழந்தை சிரிக்கிறது. அங்கே, அந்தத் தருணத்தில் எங்கள் பார்வையின் முக்கூடலில்,

—அந்தச் சிரிப்பில் உன்னைச் சந்தித்தேன்.

ஜ்வாலாமுகி

ஏதோ நாணின் 'பூம்' என்னுள். பயம், 'த்ரில்' விறுவிறு, ஆனந்தம்— இன்னும் விவரிக்க என்னிடம் வார்த்தையில்லை.

ஏதோ குளறிக்கொண்டே, யாரோ என் பின்னாலிருந்து ஓடிவந்து, குழந்தையைப் பிடுங்கிக் கொண்டு, என்னை வைதுகொண்டே, தான் வந்தவழி திரும்பிச் சென்றாள். ஆனால் என்னை நான் மறந்த நிலை முற்றிலும் கலையவில்லை. அந்தப் பரவசத்திலிருந்து தெளிந்து என்னைச் சுற்றுமுற்றும் பார்த்தபோது, இடம் 'வெறிச்'சென்று இருந்தது. சூரியன் மேலை வாயிலில், தகதகச் சிரிப்புடன் சாய்ந்து கொண்டிருந்தான். ஒருவித மான ஆரஞ்ச் கலர் பசும்புல் தரையை, தொடுவானை எட்ட வயல்களை, என்னை ஏற்றிற்று. உன் சிரிப்பின் ஒளி. ஜ்வாலாமுகி.

வேண்டியும், தேடியும் கிடைப்பது தரிசனம் அன்று. எப்படியும் அது முழு தரிசனமாகாது. அடித்துக் கனியவைத்த பழம். தானாக நேர்வதுதான் தரிசனம். திரும்பத் திரும்ப நேர்வதும் தரிசனமாகாது. அது 'கிச்சுக் கிச்சு'. தரிசனம் ஒருமுறை, ஒரே தடவைதான் உண்டு. அதில் தீய்ந்து கருகி எரிந்துபோன சதை, ப்ரக்ஞையின் ஒருதடம்— அதற்கு மறு வளர்ச்சி கிடையாது. அந்த ஜ்வாலையின் குபீர், அது நித்யத்வத்தின் பொறி. அந்தப் பொறி நேரம் நானும் ஜ்வாலாமுகி.

எதிர்பாராத சமயத்தில், பின்னால் வந்து தோளை அவன் தொடும் வேளையை அடையாளம் கண்டு கொள்ளத்தான் இந்தப் பிறவியே கொடுக்கப்பட்டிருக்கிறது.

அவள் தருண்மை.

வேளை நெருங்க நெருங்க ஒன்று தெரிந்துவிட்டது. ஆயிரம் பிறவியின் ஊடும், ஆயிரம் தவமிருந்து அவளை நான் நேருக்கு நேர் காணப்போவதில்லை. ஏனெனில் அவள் மயம் அத்தன்மைத்து. அவளே அவளுக்குத் தனியாயில்லை. அப்படியும் தன் பிம்பத்தைப் பாரத்துக் கொள்ளத்தான், புவனத்தைப் படைத்தாள். அவள் தன்னை வரைப்படுத்திக்கொள்ள முடிந்ததே இப்படித் தான். புவனம் அவள் கண்ணாடி—அவள் தன் அழகு அலுக்காதவள். அதனால்தான் அவள் கண்ணாடியைப் பிடித்தபடி, நாமும் பிம்பத்தோடு பிம்பமாய், அவள் பிம்பத்தைப் பார்த்தபடி.

ஒரு பரத நாட்டியம் பார்த்தேன்.

ஆட ஆட, நெற்றி வேர்வை முத்திட்டுத் துலங்கித் துலங்கி, அவள் அழகாகிக் கொண்டே வந்தாள்.

பறித்துப் பாவாடை உடுத்திக் கொள்ளலாம். காற்றில் அசையும் வாழை இலையின் வீச்சில், இன்னமும் அருள் விரியாத குருத்தில்.

பொய்க் கன்றை மடியில் முட்டி, தாயின் கண்கள் வடிக்கும் கண்ணீரில்...

ஐந்தருவி கொட்டும் வேகத்தில்...

மின்னல் விழுந்தாற்போல பூமி வெடிப்பில்...

மலை உச்சியில் நகரும் மூட்டத்தில் உருளும் இடியில்...

முலைக்காம்பில் துளிக்கும் அமிர்தத்தில்...

எருக்கையிலைக் காம்பை ஒடித்தால் புறப்படும் பாலில்...

ஓ! சொல்லி மாளாது.

இன்னும் எத்தனை எத்தனையோ அத்தனையும் அவளுக்கு அர்ச்சனை.

பாஷையே அதற்குத்தான்.

ஆங்காங்கே, அவ்வப்போது

அடையாளங்களில், உவமைகளில், உருவகங்களில், உபமேயங்களில்

தெரிந்த பார்வைக்கு, காத்திருக்கும் பாத்திரத்துக்கு

ஆனால் எதிர்பாராத சமயங்களில் குறியீடாக வெளிப்படுத்திக் கொள்வதன்றி,

அருவத்தின் நிராமயம், தனி உரு ஆகமாட்டாள்.

உன் ஆசைமுகத்தை, ஆசைப்படிக் கண்டுகொள். நினைவுமுகம் தனிமுகம் கிடைக்காது; கிடைப்பதற்கில்லை.

ஆகவே, படத்தின் முன் மீண்டும் நிற்கிறேன், படுக்கப் போகுமுன் அவளிடம் சொல்லிக்கொள்ள. அருவத்துடன் உறவாட எனக்குத் தகுதியில்லை. எனக்கு உருவத்தின் உறுதுணை வேண்டும்.

உன்னிடத்திலும் அருவத்தின் அம்சங்கள் செறிந்து இல்லையா?

உன்னைச் செதுக்கிய ஸ்தபதியின் ஸ்வயார்ப்பணம்!

மந்திரம், உச்சாடனம், உருவேற்றல், உபசாரம், அலங்காரம்—

இவற்றில் ஆவாஹனமாகி,

தொன்றுதொட்ட வழிபாடு, புராணம், ஸ்தல மகிமை, தீர்த்த விசேஷம், ஐதீகம், பூஜை, நேமம், ஜபம், நிஷ்டை நாட்டுக் கலாசாரம், பரம்பரைக் கலாசாரம், குடும்பக் கலாசாரம், துதிப்பவரின் தனித்தனிக் கலாசாரம், சொந்தக் கலாசாரம் இத்யாதிகளில் காலம்காலமாய் ஊறி வளர்ந்திருக்கும் நம்பிக்கை உரு அல்லவா நீ! அவளின் ''நான்'' இன் பிம்பம்தானே நீ!

உன் படம் தூண்டும் கற்பனையில், லால்குடியில், கர்ப்பக்ரஹத்தில் உன் சன்னிதானத்தில் நிற்கிறேன்.

சித்தம் போக்கு அதன் போக்கு, உன் போக்கில் செல்கிறது.

நேற்று, இன்று, நாளை காலத்தின் முக்கணுவையும் ஊடுருவி நிற்கிறாய்; ஆனால் அகப்படமாட்டாய். உன் கண்ணாமூச்சி, விளையாட்டில், நீ என் கண்ணைக் கட்டினாலும், உனக்கு நான் ஒளிந்தாலும் தோல்வி எப்போதும் எனக்குத்தான்.

நேற்று—உன் நினைவு முகத்தோடு ஐக்கியமாகி விட்டது.

இன்று— 'நேற்றை'யின் சட்டையுரிப்பு இரவு கண்மூடித் திறந்தால்.

நாளை— புது உலகம். 'இன்று' இன் சட்டையுரிப்பு.

நேற்று இன்று நாளை என்று அன்றன்று நெஞ்ச நெகிழ்ச்சியின் கண்ணீர் அருவியில் குளித்து உன்னைப் புதுப்பித்துக்கொள்ளும் சதாயெளவ்வனி நீ.

நித்யத்வத்தின் ஹோமகுண்டத்தினின்று எழும்—

**ஜ்வாலாமுகி!**

இன்று—பையன் அவசரமாக 'பைக்'குக்கு முகம் துடைத்துக்கொண்டிருந்தான். வெளியே கிளம்ப ஆயத்தம்.

''பெட்ரோல் விக்கற விலைக்கு எங்கே ஷிகாரி?''

சற்று என்னைச் சிந்தித்துவிட்டு என்னிடம் வந்தான். ''நிஜம் சொல்லவா? பொய் சொல்லவா?''

''அது உனக்குத்தான் தெரியும். நீ எதைச் சொன்னாலும் நம்பித்தானே ஆகணும்!''

என் தோள்மேல் கை வைத்தான். ''நல்ல அப்பா. அப்பாவாப் பழகவில்லை...ஸ்னேகிதனாவே பழகறேள்... அப்பா, சைட் அடிக்கப்போறேன்.''

''இப்படி ஒரு உண்மையைச் சொல்லிப் பெருமையைக் கட்டிக்கொண்டதா எண்ணமாக்கும்.''

''சைட் அடிக்கப் போறதாத்தானே சொன்னேன்; கையைப் பிடித்து இழுக்கப்போறேன்; செடி மறைவுக்கு அழைச்சுண்டு போறேன்னு சொன்னேனா? அதெல்லாம் ஒளியும் ஒலியில்தானப்பா. அப்படி என்னேனும் ஆச்சுன்னா, கன்னம் 'பன்' ஆகிவிடும். பெண்கள் இப்போ கராத்தே பழகறாப்பா!''

''அப்போ இப்படி ஒரு பொழுது போக்கு ஏன்? மகனே, நெருப்போடு விளையாடாதே!''

''நோ பிராப்ளம். வரேன்பா! காலேஜ் பஸ் வர நேரமாயிடுத்து. என்னென்ன பெர்ப்யூம்ஸ், என்னென்ன பவுடர், ஜாதிமல்லி, எத்தனை கொண்டை, சடைப் பின்னல், எத்தனை பாப்கட்ஸ்! அப்பா, லைஃப் இஸ் வொண்டர் ஃபுல்.''

''மகனே, நெருப்போடு விளையாடாதே!''

''அப்பா, நீங்கள் புத்தி சொல்லுங்கோ, கேட்டுக்கறேன். உங்களுக்குத் தலையாட்டிவிட்டு, உங்களுக்குப் பின்னால் வேறுமாதிரியா நடந்துகொள்ள முடியாதா? நம்பணும் அப்பா. அப்பா, எனக்கு நான்தான் காவல், நீங்கள் இல்லை. பொய் சொல்லியிருப்பேன். ஆனால், உங்களை ஏமாற்றினதில்லை. நேரமாயிடுத்து வரேன்!''

''பைக்'கை உதைத்து நிமிஷமாய்ப் பறந்துவிட்டான்.

என் பிள்ளை அழகன். அம்மா ஜாடை. அவன் யமஹாவில் பறக்கையில் காற்றிலிருந்து பிதுங்கிய மின்னல் கொடியாய்ப் பாவிக்க ஆசையாயிருக்கிறது. சோழவரத்தில் கலந்துகொள்ள வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கிறான். வயிற்றில் புளியைக் கரைக்கிறது. ஏமாற்றாமல் இருக்கலாம். ஆனால், சொல்வதைக் கேட்கமாட்டான்.

இன்று—

இருங்கள், சற்றுப் பொறுங்கள். இப்போது நான் இன்று என்றபோது எந்த இன்றைக் குறிக்கிறேன் என்று எனக்கே புரியவில்லை. வரவர எனக்கு நேரங்கள் குழம்புகின்றன. மந்தாரமிட்டிருந்தால், (இடாவிடினும்) காலைக்கும் மாலைக்கும் வேறு தெரியவில்லை. ஆகவே, இன்று என்று தனியாகத் தெரியாமல் என்றும் அதனுள் புகுந்து கொண்ட

இன்று—

விடியற்காலையில் என்னோடு யாருமில்லை. கிணற்றுள் எட்டிப் பார்க்கையில்— அது ஒரு பழக்கம்— ஏற்கெனவே பயந்துகொண்டிருந்தபடி தண்ணீர் இறங்கியிருந்தது. தாரைகளின் நலுங்கல் தவிர ஜலம் அமைதி. ஓரிரண்டு பாதாமி இலைகள் மிதந்தன.

ஆழத்தில், என் முகத்தருகே 'சடக்'கென இன்னொரு முகம் தெரிந்தது—யாரிது?—முகம் நிமிர்வதற்குள் பிம்பம் மறைந்துவிட்டது. திரும்பிப் பார்த்தால் முகத்துக்குச் சொந்தக்காரரர் காணோம். ஆனால், ஓடின சத்தமும் கேட்கவில்லை. அத்தனை சுருக்க ஓடி இருக்கவும் முடியாது.

ஆனால், கொஞ்ச நாட்களாக என்மீது புகார்கள் கிளம்பியிருக்கின்றன, வீட்டில் பேசாததெல்லாம் எனக்குக் கேட்கிறதாம். அதனால் சண்டை போடுகிறேனாம்... கண்ணுக்கெதிரே குத்துக்கல்லாய் நிற்பது தெரியவில்லையாம். ஏதோ கேட்டால் சம்பந்தமில்லாமல் ஏதோ பதில் சொல்கிறேனாம். 'வயசாச்சோன்னோ?'—சமயம் வந்த போதெல்லாம் இடித்துக் காட்டுகிறார்கள்.

பாதாமி மரத்தடியில் பாறாங்கல்லின்மீது உட்காருகிறேன். தலை லேசாய்க் 'கிர்ர்ர்'. உண்மையில் தோன்றிற்றோ? பிம்பம் தோன்றி ஒளிந்துகொண்ட நொடி நேரத்துள் நெஞ்சில் தங்கிவிட்ட அந்த நினைப்பின் ருசி இப்படி உண்டோ? கொடுமை தி சாங் ஆஃப் தி சைரன்ஸ். அம்மா, என்னைக் காப்பாற்று. தலையை இரு கைகளாலும் பிடித்துக்கொள்கிறேன்.

முதலில் அது அவனா? அவளா? அதுவா? என் ஞாபகத்தின் சக்தியை முழு மூச்சில் கூப்பிடுகிறேன். பரட்டை முடியினின்று தப்பின ஓரிரு பிரிகள் என் கன்னத்தில் குறுகுறு?!!? அப்படியானால் அது நிச்சயம் அவள். அவளன்றி வேறாய் வேண்டாம்.

அது அவளானால் அவள் எவள்? அதுதான் கொடுமை. நெற்றி கசகசக்கிறது. 'திகைப்பூண்டு' என்கிறார்களே அது உண்மையா? அடிக்கடி அவள் என்னைக் கேட்கும் கேள்வி.

''என்னப்பா, நாரத்தம் பச்சடின்னா ஒரு வெட்டு வெட்டுவியே, அம்மா நன்னாவும் பண்ணியிருக்கா, ஆனால் குருவியாட்டம் கொறிக்கறே, உடம்பு சரியில்லையா?''

பிள்ளையாண்டான் படு குஷியிலிருக்கிறான். சேவலின் கொண்டைச் சிலிர்ப்பிலிருக்கிறான். பஸ் ஸ்டாண்டில் இவன் கொடி கட்டிப் பறக்கறாப்போல இருக்கு. ஆனால், கண்களில் லேசான மருட்சி—அல்லது என் பிரமையா?

அவன் சொன்னாற்போல், நாங்கள் உண்மையிலேயே நல்ல நண்பர்கள். எனக்கு இந்த உறவு தேவையாயிருக்கிறது. உத்யோக ரீதியில் காம்ப் அல்லது வெளியூரில் கிரிக்கெட் மாட்ச் என்று இரண்டு நாட்கள் சேர்ந்தாப்போல, மது கண்ணில் படாவிட்டால் எனக்கு வேளையே மங்கிவிடுகிறது. திரும்பி வந்ததும் அவனைத் தொடணும் போல ஆசை பெருகுகிறது. வெட்கம், கௌரவம் தடுக்கின்றன.

மது நல்ல பையன்; அண்ட் ஐ ஆம் ஆன் ஓல்ட் மேன்.

என் பெருமூச்சு அவனுக்குக் கேட்டுவிடப் போகிறது. ஆனால், அந்தக் கவலை வேண்டாம். பூமியில் கால் பாவாது அவன் தன் உலகில் மிதந்துகொண்டிருக்கிறான். அவன் புன்னகை, ரகஸ்யமும். கனவொளியும் கொண்டு, அவனுடைய அத்தனை கலகலப்பிலும் அவனைத் தனக்குச் சொந்தமாக்கிக் கொண்டிருக்கிறது.

தட்இஸ் யூத்,

உச்சிவெயில். வீட்டுள் வெக்கையின் மயக்கத்தில் அவரவர் தம்தம் மூலையில் கண் செருகிக் கிடக்கின்றனர். சந்தடி செய்யாமல், கிணற்றடிக்குச் சென்று எட்டிப் பார்க்கிறேன். இப்படியும் பேதலித்துப் போகணுமா? மீண்டும் நிகழாதா? பாதாமி மரத்திலிருந்து, பறவை எச்சம் உச்சி மண்டைமேல் சூடாய் விழுகிறது. கோபம் பொங்குகிறது. கூடவே அழுகை பயமுறுத்துகிறது.

மரத்து நிழலடியில் ஒதுங்குகிறேன்; ஒடுங்குகிறேன்.

இந்த வயதில் நீ எனக்கு நேர்வானேன்?

இப்படிக் கேள்வி பிறந்ததுமே நீ நேர்ந்துவிட்டாய், உன்னை எனக்கு உண்மையாக்கிக் கொண்டுவிட்டேன் என்கிற எண்ணம அதன் முழுக்கனத்துடன் என் நெஞ்சின் ஆழத்துள் அமிழ்ந்ததும் உடல் புல்லரித்துப் போனது.

அப்போது நீ நிஜம்.

உண்மையின் தரிசனம்.

ஆம், மெய்யும் பொய்யும் அவரவர் மட்டில்தானே! ஆதார நிஜம், 'பேசிக் ட்ரூத்' என்று ஆயிரம் சொல்லிக் கொண்டாலும் எல்லாமே பார்வைகள். ஆயிரம் பார்வைகள், ஆயிரம் முகங்கள்.

இந்த ரீதியில் எங்கே போய்க்கொண்டிருக்கிறேன்?

உன்னை எனக்கு நிஜம் பண்ணிக்கொண்டதனால் வேதனை அதிகரிக்கின்றதே ஒழிய, தெளிந்ததால் தென்பு ஏற்படவில்லை.

இதோ பார், நான் காய்ந்த சருகு. என் உடல் இனி சிதைக்கு உரியது. இந்த நிலையில் நீ என்னுள் உன் பொறியை வைத்து வேடிக்கை பார்ப்பது நியாயமா? நெஞ்சில் அமிர்தம் சிக்கியதுபோல் அழியவும் முடியாது, வாழவும் வழியில்லை. தாங்க முடியவில்லையே!

ஒரு பெரிய கேவல் என்னின்று புறப்பட்டதும் மிரண்டுபோனேன். புரண்ட பூமியின் பெருமூச்சு, தாளொணா ஏக்கம். அதன் கபந்தவாய், மிருதுவாய் என்னைக் கவ்வியதும் கண்ணீர் புரண்டது.

'நித்யத்வத்தினின்று தெறித்த தருணம்
அது சிதறுண்டு நேர்ந்த கவிதை
சொல்லுக்குப் பதில் உகுத்த கண்ணீரில்தான்
காதல் பூக்கின்றது.
கானல் மேல் காதல். ஆகவே உன்மேல்
காதல் எனும்
எண்ணம் தைரியமாகத் தன்னில் தோன்றிவிட்டது.

இரண்டு நாட்களாக அவன் மாறிவிட்டான். திடீரென ஒரே அடியாக வதங்கிவிட்டான். மகனே, என்ன நேர்ந்தது? உன்னை ஏன் தின்றுகொண்டிருக்கிறாய்? எங்களை, என்னை ஏன் ஒதுக்குகிறாய்?

வாய்விட்டுக் கேட்க முடியுமா? கேட்டால்தான் சொல்வானா?

ஆபீஸ் வேளைக்கு வீட்டை விட்டுப் போகிறான். ஆபீசுக்குப் போகிறானா? வேளை தாண்டி வீடு திரும்புகிறான். வீட்டில் இருட்டு மூலைகளில், மொட்டை மாடியில் வாழ்கிறான்.

காலேஜ் பஸ்ஸைத் தேடிப் போகலையே, பஸ் ஸ்டாண்டில் உன் கொடி விழுந்துவிட்டதா? அப்படித் தான் தோன்றுகிறது.

நேற்று மாலை, மாடு அவளுடைய நந்தவனத்தில் புகுந்துவிட்டது. அவள், கத்திக்கொண்டே லொங்கு லொங்கென்று ஓடிவந்துகொண்டிருக்கையிலேயே அது போகிறபோக்கில், செடியோடு ஒரு தொட்டியை இழுத்துச் சென்று தொட்டி உடைந்து ரோஜாச் செடி மாட்டின் வாயில். சாவகாசமாய் நின்று மென்று தின்றது.

அங்கேயே உட்கார்ந்து ஒரு பாட்டம் அழுதாள்.

வாய்விட்டு, நெஞ்சின் கனம் தீர அழுகைக்கு எங்கே போவேன்? நல்ல அழுகை, நல்ல ஸ்னானம்.

நான் தோளில் சாய்ந்தோ, மடியில் முகம் புதைத்து அழக்கூடியவர் யாவரும் மறைந்துவிட்டனர். இப்போது அவர்களை அழைப்பது என் துராசை.

என் வயதுக்கேற்ப, நோய்வாய்ப்பட்டு நாளடைவில் தேய்ந்து, ஒருநாள் மாய்ந்துபோவதில் நியதியிருக்கிறது. ஆனால், இப்படிப்பட்ட மரம் துளிர்க்கும் இன்ப வதையில் நியதி இல்லை. ஆனால் இதுதான் உன் லீலை.

மது படும் வேதனைக்கு மனம் பரிதபிக்கின்றது. ஆனால் அங்கு நியதி தெரிகிறது. அவன் வயதுக்கு நேரும் நோய்வாய்ப்பட்டுத்தான் ஆகணும். ஆனால், மனம் பரிதபிக்கிறது. சாயங்காலே—சாயங்காலம் அதன் அச்சங்களுடன், நாளை எனும் அநிச்சியத்துடன், மங்கல்களுடன், பூஜை அலமாரிக்கெதிரே நிற்கிறேன் உன் படத்துக்கெதிரே. என் தாபத்தினின்று விடுபட உன் காலிலேயே விழுகிறேன்.

அவள் தன் உற்சாகமான பக்தியில், உன் படத்துக்கு மஞ்சள் கோர்த்த மஞ்சள் சரடு அணிவித்திருக்கிறாள். அதன் மங்கலமான வேலியின் பத்திரத்தில் நின்றுகொண்டு என்னைச் சிரிக்கிறாய்

ஆ—!— இப்போது உன் எதிரே நிற்கையில் கிணற்றில் தோன்றிய பிம்பம் யார் என்று ஓரளவு யூகிக்கத் தோன்றுகிறது. படலம் விலகுகிறதா?

ஜன்மம் எனும் முடிவற்ற நினைவு அதில் எங்கோ எப்பவோ புதைவுண்ட எண்ணமாய் நீ உன் படுகையினின்று உன் வேளையில் கிணற்றுள் பிம்பமாய் மேல்

வந்து மிதந்து, அந்த சலனத்திலேயே மறைந்தும் போய், உன் ஒளிவிலிருந்து வாட்டுகிறாய். அப்படித்தானே? சமாதானங்களை இப்படித்தான் செய்துகொள்ள வேண்டும். ஏனென்றால் நீ நிரூபணைக்கு அப்பாற்பட்டவள்.

மதுவைப் பார்க்க சஹிக்கவில்லை. என் கண்ணுக்குப் பாதியாகிவிட்டான். கண்களைச் சுற்றிக் கறுப்பு வளையங்கள். நின்றவிடத்தில் நிற்கிறான். நாலடி நடந்து மலைக்கிறான். கண்ணுக்கெதிரே இளைக்கிறான். மது, என்னடா செய்வேன்—செய்வோம்?

மின்சாரம் தோற்றுப்போய், வட்டமேஜை மீது ஏற்றி நட்டு வைத்திருக்கும் மெழுகுவர்த்தி ஒளி கூடத்தின் இருளைக் கூட்டிக் காட்டுகிறது. ஒரு மூலையில் அவள், ஒளியும் ஒலியும் அநியாயமாப் போய்விட்டதென்று புலம்பிக் கொண்டிருக்கிறாள்.

ஏதோ ஒரு அறை வாசலிலிருந்து மது வெளிப்படுகிறான். என்னை நோக்கி வருகிறான். என்னவோ சொல்லப்போகிறான். என் தோள்மேல் கை வைக்கிறான். காத்திருக்கிறேன். எங்கள் நிழல்கள் சுவர்மேல் விநோத நர்த்தனம் புரிகின்றன. அவன் உதடுகள் நடுங்குகின்றன. (ஷவரம் செய்து எத்தனை நாட்கள ஆயினவோ) விழிகள் நிறைகின்றன. கன்னம் கன்ற வழியும் அவன் கண்ணீர் என் நெஞ்சில் ஆவி கக்குகிறது. திரும்பிப் போகிறான். அந்தத் தருணம் வந்து நின்று. தயங்கி, பொரியாமல், அதன் கனத்துடன் திரும்பிப் போய் விட்டது.

‘காதல் எனும் புரையோட்டம்
காதல் எனும் துரோக நதி. ஆனால் ஜீவநதி.
காதல் எனும் வெந்நீர் வீழ்ச்சி.
அதன் தழும்பிலிருந்து மீளமுடியாது...’

மாலை நேரங்கள் பயமாயிருக்கின்றன; பயங்கள் தலைவிரித்தாடும் வேளை அப்போத்தான்.

என்னை அலசிப் பார்த்துக் கொள்கிறேன். மனதைச் சாட்டையாலடித்துக் கேட்கிறேன். மனம் மருள்கிறது. உடலின் வேட்கை அன்று இது. மனம் துணைக்குத் தவிக்கிறது. ஒரு பாதி குருதி சொட்ட தனிமையின் ஏக்கத்தில் நிற்கிறேன்.

ஒரு எண்ணம் தோன்றுகிறது. இதோ, இந்தக் கிணற்றடியில் பாதாமி மரத்தின் கீழ், பாறாங்கல்மீது நான் உட்கார்ந்திருக்கையிலேயே என் எண்ணத்தின் தீவிரத்தில், கிணற்றில் பார்த்த பிம்பத்தின் உருவில் உன்னை நான் சிருஷ்டிக்க முடியாதா? மாலையில் செவ்வான குண்டத்தினின்று, அல்ல இந்தக் கிணற்றிலிருந்தே நீ ஏன் எழக்கூடாது? தவம் என்பதே என்ன, ஒரு எண்ணம், ஒரே எண்ணத்தின் தீவிரம்தானே!

ஒரு பாதாமிக் காய் என் தலைமீது விழுந்தது. என்ன, என்னை மண்டையில் தட்டி உட்கார வைக்கிறாயா?

நான் பைத்யமே ஆகிவிட்டேனா?

அவளுக்கும் அவளுடைய வெண்டைச் செடிக்கும் ஏதோ பேச்சு மௌனத்தில் நடந்துகொண்டிருக்கிறது.

வாசல் கேட் திறக்கும் சத்தம் கேட்டு நிமிர்கிறேன்.

மது, அவன் தனியாயில்லை. நேரே என்னிடம் வருகிறார்கள். மஞ்சள் க்ரீம் ஜிப்பாவில் மெலிந்து, உயரமாய் வருகிறான்.

"அப்பா, அம்மா சேர்ந்து நில்லுங்கோ. எங்களை ஆசீர்வதியுங்கள்." நமஸ்கரித்து எழுந்து நிற்கிறார்கள். அவளுக்குச் சேவிக்கத் தெரியவில்லை. மண்டியிட்டு, தலை

யைத் தரையில் அழுத்தி மீண்டும் மண்டியாகி, மண்டியி லிருந்து எழுகிறாள். பின்னல் பூமியில் புரள்கிறது. தாழம்பூச் சிவப்பு.

''நன்னாயிரு மகராஜியா''—அவன் தாயார் திகைத்து நிற்கிறாள்.

''அப்பா நான் பொய் சொல்லியிருப்பேன். ஆனால், உங்களை ஏமாற்றியதில்லை. அப்பா! இவள் என்னை நம்பி, தன் பெற்றோரையே துறந்துவிட்டு வந்திருக் கிறாள் அப்பா. இவளும் மேஜர். சட்டப்படி இவள் ஃப்ரீ அப்பா, இவள் பேர் அமீர்ஜான்.''

மதுவின் தடலடி பாணி. அவன் கண்களில் ஒரு கண்ணாடிச் சாமான் தைரியம், துணிச்சல், விளிப்பு பிசகினால்—

''என்னடா சொல்றே மது? இவள் யாருடா?''

நான் அவளைக் கையமர்த்துகிறேன்.

நீ யார் என்று கேட்க எனக்குத் தேவையில்லை. ஏற் கெனவே உன் பிம்பம் காட்டி, சூசகம் காட்டியிருக் கிறாய். நீ வரப்போகும் அடையாளமாய் என் நெஞ்சின் சருகின்மேல் நடந்து சென்றிருக்கிறாய். அவ்வளவுதான். ஆனால் அதுவே எனக்குத் தாங்கவில்லை.

''அப்பா! அழாதேங்கோப்பா'' தேம்பினான். 'என் னால் முடியவில்லை.'

உஷ்! மகனே, இது அழுகையில்லை. அருவிஸ்னா னத்தில் என் அழுக்குகள் கழுவப்பட்டு துல்லியமாகிக் கொண்டிருக்கிறேன்.

நீ லலிதாம்பிகை.

நீ ராஜ ராஜேஸ்வரி.

நீ கன்யாகுமாரி.

நீ பாலா.

நீ அமீர்ஜான்.

# என் பிரியமுள்ள சிநேகிதனுக்கு

இப்படி ஆரம்பிக்கையிலேயே பாஸ்கர், எனக்கு உடம்பை என்னவோ பிய்த்துப் பிடுங்குகிறது, ஆனால் வேணும் என்றேதான். இருக்கட்டும். இந்தக் கடிதம் உனக்கு 'ஷாக்'காக இருக்கலாம். ஆனால் எனக்கு இதுவே பிராயச்சித்தமாக இருக்கக்கூடும் என்பதனால்தான் நம் சிநேகத்தின்பேரில் பாரம்.

''ஆமாம், இன்றிரவு பன்னிரண்டு வரை கடற்கரையில், அலையோரம் படகடியில், அனு, நீ, நான் அரட்டை அடித்துவிட்டு, இதென்ன கடிதம் வேண்டிக் கிடக்கிறது?'' என்று நீ வியப்புறுவது நியாயமே. இன்று நான் மறக்க முடியாத என் மிக்க மிக்கச் சந்தோஷ நாள். இன்று அனு, **simply scintillating** பேச்சில், தோற்றத்தில், கண்களின் ஒளியில், என்ன ஜாஜ்வல்யம்! என் பரவசம் அதன் கவானின் உச்சியைத் தொட்டுவிட்டது, எனக்கே தெரிந்து விட்டது.

நான் ஸஸ்பென்ஸை வெறுப்பவன். **It is cheap, vulgar, silly, artificial.**

என் பிரியமுள்ள சிநேகிதனே, **I love your wife.** இதை நான் நேரிடையாக உன்னிடம் சொல்ல முடியுமா, நீயே சொல்.

பாஸ்கர், உடனே தப்பாக நினைக்க அவசரப்பட்டு விடாதே. எங்களிடையே ஒரு தப்பும் கிஞ்சித்தும்கூட நேர்ந்துவிடவில்லை. அனுவுக்கு என் நிலை பற்றி ஒன்றுமே தெரியாது. தெரிந்தாலும் அவள் எனக்குக் கிடைக்கமாட்டாள். அதனாலேயே என் சத்தியத்தை, உன் முன்னிலையில், பொட்டென்று உடைக்கிறேன்.

இதனாலேயே it is time for my exit. ஆமாம், சும்மா கதையிலும், வம்பிலும், ஏன் நடப்பிலும்தான், 'நாக்குப் பட்டே நைந்துபோன இந்த eternal triangle நிலையை நான் உண்டாக்கப் போவதில்லை. I am going away. எங்கே? இந்த நிமிஷம் வரை அறியேன். இப்போதைக்கு இந்தக் கடிதத்தை எழுதி முடிப்பதில்தான் என் முழு முனைப்பு. என் தன்மையின் உண்மையை, அல்லது என் உண்மையின் தன்மையையா? அதன் செப்புச் சுருளைப் பிரித்துப் படித்துப் பார்த்துவிடணும். அவரவர் தன்மையின் உண்மை, கண்ணுக்குப் புலனற்ற தாமிர இலையில் வரைந்து ஒவ்வொரு பிறவியினூடே அதன் மூளையில் செருகி அனுப்பப்படுகிறது என்று எனக்குப் பிடித்தமானதொரு கற்பனை. தாமிரமாக இருப்பானேன்? என்னைக் கேட்காதே. ஆசாரத்துக்குத் தாமிரம் என்று நம் ஐதீகம். என்னதான் பகுத்தறிவு வாதத்திலும் இப்படி ஒரு சபல புத்தி, அசடு. பாஸ்கர், எவனுமே முழுக்க முழுக்கப் பகுத்தறிவாளி அல்லன். எப்படியோ ஒரு பழம் பிசுக்கு நம்முடன் ஒட்டிக்கொண்டுதானிருக்கிறது. ஜன்மப் பிசுக்கு? இல்லை அதன் மறுபெயரில் Call it the greasiness of evolution. விதி, நம்பிக்கை, கடவுள் என்கிறோமே இவையெல்லாமே உயிர்த் தொடர்பின் காரைப் பூச்சுத்தானே! நான் விஷயம் தாண்டிப் போகவில்லை. என்னுடைய all out sinceriety அதுவே ஒரு நாடக பாணியாக ஆகிவிடாமல் இருக்க வேண்டுமே என்கிற கவலைதான். ஆகவே, என் பிரியமுள்ள சிநேகிதனே, here goes.

—ஒரு நிமிஷம், பாஸ்கர். நான் நல்ல தமிழ் எழுது கிறேன் இல்லை? எல்லாம் காலேஜில் உன் சிக்ஷைதான்!

பாஸ்கர்! நான் மகானில்லை. ஓ, உனக்கு அது தெரியும். ஒரே வார்த்தையில் சொல்லப் போனால், ஒண்ணு பாக்கியில்லை. ஆனால் எனக்கு எதிலேயுமே பிடிப்பு இல்லை. என் கோளாறே அதுதான். இதைவிட அது, அதைவிட எது என்று ருசி பார்த்துப் பார்த்தே, கிளைக்குக் கிளை தாவியே, எனக்கு எதிலுமே ஆழமான பற்று இல்லாமல் போய்விட்டது. பற்றற்றானின் தனிமை பயங்கரம், பாஸ்கர்!

என் பெற்றோர்கள், எனக்குச் சின்ன வயதிலேயே, மோட்டார் விபத்தில் இருவருமே மாண்டபின், nursery, nursing home, hostel, hotel, என்று வளர்ந்து இதற்குள் வங்கியின் trusteeship இல் விட்டுப்போயிருந்த என் சொத்து எக்கச்சக்கமாக வளர்ந்து, எனக்கு வயது வந்ததும் என்னிடம் ஒப்படைக்கப்பட்டதும், அதன்மேல் முதல் வெறி தணிந்த பின், அப்புறம் என்ன? extreme boredom தான். மாறுதலுக்கு மாற்று ஏதோ ஒண்ணு எனும் desperation, depression தான். எனக்கு discipline கிடையாது, எனக்கே தெரிகிறதே!

காலேஜிலிருந்தே என்னை அறியாமலே எனக்கு இந்தப் பார்வைதான் என்று எனக்கு இப்போ தெரிகிறது. அப்பவே உனக்கு நான் அப்பப்போ புத்தகம், நோட்புக், special fees என்று திருப்பித் தரமுடியாத கடன்களாக உதவி செய்தபோதிலும் எனக்கு உள்ளூர amusement தான். உன் நிலைமை, பாஸ்கர், பாவம், அப்போதிலிருந்தே, ஏன், எப்பவுமே சரியாக இருந்ததில்லை அல்லவா? என் பேப்பர்களை நீ தயார் செய்தாய், என் home work ஐ நீ செய்தாய். நீ எனக்கு ஒரு Sydney Carton ஆக இருந்தாய், பேரம் நல்ல பேரம்தான், இல்லையா?

ஆனால் பாஸ்கர், திவாகர் ஒன்றும் dull boy அல்ல. அதற்கென்ன, உன்மாதிரி தங்கப் பதக்கம் வாங்க முடியாது என்னால். என்னிடம் முயற்சி என்கிற பெயரில் உடலுக்கும் மனதுக்கும் வரவழைத்துக்கொள்ள உற்சாகம் மட்டும் இருந்தால், உன் தயவே எனக்கு வேண்டாம். ஆனால் அவ்விதமான முயற்சியே எனக்கு ஒரு bore. அதனாலேயே அதை நான் படவில்லை. எதிலுமே எனக்கு அலுப்பு. எலலாமே வசதியின் கோளாறுதான். வசதியே ஒரு பீடை.

'அப்படி உனக்குச் செல்வத்தின் பாரம் தாங்க முடியா விட்டால் வாரி வழங்கேன்! ஆஸ்பத்திரி, கோயில், அனாதை இல்லம், டொனேஷன்—என்ன இல்லை' என்கிறாயா? அங்கேயும் எனக்கு ஒரு fixation. தர்மம் செய்வதில் எனக்கு நம்பிக்கையில்லை. அழித்தாலும் அழிப்பேன், கொடுக்கமாட்டேன். என்னுடன் அது ஒரு கொள்கையாகவே ஆகிவிட்டது. சும்மாக் கொடுப்பதால் உண்மையில் சைத்தான் பட்டறையும், சோம்பேறிப் பண்ணையும், corruptionஉம்தான் வளர்கின்றன. நான் கண்மூடத்தான், ஒட்டுண்ணிகளும் பருந்துகளும் கழுகு களும், நீ குறிப்பிட்ட பெயர்களில் காத்திருக்கின்றனவே! ஒப்படைக்க என் உயிர் வேளையிலேயே என்ன அவசரம்?

'கலியாணம் பண்ணிக்கொள்ளலாம்' என்பாய். Enough. drop it.

அப்புறம் இன்னொரு விஷயம். இப்படி எல்லா மிருந்தும், எல்லாவற்றிலும் அலுப்புத் தட்டியவனிடம், தனியாக ஒரு குரூரம் வளர்கிறது. தான் இன்பம் காண முடியாமையால், பிறரைத் துன்புறுத்துவதில் ஒரு இன்பம். அதுவே ஒரு பொழுதுபோக்கு. அவனவன் ரத்தத்தைப் பரிசோதனை செய்தால், அதன் அணுக்களில், நீரோக் களும், கலிகுலாக்களும்தான் நீந்துகிறார்கள். இதயத்தின்

மர்ம அரங்கு Roman Arenaத்தான். மாறுதலாக வேறு ஏதேதோகூட இருக்கலாம். ஆனால் அவனவனுக்கு என்ன பார்க்கக் கிடைக்கிறதோ அதுதானே!

So! உன் கலியாணத்தின் ரிஸெப்ஷனுக்கு நான் வந்த போது—ஜானவாசத்துக்கே எதிர்பார்த்ததாக நான் வந்ததும் கோபித்துக்கொண்டாய்—நான் ஒரு ரோஜாப் பூவை, அதன் காம்பு ஒடியாமல், வெகு ஜாக்கிரதையாக, ஒரு மிகை மரியாதையுடனேயே உன் மனைவியிடம் சமர்ப்பித்தபோது, "ச் அனு, இவன்தான் திவாகர், என் ஆப்த நண்பன்" என்று நீ அறிமுகப்படுத்தினாலும், உன் முகம் விழுந்தது எனக்கல்லவா தெரியும்? உள்ளூர எப்படி அனுபவித்தேன் தெரியுமா? குறைந்தபட்சம் ஒரு ப்ரஷர் குக்கரேனும் எதிர்பார்த்தாய் அல்லவா? Oh! my secret laughter!

ஆனால் அனு, எவ்வித கல்மிஷமுமில்லாமல், புன்சிரிப்புடன், என் புஷ்பத்தை வாங்கிக்கொண்டு தலையில் சொருகிக்கொண்டதும்—நம்பினால் நம்பு, நம்பாட்டிப் போ—அதுவே ஒரு pleasure ஆக இருந்தது; Oh strange pleasure, இதுவரை எனக்குப் பழக்கமில்லாத ஒரு pleasure.

என் secret laughter இத்துடன் முடியவில்லை.

ஒரு பத்து நாள் கழித்து. மாலை, உன் வீட்டுக்கு வந்தேன். இதெல்லாம் உனக்குத் தெரியாததல்ல. ஆனால் எழுத்தில் இப்படி நினைவுகூட்டிப் பார்ப்பதில் ஒரு தனி கவித்வம், எனக்கே சொந்தமானதோர் சந்தோஷம். ஒரு புது dimension உணர்கிறேன்.

அனு நல்லாத்தான் டீ செய்கிறாள்.

என் பாக்கெட்டிலிருந்து ஒரு சின்ன சம்புடத்தை எடுத்து அனுவிடம் கொடுத்து—

"Press the button."

உள்ளே, கருநீல மெத்தையில், ஒரு ஜோடி தொங்கட்டான்கள். அனுவுக்குத் தோளுக்கு இறங்கக் கூடும். ஆனால், பாஸ்கர் உன் முகத்தைத்தான் ஓரக்கண்ணால் கவனித்துக் கொண்டிருந்தேன். ஆ! உன் கண்களில் என்ன 'குபீர்'—உன்மேல் தப்பே இல்லே பாஸ்கர், மனித எடையே அவ்வளவுதான். நான் ஏன் கலியாணம் செய்துகொள்ளவில்லை தெரிகிறதா?

'நிஜ வைரம்போல இருக்கே!' என்றாய்.

''Put it on, lady!'' அவசரப்படுத்தினேன்.

ஆனால் அனு, பெட்டியை உள்ளங்கையில் தாங்கிய படி, உதட்டில் புன்னகையின் நிழலாட, நகையைச் சிந்தித்துக் கொண்டிருந்தாள். விழிகளில் பெரும் ஆழம். அனுவுக்குக் கண்கள் + பாயின்ட். அந்த சமயத்தில் அந்த பாப்பாக்களுள் ஏதேதோ, ஏதேதோ நான் பார்த்திராத மீன்கள் நீந்துவதுபோல எனக்குப் பிரமை தட்டிற்று.

இதற்குள், என் கைக்கடியாரத்தில் வினாடிகள், நான் செவிக்கு வைக்காமலே, அவைகளின் நொடிப்புக் கேட்டது போல்—அதுவும் பிரமையா, நிஜமா?

''அனு, நான் மாட்டிவிடட்டுமா'' ஐயோ பாஸ்கரா! என்ன பரிவோ?

''Take it, take it!''

''போட்டுக்கோ அனு, திவாகர் என்னுடைய dearest friend''

Oh, my secret laughter!

அனு, ஒரு பெருமூச்செறிந்து, பெட்டியை என்னிடம் நீட்டினாள். மறுப்பில் தலையை ஆட்டினாள்.

''வாங்கிக்கொள் அனு, இதை உனக்குக் கொடுக்க எனக்குச் சக்தியிருக்கிறது!''

மீண்டும் தலையை ஆட்டினாள். அவள் புன்னகை ஆழ்ந்தது.

"உங்களுக்குச் சக்தியிருக்கலாம் கொடுக்க. ஆனால் வாங்கிக்கொள்ள எங்களுக்குச் சக்தி வேண்டாமா? தற்சமயம் நிச்சயமாக இல்லை. ரொம்ப thanks. உங்கள் டீ ஆறிப்போறது."

என் அனுபவத்தில் முதன்முறையாகக் கன்னத்தில் அறை தாங்கிக்கொள்வது சிரமமாகத்தானிருக்கிறது.

"நகையை வேண்டாமென்று சொல்கிற பொம்மனாட்டிகூட இருக்காளா?" என்றேன். பாதி கேலி, பாதி வெறுப்பு.

"ஏன், என்னைப் பார்த்தால் உங்களுக்கு எப்படிப் படுகிறது? கால்கட்டை விரலிலிருந்து மார்புவரை தன்னை ஒரு கண்ணோட்டம் விட்டுக்கொண்டாள். அது அவளுடைய கேலி. "இந்தாங்கோ, பத்ரம்" நகைப் பெட்டியை என் கையில் திணித்தாள் "வரேன், அடுப்பில் குழம்பு காயறது. இங்கேயே இன்னிக்குச் சாப்பிடுங்களேன். சுண்டைக்காய் வத்தல் குழம்பு. கருவடாம் பொரிக்கப்போறேன். ஓட்டலில் கிடைக்காது. உங்களுக்குத் தினம்தான் ஓட்டல் சாப்பாடு, இன்னிக்கு என் கைவரிசையைப் பாருங்களேன்!"

உள்ளே போய்விட்டாள்.

குழம்பு மணம் கூடத்தைத் தூக்கிற்று.

ஆனால் நான் ஏதோ சாக்குச் சொல்லிக் கழன்று கொண்டேன்.

அன்றுதான் உங்களிருவரிடையே முதல் தர்க்கமோ, பாஸ்கர்?

எனக்கும் அன்றிரவு சரியான தூக்கம் இல்லை, வெகு நேரம் படுக்கையில் புரண்டேன்.

அவளுடைய புன்னகை, பழத்துள் இறங்கும் கத்தி போல், d—n her!

எதிர்ப்பு எனக்குப் பழக்கமில்லை. ஆகையால் பிடிக்க வில்லை, கசந்தது.

But resistance is beautiful; and is a challenge.

அன்றிலிருந்து உன் வீட்டுக்கு வர ஆரம்பித்தேன். The challenge. பாஸ்கர், சவாலை ஏற்கணும், இல்லையா?

நெற்றியில, உழைப்பின் வேர்வைமுத்துக்கு இத்தனை அழகு இருக்குமா, என்ன? உழைப்பே அறியாத எனக்கு அது precious ஆகப் படுகிறது.

''எனக்கே வேர்க்கும் சுபாவம்.'' அவள் சிரிக்கையில் வலது கன்னம் குழிகிறது. அவள் கன்னங்களில், மூக்கு நுனியில், மோவாயில் ஆரோக்கியத்தின் எண்ணெய்ப் பிசுக்குப் பளபளக்கிறது.

''நான் கிராமத்துப் பெண். கிராமத்திலிருந்து போய்த் தான் காலேஜ் படித்தேன். தினம் பஸ். வீட்டில் எப்பவும் சுமைவேலை இருந்தபடித்தான். பெரிய குடும்பம். அதனால் வேலை செய்யாமல் இருக்க முடியாது. இங்கே என்னதான் இழுத்து விட்டுக்கொண்டாலும் என்ன சொப்பு வைத்து விளையாடுகிற மாதிரி—எதிரும் புதிரு மாய் இரண்டு பேருக்கு இருக்கிற வேலைதானே இருக்கும்! மிச்சப்போதுக்கு, கொட்டடா குடையடான்னு, பொழு தைச் சுமக்க முடியவில்லை! இம்சையாயிருக்கு. மத்தியான்னத் தூக்கம், பத்திரிகைகளில், பொம்மைப் பக்கங்களைப் புரட்டுவது. அக்கப்போர்—எல்லாம் இனி மேலதான் பழக்கிக்கணும்.'' மறுபடியும் அந்தச் சிரிப்பு.

''ஏன் நீயும் வேலைக்குப் போகலாமே. ஏற்பாடு பண்ணட்டுமா?''

"No. Thanks. வேலைக்குப் போவதில் எனக்கு நம்பிக்கையில்லை. அதற்கு உடல் வணங்கும் தன்மையும் எனக்குக் கிடையாது. வேலையிலிருந்து களைத்து வரும் ஆண்பிள்ளைக்குக் குளிர்ந்த தீர்த்தமேனும் கொடுக்கக் காத்திருக்க வீட்டில் ஒரு பொம்மனாட்டி வேண்டாமா?

"அப்போ கஷ்டப்பட்டு காலேஜ் படித்து, டிகிரி வாங்குவானேன்?"

'ஓ, அது கலியாணத்துக்குக் காத்திருக்கும்வரை, உருப்படியா ஒரு பொழுதுபோக்கு. வாய்ப்பாட்டு, வாத்தியம், the gentle arts எனக்கு வராது. அதனால் என்ன? இஷ்டப்பட்டால் ஒரு பொம்மனாட்டிக்கு வீட்டிலேயே எத்தனை பொழுது இருக்கு தெரியுமோ?"

"இந்த நாளில் இரண்டுபேர் சம்பாதித்துமே போதவில்லை என்பதுதானே பொதுவான புகார்? உனக்குத் தெரியாததல்ல" என்று முனகினேன்.

"அதனால்? பெண்டாட்டி பிள்ளையைக் காப்பாற்றுவது புருஷன் பாடு அதில் நான் ஏன் புகணும்? பெண்டுகளின் வேலை இன்னதென்று இயற்கையே கோடு கிழித்து விட்டிருக்கே! அதுதான் கிராமவாசத்தின் தத்துவம்— அல்லது கோளாறா?" இப்படிச் சொல்லி விட்டு அவள் உன்னைப் பார்த்த பார்வை...

பாஸ்கர், உன் மனைவியை நீ பார்க்க உனக்குச் சொல்லிக் கொடுப்பதன் அதிகப்ரசங்கித்தனம் எனக்குத் தெரியாததல்ல. அதற்குக் கண் வேண்டும். ஆனால் கண்ணுக்கு உனக்குப் பொழுதில்லை அதுவும் தெரிகிறது. எவனோ ஒரு மார்வாடியிடம் மாட்டிக்கொண்டிருக்கிறாய். இடம் மாறவும் உனக்கு மனம் இல்லை. Economics இல் இதை commercial inertia என்பார்கள். அவன் நன்றாய்த்தான் கவனித்துக்கொள்கிறான் என்று உன்

மனைவியும் உனக்குச் சிப்பக் கட்டுக் கட்டுகிறாள். இருந்தாலும் உன் யோக்யதைக்கேற்றபடி ஒரு நல்ல ஸ்தாபனத்தில்—உனக்காக இல்லாவிட்டாலும்—

யார் என்ன செய்தாலும், செய்யக் காத்திருந்தாலும், அதைத் தடுக்க, விதி என்று இருக்கத்தான் செய்கிறது போலும். உன் விதியின் பெயர் அனு. உனக்கு உதவி செய்யவும் என்னை விடமாட்டாள். அவளுடைய சகஜ பாவம், புன்னகை, சிரிக்கையில் மூக்குத்தண்டின் சுருக்கத்தின் பின்னால் ஒரு அழுத்தம், இறுமாப்பு, அவளுக்கென்று ஒரு குணம்—எனக்குத் தெரிகிறதே! என்னிடமிருந்து ஒரு தித்திப்புப் பண்டப் பெட்டி, கேக் பெட்டி, பழக்கூடை—ஊஹூம், "No Thank you!" ஆனால் வரும்போதெல்லாம், நான் டிபன், சாங்கோபாங்கமா சாப்பாடு—நானும் சாப்பிடுகிறேன். என் ரோகம் எங்கே போச்சு? The Witch!

இப்ப எல்லாம் உன் வீட்டுக்கு வராமல் முடியவில்லை. ராச்சாப்பாடு ஆகி, அவளுக்குக் காரியம் முடிந்து, மொட்டை மாடியில் நம் மூவர் பேச்சு, அதற்காகவே வருகிறேன். The அனு magic. வெளிக்குத் தெரியாமல், அரித்து அரித்து, உள்ளே சந்தனம், ஜவ்வாது, அத்தர், குங்குமப்பூ கமாளிதம். Oh God! என்னில் நிகழ்ந்துகொண்டிருக்கும் ரசாயனம் எனக்கும் தெரியாமலே...அந்தப் பேச்சு எனக்கு வேண்டியிருந்தது. உள்ளே ஏதேதோ ரணங்கள் ஆற்றும் தைலம் போன்ற பேச்சு.

பாஸ்கர், அனு, ஏதோ பேரழகு என்று சொல்லிக்கலாமே தவிர, அனு அழகு அல்ல. அவள் நெற்றி மேடு, பெண் பிள்ளைக்கு அதிகம். வாய் வார்ப்பு இன்னும் சற்று சின்னதாயிருக்கலாம். உயரம் இன்னும் ஒரு அங்குலம் கூடணும், She should watch her figure. A bit on the buxom side, பிறத்தியான் பெண்டாட்டியை—அதுவும்

அங்க விமர்சனம்! என்ன தைரியம்! என்கிறாயா? No, no, my son, She is not my type of sex, I would fall for. How to convince you, it is so boring, because you are boring. அதனால்தான் இந்தக் கடிதமே எனக்குக் கொட்டி ஆற்றிக்கொள்ள ஒரு களம் வேண்டாமா?

ஆனால் ஒரு radiance, பாஸ்கர், உணர உணர விரிவாகிக்கொண்டே போகும் ஒரு ஒளிப்ரபை. அதன் நடுவில் அவள். அவளைப் பார்க்கும்போதும், கேட்கும் போதும், கவனிக்கும்போதும் ஏதேதோ மறந்துபோன தெல்லாம், இந்த ஜன்மத்தில் மட்டுமல்ல. ஜன்மேதி ஜன்மாவின் நினைவுகள், நிழல்கள் ஆடுவதுபோல், ஏதேதோ பழங்கணக்குகள் பிரிவதுபோல்— என்ன நினைவு, என்ன கணக்கு? Ask me another. ஆனால் இந்தப் பழைய பாடத் திருப்பலில், சிக்குப் பிரிதலில் ஒரு இதவு, ஒரு கலிக்கம். அதனால் மனசு லேசு, அதுவே ஒரு புதுமை, ஒரு adventure.

அன்று தன் தாத்தாவையும் பாட்டியையும் பற்றிச் சொன்னாளே, நினைவிருக்கிறதா? அவள் சொன்னதை விட, அவள் பேசினது இருக்கே, இன்னமும் அதன் wonderment எனக்கு ஓயவில்லை. ஆனால் ஒண்ணு நான் ஒப்புக்கொள்ளணும். சிந்திக்க, ஆச்சரியப்பட எனக்கு நேரம் இருக்கிறது. நினைத்து நினைத்து என் தன்மையின் உண்மையின் கவிதையும் என் சிந்தனையுடன் கலந்த குழைவுச்கு ஒரு தரிசன ருசி வந்துவிடுகிறதோ?

அனு பேசுகிறாள்:

'தாத்தாவையும் பாட்டியையும் பார்த்த நினைப்பு எனக்கில்லை. நான் குழந்தையாம். ஆனால் என்னில், பாட்டியை அப்படியே உரிச்சு வெச்சிருப்பதாகப் பார்த்தவா சொல்றா.

ஒருநாள் தாத்தா விடிகாலை, வெள்ளி முளைச்ச வேளைக்குத் தன் பங்கு ஆற்றுப் பாய்ச்சலை மேலத்தனம் பண்ணப் போனவரைப் பத்து மணி வேளைக்கு நாலுபேர் சுமந்து வந்து, கூடத்தில் விசுப்பலகையில் கிடத்தினார்கள். கழனிக்கட்டுச் சேறில், தன் நினைப்பற்றுக் கிடந்தாராம். Stroke. அந்த நாளில், கிராமத்தில் அதற்கென்ன பாஷையோ? ஒருநாள் இரண்டு நாள் கோமா இல்லை. மூணு வருஷம்; என்ன சொல்றேன்?

தாத்தா வருஷத்துக்கு ஆறு தெவசம் பண்ணுவாராம். அத்தனையும் நின்றுபோய், பிதுர்க்கடன் ஏறிப்போச்சு. இப்போ எனக்குத் தெரிஞ்சே கிராமத்தில் 'துபாய் போறேன்' 'ஸவுதி போறேன்'னு, அங்கெல்லாம் எந்த சாஸ்திரி கிடைக்கிறான்? தாகத்துக்கே பெட்ரோல்தான். காக்காய்க்குப் பிண்டமானும் வைக்கலாம் என்றால் அங்கே காக்கா இருக்கோ? எனக்குத் தெரியாது. ஓ, அங்கங்கே problems இருக்கு. ஆனால் அதுக்கெல்லாம் கிராமத்துலே பயப்படுவா. கிராமத்துலே வளர்ந்தவள் தானே நானும்! நானும் பயப்படறேன். எல்லாமே பெரியவாள் காட்டற பூச்சாண்டின்னு தள்ளிடற அளவுக்கு நமக்கு முழுக்கத் தைர்யம் இல்லியே; உப்பும் தணலோடு ஆற்றில் கரைக்கற அஸ்தியும் சேர்ந்து, அதன் பேர் பயமோ, நம்பிக்கையோ, பரம்பரையா உடம்பில் ஊறிப்போயிருக்கே!

பாட்டிக்கு உடம்பிலே ஆயிரம் கோளாறு. கேட்கப் போனால் தாத்தாவுக்கு மேலே. தாத்தாவுக்கென்ன, அவர் விழுந்தது ஒண்ணோடு சரி, பாட்டிக்கு. P.B., சர்க்கரை, உப்பு, ulcer, கண்ணில் சதை, கீல்வாயு, ஆஸ்துமா, பல்வலி, ஆனால் முக்கிண்டே முனகிண்டே வளைய வளைய வந்து கொண்டிருந்தாள். சரீரம வேறு 'பொந்தகா'. ஆனால் தாத்தா மாதிரி உயிர்ப்பிணம் ஆகல்லியே!

தாத்தாவும் பாட்டியும் அப்படி ஒண்ணும் ஒத்துமையான தம்பதியில்லே. ஒரு சமயம், ஏதோ மனஸ்தாபம், மூணு வருஷம் பேசாமலிருந்தாளாம். **Can you imagine?** பேச்சு மட்டும்தான் இல்லை. மற்றபடி எல்லாம், வழக்கம் போல், கடிகாரக் கணக்கில்... தாத்தாவுக்குத் தினப்படி பூஜா திரவியங்கள், சமையல், பரிமாறல், வஸ்திரமடி. மத்தியான ஆகாரம், ராத்ரி பால், படுக்கை—எல்லாம் மை போட்ட சக்கரக்கணக்கில் நடந்துகொண்டிருந்தது. தாத்தா ஒரு ஜாடைகூடக் காட்ட வேண்டாம். காட்டவில்லை. தாத்தாவின் வயிறு, நாக்கு, பழக்க வழக்கங்கள் எல்லாம் பாட்டிக்கு அப்படி ஒரு அற்றுபடி. தாத்தாவுக்கு ஒரு தலைகூட வலிக்காது. பாட்டிக்கு என்னவாக உடம்பு இருந்தால்கூட தாத்தா திரும்பி நின்னுகூடப் பார்க்க மாட்டாராம். **'My pound of flesh'** மனுஷனாம்.

அப்புறம் எப்படித்தான் சமாதனமானாள்னு கேட்பேளே! ஒ சிராத்தத்தின்போது, ஔபாசனத்துப் புல் பிடிக்க, சமையல்கட்டில் வேலையாயிருந்த பாட்டியைக் கூப்பிடும்படி ஆயிடுத்தாம். மாமியைக் கூப்பிட சாஸ்திரிகள் மறுத்துவிட்டார். 'இந்த நியாயப்படி நித்யானுஷ்டான கர்மாவுக்கு உங்கள் தர்மபத்தினியை நீங்கள் அழைக்காமல், என்னவோய் சிரார்த்தம் வேண்டிக் கிடக்கு?' சாஸ்திரிகள்தான் புதுசோ, இல்லை இரும்புத் தலையனோ? தெரியல்லே. இல்லை, இதுவே ஒரு சூழ்ச்சியோ? ஆகவே கூடத்திலிருந்து தாத்தா பாட்டியைக் கூப்பிடும்படியாகிவிட்டது. கூப்பிட றதாவது. ஒரு உறுமல். அந்த நாள் பாஷையே அதுதான் உறுமும்படி ஆகிவிட்டது.

அதற்கே பாட்டி, "உங்கப்பாதான் முதல்லே பேசினா"ன்னு பீத்திப்பாளாம். உடனே அதை ஒட்டி இன்னொரு சண்டை."

அப்போது நம் மூவரின் ஒன்றான சிரிப்பு, இப்பக்கூட நினைப்பில் ஒலிக்கிறது!

Freud வந்தபின் இதை என்ன சொல்வான்? "Sex war on a grand scale" என்பானா? Love-hate, hate-love theory ஐச் சேர்ந்ததா?

மனுஷன் ஒற்றுமை வேற்றுமை என்கிறோமே, ஆனால் உண்மையில் இரண்டுக்கும் என்ன barometer? திவாகர் நீங்கள் சொல்லமுடியுமா? மனது என்று ஒன்று இருக்கிறது. அதன் ஓட்டம் என்று ஒன்று இருக்கிறது. அந்த ஓட்டத்தின் படு ஆழத்தின் அந்தகாரத்திலிருந்து எழுந்த சுழிப்புகளின் வெளித்தெரிந்த மட்டம்தானே நாம் போட்டுக்கொள்ளும் சண்டைகள், பண்ணிக் கொள்ளும் சமாதானங்கள், காரைப் பூச்சுக்கள், மீண்டும் வெடிப்புகள்—என்கிற மேலொட்டின வித்தியாசங்கள்! நாமே அங்கிருந்து வந்தவர்கள்தானே—the dark eternal womb of creation என்பது மனம் அல்லாமல் பின் என்ன?'

அவள் அப்படிச் சொன்ன அப்பவே, ஒரு நக்ஷத்ரம் உதிர்ந்தது Thrill அனு, நீயா கிராமத்துப் பெண்? சட்டி, பானை தேய்க்கத்தான் எனக்கு இஷ்டம் என்று சொல்லிக் கொள்பவள் நீயா அனு? நெற்றிக் கண்ணைத் திறந்து காட்டுவதுபோல், நக்ஷத்திரத்தை உதிர்த்துக் காட்டு கிறாயே, நீயா அனு? நீ பயத்துக்கு உரியவள், ஹூம்—

"So!" அனுவின் பெருமூச்சு. பேச்சினும் பேசும் பெருமூச்சு. தாத்தாவுக்கும் பாட்டிக்கும் மறுபடியும் இப்போ ஒரு கட்டம் வந்துவிட்டது. நாட்டுப் பெண்கள் நாலுபேர் வந்தாச்சு. ஆனாலும் சிசுருஷையெல்லாம் பாட்டிதான். மத்தவாளை விடவில்லை. ஏற்கனவே புனர்ப்பாகம். அதை இன்னும் மையா, புளிக்காத மோரிலோ, பாலிலோ கரைச்சு திப்பியை எறிஞ்சுட்டு, நினைப்பில்லாத வாயில், சிறுகச் சிறுகச் செலுத்தப்

பொறுமைக்கு மத்தவாளை எப்படி நம்புவது? தவிர அப்பப்போ துணி மாத்துவது, உடல் சம்பந்தமான காரியங்கள் வேறேயிருக்கே! ஒரு நாளா, இரண்டு நாளா, ஒவ்வொரு நாளா மூன்று வருடங்கள்...

ஆனால் இப்போ ரெண்டுபேருக்கும் வயசு என்ன ஆச்சு? தாத்தாவுக்குப் படுக்கையிலேயே கரைச்ச சாதத்திலும், கஞ்சியிலும், உடம்பு அன்னாடம் இம்மியென ஒடுங்க ஆரம்பிச்சாச்சு. அதைப் பார்க்கப் பார்க்கப் பாட்டியின் உடல் கோளாறுகள் அதிகரிக்கத் தலைப்பட்டன.

கூடவே எல்லாவற்றிற்கும் மேல் ஒரு திகில். நெஞ்சில் எலி பிராண்டல். அடிக்கடி அவளை அறியாமலே கை, தாலிச் சரடைத் தொட்டுக் கொள்ளுமாம். பழுத்த சுமங்கலி. வாய்விட்டுச் சொல்லிக்கிற விஷயமா? மானத்தின் ரூபங்கள் எப்படி எப்படியெல்லாம் எடுக்கின்றன? இது சமுதாய எடைமானம் இல்லை. வேறு ஏதோ ஒண்ணு, அவாவாளுடைய சத்தியத்தின் எடை. அவாவாளுக்கு மட்டும்தான் தெரியும் போல இருக்கு. சந்திரமதி தாலி' Spellbound. But not Hitchcock. சொல்லே மந்திரமடா அது இது.

''ஆகவே ஒரு வெள்ளிக்கிழமை. எண்ணெய் ஸ்னானம் பண்ணிண்டு, பட்டு உடுத்திண்டு, குத்து விளக்கை ஏற்றி நமஸ்காரம் பண்ணிவிட்டு, பாட்டி, விசுப்பலகை அடியில் தலைப்பை விரித்து, முழங்கையே தலைக்கு உயரமாகப் படுத்துவிட்டாள். பாட்டி தினம் எங்கே படுத்துண்டிருந்தாள்னு அசட்டுக் கேள்வி கேட்காதீர்கள். இது தனிப்பட்ட படுக்கை—அல்ல, ஸமிக்ஞை, ''அப்புறம் எழுந்திருக்கவேயில்லையா, குளிக்கலியா, சாப்பிடல்லியா வளைய வரல்லையா?'' Don't be silly, எனக்குக் கோபம் வரது. எல்லாம் முறைப்

படித்தான் நடந்துகொண்டிருந்தது. தன் கையாலேயே தாத்தாவுக்குப் பணிவிடைகள் உள்பட. ஆனால் அன்று எட்டாம் நாள் வெள்ளிக்கிழமை, தை, பகுளபஞ்சமி தினத்தன்று. விடியற்காலை வேளையில் பாட்டி, இந்த உலகத்தை நீத்தாள். சரியாக இரண்டு மணி நேரம் கழித்து, தாத்தாவின் உயிரும் பிரிந்தது.

ஒரே சிதையில் தகனம். விஷயம் காட்டுத் தீயாகப் பரவி, ஊரும், சுற்றுவட்டாரமும் சமுத்ரம் புரண்டு, மயானம் கொள்ளல்லே. தேர்த்திருவிழா மாதிரி 'ஜேஜே'. அந்தப் பேச்சு ஆறு மாசத்துக்கு. அதன் தஹிப்பு தணியல்லே. வீடு யாத்திரை ஸ்தலாமாப் போச்சு.

இந்த விசுப்பலகையா, இதன் அடியிலா, இங்கேயா?' நமஸ்காரம் பண்ணி, கொண்டுவந்த தேங்காயை உடைத்து, வெற்றிலைப்பாக்கு மஞ்சளோடு மடியில் கட்டிக்கொண்டு, தொழுதுவிட்டுப்போன பெண்டிர் எத்தனைபேர்? அந்தக் காலம், சொன்னாலும் இப்ப நம்புவாளா?

''என் பாட்டி இருந்தாளே—அல்லது இருக்காளேயா? எதைச் சொல்றது? பொல்லாத பாட்டி. மஞ்சள் குங்குமத்தோடுதான் முந்திண்டுடணும்னு ஒரே எண்ணம், ஒரே சித்தத்தில், she simply willed her death into coming. இந்த நாளில் இது நடந்ததுன்னா. அந்த நாளில் ஒருத்தி, புருஷன் உயிரை யமனிடமிருந்து பிடுங்கிண்டு வந்தாள். ஒருத்தி தனக்குப் புருஷன் தக்கணும்னு உலகத்துக்கே விடியாம இருக்க அடிச்சுட்டான்னா ஏன், நடந்திருக்காது? ஏன் நம்பக்கூடாது? ஆயிரம் காலேஜ் குமாரியானாலும் நான் நாட்டுப்புறம்தானே!' சிரித்தாள், கொல்லும் சிரிப்பு. ''போனவா போனாலும் இருக்கறவா இருக்கத்தானே இருக்கா, எல்லாம் உடன்கட்டை ஏறிடறாளா?'' என்று என்னதான் பகுத்தறிவுவாதம் பண்ணினாலும்,

"ஆமாம், எல்லாம், 'காக்கை உட்காரப் பனம்பழம் விழ' இப்படியும் ஒரு வாதம் உண்டு. ராமாயணத்திலேயே ஜாபாலி இருந்திருக்கார்— அதுவும் உண்மைதான், எதுவும் உண்மைதான் ஆனாலும்—

பதிம்தேஹி பதிம்தேஹி பதிம்தேஹி பதிம்தேஹி பதிம்தேஹி பதிம்—

வானம் குமுறிற்று. அப்பத்தான் நானே மீண்டேன். எப்படி, இப்படி எப்போ, இருண்டது?

முகம் தெரியா இருளிலிருந்து அசரீரியாக அவள் குரல் பிரிந்து வந்தது.

"ஒண்ணு தெரியறது. முடியறவாளுக்கு எப்பவும் முடியும். முடியறவாளுக்கும் காலத்துக்கும் சம்பந்தமில்லை."

தூறல்.

"புண்ணிய வசனம் சொன்னாலே மழை வரும்னு சொல்லுவா."

அவசரமாக எழுந்து கீழே இறங்குவதற்குள் மழை இறங்கிவிட்டது. நிமிஷமா கொட்டோ கொட்டு.

"திவாகர் நீங்கள் ரூமுக்குப் போக முடியாது." ஒரு விரிப்பையும் தலையணையையும் கொணர்ந்து கூடத்தில் போட்டாள். "சோபாவில் புரள இடமில்லை. உடம்பு வலிக்கும். Goodnight!"

ஆனால் தூக்கம் வரவில்லை. ஏதேதோ யோசனைகள், ஆனால், பிடிபடவில்லை. ஏதோ வகையில் நான் உள்ளூர கிடுகிடுத்துப் போயிருந்தேன்.

நான் லக்ஷ்மணக் காவல் புரிந்துகொண்டிருக்கிறேன். ஆனால், பாஸ்கர், நான் உன்னைவிட ஓரிரண்டு வயது மூத்தவனில்லை? எனக்கு என்ன நேர்ந்து கொண்டிருக்கிறது?

எழுதி எழுதிக் கை வலிக்கிறது. கொஞ்சம் off.

அறைக்கு வெளியே மொட்டை மாடிக்கு வந்தான். புகையை இழுத்து மார்புள் தங்கவைத்து, கொஞ்சங் கொஞ்சமா 'புக் புக்' வெளியே விட்டதும், அம்மாடி! என்ன சுகம்! வேறு சமயம் இந்நேரத்துக்கு ஒரு பாக்கெட் காலியாகியிருக்கும். எழுதுவதே ஒரு discipline போல இருக்கே!

அற்புதமான இரவு. எட்டித் தொட்டுவிடலாம் போல் வான்கவானில், ஒரு பூப்பாரம் கட்டவிழ்ந்து சரிந்தது போல், ஒரே நக்ஷத்ரக் கொள்ளை. 'லேசான ஒரு 'கம்' கூட. உண்மையிலா. அல்லது மனம் மனதை ஏமாற்றா?

இந்த நக்ஷத்ரங்களில் எது எனது? இருபத்தி ஏழு அற்ற மற்றதெல்லாம் அநாமி—நானும் ஒரு அநாமி. பின் இதுவரை என்ன சாதித்தேன்? புஸ் புஸ் புஸ்—களிமண் பட்டாஸ். நான் செத்தால் எனக்காக அழ, அச்சாரம் கொடுத்து, அமர்த்தியாகணும், என்ன தமாஷ்!

இந்த ப்ரம்மாண்டமான தேன்கூடில், என்னைப் பெற்றவர்கள் எங்கிருப்பார்கள்? எனக்காகக் காத்துக் கொண்டிருப்பார்களா? அல்லது மீண்டும் தங்கள் தனித் தனிப் பிறவிகளையெடுத்துத் தங்கள் தங்கள் தேன்களைத் தேடிக்கொண்டிருப்பார்களா? அங்கு போயும் என் தனிமையின் குளிரில் வெடவெடத்துக் கொண்டு, அவர் களுக்காகக் காத்துக்கொண்டிருக்கணுமா?

அனுவின் பாட்டியும் தாத்தாவும்—No. தங்கள் வளையில் பத்திரமாக, கதகதப்பாக, அடக்கமாக அடங்கி யிருப்பார்கள். அவர்கள் இனி தேன் தேட வேண்டாம்.

அனு—அவள் **Queen Bee.** அவளுக்கே தெரியும். தெரியுமோன்னோ? ஆனால் அனுபற்றி எதுவும் சொல்ல முடியாது. எப்படியிருந்தால் என்ன, என்னைக் கொட்டி

விட்டாள். வலி தாங்க முடியல்லே. But how wonderful! வயலினில் எஃகுத் தந்தியில், பஞ்சமத்திலும் அதி பஞ்சமம் சூக்ஷ்ம பஞ்சமம் என வலி தற்சமயம் அந்த ஸ்தாயியில் தான் தெறித்துக்கொண்டிருக்கிறது. போதாது. சாக்ஷாத் கார பஞ்சமம் அதாவது அது அதுவேதான். அதற்குமேல் கிடையாது. வேறும் கிடையாது. அங்கு சேர்ந்துவிட்டால் அதற்கு மேலும் நோக இடமில்லை அல்லவா? ஆனால் அப்படி ஒன்று இருக்கிறதா? இது சங்கீத பாஷை அன்றோ? ஆனால் இதற்கு music தெரியத் தேவையா? இசை ஒரு கலை எனும் பதவிக்கும் முன்னால், அதுவே வாழ்வின், அடிப்படைத் தன்மை என்று சொல்வது உண்மைக்கு இன்னும் நெருக்கமாகும் என்று நினைக் கிறேன்.

''அழியமாட்டேன். புதையமாட்டேன். சமயங்களில் என்னை உனக்கு ஞாபகமூட்ட புதைவினின்று வெளிப் படுவேன்.''

கண்கள் பெருகின.

Ecstasy. ஆயிரம் ஸிகரெட், ஹஷீஷ் இதற்கு ஈடாமோ?

சிகரெட்டை எடுத்து, பற்றவைக்குமுன், நுனியை இடது புறங்கைமேல் தட்டினவன், என்ன தோன்றிற்றோ, அப்படியே எறிந்துவிட்டு உள்ளே வந்து, மீண்டும் மேசைக் கெதிரே, மீண்டும் நாற்காலியில்—

சொச்சத்தை எழுதித்தான் ஆகணுமா? பிரியமுள்ள சினேகிதனுக்கு—உண்மையில் இந்தக் கடிதம் உனக்கா? இல்லை அவளுக்கா? No Wrong again. உண்மையில் எனக் கல்லவா? அப்போ இது அவசியம்தானா? why not? இது ஒரு சுய கணிப்பு அல்லவா? Discovery of me. அதில் ஒரு சந்தோஷம் இருக்கத்தான் செய்கிறது.

No, அந்த trend கலைஞ்சுபோச்சு. அதனாலும் என்ன? ஒவ்வொரு Mosaic detailஐயும் ஆராய்வதானால் நேரம்

எங்கே? திடீரென எனக்கு நேரம் குறுகிவிட்டதாக ஒரு உணர்ச்சியா, உணர்வா? So immediately to the turning point.

அன்று மாலை, டெலிபோன் அடித்து எடுத்ததும்,

''மிஸ்டர் திவாகர்?'' அனு. அதுவே ஒரு ஆச்சரியம்.

''என்ன அனு, ஏது இந்த கௌரவம்?''

''அவருக்கு ஜுரம், நினைப்பே இல்லை. திவாகர், வாங்கோளேன்!''

அனு கலங்கும்படி ஆனால், serious தான்.

டாக்ஸி பிடித்து, கூடவே டாக்டரையும் பிடித்து அழைத்துக்கொண்டு—(நான் ஏன் கார் வைத்துக்கொள்ள வில்லை? கேட்கவில்லையா? அது ஒரு நியூசென்ஸ். அப்படி எனக்கென்ன Social activities, engagements தட்டுக் கெட்டுப்போகின்றன?)—உன் வீடு சேர்ந்ததும், தட்டாமலே கதவு திறந்தது. அனு காத்திருந்திருக்கிறாள். உள்ளே வந்ததும்,

கட்டிலில் நீ கிடந்த நிலை கண்டதும் எனக்கே 'திக்' கென்றது. கண் அரைக்கண். உதட்டோரம் வழிந்து காய்ந்த எச்சில் இன்னும் வழிந்துகொண்டிருந்தது. பரீசீலனையில் டாக்டர் உன் கையைத் தூக்கினால், அது தன் இயக்கம், சுரணையின்றி பொட்டென்று விழுந்தது. இமைகளைத் தூக்கி, டார்ச் அடித்தால், விழிகளில் சுணக்கம் காணோம். மார்பின் அந்த மிதப்பு தெரியாவிடில், நீ பச்சை மூங்கிலுக்குத்தான். என் ஜோக் சமயமாயில்லே. ஸாரி. நான் ஜோக் அடிக்கவில்லை. முகமும் மார்பும் நெருப்புச் சிவப்பு. ஜுரம் மழுவாய்க் காய்ந்தது.

மூவரும் உன்னையே பார்த்தபடி உன்னைச் சூழ்ந்து மோனத்தில் சமைந்து எந்நேரம் நின்றோமோ?

"Some brain fever போலத் தோன்றுகிறது. எப்படி இவ்வளவு சுருக்க develop ஆச்சு? என்ன நேர்ந்தது?"

"தெரியல்லே டாக்டர். டெஸ்கில் எழுதிக்கொண்டிருந்தவர், திடுக்கினு பக்கவாட்டில் சாய்ஞ்சவர் நாற்காலியையும் தன்மேல் தள்ளிக்கொண்டு விழுந்துட்டாராம். மூணு நாளா லேசா ஜுரம்தான் அத்தோடு நடமாட்டம். ரெண்டு நாள் லீவு போட்டுட்டு வீட்டில் இருங்கோளேன்னு சொல்லிப் பார்த்தேன். 'Account-closing, எல்லாம் ஜலதோஷ ஜுரம்தான், போயே ஆகணும்'ணுட்டார். பிற்பகல் மூணு மணி வேளைக்கு, வண்டியிலிருந்து ரெண்டு பேர் தூக்கிண்டு வந்து படுக்கையில் கிடத்தினபோதே நினைப்பு இல்லை."

"ஹூம்—உள் ஜன்னி. ஆஸ்பத்திரிக்கு உடனே remove பண்ணியாகணும், திவாகர். டாக்ஸியை அனுப்பிச்சுட்டேளா? No. இங்கிருந்து G.H. 25 கி.மீ தாங்குமா? இந்த நிலையில், வழியில் ஏதானும் ஆச்சுன்னா?" அவருடைய உரத்த சிந்தனை வயிற்றில் புளியைக் கரைத்தது.

"He should be touching 108. We will get some ice and rub him. இங்கே, நம் அவசரத்துக்கும் தேவைக்கும் கிட்ட ice கிடைக்காது. மருந்து, ஊசி? No, I won't touch him now. The crisis must pass. அப்பப்போ எனக்கு போன் செய்யுங்க. ஒரு பன்னிரண்டு மணிவாக்கிலே வந்து பாக்கறேன். ஏம்மா உங்க வீட்டு மனுஷா, அவங்க வீட்டு மனுஷா? எல்லாரும் ஊரிலேயா? நெனைச்சேன். இந்த சமயத்திலே துணைக்காச்சும் பக்கத்திலே ஆள் இல்லாட்டி கஷ்டம் தான்—"

அவர் போனபிறகு ஓரக்கண்ணால் கவனித்தேன். ஒரு தீர்க்கம் தவிர, அந்த முகத்தில் ஏதும் படிக்க முடியவில்லை. அது கவலையா, பயமா, சொல்ல முடியவில்லை.

Damn her! மிதந்து செல்லும் பனிமலையில் தெரிவது அதன் நுனிதான். மலையின் உயரமும் அகலமும் கடல் ஆழத்தில் எம்மட்டோ? அப்பத்தான் குளித்தமாதிரி, ஒரு freshness அவளிடம் திகழ்ந்தது.

The Queen Bee.

"உட்காருங்கள், திவாகர், எந்நேரம் நிற்பீர்கள்? Coffee? Tea?"

அவள் சமையலறைக்குப் போனாள். உன்னைப் பார்த்தேன். நீ, நான், அனு இனி ராப்பூரா தனி. இப்படி உன்னோடு இருக்கப் பிடிக்கவில்லை. எந்த சங்கட சமயத்தையும் சந்திப்பதில் மனிதனுக்கு விருப்பம் கிடையாது. அடிப்படை வேறென்ன, பயம்தான். ஆனால் இவளைத் தனியாக விட்டும் போக முடியாது!

கைக்கு ஆவி பறக்கும் கோப்பையுடன் அனு வந்தாள். அவளுடைய ப்ரசன்னமே எனக்கு மாருதம் வீசினாற்போல் ஒரு தென்பாய் இருந்தது. கப் என் கையில் மாறுகையில் கவனித்தேன். நகக் கணுக்களில் என்ன ஆரோக்கியமான ரோஜாத் திட்டு! சுண்டு விரலிலும், அடுத்ததிலும் ஒரு செப்பு மோதிரம். இரண்டு கிராம் பொன் தேறாது. ஒரு நெளி. நெளியில் பதித்த கற்கள். கண்ணாடியென்று காணக் கண்ணாடி வேண்டாம். கட்டை விரலில் சுழி. ரேகை அடுக்கில் தனித்தனியாக எண்ணிவிடலாம்.

அந்த ஸேட்டின் புடவை அவள் நடமாட்டத்திற்கு ஒரு புனிதத்தனத்தைத் தந்தது. கூந்தல் முடிச்சில் சொருகித் தொங்கும் ஜாதிமல்லிச் சரத்தினின்று, திடீர் திடீர் 'கம்'.

இதுபோன்ற நுணுக்கங்களைக் கவனிக்க, தரிசிக்க இதுதான் சமயமா? ஆனால் அது என் இஷ்டமில்லையே! ஆனால் அவை இப்பத்தானே எனக்குத் தென்படுகின்றன!

அதுவே ஒரு விபரீதம்தான். நேரத்தின் ப்ருகடை முறுக்கேறியிருந்தது. பின்! இன்னமும் ஏறப்போகிறது. உள் பீதியினால்தான் அவளுக்கு இந்தத் தனி ஒளி:

Stroke பாஸ்கர்? பக்கவாதத்தில் கொண்டு போய் விடுமோ?

Typhoid? ஆனால் அது இப்படித் திடீர் மூட்டமாய்க் கவியுமோ?

Typhus? நம் ஊரில் சகஜமாக இது கிடையாதே!

மெனஞ்சிட்டிஸ்?

எனக்குத் தெரிந்த பெயர்களை உதிர்த்து, என் அசடு தான் அம்பலமானது எனக்கே தெரிகிறது. ஆனால் இடம், பொருள், ஏவல், இங்கிதம் இன்றி, எந்த இடத்திலும், எப்படியும் தன்னை ஸ்தாபித்துக் கொள்வதில்தான், மனிதனுக்குக் குறி. அதுவும் காரணம் பயம்தான். தன் அநிச்சயத்தின் பயம், சர்வம் பயமயம் ஜகத்.

இருவரும் கட்டிலின் இரு பக்கங்களில், எதிருக் கெதிராய் உட்கார்ந்திருக்கிறோம்.

சுவர்க் கடிகாரத்தில், முட்கள் இரக்கமற்ற தங்கள் மாறாக்கதியில் சேர்ந்தவண்ணம், காலத்தை தன் அதமத் துக்குப் பொறுத்த அளவில் தனித்தனித் தெறித்து பெரிது பெரிதாக அளந்துகொண்டிருக்கின்றன.

நாங்களும் பொய்.

நீயும் பொய். உன் லயத்தில் உன்னை ஏமாற்றிக் கொள்ள எங்களைப் படைத்தாய்.

பொய் படைத்த பொய்மேல்பொய், ஒன்றையொன்று விழுங்கிக் கொண்டிருக்கிறோம்.

மணி எட்டு, ஒன்பது, பத்து என்பதில் என்ன தென்போ?

நடப்பது நடந்து கொண்டேயிருக்கிறது. நடப்பது தான் நடக்கப்போகிறது.

உன் காய்ந்த உதடுகளை அவ்வப்போது ஈரத் துணியால் துடைக்கிறாள்.

உன் நிலையில் எந்த மாறுதலும் இல்லை.

டாக்டருக்குப் போன் செய்ய என்ன இருக்கிறது? உண்மையில் நாங்கள் சொல்ல வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறாரோ? அவருக்கு ஏற்கெனவே தெரிந்து விட்டதை நாங்களே நிதரிசனத்தில் தெரிந்துகொள்ள இப்படி ஒரு வழி.

கட்டையாக் கிடந்தபடி பாஸ்கர், என்ன பாடு படுத்து கிறாய்?

மணி பத்து, பதினொன்று...

எனக்குப் பசியென்று தெரியவில்லை. அவளும் அது பற்றி ஏதும் முற்படவில்லை.

லேசான குளிர் ஒன்று தெரிந்தது. என்னையறியாமலே சிலிர்த்துக்கொண்டேன். ஆனால் இது பனிக்காலம் அல்லவா! ஆனால் இப்போல்லாம், எதுதான் ரீதியில் நேர் கிறது? தொலை தூரத்தில் எங்கோ மழை பெய்து கொண்டிருக்கிறது.

ஜன்னல்கதவுகள் படபடவென அடித்துக்கொண்டன. அனு எழுந்துபோய் அவைகளை அழுந்த மூடி, கொக்கி களை மாட்டிவிட்டு வந்தாள். உடனேயே வாசற்கதவைத் தட்டும் சத்தம். நான் எழுந்தேன்.

''வேண்டாம்'' கட்டளையில் அவள் குரல் கணீர்.

''ஒரு வேளை டாக்டர்—''

''அது டாக்டர் இல்லை.''

பின்னே யார்? ஆனால் நான் கேட்கவில்லை. முதுகுத் தண்டு 'சில்'—

அவள் குத்துவிளக்கை ஏற்றிக்கொண்டிருந்தாள். அவள் கண்களில் நீலம் மின்னிற்று. ஏதோ வகையில் மாறியிருந்தாள். அவளே சுடர்போல் தாழ்ந்து, தணிந்து, ஆனால் அமைதியான திடத்தில், விளக்கெதிரே அமர்ந்தாள்.

'மாத்ரே நம:'
சத்யப் பிரசாதினியே நம.
மஹாதாண்டவ மஹாப்ரளய சாக்ஷிண்யே நம:
ஸ்தோத்ர ப்ரியே நம:
தருண்யை நம:
தீரா நம:
விஜயா நம:'

என் மனதில் நின்றதை, வரிசை தப்பி, அவள் சொன்னதைத் திருப்பிச் சொல்கிறேன்.

பிரார்த்தனை மனிதனின் கடைசி அடைக்கலம் இயற்கைதான். நம்புகிறோமோ இல்லையோ? வேறு வழியுமில்லை. இதுவும் ஒரு பழக்கதோஷம்தான். இதுவும் பயத்தின் உச்சத்தின் ஒரு உருத்தான்.

ஆனால் ஒன்று, பாஸ்கர். உனக்காக ஒருத்தி பிரார்த்தனை செய்கிறாள். ஏன்? ஒருத்தி இருப்பதனால்தான். ஒருத்தி மட்டுமன்று. அவள் மூலமாக விருத்தியாக இருக்கும் உன் குடும்பம் உன் முன்னோர்களிலிருந்து உன்வரை தழைத்து வந்திருக்கும் உன் குடும்பம் அவளுடைய பிரதிநிதித்வத்தில் உனக்காகப் பிரார்த்தனை செய்கிறது. ஆனால் எனக்கு?—ஓ இது உன்மேல் பொறாமையில் எழுந்த எண்ணம் அன்று. (ஆனால் அதையும் எப்படி நிச்சயமாய்ச் சொல்வது?) என் வேளை வரும்போது எனக்காக நானே பிரார்த்தனை செய்து கொள்வதா? இப்பவும் அதில் ஒரு அவமானம் தட்டுகிறது. பயம், பக்தி, நம்பிக்கை எதையும் மறுக்கும் எனக்கு; என்

பிரார்த்தனையை, எனக்கும் புரியாத சக்தி, கேட்கப் போகிறதா? நான் எதில் சேர்த்தி? சம்போ சங்கரோவா, அம்போ ஐயகோவா? பாஸ்கர், **you lucky guy.**

உறவு என்று ஒன்று வேண்டும். இருந்தால்தான் வீடு என்ற களை வரும். நாள் கிழமை, பண்டிகை, பாயஸம், குத்துவிளக்கு, கற்பூரம், நமஸ்காரம், ஆசீர்வாதம், உதயம், மதியம், சாயங்காலம், இருட்டு, விடிவு, கோலம் இவைகளுக்கெல்லாம் அப்பத்தான் அர்த்தமே ஏற்படு கிறது. இதுவரை எனக்கு இதெல்லாம் தோன்றியதில்லை. அதுவே ஒரு ஆச்சரியம்.

அதனினும் ஆச்சரியம், இதோ அனு பக்கத்தில் நானும் கைகளைக் கூப்பிக்கொண்டு உட்கார்ந்திருப்பதைக் காண் கிறேன். இது எப்போது நேர்ந்தது? அவள் வாயினின்று புறப்பட்டுக் கொண்டிருக்கும் நாமாக்கள் மேல் விளம்புவதுபோல, நானும் அவளைப் பின்பற்றி என் நாக்கில் உருட்டி உச்சரிக்க முயல்கையில், அலைகள் என் காலடியில் மண்ணைப் பறித்து, என் பத்திரம் பறிபோய், ஒரு பிரம்மாண்டமான நாக்கு என்னை நக்கி உள்ளுக்கு இழுப்பதுபோல—மாட்டேன், மாட்டேன்—

என்ன மாட்டாய்? எதுதான் உன்னால் மாட்டும்? உன் தோத்திரம் உனக்காக அல்ல, அவனுக்காகவும் அல்ல. தோத்திரம் என்று ஒன்று சொல்ல முயல்கிறாயே. அதுவே போதும். எல்லாம் எனக்காக.

"பாஸ்கர்" இருளில் என்மேல் பாம்பு ஊறல் போன்ற இந்த வசியத்தினின்று முழுமூச்சில் என்னை உதறிக் கொண்டு எழுந்தேன். எழுந்து உன்னிடம் விரைந்தேன்.

பாஸ்கர், நீ காகிதமாய் வெளுத்துப்போயிருந்தாய். உன் உள்ளங்கையைத் தொட்டேன். 'சில்'. உன் மார்பில் காதை வைத்துத் துடிப்பைத் தேடுகிறேன். நாடியும்— கேள்விக்குறிதான்.

"அனு!"

ஓடிவந்தாள், தழையத் தழையப் பசு.

"ஏமாந்துவிட்டோம்!"

"இல்லை, இல்லை, மாட்டேன், மாட்டேன்—"

எரிமலை வெடித்தது. உன் கால்களை அணைத்தபடி உன்மேல் விழுந்து அவள் வீறிடுகையில், மார்த்துணி நழுவி, தலையவிழ்ந்து மயிர் புரண்டு, உடலின் பரவாட்டல் பார்க்க சஹிக்கவில்லை.

"முடியாது, முடியாது. மாட்டேன், மாட்டேன்."

எனக்குச் சற்று கோபம்கூட வந்தது. என்ன முடியாது, என்ன மாட்டேன்?

"அனு, **We must face facts.**"

"**Facts**"? காளி என்மேல் திரும்பினாள். "என்ன **facts**ஐக் கண்டுவிட்டாய்?"

"அனு, **Look!**"

பாஸ்கர், உன் கண்கள் திறந்து, நீ எங்களை அடையாளத்துடன் பார்த்துக்கொண்டிருந்தாய். உன் உள்ளங்காலைத் தொட்டேன். சூடு திரும்பிக்கொண்டிருந்தது. நாடி அசைந்தது. மிக்க பலஹீனமாய், ஆனால் நிச்சயமாக பாஸ்கர், நீ விழித்துக்கொண்டிருக்கிறாய் என்றால், நான் விழித்துக்கொண்டிருக்கிறேனா?

விளக்கில் சுடர் 'சொட சொட.' என்ன பேசுகிறது?

"டாண்! டாண்!" சுவர்க் கடியாரம் ஜயப்ரகடனம் செய்தது.

பாஸ்கர், உன் கண்கள் மூடிக்கொண்டன, நித்திரையில்.

"திவாகர் ஜன்னல் கதவுகளைத் திறவுங்கள்."

நான் திரும்பியபோது அவள், தன் நிலைக்கு வேகமாக மீண்டுகொண்டிருந்தாள். ஆடைகளைச் சரிப்படுத்திக் கொண்டிருந்தாள். ஆனால் முகத்தில் வேர்வை ஜலகண்டமாய்க் கொட்டியிருந்தது.

ஆகவே, எது நிஜம், எது நடக்ககூடியது என்பதைக் கூட நிர்ணயிக்க நாம் தகுதியில்லை.

''you love him very much. don't you, அனு?''

''எனக்குத் தெரியாது.'' அவள் உன்னையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''உனக்குத் தெரியாது என்றால், எதுதான் யாருக்குத் தெரியப்போகிறது! you love him very much don't, you?''

களைப்பாயிருந்தாள். புன்னகை புரிய முயன்றாள்.

''கலியாணம்னு பெரியவா பண்ணி வெக்கறா. இனி மேல் உனக்கு இந்த வீடு இல்லை. இனி இவனேதான் உன் கதி என்று வெளிப்படையாகச் சொல்லாமலும், பச்சையாகச் சொல்லியும், வம்சம் வழி வழியா, பெண்ணுக்கு வழங்கும் புத்தி—இல்லை, தீர்ப்பு, பரம்பரையா நடந்து வரது. அதுதான் எனக்குத் தெரியும்.''

உன்னை வாரிக்கொள்ளும் பார்வையில், உன்னையே பார்த்துக்கொண்டு சொன்னாள். என் பக்கம் திரும்பக் கூட இல்லை. அவளே எங்கிருந்தோ திரும்பி வந்தாற் போல், அத்தனை களைப்பாயிருந்தாள்.

களையாயிருந்தாள.

''you love him, dont you, அனு?''

''என்னைச் சும்மாவிடு!'' எரிந்து விழுந்தாள். ''Love எனக்குத் தெரியாது. But I want him. இவரில்லாமல் என்னால் முடியாது. உடன்கட்டையேறப் போறேனா? கேக்காதேயுங்கள். ஆனால் இவர் எனக்கு வேணும், எனக்கு வேணும், எனக்கு வேணும், வேணும்வேணும், வேணும்!''

அதற்குமேல் கோர்ட் கிடையாது.

'பதிம் தேஹி பதிம் தேஹி பதிம் தேஹி'

கதை இங்குதான் கேட்டாற் போலிருக்கிறதே!

இப்போது களைப்பில் நான் சாய்ந்தேன்.

பாஸ்கர், அனு சக்தியில் நீ மீண்டாயா? காக்கை உட்காரப் பனம்பழம் விழுந்ததா? Crisis எனும் மதில் மேல் பூனை சரியான இடத்தில் குதித்ததா? ஈதெல்லாம் பதிலே கிடைக்காத கேள்விகள். அவரவர் பூத்ததற்குத் தக்கபடி, கேள்விகள்மேல் சுமை ஏற்றும் மழுப்பல்கள், பதில் ஆகா. கண்ணாமூச்சி கண்டுபிடிப்பு ஆகிவிடாது.

ஆனால், பாஸ்கர், காதல், காதல் என்று சொல்லிக் கொண்டு காலம் காலமாய், காவியமாகவும், கவிதை யாகவும், கதைகளாகவும், பெருமூச்சாகவும், மலையாய் I want him எனக்கு அவன் வேணும்—இப்படியும் தேவை யெனும் பெயரில், இப்படியும் ஒரு மகத்தான மூர்க்கம் உண்டா? என்ற வியப்பு எழுந்தக் கணமே—இந்த மூர்க்கத்தைக் கண் கூடாகக் கண்டதே ஒரு மகத்தான அனுபவம்தான். இந்த வேணும் பொருளாய் விளங்கும் உனக்குக்கூட இந்த தரிசனம் கிடையாது— ஆனால் எதேச்சை வழிப்போக்கன் எனக்குக் கிடைத்துவிட்டது.

இந்த உணர்வு தன் பட்டாசுத் திரிக்கூத்தை என்னில் ஆடியதக்கணமே, என்னுள் கடல் பொங்கி நுரை வழுக்கி, I fell in love with your wife. கூடவே என் வெறுமையின் வெறிச்சு, அதன் முழு பயங்கரத்துடன் கரடி தழுவியதும் நான் பொடிப் பொடியாக நொறுங்கிப்போனேன்.

Ah the beautiful flood of tears!

"'Tea திவாகர்? or Coffee?"'

இனி எழுத அதிகம் இல்லை. ஏன், ஏதுமில்லை யென்றே சொல்வேன்.

தரிசனம் என்பதே ஒரு தடவைதான். அதுபற்றித் திரும்பத் திரும்ப மிச்சமெல்லாம், பிறரையும் தன்னையும் ஏமாற்றிக்கொள்ள, அதற்குக் காட்டும் கிச்சுகிச்சு.

இதற்குப்பிறகு உன் வீட்டுக்கு நான் வருவது தானாகவே குறைந்துபோயிற்று. நீகூடக் கேட்டாய். உன்னிடம் என்னது சொல்வது?

அவள் கேட்கவில்லை; கேட்கமாட்டாள். அன்று நான் அவள் உயிரை நிர்வாணமாகப் பார்த்துவிட்டேன். அப்படி ஒன்று இருக்கிறதா? என்ன என்று கேட்கிறாயா? இருக்கிறதென்று எனக்கே இப்பத்தானே தெரிகிறது! ஆத்மா என்கிற வார்த்தையை வேணுமென்றே விலக்குகிறேன். ஆத்மாவைப்பற்றி என்ன கண்டேன்?

உயிரின் நிர்வாணத்தில் **Sex** கிடையாது. **I love her Terribly.** அவள் நினைப்பில் பற்றி எரிகிறேன. ஆனால் அவள்மேல் எனக்கு இச்சையில்லை. **Strange!**

புரட்டு பக்கங்களை; **The end of the chapter for me.**

இந்தக் கடிதத்தை எழுத உட்கார்ந்தபோது, இதைத் தபாலில் சேர்த்ததும் ஊரைவிட்டுப் போய்விடலாம் என்று உத்தேசித்திருந்தேன். எழுதி முடித்ததும் அது **end of the chapter** ஆகாது என்று தெரிகிறது. எங்கு போனாலும் என்னோடு இருக்கிறேன்! கேட்கிறேன். உண்மையில் இங்கே என்ன இருக்கிறது? முதலில் உண்மை என்பதே என்ன? எனக்கு இப்போ தோன்றுகிறது. **Truth is an explosion.**

வெடித்த பின்னும் மிச்சமிருப்பின் அது உண்மையான உண்மை அன்று.

**Geerge Saunders** என்று ஒரு சினிமா நக்ஷத்ரம். தூக்க மாத்திரைகளை விழுங்கிவிட்டு அவன் இறந்துபோனபோது ஒரு குறிப்பை விட்டுவிட்டுப் போனான்.

"I am bored with life"

தன் உயிரின் உரிமையை முறையாக உபயோகித்தவன் என்று சொல்வேன்.

மானஸ்தன்.

'So, now, ஒரு தம்.'

புகைத்துக்கொண்டே, கடிதத்தைத் தலையிலிருந்து அடிவரை படித்தான். ஒரு கணத் தயக்கத்தின் பின் சட்டென முடிவுக்கு வந்தவனாக, அதை நாலு சுக்கல் களாகக் கிழித்து. தீக்குச்சிச் சுடருக்கு இரையாகிச் சுருண்டு, விண்டு கீழே விழும்வரை காத்திருந்தான்.

என் கருகல்.

உதடுகளில் புன்னகை அரும்பிற்று.

அலமாரியிலிருந்து சீசாவையெடுத்துக்கொண்டு கட்டி லில் உட்கார்ந்து, மூடியைத் திறந்து, குப்பியை ஆட்டி ஆட்டி, மறு உள்ளங்கையுள் மாத்திரைகளை உதிர்க்க ஆரம்பித்தான்.

# உச்சி வெய்யில்

குளிர், பல் கிட்டிற்று. போர்வையை மேலே சுற்றிக் கொண்டு பாறைமீது உட்கார்ந்தபடி, பிள்ளையின் வருகைக்குக் காத்திருந்தார். மணி ரெண்டுக்கு மேலாறது இன்னும் காணோமே! நைட் ஷிஃப்டில் 12-30 மணிக்கே திரும்பவேண்டியவன்.

உலகில் உயிரிலாதது எதுவுமில்லை. கல்லானாலும் எங்களுக்கும் வளர்ச்சி உண்டு. உங்கள் கணக்கில் எத்தனையோ வருடங்களில், கால், அரை அங்குலம் கூடியிருப்போமாம்.

யார் யாரோ எத்தனை எத்தனை முறையோ, காலம் காலமாய் என்மேல் நடந்து சென்றிருப்பரோ! ஆனால் இந்தப் பெரியவர், இந்த நள்ளிரவில், என் மேல் உட்கார்ந்து தன் மகனுக்குக் காத்திருந்த வேளையில்தான், அவருடைய பிள்ளைப் பாசத்தின் நெஞ்சு நெகிழ்ச்சியில், என் ப்ரக்ஞையின் முதன் மூச்சு என்னுள் பாய்ந்திருக்க வேண்டும்.

ஒண்டியா சமைத்துச் சாப்பிடறான். ஓட்டல் சாப்பாடு ஒத்துக்கல்லியாம். கட்டுப்படியும் ஆகல்லே. ஆறு மாசத்துக்கொரு தடவை ஊருக்கு வந்து தங்கும் அந்த ரெண்டு மூணு நாளில் அவனைப் பார்க்க வயிறு

ஒட்டிக்கறது. இளைச்சு, கறுத்துப்போய்...பாதி நாளைக்குச் சமைக்கமாட்டானாம். ராத்திரி டூட்டியிலிருந்து திரும்பினதும், ஆடையைக்கூடக் களையாமல் ஏற்கனவே நாள் கணக்கில் விரிச்சே கிடக்கும் படுக்கையில் பொத்துனு விழுவதுதான் தெரியும். நினைப்பு வரச்சே அது ஒன்பதோ பத்தோ! அதுக்குமேல் சமைக்க எங்கே கைவரும்? 'டீ'க் கடையில் காபி, டீ, பன், மசால் வடை. எது கிடைச்சதோ, காலத்தை ஓட்டு.

*உயிருடன் இருப்பது ஒரு நிலை. உயிரோடு இருக்கிறேன் என்று உணர்ந்து வாழ்வது வேறு நிலைதான். ப்ரக்ஞையின் முதல் மூச்சென்று சுலபமாகச் சொல்லிவிட்டேன். என்னுள் ஏதேதோ புரண்டெழுந்து— விழிப்பு என்பது சாமான்ய மானதா?*

ஆகவே பிள்ளைக்குச் சமைச்சுப் போட வந்திருக்கேன். என்ன, முட்டி முட்டி இன்னும் ஒரு மாசம் இருக்கலாம். ஊரில் காரியம் மலையாக் காத்துக் கிடக்கு. தை வந்ததும் கார் அறுப்பு—வயலில் கதிர்கள் கனம் தாங்காது சாஞ்சுடும். கொல்லையில் தேங்காய்க் குலை முத்தியிருக்கும். இப்பவே எந்த ராத்ரி பங்காளி வந்து பறிச்சுண்டு போயிருக்கானோ? கப்புவுக்கு வரன் மும்முரமா தேடியாகணும். இந்தத் தைக்கேனும் வழி பிறக்குமா?

கறிவேப்பிலைக் கன்னு புழைச்சுடுத்துன்னு கடிதாசிலே ஓரத்துலே ஒரு வரி கண்டதுமே உடம்பு பரபரத்துப் போச்சு. அதைப் பார்க்காமல் நினைக்காமல் இருப்புக் கொள்ளல்லே. இங்கே இவன், அங்கே அது—அதனாலே ரெண்டும் ஒண்ணாயிடுமா. இதென்ன தத்துப் பித்து! மனம் மனசைச் சீறித்து.

''அப்பப்பா, என்ன ருசி! இந்தக் கீரை பொரிச்சுக் குழம்பைத் தினம் பண்ணிப் போட்டாலும் ஆயுசுக்கும் அலுக்காமே சாப்பிட்டுண்டிருப்பேன்.''

கூடச் சாப்பிட உட்கார்ந்தவர், இலைமேல் முகம் இன்னமும் தாழக் குனிந்தது, கண்ணில் துளும்பலை மறைக்க.

''ஸேது, நீ தினம் ஒரு வேளையானும் சமைச்சுக் கணும்டா! ஒண்ணுமே முடியாட்டா, சாதம் வடிச்சுத் தயிர், பருப்புப் பொடி, கறிவேப்பிலைப் பொடி பண்ணி வெச்சுட்டுப் போறேன். அப்பளாம் சுட்டுக்கோ.''

''உத்யோகத்தில் அப்படியெல்லாம் கையடிச்சுக் கொடுக்க முடியாதப்பா. வயிற்றுப் பிழைப்பு விட்ட வழி தான் உண்டு.''

''அப்படியானா, ஒரு கலியாணத்தைப் பண்ணி வெச்சுட வேண்டியதுதான்.''

''சரியாப் போச்சு, நானே இன்னும் ஊணிண்ட பாடில்லே. கல்யாணம் ஒண்ணுதான் குறைச்சல்.''

''ஏண்டா, என் தள்ளாமைக் காலத்தில் இப்படிப் படுத்தறேள்?''

சிரித்தான், ''காலா வட்டத்தில் எல்லாம் சரியாப் போயிடும்பா''

''ஆபத்தாமபஹர்த்தாரம் தாதாரம் ஸர்வ ஸம்பதாம்– மணிசத்தம் கேக்கறாப்போல இருக்கே! ஆமாம், அவனே தான். ராமா, வயிறறிலே பாலை வார்த்தையா?'' பாறையிலிருந்து எழுந்திருந்தார். ''ராம மந்த்ரத்தைவிட மந்திரம் இல்லேடா சேது''—

'வீர்ர்ர்'ரென்று அவர் காலில் உராய்வதுபோல வந்து நிறுத்தி இறங்கினான். அவன் முகம் கடுத்தது.

"அடை காக்க ஆரம்பிச்சாச்சோன்னோ? வீட்டுக்குள்ளே இருந்தது போக வெளியிலே வந்தாச்சா? அதனால் நான் வந்துடுவேனா? உங்கள் உடம்பைப்பத்தி நீங்கள் என்ன நினைச்சுண்டிருக்கேள்?"

"நீ கொஞ்சம் மரியாதை காட்டலாம் ஸேது"—

"மரியாதையா?" பட்டாணிபோல் குதித்தான். "எனக்கு உங்கள் உடம்புதான் இப்போ முக்கியம். உடம்பை வெச்சுண்டுதான் அப்புறம் அதுக்கு மரியாதை. இங்கே குளிர்னா என்னன்னு உங்களுக்குத் தெரியாது. சில் மாரில் கவ்விட்டா, மரணச்சனிதான். என்மேல் பழி சுமத்திட்டுப் போகணும்னு பாக்கறேளா? மரியாதையாம், மரியாதை!"

அவரைத் தூக்காத குறையாக, உள்ளே தள்ளிக் கொண்டு போனான். கதவு அவர்கள் பின்னால் அடித்து மூடிக்கொண்டது. சாக்ஷியாக சைக்கிள் வெளியே நின்றது.

நானும் சாக்ஷி நிற்கிறேன், அல்ல உட்கார்ந்து கொண்டு இருக்கிறேன், அல்ல இருக்கிறேன்.

பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல் என்று கல்மேல் ஏன் பழி? நான் நெகிழ்ந்துவிட்டேன். என் மேல் ஓரிரண்டு தூறல்— மேகத்தின் கண்ணீர்? அங்கு மிங்குமாய் நக்ஷத்ரங்கள் தூக்கம் கலைந்து விழித்துக் கொள்கின்றன.

சிருஷ்டி எங்களுக்குத் தந்த பாஷை மோனம். மோனத்துக்குப் பேச்சென்று இல்லை. ஆனால், மோனத்தில் இல்லாத பாஷையே இல்லை. அதே, உங்கள் பாஷை எனக்கு உணர்விலேயே புரிகிறது.

எங்களுக்கு வாயில்லை, சத்தமில்லே, தொட்டுக் கொள்ள நெஞ்சென்று தனி அங்கமில்லை. ஆனால்,

நெகிழ்ச்சி உண்டென்று வந்திருப்பதால் கண்டுகொள் கிறேன். அந்தந்த சமயத்துக்கு உடல் பூரா பார்வை, உடல் பூரா செவி.

உணர்வும் முன்னாலேயே இருந்திருக்கும். அதைத் தட்டி எழுப்பும் விழிப்புத்தான் புதிது. உணர்வின் ஏடுகள் புரள்கின்றன. முன்பின். இப்போ, எல்லாம் தம்மைத்தாமே வெளிப்படுத்திக்கொள்கின்றன. இது தான் நினைவு?

என்மேல் ஏதோ மெத்தென்று வீசி ஒற்றி விழுந்து எழுகிறது. ஓ, நீ என்னை நட்பு பிடிக்கிறாயா? நீ தானே காற்று?

''ஆம். நீ இப்பத்தான் தூக்கம் கலைந்திருக் கிறாய், இல்லையா? என்னைச் சோதரனாக்கொள். ஆம், உறவு எங்கேனும், யாரேனும் ஆரம்பிக்க வேண்டும் அல்லவா? சோதரனே, உன்னைச் சுற்றிலும் விழித்துப் பார்.''

மையிருள் என்மேல் கவிகின்றது. இப்போது மேகங்கள் வலுவிழந்து கலைகின்றன. தேய்ந்த நிலவின் இருண்ட வெளிச்சத்தில் என் விளிம்புகள் தெரிகின்றன.

என் அடிவாரத்தில் பொட்டுகள் சொட்டினாற் போல் வீடுகள். கட்டான் கட்டானாய் வயல்கள். எதிருக்கெதிர் வீடுகள். நடுவே பாம்பு வளையில் ஓடும் பாதைகள். மனிதன் ஏன் ஓடியாடி அலை கிறானோ, இப்போது வீட்டுள் களைத்துத் தூங்கு கிறான். அதுவும் என்ன நிச்சயம்? ஆனால் நான் காவல். நானும் பயப்படுகிறேன் என்று நினைத்துக் கொள்வதில் ஒரு பெருமிதம் உணர்கிறேன். எனக்கு இனி உறக்கம் என்பதில்லை. இப்பத்தானே விழித் திருக்கிறேன்!

நேரம் முதிர முதிர, வானம் சாம்பல் பூத்துப் படர்ந்து, திட்டு வலுத்து வெண் சிவப்பாகி அடுத்து அத்துடன் மஞ்சள் குழைந்து, செஞ்சிவப்புச் சாயம் தோய்ந்து— என்னுள் ஏதோ பரபரப்பு— ஏதோ கம்பீரம் உருவாகிக் கொண்டிருக்கிறது. இது எனக்கொரு விழிப்பு. விழிப்புள் விழிப்பு.

தங்கத் தாம்பாளம் தகதகத்துக்கொண்டு எழுகிறது. அதனுள் விடும் ஒளி மனிதனா, தேவனா? பார்வையைப் பறிக்கும் அந்த ப்ரகாசத்தின் கூச்சம், அந்த ஊருக்குத் தெரியவில்லை. தெரியலாகாதென்றே தான் இந்த ஒளியோ? பலவர்ண மேகத்திரள்கள் பரிவாரம் சூழ்ந்திருக்கின்றன. நான் என்னவோ இருக்குமிடத்தில்தான் இருக்கிறேன். ஆனால் நானும் இந்தப் பரிவாரத்தில் சேர்த்திதான். எப்படியென்று தான் விளங்கவில்லை. இத்தனை மேகங்கள் எப்போது திரண்டன? நாளாவட்டத்தில் தெரிந்துகொண்டேன். முதன்முதலாக நினைவு தோன்றிய நாள் முதலாய் இப்படித்தான் நேர்ந்துகொண்டிருக்கிறது. திடீரென்று பாறை பாறை, மதில் மதில், உடனேயே அத்தனையையும் விரட்டி அடித்துவிட்டு, பூரித்த முழு நீலத்தின் நடுவே புரியாத கோலத்தில் ஜ்வலித்துக் கொண்டிருக்கும் அந்த ஜோதி.

இவருடைய ரச்மி படாத இடமே இல்லை. என் மேல் என்னைச் சூழ்ந்து செழித்த பசுமையில், என்னைப் போலவே ஆங்காங்கே நிற்கும் இக்குன்றுகள்மேல், விட்டு விட்டு நட்ட தந்திக் கம்பங்களில், கம்பிகள் ஜ்வலிக்கின்றன. தந்திகள் வாசிக்கின்றன. இருந்த இடத்தில் இருந்தபடி, இந்தப் பெரிய ஆசீர்வாதத்தில் அதிசயிக்கத்தான் முடியும். அதிசயிக்கிறேன்.

அதிசயம் விழிப்பின் விரிவு.

அதோ மலைமீது கோவில் ஸ்தூபியைத் தக தகப்புத் தொட்டு, ஸ்தூபி நெருப்புப் பந்தாய் மாறு கிறது, மலை அடிவாரத்தில். ஏரியில் நீர்மட்டம் வெள்ளித் தகடாய் மாறிவிட்டது.

ஆள் நடமாட்டம் ஆரம்பித்து, உடனேயே அதிகரித்தும் விட்டது. மனிதன் மறுபடி ஓடியாடி அலைய ஆரம்பித்து விட்டான். படிப்படியாக உயர்ந்து உச்சியை அடைந்ததும் வெயிலின் வெம்மை யில், நான் காணும் உலகம் திரைச்சீலையாக நடுங்கு கிறது. இந்தச் சமயத்துக்கு இவருக்கு ஏன் இத்தனை கோபம்?

ஆனால் உச்சியிலிருந்து இறங்கத் தொடங்கி யதும், இந்தக் கோபம் தணியத் தொடங்குகிறது. அவரும் படிப்படியாக இறங்குகிறார். எதிர்வானம் தண்ணிய சிவப்பில், மேகங்கள், பலவர்ணத் தீட்டலில், பாறைகள், குடிசைகள், தீசல்கள் ஈட்டு கின்றன. அவருடைய அற்புதமான ஜ்வலிப்பை இப் போது கண்ணைக் கூசாமல் தரிசிக்க முடிகிறது.

என்றோ ஒரு நாள். இந்தக் காலத்தின் அளவு என் கணக்கிலுமில்லே மனிதன் கணக்கிலுமில்லை. என்றோ ஒருநாள் நானே இந்த நெருப்பின் பொங்கலில் சிதறித் தெறித்த செந்தணல் பொறி யாகப் பூமியில் விழுந்து நீர்த்து இறுகிப்போய் நாளடைவில் மண்ணும் புழுதியும் சேர்ந்து கெட்டிப் பட்டுப்போன உருவமோ என்று திகைக்கையில் என் கல்லும் குறுகுறுக்கிறது.

ஒளிமங்கி, இருள்கூடி, இரவு மீண்டும் வந்து விட்டது. இப்படி மாறி மாறி பகல் இரவைத் துரத்தி, இரவு பகலைத் துரத்தி இந்த ராட்டினம் இதுவரை எத்தனை, இனிமேலும் எத்தனையோ?

இதுபோன்ற ஒரு பகலில் கிழவனார் ஊருக்குப் போய்விட்டார். அவரை வண்டி ஏற்றி அனுப்பி விட்டு, பையன் திரும்பி வந்து வாசற்படியில் முழங் கால்களைக் கட்டிய கைகளினிடையே முகம் கவிழ்ந்து உட்கார்ந்துவிட்டான். அவன் தோள்கள் குலுங்கின. இவன் துக்கத்துக்கு என்னால் என்ன செய்ய முடியும்?

மறுபடியும் அவன் இஷ்டப்படிதான் வருகிறான். போகிறான். அவனால் முடிந்ததும் அதுதான். மனிதர்களின் கவலைகள், துயரங்கள், அவரவரது தனித்தனி.

என்னைச் சூழ்ந்த மற்ற குன்றுகளைக் காட்டிலும் நானே பெரியவனாயிருக்கிறேன். உயரமில்லை, பரவல். என் நடுவே ஒரு சுனை. தண்ணீர் மெது வாய்க் கொப்புளித்த வண்ணமாயிருக்கிறது. பூமியின் கீழ் என் வேரும் அதன் சுரப்பும் எத்தனை ஆழமோ? தண்ணீரின் விறுவிறுப்பை உணர்கிறேன். ஆனால் இதைத் தேடி வருவோர் அதிகமில்லை. சுற்றி கிணறு களும் பம்பு செட்டுக்களும் ஏராளம் எட்டு தூரத்தில் ஏரி.

என் விலாவில் கரடு முரடு பள்ளங்களும், மேடு களும், புரையோட்டங்களும், முடிச்சுக்களும்.

ஒரு பிற்பகல். இரண்டு வாண்டுகள் வந்து என் மேல் உட்கார்ந்தன. ஒருவன் இருமிக்கொண்டே, கஷ்டப்பட்டுப் புகை பிடிக்கிறான். இவன், "டேய். இதனுள்ளே இருள் இருளா இடமெல்லாம் இருக்குது. நீ உள்ளே போயிருக்கியா?"

"நீ போயிருக்கையா?"

"போனேனே, பத்து நாளைக்கு முன்னாலே."

"என்ன கண்டே, ஏதாச்சும் புதையல் கிடைச்சுதா?"

''வளைஞ்சு வளைஞ்சு உள்ளே ரொம்ப தூரம் போவுதுடா. போவப் போவ அம்போன்னு இருட்டு. திரும்பிடலாமான்னு ஒரு சமயம் நெனச்சேன். ஆனால் வழி தெரியல்லியே! இனிமே ஆத்தா தம்பி தங்கச்சியைப் பாக்கப் போறேனான்னு அழுகை வந்திருச்சி. சமயத்துலே கறுப்பு கலைஞ்சு வெளிச்சம் கொஞ்சம் கொஞ்சமா விட்டுக் கொடுத்து, நடக்க நடக்க விரிஞ்சுக்கிட்டே போச்சு. திடீர்னு இடம் அகலமா அறையாட்டம் பெரிஸ்ஸா, நடுவுலே நிக்கிறேன். ஓரமா பாறையிலே அலுமாரியாட்டம் ஒரு பொந்துலே அம்மன் சிலை. இன்னும் உருவா யிட்டே இருக்குது. குந்தியிருக்கா. தடால்னு விளுந்து ஆத்தாளைக் கும்பிட்டேன். என்னைப் பார்த்து சிரிச்சா.''

அப்படி விடறா டகல்''—

''என் தலைமேலே கையை வெச்சு சொல்றேன், விட்டேன்னு சொல்லு. நீ சொல்லமாட்டே. நான் சொல்றேன். அப்போ அந்த அறையிலே மூலையிலே இன்னொரு பாதை தெரியுது. அது வழி பத்தடி நடந்தேன். ஒரு திருப்பத்துலே சட்டுனு வெளிலே வந்துட்டேண்டா. சந்தோசத்துலே சுத்திச் சுத்தி வந்து, வந்த வழியைத் தேடினால் சிக்கல்லே. கிடைக் கல்லே. நான் உள்ளே போனது அற்புதம், கண்டதும் அற்புதம், வெளியிலே வந்தது அற்புதம்.''

அவர்கள் போனபின்னர் அந்தப் பையன் சொன்னது வெகுநேரம் புரிந்தும் புரியாமலும் உறுத்திக்கொண் டிருந்தது.

பகலும் இரவுமாய் மாறி மாறி நாட்கள் நகர்கின்றன. ஒரு சமயம் ஓடுகின்றன. ஒரு சமயம் தயங்குகின்றன. ஆனால் எந்த சமயமும் நின்றதில்லை.

என்னைச் சுற்றி வீடுகள் முளைத்துக் கொண்டிருக்கின்றன. காலியாகின்றன. குடித்தனங்கள் மாறுகின்றன. வயல்களில் கதிர்கள் பெருமூச்செறிகின்றன. ஏரி வற்றுகிறது. மழை பெய்கிறது. தடித்த தூறல்கள் என்மேல் தமுக்கு வாசிக்கின்றன. மழை கொட்டுகிறது. ஏரி நிரம்பி வழிகின்றது. குளிர் கிட்டுகிறது. இலைகள் உதிர்ந்து மரங்கள் நிர்வாணமாகின்றன. நான் ஏற்கனவே நிர்வாணம்தான். ஆனாலும் இப்போது அதுமாதிரி ஒரு உணர்வு தோன்றுகிறது.

மரங்கள் ஒரு பக்கம் பட்டுப்போய்க்கொண்டே மறு பக்கம் துளிர்க்கின்றன. ஏதேனும் நிகழ்ந்துகொண்டு வர்ணங்கள் நேர்ந்த வண்ணமிருக்கின்றன.

ஒரு தினம் எனக்கு அண்டைக் குன்றை மொய்த்துக் கொண்டிருந்த ஜனங்கள் அத்தனைபேரும் சட்டென இறங்கி ஓடிப்போன கொஞ்ச நேரத்துக்கெல்லாம் பெரிய சத்தத்துடன் குன்று வெடித்தது. பெரிய விரிசல், பெரிய பள்ளம் விட்டுக்கொண்டு பெரிதும் சிறிதுமாய்க் கற்கள் சரிந்தன. அதை என்னவோ செய்திருக்கிறார்கள்.

எனக்கும் இந்தக் கதிதானே ஒருநாள் என்று தோன்றினதுமே உள்ளே ‘சில்’லென்றது. ஆகவே ஆயசு எனக்குப் கணக்கில்தான் இருக்கிறது. இது நல்லதா, கெட்டதா? புரியாத புதுக்கேள்வி வாட்டுகிறது. ஆனால், எது, என்ன, எப்படி நேர்ந்தாலும் என்னால் என்ன செய்ய முடியும்? அன்றொரு நாள் பறந்துகொண்டேயிருந்த பக்ஷி ஒன்று பொத்தென என்மேல் விழுந்து பொடி நேரத்தில் உயிரற்று சிறகுக் குதறல் ஆகிவிட்டது. மாரடைப்பா, சிறகின் களைப்பா, விழுந்த அதிர்ச்சியா, எது எப்படியிருந்தாலும் என்னால் என்ன செய்ய முடிந்தது? மொத்தாகாரமான, செயலற்ற ஜீவன்.

இப்போது ஒரு தனிமை தெரிகிறது. இது உணர்வு பெற்றதன் விளைவு. அறிகிறேன். ஆயுசு, தனிமை, வெறிச்சோ—என்ன செய்வேன்? என்னைச் சுற்றி நல்லன, பொல்லாதன, சுகம், துக்கம், வாழ்வு, அறிவு நிகழ்வன யாவுக்கும் என்வரை செயலற்ற சாக்ஷி நான். இந்த உணர்வு வேண்டாம் என்று மறுப்பதும் என்னிடம் இல்லையே! பெற்றபோது தேடியா பெற்றேன்?

ஆனால் பெற்றதை இழக்கவும் மனமில்லை. சம்பவங்களின் பவனி, ஆச்சர்யம் குன்றா அனுபவம். உணர்வு இலாது இது சாத்தியமா?

ஒரு நாள்—

இரவு டியூட்டியிலிருந்து திரும்பி வந்து பாயில் விழுந்து—கண்கள் எரிந்தன—அடித்துப் போட்டாற்போல் களைத்து, அவ்வப்போது கலைந்த தூக்கங்களிலிருந்து ஒருவாறு மீண்டு பார்வை சுவர்க்கடியாரத்தில் நிலைத்ததும் அது பதினொண்ணு காட்டியது அவனுக்கே ஆச்சர்யமாயிருந்தது. இத்தனை நேரமா ஆயிட்டுது?

சோம்பல் முறித்து எழுந்து, வாயில் டூத்-ப்ரஷ்ஷுடன் வாசலுக்கு வந்தான். பாறைமேல் கூட்டம். ஐந்தாறுபேர் நெருக்கமாக நின்றாலும் கும்பல்தான். மேலும் கீழுமாய்ப் பார்த்துக்கொண்டு, சிரித்துக்கொண்டு, கொக்கரித்துக் கொண்டு, ஓரிரு விரல்கள் உற்சாகமாய் ஆகாயத்தைச் சுட்டிக்காட்டிக் கொண்டு—அண்ணாந்தான். ஒரு புடவை, ரோஸ் கலர், பட்டை நீலக்கரை, உயரக் காற்றில் மிதந்து கொண்டிருந்தது. அவனும் ஓடிப் பாறைமீது ஏறினான்.

கீழே, தண்ணீரில், மார்பளவு ஆழத்தில் அமிழ்ந்து, கைகளால் மார்பைப் பொத்திக்கொண்டு உட்காரவா,

நிற்கவா, நிற்குமளவுக்கு ஆழம் இருந்ததா? முழுக்க மூழ்கியேவிட ஆழம் இருந்ததா? கேள்விமேல் கேள்வி நெஞ்சில் அடுக்கிச் சரிந்தன.

கண்களை இறுக்க மூடிக்கொண்டு, உள்ளே கூசிப் போய்—

> இவள் நிலை பொறுக்க முடியவில்லை. என் செய்வேன். நண்பன் என்று சொல்லிக்கொண்டு காற்றின் வேலை. 'இப்போ ஒரு வேடிக்கை காட்றேன் பார்!' இது ஒரு விளையாட்டா, ஐயோ என்ன செய்வேன்!

என்ன செய்தான் என்று தன் நினைப்பிலேயே அவன் இல்லை. இடுப்பு லுங்கியை அவிழ்த்து அவளிடம் வீசி யெறிந்தான். மூழ்குபவன் கரையோரம் கோரையைப் பற்றுவதுபோல் அவள் அதைப் பற்றிக்கொண்டு தண்ணீருள் மூழ்கினாள்.

''ஏண்டா, நீங்க அவங்க அவங்க தாய்மாருக்குப் பொறந்தவங்கதானே! உங்களுக்கு அக்கா தங்கை, பொண்ணுன்னு கிடையாது? வேடிக்கையா! பாக்கறீங்க உங்களுக்கு வெக்கமாயில்லே?''

இத்தனை சீற்றம் எங்கிருந்து வந்தது? இந்தக் கோபம் அவனுடையது மட்டுமன்று. இது மானுடத்தின் கொதிப்பு. உடம்பு கிடுகிடென ஆடிற்று.

அவர்கள் பின்னடைந்தனர், அந்தச் சொற்கள், அந்தக் குரல் அவர்களுடைய பச்சை நரம்பை எங்கோ தொட்டிருக்க வேண்டும். பதில் பேசாமல், ஒன்றும் இரண்டுமாய் விலகிப்போனார்கள். போயேவிட்டார்கள்.

இறங்கி வந்தான். தண்ணீரினின்று அவள் எழுந்தாள். வேட்டியை, அக்குள்வரை இழுத்து இறுக்கக் கட்டி யிருந்தாள்.

"என் புடவை! என் புடவை!" அலறினாள்.

அது எங்கே பறந்துபோய், எல்லாருக்கும் இன்னும் மாயம் காட்டிக்கொண்டிருக்கின்றதோ? அல்லது எந்த தந்திக்கம்பத்தில், எந்த மரத்தின் உச்சாணிக் கிளையில் சிக்கி...

"எங்கேன்னு தேடறது? இப்போ என்ன செய்ய முடியும்?"

"என் நயினா! என் நயினா! என்னைப் பலி போட்டுடு வாரு!"

"அப்போ இங்கே தண்ணிலேயேதான் இருக்கப் போறியா?"

ஒன்றும் புரியாமல் கைகளை உதறினாள். விழிகள் திகில் சுழிகள். "இதோ என் வீடு. இப்போ உள்ளே வா. யோசிப்போம். உன்னை ஒண்ணும் செய்யமாட்டேன், வா!"

ஒடுங்கிக்கொண்டே உள்ளே வந்தாள். வாசற்கதவை இழுத்து மூடினான். இருக்கும் ஒரு அறையில் அவளை இருக்கச் சொல்லிவிட்டு, 'டீ' போட்டு இரண்டு தம்ளர் களில் ஊற்றிக்கொண்டு வந்து, ஒன்றை அவளிடம் கொடுத்துவிட்டு, தான் மெதுவாகப் பருகினான். இது நானா வாங்கிக்கொண்ட வம்பா? மத்தவங்கமாதிரி நானும் வேடிக்கை பார்த்துட்டுப் போயிருக்கலாமோ? ஆனால், எனக்கு அப்படித் தோணல்லியே!

சரியான நாட்டுக்கட்டை, குதிரைக் குட்டிபோல 'விண்'ணென்றிருந்தாள். மாநிறத்துக்கும் மட்டு. கூந்தல் நீளமாய், நனைந்து அடையாய்ப் பிடறியில், தோள்களில் முதுகில் ஒட்டிக்கொண்டிருந்தது. புஜங்களில், கழுத்துக்குக் கீழ் மார்பில், ஜலம் முத்திட்டு நின்றது. உடம்பு இன்னமும்

உதறிற்று. குளிரா, பயமா, இரண்டுமா? விழிகள் ஏற்கனவே பெரிதில், பயத்தில் இன்னும் பெரிதாய்க் காட்டின.

"எங்கிருந்து வரே?"

கையை வீசி, அஸ்வாரஸ்யமாய் எங்கோ காட்டினாள். புரியவில்லை. இப்போது அது அவளுக்கு முக்கியமில்லை.

திடீரென்று தேம்பித் தேம்பி அழுதாள், மார்பே உடைந்து விடும்போல்.

"ஏன் அழுவரே? இப்ப என்ன ஆயிடுச்சி?" என்று முனகினான். அவனுக்கே அவன் வார்த்தைகளில் தைரிய மில்லை.

"இன்னும் என்ன ஆவணும்? மானம் போச்சே! நாலு பேர் கண் எச்சில் பட்டிடுச்சே!"

"சரி, இப்போ என்ன பண்ணச் சொல்றே? நீயே வாங்கிண்ட வினைதானே!"

இதைக் கேட்டதும் சற்று அடங்கினாள். "புடவை மேல் கல்லை வெச்சிட்டுத்தானே தண்ணியிலே இறங்கி னேன். தண்ணிமேலே திடீர்னு ஆசை ஆயிடுச்சு."

"சரி விடு" சங்கடமாயிருந்தது.

"புடவையில்லாமே எப்பிடி வீட்டுக்குப் போவேன்? என் நயினாவை உனக்குத் தெரியாது. சித்தாத்தாளைக் கூட ஒரு கணக்கிலே சேர்த்துக்கலாம். அவரை முடியாது. வீட்டைவிட்டுத் துரத்திடுவாரு."

"இதோபார். இப்படியெல்லாம் பேசி ஒரு மண்ணும் ஆவப்போவதில்லை. நிலைமையை சமாளிச்சுத்தான் ஆவணும். நானும்கூடத் துணைக்கு வரேன்."

''வேறே வினையே வேண்டாம். இல்லாத ஜோடனையெல்லாம் பண்ணிடுவான். ஐயோ, என்னை இனி யாரு கலியாணம் கட்டுவாங்க?'' மறுபடியும் அழ ஆரம்பித்தாள்.

''நான் கட்டிக்கறேன்.''

எப்படி இந்த வார்த்தை வெளி வந்தது? அவனுக்கே தெரியவில்லை. மீண்டும்.

''ஆமா, நான் கட்டிக்கறேன்.''

ஆச்சரியத்தில் திக்குமுக்காடிப் போனாள். வாய் லேசாய் மொட்டுப்போல் திறந்தது. குழந்தைபோல் இருந்தாள். பாவமாய், அகதியாய்...அவளை அப்படிப் பார்க்க அவனுக்கு என்னவோ பண்ணிற்று.

''இதோபார் ஆமா''—உற்சாகமானான். ''நீ யாரோ நான் யாரோ. உன்னை முன்னே பின்னே பார்த்ததில்லை. உனக்கும் நான் அப்படித்தான். ஆனால் நான் உன்னைக் கட்டிக்கிறேன். நீ எனக்கு ஆக்கிப் போடுவியா, மாட்டியா?''

பொம்மைமாதிரி தலையை ஆட்டினாள். அவளுடைய திகைப்பில் அவன் சொன்னது அவளுக்குச் சரியாகப் பதிவானதோ?

''ஆக்கத் தெரியுமா?'' சிரித்தான். ''தெரியாட்டியும் அக்கறையில்லை. துணையிருப்பேல்ல? நீ எனக்கு, நான் உனக்கு. நமக்குக் கலியாணம் இப்பிடித்தான் கூடணும்னு இருந்திச்சின்னா யார் என்ன செய்ய முடியும்? வா, எளுந்திரு.''

வீடு திறந்தபடி கிடக்க, இறங்கி, தெருவென்ற பேரில் உருவாகிக்கொண்டிருக்கும் அகல நடைபாதையில் உச்சி

வெயிலில் இருவரும் பக்கத்தில் பக்கத்தில் நடந்து செல்கையில் ஆங்காங்கே வாசல்களில் தலைகள் எட்டிப் பார்த்தன. ஊரில் அவர் இந்நேரத்துக்கு அப்பா மாத்யான்னிகம் பண்ணிக் கொண்டிருப்பார். ஆம், நான் எங்கே அடி எடுத்து வைத்துக்கொண்டிருக்கிறேன்? இவளும்தான். எங்கே போய்க்கொண்டிருக்கிறோம்? ஆனால் நிச்சயம் இனி கேள்விக்குறியில்லை. இனி அடிதிரும்ப முடியாது.

சூரிய பகவானே, குழந்தைகளுக்கு அருள் புரியுங்கள்.

# தோடு

புவனா, அபிதா, முரளி—மூவரும் வீட்டு வாசலுக்கெதிரே சின்ன குறட்டுக்கல்லில் அப்பா-அம்மா விளையாட்டு விளையாடிக் கொண்டிருந்தனர்.

அபிதா, தான்தான் அப்பாவாயிருப்பேனென்று சண்டி பண்ணினாள். மூவரில் அவள்தான் வயதில் சிறியவள்.

"அப்போ பாப்பா யார்?" என்று புவனா கேட்டாள். மூவரில் அவள்தான் மூத்தவள்.

"நீ"

"நான்?"—முரளி, தன் மார்பை சுட்டிக் காட்டிக் கொண்டான்.

"நீ—அம்மா"

"ஏது, எல்லாம் தலைகீழ்ப் பாடமாயிருக்கே!"

குரல் கேட்டு மூவரும் திரும்பினர். ஒரு கிழவர் பின்னால் நின்றுகொண்டிருந்தார். நீண்ட மயிரை நெற்றியிலிருந்து பின்னுக்குக் கோதிவிட்டிருந்தார். கறுகறுவென்று தாடி.

"என்ன, வீடு பூட்டியிருக்கு?"

"அம்மா, ஆபிஸ் போயிருக்கா."

"ஓ! குட்டி உன் பேர் என்ன?"

"அபிதா"

"அம்மா ஆபிசிலிருந்து வரவரைக்கும்?"

"நான், இவள் மாமா பெண். என் பேர் புவனா"— புவனா பேச்சை எடுத்துக்கொண்டாள்.

'இவன் முரளி, என் தம்பி. நாங்கள் அடுத்த தெருவி லிருக்கோம். அத்தை இப்போ ஆபிசிலிருந்து வர நேரமாச்சு. அதான் வந்திருக்கோம்."

"அபிதா அப்பா?"

"அப்பாவுக்கு ஊரிலே ஆபீஸ். இன்னிக்கு ஊரிலிருந்து வவ்வா. எனக்கு ஜாங்கிலி வாங்கிண்டு வவ்வாளே!"

"முரளிக்கும் வாங்கிண்டு வருவாளே!"—முரளி, தன்னைச் சுட்டிக் காட்டிக்கொண்டான். அவனுக்குக் கடைவாயில் எச்சில் வழிந்தது.

'போடா, நோக்குக் கிடையாது. எங்கப்பா எனக்குத் தான் வாங்கிண்டு வவ்வா..."—அபிதா புருவங்கள் நெரிந்தன. அவனை அடிக்கப் போய்விட்டாள். சித்திரம் கசங்கினாற்போல், அவள் முகம் சட்டென மாறிவிட்டது.

"குழந்தைகளா, சண்டை போடாதேங்கோ, இந் தாங்கோ' அப்பா வரவரைக்கும் ஆளுக்கொரு சாக்லேட்."

புவனா வாங்கிக்கொண்டாள்.

முரளிக்கு அவசரம் தாங்கவில்லை; வாங்கினதும் வாங்காததுமாக, மேல் ஜிகினாவைப் பிரித்து வாயில் திணித்துக்கொண்டு, சுவாதீனமாக அவர்மேல் உராய்ந் தான்.

அபிதா, கையை நீட்டிவிட்டு, பிறகு தயக்கத்துடன் பின் வாங்கிக்கொண்டாள்.

"என்ன யோசனை?"

''அம்மா வாங்கிக்கக் கூடாதுன்னு சொல்லியிருக்கா, கோவிச்சுப்பா.''

பெரியவர் புன்முறுவல் பூத்தார்.

''தோ, அம்மா வந்தூட்டாளே!''—அபிதா ஓடிப் போய் அம்மா காலைக் கட்டிக்கொண்டாள்.

நடுக்கோடை. அஸ்தமன நேரம். ஆனால் அஸ்தமனம் இன்னும் நேரவில்லை. ராஜராஜேஸ்வரி கோயிலில் சாயங்கால தீபாராதனை ஆலயமணி தீர்க்கமாக ஒலிக்கத் தொடங்கிற்று. கிரிஜாவின் கைகள் கூப்பின. பிறகும் அவளுக்குத் தெரியவில்லை. அவள் வணங்கியது மணியோசையையா, அவரையா? ஏனெனில், இரண்டுமே அவளுக்குப் பழக்கமில்லை.

''அம்மா, நான் தாத்தாவிடம் சாக்கலேட் வாங் கிட்டுமா?''

''முரளிக்கும் வேணும்''—முரளி, தன்னைச் சுட்டிக் காட்டிக்கொண்டான்.

அபிதா கையை ஓங்கினாள். ''போடா, நோக்குக் கிடையாது. நீதான் உன் பங்கைத் தின்னாச்சே!''

''முரளிக்கு நுன்னுன் நொன்னூணு வேணும்!''

''என்ன சர்ச்சை?'' எல்லோரும் திரும்பினர், பெரிய வரைத் தவிர.

''அப்பா! அப்பா!''—அபிதா, அப்பாமேல் தாவி னாள். ''நேக்கு ஜாங்லி வாங்கிண்டு வந்திக்கையா?''

அந்தி மங்கல் வந்துவிட்டது. எப்படி இப்படிச் சட்டென வந்தது? கணவனும், மனைவியும் ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டனர். இருவரும் பெரிய வரைப் பார்த்தனர். அந்த க்ஷணமே ஆலயமணி, கண

கண கண கண கண'வென அடுக்காய் ஒலித்தது. ஜாலரின் அறையல் கொப்புளித்தது. அடுக்கு தீபாராதனை போலும்.

''வழிப்போக்கன். தாகத்துக்கு ஜலம் கேட்கலாமென்று இந்த வீட்டுக்கெதிரே நின்றேன். வீடு பூட்டிக் கிடக்கு. அதற்குள் குழந்தைகள் விளையாட்டில் கவனம் மாறிவிட்டது.''

**''Oh, that is alright. G,** கதவைத் திறவேன்!''

எல்லோரும் ஊர்வலமாக நுழைந்தனர், பெரியவரைத் தவிர. அவர் வாசற்படிக் கட்டை ஒட்டி எழுப்பிய மேடை ஒன்றில் அமர்ந்துவிட்டார்.

''ஏன், உள்ளே வாங்கோளேன்!''

''இல்லே, இங்கே காற்று ஜிலுஜிலுன்னு இருக்கு.''

உடையைக் கழற்றி எறிந்துவிட்டு, லுங்கி உடுத்துக் கொண்டு, வெளியே வந்து எதிர் மேடையில் அமர்ந்தான். உடம்பு, ஆவி கக்கிற்று.

''உஸ், கிரி, காப்பிக்கு வழி இருக்குமா?'' என்று கூவினான்.

உள்ளேயிருந்தபடி, கையைச் சிலம்பம் ஆட்டினாள், இல்லையென்று.

''நல்ல வீடய்யா இது. வரது வாரத்துக்கு ஒருநாள். அங்கே, நாயர் கடை டீயை விட்டால் வேறு கதியில்லை. ஊர் ஊராய் ஓடிப்போய் சம்பாதிச்சாலும், நம் வீட்டில் நமக்கு ஒரு முழுங்கு காப்பிக்கு, வாய் முகம் எல்லாம் தீப மங்கல ஜோதி ஆயிடறது.''

''புவனா ஆத்துக்குப் போய்ப் பாட்டியைக் கேட்டுப் பால் வாங்கிண்டு வா. கூடவே முரளியை அழைச்சுண்டு போ. ஜே, உங்களுக்கு வேற்றாள் எதிரே நம் அழுக்கை அலசறத்துலே தனிக் குஷி! இல்லையா?''

"பின்னே என்ன, நீ மட்டும் உத்யோகத்துக்குப் போக வில்லை. நானும்தான் வேலை பார்க்கிறேன்—"

தெருவில் ஒன்றும் இரண்டுமாக, வாழைத்தண்டு விளக்குகள் எட்ட எட்ட ஏற்றிக்கொண்டன.

"மல்லி! மல்லி!"—தெருவில் ஒருவன் கையில் மூங்கில் தட்டுடன் அறைகூவிக்கொண்டு போனான்.

கோபுர விளக்கு, பெரிய குங்குமப் பொட்டுப்போல் பிரகாசித்தது.

கிரிஜா, கூஜாவையும் தம்ளரையும் இருவருக்கும் நடுவில் வைத்துவிட்டுப் போனாள். நல்ல தேய்ப்பு. பாத்திரங்கள் பளிச்சிட்டன.

கிழவர், அடுத்தடுத்து இரண்டு தம்ளர் குடித்தார்.

"ஜலம் கடுக்குமே!"—அவனுக்கு வாய் கடுத்தது. 'இந்த வட்டாரத்திலேயே தண்ணீர் சுகமில்லை."

"அவள் கொடுத்தது."

"அவளா? எவள்?"

கிழவர் பதில் பேசவில்லை. அவர் சிரம் லேசாய் கோபுர விளக்கை நோக்கிச் சாய்ந்தது. சொல்லிவைத் தாற்போல் மணிஓசை ஒருமுறை வீச்சிட்டது.

"ஓ!" தன் அசடை மறைக்க எழுந்து வாசல் விளக்கைப் போட்டான்.

அரையில் ஒற்றை வேட்டி. மேலே ஒரு ஒற்றை வேட்டி. வேறு உடமைகள், கைப் பை இருப்பதாகத் தெரியவில்லை.

புவனா, சொம்புடன் உள்ளே சென்றாள்.

ரயில் நிலையத்திலிருந்து மின்சார வண்டி கிளம்பு கிறது! அதன் தாளம் வெகுதூரம் கேட்டு எட்ட எட்ட ஓயுமுன் எதிர் வண்டியின் சப்தம் நெருங்குகிறது.

அபிதா, உள்ளிருந்து வாய்க்கும் கைக்கும் ஜாங்கிரியுடன் வருகிறாள். சுவாதீனமாகப் பெரியவர் மடியில் உட்கார்ந்து கொண்டு, சட்டென்று திரும்பி, அவர் வாயில் ஒரு ஜாங்கிரிக் கொம்பை—சின்னதுதான்—திணிக்கிறாள். அவர்கூட எதிர்பார்த்திருக்க மாட்டார்.

அவள் தகப்பனார் அவளை வியப்புடன் நோக்குகிறான். அபிதா அப்படி சட்டென ஒட்டிக்கொள்ளும் பேர்வழி அல்ல. அவளே கொஞ்சம் லேடி.

"தாத்தா நான் ஜாங்கிரி தந்தேனோன்னோ, நீ சாக்க லேட் தா!"

"உம், என்ன சொல்லணும்? பெரியவாளை நீ என்கிறதா?"—அவள் அப்பன் பல்லைக் கடிக்கிறான்.

"இருக்கட்டும். நாம் எல்லோரும் அவள் குழந்தைகள்."

புவனா உள்ளிருந்து இரண்டு தம்ளர்களுடன் வருகிறாள். பெரியவர் பிடிவாதமாக மறுத்துவிட்டார்.

ஒரு முழங்கு உள்ளே போன பிறகுதான் அவனுக்கு உலகம் ரமித்தது.

"ஜி, ரொம்ப தாங்க்ஸ்."

"அதிலே ஒண்ணும் குறைச்சலில்லே."

"ஸார், பழக்கமில்லாதவர்கள்—கொடுத்து வைத்தவர்கள். எனக்கு மண்டையிடி பிராணன் போயிடுத்து."

"நானும் ஒரு காலத்தில் முடாக்குடியனாக இருந்தேன்."

"அப்போ ஏன் வேண்டாம் என்கிறீர்கள்?"

"வழிப்போக்கனுக்கு பழக்கங்கள் கட்டுப்படியாகாது. ஒருநாளைக்கு ஒன்று கிடைக்கும்; ஒருநாள் கிடைக்காது. ஒருநாள் வசதியிருக்கும்; ஒருநாள் இருக்காது. வழிப்போக்கன், பழக்கங்களுக்கு லாயக்கில்லை."

"வழிப்போக்கன் என்றால் என்ன அர்த்தத்தில் சொல்கிறீர்கள்? சன்னியாசியா?"

"நான் சன்னியாசி இல்லை. வழிப்போக்கன் என்றால் வழிப்போக்கின் கால்போன வழி, போய்க்கொண்டிருப்பவன். கால்நடையாக நம்நாடு பார்க்க ஆயுசு போதாது."

"தேசாந்தரியா?"

"அப்படியும் கொள்ளலாம்... அடேடே!"

"என்ன?"

"குழந்தை, மடியை நனைத்துவிட்டாள்."

அவர் சொன்னது உறைக்க அரைக்கணம் சென்றது. உறைத்ததும் அவனுக்குச் சீற்றம் பொங்கிற்று. அடிக்கக் கை ஓங்கிவிட்டான்.

"அவளைத் தொடவேண்டாம்"—குரல் என்னவோ மெத்துத்தான். ஆனால், அதில் ஒரு எஃகை அவன் இப்போது உணர்ந்தான். அவன், அவளைத் தொட மாட்டான். அதையும் உணர்ந்தான்.

"அவள் இதுபோல் இருந்ததில்லை."

"அப்போ இது அவன் விளையாட்டு."

"எவன்?"

"எனக்கு ஒரு அவன்தான் உண்டு. அவனேதான் எல்லாம். நம் அவலத்தை நமக்குச் சுட்டிக்காட்டுகிறான்."

"என்ன அவலம்?"

"குழந்தையின் ஸர்வ சகஜமான செயலில், சொந்தத்தில் ஏதோ அவமானம் நேர்ந்துவிட்டதாகப் படித்தாகிறது அல்லவா? தன்மடியில் ஸகஜம், அதுவே பிறர்மடியில் அவமானம். அதுதானே?"!

அவனுக்கு நா எழவில்லை. தெருவில் வாழைத்தண்டு விளக்கு ஒன்று சொடசொடத்தது. ஏதோ கோளாறு. நாக்குத் திரும்பியதும், "வேட்டியை அவிழ்த்துப் போடுங்கள். உடுத்திக்க வேறு தரேன். அவளை அலசச் சொல்றேன்."

"நானே அலசிக்கிறேன். கிணற்றடியைக் காண்பித்தால் போதும்."

அவரைப் புழைக்கடையில் கொண்டுபோய் விட்டு விட்டு, சமையலறையுள் நுழைந்தான். அடுப்பில், ரசம் காய்ந்து கமாளித்துக்கொண்டிருந்தது. அவள் ஏதோ யோசனையில் ரஸம் தளைப்பதைப் பார்த்தவண்ணம் நின்றாள்,

அவன், அவள் முதுகைத் தடவினான். "என்னதான் சொல்லு, உனக்குக் கை வாஸனை இருக்கு—"

சண்டைபாட்டுக்குச் சண்டை; சமாதானம்பாட்டுக்குச் சமாதானம். குடும்பமே வரவர, வயிறு அலம்ப ஒரு கூட்டு ஏற்பாடாப் போச்சு. பால் கணக்கு, அரிசி விலை, எண்ணெய்ச் செலவு உங்களது. மார்க்கெட், சோப்பு சீப்பு, ஸ்நோ, பவுடர் என்னது. இந்த மாதம் நெய் கிடையாது. நெய் நேத்திரவாயு. குடும்பமா இது? ஆயினும், ஏதேனும் பொய் உற்சாகங்களை மூட்டிக் கொண்டு இன்று போச்சா? நாளை வருகிறதா?

"விருந்தாளிக்கு என்ன பண்ணிப் போடறே?'!

"விருந்தாளியா? அவர் சாப்பிடப் போறாரா என்ன?"

"ஏன், அவரை வாசலில் உட்கார வைத்துவிட்டு, என்னைக் கூடத்தில் சாப்பிடச் சொல்கிறாயா?"

"ஏன், அவர் இன்னும் போகவில்லை?"

"உன் பெண்தான் அவரைப் போகவொட்டாமல் அவர் மடியில் காரியம் பண்ணிவிட்டாளே!"

''அதுவே திகைச்சு முழிக்கறது; 'அடக்க முடியல்லே; எப்ப வந்தது தெரியல்லே'ம்மா என்கிறது.''

''அதைவிடு, என் கேள்விக்கு என்ன பதில்?''

''தெரியல்லியே, ஏதோ மத்தியானம் மிச்சம் மீதாரியை வெச்சிண்டு ராப்பொழுதை ஓட்டிடலாம்னு பார்த்தேன்.''

''வாஸ்தவம். அவர் வழிப்போக்கன். நான் ராப்பிச்சை. எனக்கு மூலைப் பழையதைப் பிழிந்து வெச்சுடலாம். சமயத்தில் நானே உனக்கு மிச்சப் பண்டம் தான். முடிந்தால், வாழைப் பூ மடலில் குப்பையோடு குப்பையாய் வாரிவிடுவாய்—''

''துணியை எங்கே உலர்த்தலாம்?''

கூடத்தில் அவர் குரல் கேட்டு, அவசரமாக வெளியே வந்தான். கூடத்து வெளிச்சத்தில் அரைக் கண்டதும் பிரமித்து நின்றான்.

துணியைத் தோய்த்த கையுடன் அவரும் குளித்து விட்டிருந்தார். யாக குண்டத்திலிருந்து வெளிப்பட்டாற் போல் மேனி செந்தழலடித்தது. விழியோரம் செவந்திருந்தது. குளித்ததனாலோ! விற்புருவங்களினடியிலிருந்து விழிக்கதிர் அவன் நெஞ்சைத் துருவிற்று. அவள் மார்புள் ஏதோ கணப்பு பரவுவதை உணர்ந்தான் அவன் கைகள் கூப்பின.

வழிப்போக்கன்?

சன்னியாசி?

தேசாந்திரி?

ரிஷி?

அந்த வயதுக்கு உடம்பில் ஒரு துளிக் சதைப் பிசிர்கூட இல்லை. அவருக்கு என்ன வயதிருக்கும்? நிர்ணயிக்க முடிய

வில்லை. அவர் கையில் பிடித்திருக்த வேட்டியின் கொசுவத்தின் துல்லியம் அவன் நெஞ்சில் புலுபுலுத்தது. உலர்த்தணும் போல் ஆசையாயிருந்தது.

''இப்படிக் கொடுங்கள், நான் உலர்த்தறேன்.''

அவர் பார்வை கூடத்தைச் சுற்றி அலைந்தது.

''பரவாயில்லை, கொடுங்கள். நான் உலர்த்தறேன். என் தகப்பனார் இருந்தால் அவருக்குச் செய்ய மாட்டேனா?''

''தகப்பனார்மேல் சபலத்துக்கு வயது தாண்டிப் போச்சுன்னு நினைக்கிறேன். பிள்ளை கை சிசுருஷையை வாங்கிக்க ரெண்டுபேருமே பாக்கியம பண்ணி யிருக்கணும்.''

பேசிக்கொண்டே தேடும் அவர் நாட்டம். வாசல் தாண்டியதும் குறுகிய ரேழியில் கட்டியிருக்கும் நைலான் கயிறுமேல் விழுந்துவிட்டது. நிமிஷமாக உலர்த்தி, பட்சமாக வேட்டியை ஒருமுறை தட்டிவிட்டு மீண்டும் படிக்கட்டு மேடையில் அமர்ந்துவிட்டார். இடுப்பு வேட்டி ஈரம். ஆனால் அது இடுப்பிலேயே காய வேண்டியதுதான். அவன் நின்றபடி தன்னை ஒருமுறை பார்த்துக்கொண்டான். எங்கேயோ ரோசமாயிருந்தது. நெஞ்சில் எங்கோ சிலாம்பு உறுத்திற்று.

''ஏன், 45 வயதில் எனக்குத் தகப்பனார் இருக்கப் படாதா?'' தனக்குத்தான் முனகிக்கொண்டான். ஆனால், வந்தவர் துடித்து எழுந்தார்.

''அபவாதம்! அபவாதம்! நான் அந்த அர்த்தத்தில் சொல்லவில்லை. என் தகப்பனார் ஐம்பதுகூட நெருங்க வில்லை. எனக்கு இருபத்திமூணாவது வயதில் காலமாகி விட்டார். என்னுடைய முதல் சம்பளத்தை அவர் கையில் கொடுத்து நமஸ்கரிக்க எனக்குக் கொடுத்து வைக்க வில்லையே என்கிற ஓயாத அரிப்பு, இத்தனை நாள்

கழித்தும் என்னை அறியாமல் என்னை ஏதோ உளறப் பண்ணிவிட்டது. நான் என்ன அர்த்தத்தில் சொல்லி யிருந்தாலும் தப்பு தப்புத்தான்! தாயே என்னைப் பொறுத்துக்கோ.''

அவருடைய வேதனையைக் கண்டு, அவன் மிரண்டு போனான். ''நீங்கள் இந்த அளவுக்குப் பாராட்டும்படி ஒண்ணும் சொல்லிவிடவில்லை.''

''இல்லை, அது அப்படியில்லை. இந்த வயசிலும் வாயை அலம்பற நிலையிலிருந்தால் இந்த வயசு இருந்த தற்கு என்ன அர்த்தம்? உசிரோடு எல்லாரும்தான் இருக் கோம். உசிர் போறவரைக்கும். வாழ்வு என்பது தனி. அதில் வாக்கு லேசுப்பட்டதல்ல. நாக்கு, அம்பாளின் பீடம். நாக்கு நுனியில் அவள் ஆக்ஞாசக்கரத்தில் புவனமே சுத்தறது ''

'பூம்' கோயிலில் நகார் முழங்கிற்று. அவனுக்கு உடல் 'ஜிவ்' விட்டது. நேரங்கள், அவருடைய சொல் பட்டு வேளைகளாக மாறிக்கொண்டிருந்தன. இதுவே அவனுக்குப் புது அனுபவம்.

எதிர் மேடையில் உட்கார்ந்துகொண்டான்.

''நீங்கள் ஒன்றும் தவறு சொல்லவில்லை. எனக்கு அப்பா இல்லை'' என்றான்.

அவருக்குக் கேட்டதோ இல்லையோ? சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்.

''எனக்கு அப்பா இருக்காரோ இல்லையோ? எனக்குப் பத்து வயசிருக்கும், ஊமைக் கனவாயிருக்கு. அப்பா— அம்மா சண்டை. வீட்டை விட்டுப் போய்விட்டார்.''

கிழவர், சிலையடித்த மாதிரியிருந்தார். ஏதேனும் ஜபத்தில் ஆழ்ந்துவிட்டாரோ? அவர் கண்கள் மூடி யிருந்தன.

ஆமாம், இதையெல்லாம் இவரிடம் ஏன் சொல்லிக் கொண்டிருக்கிறேன்? சொல்லி என்ன ஆகணும்? சொன்னால் என்ன? சொல்லிக்கணும்போல் இருக்கு. கோவிலுக்குப் போய் நாம் முறையிட்டுக் கொள்ளவில்லை? அங்கேயும் கல்தானே! இவராவது உயிருள்ள மனுஷன்.

அப்பா—அம்மா சண்டை எங்கு இல்லை? ஆனால், எங்கள் அம்மா கொஞ்சம் ஸ்பெஷல். நியாயம் உண்மையாக அவள் அறியாள். வாக்குவாதத்தில் வெற்றி எவ்வழியேனும். அது ஒன்றுதான் அவள் குறிக்கோள். அவள் இழைத்த தவறுகள் அவள் அகராதியில் கிடையாது. அத்தனையும் பிறருடையதே—பிள்ளையாகட்டும் புருஷனாகட்டும் அடுத்த வீட்டாராகட்டும் விதியாகட்டும் அது கடவுளே ஆகட்டும்.

சண்டையென்னவோ உப்பு— புளியில்லாத விஷயம்தான். உண்மையில், உப்பு—புளியில்தான் ஆரம்பித்தது. ரஸத்திலோ, குழம்பிலோ இப்போ ஞாபகமில்லை. மறதியாக உப்பை இருமுறை போட்டுவிட்டதோடல்லாமல், தவறு நேர்ந்துவிட்டதையும் ஒப்புக்கொள்ளாமல், அப்பாவுக்குத்தான் நாக்குக் கோளாறு என்று வம்பு செய்தாள். தர்க்கம் முற்றி வம்சாவளியில் பாய்ந்ததும், "உங்கள் அம்மா கையில் இதைவிட உப்பு நீங்கள் தின்று இந்தக் கண்ணாரக் கண்டிருக்கேன்" இதுமாதிரி ஏதோ பேத்தினதும்—

—அவ்வளவுதான் கூடத்தில் நிமிஷம் வெடித்தது. அப்பா, கையை உதறிக்கொண்டு கலத்தைவிட்டு எழுந்தார்—நாங்கள் உட்கார்ந்த இடத்தில், பயத்தில் அப்படியே உறைந்துபோனோம்—கையை அலம்பிக் கொண்டு, பூஜையறையில் காத்ரெஜைத் திறந்து, தனக்கு வேணதை எடுத்துக்கொண்டு— தன் குழந்தைகளைத்

திரும்பிக்கூடப் பார்க்கவில்லை—சொக்காய்கூடப் போட்டுக்கொள்ளவில்லை, மேல் துண்டோடு வாசற்படியிறங்கினவர்தான். இன்னும் பார்க்கப் போகிறோம்.

எல்லாம் சாயந்திரம் திரும்பி வந்துடுவான்னு நெனைச்சோம். எனக்கு நன்னா இதுமட்டும் நினைப்பிருக்கு. அவருக்குப் பிரியமான வெங்காயத்தூள் பஜ்ஜி போட்டு அம்மா வெச்சிருந்தாள்.

சிங்கம் மாதிரி உத்யோகம். கொள்ளை வசதிகள். இத்தனையும் விட்டு மனுஷன் எங்கே போனான்? எப்படிப் போகத் துணிஞ்சுது? முடிஞ்சுது? கம்பெனி, பத்திரிகையில் விளம்பரம் செய்தது. சல்லடை போட்டுச் சலிச்சுப் பார்த்தாச்சு. பூமி விழுங்கிவிட்டது.

அப்பவும் அம்மாவுக்குத் தன் வாழ்வுக்கு உலை வந்தது பெரிசாகப் படவில்லை. அவளுடைய தோடைக் காணோம் என்று மூணு நாளைக்கு விடாமே அலர்த்தினாளே பாக்கணும்!

இத்தனைக்கும் அவளுடைய தோடு இல்லை. பாட்டியினுடையது. அப்படியே அப்பா எடுத்துச் சென்றிருந்தாலும், அவருடைய தாயாரின் தோடுக்கு, அவருக்கு இல்லாத உரிமை வேறு யாருக்கும் கிடையாது. மற்றப்படி, அம்மா சொந்தம் கொண்டாடும் நகைகள், பண்டங்கள் எல்லாம் அப்படி அப்படியே காத்ரெஜில் இருந்தன. அவைகூட அவர் வாங்கினவைதான். அவர் பண்ணிப் போட்டவைதான். அம்மா பிறந்த வீட்டிலிருந்து கொட்டிக் குவித்துக்கொண்டு வந்துவிடவில்லை. இதை நாங்களே பொறுமையிழந்து என்றேனும் இடித்துக் காட்ட நேர்ந்தால்...

"ஆமாம் பொண்ணைத்தான் கொடுப்பா. இன்னும் வேறு என்னத்தைக் கொடுப்பா?"

எதற்கும் ஒரு பதிலில் அம்மா கில்லேடி.

திடுதிப்புனு அப்பா போயிட்டாரே ஒழிய யாரையும் நடுத்தெருவில் நிறுத்திவிட்டுப் போகவில்லை. உயிலே எழுதி விட்டுப் போயிருந்தார். அவர் வழியில், ஆயுசு கட்டை எனும் முன்யோசனையோ என்னவோ? என் தாய் வழியில் ஆயிரம் பிறை பார்த்தவர்கள் இன்னும் இரண்டு மூன்றுபேர்கள் இன்றும் பல் கெட்டியாக இருக்கிறார்கள். ஆகையால், என் அம்மாவுக்கு ஜீன்ஸ் ப்ரகாரம் ஆயுசு கெட்டிதான்.

அப்பா எதையுமே திட்டம் போட்டுச் செய்வார். அது அவருக்குப் பிடிக்கும். அவருடைய சுபாவம். ஆபிசிலும் அவர் மேஜை சுத்தம். ஆபீஸ் சாவிகள், ஆபீசிக்கு ரிஜிஸ்தர் தபாலில் அவர் காணாமல் போன அன்றே வந்து சேர்ந்ததாகப் பின்னால் அறிந்தோம்.

அப்படி ஒன்றும் குறைகூறும்படியும் வைத்துவிட்டுப் போகவில்லை. அப்பா, கைராசிக்காரர், பொன்னன்... அப்பவே கணிசமாகச் சேர்த்து வைத்திருந்தார்.

அப்பா, அப்படி ஒன்றும் முன்கோபியுமல்ல. யாருடனும் அதிகம் பேசமாட்டார். அம்மா நேர் எதிர். பேசிப் பேசியே அரித்து எடுத்துவிடுவாள். அவளை அப்பா எப்படி அதுவரையே சகித்துக்கொண்டிருந்தார் என்பது நாளாக ஆகப் பெருகிக்கொண்டேயிருக்கும் கேள்விக்குறி. எட்டத்துப் பார்வையில்தான் விளிம்புக் கோடுகள் வெளிப்படுகின்றன. நாளாக ஆக அப்பாவைப் பற்றி நினைக்கையில், அதுவும் ஏனோ தெரியவில்லை ஒரு வாரமா அடிக்கடி நினைப்பில் வருகிறார்; ஏதோ மலைத் தொடரைப் பார்க்கிற மாதிரியிருக்கிறது. மலைத்தொடர் வளர்ந்துகொண்டே போகிறது. தொடரின் முடிவு எங்கே? தொடரின் மறுபக்கம் என்ன இருக்கும்? நீங்கள் எனக்குச் சொல்வீர்களா?

அவன் குரலில் தவிப்பு தெரிந்தது. லேசாக ஒரு தேம்பல்கூட வெளிப்பட்டதோ?

"சொல்வதற்கு நாம் யார்? நமக்கென்ன தெரியும்? அவள் விளிக்கும் விதம், சமயம், வழி எல்லாமே அவளுடையது. எதுவுமே நம்முடையதல்ல. நாமே நமக்கல்ல என்பதை உணர்வதுகூட அவள் கருணையால்தான் முடியும். அதுகூட நம்மில் இல்லை."

அபிதா, தூக்கக் கலக்கமாக வெளியே வந்து பெரியவர் மேல் சாய்ந்தாள்.

"சேப்புத் தாத்தா!"—குழந்தையின் அதரங்கள் அவர் மார்க்குலையில் முத்தத்தில் ஒற்றின.

கிழவருக்கு உடல் பூரா அதிர்ந்தது. அப்படியே சொகுஸாகச் சரிந்து, அவர் மடியில் படுத்துக் காலை நீட்டி, க்ஷணத்தில் உறங்கியும் போய்விட்டாள்.

நேர்ந்த நேரம், அதைச் சொல்லும் நேரம் இல்லை.

அதைப் பார்த்துக்கொண்டிருந்த அவனுக்கு மேலும் புழுங்கிற்று.

"எனக்கு ஒரே குழப்பமாயிருக்கு. இத்தனை உரிமையா, என்னவோ பிறந்ததிலிருந்து உங்கள் மடியில் தவழ்ந்து விளையாடின மாதிரி— இது அபிதாதானா? எனக்கு அதிசயமாயிருக்கு. விட்டுச் சொல்றேனே, உங்களைப் பார்த்தால் இப்போ பொறாமையாயிருக்கு."

'பூம் ரொய்ஞ்ஞ்...

மீனம்பாக்கத்திலிருந்து கிளம்பினதோ அல்லது நோக்கி வருகிறதோ—ஆகாய விமான ரீங்காரம் இடத்தை நிறைத்தது. அதன் முன்னணியிலிருந்து குரல் அவனை எட்டிற்று. தணலில் வைத்த கனகன—

"அவள் நம்மை வாத்யமாக வாசிக்கிறாள். அவள் ஸங்கீதேசுவரி—நம் உடம்பின் கணக்கற்ற நரம்புகள்,

தந்திகள்—நமக்குத்தான் கணக்கற்றவை, ஒவ்வொன்றின் வேர்ச் சுழிகூட—அவள் அறியாவிட்டால், அது அங்கு இல்லை— அவைகளின் ஸ்வரனுஸ்வரஸ் தானங்கள் அவளுடைய மீட்டலில் அதனதன் ஸாயுஜ்யத்துக்குக் காத்துக் கொண்டிருக்கின்றன. அதனதன் தனித்தனித் தாளப்ரமாணங்கள். லயப்ரமாணங்கள் அவளுக்குத்தான் தெரியும். அதனதன் பரமாணிக்கங்களும் அவளுக்குத்தான் சொந்தம். அவள் பண்ணிக்காட்டும் ஸ்ருதிபேதங்கள் நமக்கு அப்பாற்பட்டவை. ஆனால், அவள் ஸ்ருதிஸுத்தமானவள். பிந்துமாலினி. ஸுநாத விநோதினி. அமிர்த வர்ஷணி. லீலா கான லோலி.

நாமங்கள் கம்பீர சாட்டை. அவனுக்குத் தொண்டை வெளியே குதித்துவிடத் தவித்தது.

நாமங்கள், தாம் இறங்க இடம் தெரிந்து தைக்கும் ஏவு கணைகள்.

தகதிமி திமிதக—நெஞ்சை ஏதோ நடனம் மண்ணாய் மிதித்தது.

ஸமகஸஸமகரி நிமகஸ—

அர்தரத் தந்தியில் மந்திரத் தும்புரு.

தந்திர ப்ருகடை

தந்தினத்தன தான.

ஏயேமோ பழக்கமிலா வார்த்தைகள், ஓசைகள். காலம் கடந்த நித்திரை கலந்து அவன் நரம்புகளில் விழித்தெழுந்த மாதிரியிருந்தது.

இவர் என்னை என்ன பண்ணிக்கொண்டிருக்கிறார்? இந்த இன்ப பயங்கரம், இந்த நிலை இன்னும் சற்று நீடித்தால் நானே எனக்கில்லாமல் போய்விடுவேனோ? எனக்கு நான் வேணுமே! என் வீடு, என் கிரிஜா, என் அபிதா, என் அம்மா, இந்த மொஸாய்க் தரை, கொல்லைப்புறத்

தில் துளசிமாடம், வாழைக்கன்று, தென்னங்கன்று செம்பருத்தி, மல்லி, வேலிதாண்டி அதை மேயும் ஆடு எல்லாமுந்தான்— நான் சர்வ சாதாரணமானவன், பாமரங்கள்தான் என் படுகை. துறவு எனக்கு வேண்டாம் வேணவே வேண்டாம்—

தன்னைக் கவியும் அழுத்தத்தை, அசுரப்ரயத்னம் தந்த அரக்கபலத்தில் குகை வாயை மூடிய பாறாங் கல்லைத் தள்ளுவதுபோல் உதறினான். தன்னை அடித்துச் செல்லும் வெள்ளத்தில் கைநழுவும், பாமரங்களின் நினைவுக் கிளையை, கரைப்புல்லை, உயிர்ப்பிடியை மீண்டும் பற்றும் முயற்சியில், பேச்சை விட்ட இடத்தி லிருந்து தொடர்ந்தான்.

''ஆச்சு, நாங்களும் வயதுக்கு வந்து அவா அவா அச்சில் விழுந்தாச்சு. தம்பி, பிலாயில் இருக்கிறான். தங்கையைக் கோயமுத்தூரில் கொடுத்திருக்கிறது. அவளுக்கு பிரசவம் பண்ண அம்மா போயிருக்கா. சீடை முறுக்கு, பருப்புப் பொடி, திரட்டுப்பால்...இல்லையா, இதயாதிகளுடன்.

அம்மா ஒரு கவலையில்லா மனுஷி! அப்பாவைப்பற்றி அவள் கிணுங்கவேயில்லையே!

''செத்தவா பின்னாலேயே நாமும் போயிடறோமா? உடன்கட்டையேர்ற காலத்திலிருக்கறதா உங்கப்பா நினைச்சுண்டிருக்கா. ஏதோ திமிர்பிடிச்சுத் தன் பொறுப் பெல்லாம் விட்டுட்டு ஓடிப்போனால் அதுக்கு நான் ஆளா? திரும்பி வராத வரை, அப்பிடி இப்படி ஒண்ணும் தெரியாதவரை என் மஞ்சளுக்கும் பூவுக்கும் பங்கமில் லாமல் போயிடறேன்—

ஸர்வமங்கள மாங்கல்யே
சிவே ஸர்வார்த்த ஸாதகே

அவளுக்குத் தெரிந்த தோத்திரம் அது ஒண்ணுதான். ஒருநாள் தவறாமல் சொல்லிக்கொண்டு குத்துவிளக்கை நமஸ்கரிப்பாள். 'இப்படியும் ஒரு பிறவி உண்டா?' என்று அதிசயிப்பேன். ஆனால், அவளை என்ன செய்யமுடியும்?

''அவளுடைய நாமங்கள், அஸ்திரங்கள் நட்ட வேலி. அதன் பாதுகாப்பை அவளால்கூடத் தாண்டமுடியாது.''

பெருமூச்செறிந்தான்.

''எங்களைத்தான் பார்க்கிறீர்கள். நான், இவள், அபிதா, எங்களுக்கு 'லேட் மாரியேஜ்' காரணம்? ஜாதகத்தில் கேட்டை மூட்டை செவ்வாய்க்கிழமை. தோஷத்துக்குத் தோஷப் பொருத்தம் ஒருவரையொருவர் அடைய அப்படித் தேடி அலைஞ்சிருக்கோம். அ—ஹ்—ஹா' — வாய்விட்டுச் சிரித்தான். ''நாளாகித்தான் அபிதாவும் பிறந்தாள். அதற்கே எத்தனை தவம், அரசமரம், ராமேசரம். பிள்ளை எதிர்பார்த்தாள்; கிடைத்தது அபிதா. அதுவும் ஏதோ இணங்காத கருவிலிருந்து பிடுங்கியெடுத்த மாதிரி, சிரம ப்ரசவம். அதனால்தான் எனக்கு 43, அபிதா 3, அவளுக்கு முப்பத்தி அஞ்சு— அஹம்—ஆறு—''

''கணக்கெல்லாம் ஒப்பிச்சாச்சா? இனி சாப்பிட வரலாமா?''

ஓஹோ, ஒட்டுக் கேக்கறையா? உன்னை மறந்தே போச்சு. நல்லவேளை, ஞாபகப்படுத்தினே. வயிற்றில் குழி விழுந்தமாதிரி ஒரே பசி. ஸார் எழுந்திருக்கிறேளா?''

''ராச்சாப்பாடு எனக்குக் கிடையாது.''

''என்ன ஸார், என் வீட்டில் கை நனைக்கக்கூடாதுன்னு கங்கணமா?''

அவளுக்குக்கூட என்னவோ மாதிரியிருந்தது. புதுசா கத்திரிக்காய்ப் பொரிச்ச குழம்பு பண்ணியிருக்கேன். எழுந்திருங்கோ—இல்லை, ஒரு கிண்ணத்தில் ஸ்பூன் போட்டு—

கிழவர் புன்னகை புரிந்தார். வேறு பதில் பேச வில்லை. அவளுக்கு எரிச்சலாக வந்தது. வெடுக்கென்று அவர் மடியிலிருந்து பிடுங்குவதுபோல் குழந்தையைத் தூக்கித் தோளில் சாய்த்துக்கொண்டு உள்ளே சென்றாள்.

இன்று ராத் தங்க ஒழுங்கையில் இடம் கொடுத்தால் போதும். பாய், படுக்கை எதுவும் வேண்டாம். பழக்க மில்லை. வாசற்கதவைப் பூட்ட வேண்டாம் ஓரிருமுறை இரவில் எழுந்திருக்க நேரிடலாம்.

ஆனால், ஜல உபாதைக்கு இருமுறை அவன்தான் எழுந்தான். முதல் தடவை அவர் மல்லாந்து நன்கு உறங்கிக் கொண்டிருந்தார்.

இரண்டாம் முறை, அவன் வாசலுக்கு வந்தபோது அவர் இல்லை.

*   *   *

வீல் என்று அலறல் கேட்டு, கிரிஜா அலறிப்புடைத் தாள். மூவரும் கூடத்தில்தான் மின்விசிறி அடியில் படுக்கை. நன்கு விடிந்திருந்தது.

வாசலைப் பார்த்த கூடத்து ஜன்னலை அவன் சுட்டிக் காண்பித்துக் கொண்டிருந்தான்.

அவனுக்கு வாய் ஏதோ குழறிற்று. அவன் விழி வட்டங்கள் போன வழி அவள் பார்வை சென்றது.

ஜன்னல் சுவர்க்கட்டையில் ஒரு சாக்கலேட்.

ஒரு ஜோடி சிவப்புக்கல் தோடுகள் சிரித்துக்கொண்டு இருந்தன.

# ஜனனி

அணுவுக்கு அணுவாம் பரமாணுவில் பாதியாய் உருக்கொண்டு, பராசக்தியானவள் ஜன்மமெடுக்க வேண்டும் என்னும் ஆசையால் தூண்டப் பெற்றவளாய் ஆகாய வெளியில் நீந்திக்கொண்டிருந்தாள்.

அப்பொழுது வேளை நள்ளிரவு. நாளும் அமாவாசை.

ஜன்மம் எங்கு நேரப்போகிறதோ அங்கே போய் ஒண்டிக்கொள்வோம் என்னும் ஒரே அவாவினால் இடம் தேடிக் கொண்டு காற்றில் மிதந்து செல்கையில் எந்தக் கோவிலிலிருந்து தன் இச்சையைப் பூர்த்தி செய்துகொள்வதற்காகத் தேவி புறப்பட்டாளோ அந்தக் கோவிலுக்கு எதிரேயுள்ள திருக்குளத்தின் அருகில் ஒரு மரத்தின் பின்னிருந்து முக்கல்களும், அடக்க முயலும் கூச்சல்களும் வெளிப்படுவதைக் கேட்டாள். குளப்படிக்கட்டில் ஓர் ஆண்பிள்ளை குந்தியவண்ணம் இரு கை விரல் நகங்களையும் கடித்துக்கொண்டு பரபரப்போடு அவஸ்தைப்பட்டுக் கொண்டிருந்தான்.

ஓர் இளம் பெண் மரத்தடியில் மல்லாந்து படுத்தவண்ணம், இடுப்பைப் பிடித்துக்கொண்டு துடித்தாள்.

ஜன்மம் எடுக்கவேண்டுமெனவே பரமாணுவாய் வந்திருக்கும் தேவியானவாள், உடனே அவ்விளந்தாயின் உள் மூச்சு வழியே அவளுள்ளே புகுந்து, கருப்பையில்

பிரவேசித்தாள். ஆனால், ஏற்கனவே அவள் வகுத்திருந்த விதிப்படி அவ்விடத்தில் ஒரு பிண்டம், வெளிப்படும் முயற்சியில் புரண்டுகொண்டிருந்தது.

அதனுடன் தேவி பேசலுற்றாள்:

''ஏ ஜீவனே, நீ இவ்விடத்தை விட்டுவிடு. நான் இந்தக் காயத்தில் உதிக்கப் போகிறேன்.''

''தேவி, சத்திய ஸ்வரூபியாகிய உனக்குக் கேவலம் இந்த ஜன்மத்தில் இப்பொழுது ஆசை பிறப்பானேன்? இதன் உபாதைகளைக் கடந்து உன்னிடம் கலக்கத்தானே நாங்கள் எல்லோரும் இப்படித் தவிக்கிறோம்!''

''குழந்தாய், நான் குழந்தையாயிருக்க விரும்புகிறேன். அன்னையாய் இருந்து, என் குடும்பமாகிற இவ்வுலகங்களைப் பராமரித்துப் பராமரித்து நான் கிழவியாகிவிட்டேன். எனக்கு வயதில்லையாயினும், குழந்தையாக வேண்டும் என்னும் இச்சை ஏற்பட்டுவிட்டது—''

''தேவி, இப்பொழுது நீ நினைத்திருப்பது அவதாரமா?''

''இல்லை; பிறப்பு. நான் முன்னெடுத்த ஜன்மங்கள், பிறர் தவத்தைத் திருப்திப்படுத்துவதற்கும், துஷ்டர்களைச் சம்ஹரிப்பதற்கும் ஆகும். ஆனால் இப்போதோ, இது என் சுய இச்சை. அப்பொழுதெல்லாம், நான் குழந்தையுருவாக நெருப்பிலோ, பூவிலோ, சங்கிலோ உலகத்தில் இறங்கினேன். இப்போதோ, பாங்காக ஓர் உடலிலிருந்தே புறப்பட விரும்பினேன்.''

''தேவி, உன் விளையாட்டை நாங்கள் அறியோம். ஆனால், ஜன்மமெடுக்கும் இந்த விளையாட்டில் நீ ஏமாந்துபோவாய், உன்னைத்தான் நாங்கள் நம்பியிருக்கிறோம். நீயும் எங்களுள் மூழ்கி, உன்னையும் இழந்துவிட்டால், பிறகு நாங்கள் செய்வதுதான் என்ன?''

''இதையேதான் என் கணவரும், என் இச்சையை அவரிடம் நான் வெளியிட்டபோது சொன்னார்: 'ஜன்மாவில் முன்னைவிடக் குழப்பங்களும் சந்தேகங்களும் அதிகரித்துவிட்டன. புத்தி அதிகமாய் வளர்ந்து, அசல் சத்தியத்துக்குப் போட்டியாக மாயா சத்தியத்தைச் சிருஷ்டித்துக்கொண்டு, அதைப் பின்பற்றி, உண்மைக்கும் பொய்க்கும் உள்ள வித்தியாசத்தைக் குழப்பிக்கொண்டிருக்கிறது. நிகழ்ச்சிகளைவிட, நிரூபணைக்கு முக்கியம் அதிகமாய்விட்டது. பிறப்புக்கும் இறப்புக்கும் கொஞ்சமாவது ஓய்வு கொடுக்கவேதான் பிரளயத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்தேன். ஆனால் அசத்தியத்திற்காகவே ஜீவன்கள் ஒன்றையொன்று அழித்துக்கொள்ளும் வேகம், பிரளயத்தின் அவசியத்தையே குறைத்துக்கொண்டிருக்கிறது.''

'நான் கேட்டேன்: 'சத்தியத்துக்கு இறப்பு ஏது, பிறப்பு ஏது?'

''அவர் சொன்னார்: 'வாஸ்தவந்தான். ஆனால் அதற்கு வளர்ப்பு மாத்திரம் உண்டே. சத்தியம் வளர்ந்தால் தானே பயன்படும்? உன்னை ஜன்மங்கள் இதுவரை பாதிக்காமல் இருப்பதும், நீ வளர்ப்பு அன்னையாக இருப்பதும், உன் குழந்தைகள் வளர்ப்புக் குழந்தைகளாக இருப்பதும், நீ நித்திய கன்னியாக இருப்பதும் எதனுடைய அர்த்தம் என் நினைத்துக்கொண்டிருக்கிறாய்? நீயும் உன் குழந்தைகளும் வளர்ப்பதோ, அல்லது வளர்க்க முயல்வதோ, என்ன? சத்தியம். ஆகையால், நீ ஜன்மத்தில் படும் சபலமே அசத்தியத்தின் சாயைதான்...'' என்றார்.

''அப்படியும் நான் கிளம்பிவிட்டேன். ஆகையால், என் குழந்தாய், நான் குழந்தையாவதற்கு எனக்கு இடம் விடு பார், மாடிமேல் உலக்கை இடிப்பதுபோல், என் குழந்தை பிரசவ வேதனையில் இடும் கத்தல் கேட்கிறது! அவளுக்கு மீறி அவளைத் துன்புறுத்துவது தகாது''

"தேவி, ஜன்மத்தில் அகப்பட்டவன், பொறியுள் அகப்பட்டுக்கொண்ட எலி!"

"குழந்தை, அதைப்பற்றி நீ கவலைப்படாதே. நான் எலியாய்ப் பொறியுள் புகுந்தாலும், நான் எப்பொழுது நினைத்தேனோ அப்பொழுது வெளிப்படப் பொறிக்கதவு எனக்கு எப்போதும் திறந்திருக்கும்."

"தேவி, நீ இதை அறியவேண்டும்: பொறியுள் எலி அகப்பட்ட பிறகு, கதவைத் திறந்து வைத்தாலும், அது பொறிக்குள்ளேயே தான் சுற்றிக்கொண்டிருக்கும். அகப்பட்டுக்கொண்ட பிறகு, அது விடுதலைக்குக்கூடப் பயப்படுகிறது."

"சத்தியம் எப்போதும் ஜயிக்கும். ஆகையால் எனக்கு விரைவில் இடம் விடு; தவிர, உனக்கு இப்பொழுது விடுதலை அளிக்கிறேனே, அதனால் உனக்குச் சந்தோஷம் இல்லையா?"

"ஆனால் இந்த ஜன்மத்தின் மூலம் எனக்கும் விதித்திருக்கும் வினை தீர்ந்தாக வேண்டுமே!"

"அதைத்தான் உனக்குப் பதிலாக நான் அநுபவிக்கப் போகிறேனே! எந்தப் பரமாணுவின் வழி நான் இந்தக் காயத்தினுள் வந்தேனோ, அதன் உருவில் நீ இத்தாயின் வெளி மூச்சில் வெளிப்படுவாயாக!—ஆசீர்வாதம்."

"தேவி, நான் மகா பாக்கியசாலி! எல்லோருக்கும் பிறப்பு இறப்பு இரண்டையும் அநுபவித்த பிறகுதான் முக்தி என்றால், எனக்குப் பிறப்பின் முன்னரே விடுதலை கிட்டிவிட்டது! நான் செலவு பெற்றுக்கொள்கிறேன்!"

அந்தப் பரமாணு வெளிப்படுகையில் அவள் வீரிட்டாள்.

"என்ன? என்ன?"— குளத்தண்ட காத்திருக்கும் ஆண்பிள்ளை, அலறிக்கொண்டே மரத்தண்டை ஓடி வந்தான்.

கொஞ்ச நாழிகை பேச்சு மூச்சில்லை. பிறகு திடீரென்று ஜலத்தில கல்லை விட்டெறிந்தாற்போல், நள்ளிரவை ஒரு புதுக் குரல் கிழித்தது.

அவனுக்கு உடல் புல்லரித்தது. "நான் வரட்டுமா?"

"இல்லை; இல்லை—சரி, இப்போது வா!"

அவன் இன்னமும் சற்று அருகில் வந்தான்; ஆனால் இருளில் ஒன்றும் தெரியவில்லை.

"என்னா பிறந்திச்சு?"

இருளில் அவள் குழந்தையைத் தடவிப் பார்த்து விட்டுச் சொன்னாள்: "பொம்புள்ளையாட்டம் இருக்குது."

"அட கடவுளே!"

பராசக்தி சிரித்தாள். ஆனால் மறுகணம் அவளுக்கு மூச்சுத் திணறியது. அவள் முகத்தின்மேல் ஓர் அழுக்குத் துணி விழுந்தது, குரல்வளையை இரு கட்டைவிரல்கள் அழுத்தின. மூச்சு பயங்கரமாய்த் திணறியது. அந்த எமப் பிடியினின்று வீணே விடுவித்துக்கொள்ள முயன்றாள்.

"என்னம்மே, கொழந்தே— அடிபாவி! என்னா பண்றே?"

"என்னெ சும்மா விடுன்னா!"

"அடி கொலைகாரி!"

"விடுன்னா விடு—"

குழந்தையை அவன் பிடுங்கிக்கொண்டான். "ராச்சஸி! உனக்குப்போய் மகமாயி கொளந்தையெக் குடுத்தாளே!"

''அவளா குடுத்தா! நீ குடுத்தே!''

''இருந்தா என்ன? பாருடீ இந்தப் பாவத்தை, என் மாரிலே பாலைத் தேடுது!''

''சரிதான். என் புருசன் பட்டாளத்திலேருந்து வந்தால், 'இந்தா, சாமி குடுத்துது; கொஞ்சு'ன்னு குடுக்கச் சொல்றியா?''

''கொடும்பாவி, அதனாலே கொலை பண்ணணுமா?''

''சரி, என்னா பண்ணப்போறே?''

''ஓடிப்போயிடுவோம்.''

''அதுவும் உன்னை நம்பித்தானே!''

''சரி, வேண்டாம். இந்தக் குளத்தங்கரையிலேயே விட்டுட்டுப் போயிடுவம். தானா உருண்டு தண்ணியிலே விழுந்தாலும் விழுந்துட்டுப் போவுது. பண்ணின பாவம் பத்தாதுன்னா நம்ம கையினாலே சாவணும்? இந்த ஒரு தடவைகூட எடுத்துவிட மாட்டியா?''

''நீ புண்ணியம் தேடற அழகை நீதான் மெச்சிக்கணும்—''

''அடி பாவி! ஆடு மாடுங்ககூட உன்னைவிட ஒசத்திடீ!''

''அது சரி. நான் மனுச ஜன்மந்தானே? இந்த வெட்டிப் பேச்செல்லாம் பேசி நேரத்தை ஓட்டாதே. விட்டுட்டு வரதுன்னா வா, நான் கண்ணாலே கூடப் பாக்கமாட்டேன். பாத்தாக்கூட ஒட்டிக்கும்.''

''நீ இப்படிப்பட்டவன்னு எனக்கு அப்பொ தெயாதுடீ, தெரிஞ்சா சாகுவாசங்கூட வெச்சுக்க மாட்டேன். உனக்கு எப்பவும் உன்னைப் பத்தின நெனப்புத்தானே?''

குரல்கள் எட்ட எட்டப் போய்த் தூரத்தில் அமுங்கிப் போயின.

குழந்தை தன்மேல் போட்டிருந்த கந்தலை, முஷ்டித்த கைகளாலும் கால்களாலும் உதைத்துக் கொண்டு அழுதது. உடலின் பசியும் குளிரும் புரியவில்லையாயினும், பொறுக்க முடியவில்லை.

அத்துடன் இந்தத் தனிமை—இதுவரை அவளுக்குப் பழக்கப்பட்டது. அரூபமாய், எவற்றிலும் நிறைந்த, உள் சத்தின் ஒப்பற்ற ஒரு தன்மையின் தனிமை. ஆனால் இதுவோ, ஓர் உருவுள் கட்டுப்பட்டுவிட்டதால் அதற்கே தனியாயுள்ள தன் தனிமை.

கோபுர ஸ்தூபியின் பின்னிருந்து வெள்ளி, தேவியை அஞ்சலி செய்துகொண்டே கிளம்பியது. காளியாய்க் கத்திக் கத்தி, குழந்தைக்குத் தொண்டை கம்மிவிட்டது. புறப்பட்டுக்கொண்டிருக்கும் சூரியனுடைய கிரணங்களில் கோபுரத்தின் பித்தளை ஸ்தூபி பொன்னாய் மின்னியது.

அப்போது வயதான ஒரு பிராமணர், குளிப்பதற்காகப் படிக்கட்டுகளில் வெகு ஜதக்கிரதையாய் இறங்கினார். 'வீல் வீல்' என்று இருமுறை அலறி, குழந்தை அவர் கவனத்தை இழுத்தது.

''ஐயோ பாவமே! யார் இப்படிப் பண்ணினது?''

குழந்தையை அவர் வாரி எடுத்துக்கொண்டார். அதன் தாய் ஒருவேளை குளத்தில் மிதக்கிறாளா அல்லது வேறு எங்கேனும் போயிருக்கிறாளா என்று சுற்றுமுற்றும் தேடிப் பார்த்துவிட்டு, வேறு வழி இல்லாமல் வந்த காரியத்தையும் மறந்துவிட்டு, அதை எடுத்துக்கொண்டு வீட்டுக்குப் போனார்.

அவர் சம்சாரம் வீட்டு வாசலில் கோலமிட்டுக் கொண்டிருந்தாள். கோலத்தில் குனிந்த தலை நிமிர்ந்த போது, அவள் முகம் அழகாக இருப்பதை ஐயர் கைக்குழவி கண்டது. வாலிபந்தான். ஐயர் கைமூட்டையைக் கண்டதும், அவள் புருவங்கள் அருவருப்பில் நெரிந்தன.

''இப்போ என்ன இது?''

''அடியே, இன்றைக்கு என் மனம் ஏதோமாதிரி குதிக்கிறதடி! உள்ளே வா. வெள்ளிக்கிழமையும் அதுவுமா நமக்கு ஒரு குழந்தை கிடைத்திருக்கிறது. நான் உன்னிடம் அப்பொழுதே சொன்னேனே, மூன்று நாட்களாய் ஒரே கனவைக் கண்டு கொண்டிருக்கிறேன் என்று. வா, வா.'' தொண்டை கம்மிவிட்டது.

அவர் கண்களில் ஜலம் தாரையாய்ப் பெருகி நின்றது. பூஜைக்கூடத்தின் நடுவில் செதுக்கிய தாமரைப்பூக் கோலத்தில் குழந்தையை வளர்த்திவிட்டுச் சுவரில் மாட்டியிருக்கும் படங்களுக்குக் கைகூப்பி நின்றார். அவர் தேகம் நடுங்கிற்று.

அவர் மனைவி சாவகாசமாய்ப் பின்னால் வந்தாள். ஐயரின் பரவசம் அவளுக்குப் புரியவும் இல்லை, பிடிக்கவும் இல்லை. கோலக் குழாயை ஜன்னலில் 'லொட்' டென்று வைத்துவிட்டு, இடுப்பில் ஒரு கையை ஊன்றிக் கொண்டு காத்துக்கொண்டு நின்றாள்.

''என் கனவைச் சொன்னேனோ?''

''எந்தக் கனா? நீங்கள் சொல்ல ஆரம்பித்தால் காத வழி போகுமே, உங்கள் கனா!''

''மூன்று இரவுகளாய் ஒரே கனவைக் கண்டுகொண்டிருக்கிறேன்... எங்கிருந்தோ ஒரு குழந்தை என் பின்னால் வந்து, மேல துணியைப் பிடித்து இழுத்து, அதன் கழுத்து

நோக என்னை நிமிர்ந்து பார்த்து, 'தாத்தா, உங்காத்துலே எனக்கு இடம் கொடேன்!'' என்று கேட்கிறது. நாலு ஐந்து வயசுக்கு மேல் இராது. அரையில் மாந்தளிர்ப் பட்டுப் பாவாடை; மேலே சொக்காய் கிடையாது; திறந்த மார்பில், கழுத்தில் காரடையா நோன்புச் சரடு மாதிரி ஒரு மாங்கல்யக் கயிறு. அவ்வளவுதான்.

'அது கேலியாக் கேட்டதோ, வேணுமென்றுதான் கேட்டதோ, தெரியாது. ஆனால் கேட்கும்போதெல்லாம், என் எலும்பு ஒவ்வொன்றும் தனித்தனியாய் உருகிற்றுடி! நானே கரைந்துபோய்விடுவேன் போலிருந்தது. என் கனவிற்குத் தகுந்தாற்போல் இன்றைக்கு ஸ்நானம் பண்ணப் போன இடத்திலே, இது அநாதையா—''

''சரிதான்! 'தாத்தா'ன்னு முறை வெச்சு உங்க கனாக் குழந்தை கூப்பிட்டத்துக்கோசரம் எனக்கு ஒரு பேத்தியைக் குளத்திலேருந்து பொறுக்கிப் பாத்து எடுத்துண்டு வந்தேளாக்கும்! எந்த வில்லிச்சி பெத்துப் போட்டுட்டுப் போனாளோ— போலீஸுலே—''

குழந்தை கத்த ஆரம்பித்துவிட்டது.

''ஐயோ, பசிடீ—'' அதன் பசியழுகையைப் பார்க்கையில், அந்த அம்மாளின் முகம் உள் போராட்டத்தில் முறுகிச் சவுங்கியது. அவளையும் மீறிக் கைகள் குழந்தையை வாங்கிக்கொண்டன. அன்னையின் வாயும் கைகளும் பாலிடத்தை ஆத்திரத்துடன் தேடித் தவித்தன. அந்த அவஸ்தையைக் கண்டு ஐயர் தலை குனிந்தது.

''நைவேத்தியப் பாலைப் புகட்டு; வேறே வாங்கி வருகிறேன்—'' கீழ்நோக்கிய அவர் வார்த்தைகள் பூமியில் தெறித்து எழும்பின.

அம்மாள் ஆத்திரத்துடன் கீழே உட்கார்ந்து, குழந்தையை மடியில் 'படக்'கென்று கிடத்திக் கொண்டாள். வார்த்தைகள் வாயினின்று வெடித்து உதிர்ந்தன.

''இப்போ திருப்தியாயிடுத்தோன்னோ? மூணுபேரை ஏற்கனவே முழுங்கினேள். ஒருத்தியை வயசு வரத்துக்கு முன்னாலேயே மாரி தன்கிட்ட வரவழைச்சுண்டுட்டாள்; இன்னொருத்தி ஸ்நானம் பண்ணப்போன இடத்துலே குளத்தோடே போயிட்டா. உங்களுடைய ஏழா மடத்துச் செவ்வாய்கிட்டெ அப்பவாவது உங்களுக்குப் பயங் கண்டிருக்கணும். இல்லை. மூணாவது பண்ணிண்டேள்; மூணும் பெத்தேள்; தக்கல்லே. ராமேசுவரம் போனேள். எல்லோரும் பீடையைத் தொலைக்கப் போவார்கள். நீங்கள் என்னடான்னா, கொண்டவளை வயிறும் பிள்ளை யுமா அங்கேயே காலராவிலே தொலைச்சுப்பிட்டு இன்ன மும் பாவமூட்டையைச் சம்பாதிச்சுண்டு வந்தேள்.'

ஐயர் புழுவாய்த் துடித்தார். ''என் பாவந்தான்; ஆனால், என் எண்ணம்—''

அவள் சீறினாள். அவளுக்கு ஆவேசம் வந்துவிட்டது. ''உங்கள் எண்ணத்தைப்பத்தி என்னிடம் பேசாதேயுங் கள். குலைவாழையை வெட்டிச் சாய்ச்சாவது நாலாந் தரம் பண்ணிக்கணும்னு தோணித்தே, அதுதான் உங்கள் எண்ணம். ஏதோ உங்களிடம் நாலு காசு இருக்கு. என் வீட்டுலே சோத்துக்குக்கூட நாதியில்லே; அதனாலே என்னை விலைக்கு வாங்கிப்பிட்டோமுங்கற எண்ணந் தானே?''

''இந்தக் குடும்பம் விளங்க ஒரு குழந்தை...''

அம்மாள் 'கடகட'வெனச் சிரித்தாள். ''குழந்தை யைக் கண்டுட்டேளா? கனாவிலேயும், குளத்தங்கரை யிலும் தவிர!''

பதிலையும் தனக்குள்ளே அடக்கிய அக்கேள்வி, பழுக்க நெருப்பில் காய்ச்சியபிறகு, அடிவயிற்றுச் சதை யில் மாட்டிக் குடலைக் கிழிக்கும் கொக்கி மாதிரி இருந்தது. நிறைந்த ஆச்சரியத்தில் கத்தி அழக்கூட மறந்துவிட்டாள் குழந்தை!

திடீரென்று அங்கே தேங்கிய சப்த ஓய்ச்சலைக் கண்டதும் அம்மாளுக்கே பயமாய்விட்டது. அவசர அவசரமாய்ப் பாலைக் கொண்டுவந்து குழந்தைக்குப் புகட்ட ஆரம்பித்தாள். வெள்ளிக் கரண்டியில் கொஞ்சங் கொஞ்சமாய் ஊட்டுகையில் குழந்தையின் கடைவாயில் பால் வழிந்தது.

திடீரெனக் குழந்தையின் முகத்தின்மேல் இரண்டு நெருப்புத் துளிகள் விழுந்தன. அம்மாளின் கண்ணீர் கனலாய்க் கொதித்தது. அதன் வெம்மை அம்பாளின் உள் இறங்குகையில், 'இவள் ஆத்திரப்படுவது வெறும் கோபத்தினால் அல்ல; வெதும்பிப்போன தன் வாழ்க்கையின் வேதனை தாங்காமல் துடிக்கிறாள்' என்று அவள் உள்ளத்துக்குச் சொல்வதுபோல் இருந்தது.

குழந்தைக்குப் பசி தீர்ந்துவிட்டது. அம்மாளின் தாலியைக் கெட்டியாய்ப் பிடித்துக்கொண்டு தூங்க ஆரம்பித்தாள். அம்மாவுள் கல்லாய் உறைந்துபோயிருந்த ஏதேதோ, இப்பொழுது நெய்ப் பாறை உடைவதுபோல் கிளர்ந்து உருகும் இன்பம் பயங்கரமாக இருந்தது. குழந்தையை இறுக அணைத்துக்கொண்டு, தன் கணவரிடம் சென்றாள்.

''பார்த்தேளா குழந்தையை, எவ்வளவு கனம்! என்ன பண்றேள், பஞ்சாங்கத்தைப் புரட்டிண்டு?''

''நேற்று என்ன நக்ஷத்திரம், பார்க்கிறேன். ஜாதகம் கணிக்கலாமா என்று—''

''சரியாய்ப் போச்சு! இது என்னிக்குப் பிறந்தது, எந்தவேளை, என்ன ஜாதின்னு கண்டோம்? இதைப்பத்தி நமக்கென்ன தெரியும்?''

ஐயர் சிந்தனையில் ஆழ்ந்தார். அவர் மனைவியின் உள்வாக்கு அவளையும் அறியாமல், ஆதிபராயின்

நிர்க்குண நிராமயத் தன்மையை வெளியிட்டது. வந்த குழந்தையை அங்கீகரிப்பதைத் தவிர அதன் ஆதியைச் சோதிக்க முயல்வதில் என்ன பலன்?

"சரி, இவளுக்கு என்ன பேரை வைப்போம்?"

அம்மாள் கொஞ்சலாய், "பிடாரி மாதிரி கத்தறது, 'பிடாரி'ன்னு வையுங்களேன். நான் ஊர்ப் பிடாரி; இவள் ஒண்ட வந்த பிடாரி!"

ஐயர், பிள்ளையார் சுழியிட்டு 'ஜனனீ ஜன்ம சௌக்கியானாம்' என ஆரம்பித்துவிட்டிருந்த கைக் காகிதத்தைப் பார்த்துக்கொண்டே இருந்தார். அவர் முகம் சட்டென மலர்ந்தது.

குழந்தையைப் பார்த்து மெதுவாய்க் கூப்பிட்டார்:

"ஜனனீ, ஜனனீ..."

* * *

'பாருங்கோ—பாருங்கோன்னா! கொழந்தை விளக்கைப் பாக்கறா!"

பிறந்தபின் சக்தி முதல் முதலாய் இப்போதுதான். ஆண்டவனின் ஜோதி ஸ்வரூபத்தை விளக்குச் சுடரில் பார்க்கிறாள். தானும் அதுவாய் இதுவரை இழைந்திருந்துவிட்டு, இப்பொழுது அதனின்று வெளிப்பட்ட தனிப் பொறியாய். அதனின்று விலகி, அதையே தனியாயும் பார்க்கையில், அதன் தன்மை ஆச்சரியமாய்த்தான் இருக்கிறது ஆனால் அவள் இப்பொழுது பொறியாயினும், அவன் தூணாய்த்தான் விளக்குச் சுடரில் நிற்கிறான்.

"ஜனனீ!"

'இதைப் பாக்கமாட்டேங்கறேளே! குழந்தை சிரிக்கிறா!" அம்மாள் தன் ஆனந்தத்தில் குழந்தை மாதிரி கை கொட்டிச் சிரிக்கிறாள்.

''ஜனனீ! விளையாட்டு போதுமா? திரும்பி வருகிறாயா?''

''இன்னும் ஆரம்பிக்கக்கூட இல்லையே, அதற்குள்ளாகவா?''

''ஜனனீ, இந்த விளையாட்டுப் போகப் போகப் புரியாது.''

''புரிந்துகொள்ள வேண்டுமென்றுதானே வந்திருக்கிறேன்?''

''சரி, உன் இஷ்டம்! ஆனால் ஆரம்பிக்கையிலேயே உன் விளையாட்டு உன் இஷ்டம்போல் ஆரம்பித்ததோ?''

''ஏன்?''

''நீ தாய்ப்பாலுக்கு ஆசைப்பட்டாய். கிடைத்ததோ? உன் உயிருக்கே உலை வந்தது. நீ தப்பியது யார் புண்ணியமோ; எப்படியும் உன் சக்தியினால் அல்ல!''

''என்னைப் பார்; கண்ணாட்டி பாருடீ! விளக்கையே பார்த்துண்டிருக்கையே—'' ஜனனி பார்க்கிறாள்.

''ஜனனீ! ஜனனீ! விளையாட்டில் இன்னும் சிக்கிக்கொள்கிறாய். அந்தப் பார்வையை அவளிடம் ஏன் காட்டினாய்? பார்க்கச் சொன்னால் நேர்ப் பார்வையில்லாது கடைக்கண் நோக்கு ஏன்?—'

அம்மாளுக்குத் திடீரென வயிற்றைக் குமட்டியது. 'குடு குடு'வென்று முற்றத்திற்கு ஓடினாள். தொண்டையைத் திரும்பத் திரும்ப மறுக்கிற்று. வாந்தி எடுக்கும் சத்தம் கேட்டு ஐயர் அறையிலிருந்து வெளிவந்தார்.

''என்ன உடம்பு?''

அம்மாளின் சிவப்பு முகத்தில் ரத்தம் குழம்பியது. கண்களில் ஜலம் ததும்பியது. வாந்தி எடுத்த பிரயாசையா, அல்லது வெட்கமா? அம்மாள் பேசவில்லை. குனிந்து கொண்டு நின்றாள்.

''ஓ!''—ஐயரின் விழிகள் அகல விரிந்தன. அவள் மௌனத்தின் அர்த்தம் பிரம்மாண்டமான அலையாய் அவர்மேல் மோதியது. உடலில் ஒரு சிறு பயங்கூடக் கண்டது. படங்களை அஞ்சலி செய்துகொண்டு அப்படியே நின்றார்.

''ஈசுவரி! எல்லாம் உன் கிருபா கடாக்ஷம்!''

விளக்கில் சுடர் மறுபடி பொறி விட்டது.

''சரி, சரி; உன் கைவரிசையைக் காட்டுகிறா யாக்கும்! செய், செய்......''

சுடர் மங்கியது. குழந்தை, முகம் விசித்துக் கைகால் களை உதைத்துக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டாள்.

* * *

ஐயர் வீடு ரமித்தது, அவள் வந்த இடத்தில் திரு பெருகக் கேட்பானேன்? திரும்பி வராது எனக் கைவிட்ட பொருள்கள், பன்மடங்கு பெருக்கிக்கொண்டு வந்து சேர்ந்தன. எதிர்பாராத இடங்களிலிருந்து சொத்துக்கள் வந்து செறிந்தன. ஆரம்பத்தில் நஷ்டமென்று கண்டு நம்பிக்கை இழந்த காரியங்களெல்லாம், கடைசியில் பெருத்த லாபத்தைச் சேர்க்கும் வழிகளாய் மாறின.

''இந்தப் பொண்ணு எந்தப் பொண்ணோ! ஆனால் நல்ல ராசி இருக்குடி! அது இருக்கிற இடத்தில் பட்ட மரங் கூடப் பச்சையாத் தழைச்சுப் பூத்துக் குலுங்கறதுடீ!''

* * *

குழந்தை விளையாடுகிறாள்—

"'ஜனனீ!'

ஐயர் மடி உடுத்துக்கொண்டு ஆசாரமாய்ப் பூஜையில் அமர்ந்திருக்கிறார். அவர் மூக்கைப் பிடித்துக்கொண்டு எண்ணும் தெய்வம் அவர் மடிமேலேயே தவழ்வது அவருக்குத் தெரியவில்லை.

"அடியே, குழந்தையை எடுடீ. இங்கே சாமானைக் கொட்டறாள்—"

"இப்போ எந்தக் குழந்தையை வச்சுக்கச் சொல்றேள்? உங்கள் குழந்தையையா? என் குழந்தையையா?"

அம்மாளுக்கும் ஜனனிக்கும் எப்படியும் ஒட்டவில்லை. அவளுக்குள் ஏதோ ஒன்று அக்குழந்தைக்கு அஞ்சியது. அவளுக்கே என்னவென்று தெரியவில்லை. கண்டெடுத்த குழந்தை என்பதனாலோ என்னவோ, நினைவுக்குக்கூடப் பிடிபடாத ஒரு அவநம்பிக்கை அதன்மேல் வளர்ந்து கொண்டே வந்தது. ஆனால் அவளுள் இன்னொரு குரல் இந்த அவநம்பிக்கைக்கு எதிராக ஓலமிட்டது. ஆனால் அந்த அவநம்பிக்கையே அந்தக் குரலை அமுக்கித் திணற அடித்தது. பிறகு அவளுக்கே ஒரு குழந்தை பிறந்தது. அப்போது உள்குரலை, அந்த அவநம்பிக்கை ஒரே மூச்சாய்க் கொன்றுவிட்டது.

ஆனால் அம்மாளின் மனப் போராட்டத்தை ஜனனி எப்படி அறிவாள்? அவள் தன் மகனுக்கு எடுத்துவிட்டுக் கொண்டிருப்பதைப் பார்த்ததும் ஜனனிக்கும் பால்பசி எடுக்கும். மடிமீது ஏறுவாள். அம்மாளுக்கு ஏனோ மனம் வரவில்லை. முதல் கொஞ்சநாட்களுக்கு வேறு பராக்குக் காட்டியோ, அல்லது பசும்பாலை யூட்டியோ ஏமாற்றி வந்தாள். ஆனால் ஜனனி, தன்னிடம் பால் குடிப்பதற்காகத் திரும்பத் திரும்ப மடிமீது ஏறும் விடாமுயற்சியை யும் தீர்மானத்தையும் கண்டதும, உள்ளூற இன்னதென்று

சொல்ல இயலாத ஒரு பயமும், அப்பயத்தின் மூலமாகவே ஏற்படும் கோபமும் எழுந்தன. போனால் போகிறது, ஒரு தரந்தான் இடங்கொடுப்போம் என்று ஏன் தோன்றவில்லை என அவளுக்கே தெரியாது. அவளை ஆட்டிய பயம் தலைதூக்கி நிற்கையில், அவள் என்ன செய்ய முடியும்?

ஜனனி லேசில் அவளை விடுவதாக இல்லை. ஒருநாள் மாலை அம்மாள், மகனுக்கு எடுத்துவிட்டுக் கொண்டிருக்கையில், தைரியமாய் மடிமீது ஏறி, மார்புத் துணியைக் கலைத்தாள். அம்மாளுக்கு ஆத்திரம் மீறிவிட்டது. அவளை இழுத்து எதிரே உட்கார வைத்து, 'தான்தோணிப் படையே' என்று வைது, முதுகில் இரண்டு அறையும் வாங்கி விட்டாள்.

குழந்தை ஓவென்று அலறினாள். ஐயர் அறையினின்று ஓடிவந்து அவளை வாரியணைத்துக் கொண்டார். அம்மாள் ஆங்காரத்துடன், மார்போடு ஒட்டிக்கொண்டிருந்த தன் மகளையும் பிடுங்கி அவளையும் அறைந்து விட்டு, சமையலறையில் போய் எதையோ உடைத்தாள். அவள் காரியம் அவளைச் சுடும் வேதனை அவளுக்குத் தாங்க முடியவில்லை. ஐயர் வாய் அடைத்துப்போய்த் தவித்தார். கண்களில் ஜலம் ததும்பிற்று.

ஜனனி இப்பொழுது விளக்கெதிரில் படுத்துக்கொண்டிருக்கிறாள். அழுது, அழுத களைப்பில் தூங்கி, விழிப்பு வந்ததும் மறுபடியும் அழுது அழுது முகமே வீங்கிவிட்டது. இந்தப் புது அநுபவம் அவளுக்குத் திகைப்பாக இருக்கிறது.

விளக்குச் சுடர் பொறி விடுகிறது.

''ஜனனீ, உனக்குச் சொல்லவேண்டியதும் உண்டா? நீ எல்லோருக்கும் பாலைக் கொடுப்பவளே யன்றி, குடிப்பவள் அல்ல! உலகில், தான் ஈன்ற

கன்றுக்குப் பாலைக் கொடாது தன் பாலைத் தானே குடிக்க முயலும் பசுவுக்குக் கழுத்தில் கடயம் போட்டு விடுவார்கள். உனக்கு இப்பொழுது நேர்ந்திருப்பதும் அதுவே தவிர, வேறல்ல. நீ அவளுக்கு ஒரு குழந்தையைக் கொடுத்து அதனால் அவள் பாலைக் குடித்து விடலாம் என்று நினைத்தாய் அல்லவா? இதுதான் ஜன்மத்தின் முதல் பாடம். எண்ணியது எண்ணியபடி நடக்குமென்று எண்ணாதே!''

* * *

வளர்ப்புத் தாய்க்கும் ஜனனிக்கும் இடையிலுள்ள பகை பயங்கரமாய் வளர்ந்தது. பகை அம்மாளுடையதே யாகையால், அதன் முழு வேகத்தையும், பாரத்தையும் அவளே தாங்கும்படியாயிற்று. இடாத வேலைகளை இட்டு, சொல்லாத சொற்களைச் சொல்லி, படாத பாடு எல்லாம் படுத்தினாள்.

''வயசுபாட்டுக்கு ஆறது. வேளா வேளைக்கு வந்து வயிறு புடைக்கத் திங்கறதோடு சரி. மத்தப்படி கண்ணிலே படறதில்லே. எல்லைக் காளியா ஊரெல்லாம் சுத்தித் திரிஞ்சுப்பிட்டு அவர் வருதிற வேளைக்கு, இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமான்னு விளக்கெதிரே கண்ணை மூடிண்டு உட்கார்ந்திருக்கையேடி! எந்த ஊரைப் பொசுக்கலாம்னு யோசனை பண்ணின்டிருக்கே?''

''இல்லேம்மா...''

''என்னை 'அம்மா'ங்காதேடி! உன்னை ஆசையா அடித் துணியோடு எந்தக் குளத்தங்கரைப் படிக்கட்டிலே இருந்து கொண்டுவந்தாரோ, அங்கே போய் உன் அம்மாவைத் தேடு. அம்மாவாம், அம்மா! என்ன சொந்தண்டியம்மா!''

ஆகவே ஜனனி, இன்னதென்று விளங்காத மனக்கனத்துடனும் வீறாப்புடனும் குளத்தண்டை போய், தன்னையும் அறியாமல், தன்னைத்தானே தேடுகிறாள். ஆனால் அங்கு என்ன இருக்கிறது? ஆழந்தான் இருக்கிறது.

சட்டையும் பாவாடையுமாய் ஜனனி, கையோடு கை கோத்துக்கொண்டு, குளத்தங்கரைப் படிக்கட்டில் திகைத்து நிற்கிறாள்.

திடீரென அவளுள் தாங்கமுடியாத ஆங்காரம் மூண்டது வீட்டுக்கு விரைந்தாள். அம்மாள் சமையலறையில் வேலையாயிருந்தாளோ என்னவோ; ஐயரைக் காணவில்லை. கோபத்தைத் தீர்த்துக்கொள்ள, ஏதாவது ஒன்றைச் சுற்றுமுற்றும் தேடினாள். கூடத்தில், குழந்தை கைவிரித்தபடி குப்புறப் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தான். அவனிடம் பல்லைக் கடித்துக்கொண்டு, கண்களில் பொறி பறக்க, இரு கைகளையும் நீட்டிக்கொண்டு சபித்தாள்.

''உன்னை வைசூரி வாரிண்டு போக!''

கூட விளையாடும் குட்டிகள், ஒருவரை ஒருவர் திட்டிக்கொள்வதைக் கண்டதில்லையா? குழந்தைக்குத் தூக்கத்தில் உடம்பு தூக்கிவாரிப் போட்டது. கையைக் காலை உதைத்துக்கொண்டு அலற ஆரம்பித்துவிட்டான்.

அடிவயிற்றிலிருந்து வந்த அந்த உள்ளக் கொதிப்பு வீண் போகுமா? பையனுக்கு மூன்று நாள் ஜுரம் மழுவாய்க் காய்ந்தது. பிறகு ஒன்று, இரண்டு, பத்து என்று உடம்பெல்லாம் பெரிய முத்துக்கள் வாரியிறைத்து விட்டன. ஊசி குத்த இடமில்லை. குழந்தை தன் நினைவற்று, போட்டது போட்டபடியே கிடக்கிறான். ஸன்னமாய் இழையும் அனல் மூச்சுத்தான் இன்னமும் உடலுடன் ஒட்டிக்கொண்டிருக்கும் உயிரை உணர்த்துகிறது.

தாய் மூலையில் புரண்டு புரண்டு அழுகிறாள். அவளைச் சுற்றி உட்கார்ந்துகொண்டு, அவளைத் தேற்ற முயலும் உற்றார் உறவினர்களுக்கிடையில் அவளே தனிக்காட்சி ஆகிவிட்டாள். ஐயர் ரேழியில் முன்னும் பின்னுமாய் உலாவிக் கொண்டிருக்கிறார். முன்பைவிட உடல் மெலிந்து, கூன் விழுந்திருக்கிறது. 'அம்பாள் கொடுத்தாள்; அம்பாள் எடுத்துக்கொள்கிறாள்' என்று ஞானம் சமாதானம் சொன்னாலும், பாசம் பசி தீர்ந்து விடுமா?

ஜனனி படுக்கையண்டை, சுட்டுவிரலை வாயில் சப்பிக்கொண்டு, அச்சத்துடன் நிற்கிறாள். அவள் கோபம் அப்போதே பறந்துவிட்டதால், அதன் விளைவாகிய சாபத்தை மாத்திரம் தனியாய்ப் பார்க்கையில், இப்போது பயமாக இருந்தது. அம்பிக்கு இப்படி நேரும் என்று அவள் என்ன கண்டாள்? அம்பிமேல் அவளுக்கு உயிர் இல்லையா? தாயோடு இல்லாத சமயத்தில் தன்னோடு தானே இருப்பான்? இப்படி அவன் கிடப்பதைச் சகிக்க முடிகிறதா? யாரிடம் போய்த் தன் மனக்கஷ்டத்தைச் சொல்லிக்கொள்ள முடியும்? சுவாமியிடந்தான். அப்படித் தானே தாத்தா அவளிடம் சொல்லியிருக்கிறார்—ராத்திரி தூங்குவதற்கு முன்னால், கதை கதையாய், பாட்டாய், தோத்திரமாய்...

பூஜையறைக்குப் போய், விளக்கை ஏற்றி வைத்து, துக்கம் அடைக்கும் தொண்டையுடன், ஆண்பிள்ளை போல் அவள் சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரிக்கிறாள்.

''சுவாமி!—''

''ஜனனீ! என்ன காரியம் செய்தாய்! குழந்தைக்குப் பிராப்தம் இல்லாதவளுக்குக் குழந்தையைக் கொடுத்தாய். பிறகு அதை விளங்கவொட்டாமல், நீயே பிடுங்கிக்கொள்கிறாய்! நீ சக்தி என்றால், உன் மனம் கூத்து என்ற எண்ணமா?

இந்தக் குழந்தையை யார் பெற்றதென்று நினைக்கிறாய்? நீ பெற்ற குழந்தைதான். நீயே விழுங்கப் பார்த்தால் அது உள்ளும் போகாமல் வெளியும் வராமல் தொண்டையில் மாட்டிக் கொண்டதும் எடுத்துவிட என்னைக் கூப்பிடுகிறாயா?"

"அம்மா!"

விளக்கு சிரித்தது.

"ஜனனி, அம்மா என்று யாரைக் கூப்பிடுகிறாய்?"

ஜனனி பூஜையறையினின்று வெளிப்பட்டாள். அவள் கண்கள் ஒளிவீசின. தன்னுள் தான் மூழ்கி, தன்னை மறந்து கைகளையும் கால்களையும் வீசியாடிக்கொண்டு, மகமாயிப் பாட்டுப் பாட ஆரம்பித்து விட்டாள்:

"தாயி மகமாயி தாயி மகமாயி
நெற்றிதனில் உள்ள முத்தை நேத்திரத்தில் இறக்
நேரு மகமாயி நேரு மகமாயி [கம்மா
நேத்திரத்தில் உள்ள முத்தைத் தாடைதனில் இறக்
தாயி மகமாயி தாயி மகமாயி [கம்மா
தாடைதனில் உள்ள முத்தைக் கழுத்துதனில் இறக்
காளி மகமாயி காளி மகமாயி [கம்மா
கழுத்துதனில் உள்ள முத்தை மார்புதனில் இறக்கம்மா
மாரி மகமாயி மாரி மகமாயி
மார்புதனில் உள்ள முத்தை வயிறுதனில் இறக்கம்மா
வாரி மகமாயி வாரி மகமாயி
வயிறுதனில் உள்ள முத்தை தொடைதனிலே இறக்
தாயி மகமாயி தாயி மகமாயி [கம்மா
தொடைதனிலேயுள்ள முத்தை முட்டிதனில் இறக்
மூது மகமாயி மூது மகமாயி [கம்மா
முட்டிதனில் உள்ள முத்தைக் காலதனில் இறக்கம்மா

காளி மகமாயி காளி மகமாயி
காலதனில் உள்ள முத்தை பாதந்தனில் இறக்கம்மா
பாரி மகமாயி பாரி மகமாயி
பாதந்தனில் உள்ள முத்தை நிலத்தினிலே இறக்கம்மா
நித்ய மகமாயி நித்ய மகமாயி''

ஏதோ பிடியினின்று விடுபட்டதுபோல், குழந்தைக்கு உடல் உதறியது. எல்லோரும் போய்விட்டதென்று நினைத்துக்கொண்டு 'குய்யோ முறையோ' என்று அடித்துக்கொண்டு ஓடிவந்து பார்த்தார்கள். அவன் தூங்கிக்கொண்டிருந்தான். முகத்தில் ஒரு புது நிம்மதி. தேகம் வியர்த்து ஜுரம் விட்டிருந்தது.

ஐயர் அப்படியே அதிசயித்து நின்றார்.

ஒரு வாரம் கழித்துக் குழந்தைக்கு ஜலம் விட்டார்கள். குழந்தையை மார்போடு அணைத்துக்கொண்டு ஜனனி விக்கி விக்கி அழுதாள். ஏனென்று அவளுக்கே புரியவில்லை. தாய்க்கும் விஷம் கக்காமலிருக்க முடியவில்லை.

''இதென்னடியம்மா கூத்து! கொழந்தை சாகல்லையேன்னு அழறையா?'' ஜனனிக்குப் பூஜையறையில் யாரோ சிரித்தாற் போலிருந்தது. ஓடிப்போய்ப் பார்த்தாள். ஆனால் அங்கே யாரையும் காணவில்லை.

* * *

ஜனனி மதமதவென வளர்ந்தாள். சீக்கிரமே பக்குவம் அடைந்துவிட்டாள். கறுப்புத்தான். கட்டு உடல். கட்டு மயிர். உறுப்புக்களில் நல்ல முறுக்கு. அதே மாதிரி கோபமும் முறுக்குத்தான்; ஒருவருக்கும் அடங்க மாட்டாள். சட்டுச் சட்டென்று கோபம் வரும்; வந்த சுருக்கில் தணிந்துவிடும்.

"அடியே இப்படி அடங்காப்பிடாரியாய் இருக்கையே! உன் புக்ககத்துக்குப் போனால், உன் மாமியார் நீ பண்ணற அட்டகாசத்துக்கு உன்னை இடிக்கறது போறாதுன்னு, உன்னை யாருடி வளர்த்தான்னு என் பேரையும் சந்தியில் இழுப்பாடி!"

"உன்னை எந்த மாமியார் இப்போ இடிச்சுண்டிருக்கா அம்மா?"

"உன் நாக்கைச் சுட்டெரிக்க! என் மாதிரி நாலாவதாய் வாழ்க்கைப்பட்டால், மாமியார் மாத்திரமில்லே, புருஷன் கூட ரொம்ப நாள் தக்கமாட்டாண்டி!"

அம்மாள் சொன்னதற்குத் தகுந்தாற்போல், கிழவருக்கு உடம்பு வரவர ஒடுங்க ஆரம்பித்துவிட்டது. ஜனனியை எங்கேயாவது கையைப் பிடித்துக் கொடுத்துவிட வேண்டும் என்னும் கவலை ஓங்க ஆரம்பித்துவிட்டது.

அம்மாளுக்கு ஜனனி வந்த ராசி எல்லாம் மறந்துவிட்டது. "வாசல்லே போற சனியனை விலைக்கு வாங்கினாப்போலே என்கிற பெரியவாள் வாக்கு சரியாப் போச்சு. நன்னாக் கட்டிண்டு அநுபவிங்கோ!"

"அடியே, இன்னும் நாலு நாள் கழித்துப் போகும் என் உயிர் உன்னால் இப்பவே போயிடும்போலே இருக்கிறதே!"

"நீங்க நன்னா இருங்களேன். என் ஆயுசிலேயும் பாதி கொடுக்கிறேன். நாலுபேர் நடுவுலே தாலிகட்டி, சாந்தி சீமந்தம் எல்லாம் பண்ணிப் பெத்து வளர்த்த குழந்தையைப் பண்ணிக்கிறத்துக்கே, ஆயிரம் ஜோஸ்யம் பார்த்து, அழகு பார்த்து, அந்தம் பார்த்து, தெரிஞ்சு விசாரிச்சு, தெரியாமெ விசாரிச்சுப் பண்ணிண்டுட்டு, அப்புறங்கூட 'அது சரியாயில்லே, இது சரியாயில்லே'ன்னு குத்தம்

படிக்கற நாளிலே, எங்கேயோ வழியிலே கண்டெடுத்த பொண்ணை எவன் தலையிலேயாவது லேசிலே கட்டிவிட முடியுமா, என்ன?''

அவள் வாக்கு அசரீரிதான். ஐயர் தம் வளர்ப்புப் பெண் கல்யாணத்திற்குச் செய்யும் முயற்சிகள் எல்லாம், உருவாவதுபோல் ஆகி, திரளும் சமயத்தில் 'பொட்'டென உடைகையில், அவருக்கு உள்ளூறத் திகிலே உண்டாயிற்று. ஒரு பெண் பிறந்தால், அதற்கு ஓர் ஆண் படைத்துத்தான் இருக்க வேண்டும் என்னும் கடைசி நம்பிக்கை, அல்லது நம்பிக்கையற்ற திடந்தான் அவரை உந்திக்கொண்டு போயிற்று. ஜாதகக் கட்டைத் தூக்கிக்கொண்டு எங்கெங்கோ வெளியூரெல்லாம் சுற்றி வந்தார்.

அப்புறம் ஒருநாள் ''எல்லாம் வேளை வந்தால் தானே வரும்! நாம் மாத்திரம் அவசரப்பட்டால் முடியுமா? பார், குழந்தைக்கு ஒரு புருஷனைத் தேடிப் பிடித்துவிட்டேன்!'' என்று பெருமிதத்துடன் சொல்லிக்கொண்டே ஐயர் வீட்டுள் நுழைந்தார்.

பையன் எங்கோ தூரதேசத்தில் ராணுவத்தில் வேலையிலிருந்தான்.

கல்யாணத்துக்கு முதல் நாள் மாலைதான் பையன் வீட்டார் வந்து இறங்கினார்கள். பிள்ளையைப் பார்த்தவர்கள் பிரமித்தே போய்விட்டார்கள். சிலர் அசூயையால் வெடித்தே போனார்கள். ''ஜனனி காத்திருந்தாலும் காத்திருந்தாள்; அதிருஷ்டச் சீட்டு அடித்துவிட்டாள். பையன் சிவப்பிலேயும் சிவப்பு, செந்தாழைச் சிவப்பா ராஜா மாதிரி இருக்காண்டி!''

''மணையிலே உட்கார்ந்தா, ரெண்டுபேருக்கும் ஜோடிகூட ஒட்டாதேடி!''

"என்னடி பைத்தியம் மாதிரி பேசறே? பணம் ஒட்ட வைக்காத பண்டங்கூட உண்டா? இரண்டாயிரத்துக்கு நாலாயிரமாத் தளர்த்தினால், வஜ்ரம் மாதிரி ஒட்டிக்கிறது!"

ஐயர் நாலுநாள் கல்யாணம் பண்ணி, பணத்தை வாரி இறைத்தார். சமையலுக்கோ சடங்குக்கோ உடையும் ஒவ்வொரு தேங்காயுடன் அம்மாளின் வசை வார்த்தைகளும் வெடித்தன. "இந்தப் பிராம்மணன் எந்தக் குடி பாழாப் போறதுன்னு நெனைச்சுண்டிருக்கான்? பிள்ளையில்லாச் சொத்தா இது?"

அவள் வார்த்தையைச் சட்டை செய்வார் யார்?

நான்கு நாள் கல்யாணத்திற்குப் பிறகு, ஐந்தாம் நாள் சாந்தி பண்ணி, பெண்ணைப் புக்ககத்துக்கு அனுப்புவதாக இருந்தது. ஆனால் மூன்றாம் நாள் இரவு மாப்பிள்ளைப் பையனுக்கு அவன் அதிகாரிகளிடமிருந்து, உடனே புறப்பட்டு வரும்படி ஒரு தந்தி வந்தது. பாலிகை கொட்டக்கூட நேரமில்லாமல், பையன் மறு வண்டிக்குப் புறப்பட்டுப் போய்விட்டான்.

அப்பொழுது தடைப்பட்ட சாந்தி, அப்படியும் இப்படியும் ஒத்திப் போய்க்கொண்டே வந்தது. மணமாகிப்போன பையன் மறுபடியும் வேறு எந்த விசேஷத்திற்குங்கூட வர முடியவில்லை. அவனை ஓர் இடமும் ஸ்திரமென்றில்லாமல், அதிகாரிகள் மாற்றி மாற்றி அம்மானை ஆடிக்கொண்டிருந்தார்கள். இரண்டு மாதம், மூன்று மாதம், ஆறு மாதம்...

ஜனனி இப்படித் தான் புக்ககம் போகாதபடி நேர்ந்த தடங்கலைப் பாராட்டினாளோ, இல்லையோ என அவள் வெளித்தோற்றத்தில் ஒன்றும் தெரியவில்லை. முன்னைவிடப் பன்மடங்கு துடிப்பு மிடுக்குடன்தான் பொலிந்தாள்.

அம்மாளோ, தன்னுடன் வம்படிக்க வருவோரிடம், தன் கன்னத்தைத் தானே இழைத்துக்கொண்டு முறையிட்டுக் கொண்டாள்.

"நல்ல நாளிலேயே சொல்ல வேண்டாம், அவர் செல்லம்! ஆனால் அப்பவாவது கொஞ்சத்துக்குக் கொஞ்சம் கட்டியாண்டு வந்தேன். 'ஐயேடி! அந்தாத்துப் பொண்ணா, அங்கே நிக்கறதடி, இங்கே நிக்கறதடி, அவாளோடெ பேசித்து, இவாளோடெ பேசித்து'ன்னு, நாலுபேர் வாயிலே புகுந்து புறப்படாமெ, ஏதோ கொஞ்சத்துக்குக் கொஞ்சம் கண்டிச்சு வந்தேன். ஆனால் கல்யாணம் ஆனப்புறம் இவளுக்கு வந்திருக்கிற இறுமாப்புக்குக் கேக்கணுமா? 'புருஷாளுக்கு அரைக் காசுன்னாலும் உத்தியோகம், பொம்மனாட்டிக்கு அம்பது வயசானாலும் புருஷன்'னு சும்மாவா சொன்னா? மஞ்சக் கயிறுன்னு ஒண்ணு கழுத்திலே ஏறிட்டாப் போறும். புருஷன்மேலே பழியைப் போட்டுட்டு என்ன அக்ரமம் வேணுமானாலும் அவாள் பண்ணலாமே. நீங்களும் நானும் வாழ்க்கைப்பட்ட நாளா இது, மாமி!"

அம்மாள் மற்றவரிடம் விதவிதமாய்ச் சிங்காரச் சொல் வைத்து முறையிடுவதைக் கேட்டுக்கொண்டு, ஐயர் ஒவ்வொரு நாள் வந்துவிடுவார். "ஏண்டி கரிக்கிறே குழந்தையை? உன் கண் சுட்டெரிப்புக்காவது அவள் அகமுடையான் அவளைக் கூட்டிக்கொண்டு போக மாட்டானா?"

அவ்வளவுதான். இடுப்புக் குடத்தைப் பொத்தென ஜலம் தளும்பித் தெளிக்கக் கீழே வைத்துவிட்டு, முன்றானையை வரிந்து கட்டிக்கொண்டு, காற்றைக் கையால் துழாவிக்கொண்டு, அம்மாள் சண்டைக்கு வந்து விடுவாள்.

"நன்னாச் சொல்லுங்கோ! ஜனனி கவலையை ஜனனி இதுவரை பட்டதில்லை அவளைப் பெத்தவா கவலையை நீங்க வாங்கிண்டு, ஆத்துக்குக் கொண்டு வந்துட்டேள். வளத்த கவலையை நான் பட்டாச்சு. கல்யாணமானாக் கஷ்டம் விடியுமான்னா, அவள் புகுந்த கவலையையும் பட்டுண்டிருக்கோம் இன்னும்—போறுமோன்னோ—திருப்தியாச்சா?"

வார்த்தைகளால் குத்தி வாங்குவதில், அம்மாள் அலாதி வரப்பிரசாதி. ஐயர் அப்படியே தலை கவிழ்வார்.

ஜனனி ஒருநாள் பகலில் குளத்தில் குளித்துக்கொண்டிருந்தாள். கிணற்றடியில் குளிப்பதைவிட, குளத்தில் துளையத்தான் அவளுக்கு இஷ்டம். அம்மாளுக்கும் அவளுக்கும் இதைப்பற்றி வேண்டிய தகராறு உண்டு. அம்மாள்—ஒன்று சொல்லவேண்டும்—படி தாண்டாள்; வம்பு எல்லாம் அவளைத் தேடிக்கொண்டு வருமே யொழிய, அவளாக வம்பைத் தேடிக்கொண்டு வெளிக் கிளம்பியதில்லை.

"மேட்டிமைக்காரி, ராங்கி" என்று பொறாதவர் குற்றம் சொன்னாலும், அம்மாளை நேரில் கண்டால் எல்லோருக்கும் பயந்தான். அத்தனைக்கத்தனை ஜனனியின் கலகலப்பு அவர்களுக்கு, (நல்ல எண்ணமோ கெட்ட எண்ணமோ) குதூகலமாய்த்தான் இருந்தது.

ஜனனி ஒருநாள் பகலில் குளித்துக்கொண்டிருந்தாள்.

திடீரென்று தன்னை யாரோ ஊன்றிக் கவனிப்பது போன்ற உணர்ச்சி எழுவதை உணர்ந்தாள். சுற்றுமுற்றும் நோக்கினாள். எதிர்க் கரையில் ஒருவன் தன்னையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டிருப்பதைக் கண்டாள். ஆனால் முகத்தைப் பார்க்கவில்லை. தன்னிடம் என்ன என்று பார்த்துக்கொண்டாள். வலது விலாப்புறத்தில்,

தோள் குழிவுக்கு அடியில், ரவிக்கை இரு பாதிகளும் ஒட்டிய இடத்தில், உடல் வளர்ச்சியையே தாங்க முடியாமல், தையல் தாராளமாய் விட்டிருந்தது. வெயில் படாத அவ்விடத்துச் சதை தனி வெண்மையுடன் பிரகாசித்தது.

ஜனனி மனத்தில் தனிப் பயங்கரம் திடீரெனக் கண்டது. அப்படியே புடைவையை வாரிச் சுருட்டிக் கொண்டு வீட்டுக்கு ஓட்டம் பிடித்தாள். அவள் உடலெல்லாம் வெடவெடத்தது.

அன்று முழுவதும் மனம் சரியாயில்லை. ஆயினும் தான் படுவது இன்னதெனத் தெரியவில்லை. அதனாலேயே வேதனை அதிகரித்தது. முதல் முதலாய் ஜனனி தனக்குத் தானே புரியாத சிந்தனையில் ஆழ்ந்தாள். இரவு படுத்தும் வெகு நேரம் தூக்கம் வரவில்லை.

—நள்ளிரவில், ஜனனி திடுக்கென விழித்துக் கொண்டாள். உடலில் மறுபடியும் பயங்கரமான புல்லரிப்பு. அவளையும் மீறியதோர் சக்தி வசப்பட்டவளாய்க் கட்டிலினின்று எழுந்து ஜன்னலண்டை போய் நின்றாள்.

முழு நிலவின்மேல் கருமேகங்கள் சரசரவெனப் போய்க் கொண்டிருந்தன.

தெருவில் வீட்டு வாசற்படியெதிரில் ஓர் உருவம் நின்றது. வெள்ளைத்துணி போர்த்து, நெட்டையாய், கைகளை மார்மேல் கட்டி நின்றுகொண்டிருந்தது. சத்தமும் நடமாட்டமும் நின்று நீண்டுபோன தெருவில், தனியாய், ஏதோ, எதனுடைய சின்னமோ மாதிரி...முகம் அவள் ஜன்னல் பக்கம் திரும்பியிருந்தது. குளத்தில் கண்டவன்!

ஜன்னலிலிருந்து ஜனனி சட்டெனப் பின்வாங்கினாள். இடுப்புக்குக் கீழே கால்கள் விட்டு விழுந்து விடுவனபோல் ஆட்டங் கொடுத்தன. உடல் நடுங்கியது. பயந்தானா? முழுக்க முழுக்கப் பயந்தானா? புரியவில்லை. சமாளித்துக் கொண்டு, சுவரை இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு, சுவருடன் ஒட்டிக்கொண்டாற்போல் மாடிப்படிகளில் மெதுவாய்க் கால் வைத்து இறங்கினாள். கண்ணெதிரில், இருள் திரையில், அவன் விழிகள் மாத்திரம் பேருருக் கொண்டு நீந்தின. அவைகளில் உலகத்தின் ஆசாபங்கத்தின் எல்லை கடந்த சோகத்தையும், அதேசமயத்தில் உயிரின் ஆக்கலுக்கும் அழித்தலுக்கும் அடிப்படையான மிருகக் குரூரத்தையும் கண்டாள். அந்த ஏக்கத்தை ஆற்ற ஒரு பரிவு தாவுகையில், துக்கம் தொண்டையைக் கல்லா யடைத்தது. ஆயினும் அந்தத் தாபத்தின் கொடூரம் சோகத்தின் பின்னிருந்து பாம்பைப்போல் தலை நீட்டுகை யில் அதன் முகத்தைக் கண்டு உள்ளம் உள்ளுக்கு உடனே சுருங்கிற்று.

இப்படி ஒன்றாய் இருந்துகொண்டே இரண்டாய் வெட்டப்பட்டுத் துடிக்கும் வலி பொறுக்கக்கூடியதா யில்லை.

சத்தம் போடாமல், பூஜையறையைத் திறந்தாள். தீப் பெட்டியைத் தட்டுத் தடுமாறித் தேடிப் பிடித்துக் குத்து விளக்கை ஏற்றினாள். திரியினின்று குதித்தெழுந்த சுடரில், அவள் படும் சஞ்சலத்துக்கு ஆறுதலைத் தேடி நின்றாள்.

ஆனால் அவள் தேடிய தெளிவு மனத்தில் ஏற்பட வில்லை. எல்லாம் தெரிந்த இறைவன் முன்போலிராது, ஒன்றுமே தெரியாதவன்போல்தான் இருந்தான். இதுவரை தன்னை மறந்துவிட்டு இப்பொழுதுதான் தேடி வந்தாள் என்ற கோபமா? இரவில் எல்லோருக்கும் உள்ள தூக்கம் தனக்கும் உண்டென, சுடரில் இல்லாமல் தூங்கப்போய் விட்டானா?

அழுத்தும் உணர்ச்சிகளின் புதுமையினாலும் வருத்தத்தினாலும் ஜனனி குழம்பி நின்றாள். அவளைத் தாக்கும் புதுமைக்குள்ளேயே உணர்ச்சிகளின் பழமை புகுந்து கொண்டு அவளைக் கேலி செய்தன.

"நீங்கள் யார்? என்னை விட்டுப் போய்விடுங்களேன்!"

"நாங்கள் யார்? எங்கே போக வேண்டும்? எங்கிருந்தாவது வந்தோமா, எங்கேயாவது போக? உன்னுள்ளேயேதானே வளர்ந்தோம்? உன்னுள்ளேயேதானே 'கண்ணா மூச்சி' விளையாடுகிறோம்? கண்டு பிடியேன்! கண்டுபிடிக்கத்தானே வந்தாய்? உனக்கும் எங்களுக்கும் இன்றைப் போட்டியா, நேற்றையப் போட்டியா? கண்டு பிடியேன்! கண்டுபிடி! பிடி! பிடி! ஹோ ஹோ ஹோ!" அலைகளின் சப்தமற்ற கொக்கரிப்பு தாங்கக்கூடியதா? ஜனனி தடாலென்று குப்புற விழுந்து விக்கி விக்கி அழுதாள். மார்பே வெடித்துவிடும் போலிருந்தது.

அன்று முதல் அவள் துடிப்பும் கலகலப்பும் வெளி நடமாட்டமும் அடங்கிப்போயின. அறையிலேயே மணிக் கணக்கில் சேர்ந்தாற்போல் மோவாய்க் கட்டையைக் கையில் ஊன்றிக்கொண்டு உட்கார்ந்திருப்பாள். பக்கத்தில் வந்து கூப்பிட்டாலும் காது கேட்பதில்லை. கேட்டு வாங்கி அடைத்துப் புடைத்துச் சாப்பிடும் ஜனனிக்கு இப்பொழுது கூப்பிட்டு உட்காரவைத்துக் கொட்டினாலுங்கூட இறங்கவில்லை.

திடீரென இளைக்க ஆரம்பித்தாள்.

"இதென்னடீம்மா கூத்து, திடீரென்று இவளுக்கு வந்திருக்கிற வினை! ஊமை ஊரைக் கெடுத்ததாம்னு—!"

ஜனனியின் கண்கள் நிறைந்து கண்ணீர் கன்னம் புரண்டு ஓடும். ஆனால் துடைக்கக்கூட முயலுவதில்லை.

உட்கார்ந்த நிலைகூட மாறுவதில்லை. அவளுள் ஏதோ தகர்ந்துவிட்டது.

''அடி பாவி! குழைந்தையை ஏதாவது சொல்லிக் கொண்டே இருக்காதேடீ; ஒருநாள் இல்லாவிட்டால் ஒரு நாள், புருஷனிடம் இன்னும் போகவில்லையே என்று இருக்காதா?''

* * *

ஜனனியின் புருஷனைப்பற்றி ஒவ்வொரு சமயம் ஒவ்வொரு விதமாய் வதந்தி உலவியது.

இருந்த இடத்தில்தான் இருக்கிறான்—சகவாச தோஷம்—கண்ட இடத்தில் கண்டபேரோடு சுற்றுகிறான். குடி, கூத்தி, புகை—இல்லாத பழக்கங்கள் எல்லாம் வந்திருக்கின்றன. இருக்கிறது இல்லாதது எல்லாம் சேர்ந்து நாலுபேர் வாயில் மாறி மாறி வந்து காதில் விழுகையில் கிழவரின் கிலேசம் சொல்லத்தரமல்ல. 'இதென்ன, தள்ளாத வயதில் உளையில் மாட்டிக் கொண்டோமே!' எனத் தவிப்பார். 'இதே நிலையில் நான் காலமாய்விட்டால் ஜனனியின் கதி என்ன? நமக்கு வாய்த்தவளோ தாடகையாக இருக்கிறாளே!' என்று ஆண்டவனிடம் முறையிட்டுக் கொள்ளலாமெனில் பூஜையறையில் அவருக்கு முன்னால் ஜனனி உட்கார்ந் திருப்பதைக் கண்டு, உள்ளே போகவும் அஞ்சிப் பின் னடைவார்.

மாலையில் சமையலறையிலிருந்து அம்மாள் இரை வாள்: ''வீட்டுக் காரியங்கள் போட்டது போட்டபடிக் கிடக்கு. பூஜையில் ஒக்காந்துண்டு சாமியை வேரோடு பிடுங்கினால் ஆயிடுத்தா? புருஷன் போட்டோவுக்குப் பூவைச் சூட்டி அந்தரங்க மனசோடு ரெண்டு நமஸ்காரம் பண்ணினாலாவது லாபமுண்டு!''

ஜனனிக்கு இது கேட்டதோ? உட்கார்ந்துகொண்டே இருந்தாள். கண்களில் ஜலம் பெருகிய வண்ணம் இருந்தது.

எதிர் வீட்டுத் திண்ணையில் சில சமயங்கள் உபந்நியாசங்கள் நடக்கும்.

புராணிகர், "கல்லால மரத்தடியில் சடையில் சூடிய பிறைச் சந்திரனிலிருந்து அமிர்த தாரை விடாது வழிந்து கொண்டிருக்க, சிப்பிமுத்துப் போன்ற வெண்மையான உடலுடன், தன்னைத்தானே தியானம் பண்ணினவனாய், தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபத்தில் ஈசுவரனானவன்..." என்று சொல்வார்.

அல்லது—

"ஊசி முனையில் கட்டைவிரலை அழுத்தியவளாய், பர்வதராஜகுமாரி, பராசக்தி, அளகபாரம் ஜடாபாரமாக ஆகாரத்தைத் தள்ளிவிட்டு, ஜலபானங்கூடப் பண்ணாது, காற்றையே புசிப்பவளாய், பிறகு அதையும் நிராகரித்தவளாய், சந்திரசூடனுடைய தியானத்தையே ஆகாரமாய்க் கொண்டவளாய் மஹா தபஸ்வியாய்..."

* * *

திடீரென ஒருநாள் ஐயருக்குக் கடிதம் வந்தது. அதைப் பிரித்துவிட்டு ஐயர் ஆச்சரியத்தாலும், எதிர் பாராது நேரும் சந்தோஷத்தைத் தாங்காத உணர்ச்சியாலும், உடலும் குரலும் நடுங்க, கூடத்துக்கு ஓடி வந்தார்.

"அடியே, குழந்தை எங்கே? அம்பாள் கண்ணைத் திறந்துட்டாடி! மாப்பிள்ளைப் பையன் அடுத்த வாரம் வராண்டி!—" அவர் கண்களில் கண்ணீர் பெருகியது. முகமாறுதலின்றி ஜனனி சமாசாரத்தை ஏற்றாள். அவள் மனத்தில் என்ன ஓடியது என யார் கண்டார்? அவளே கண்டாளோ?

அம்மாளுக்கு எரிச்சலாய் வந்தது. "இவள் சமாசாரம் என்னிக்குத்தான் புரிஞ்சுது? ஆம்படையான் வரான்னா, இடிச்சபுளி மாதிரியா இருக்கு! இது மனுஷ ஜன்மந் தானா?"

ஐயர் சாந்தி மூகூர்த்தத்தை தாலி முகூர்த்தம் மாதிரி தான் சப்பிரமமாய்க் கொண்டாடினார். அம்மாள்கூட இந்த தடவை அவ்வளவு எரிச்சலாய் இல்லை.

மாப்பிள்ளைப் பையன், மணப்பாயில் மணமகள் அருகில் உட்கார்ந்திருக்கையில் இன்னமும் அதிகமான சோபையோடு திகழ்ந்தான். முன் மண்டையில் மயிர் முன்பார்த்ததைவிட அதிகமாய்க் கொட்டியிருந்த போதிலும், லேசாய்ப் படர்ந்து வரும் அந்த வழுக்கையும் அழகு வழுக்கையாய்த்தான் இருந்தது. அளவுமீறிய இன்ப நுகர்ச்சியின் வடுக்கள் முகத்தில் விழுந்திருந்தன. ஆனாலும் இன்னமும் அந்த உடலும், அவ்வுடலை அதன் சறுக்குப் பாதையில் விரட்டி ஓட்டிக்கொண்டிருக்கும் நெஞ்சுத் திடமும் இதைவிட அவன் அதிகம் தாங்குவான் என்பதை உணர்த்தின.

அடர்ந்த புருவங்கள் சவுக்குப் புதர்கள் போல் சிலிர்த்துக் கொண்டு விசிறியெழுந்து சந்திக்கும் இடத்தில் இட்டிருந்த சந்தனப் பொட்டு, அதனுள் குங்குமத் திலகம், அசலாய் நெற்றிக் கண்ணையே திறந்து வைத்தாற்போல் முகத்துக்கு ஓர் உக்கிரமான அழகைக் கொடுத்தன. கடைக்கண் பார்வையில் சிந்திய வெற்றி, அங்கே குழுமியிருந்த பெண்களைக் கொள்ளை கொண்டது.

ஜனனி மணவறையில் ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக்கொண்டு நின்றிருந்தாள்.

வெளியில் நிறைந்த இருளினின்று உருவாகி உருவங்கள் எழுந்தன. ஒன்று, இரண்டு, நூறு, ஆயிரம்—இத்தனை நாட்கள் உள்ளேயே அடக்கி வைத்துக்கொண்டிருந்த ஆத்திரத்தின் நிழல் ஒவ்வொரு நிமிஷமும் ஒவ்வொரு தனியுருக்கொண்டு அவள் கண்முன் விரித்தாடியது.

''ஜனனி, அடையாளம் தெரிகிறதா? அன்றைக்கு! எங்களை நீ மறக்க விட்டுவிடுவோமா? இன்னமும் நாங்கள் யார் என்று கண்டுபிடிக்கவில்லையே? சே, என்ன இவ்வளவு அசடாக இருக்கிறாய்? தொட்ட பிசுக்கு, விட்ட பிசுக்கு, கிட்டப் பிசுக்கு, ஜன்மப் பிசுக்கு இதெல் லாம் நீ கேள்விப்பட்டதில்லையா? எங்களுக்குத் தலை கிடையாது. உயிருண்டு; நாங்கள் கபந்தங்கள். ஆடுவோம், பாடுவோம், சிரிப்போம், அழுவோம், அழிவோம், அழிய மாட்டோம்—''

ஜனனிக்கு நெற்றிப் பொட்டில் வேர்வை அரும்பியது.

''பயமாயிருக்கிறதா? பயப்படாதேம்மா! பயப் படாதே கண்ணு! நாங்கள் இத்தனைபேர்கள் இருக் கிறோமே, எதுக்குப் பயம்?''

''ஜனனீ!''

தோளில் கை பட்டு, ஜனனி திடுக்கிட்டுத் திரும்பி னாள். அவள் கணவன் புன்னகை புரிந்தவண்ணம் நின்று கொண்டிருந்தான்.

''என்ன பயந்துவிட்டாய்? என்னைப் பார்த்தால் பயமாக இருக்கிறதா?''

ஜனனிக்கு மண்டை எரிந்தது. அவனை அவள் மௌன மாய்ப் பார்த்துக்கொண்டிருக்கும்போதே, ஜன்னலின் வெளியில் அவள் கண்ட பேயுருவங்கள், உள்ளே பறந்து வந்து சிரித்துக்கொண்டே அவள் உள்ளே புகுவதை உணர்ந்தாள். ஜலத்தைக் குடித்து உப்பும் நெட்டிபோல், தனக்குத்தான் பெரிதாகிக்கொண்டு வருவதுபோன்ற ஒரு பயங்கர உணர்ச்சி.

அவள் உருவம் பெரிதாக ஆக, அவன் உருவம் அவளுக்குச் சுருங்கிக்கொண்டே வந்தது. போகப் போக அவன் புழுப்போலாகி, அவன் சிரிப்பும், அங்க அசைவு களும் புழுவின் நெளிவைப்போல், அவளுள் பெரும் சீற்றத்தையும் அருவருப்பையும் எழுப்பின. அவளுள் அடைந்த பல்லாயிரம் பேய்களும் ஒரே பேயாய்த் திரள ஆரம்பித்தன.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்! கோபமா? நியாயந் தான். உனக்கு உன் நியாயம், எனக்கு என் நியாயம். இப்பொழுது சரியாய்ப் போய்விட்டதோன்னோ? சிந்திப் போனதைச் சிந்திக்காதே! இன்னமும் நான் எவ்வளவோ போயிருக்கிறேன், வந்திருக்கிறேன். வா, வா, பெண் களுக்குக் கோபம் அழகாய்த்தான் இருக்கிறது. ஆனால் அந்தக் கோபம், புருஷர்களுடைய பொறுமைக்கு அடங்கி யிருக்கும் வரைதான் அழகு. மீறினால் பேய்தான்!''

அவள் உள் திரண்டுகொண்டு இருக்கும் உருவிற்கு அவள் கணவனின் வார்த்தைகளே உயிர்ப்பொறி வைத் ததும், ஜனனி உடல் குலுங்கியது.

அவள்மேல் அவன் கைகள் விழுந்தன. அவளை ஒரே வீச்சில் வாரி மார்போடு மார்பாய் இறுக அணைத்தன. அவனுடைய முரட்டுத்தனத்தில் அவள் மார்பில், தாலிப்பல் அழுந்தியது.

ஜனனி திணறினாள். அவளுள் திரண்ட பூதம் அவனை ஒரு விசிறு விசிறியது. தள்ளிய வேகத்தில் கால் தடுக்கிப் பின்னுக்கே போய்க் கீழே விழுந்தான். இரும்புக் கட்டிற்கால் முடிச்சில் பின்மண்டை 'மடே'ரென மோதியது.

அடிவேகத்தில் அவன் கத்தக்கூட இல்லை. ''ஜனனி!'' என மெதுவாய் முனகினான். அப்படியே தலை தொங்கி விட்டது. மூக்கிலிருந்தும் வாயிலிருந்தும் ரத்தம் குபு குபுத்தது. ஜனனி திக்பிரமை பிடித்து நின்றாள்.

''ஜனனீ! ஜனனீ! மாப்பிளே, மாப்பிளே!'' கதவைப் படபடவெனத் தட்டுகிறார்கள். கதவைத் திறக்கக்கூடத் தோன்றவில்லை. நின்றபடி இருந்தாள்.

கதவை உடைத்துக்கொண்டு உள்ளே தள்ளிக் கொண்டு புகுந்தார்கள், அவனையும் அவளையும் கண்டு பின்வாங்கினார்கள். கிட்டப் போகக்கூட அஞ்சியவர் களில் ஒருவன், தைரியம் கொண்டு, மாப்பிள்ளை மார்பில் கையையும், காதையும் வைத்துப் பார்த்தான். செத்துப் போனவனுக்குச் செத்தது தெரிந்திராது; அவ்வளவு விரைவில் பிராணன் போயிருந்தது.

''ஜனனீ! என்னடி?''

ஜனனிக்குக் கண்களில் ஜலம் ஆறாய்ப் பெருகிற்று. ஆனால் பேச முடியவில்லை. வாய் அடைத்துவிட்டது.

''பலே! ஜனனீ!'' என்று ஒரு வெறிக் குரல் அவளுள்ளே எழுந்தது.

''ஐயோ! ஜனனீ!'' என இன்னொன்று விக்கி விக்கி அழுதது.

* * *

''ஜனனீ! ஜனனீ!''

அவள் திடுக்கென விழித்துக்கொண்டாள். இந்த நள்ளிரவின் மையிருளில் யார் அழைப்பது? அவளுள் எழுந்த வினாவிற்கு அக்குரல் உடனே பதிலளித்தது. ''ஆம் ஜனனீ! உன்னை மீட்கத்தான் வந்தேன். ஆயினும் நீ நினைக்கும் மீட்சியல்ல. உன்னை உனக்கு உணர்த்த வந்தேன். நீ உணர்ந்தால் நீ மீள்வாய்''

ஜனனி திடீரென உணர்ந்தாள். நள்ளிரவில், மையிருளில், குழலினிமையில் வரும் இக்குரல், வெளியினின்று வராது, தன்னுள் இருந்துதான் வருகிறதென்று உணர்ந்தாள். இக்குரல் மௌனமாயும், அன்பாயும், அதே சமயத்தில் ஓர் அழுத்தத்துடனும் ஒலித்தது. எங்கேயோ.

எப்போதோ கேட்டமாதிரி இருந்தும் இந்தப் புதுக்குரல் அவளுக்குப் பயமாக இருந்தது. அவளையுமறியாது அவள் நாக்கு ''நீ யார்?'' என்னும் வினாவை உருவாக்க முயன்றது.

''நான் யார்? என்றுமே, நீ பிறப்பதற்கு முன்னரே முதல், உன்னிடம் இருந்துகொண்டு உன்னிடமிருந்து என்றுமே நீங்காதிருக்கிறேன். என்னைப் புரியவில்லையா? நீ உன்னைப் புரிந்துகொண்டால், என்னைப் புரிந்து கொள்வாய். ஏனெனில் நீயேதான் நான். நீ என்னைக் கண்ணால் கண்டது மறந்தாலும், என் குரலைக் காதில் கேட்டது ஞாபகம் இல்லையா? என்னைக் கண்டதும் கேட்டதும் ஞாபகம் இல்லையானாலும், என்னைக் காணவும் கேட்கவும் முயன்றதுகூட ஞாபகம் இல்லையா? யோசி யோசி! நன்றாய் யோசித்துப் பார்!''

திடீரென நினைவு வந்த அதிர்ச்சியில், ஜனனிக்கு இருளில் கண்கள் அகல விரிந்தன. ''குத்துவிளக்கில்... ப்ரபோ!'' ஜனனி ஹோவெனக் கதறினாள்.

''ஆ! இப்பொழுது உனக்கு ஞாபகம் வருகிறது. நீ விளக்கைத் தூண்டியபொழுது யாரைத் தூண்டுவதாக நினைத்தாய்? உன்னையேதான் நீ தூண்ட முயன்றாய். நாளடைவில், நீயாக எடுத்துக்கொண்ட பிறப்பின் மாசும், காலத்தின் துருவும் ஏற ஏற, உன்னுள் இருக்கும் நான் உன்னுள் எங்கேயோ படு ஆழத்தில் புதைந்து போனேன். உன்னுள் இப்பொழுது நேர்ந்த பூகம்பத்தினால் நீயே புரண்டதால், உன்னுள் புதைந்துபோன நான் இப்பொழுது வெளிவந்தேன்.''

''என்னைக் கைவிட்டாயே என் கடவுளே!—''

''ஜனனீ, நீ என்னைவிட்டு ஓடிப்போனாய். ஆனால் நீயே நானாய் இருப்பதால் உன்னை விட்டு நான் ஓட முடியாது. உன்னுடன் ஒட்டிக்கொண்டு வந்தேன். வநத என்னையும் உன்னுள் புதைத்துவிட்டாய். புதைத்தும்,

எனக்குச் சாவு இல்லாததனால், நீ என்மேல் மண்ணைப் போட்டு மூடினாலும், நான் மூச்சுக்குத் தவித்துக்கொண்டாவது இருந்துகொண்டுதானிருக்கிறேன். என்னைப் புதைத்துவிட்டு என்னைக் கூப்பிட்டால் நான் வர முடியுமா? ஆனால் இப்பொழுது நீயே உன்னுள் புரண்டதால், நான் வெளிவந்தேன். என் கைகள் ஒடிந்திருக்கின்றன. இருந்தும் உன்னை அணைக்கத்தான் நீட்டுகிறேன். நீ நானாக இருப்பினும், நான் நானாய்த்தான் இருக்க முடியும். நான் நான்தான். நான் நீயாக முடியாது, நீதான் நானாக முடியும். எனக்கு 'நா'னிலிருந்து மாறும் இயல்பு இல்லை.

"ஜனனீ, நீ இதை அறி. இப்பொழுது நீ—என்னிலிருந்து பிரிந்த நீ—மறுபடியும் 'நா'னாய்க் கொண்டிருக்கிறாய். அதனால்தான் நான் மறுபடியும் உன்னில் உருவாக முடிகிறது. எங்கும் பரவி நிலையற்று உருவற்றது, உருவற்ற நிலையிலிருந்தே, உருவாய்ப் பிரிய முடியும். அவ்வுருவற்ற நிலையின் சாயையை, அவ்வுருக்கள் தாங்கியிருப்பினும், அவை அவ்வுருவற்ற நிலையின் பிளவுகள் தாம். ஏனெனில முழுமையின் துண்டங்கள் அவை. அப்பொழுது, துண்டங்களின் துண்டங்கள் முழுமையின் எவ்வளவு பின்னம்! ஆகையால், ஜனனீ, ஜனனம் எவ்வளவு பின்னம்! ஆயினும் துண்டங்கள் இன்னமும துண்டமாகி, பொடியாகி, அப்பொடி இன்னமும் பொடிந்து மறுபடியும் உருவற்ற நிலையில்தான் கலந்துவிடுகின்றது. ஆகையால் ஜனனீ, நீ என்னில் மூழ்கினால், நீயே நானாய்விடுவாய். இதுதான் 'உன்'னின் மீட்சி... இதுதான் 'உன்'னின் மீட்சி...மீட்சி" அந்தக் குரல் மறுபடியும் அவளுள் அடங்கியது. குழலின் நாதம்போல்.

ஜனனி பதினைந்து வருஷங்கள் சிட்சை விதிக்கப்பட்டாள். ஆனால் அவள் ஆஸ்பத்திரிக்கு அனுப்பப்பட வேண்டியவளா, சிட்சைக்கு அனுப்பப்பட வேண்டியவளா

என்று சரியாய்த் தீர்மானிக்க முடியாமலே போயிற்று. வாயடைத்துப் போய்விட்டதால், கடைசிவரை மணவறையில், அவளுக்கும் அவள் கணவனுக்குமிடையில் என்ன தான் நடந்ததென அறிய முடியாமல் போயிற்று. வைத்தியர்கள் அவளைப் பரீட்சை பண்ணிப் பார்த்து, மூளையில் ஏதோ அவளை அழுத்திக்கொண்டு இருக்கிறது என்று சொல்லி விட்டார்கள்.

ஜனனி ஆஸ்பத்திரியிலும், சிறையிலுமாகக் காலத்தை மாறி மாறிக் கழித்தாள். ஆனால் எங்கும் அவளால் ஒருவருக்கும் இம்சை இல்லை. சாப்பாட்டை எதிரே வைத்தால் சாப்பிடுவாள். அவளுக்குப் பசிக்கிறது என்று யாராவது சொன்னால்தான் அவளுக்கே தெரியும். நன்னடத்தை காரணமாக, மூன்று வருஷச் சிட்சை ரத்தாயிற்று. ஆயினும் அவளுக்குப் போக்கிடம் இல்லாததால்—(அவளை வளர்த்த குடும்பம் பூண்டுகூடத் தெரியாமல் போய்விட்டது) ஆஸ்பத்திரியில்தான் இருந்தாள்.

இன்னமும் வெகுநாள் கழித்துத்தான் கொஞ்சம் கொஞ்சமாய், கொச்சை கொச்சையாய், பேச்சு வந்தது. முன் நினைவு சில சமயம் இருக்கும்; சில சமயம் இருக்காது. ஆகையால் பேச்சுக்களில் தொடர்பும் இருக்காது. "என்னில் இருக்கும் நான், உன்னில் இருக்கும் நான், நீ இல்லாத நான்! நீயே இல்லாத நீ—" என்று என்ன என்னவோ பிதற்றிக் கொண்டிருப்பாள்.

ஆனால் நெற்றிக் குங்குமத்தையும், தாலிச்சரட்டையும் ஒரு நாளும் அழிக்க மறுத்துவிட்டாள். "சரியாய்ப் போச்சு! பைத்தியங்களா, அவர் செத்துப்போனார் என்று யார் புரளி பண்றது? அவரில் இருந்த 'நீ'ன்னா செத்தது! அவரில் இருக்கிற 'நான்'தான் என்னிக்குமே இருக்கே! நான் அவரோடு தினம் பேசிக் கொம்மாளமடிச்சுண்டு தான் இருக்கேன். நான் நித்திய சுமங்கலி—எனக்கு அமங்கலமே கிடையாது..."

இப்படித் தனக்குத்தானே கையை நீட்டி நீட்டி மிகவும் உற்சாகமாகப் பேசிக்கொண்டிருப்பாள். எப்போதும் சந்தோஷமாய்ச் சிரித்தவண்ணமே இருப்பாள்.

கடைசியில் விடுதலையானாள். உடம்பு தேவலையாயிற்று என்று அல்ல; அவளால் இனிமேல் ஆபத்தில்லை, இம்சை பண்ணாத பைத்யமென்று.

அவளுக்குச் சாப்பாட்டுக்குக் குறைவில்லை. ஏனெனில் அவளுக்குப் பிக்ஷயிட்ட வீடுகள் அத்தனையும் திடீரெனச் செழித்தன. அவள் கை நீட்டி வேண்டுமென்று கேட்டோ அல்லது தானாகவே ஏதேனும் சாமானை எடுத்துக் கொண்ட கடைக்கு அன்று வியாபாரம் மும்முரமாய் நடக்கும். ஆகையால் அவளுக்கு அன்னமிடவும், கேட்டதை, கேளாததைக் கொடுக்கவும் 'நான், நான்' என்று ஒருவரையொருவர் முந்திக் கொண்டனர். அவள் கையால் ஒருமுறை உடலைத் தடவினால் போதும்; தீராத நோய்கள், அவ்வுடலிலிருந்து பொட்டென உதிர்ந்து போகும்.

இருந்தாலும் பைத்தியம்...!!

இப்படியே ஜனனி வெகுகாலம் தொண்டு கிழமாக ஜீவித்திருந்தாள். உடல் சுருங்கி, பல் உதிர்ந்து, தலைமயிர் வெண்பட்டாய் மின்ன...

அப்புறம் ஒரு நாள் ஒரு மரத்தடியில் அவள் மத்தியான்ன வேளையில் படுத்துத் தூங்கிக்கொண்டிருந்தாள். மத்தியானம் பிற்பகலாயிற்று. பிற்பகல் மாலையாயிற்று. மாலை இரவாயிற்று. இரவு காலை ஆயிற்று. காலை பகலாயிற்று. அவள் மூக்கிலும் வாயிலும் எறும்பும் ஈயும் தாராளமாய்ப் புகுந்து புறப்பட்டுக் கொண்டிருந்தன.

ஆனால் அவள் எழுந்திருக்கவேயில்லை.

# தாக்ஷாயணி

மூங்கில் பாலத்தின்மேல் மூவரின் கனம் அழுத்தியதும் பாலம் க்ரீச் க்ரீச்சென்று தொட்டிலாடிற்று. பாலம் ஆடவும் பையனுக்கு ஒரே குஷி. அம்மாவின் கையைப் பிடித்துக் கொண்டு தொப்புத் தொப்பெனக் குதித்தான். பாலம் ஐயோ ஐயோவெனச் செல்லமாய் ஓலமிட்டது.

''வா, வா போகலாம்.''

''இரு அம்மா செத்தே'' என்று வர மறுத்துத் தும்பை இழுக்கும் கன்றுக்குட்டி போல் அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

''நேரமாயிடுத்தே; அப்பா முன்னாலே போறாரே—''

''அதெல்லாம் முடியாது, வரமுடியாது, போ'' என்று பையன் தலையை ஆட்டி முரண்டி, இன்னொரு முறை குதித்தான். அவனுக்கு ஏமாற்றம் நேராதபடி பாலமும் கத்திற்று.

''இதோ பாருங்களேன், உங்கள் பிள்ளை படுத்தற பாட்டை!''

நாலடி முன்னால் போய்க்கொண்டிருந்த அவள் கணவன் நின்று திரும்பி நோக்கினான். மாலையின் மஞ்சள் வெய்யிலில் பையன் பாலசூரியனாய்த் தகதகத்

தான். அவன் தலைமயிர்கூட ஒரு தினுசான செம்பட்டையினால், ஹோமகுண்டத்தின் நெருப்புப் போல் திகுதிகுவென எரிந்தது. பசுபதியின் கண்கள், கூசினாற்போல் லேசாய் மங்கின. யோசனையான புன்னகையுடன் திரும்பி வந்தான். மூவரும் பாலத்தின் நடுவே நின்றதும் பாலம் உடலை முறித்துக்கொண்டு முனகிற்று.

கண்ணுக்கு எட்டியவரை வயற் பரப்புகள் பூமியைக் கட்டாணிட்டு அறுத்தன. மைல் தூரத்தில் ரயில்வே ஸ்டேஷனின் செங்கல் கட்டடம் பளிச்சென்றது. தந்திக் கம்பங்களின் உச்சியில் காற்று ஊடுருவுகையில் தந்திகள் சுருதி மீட்டின. மூலைக்கு மூலை, கண்ணுக்கு எட்டிய வரையும் அதற்கப்பாலும் தண்டவாளம் சீறிக்கொண்டு ஓடிற்று. நகைப் பெட்டியைத் திறந்ததும் மூடியின் உள் மெத்தைபோல் நீலம் பிதுங்கி நின்றது.

"அப்பா அப்பா, தோ பார்! அதோ, அதோ!" பையன் கையைக் கொட்டிக்கொண்டு குதித்தான்.

சவுக்குத் தோப்பின் உச்சியில் வானத்தை அசுத்தமாய்க் கிறுக்கிக்கொண்டு ஒரு கறுப்புத் திட்டு கிளம்பிற்று. நிமிஷத்துக்கு நிமிஷம் புகைப்படலம் அகன்று விரிந்தது. பாறையாய்க் கபம் கட்டிப்போன தொண்டையில் ஆகாயத்தைக் கிழித்துக் கொண்டு ஒரு கத்தல் நீளமாய்க் கிளம்பிற்று.

சவுக்குத் தோப்பின் மறைவிலிருந்து ரயில் வெளிப் பட்டதுதான் தாமதம். பையன் வெறி பிடித்தவனாகி விட்டான். அவன் தாய் அவனை அமுக்கிப் பிடித்துக் கொண்டாள். திமிறும் திமிறலில் எங்கே பாலத்திலிருந்து விழுந்துவிடுவானோ என்று பயம். ஆனால் அவள் நாட்டம் கவலையோடு அவள் கணவன் மேல்தான் பாய்ந்தது. பசுபதி மெளனமாய் வண்டித் தொடரைக்

கவனித்துக் கொண்டிருந்தான். வழியெல்லாம் தண்டவாளத்தை விழுங்கி உமிழ்ந்து ஸ்டேஷனுக்குள் விரைந்து நுழைந்து நின்று அடங்கிப் பெருமூச்சு விட்டது.

இந்த ஸ்டேஷனில் ஏறுவாரும் இல்லை, இறங்குவாரும் இல்லை. ஆனால் கிலுப்தமாய் வண்டி பிரதி தினமும் இங்கு இரண்டு நிமிஷம் இளைப்பாறிவிட்டுத்தான் சென்றது. இதோ மூச்சைப் பிடித்துக்கொண்டு கிளம்பி விட்டது.

வண்டி வளைவில் திரும்பி மரங்களின்பின் மறையும் வரை பார்த்துக் கொண்டிருந்துவிட்டுப் பசுபதி திரும்பினான். அவன் முகம் கறுத்திருந்தது. நல்ல நிறமாக இருப்பவர்களுக்கு எப்பொழுதும் ஓர் அசௌகரியம். நெஞ்சில் இருப்பதை முகத்தின் நிறம் காட்டிக் கொடுத்து விடும். பசுபதி பாபுவைவிட நிறம்.

"என்ன, போவோமா?"

"டே, பாபூ, ஓடுடா; உன்னை நான் பின்னால் வந்து பிடிக்கப் போறேன்."

பையன் கொக்கரித்துக்கொண்டு சிட்டாய்ப் பறந்தான்.

அவன் செவிதூரம் தாண்டியதும் தாக்ஷாயணி, "உங்களுக்கு இன்று மனம் சரியில்லையலலவா?" என்றாள்.

அவன் முகம் லேசான பச்சையாய் மாறிற்று. "உனக்கு அப்படி ஏன் தோணணும்?"

"எனக்குத் தோணவில்லை. தெரியும். இன்று தபால்காரன் வந்து போனதிலிருந்து நீங்கள் சரியா யில்லை. என்னை என்ன என்றுகூடக் கேட்கவில்லை. என்னோடு அப்புறம் சரியாய்ப் பேசக்கூட இல்லை."

"பிறருக்கு வரும் கடிதத்தைப் பிரிப்பதோ கேட்டு வாங்கிப் படிப்பதோ எனக்குப் பழக்கம் இல்லை."

"அப்போது நான் பிறத்தியாரா?"

அவன் பேசவில்லை.

"அப்போது உங்களுக்கு கடிதம் வந்தாலும் நான் என்ன என்று தெரிந்துகொள்ளக் கூடாதல்லவா?"

"எனக்குக் கடிதம் போட யார் இருக்கிறார்கள்? இனி எனக்கு வரவேண்டிய ஓலை ஒன்றுதான் பாக்கி. அது வந்ததும் அதற்குப் பதில் போட முடியாது. நானே கிளம்பியாக வேண்டும்."

"சரி சரி, உங்களோடு பேசினால், மூச்சு விடாமல் இப்படித்தான் தர்க்கம் பண்ணுவீர்கள்." அவள் குரல் கடுகடுத்தது. 'வெள்ளிக்கிழமையும் அதுவுமாய் நாக்கில் நரம்பில்லாமல் வெடுக்கெனு அச்சானியமாய் ஏதாவது சொல்வீர்கள். உங்கள் உடம்பு இருக்கும் நிலைக்கு எனக்குத்தான் தாங்காது. அதனால் நானே தணிந்து போகிறேன்."

"நான் கிருதார்த்தனானேன். என் அகமுடையாள் எனக்குத் தணிந்து போகிறாள். என் ஜன்மம் சாபல்யம் அடைந்தது"

"எனக்கு வந்தது இது தான், இந்தாருங்கள்!" கடிதத்தை மடியிலிருந்து எடுத்து அவனிடம் நீட்டினாள். அதை வாங்கிப் பிரித்தான். கண்கள் வரிகள் மேல் ஓடின.

அது அச்சடித்த திருமண அழைப்பு.

அதைக் கையில் பிடித்துக்கொண்டே திரும்பி, பாலத்தின் கட்டத்தின்மேல் சாய்ந்தான். இருவரும் மௌனமாய்க் கீழே ஓடும் ஜலஜரிகையைப் பார்த்துச் சிந்தித்துக்கொண்டிருந்தனர். இப்பொழுது வெய்யில், மழை வரட்டும்; கரை அடங்காது.

''ஊம், பத்மாவுக்குக் கல்யாணமாக்கும்!''

''பத்திரிகை உங்கள் கையில்தான் இருக்கிறது.''

''ஹூம், உன் தங்கை அழகி அல்லவா?'' அவன் இன்னும் ஜலத்தையேதான் பார்த்துக்கொண்டிருந்தான்.

''அதைப்பற்றிச் சந்தேகம் வேறேயா? இப்போது பட்டுவை நான் பார்த்து எட்டு வருஷங்களாச்சு. உற்ற வயசு. இன்னும் நன்றாய்த்தான் இருப்பாள்.''

''பட்டுவா?''

''அதான், பத்மாதான். நான் அவளைப் பட்டு, பட்டம்மா என்று தோன்றினாற்போல் அழைப்பேன். எங்களிடையில் சண்டை வந்தால் 'பத்து மொத்து' என்பேன். பத்து என்னவோ மொத்துதான். கதைப் புத்தகம் படிப்பதில்கூட அவளுக்கு ஆசை கிடையாது. அம்மா 'பத்மா'வென்பாள். அப்பாதான் வாய் நிறையப் 'பத்மாவதீ!' என்று கூப்பிடுவார்.''

''ஆஹா, உன் அப்பாவை எனக்குத் தெரியுமே, எவ்வளவு வாயும் மனசும் நிறைந்த மனுஷர் என்று!''

வந்த சிரிப்பை அடக்கிக்கொண்டாள். ''ஆனால் அப்பாவுக்கு என்னவோ என்மேல்தான் இஷ்டம்.''

''நீ தாக்ஷாயணி அல்லவா?'' தோற்ற சீட்டைத் தூக்கி எறிவதுபோல் பத்திரிகையை அலட்சியமாய் வீசினான். அது பறந்து சென்று ஜலத்தில் கிடந்த ஒரு பாறாங்கல் மேல் வீழ்ந்தது.

''ஏன் அதை எறிந்தீர்கள்?'' மூண்டெழும் கோபத்தில் அவளுக்குக் கன்னங்கள் குறுகுறுத்தன.

''ஏன்? இதை வைத்துக்கொண்டு கலியாணத்திற்கு நாம் போகப் போகிறோமா?''

''போகாவிட்டால் எறியணுமோ?'' கோபக்கண்ணீர் கண்களை உறுத்தியது.

அவன் ஒன்றும் சொல்லவில்லை. அவன் முகம் சுண்டிப் போயிருந்தது. இருவரும் வெகுநேரம் வாளா யிருந்தனர்.

"தாக்ஷாயணீ!"

அவன் மெதுவாகக் கூப்பிட்டது அவளுக்குக் காது கேட்கவில்லை. கிட்ட நெருங்கி முகத்தெதிரில் விரலைச் சுண்டினான்.

"—ம்ம்?" திடுக்கென விழித்துக்கொண்டாள்.

"என்ன தபஸில் இறங்கிவிட்டாய்?"

"நான் தாக்ஷாயணி அல்லவா? நீங்கள் பசுபதி."

அவள் அப்படிச் சொன்னதுமே அவன் முகத்தில் குபுக்கெனக் குங்குமம் குழம்பிற்று. உடல் கிடுகிடென ஆடிற்று. கீழே விழாதபடி அவள் கைகளை இறுகப் பற்றிக்கொண்டான். அவள் அவனை அப்படியே அணைத்துக்கொண்டாள். அந்த வேகத்தில் பாலம் ஊஞ்சலாடிற்று. அவளுள் கிளர்ந்த தாய்மை தாங்க முடியாமல் வாய் குழறிற்று. புடவைத் தலைப்பால் நெற்றியை ஒற்றினாள். அப்பா! எவ்வளவு பலவீனமாய்ப் போய்விட்டார்! ஒன்றுமே தாங்க முடிவதில்லை. அவள் விழிகள் நிறைந்த கன்னத்தில் கண்ணீர் வழிந்தது.

"ஏன் அழுகிறாய்?"

அவனைக் கட்டிக்கொண்டு தேம்பினாள்.

"தாக்ஷாயணி, ஏன் அழுகிறாய்?"

"ஒருநாள் இதுமாதிரி சமயத்தில் உங்களை நான் இழந்து விடுவேனோ?"

"நம் பையன் இருக்கிறான்—"

"இருந்தால் என்ன? உங்களுக்குப் பின்தான் அவன், எல்லாமுமே! நமக்குப் பின்தான் அவன் வந்தான்.

ஆமாம், எல்லாமே உங்களுக்கு அப்புறந்தான். இது விஷயத்தில் அன்று எப்படியோ அப்படித்தான் எனக்கு இன்றும். நான் இருக்கும்வரை அப்படித்தான்.''

அவள் ஆவேசத்தைக் கண்டு அதிசயித்து நின்றான். மாலை இரவுள் கடக்கும் நேரத்தில், கோயில் மணியோசை காற்றில் மிதந்து வந்து கலக்கையில் அவள் வெறி பிடித்தாற் போல் பேசுவதைக் காணச் சற்று அச்சமாய்க் கூட இருந்தது.

* * *

பழுக்கக் காய்ந்த வெல்லப்பாகை யாரோ வாயில் ஊற்றினாற்போல் கனவு கண்டு திடுக்கென விழித்துக் கொண்டாள். அறைக்கு வெளியே நிலவு பட்டை வீசிற்று. அவள் கணவன் படுக்கை விரித்தபடி கிடந்தது. நினைவைச் சரிகூட்டிக் கொள்ளுமுன் உருகோசை புரண்டு வந்து மேலே மோதிற்று. அவளுக்குத் திக்கென்றது. பரபரவென எழுந்து வெளியே வந்தாள்.

பூந்தொட்டிகள் சூழ்ந்த கல்மேடைமேல் அவன் உட்கார்ந்திருந்தான். மடியில் பாபு தலைவைத்துக் கவர்ச்சியான அலங்கோலத்தில் தூங்கிக் கொண்டிருந் தான். பசுபதி ஒரு கையால் தம்பூரை இறுகத் தழுவிக் கொண்டிருந்தான்.

அவள் அவனிடமிருந்து தம்பூரைப் பிடுங்கிக்கொள்ள முயன்றாள். ' வேண்டாம்...''

''இல்லை, நான் பாடவில்லை. வெறுமெனச் சுருதி மாத்திரம் மீட்டிக்கொண்டிருக்கிறேன்.''

''அதற்கும் நேரமாகவில்லையா?''

அவன் வெறுமெனச் 'சூள்' கொட்டினான். அவள் எதிரே அமர்ந்தாள். காற்று சில்லென வெட்டிற்று. உடம்பைச் சிலிர்த்து ஒடுக்கிக் கொண்டாள்.

"இது உங்களுக்கு உடம்புக்காகுமா?" அவள் சொன்னது செவியில் ஏறியதோ இல்லையோ? தம்புராக் கட்டைமேல் முகத்தைப் பதித்து ஓசையை மூர்க்கமாய் உறிஞ்சிக் குடித்துக் கொண்டிருந்தான்.

எல்லா அரவங்களும் அடங்கிய அவ்வேளையில் தம்பூரிலிருந்து பொழியும் அவ்வோசை பாம்புபோல் அவள்மேல் வழிந்து கவ்விற்று. அது தன்னை விழுங்குவதை உணர்ந்தாள். நாத வெள்ளம் கிறுகிறுவென மூக்கு விளிம்பு வரை ஏறிற்று. மூச்சுத் திணறிற்று. இனி ஒன்றும் பண்ணுவதற்கில்லை எனத் தெளிந்ததும் திடீரென மட்டற்ற மகிழ்ச்சி அவளுள் பொங்கிற்று. அதில் தன்னை இழந்து மகிழ்ச்சியுடன் சமர்ப்பித்துக் கொண்டு, மழை நாளில் குழந்தைகள் விடும் காகிதக் கப்பல் போல், தான் சுழலில் அடித்துக்கொண்டு போவதை உணர்ந்தாள் அந்த மூலமூர்க்க ஆனந்தத்தில், மூழ்கித் திணறும் மூச்சு நுனியில் கடைந்தெழுந்து எண்ணங்கள் உருவாகையில் அவை தண்ணீருள் பேசிய பேச்சுப் போல் சத்தம் இழந்து வார்த்தைகள் இழந்து வேகத்தில் வரம்புகளும் இழந்து வெற்றாய் நின்று பம்பரமாய் ஆடும் ஒன்றிலிருந்து வெறும் நீயும் நானுமாய்ப் பிரிந்து அவைகளின் ஜீவனாய் மாத்திரம், சுருதியோசை வெள்ளத்தில் நீந்துகையில், உடல் தாங்க முடியாது மூர்ச்சையில் மூழ்கிப்போனாள்.

"என்ன இது! ஏன் இப்படி இருக்கிறது?"

"எப்படி இருக்கிறது?"

"நெஞ்சில் சந்தோஷம் பொங்குகிறது. ஆனால் தொண்டையைத் துக்கம் அடைக்கிறது. கடகடவெனச் சிரிக்க வாய் திறக்கிறது. ஆனால் அழுகை பீறிட்டுக் கொண்டு வருகிறது. இது என்ன? பயமாயும் இருக்கிறது; சந்தோஷமாயும் இருக்கிறது. நாமே இருக்கிறோமா இல்லையா என்று சந்தேகங்கூடத் தோன்றுகிறது. நாம்

இப்பொழுது இல்லையென்றால் வேறு எப்படி இருக்கிறோம்! இருக்கிறோம் என்றால் இல்லாமலும் இருக்கிறோமே? புரியவில்லை. ஆனால் புரியவும் புரிகிறது. ஆனால் புரியவும் வேண்டாம்; என்ன இது?''

''நீயும் நானும் எங்கோ ஓர் எல்லைக்கோட்டில் இருக்கிறோம். நாம் இப்பொழுது குழந்தைகளாகி விட்டோம். குழந்தை தூக்கத்தில் சிரிக்கிறது. உடனே விக்கி விக்கி அழுகிறது. இது என்ன?''

''சுவாமி தூக்கத்தில் குழந்தைக்குத் தாமரைப் பூவைக் காட்டுவாராம்! அதைப் பார்த்ததும் அது சிரிக்குமாம். அவர் பூவை மறைத்ததும் அழுமாம்.''

''நாமும் தாமரைப் பூவைப் பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம். இல்லை, பூவினுள் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம் குவிந்த இதழ்கள் ஒவ்வொன்றாய்ப் பிரிந்து கொண்டிருக்கின்றன. அல்லது கவிந்துகொண்டிருக்கின்றன. புதுப் பிறப்புள் புகுந்து புறப்பட்டுக் கொண்டிருக்கிறோம். நினைவுகள் அழகிய இதழ்கள்.''

அவள் மேடையினின்று இழிந்து அவன் கால்களை மார்புடன் அணைத்துக் கொண்டாள். சுருதியோசை அவர்களைச் சூழ்ந்து கோட்டை கட்டிக்கொண்டது.

''நீங்கள் என் வாழ்க்கையில் வந்து முளைத்ததை நினைக்கட்டுமா? எனக்கு ஒரே சமயத்தில் நம் வாழ்க்கையில் ஏதேதோ நினைவு வருகிறது.''

''நீ எது நினைத்தாலும் உன் இஷ்டமே என் இஷ்டம்''

''ஒவ்வொரு நாளும் எத்தனையோ முறை எத்தனையோ விதங்களில் என் வாழ்க்கையில் உங்கள் பிரவேசத்தை நினைத்துக்கொள்கிறேன். இன்னும் எனக்கு அலுப்பு ஏற்படவில்லை.''

"உனக்கும் எனக்குமிடையில் இந்நிலையில் அலுப்பு என்பது இல்லை."

"அது மாத்திரம் அல்ல. நினைத்ததையே நினைத்துக் கொள்வதில், நினைத்ததைச் சொல்வதில் இன்பமாக இருக்கிறது. ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு புது அர்த்தம் தோன்றுகிறது. நிஜம்மா, இதைப்பத்தி உங்களிடம் சொல்றப்போ எனக்கு நாக்கு தொண்டைவரை தித்திக்கிறது."

"உன் சொல்ருசியில் என் நாக்கிலும் எச்சில் ஊறுகிறது."

"நான் காலேஜிலிருந்து அப்போதுதான் வீட்டுள் நுழைந்தேன். ஆபீஸ் ரூமிலிருந்து அப்பா கூப்பிட்டார். நான் உள்ளே வந்தேன். வந்ததும் உங்கள் முகத்தைக் காணவில்லை. முதுகைத்தான் கண்டேன். சுவரில் மாட்டியிருந்த படத்தை சிந்தித்துக்கொண்டிருந்தீர்கள். முதுகின் பின்னால் கோத்த உங்கள் கைகளைக் கண்டேன். 'உங்கள் கையைக் கொடுங்களேன்!' பற்றி இழுத்து இரு கைகளிலும் பொத்திக்கொண்டாள்.

"கையைப்பற்றிப் பேசுகையில், கையைத் தொடணும் போல் ஏக்கமே ஏற்படுகிறது."

"தாக்ஷாயணீ, இவர்தான் உன் பாட்டு வாத்தியார். இவரிடம் உன்னைப்பற்றி ரொம்பவும் சொல்லியிருக்கிறேன்."

"நான் கை கூப்பினேன். நீங்கள் நின்ற நிலை மாற வில்லை. ஆனால் மெதுவாய் முகம் மாத்திரம் என் பக்கம் திரும்பிற்று. இறைஞ்சலில் ஏந்திய என் கைகள் இறங்க மறந்தன."

"என் முகத்தில் அப்போது நீ என்ன கண்டாய்? தயவு செய்து சொல்லேன்."

"உங்கள் கேள்வி பெரிய கேள்வி. என்னென்று பதில் சொல்வேன்! அந்த நிமிஷத்தையேதான் இப்பவும் நினைத்துக் கொள்கிறேன். நினைக்க நினைக்க விவரங்கள் பிரளயமாய்ப் பெருகுகின்றன. எதையென்று எடுத்துச் சொல்வேன்."

"இல்லை, பார்வையின் அந்த க்ஷணப்பதிவில் என்னில் என்ன கண்டாய்? சொல்லேன்!"

"கல் விக்கிரகம் முகம் திரும்பினாற்போல் 'திக்' கென்றது. அதற்குமேல் என்னைக் கேட்காதேயுங்கள். எனக்குச் சொல்லத் தெரியவில்லை."

"இல்லை, சொல்; சொல்! உன்னைக் கெஞ்சுகிறேன். சொல்லேன்! நீ சொல்லச் சொல்ல எனக்குப் பலம் ஊறுகிறது."

"ஒரு தினுசாய் அடிவயிற்றைத் துண்டம் போட்டது. பழுதையென்று நினைத்துப் பாம்பைத் தூக்கிவிட்டேன் போல், 'பக்'கென்று சில்லிட்டுக்கொண்டு ஓர் அதிர்ச்சி. முதலில் 'பக்'; அப்புறந்தான், திகில், குழறல், கூக்குரல் எல்லாம்."

"உன் பாஷைக்குத் தலைவணங்குகிறேன்."

"என் நெஞ்சில் உடனே பதிந்தவை யாவை? உங்கள் நெற்றிமேட்டில் கட்டை விரல் நகத்தளவில் வளைவாய் ஒரு வடு இருக்கிறதே அது."

அவன் அதைத் தொட்டுக்கொண்டான். "சின்ன வயசில் திண்ணைக்குத் திண்ணை தாவிக் கீழே விழுந்து விட்டேன்."

"உங்கள் முகத்தில் கடுகடுப்பு இல்லாவிட்டாலும் அதில் கடினம் இருந்தது. உங்கள் கண்களில் கனிவு ஏன் இல்லை? இப்படிக் கண்டது என் கண்களின் குற்றமோ?"

"என் கண் லேசாய்ப் பூனைக் கண். அதனாலேயே என் பார்வையில் அதற்கு இல்லாத உக்கிரம் இருக்கலாம்."

"இல்லை. நாம் இப்பொழுது கண்ணால் கண்டது மாத்திரம் பேசவில்லை. கண் கண்டதால் நெஞ்சு கண்டது கண்டுகொண்டிருக்கிறோம். ஆகையால் உங்களிடம் நான் கண்டது உங்கள் கண்களின் உக்கிரம் அல்ல. உங்கள் உள் தன்மையின் உக்கிரமேதான். அதை நீங்களும் உடனே நிரூபித்துவிட்டீர்கள்."

"உன் தகப்பனாருக்கு உன்மேல் இருக்கும் பாசத்தில் அவர் உன் சங்கீதத்தைப்பற்றிச் சொன்னதெல்லாம் காதில் வாங்கிக்கொண்டேனே தவிர ஏற்றுக்கொள்ள வில்லை. இது நாமே நேருக்கு நேர் தெரிந்துகொள்ள வேண்டிய விஷயம் அல்லவா?" என்றீர்கள்.

"என்ன அப்படிச் சொல்கிறீர்கள்?" நீங்கள் சொன்னது அப்பாவுக்குப் பிடிக்கவில்லை. அத்தோடு எடுத்தவுடன் நீங்கள் என்னை 'நீ' என்றதும் அவருக்குப் பிடிக்கவில்லை. "எனக்கும் சங்கீதத்தைப்பற்றித் தெரியும்" என்றார்.

"நீங்கள் புன்னகை புரிந்தீர்கள். ஐந்து வயதில் நான் கோலியாடினபோது என் தகப்பனார் என்னைக் கன்னத்தில் அறைந்து இழுத்துவந்து சுவரோடு ஒட்டி வைத்துச் சொல்லிக் கொடுத்த நாளிலிருந்து சாதகம் பண்ணி வருகிறேன். எங்கள் குடும்பம் நினைவு தெரிந்த மூணு தலைமுறையாகச் சங்கீதப் பரம்பரை. அப்படி இருந்தும் சங்கீதத்தைப்பற்றித் தெரியும் என்று சொல்லிக்கொள்ளத் தைரியம் வரவில்லையே!"

"அப்பாவுக்கு இன்னும் ரோசம் வந்துவிட்டது. "நான் சங்கீத சபைப் பிரஸிடெண்டு என்று தெரியுமோன்னா?"

'ஓஹோ! அதனால்? திறப்பு விழாவில் கட்டடத்தின் கதவை கரகோஷங்களிடையே வெள்ளிச் சாவி போட்டுத்

திறந்தவர் கட்டடத்தைக் கல்மேல் கல்வைத்துக் கட்டினவர் ஆய்விடுவாரா? அல்லது உங்கள் தர்க்கப் பிரகாரம் ஆகிவிட வேணுமா?'

அப்பாவுக்கு முகத்தில் ரத்தம் தெறித்தது. சடேரென்று நாற்காலியைப் பின்னுக்குத் தள்ளிக்கொண்டு எழுந்தார்.

'என் வீட்டிலேயே என்னை அவமானப்படுத்த உம்மை இங்கு அழைத்து வரவில்லை!'

நீங்களும் விடவில்லை. 'உங்களுக்குப் பிடித்தமானதைப் பேசவும் நான் இங்கு வரவில்லை. நானாகவும் வரவில்லை. உங்கள் பெண்ணுக்குப் பாட்டுச் சொல்லித்தர வேண்டும் என்று நீங்களாக என்னைத் தேடிக் கேட்டு அழைத்து வந்தீர்கள் என்பதை உங்களுக்கு நினைவு மூட்டுகிறேன்.'

'ஆமாம், சபா காரியதரிசி உங்களைப்பற்றிப் பிரமாதமாகப் புகழ்ந்தார். நீங்கள் நாளடைவில் ரொம்பவும் பிரபலமாகப் போகும் பெரிய புள்ளி என்று இன்னும் ஏதேதோ சொன்னார். எனக்கும் என் பெண் எதிலும் சிறந்ததையே அடைய வேண்டும் என்னும் அவா உண்டு. அப்படி நான் ஒரு சபதமே பண்ணிக்கொண்டிருக்கிறேன். படிப்போ பாட்டோ புருஷனோ எதுவுமே, ஆம்—'

'நானும் அதையேதான் சொல்கிறேன். உங்கள் பெண் மேல் இருக்கும் பாசம் உங்கள் கண்ணை மறைக்க முடியும்.'

அப்பா பதிலுக்குப் பதில் சொல்ல முடியாமல் திணறினார். அதுதான் சமயமென நான் இடைமறித்தேன். ''ஆமாம், இவரை எனக்குப் பாட்டுச் சொல்லிக் கொடுக்க அழைத்து வந்தீர்களா? அல்லது சௌகரியமாய்ச் சண்டை போடக் கூட்டி வந்தீர்களா?'

"அப்போது நீங்கள் என்பக்கம் திரும்பித் தலை வணங்கினீர்கள். மறுபடியும் நான் சிலை அசையக் கண்டேன். எனக்கு நெஞ்சு பரபரத்தது. எப்படியும் நீங்கள் ஆச்சரியமான நிமிஷங்கள் படைத்தவர்."

"தாக்ஷாயணி, நாம் இப்போது நிமிஷத்தின் சிமிழி லிருந்து மையை எடுத்து இட்டுக்கொண்டு வருடங்களைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்."

அவளுக்கு மயிர்க்கூச்செறிந்தது. நெஞ்சை அடைத்தது. அவன் கன்னத்தை விரல் நுனிகளால் தொட்டாள். வார்த்தைகள் மூச்சோடு சேர்ந்து வந்தன. "எப்படி உங்களால் இப்படிப் பேச முடிகிறது?"

அவன் பெருமூச்செறிந்தான். இருவரும் மௌன மாயினர்.

ஆகாயத்தில் பட்சி ஒன்று ஒற்றையாய்ப் பறந்து சென்றது. திசை தப்பிய எண்ணம்போல், நிலவு வெளிச்சத்தில் இரவைத்தான் பகலென்று நினைத்துக் கொண்டதோ? மாலையில் நேரத்தில் கூட்டிலடைய மறந்து இப்பொழுது இரவில திசை தப்பி அலைகிறதோ? சுருதியிலிருந்து இழைகள் பிரிந்து அவர்களைச் சுற்றியும் மேலும்; மேன்மேலும கூடு பின்னின.

"ரிமா மமாமமாமாம—"

அவன் குரல் தம்பூரின் ஓசையோடு ரகசியமாய்க் கலந்து ஸன்னமாய்ப் பிரிந்து மெதுவாய் வீங்கி எழுந்தது.

அவள் கண்ணீர் கரையுடைந்தது. அவன் பாதங்களை இரு கைகளாலும் வருடினாள். தொண்டை கேவிற்று.

"நான் இப்போது எது நினைத்தேனோ அதற்கு அடியெடுத்துக் கொடுக்கிறீர்கள்!"

அவன் கண்கள் புன்னகை புரிந்தன. குரல் இசையோடு தழுதழுத்தது.

''ஸ...ரி...ரி...ம...மாம...மா...மா...மா''

தடவிக் கொடுத்தாற்போல் அக்ஷரங்கள் ஒன்றோ டொன்று குழைந்தன. சுருதியில் ஒளிந்து விளையாடின.

''ஸரி மாம மா மமா மகரிரீ...''

அவள் கைகள் கூப்பிக் கோத்துக் குவிந்து அந்தரப் பட்சிபோல் தவித்தன. கன்னத்தில் கண்ணீர் வழிந் தோடியபடி இருந்தது. அவள் அவஸ்தையைக் கண்டு அவன் பாடுவதை நிறுத்தினான்.

''தாக்ஷாயணி, ஏன் அழுகிறாய்?''

''நான் அழவில்லை. என் நெஞ்சை மீட்டுகிறீர்கள். என் நெஞ்சில் எவ்வளவு ஆழம் என்னையும் அறியாமல் பதிந்தீர்கள் என்று அன்றுவரை நான் அறியேன். நான் வளர்ந்த சூழ்நிலையில், எவ்வளவோ புருஷர்களோடு பேசிச் சிரித்துக் கொட்டமடித்திருக்கிறேன். அதற்கு என் வீட்டிலும் தடங்கல் இல்லை. காலேஜில் எத்தனை மாணவர்கள், வகுப்புக்கு எத்தனை வாத்தியார்கள்!'

''அதே மாதிரி பாட்டுக்கும் ஒரு வாத்தியார்.''

''அப்படித்தான் அப்பா நினைத்தார். நானும் அப்படித்தான் நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் நீங்கள் அப்படி இல்லை.''

''ஏன், எப்படி இருந்தேன்? உன்னிடம் தப்பாக நடந்துகொண்டேனா?''

''இல்லை, இல்லை, ஒருக்காலும் இல்லை. சத்தியமாக இல்லை.'' ஆவேசத்துடன் அவன் பாதங்களைக் கெட்டி யாகப் பிடித்துக்கொண்டாள். ''என் முகத்தைக்கூட நீங்கள் சரியாகப் பார்த்தீர்களோ, எனக்கு இன்னும் சந்தேகம். பாடும் நேரம்வரை கல்லாலடித்தாற்போல் உட்கார்ந்திருந்து, வேலையானதும் சொல்லிக்கொள்ளா மல்கூடப் போய்விடுவீர்களே! என்னோடு எங்கே

சரியாய்ப் பேசினீர்கள்? நான் ஒருத்தருக்கும் பயப்பட்ட தில்லை. ஆனால் உங்களிடத்தில் எனக்கு ஒரு பீதி கண்டது. அது இன்னமுந்தான் இருக்கிறது. உங்களிடம் ஒரு பிரஸன்னம் இருக்கிறது.''

''நான் உன் அடிமை.''

''நான்தான் உங்களுக்கு அடிமையானேன். அன்று உங்கள் பாட்டிற்கு அடிமையாகி அதனால் உங்களுக்கு அடிமையாகிவிட்டேன். அன்று நீங்கள் சாமா பாடுகையில் கற்பனை ஸ்வரத்தில் 'மாமாமாமாமா' என்று ஒரே அக்ஷரத்தை ஐந்து தடவை அழுத்தினீர்களே, அதில் ஏதோ ஒரு தருணத்தில், ஒரு 'மா'வில் உங்களுக்கு என்னை இழந்தேன். அன்று நீங்கள் 'மா...மா...' என்று எனக்கு என்ன செய்துவிட்டீர்கள், சொல்லுங்களேன்!''

''நான் என்ன செய்தேன்? உன் தகப்பனார் மாதிரி கேட்கிறாயே!''

''இல்லை, 'மாமாமாமாமா' என்று நீங்கள் உருக்கமாய் இழைக்கையில் திடீரென என் நெஞ்சுள் ஒரு கன்று 'அம்மா' என்று கதறிற்று. அவ்வளவுதான்; உடனே எனக்கு என்னைச் சுற்றி 'அம்மா! அம்மா!' என்று ஒரேயடியாய் வெள்ளி மணிகளின் அலறல்தான் கேட்டது. நானே என் வசத்தில் இல்லை. என்னைச் சுற்றி ஒரே நீலமாகிவிட்டது. நீங்கள் நம்பினால் நம்புங்கள்; நம்பாவிட்டால் போங்கள். கண்ணை விழித்துக்கொண்டு தான் இருக்கிறேன். சொப்பனம் மாதிரி இருக்கிறது. ஆனால் நீங்கள் என் எதிரில் இல்லை. என் மடியில் குழந்தையாய்க் கிடந்தீர்கள். வெட்கம் விட்டுச் சொல்கிறேன்.

''உனக்கும் எனக்குமிடையில் வெட்கம் என்பது கிடையாது.''

நான் மடியில் இருந்த குழந்தைக்குப் பாலூட்டிக் கொண்டிருந்தேன். எனக்குப் பால் பீரிட்டுக்கொண்டு வந்தது. ஆனால் அந்தத் தோற்றம், தோன்றின சுருக்கில் மறைந்தது. கண்ணைக் கசக்கிக்கொண்டு பார்க்கையில், நீங்கள் கண்ணை மூடி உங்கள் பாட்டில் உங்களை இழந்திருந்தீர்கள். உங்கள் முகத்தில் ஒரு தினுசான களை போட்டிருந்தது. உங்கள் நெற்றியில் வேர்வை பொட்டுப் பொட்டாய் நின்றது. 'உங்களை நான் தொட மாட்டேனா? என் முன்றானையால் அந்த வேர்வையை ஒற்றி எடுக்க மாட்டேனா? என்னில் மூண்டுவிட்ட தாய்மை தவித்தது. அத்தருணத்தில் என்னை உங்களுக்கு இழந்தேன். கானம் கலைந்து நீங்கள் திடுக்கென விழித்துக் கொண்டீர்கள். எதிரில் என்னைப் பார்த்ததும் உங்கள் முகம் கடுகடுத்தது, ஏதோ நீங்கள் ஏமாந்த சமயம் எனக்குத் தெரிந்துவிட்டது போல். தம்பூரைக் கீழே இறக்கி விட்டுக் குடிக்க ஜலம் கேட்டீர்கள். கொண்டுவந்த தீர்த்தத்தை இரண்டு முழுங்கு சீப்பிக் குடித்துவிட்டு, தம்ளரைப் படக்கெனக் கீழே வைத்துவிட்டுச் சரேலென்று எழுந்து போய்விட்டீர்கள்.''

''ஹோட்டலிலேயே சாப்பிட்டு எனக்குச் சீப்பிக் குடிக்கும் வழக்கம் விடவில்லை. என்னை மன்னித்துவிடு.''

''மன்னிப்பா?'' அவள் ஒரு விதமான ஆத்திரத்துடன் சிரித்தாள். ''நான் தம்ளரை இரண்டு கைகளிலும் எடுத்து ஆத்திரத்துடன் நீங்கள் விட்டுப்போன மிச்சத்தை உறிஞ்சிக் குடித்தேன். ஏன் அப்படிச் செய்தேன்? நானே அப்பொழுது அறியேன். உங்கள் மிச்சத்தை உண்டால் என் தாபம் தணியும் என்றா?''

''என்னடீ தாக்ஷாயணீ?''

திரும்பிப் பார்த்தபோதுதான் அம்மா என் பின்னாலேயே நின்றுகொண்டிருப்பது தெரிந்தது.

"எனக்கு ரொம்ப அசதியாயிருக்கே..."

தம்பூரை அவசரமாய்க் கீழே இறக்கிவிட்டுப் பரிவுடன் அவள் தலையை மடியில் எடுத்துக்கொண்டான்.

"வெகுநேரம் பேசிவிட்டாய். தூங்கு."

"இல்லை, எனக்குத் தூக்கம் வரவில்லை. வராது. நீங்கள் தொடர்ந்து சொல்லுங்களேன்."

"என்னது?"

"நம் கதையை. உங்கள் வாய் மூலமும் நான் கேட்க இன்று எனக்கு ஆசையாக இருக்கிறது; இரண்டு குழந்தைகள் ஒன்றுக்கு ஒன்று கதை சொல்லி ஒன்றை ஒன்று தூங்கப் பண்ணிக் கொள்வதுபோல்."

அவன் லேசாய்ச் சிரித்தான்.

அவள் குழந்தை மாதிரி அவனைத் தொந்தரவு பண்ணினாள். "சொல்லுங்கோன்னா."

அவன் மனம் இல்லாமல் இணங்குவதுபோல் பெருமூச்செறிந்தான்; பேசலானான்.

"அடுத்த நாள் மாலை நான் உங்கள் வீட்டுள் நுழைகையிலேயே, ஆபீஸ் அறையிலிருந்து உன் தகப்பனார் கூப்பிட்டார்.

'மிஸ்டர் பசுபதி, நான் திடீரென முடிவு செய்து விட்டேன். என் பெண்ணிற்கு 'டியூஷன்' நிறுத்திவிடப் போகிறேன். இதோ உங்கள் சம்பளம்; மன்னிக்க வேண்டும்; சரி, போய் வருகிறீர்களா? எனக்கு வேலை இருக்கிறது.'

"அவர் நடத்தை வெடுக்கென்று இருந்தது. ஆனால் நான் ஏன் என்று கேட்டுக் கொள்ளவில்லை. ஏன் எதற்கு என்றெல்லாம் கேட்டுப் பேச்சை வளர்த்த எனக்கு

எப்போதுமே பிடிப்பதில்லை. அத்தோடு பாட்டு வாத்தியார் பிழைப்பே இப்படித்தான். நான் பேசாமலே அப்படியே போய்விட்டேன். எனக்கு இதெல்லாம் கேட்டுத் தெரிந்து என்ன ஆகவேணும்?

இதெல்லாம் பற்றி நான் சிந்தனைகூடச் செய்ய வில்லை. ஆனால் மூன்று நாட்கள் கழித்து, மாலை நான் வெளிக்கிளம்பத் தயாராகிக் கொண்டிருக்கையில் அறைக் கதவை டக்டக்கென்று நாசுக்காய் விரல்கணுவால் தட்டும் சத்தம் கேட்டது. கதவைத் திறந்தேன். உன் தகப்பனார் நின்று கொண்டிருந்தார்.''

''உள்ளே வரலாமா, மிஸ்டர் பசுபதி?''

நான் வழி விட்டேன். ''ஹூம்!'' சுற்றுமுற்றும் பார்த்தார். நாற்காலி தேடினாரோ என்னவோ? உடையின் வண்ணான் மடிப்பு கலையாதபடி உடம்பை ஜாக்கிரதையாய் இறக்கிக்கொண்டு பாய்மேல் உட்கார்ந்தார். எனக்கு வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டேன்.

'உங்கள் நேரத்தை வீணாக்குகிறேனோ?'

'அப்படி ஒன்றும் இல்லை. என் நேரம் எனக்குக் காத்துக் கிடக்கும்.'

சடக்கென நிமிர்ந்து பார்த்தார். ''மிஸ்டர் பசுபதி, இப்பொழுது உங்களுக்கு ஆயிரம் ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?''

'இதென்ன கேள்வி?'

'பிறகு சொல்கிறேன். நீங்கள் முதலில் சொல்லுங்கள். ஆயிரம—ஏன் ஆயிரத்தைந்நூறாகத்தான் இருக்கட்டுமே! ஒரு மட்டாய்க் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?'

''என்ன செய்ய முடியாது? என்ன வேணுமானாலும் செய்யலாம். குதிரைவாலில் கட்டி ஒரு மட்டாய்த் தோற்க லாம்; கெலித்தால் பதினைந்தாயிரமாய்ப் பண்ணலாம்.''

''அவர் முகம் சட்டென மாறிற்று. அப்புறந்தான் தெரிந்தது, அவருக்கு 'ரேஸ்' பைத்தியம் உண்டு என்று.''

'உங்களைப் பொறுத்தவரையில் சொல்லுங்களேன்.

''எனக்கு யோசனை சுவாரசியமாய்த் தானாவே ஓடத்தலைப்பட்டது. 'பார்க்கலாம், இப்போது நான் வைத்துக் கொண்டிருக்கும் 'டியூஷன்'களுக்கு அக்கடா என்று ஒரு வருஷத்துக்காவது முழுக்குப் போட்டு விடலாம். சௌகரியமாய் இஷ்டப்படி சாதகம் செய்யலாம். நல்ல குருவை அடுத்துப் பாடம் கேட்கலாம். மதுரைக்குப் போய் ஓலைச் சுவடிகளைப் புரட்டி ஒரு வருஷமாவது ஆராய்ச்சி செய்ய வேண்டுமென் வெகு நாளாய் ஓர் அவா உண்டு.''

'பேஷ், பேஷ்!' என்று பையிலிருந்து செக் புத்தகத்தை எடுத்துத் துடையில் வைத்துக்கொண்டு எழுத ஆரம்பித்தார். 'உங்கள் முதல் எழுத்து என்ன?'

'ஏது, என் விஷயத்தில் இவ்வளவு அக்கறை திடீரென்று?'

'உம்மிடத்தில் அக்கறை இல்லை. எனக்கு என் பெண் மேல் இருக்கும் அக்கறைதான்.'

'இதென்ன குரு தக்ஷிணையா?'

''அப்படித்தான் வைத்துக் கொள்ளுமே.''

'இதென்ன, இந்த மூன்று நாளில் தாக்ஷாயணி சங்கீதத்தில் மேதையாகிவிட்டாளா என்ன?'

'மிஸ்டர் பசுபதி, என் பெண்ணுக்குச் சங்கீதம் வேண்டாம். என் பெண் எனக்கு மிஞ்சினால் போதும். மிஸ்டர் பசுபதி, நான் ஏமாந்து போனேன். என் பெண் உம்மிடத்தில் மனத்தைப் பறிகொடுத்து விட்டாள்.'

'கோணி ஊசியால் ஓங்கிக் குத்தினாற்போல் என் மண்டையில் வலி பளீரெனப் பாய்ந்து மின்னிற்று. ஓசைகள் அனைத்தும், அவைகளின் கதியில், அப்படியே தடுக்கி நின்றன. கூரையிலிருந்து ஒரு பல்லி தொப்பென்று மூலையில் சாத்திய தம்பூரின் மேல் விழுந்தது. 'ரொய்ஞ்ஞ்' என்று தந்திகளின் சத்தந்தான் அந்த நிமிஷத்தை விடுதலை செய்தது.

'என்ன சொல்கிறீர்கள்?' அவர் அப்படிக் கேட்கையில் அவரைப் பார்க்க எனக்குப் பரிதாபமாக இருந்தது. 'என் பெண்ணை நான் காப்பாற்ற வேண்டும். ஒரேயடியாய்ப் புத்தி கலங்கியிருக்கிறாள். ஏதோ பிதற்றிக்கொண்டே யிருக்கிறாள். ஆகாரமே செல்லவில்லை. அவளை நீங்கள் என்ன செய்துவிட்டீர்கள்?'

எனக்குச் சுருக்கென்றது.

'மிஸ்டர் பசுபதி, உங்களுக்கு என் பெண்ணைக் கொடுப்பேன் என்று நினைக்கிறீர்களோ?'

'நான் நினைப்பேன் என்று நீங்கள் நினைக்கிறது இருக்கட்டும். நீங்கள் கொடுத்தாலும் நான் பண்ணிக் கொள்ள வேண்டாமா? என் சம்மதம் என்று ஒன்று இதில் உண்டே!''

அவருக்கு மூக்குத் துடித்தது. ''அதிகப் பிரசங்கித்தன மாய்ப் பேச வேண்டாம். நீங்கள் ஆரம்பத்திலிருந்தே மீறித்தான் பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நான் வார்த்தை பொறுக்கமாட்டேன்.''

'வாஸ்தவம் நான் யார்? கேவலம் பாட்டுவாத்தியார். நீங்கள் பெரிய உத்தியோகஸ்தர். உம்மைச் சுற்றி இருப்பவர்கள் எல்லாம் உமக்கு ஆமாஞ்சாமி போட்டுப் போட்டுப் பிறர் அபிப்பிராயம் என்று ஒன்று உண்டு என்பதையே மறந்துவிட்டீர்கள். உம்மிடத்தில் பணம் ஏராளமாய் இருக்கிறது.'

"என் கையில் செக்கைத் திணித்தார். 'நீங்கள் என் பெண்ணுக்கு இழைத்திருக்கும் தீங்கிற்கு உம்மைச் சும்மாவே விடுகிறேன் என்று வைத்துக்கொள்ளும்.''

'கொஞ்சம் மூச்சு விடுங்கள். உங்கள் பெண்ணிற்கு நான் என்ன தீங்கு இழைத்துவிட்டேன்?'

'இன்னும் என்ன வேண்டும்? ஜவ்வாதுப் பொட்டும் கஸ்தூரி வாசனையும் இட்டுக்கொண்டு அவள் மனத்தை மயக்கியிருக்கிறீர்.''

செக்கை நாலு சுக்ககல்களாய்க் கிழித்து அவர் ஜேபியில் செருகினேன். ''தயவு செய்து போகிறீர்களா?''

'மிஸ்டர் பசுபதி!'

'உடனே போய்விடுங்கள். தயவு செய்து உடனே!'

அவர் போன பிறகு வெகுநேரம் நான் உட்கார்ந்த இடத்தைவிட்டு அசையவில்லை. உன்னைப்பற்றி நான் அதுவரை நினைத்ததில்லை. நான் ஒரு நாளும் அதுவரை வாசனைகள் உபயோகித்ததும் இல்லை. எங்கோ கடியாரத்தில் மணி ஒன்பது அடித்தது. கஸ்தூரி, ஜவ்வாது, கஸ்தூரி ஜவ்வாது என்று இரண்டு வார்த்தைகள், தொண்டையில் நார் சுற்றிக்கொண்டிருந்தன. இரண்டு கட்டடம் தாண்டினால் சந்தனக் கடை. சரக்கென்று எழுந்து சென்றேன். ஜவ்வாதும் கஸ்தூரியும் வாங்கிக்கொண்டு வந்தேன். கண்ணாடி பார்த்துச் செவ்வையாக இட்டுக்கொண்டேன். தம்பூரை மீட்டிக்கொண்டு பாட ஆரம்பித்தேன்.

''நானே என் வசத்தில் இல்லை. அந்த சமயம் எனக்கு உடல்கூட இல்லை. குரலாய் மாறிப் போயிருந்தேன். எத்தனை நேரம் பாடினேனோ?

''மாடிப்படியில் திடுதிடுவென யாரோ ஏறி வரும் சத்தம். கதவு படீரெனத் திறந்தது. வாசற்படியில் ஒரு கணம் நீ நின்றாய். நீ அலங்கோலமாக இருந்தது

தெரிந்தது. உன் கண்களில் ஜுரம் அடித்துக்கொண்டிருந்தது. ஓடிவந்து அப்படியே என்மேல் விழுந்தாய். சாட்டை மாதிரி உன் பின்னல், பாம்புபோல் என் கழுத்தைச் சுற்றிக்கொண்டது.''

அவன் உடல் கிடுகிடென ஆடிற்று. அவள் எழுந்து அவன் தோள்களைப் பற்றிக்கொண்டாள்.

''சில விஷயங்கள் சில சமயம் நேர்ந்து விடுகின்றன. அவை நேரும் முறையிலேயே அவைகளுக்கு முன்னும் பின்னும் இல்லை. அவை நேர்ந்ததுதான் உண்டு. அவை நேர்ந்தவிதமல்லாது வேறு எவ்விதமாயும் அவை நேரவும் முடியாது. நேர்வது அல்லாமலும் முடியாது. நேர்ந்த சமயத்தில் நேர்ந்தபடி அவை நேர்வது அல்லாது முடியாது. நேர்ந்தமையால், அதனாலே நேர வேண்டியவையாவும் ஆகிவிடுகின்றன. அப்படி நேர வேண்டியவையாய் ஆனதால் அவை நேர்ந்ததால் அவைகளில் ஒரு நேர்மையும் உண்டு. அந்த நேர்மை தவிர அவை நேர்ந்ததற்கு வேறு ஆதாரம் இல்லை. வேண்டவும் வேண்டாம். அவைகளின் ஸ்வரங்களே அவ்வளவுதான்.''

''நீங்கள் ஆச்சரியமான நிமிஷங்கள் படைத்தவர்.''

இருவரும் வெகு நேரம் அவரவர் சிந்தனையில் ஆழ்ந்திருந்தனர். தம்பூரின்மேல் பதிந்த அவன் நாட்டம் மாறவில்லை.

''சரி, நேரமாகிவிட்டது, எழுந்திருங்கள்.''

''ஆகட்டும்.''

''இப்போது மணி என்னவோ? கண்ணை ஒரு முறை கொட்டியாவது திறக்க வேண்டாமா?''

''கண்ணை மூடினால் மாத்திரம் நேரமாகவில்லையா? விழித்துக்கொண்டிருந்தாலும் நேரந்தான். தூங்கினாலும் நேரந்தான். ஆகிற நேரம் ஆகிக்கொண்டுதான் இருக்கிறது.''

''நிமிஷத்தில் வருஷங்கள். வருஷத்தில் நிமிஷங்கள். காலகதியின் உண்மையான தன்மையில் நிமிஷத்துக்கும் வருஷத்துக்கும் வித்தியாசம் இல்லை.

''நீ படித்திருப்பதால் நீ சொல்வதையெல்லாம் நிரூபிக்க முடியும். எனக்குத் தெரிந்தது கூட்டில் அடைபட்டாற்போல் இங்கு இருக்கிறேனே, இந்த எட்டு வருஷங்கள் தாம். எட்டு வருஷங்கள். ஒன்றா இரண்டா......?''

அவள் தலை குனிந்தாள். அவன் புறங்கையில் இரண்டு நெருப்புச் சொட்டுக்கள் விழுந்தன. அவன் மனம் பஸ்மம் போல் பிசுபிசுத்தது.

''தாக்ஷாயணி, ஏன் அழுகிறாய்?''

அவள் முகம் பயத்தில் மாறுவது நிலவில் கூடத் தெரிந்தது. மூக்கை உறிஞ்சிக்கொண்டாள்.

''நீங்கள் எதை நினைக்க வேண்டாம் என்று கவலைப் படுகிறேனோ, அதையேதான் இப்போது இருவரும் நினைத்துக் கொண்டிருக்கிறோம்.''

''மனம் என்பது எப்பொழுதும் ஒரு நிலையில் இருப்பதில்லை. அது எண்ணுவதையெல்லாம் எண்ணியே தீரும்.''

அவன் கைகளை இறுகப் பற்றிக் கொண்டாள்.

''என்னால் உங்களுக்கு ஒரு சுகம் கிடையாது. நான் படி மிதித்ததிலிருந்து உங்களுக்குக் கஷ்டத்தைத் தவிர வேறெதுவும் இல்லை.''

''என் வியாதிக்கும் நீ படி மிதித்ததற்கும் சம்பந்தம் இல்லை. இது குடும்பத்தில் இரண்டு வழியிலும் இருக்கிறது. என் தாய் இறந்தது காசநோயால்தான். என் தாயைப் பெற்ற பாட்டனார் இறந்ததும் அதே வியாதியால்தான். என் தகப்பனாரோ தம் அத்தை

மகளையே மணந்துகொண்டார். ஆகையால் நான் எனக்கு வந்ததைத் தப்ப முடியாது இருந்தாலும் மனம் எப்போதும் ஒரு நிலையில் இருப்பதில்லை. அது எண்ணுவதை எண்ணியே தீரும். எண்ணங்களை அறவே ஒழிக்க முடியாது. முடிந்தவரை அடக்க முடிந்தால் அதுவே ஒசத்தி!''

''நானுந்தான் நினைத்துக் கொள்கிறேன்: ஒரொரு சமயம், நீங்கள் எப்படி வீணாய்ப் போய்விட்டீர்கள் என்று. என்னவோ ஆரம்பத்தில் ஜலதோஷ ஜுரம் என்று தானே நினைத்தோம்.''

''டாக்டர் என்னை வைத்துக்கொண்டு உன்னிடத்தில் தானே சொன்னார்? ஆத்திரத்துடன் கேலி பண்ணினார். 'அம்மா! உங்களுக்கு உங்கள் புருஷன் மிஞ்சணுமானால் பட்டணத்தை விட்டு எங்கேயாவது கிராமத்துக்கு ஓடிப் போய்விடுங்கள். இந்த இடத்து மூச்சை இன்னும் ஒரு நிமிஷம் கூட சுவாசிக்க இவர் லாயக்கில்லை. சுவாசப் பையில் ஓட்டை விழ எப்போடா என்று காத்துக்கொண் டிருக்கிறது!''

''இன்று பாலத்தில் நாம் நின்றபோது ரயில் வந்ததே, அப்போது இதைத்தான் நினைத்துக்கொண்டேன். எட்டு வருஷங்களுக்கு முன்னால் இதே வண்டிதானே இந்த ஊரில் நம் இருவரையும் கக்கிவிட்டுச் சென்றது? நான் தான் முதலில் இறங்கினேன். தம்பூரைத் தோளில் மாட்டிக்கொண்டு பின்னால் நீங்கள் இறங்கினீர்கள். உங்களுக்குக் கைகொடுத்து இறங்க வேண்டியிருந்தது. அவ்வளவு பலவீனமாய்ப் போயிருந்தீர்கள். அந்த மூன்று மாதங்களுக்குள்.''

''இப்போதுந்தான் எதற்கு உபயோகம்? உனக்குக் குழந்தையாகவே நானும் ஆகிவிட்டேன். பெண்களுக்குள் ஒரு வசனம் உண்டு; பெற்றது வயிற்றுப் பிள்ளை;

கொண்டது கயிற்றுப் பிள்ளை. எப்படி இருந்தால் என்ன? இருவர் மூவரானோம். அது நிமிஷத்தில் சேர்ந்ததா, வருஷத்தில் சேர்ந்ததா?'' அவன் முகத்திலிருந்து பத்து வருஷங்கள் சட்டென உதிர்ந்தன. பாபுவின் முதுகைத் தடவினான்.

''நானும் உங்களிடம் ஒன்று சொல்ல விரும்புகிறேன். இந்த நிமிஷத்தில் எதையுமே மனத்தில் ஒளித்து வைக்க முடியவில்லை. இந்த எட்டு வருஷங்களுக்குள் ஒருதடவை, எப்போது என்று சொல்லமாட்டேன், நானும் உங்களை விட்டுப் பிரிந்து போய்விட வேண்டும் என்று நினைத்தது உண்டு.''

''ஏன்?'' அவளை ஸ்வாரஸ்யத்துடன் கவனித்தான்.

''ஏன் என்றால் என்னத்தைச் சொல்வது? நீங்கள் தான் சொன்னீர்களே, அதுமாதிரி ஒரு நிமிஷ புத்திதான். இப்படித் தோசியாய்ப் போய்விட்டேனே என்ற மனக் கசப்பு. பிறந்த வீட்டுச் சபலமும் இருக்கலாம். ஒரே எண்ணம் மனசை முற்றுகையிட்டுவிட்டால்தான் முன் புத்தி பின்புத்தியில்லாமல் அடித்துவிடுமே! என்னவோ நினைத்துக்கொண்டேன்; அவ்வளவுதான. நீங்கள் அசதியாய் உறங்கிக்கொண்டிருந்தீர்கள். பையன் விளை யாடப் போயிருந்தான். கடியாரத்தைப் பார்த்தேன். வண்டிக்கு நாலு நிமிஷங்களே இருந்தன. ஈரக் கையை மடியில் துடைத்துக்கொண்டு கிளம்பிவிட்டேன்.''

அவள் அவனைப் பார்க்கவில்லை. நெற்றியில் அரும்பிய வேர்வையைத் துடைத்துக் கொண்டாள்.

''நான் சொல்வதைச் சொல்லிவிடுகிறேன். இந்த நிமிஷம் என்னால் எதையுமே ஒளிக்க முடியவில்லை. நம்மிடையில் இது ஒன்றுதான் இருவருக்கும் தெரியாதது. அதையும் இல்லையென்று பண்ணிவிடுகிறேன். வயல்

வரப்புக்களின் மேல் தட்டுத் தடுமாறிக் குறுக்கு வழியில் விழுந்தடித்துக்கொண்டு ஓடினேன். சவுக்குத் தோப்பின் உச்சியில் புகைப்படலம் தெரிந்துவிட்டது. மூங்கில் பாலத்தின்மேல் கால் வைத்தேன். வண்டி ஸ்டேஷனை விட்டுக் கிளம்பிக்கொண்டிருந்தது. நீளமாய் ஒரு முறை ஊதிற்று. இன்னொரு முறையும் ஊதிற்று. 'ஏ அசடே, வழிதப்பிப் போகாதே! இந்தத் தடவை உன்னைக் காப்பாத்தியாச்சு. இங்கேயே விழுந்துகிட' என்று கடிவதுபோல் இருந்தது.''

அவளுக்கு மூச்சு இரைத்தது.

அவன் அவள் கையை இழுத்து தன் கையுள் வைத்துக் கொண்டான். அவள் கையை விடுவித்துக் கொள்ள முயன்றாள். ''உஷ்! குழந்தை முழிச்சுக்கறான்!'' என்றாள்.

பாபு உடம்பை முறுக்கிக்கொண்டு கண்ணைத் திறந்து, இருந்த இடம் புரியாமல் ஒருதரம் மிரள விழித்தான். தன்மேல் கவிந்த முகங்களை அடையாளம் கண்டு கொண்டதும் அவன் முகத்தில் வெளிச்சம் உண்டாயிற்று. காலை நீட்டி அவள் மடியில் சொகுசாய்ப் போட்டுக் கொண்டான்.

''அப்பா! அம்மாக்கும் உனக்கும் நடுவில் நான் பாலம்'' என்றான்.

# அமலி

கார் புறப்பட்டு வேகமெடுத்துத் தெருமுனையில் சத்தம் ஒய்வது கேட்டது.

அடுத்து அவள் உள்ளே வந்து 'அம்மாடி' என்று பெருமூச்சு விட்டுக் கூடத்துத் திண்ணையில் சாய்ந்தாள்.

"ஒருவழியா அனுப்பியாச்சு?" அவர் ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தார்.

"ஆச்சு, தாஸூ இப்பத்தான் போறான்."

"உன்னைக்கூட அழைச்சான் போல இருக்கே, தன் வீட்டில் கொஞ்சநாள் தங்கும்படி!" அவர் குரலில் ஏளனம் சிந்திற்று.

சூள் கொட்டினாள். "சேஷோமம் பண்ணின மாதிரி வீடு வீடாக மூணு நாளாகும். எல்லாம் போட்டது போட்டபடி—"

"ஆமாம், இருக்க வேண்டியதுதானே! பையன் எல்லாருமாச் சேர்ந்து நமக்குக் கலியாணம் பண்ணி வெச்சிருக்காங்களே!"

அவள் முகம் மலர்ந்தது. மஞ்சள் பூத்த நரைக் கூந்தலில் சிக்கிக்கொண்டிருந்த நேற்றைய பூச் சரத்தை இழுத்து அதைச் சற்று நேரம் நோக்கினாள். "நமக்குக் கலியாணம் ஆகி அறுபது வருஷம் ஆறதுன்னா நம்ப முடியல்லே."

"என்ன வேண்டிக் கிடக்கு?" பெரியவர் பொறுமினார். "நான் ஒண்ணு கேட்க நீ ஒண்ணு சொல்லி ஒருவரை ஒருவர் புரிஞ்சுக்காமே இப்படியே அறுபது வருஷம்."

"அப்படித்தானிருக்கட்டுமே! ஊஞ்சலைச் சித்தே நிறுத்தறேளா, நீங்கள் சொன்னபடி இந்த அறுபது வருஷத்துக்கு உங்களுக்கு ஒரு தனி நமஸ்காரம்."

"நமஸ்காரம் பண்ணி என்னை மன்னிக்கறையாக்கும்!"

"சரி, நானே மன்னிப்புக் கேக்கறதாயிருக்கட்டுமே!"

"ஏதேது! இத்தனை பவ்யம்?"

'உண்மையில் சொல்லப் போனால், இந்த வயசிலே நமக்குள்ளே மன்னிப்புக் கேக்கறதிலும், மன்னிக்கறதிலும் அர்த்தமிருக்கோ?"

"அப்போ இந்த நமஸ்காரத்திலும் அர்த்தமில்லை."

"எல்லாமே அர்த்தம் புரிஞ்சா செய்யறோம்? புரிஞ்சுதான் என்ன ஆகணும்? பெரியவா இதை இதை இப்படி செய்னு சொல்லிட்டுப் போயிருக்கா; செஞ்சுட்டுப் போறோம். எனக்கு அது போதும்."

"ஏதேது, நேத்திலிருந்து ஞானப்பல் முளைச்சிருக்கு."

"பல்லுக்கு இனி எங்கே போவேன்? வாய் பர்ஸாகிப் பத்து வருஷமாச்சு."

"சரி, மூணாம் கண்."

"நெற்றிக்கண் உங்களுக்குத்தான்—கொஞ்சம் காப்பி சாப்பிடறேளா?"

"இதோ பார் அமலி, இந்த மூணுநாள் அடிச்ச கூத்துப் போதும் எனக்கு, ஒரு மிளகு ரஸம் எதேஷ்டம். நீயா இழுத்துவிட்டுக்காதே—"

"உங்கள் சமையல் சுலபம்னா ஆயிடுத்தா? அவல் இடிச்சுத் தர ஆண்டாளு வரேன்னு இருக்கா. இன்னிக்கு விட்டால் அகப்படமாட்டாள். மாட்டுக்குப் புண்ணாக்கு ஊற வைக்கணும். பருத்திக் கொட்டை அரைக்கணும். வரதன் பால் கறக்க வர நேரமாச்சு. நேற்று சாயந்திரம் சுருக்கக் கறந்தாச்சு. கொட்டாய்ப்பக்கம் எட்டிப் பார்க்கல்லே. மடிகனம் தாங்காமல் மாடு தவிக்கிறதோ, இல்லே, கன்னுக்குட்டி தும்பையறுத்துண்டு துள்ளி விளையாடறதோ? முத்தத்தில் தேய்க்கற பத்து அம்பாரமாக் கிடக்கு."

சொல்லிக்கொண்டே கைகளைத் தரையில் ஊன்றிக் கொண்டு எழுந்தாள்.

"உன் தலையெழுத்து. எக்கேடு கெட்டுப் போ!"

தள்ளாடித் தள்ளாடி நடந்து பின்கட்டுக்குச் சென்றாள்.

கிழவரின் கோபத்தில் ஊஞ்சல் வேகம் கண்டது.

கலியாணம் பண்ணினான்களாம், —கலியாணம்! சேஷோமம் பண்ணின வீடாம்! என்னைக் கேட்டால் மூணு நாளாய் வீட்டில் சர்க்கஸ்னா நடந்தது! ஹோமம் எங்கே நடந்தது? புது வேட்டியும் புதுப்புடவையும் சாத்தி நாற்காலியில் உட்காத்தி வெச்சுக் கலர் ஃபோட்டோ எடுத்துட்டா ஆயிடுத்தா? சடங்கிலெல்லாம் நம்பிக்கை இல்லையாம்! என்னெதிரேயே இப்படிப் பேச என்ன துணிச்சல்!

இப்பவே தாஸ் புரசல் விட்டாச்சு. 'நீங்கள் ரெண்டு பேரும் இனிமேலும் இங்கேயிருந்துண்டு என்ன பண்ண னும்? பட்டணம் வந்துடுங்கோ.' இவன் எண்ணம் எனக்குத் தெரியாதா? கார்க்கோடகன். நிலத்தை வித்துப் பணமாக்கிப் பங்காக்கணும். ஆமாம், எங்கே பணம் அதிகமாயிருக்கோ அங்கேதான் தேவையும் அதிகமா யிருக்கு, விபரீதம்! "அமலி! அமலி! என்ன பண்ணறே?"

''வென்னீரடுப்பு மூட்டறேன். இதோவந்துட்டேன்!''

''இல்லை, நானே வரேன்,'' சற்று விந்தியபடி பின் கட்டுக்குப் போனார்.

''அமலி, இன்னிக்கு எனக்குப் பூஜை பண்ற மாதிரி யில்லை.''

''அவ்வளவுதானே!''

''இல்லை அமலி, இன்னியிலிருந்தே முடியும்னு தோணல்லே. இந்தக் கலியாண தினத்தைக் கொண்டா டினதிலே எனக்கு என் வயசையும், உடம்பலுப்பையும் ஞாபகப்படுத்தினதுதான் மிச்சம். இனிமேல் நீதான் பண்ணனும்.''

''பண்ணினாப் போச்சு. நீங்கள் பூவை ஒண் ணொன்னா சொல்லிப் போடறதை நான் ஒண்ணும் சொல்லாமல் அள்ளிப் போடுவேன். நீங்கள் நைவேத்ய மாப் பண்றதை நான் வெறுமென எதிரேவெச்சு, கை யைக் காட்டிக் காக்காய்க்குப் போடுவேன். எல்லாமே செஞ்சவரைக்கும்தான். இந்த அறுபது வருஷம் விடாமே பண்ணினேளே; அதை அவள் தெரியாதவளா?''

''பண்ணி என்னத்தைக் கண்டோம்?''

''ஏன் அலுத்துக்கறேள்? பிள்ளைகள் மூணுபேரும் மூணு அர்ஜுனா. பெண்கள் ரெண்டுபேரும் நல்லபடியா வாழறா. இன்னும் நமக்கு என்ன வேணும்? இந்த மூணு நாளும் பழைய மாதிரி குடும்பம் சேர்ந்து இருந்து, இன்னியோட அவாளவாள் திரும்பிப் போயிட்டா ளேன்னு நினைச்சுப் பார்த்தால், சிரமமாத்தானிருக்கு.''

''இந்த மூணு நாளும் நிர்த்தூளி. பேரப் பிள்ளை களா, வானரங்களா?''

''அப்படிச் சொல்லாதேங்கோ. குழந்தைகள் பின்னே எப்படியிருக்கும்? அப்படித்தானிருக்கும்.''

"அமலி, நீ பிக்கு."

"வசிஷ்டர் வாயால் பிரும்ம ரிஷி."

"அமலி, இவா நமக்காக வந்தாள்னு மகிழ்ந்து போறே. அவனவன் தன் தம்பட்டமடிக்க, தன் சுயவிளம் பரத்துக்கு, தன் பெருமையைக் காட்டிக்க வந்தாங்கடி! தாஸரதி ஸீமந்தபுத்ரன் தன் புதுக் காரைக் காட்டிக்க. ரகு தான் சிங்கப்பூர் போன வைபவத்தைப் பீற்றிக்க. மூணாமவன்—"

"ரவியை ஒண்ணும் சொல்லாதீங்கோ. வந்த இடத் தில் இந்தச் சந்தோஷத்தில் ஒட்டமுடியாமல் பேந்தப் பேந்த முழிச்சுண்டு நேற்று ராத்திரி ரயிலுக்கே போயிட் டானே! உங்களிடம் சொன்னானா? அவன் பெண்டாட்டி விவாகரத்து கேட்டு வக்கீல் நோட்டீஸ் விட்டிருக் காளாம்." அமலி குரல் நடுங்கிற்று. ஆனால் அழவில்லை.

கிழவருக்குத் 'திக்'கென்று ஆகிவிட்டது. 'என்னிடம் யார் என்னத்தைச் சொல்றா?' என்று முணுமுணுத்தார். "படிச்சுப் படிச்சுக் காலில் விழாதகுறையாச் சொன் னேனே கேட்டானா? காதல் கலியாணம்! நன்னா வேணும்னு என் வாயாலே சொல்லல்லே. ஆனால் அவன் செஞ்சதை அவன்தானே அனுபவிச்சாகணும்! பெற்ற கடன் நாமும் அனுபவிக்கிறோம்."

"வயத்தை ஒட்டிக்கறது. பெண்ணைப் பெத்தவாள், பெண்ணுக்குப் புத்தி சொல்லமாட்டாளோ? ஆனால் அவாதான் அவளைவிட முஸ்தீப்பா நிக்கறாளாம்."

"அதன் பேர்தான் பெரிய இடத்து சம்பந்தம்."

"நான் போய், நாட்டுப் பொண்ணை ஒரு வார்த்தை கேட்டுட்டு வரலாமான்னு உடம்பு பறக்கறது."

"போ, கேளு—அவள் கொடுக்கறதை வாங்கிக் கட்டிண்டு வா!"

''அப்படி என்ன கேட்டுடுவாள்?''

''சொல்லட்டுமா? 'உங்கள் பிள்ளைக்கு ஆண்மை யில்லை'—''

''என்ன சொன்னேள்?''

அமலி எழுந்து நின்றாள். அடுப்பில் கொள்ளிக் கட்டை சரிந்தது.

''பொறு பொறு, ரத்தம் கொதிக்காதே! நான் சொல்லல்லே. அவள் சொல்வாள்னு சொன்னேன்! பெண்ணைத்தான் தள்ளி வெக்கறதைக் கேள்விப்பட்டிருக் கோம். ஆனால் ஆண்களைத் தள்ளிவெக்கற காலமும் வந்துடுத்து—என்ன பொக்கைவாய்ச் சிரிப்பு?''

''இல்லை, கேள்விப்பட்டிருக்கோம்னு சொன்னேளே அதுக்குச் சிரிப்பு வந்தது.''

''அதில் என்ன சிரிப்பு?''

''ஏன், இந்த வீட்டிலேயே நடக்கல்லியா?''

இருவருமே சட்டென மௌனமானார்கள். ஓட்டுக் கூரைமேல் ஒரு காகம் உட்கார்ந்து கரைந்து உடனே பறந்தது.

''சொல்லிக் காண்பிக்கணும்னு எண்ணமில்லே. சொன்னத்துக்கு நினைப்பு வந்தது. பேசிட்டேன், கோவமா?''

அவர் பேசவில்லை. வாசற்படியில் தயங்கி நின்றார். முகம் வாடிவிட்டது.

''நாம் பிரிஞ்சிருந்தது மூணு வருஷம்தான். ஆனால் அது வீண்தானே? அதுவும் கலியாணமான புதுசு. சரியான காரணமுமில்லே.''

''காரணம் நான் இல்லை அமலி!''

"அது எனக்குத் தெரியாதா? காரணம் பெரியவா வீம்புதான். சாந்தி முகூர்த்தத்துக்குப் பேசினபடி எனக்கு வங்கி போட்டு அனுப்பல்லியாம்."

"மூணு பவுன்தான் அமலி, அப்போ பவுன் பதிமூணு ரூபாதான் அமலி."

"இப்போ உங்க அப்பாவுக்கு வக்காலத்துப் பேசறேளா? பவுன் ரூபா பதிமூணுதான். ஆனால் காசுக்குப் பஞ்சமாச்சே! அதுக்காக, சாந்தி நடக்காமலே என்னை வீட்டுக்கு அனுப்பிச்சுட்டது நியாயமாமோ?"

அவளுக்கு மூச்சு தேம்பிற்று. அவர் தலைகுனிந்து நின்றார். அவளுக்குப் பரிவு தாங்கவில்லை. அருகில் வந்து நின்றாள். தொடணும் போலிருந்தது. ஆனால் வெட்கம். ஒருவரையொருவர் தொட்டே எத்தனையோ நாளாச்சு.

அவர் முகத்தடியிலிருந்து, 'என்மேல் உனக்குக் கோபமாயிருந்திருக்கும்.'

அவள் சற்று யோசித்துவிட்டு, "அப்படித் தனியாத் தெரியல்லே. நாம் என்ன செய்யமுடியும்? பெரியவா மனசு வெச்சாத்தானே உண்டு! அந்த மூணு வருஷமும், அதுவும் கடைசி ரெண்டு, நெருப்பை மிதிச்சுண்டுதானே யிருந்தேன். வாழாவெட்டி வெளியில் தலை காடட முடியுமா? இத்தனைக்கும் அடுத்த தெருவுக்கு அடுத்த தெருதான் நாம். தற்செயலாகத் தெருவில் பாதை குறுக்கிட்டதுகூடக் கிடையாது. ஆனால் ஒருநாள் நான் உங்களைப் பார்த்தேன். நீங்கள் பார்க்கல்லே."

நெல்லுப் பரணுக்குப் போகும் மரப் படிக்கட்டில் ஒரு படியில் அவர் உட்கார்ந்துகொண்டார்.

"அன்னிக்குச் சோமவாரம். அம்மாவோடு கோவிலுக்குப் போயிருந்தேன். நீங்கள் திருக்குளத்தில் குளிச்சுட்டுப் படிக்கட்டு ஏறி வரேள், கையில் கமண்டலத்துடன், ரிஷி

குமாரன் மாதிரி. உடம்பில் ஜலம் முத்துத் துளிச்சுண்டு; ஏற்கெனவே நல்ல சிவப்பா, அப்படியே தகதகத்துண்டு— அப்பா, உடம்பு சிலுக்கறது.' கைகளில் முகத்தைப் புதைத்துக்கொண்டு, அங்கிருந்து 'இந்த மஹா புருஷனை அடைவேனா'ன்னு நெனச்சுண்டேன்.''

''நான் மஹாபுருஷன் இல்லை.'' என்று அவர் முணுமுணுத்தாலும் உள்ளூர சந்தோஷமாயிருந்தது.

''அதுக்காக விரதம் எடுத்தேன். அப்படிப் பட்டினி கிடந்தேன், இப்படி மெலிஞ்சேன்னு சொல்லல்லே. பெருமாளுக்கு அங்கப்ரதக்ஷணம் பண்ண யாரோ சொன்னாள். மறுத்துட்டேன். பிராகாரத்தில் நான் உருண்டு நாலுபேர் கண் எச்சில் என்மேல் பட நான் விரும்பவில்லை.''

அடுப்பை ஊதினாள். ஜ்வாலை குபீரிட்டது.

''உங்களைப் பார்த்த ஆறா மாசமே நான் உங்களிடம் வந்து சேர்ந்துட்டேன், வெச்சுக்கோங்கோ. தவம் என்கிறது கண்ணை மூடிண்டு மாலையை உருட்றது இல்லே. தவங்கிறது ஒரு நினைப்பின் ஒரே நினைப்புன்னு தோணறது. வங்கியோடுதான் வந்தேன். மூணரைப் பவுன்.''

''ஆகாதா? நீ போனப்போ பதினஞ்சு வயது; வந்தப்போ பதினெட்டு. இல்லையா?''

''ஓஹோ, கேலி பண்ணறேளா? நானே சத்தே வாளிபபுத்தான். என்னவோ துர்க் கனா. ஆனால் மறக்காத கனா. சரி, வென்னீர் சுட்டுப்போச்சு. குளிக்க வாங்கோ ''

*　　　*　　　*

அவர் சந்தியாவந்தனம் பண்ணிவிட்டுப் பூஜை அறையுள் நுழைந்தபோது அவள் சுவாமி அலமாரி

யெதிரில் கைகூப்பியபடி நின்றிருந்தாள். அவர் வந்தது தெரியவில்லை. அவருக்குக் கொஞ்சம் நெஞ்சைப் பிராண்டிற்று. ஆச்சர்யமா, போறாமையா?

அவள் கண்ணைத் திறந்ததும்: "தியானம் மும்முரம் போல இருக்கு. அப்படி என்ன வேண்டுதலையோ?"

நகை பூத்தாள்: 'எல்லாத்தையும் சொல்லிட முடியுமா? நாங்கள் பொம்மனாட்டிகள். எங்களுக்குள் எத்தனையோ ரகஸ்யமிருக்கும். சரி, சாப்பிட வரேளா? சமையல் எளிசானாலும் எப்படியோ அதேநேரம் ஆயிடறது."

உச்சி வெய்யில் நகநகத்தது. ரேழித் திண்ணையில் அமலி, தலைக்குயரக் கட்டையை வைத்துக்கொண்டு கண் அயர்ந்துவிட்டாள். கடைவாயில் வெற்றிலைச் சாறு வழிந்தது. இன்னமும் குறட்டையாக மாறவில்லை— பெரிய மூச்சில் வயிறு மிதந்தது. காற்று சுகமாக வீசியது.

ஆனால் அவருக்குத் தூக்கம் வரவில்லை. ரேழித் திண்ணையில் மாறி மாறிப் புரண்டார். மூட்டுக்கு மூட்டு வலி. மனம் நிலைபடாமல் சஞ்சலித்தது.

சத்தமே ஆகல்லே. காரணம் வயசா, உடம்பா, மனசா? தின ஒழுக்கத்தில் சற்றுப் பிசகினால்கூட முதல் கோணல் முற்றிலும் கோணல். நிதானமே போச்சு. இவன்கள் வந்து கூத்தடிக்கல்லேன்னு யார் அழுதா? நாங்கள் கிழங்கள். எங்களை எங்கள் நிம்மதியில் இருப்பது இவர்களுக்கு ஆகல்லியே! இவாள் பிரியமாயிருந்தாலும் இருக்கலாம். இவாள் மாதிரி பிரியத்தை வேண்டப் பட்டவாளும் இருப்பா. ஏன் இவளே இருக்காளே, ஆனால் எனக்கு வேண்டாம்.

"அம்மா, இன்னும் உக்காரேதேங்கோ, பெருக்கிடறேன்." உட்கார்ர இடத்தைப் பெருக்கிட்டால் ஆயிடுத்தா? கூடம் முழுக்கக் குப்பை என்ன ஆறது?

இவாள் போட்ட குப்பைதானே? ஆனால் இந்த மக்குக்கு உடனே உச்சி குளிர்ந்து போறது. காரியமெல்லாம் இவள் தலைமேலே. இவளும் மத்தவாளைச் செய்யவும் விடமாட்டாள்.

பெரியவாளைத் தரிசனம் பண்ணப் போறாளாம். ஏன், அவரைப் பார்க்க அந்தக் காரில் நாங்கள் வர மாட்டோமா, அழைச்சுண்டு போனால்! ''காரிலே புழுக்கம் தாங்காது. அத்தோடு நீங்க பார்க்காத பெரியவாளா? காஞ்சிபுரம் உங்களுக்குக் கொல்லைப் புறம்.'' தாஸு சாமர்த்தியமே, இதிலே நம்பிக்கையில்லே அதிலே நம்பிக்கையில்லேன்னுட்டு, பெரியவாள் மேலே பக்தி பொங்கி வழியறதோ? பட்டுப் புடவை வாங்கப் போறான்கள்.

ரகு ஒரே வாய்ச்சவடால். ஒரு வேலையிலும் நிலைச்சு நிக்கறதாத் தெரியல்லே. வேலையில் இல்லாமலும் இல்லை. ''வேலைக்கு நான் தேட வேண்டாம். அது என்னைத் தேடிண்டு வரும். நான் படிச்சிருக்கிற படிப்பு அப்படி!''

மூணாமவன் என்னைக்குமே மூடு சூளை. இப்போ தன் சூளையில் தானே வெந்துண்டிருக்கான். இவாளை அடுத்தடுத்து மேம்படிக்க வச்சு இவள் நகையெல்லாம் ஜாடா முழுகிப்போச்சு. நினைச்சுப் பார்க்கறதுகளா? ஒரு காலணா ஒத்தாசையில்லை. ஒருதடவை கிஸ்திக்குப் பணம் தட்டுப்படறது, உழவு மாடு வாங்கணும்னு கேட்டு எழுதினால் ஒரு மாசம் கழிச்சுப் பதில் வரது, 'இதுக்குத் தான் நிலத்தை அப்பவே வித்துடச் சொன்னேன்'னு. எல்லாம் பொய்த்துப் போச்சு. இதுகளா விழுதுகள்? கழுத்துக்குச் சுருக்குகள்.

''என்ன நீங்களே பேசிக்கறேள்?''

''பேசினேனா என்ன?'' முகத்தைத் துடைத்துக் கொண்டார்.

சின்னச் சின்ன ஓசைகள்கூடப் புஷ்டியான அர்த்தம். பிதுங்கும் இரவின் நிசப்தம். ரேழித் திண்ணையில், தலைக்கு நேர்விட்டத்தில் பட்சிக் கூண்டில் சிறகுகளின் படபடப்பு. அவை ஏன் தூங்கவில்லை. அங்கேயும் கலவரமா? இவ்வுலகமே பிரம்மாண்டமான கூண்டு. ஜந்துக்கள் மூலைக்கு மூலை ஓடுகின்றன. நாம் ஜந்துக்கள் இல்லாமல் பின்என்ன? நட்சத்திரங்களைப் பார்த்து ஏங்கு கிறோம். அவை நம்மைப் பார்த்துச் சிரிக்கின்றன.

"அமலி, தூங்கிட்டையா?"

"என்ன வேணும்?"

"இன்னிக்கு மூணாம் மாஸம் எனக்கு 8-வது ஜன்ம நட்சத்திரம்."

"அப்படின்னா சதாபிஷேகம் கிட்ட வந்துடுத்துன்னு சொல்லுங்கோ. நமஸ்காரம் பண்றேன்."

"உன் நமஸ்காரம் கிடக்கட்டும். நீ கோட்டை கட்டிண்டிருக்காதே. அடுத்தடுத்துப் புடவையும் வேட்டியும் குட்டி போடும்னு."

"போடாட்டா போறது. பிள்ளைகளுக்குத் தெரிவிக்க வேண்டியது நம் கடமை."

"இதுலே வைதிக காரியங்களை ஏனோ தானோன்னு விட முடியாது. மாங்கல்யம் பண்ணியாகணும். இவா தான் எல்லாம் செய்யணும்."

"செய்யமாட்டாளா என்ன?"

"எனக்கு நம்பிக்கையில்லை."

"அவாளுக்குத் தெரியப்படுத்துவது நம் கடமை."

"உனக்கு எங்கே சபலம் விடறது?"

"செய்யாட்டாப் போறா; நம்மால் எதுவுமே முடியாட்டா எதிரேயே பெருமாள் கோவிலில் மஞ்சள் கயிறில் மஞ்சளைக் கோர்த்து, சன்னதியில் எனக்குக் கட்டிடுங்கோ யதேஷ்டம்."

அவருக்கு நெஞ்சை என்னவோ பண்ணிற்று. ''அமலீ, வரவர எனக்கு உன்னைப் புரியல்லே! நீ அசடா, புத்திசாலியா, விவேகியா? எல்லாத்துக்கும் பதில் வெச்சிருக்கே, எல்லாத்துக்கும் சமனமாயிடறே! என்னால் முடியல்லியே!''

''எல்லாம் முடிஞ்ச வரைக்கும்தான். எண்ணம் அழுக்கில்லாமல் இருந்தால் சரி.''

மௌனம்.

சற்றுநேரம் கழித்து, ''அமலி, தூங்கிட்டையா?''

''இல்லே, என்ன வேணும்?''

''எனக்கு மனசு சரியில்லே. இல்லை, நீ எழுந்திருக்க வேண்டாம்; விளக்கைப் போட வேண்டாம்!''

''திரும்பத் திரும்ப நம்ம பசங்கதானே! ஏன் வீண் கவலைப்படறேள்?''

''தாஸ் நிலத்தை விற்கக் கெடுபிடி பண்ணுவான் போலத் தோணறது. நான் சம்மதிக்காமல் போனால், தன் பங்கைக் கேட்பான்போல இருக்கு.''

''சரி, கொடுத்துடுங்கோ!''

''ஒருத்தன் கேட்டால் மத்தவன்களும் கேட்க வேண்டியதுதானே? பெண்களுக்கும் இப்போ பங்கு உண்டு.''

''சரி, பிரிச்சுக் கொடுத்துடுங்கோ.''

''ஜடம், ஜடம்! அப்புறம் நம் பங்கு என்ன இருக்கும்? நாக்கை வழிச்சுக்க வேண்டியதுதான்.''

''இதோ பாருங்கோ, நீங்கள் நினைக்கற மாதிரி குழந்தைகள் அத்தனை கெட்டவா இல்லே. நாமும் அவாளை நம்பணும்! கவளம் தொண்டையில் சிக்கினால்

சாவுன்னா சாப்பிடவே முடியாது. அப்படி நம்மை த்ராட்டில் விட்டுவிட மாட்டான்கள். அவாளுக்கும் ஊர்ப் பழின்னு ஒரு பயமிருக்குமே!''

''அது சரி அங்கே மூணு மாசம், இங்கே மூணு மாசம் அடுத்து மூணு மாசம்னு பெத்தவாளை ஏலம் விட்டால், உனக்கு வேண்டியிருக்கும்போல இருக்கு. என்ன சிரிக்கறே?'' கோபம் வந்துவிட்டது.

''நீங்க சொல்றதுக்குச் சிரிப்பு வந்தது. சரி, நீங்கள் சொல்றபடியே வெச்சுப்போம். நாமும் எப்பத்தான் ஊர் ஊராப் போயிருக்கோம்? இப்படியும் ஒரு மாறுதல்னா இருக்கட்டுமே!''

தலையிலடித்துக் கொண்டார். ''நீ மாறவே மாட்டாய். நீ காமாலைக் கண்ணிதானே!'' திடீரென ஓர் எண்ணம் உதித்தவராய், ''அமலி, ஏன், இப்படியும் தோணறது. 'நான் அப்பாவை மூணு மாசம், நீ அம்மாவை ஆறு மாசம், இந்த மாதிரியும் பங்கு போட்டுக் கொள்ளலாமில்லியா?''

அவளுக்கு ஒரு மூச்சு தவறுவது இருட்டில் கேட்டது.

''என்னன்னா சொல்றேள்? நம்மைப் பிரிச்சுடுவாளா?'' திடீரென்று குரல் தீனமாகிவிட்டது.

''ஏன் நடக்கக்கூடாது? எல்லா சாத்தியக்கூறையும் யோசிக்க வேண்டியதுதானே. ஒரே சமயத்தில் இரண்டு பேர்னா அதுவும் பளுதானே? காலமும் அப்படித்தானே இருக்கு! சரி விடு—யோசனை பண்ணிப் பண்ணி மண்டையைக் குடையறது. நீ சொல்றமாதிரி எல்லாம் முடிஞ்ச வரைக்கும்தான். அப்புறம் அவள் விட்ட வழி.''

கால் தூக்கம் அரைத் தூக்க மயக்கத்தில் யாரோ தன் கையைப் பிடித்தமாதிரி—அவள்தான். அவர் விடுவித்துக் கொள்ளவில்லை. அந்த மௌனச் சைகை வேண்டியிருந்தது.

கூடவே ஒரு வண்டின் கூவல் எங்கிருந்தோ கிளம்பிற்று. இருட்டில் சுற்றிச் சுற்றி வட்டமிட்டது. ஒரு தடவை முகத்திலும் மோதிற்று. கொட்டினால் அவ்வளவு தான். அவள் கைமேல் அவர் பிடி கொஞ்சம் இறுகிற்று. எங்கோ இருட்டில் வழி தப்பி வந்திருக்கிறது. அரைக் கணம் பயத்தில் செயலிழந்தார். அப்பவே அவர் பிடியி லிருந்து அவள் கை நழுவித் துவண்டு விழுந்தது.

''அமலி! அமலி!!''

பதில் இல்லை.

எழுந்து குனிந்து அவள் தோளை உலுக்கினார். ''அமலி!''

ஊஹூம்.

ஸ்விச்சைப் போட்டார். விளக்கு வரவில்லை. மின்சாரம் ஃபட்.

''அமலி! அமலீ!!''

அந்த அலறலில் மிரண்டு வண்டின் ரீங்காரம் ஜன்னல் வழி வெளியே சென்றுவிட்டது.

# த்வனி

கண்ணின் இமையுள், விழிப்பின் முதல் உணர்வாய்க் கவிந்த இருள் முழுவே உனக்கு அஞ்சலி. உதயத்தின் மூற்பொருள் நீ. உனக்கு அழிவில்லை. நான் இன்பத்தில் வாழ்த்தியும், துன்பத்தில் தூற்றியும் நீ என்றும் பெருகு வாயாக. நீ உமிழ்ந்த மாணிக்கமாய் ஒளியைத் திரும்ப விழுங்க நீ திருவுளம் பற்றிய தருணமே. காலம், இடம், பொருள், தவம், தத்துவம் என என் ப்ரக்ஞை கட்டியாடும் வேடங்கள் அனைத்தும் என் அந்தத்தில் குலைந்து அவிந்து உன்னில் அடங்கிவிடும். ஓம் சாந்தி.

*　　　*　　　*

உன்னை நான் அறியுமுன்னர் என் உள்ப்ரக்ஞையில் நீ பீடம் கொண்டுவிட்டாய்.

*　　　*　　　*

இன்று காலை ஆபீஸுக்குத் தாமதமாகிவிட்டது. மின்சார வண்டி திருட்டு மூட்டைகள் இறங்கும் திருப்பம் தாண்டிக் கோட்டை ஸ்டேஷனின் மதிற்சுவர்கள் தாண்டி, முழு வேகத்தில் போய்க் கொண்டிருக்கையில், 'திடீர் ப்ரேக்' போட்டு நின்ற சடக்கில், நாங்கள் பின் பல்டியடிக்காமல் தப்பித்தது எங்கள் அதிர்ஷ்டம். நான் இருந்த பெட்டி நடுப்பாலத்தில் நின்றது. சுற்றி,

மும்முரமாய், ரயில்வே கட்டிட வேலை நடந்துகொண்டிருக்கிறது. இரவும் பகலுமாய் விளக்குப் போட்டுவிடாது நடக்கிறது.

பாலத்தின் அடியில் ஓடும் ஜலத்தையொட்டிக் கரை கட்டினாற்போல் குவித்திருக்கும் பாராங்கற்களின்மீது, பூத்த நக்ஷத்ரம்போல் விரிந்த கைகால்களுடன், தலை கீழாய் அண்ணாந்து ஒருவன் விழுந்து கிடந்தான். குடுமி அவிழ்ந்து, தண்ணீரில் தோய்ந்தது. பின்மண்டையிலிருந்து பீறிட்டுக் கொண்டேயிருக்கும் குருதி, ஜலத்தில் பந்து பந்தாய் சடைத்துச், சொம்பளவு இரத்தப் பூக்கள் முகத்தைச் சூழ்ந்து தவழ்ந்தன. காலை வெய்யிலில் தாடி முட்கள் பொன்னாய் மின்னின. சிற்றலைகள் முகத்தைக் கழுவின.

மூலத் துயிலில் தாண்டவ கோலத்தில் மூழ்கிவிட்ட செஞ்சடாதரன்.

*　　*　　*

தெருவிளக்கு அணைந்ததுதான் காரணமோ என்னவோ, நள்ளிரவில் திடுக்கென விழித்துக்கொண்டேன். என் உருவக்கோடுகூட எனக்கிலாதபடி என்னையும் தன்னோடு இழைத்துக் கொண்டதுபோல் எனைச் சூழ்ந்த மையிருளில் விழித்திரையில் சிவப்பு நுரை கக்கிக்கொண்டு பெருக்கெடுத்து அறை புரண்டது.

சிவப்பை விடச் செந்தூரம் எனில் தகும்.

கைக்குப் பட்டாலன்றி இருக்குமிடம் தெரியாமல் தாதுவில் மிதந்துகொண்டிருந்தால் உயிர்.

"அப்பனே தீர்க்காயுசாயிரு" என்று அயிலாண்டப் பாட்டிகள் வாயார வாழ்த்த வழி.

வெள்ளமாய்ப் புரண்டுவிட்டாலோ;

"போயும் போயும் இப்படியா போகணும்! நாலு நாள் கிடந்து போனான்னு வயத்தெரிச்சல் தீரக்கூட

வழியில்லையே. நாங்கள் கிழங்கள். இன்னும் கிழங்காவளைய வரோமே, இந்தக் கொடுமையெல்லாம் பார்க்கணும் கேட்கணும்னு இன்னும் எங்கள் தலையில் என்னென்ன எழுதி வெச்சிருக்கோன்னு தலையிலடித்துக் கொள்ள விஷயமாச்சு.

ஆனால் இன்று செத்துப்போனவன் சின்ன வயது இல்லை. ரயில் தள்ளிவிட்டது. அறியக்கூட அவனுக்கு நேரமிருந்திருக்காது. இல்லாவிடில் முகத்தில் எப்படி அத்தனை சாந்தம்! உதட்டோரம் சிறு முறுவலின் முன் நிழல் கூட. இன்பம தந்த ஏதோ ஞாபகத்தில் தன்னை யிழந்து வண்டி வந்ததுகூடத் தெரியாமல், பாலம் தாண்டுகின்றேன் என்று சமுத்திரத்தையே தாண்டி 'விட்டான்.

ஆமாம், அக்கரையில் காத்திருக்கும் காரிருளே உனக்குக் கையென்றும், காலென்றும், முலையென்றும், தொடையென்றும் தனியில்லை. அவனை நீ என்ன சைகை எப்படிக் காட்டி உன்னுள் வலித்துக் கொண்டாய் எனும் வியப்பில் எண்ணம் திளைக்கத் திளைக்க நெஞ்சு முள்மேல் மீன் நெளிந்து வளைந்து மாட்டிக்கொள்ளாமல் துள்ளி விளையாடி அடிவயிற்றின் ஒளி மருட்சி காட்டுகிறது.

ஆனால் நூல் மாத்திரம் விட்டுக்கொண்டே போகிறது. இந்த நூலுக்கு மாத்திரம் திரௌபதியின் துகில் போல் எப்படி ஓயாத இந்நீளம்? இல்லை நடுவிலேயே அறுந்து போனதைத்தான் எல்லையே இல்லாததாய் நினைத்துக் கொண்டிருக்கிறேனா?

சே, சே, இல்லை இல்லை; இல்லவே இல்லை. இந்த நூல் அறவே அறாது. இது அறுந்துபோனால், பிறகு என்னதான் இருக்கிறது. என்ன இருந்துதான் என்ன? பிடிக்க மீனுமில்லை: மீன் பிடிக்க ஆளுமில்லை.

இது இருளின் நரம்பு.
எண்ணத்தின் கறுப்பு மணிக்கயிறு!
வானத்தின் நீலத்தினின்று உரித்த பொற்சரடு
நினைவில் மின்னும் இருளின் யஞ்ஞோப வீதம்.
பிறவியின் ஒளி.
வானத்தின் நீலத்தினின்று உரித்த சரடு.
நினைவில் மின்னும் இருளின் யஞ்ஞோப வீதம்.
இதுதான் என் பிறவியின் தேஜஸ்.

* * *

ஆனால் நான் நூலைக் களைந்து வருடங்களாகி விட்டன.

அம்மாவின் தகனத்திற்கு மறுநாள் சடங்குகளின் போது மாரைத் தடவினால் பூணூலைக் காணோம்! சட்டையோடு கழன்று 'கோட் ஸ்டாண்டி'ல் தொங்கிக் கொண்டிருக்கிறதா? இருக்காது, நேற்று நான் சட்டை யோடு படுக்கவில்லையே! ஆ! புரிந்தது. நேற்று அம்மா வைப் பொசுக்கிவிட்டுக், காட்டிலிருந்து வந்து குளத்தில் மூழ்கியபோது ஜலத்தில் நழுவியிருக்கும்; வேறு வழியே இல்லை.

பூணூல் போன வழி புரிந்ததுமே கூடவே நெஞ்சில் ஏதேதோ கதவுகள் திறந்துகொண்டே போயின.

வெடுக்கென நான் எழுந்த வேகத்தில் மடியிலிருந்த பணம் தரையில் சிந்திற்று. சில்லறைக்குத்தான் எத்தனை இரைச்சல்!

'சாஸ்திரிகளே, நான் சடங்குகளைச் செய்யப் போவதில்லை.'

வாத்தியாருக்கு வாய் தொங்கிற்று. ''ஏன் திடீர்னு இப்போ என்ன?...'

''சாஸ்திரிகளே, திடீர் என்று நேர்பவைகள்தாம் திடம், நிஜம். படிப்படியாய் நேர்வது மாறுதல், பல

காலம் முடிச்சவிழ்ப்பு நிச்சயமில்லை. திடீரென்று நேர்வதுதான் சிக்கறுப்பு. விடுதலை, மீட்சியற்றது. விடுதலை திடீரென்றுதான் நேர முடியும்.''

''இப்போ என்ன விடுதலை, எதிலிருந்து விடுதலை?''

''நூல் கட்டிலிருந்து விடுதலை, இடமிருந்து வலம், வலமிருந்து இடம் என மாறி மாறிக் காட்டும் நம்பிக்கையின் போதையினின்று உதறிக்கொண்ட தெளிவு.''

''எனக்கு ஒன்றுமே புரியவில்லை.''

''உங்களுக்கு விளக்குமளவிற்கு என்னுள் இப்போது நேர்ந்ததற்கு இன்னும் வார்த்தைகள் வரவில்லை. ஆனால் வரும், ஒரு நாள் வரும். ஆனால் வந்தால் என்ன, வராவிட்டால் என்ன? நேர்ந்தது நேர்ந்துவிட்டது. விடுதலையின் பாதையே அந்தச் செயல்தான்.''

''நீங்கள் பேசற பாஷையே வேறேயா இருக்கு. போனவர்கள் போய்விட்டாலும் இருக்கிறவா சுபிக்ஷமாயிருக்கணும்னு, லோக க்ஷேமார்த்தம் இந்தக் காரியங்களைச் செய்தாகணும். இதுகளைச் செய்யாட்டா பிதுர்க்களின் சாபம் குடும்பத்திற்கு சம்பவிக்கும்.''

''சாஸ்திரிகளே, உங்கள் கேள்விக்குப் பதில் உங்களிடமிருந்தே வந்துகொண்டிருக்கிறது. போனவர், இருப்பவர், க்ஷேமம், சாபம், லோகம் ஈதெல்லாம் சமுதாய பாஷையின் றீ வேறு என்ன? உங்கள்வரை நேற்று இருந்த என் தாய் இன்று போய்விட்டாள் அல்லவா? ஆனால் அதோ சாம்பல் படுக்கையிலிருந்து நம் சர்ச்சையைக் கேட்டு அவள் சிரிக்கும் சிரிப்பின் த்வனி எனக்குக் கேட்கிறது. உங்களுக்குக் கேட்கிறதோ? அதுதான் நான் உங்களுக்குச் சொல்லத் தவிக்கும் விஷயம்.''

''இதோ பாருங்கள், பூணூலைக் காணோம்னா அதற்குப் பரிகாரம் இருக்கு. பெரியவா எல்லாத்துச்குமே பரிகாரம், பிராயசித்தம் ஏற்படுத்திட்டுப் போயிருக்கா— அதனாலே...''

''ஆண்டவன் சித்தத்துக்கே ப்ராயச்சித்தம் உண்டா என்ன?''

சாஸ்திரிகளின் கீழுதடு கேலி நகையில் வளைந்தது.

''நீங்கள் என்ன அப்போ சாமியாராயிட்டேளா? இப்படியே இந்த இடுப்பு வேட்டியுடனும் தோள் முண்டுடனும் தேசாந்தரம் கிளம்பிட்டேளா? வீட்டுக்குக் கூடத் திரும்பப் போறதில்லையா? இந்த நிலைக்குக்கூடப் பெரியவா ஏற்கனவே பேர் வெச்சிருக்கா, ஸ்மசான வைராக்யம்னு—''

''எனக்கு ஏற்பட்டிருக்கும் விடுதலை வைராக்கியத் திலிருந்துகூடத்தான்.''

வாத்தியார் தன் கைக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார். வாத்தியாருக்கு சொந்தத்தில் இரண்டு மாடி வீடுகள் இருக்கின்றன. வாடகை வருகிறது. அவர் பையன் நல்ல உத்யோகத்திலிருக்கிறான். ஆனால் அவர் பையனை நம்பவில்லை.

''இன்னிக்கு ஒரு ஸீமந்த முகூர்த்தத்துக்குப் போயாகணும். இன்னும் எத்தனை நாழி இடக்குப் பண்ணப் போறேள்? உங்களை மாதிரி மனுஷாள் இருக்கிறதால் தான் நம் குலம் இப்படி க்ஷீணப்பட்டிருக்கு. வேலியே பயிரை மேய்ஞ்சால் விமோசனம் இருக்கோ? நீங்களே சொல்லுங்கோ!''

நான் ஒன்றும் சொல்லவில்லை. சொல்ல என்ன இருக்கிறது? அவரும், அவரை அண்டி வந்தவரும், என்னோடு வந்தவரும் என்னைச் சுற்றி நின்றுகொண்டு என்னை ஒரு விநோதப் பிராணிபோல் பார்த்துக் கொண்டிருந்தனர்.

சற்று எட்ட, ஒரு புதை மேட்டின்மேல், புல் மெத்தையில் ஒரு தாய் நாய் சுகமாய்ப் படுத்துக்கொண்டிருந்தது.

இரு குட்டிகள்—ஒன்று உடலே பட்டுக் கறுப்பு; இன்னொன்று காது மடிகளில் மாத்திரம் கறுப்புத்திட்டு— இன்ப முனகல்களுடன் பாலுண்டு கொண்டிருந்தன.

ஆடு ஒன்று அருகே புல்லை மேய்ந்துகொண்டிருந்தது. நாய் குரைக்கவில்லை. ஆட்டின்மேல் பாயவில்லை. நாயும் ஆடும் சினேகம் போலும். எத்தனை நாள் சினேகமோ?

* * *

அழுகிறேன்
சிரிக்கிறேன்
பேசுகிறேன்
பேசாமலிருக்கிறேன்

ஆத்திரப்படுகிறேன்
அமைதியாயிருக்கிறேன்
அசைகிறேன்
அடங்குகிறேன்

சகுனம்
சம்பவம்
நம்பிக்கை

கேள்வி
பதில்
சமாதானம்

நன்மை புண்ணியம்
தீமை பாவம்

எல்லாமே த்வனிகள் தான்
மௌனமும்
ஒரு
த்வனிதான்
ஒலியே நீ மோனத்துள் புகுந்து கொண்டதால்
உன்னைக் கேட்கவில்லை என்று
உன்னையே நீ ஏமாற்றிக் கொள்கிறாயா?

கண்ணாடியில் பிம்பம் விழும் த்வனிகூட எனக்குக்
கேட்கிறது. நீ அதை அறிவாயோ? எல்லாம் நெஞ்சு
நிற்கும் மீட்டலுக்கேற்ப.
ஆனால் அறிவது, கேட்பது இவையெல்லாம் என்ன
வெறும் வார்த்தைகள் தானே! அவைகளின் பொருளும்
உண்டான பொருளல்ல. அவ்வவ்வார்த்தை வரம்புள்
சொல் ஒட்டம் நீடித்தவரை நாம் நமக்கு
ஆக்கிக்கொண்ட பொருள்.
ஆனால், சொல்தாண்டிய உயிர், அவ்வுயிரையும்
குடித்து
உயிருடன் உயிர்தந்த பொருளையும் விழுங்கிய
இருள்பற்றி நாம் என்ன கண்டோம்!!?

* * *

என் தாயும் நம்பிக்கைகளைக் களைந்தவள் தான்.

"ஆமாம், உனக்கு நினைவு தெரிந்தநாள் முதலாய் நீயும்தான், உன் தகப்பனுக்கு சிரார்த்தம் பண்ணிப் பண்ணி உன் ஆயுசிலும் பாதிக்குமேல் ஆயாச்சு. நீ என்னைவிடக் கிழமாயிட்டே. ஆனால் உன் அப்பா இன்னும் உன் பிண்டத்துக்குக் காத்திருக்கார்னு உனக்குத் தோணறதோ? என்னவோ அப்பா எனக்கு நம்பிக்கையில்லே மனுஷன் வேறு எங்கே பிறந்து? இன்னும் வேறெந்தக் குடியைக் கெடுந்திண்டிருக்கானோ? நீ முழிச்சுப் பார்த்தால் நான் பயந்துடமாட்டேன். உன் அப்பாவை உனக்குத் தெரியுமா, எனக்குத் தெரியுமா? உன் அப்பா என் கழுத்தில் கட்டியது தாலியா அது, பாம்புன்னா! பின்னே என்ன? என்னவோ என்னை இத்தனை கெடுத்ததற்கு எனக்குத் தெரிஞ்சு உன் அப்பாவால் அமைஞ்ச ஒரே நல்ல காரியம் உன்னைக் கொடுத்தது தான். நீ மாத்திரம் எனக்கென்ன, நான் பெண்ணாய்ப் பிறந்ததுக்கு மலடு இல்லேன்னு நிரூபிக்கத்தானே!"

என் தாய் ஆணாய்ப் பிறக்க வேண்டியவள். ஏதோ சிருஷ்டிப் பிசகில் பெண்ணாய்ப் பிறந்துவிட்டாள் என்று நானே எண்ணுவதுண்டு. நெஞ்சில் உரம் பாய்ந்தவள். நம்பிக்கைகளை அவள் துறந்தாள் என்பதைவிட, அவை அவளுடன் ஒட்ட இயலாது விட்டன என்பதே பொருந்தும்.

"அம்பி, இந்த ஊர் நாக்கு பிளந்த நாக்கு. என்ன தான் பேசாது? நீ வயத்திலிருக்கும்போதே உன் அப்பாவைக் காவேரி காலை வாரிவிட்டதுக்கு, நீ கொஞ்ச நாள் பின் தள்ளிப் பிறந்திருந்தால் என் நாணயமே நாறிப் போயிருக்கும். முன் தள்ளிக் குறை மாதத்தில் பூமியில் விழுந்திருந்தால் உன் உயிருக்கே தீம்பு! அப்பவும் ஏச்சுத் தான். "பாவி, ஒண்ணே ஒண்ணு", "தான் தான் போகப் போறோம்னு நட்டுவிட்டுப்போன பயிரையும் அழிச்சுட்டு நிக்கறா!" எதை நம்பி இங்கு வாழ? உண்மையில் அம்பி, யாரால் யாருக்கு என்ன பிரயோஜனம்? உன் வழி உனக்கு, என் விதி வழி நான். இந்தப் போலி வாழ்க்கை எனக்கு இத்துடன் போதும். நான் செத்த பின்னும் எனக்காகச் சடங்குகள் மூலம் இது என்னைத் தொடர வேண்டாம். என் பிறப்புத்தான் என் வசத்திலில்லை. வாழ்க்கையோ பிறருடையதாப் போயிடுத்து. என் சாவாவது என்னுடையதாயிருக்கட்டும். நீ யிறைக்கும் எள்ளுக்கும், தண்ணீருக்கும் நான் கரையோரம் வந்து, வாயைத் திறந்துண்டு காத்திருப்பேன் என்று எண்ணாதே! எனக்கு சுயக் கௌரவம் உண்டு."

ஏன் இப்படித் தன்னை முறுக்கேற்றிக் கொள்கிறாள் என்று நான் திகைப்பதுண்டு. ஆனால் அவள் சொல்வதில் எங்கோ உண்மை புதைந்திருக்கிறது. 'எங்கே என்னைக் கண்டு பிடி' என்று எள்ளி நகையாடுகிறது.

ஆனால் என்றேனும் ஒருநாள் உண்மையை முகமுழித்துத்தான் ஆக வேண்டும், தப்ப முடியாது.

என் தாய் உண்மையைக் கண்டு ஓடி ஒளிபவள் அல்ல. எத்தனையோ முறை வயிற்று வலி அவளுக்கு வந்திருக்கிறது. ஆனால் இப்போது வந்ததும் சொல்லிவிட்டாள்: "அம்பி, இந்தத் தடவை நான் பிழைக்கமாட்டேன்" என்று. நள்ளிரவில், முன் பின் அறிகுறியிலாது வலி நேரே வயிற்றில் விழுந்து வெட்டியதும், உடல் இன்னும் விட்டுக் கொள்ளாத இரு துண்டுகளாக அது அது அதனதன் தனிப் போக்கில் படுக்கையில் நெளிகையில், அம்மா வலி பொறுக்காது 'என்னடா பாவி பார்த்துக் கொண்டிருக்கையேடா, கத்தியிருந்தால் என்னைக் குத்திடேண்டா, உனக்கு மனமில்லாட்டா என்னிடமாவது கொடேண்டா! என்று கெஞ்சிக் கதறி, கத்திக்கத்தி, விடியற்காலை புலம்பல் அடங்கி ஓய்ந்து, ஒருதரம் புரண்டு அசை வற்றுக் கட்டையானதும் சடலத்தினின்று பிரிந்த கடைசி மூச்சுடன் என்னின்று ஒரு பெருமூச்சு கலந்தது.

அப்பாடா! கத்தியைக் கொடுக்காமல் தப்பித்தேன்.

"ஆனால் எனக்கு என் தாய்மேல் அன்பு உண்மையாயிருந்தால், இந்தச் சமயத்தில், நான் கொலையாளியாக அஞ்சியிருக்கக் கூடாது. ஆகையால் அன்பும் ஒரு பூச்சுத்தான். அதன் உண்மையான தன்மை பொய். அம்மா சொன்னது சரி. யாரால்தான் யாருக்கு என்ன பிரயோசனம்? "ஐயோ, தாயும் பிள்ளையும் அது என்ன ஜோஷலோ; அப்பளாத்து மாவு மாதிரி! உலகத்தில் இல்லாத அம்மா, உலகத்திலில்லாத பிள்ளை!" என்று என் மனைவியின் கேலியும் சரி.

ஆசை, அன்பு, பாசம், நம்பிக்கை, சடங்கு, ஆசாரம் என்று மேலுக்கு மினுக்குக் காட்டி, உண்மையில் பயத்தை வளர்த்துத் தனக்கு வேலிகள் நட்டுக்கொண்டே சமூகத்தின் இனித்த பொய்களை உண்டு ஏமாறுவதை விடக் கசந்த உண்மையை விழுங்கி விடமுண்ட கண்டனானால் என்ன? நஞ்சுக்குப் பழக்கிக்கொண்டால் நான் சிரஞ்சீவி.

* * *

சிற்சில சமயம் எனக்குச் செவி நரம்பு குறுகுறுக்கும். செவியென்று நான் சொல்கையில் என் மனத்தில் என் எண்ணம், வெளிச்செவிக்கும் உட்செவி தாண்டிய கட் செவிக்கும் உட்செவி, அங்குச் சிலந்தி நூலினும் இழை யெடுத்த ஸன்னத்தில் எஃகுச் சுருள் ஒன்று திடீர் திடீர் என, என்க்குக் காரணம் தெரியாத சமயங்களில் சுழல் கையில், அந் நரம்பொலியில் சிரிப்பு கேட்கிறது. எனக்கு மாத்திரம் கேட்டு என்னில் குடிகொண்ட ரகஸ்யச் சிரிப்பு? என்ன சிரிப்பு? என்னையறியாமல் இது என்னுள் எப்போது வந்தது? இல்லை. எனக்கு முன்னாலேயே இருந்து என் தோலும் சதையும்—தான் அதன்மேல் புற்று மண்ணாய்ப் பூத்துக் கொண்டிருக்கிறதே? இச்சிரிப்புக்குச் செலவு உண்டோ இல்லையோ வற்றல் இல்லை.

உயிர் அருவியின் 'கிளுகிளுப்பே' இதுதானோ?

ஆனைக்கா ஸன்னதிபோல், நெஞ்சப்பாளங்களி லிருந்து கசியும் கண்ணீரும் இதுதான் என்றும் தோன்று கிறது. ஏனெனில் நெருப்பு குளிர்ந்து ஜலம் ஆயிற்று என்றால் குளிர்ந்த கோபம்தான் கண்ணீர். உறைந்த கண்ணீர்தான் சிரிப்பு.

ஆகையால் எப்பவும் அழுவதற்குப் பதில்தான் சிரிப்பு.

சிரிப்பைப்பற்றி நான் வேணது அறிவேன்.

* * *

ஒருநாள் மாலை நான் ஆபீஸிலிருந்து திரும்பி வரும் வழியில் தெருக் குழாய்ச் சண்டை.

வசை மொழியில் ஆண் ஒருநாளும் பெண்ணை மிஞ்ச முடியாது, திண்ணமாய்ச் சொல்வேன். வசவின்

வகையிலோ, வேகத்திலோ, மூச்சுக்கூட விட்டு வாங்காத ஓயாத கூச்சலிலோ, வசவின் கதியில் அஞ்சாது இறங்கும் அடிமட்டத் துணிச்சலிலோ அவர்களுக்கு நிகர் அவர்கள் தான்.

இருந்தாற் போலிருந்து, திடீரெனக் கை கலந்து விட்டது. பானையும் தவலையும் உருண்டன. ஒருவர் கூந்தலை ஒருவர் பிடித்து உலுக்கி, முகத்தைப் பிராண்டி, தரையில் உருண்டனர். இந்த ஆரண்ய தர்மத்துக்கெதிர், மார்த்துணி, மானம், மர்மம் எனும் மனித மூலாமெலாம் எங்கு நிற்க முடியும்? இருவருக்கும் மூச்சு இறைக்கின்றது. இருவர் முகமும் ரத்த விளாறு. ஆனால் கூந்தல் மேல்பிடி இருவரும் விடவில்லை.

'ஏன்'யா!'

புளித்த கள் நெடி பின்னாலிருந்து மோதியதும் வயிற்றைக் குமட்டிற்று. குத்து மீசைமேல் மங்கிய தணல் மேட்டு விழிகள் கனன்றன.

''பார்த்தா வெள்ளைச் சொக்கா உடுத்து பெரிய மனுசனாட்டம் இருக்கே, வயசானவனா இருக்கே. புருவங்கூட நரைச்சுப் போச்சு, சண்டையை விலக்காட்டி யும் வேடிக்கையா பார்க்கறே?''

இவன் ஏதோ வலுச்சண்டைக்கு அலைகிறான். அது தான் இவன் பிழைப்பு. பிழைப்பில்தான் எவ்வளவு விதம்! எங்களைச் சுற்றி 'கொல்'லென்று கூட்டம் கூடி விட்டது. வேடிக்கை பார்ப்பவர் பாதி—அவனைச் சேர்ந் தவர் பாதி. ஓநாய்க் கூட்டத்தின் ஒரே முகமான பசி ஏக்கம் போல், அவர்கள முகத்தில் ஒரு வார்ப்பாய்க் காணும் சண்டைக்கு ஏக்கத்திலிருந்தே தெரிகிறது.

''வயசானவனாம் வயசானவன்! இந்த வயசான வங்க, வயசுமேலே பாரத்தைப் போட்டுட்டு பண்ணற கோஷ்டத்தைப் பத்தி என்கிட்டே கேளு அண்ணே!

கோயில் திருக்குளத்திலே பொம்மனாட்டிங்க படித்துறையிலேதான் கால் களவுவாங்க. 'நீ பாட்டுக்குக் குளிம்மா, நான் வயசானவன்!' பஸ்ஸிலே தள்ளித் தள்ளி இடிச்சுகிட்டு ஒக்காருவாங்க. 'சங்கோசப்படாதே, நீ என் பொண் மாதிரி!' பாத்ரூம்லே ராங்ஸைடுலே நுழைவாங்க. 'ஏண்டா கிளவா! கொட்டையா பொம்மனாட்டி பொம்மை போட்டிருக்கதே'ன்னு கேட்டால், 'வயசாச் சோன்னோம்மா. கண்ணு தெரியல்லே'ம்பாங்க. ஐயோ, அதையேன் கேக்கறே போ, இவங்க பண்ற அக்ரும்புக்கெல்லாம், இவங்க வயசுதான் இவங்களுக்கு 'அவுட் பாஸ்.''

அவனுக்கு இவன் சுருதி.

இடமே ஏதோ ஒரு தினுசில் பரபரத்தது. இவர்கள் தவிக்கும் சண்டைத்தினவின் முறுக்கேற்றம்.

என்மேல் கைவிழுவதற்கு லக்கினம் இன்னும் ஒரு விநாடி அரை வினாடியில் தொங்கிற்று. பகையின் புகைச்சல் சட்டென அப்படிக் கவிந்துவிட்டது.

அப்போது என் சிரிப்புத்தான் என்னைக் காப்பாற்றிற்று என்று இப்போது தெரிகிறது. என் செவியோரம் எஃகுச் சுருள் திடீரெனக் கழலும் குறுகுறுப்புத் தாங்க முடியவில்லை. உடல் ரோமக்கால்கள் அனைத்தும் முள்ளாய் என்னின்று சிரிப்புப் புறப்பட்டதும் எல்லோரும் திகைத்து என்னின்று பின் வாங்கினர். அவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. முதலில் எனக்கே புரிந்தால்தானே! இது என் சிரிப்பாய் எனக்கேயில்லை. இது எனக்கு முன்னாலேயே இருந்து கொண்டிருக்கும் சிரிப்பு. தனக்கே சிரித்துக்கொண்ட சிரிப்பு. அதன் காரணம் அதற்குத்தான் தெரியும். ஆனால் அதில் ஏதோ ஒரு வெறி, குரூரம். சிரிப்பின் உருட்டு ஒவ்வொன்றும் ஒரு முள் சக்கரமாய்த் தெரிந்தது.

நான் அடியெடுத்து வைக்க ஆரம்பித்ததுமே, கும்பலில் தானே ஒரு சந்து பிரிந்தது. நான் சாவதானமாய் அதன் வழி நடந்து வெளியேறி, தெருவைத் தாண்டினேன்.

என்னை யாரும் பின் தொடரவில்லை

* * *

என் சிரிப்புப் பற்றி ஒரோரு சமயமும் எனக்குப் புதிது புதிதாய்ப் புரிகின்றது. என் சிரிப்பின் விரிப்புகள்தான் எத்தனை!''

ஒரு சமயம் அம்பாளின் அர்ச்சனைக்குக் குங்குமச் சிதர்களைத் தாங்கிய ரோஜா இதழ்கள் அதினின்று உதிர்கின்றன.

இன்னொரு சமயம் நட்டுவாக்காளிகளும் குளவிகளுமாய்க் குதிக்கின்றன.

ஒரு சமயம் பொன் வண்டின் ரக்கையடிப்பு.

ஒரு சமயம் நர்த்தகியின் காற்சலங்கையொலி.

ஒரு சமயம் கண்ணீர்த் துளிகளாலேயே கட்டிய சரம் அறுந்து மூலைக்கொன்றாய் உருளும் மணிகளின் கிணிகிணி.

கறந்த பால் நிரம்பிய குடம் கவிழ்ந்து சரிந்த ரத்தம்.

அந்த ரத்தமே உறைந்து திடமாகி வழியின் குறுக்கே தலை தூக்கி இரை தேடி நெளியும் பவழ விரியன்.

அடித்த பஞ்சாகிப் பிறகு அதனுள் ஒளித்த வஞ்சகக் கோடரியின் கூர்முனையுமாகி, நெஞ்சின் நீட்டலுக்கேற்ப உவமைகள், உருவகங்கள், உருபுகள், கருக்கள் கருவின் இருளில் மறைந்து தோன்றி மீண்டும் மறையும் த்வனிகள்.

அன்று—

ஒன்று சொல்கிறேன். அன்று—என் கையில் எனக்கு நாளும் கிழமையும் அற்று என்றோ ஆகிவிட்டது. அதைப்

பற்றி எனக்கு அக்கறையுமில்லை. அன்று, இன்று, இனி என நாம் நியமித்த ஏற்பாட்டில் நாம் உழம்பிக்கொண்டிருப்பது என்றும் உள்ள இன்றுதான் சென்று போனதை நொந்து, இனிக் காய்த்துத் தொங்கப் போவதை நம்பி, கைப்பிடியில் விரலிடுக்கில் வழியும் இன்றை ஏமாந்து போவதை என்றேனும் எண்ணுகையில் சிரிப்பு ஏன் வராது? அழுவதற்குப் பதில் சிரிப்பு. அன்றிலிருந்து பாய்ந்துகொண்டிருக்கும் ஜீவ நதியின் ஓசையே இதுதான்.

அன்று—

நான் குளித்துவிட்டு இடுப்பில் ஈரமுண்டுடன் திடுதிடுமென மாடியேறுகையில், பால்கனியிலிருந்து மோதிய நெடியில் மூக்குத் தண்டு எனையறியாமலே சுணுங்கிற்று. 'மோப்ப மாஸ்டர்' என்று ஏற்கனவே பட்டம் வாங்கியிருக்கிறேன். வேட்டை நாய் என்று அழைக்கவில்லை. மரியாதைக் குறைவு ஆயிற்றே!

ராஜூ பால்கனியிலிருந்து வெளிப்பட்டான். அவன் முகம் லேசாய் வெளிறிட்டிருந்தது. இருவரும் ஒருவரையொருவர் பார்த்தபடி நின்றோம்.

மனிதனோ, மிருகமோ, எவ்வளவு நெருங்கிய உறவானாலும் சரி எப்பவும் நம்மில் ஒரு நம்பிக்கையற்ற தன்மை, ஒரு சதா விழிப்பு இயங்கிக்கொண்டேயிருக்கிறது. இந்த உஷார் ஜீவனின் இயல்புக்கே உரிய தற்காப்போ!

ராஜூவுக்குப் படிக்க உடல் வணங்கவில்லை. ''நான் வேண்டாம்னா சொல்றேன்?'' அவன் தாய் என்னிடம் கை விரிக்கிறாள். ''அவன் தான் வேலைக்குப் போகணும்னு ஆசைப்படறான். 'நீதான் அப்பாவிடம் சொல்லேன்'னு என்னைப் பிடுங்கியெடுக்கிறான். அவன் இஷ்டப்படி ஒரு வேலையைத்தான் பண்ணி வெச்சுடுங்களேன்! வயசுப் பிள்ளை அப்பா மாதிரி தான் ரெண்டு காசு ஆத்துக்குக்

கொண்டு வரணும்னு ஆசையிருக்காதா? ஏதோ அவனும் சொக்காய்த்துணி வண்ணான் வரைக்குமாவது ஆகு மோன்னோ!''

ராஜு என்றுமே 'டீக்'காக உடுப்பான். வண்ணான் மடியில் கத்திமுனை கலையவே கலையாது. தூசி பட் டாலும் துடித்து விழுவான். ஆகையால், இப்போது சட்டைப்பையில் கறுப்புத் திட்டு தீய்ந்துகொண்டே பெரிதாகி, சொக்காய் பொசுங்குவது அவனுக்கு ஏன் தெரியவில்லை? நான் சட்டென்று அவன் பைக்குள் கைவிட்டு எடுத்து அவன் வாயில் நட்டேன்.

''ஏண்டா, அப்பாவுக்கு இப்படி மரியாதை பார்த்தால் உன் உயிருக்கே ஆபத்தாச்சேடா! சட்டை பற்றிக்கொண் டால் உன் கதி என்ன?''

அவன் கன்னத்தில் விழுந்த அறையில் என் கைவிரல் நுனிகளில் 'சுறீல்' பாய்ந்தது.

ராஜு திணறிப் போனான். அவனுக்கு வலியைவிட ஆச்சரியம்தான் இருந்திருக்கும். எனக்கே என் செயல் வியப்பாயிருந்தது. எனக்கு நினைவு தெரிந்து என் குழந்தைகளை நான் தண்டித்தது இல்லை. அதெல்லாம் அவள்பாடு. அடிப்பாள், உடனே கட்டிக்கொண்டு அழுவாள். அடித்த கன்னத்தைக் கையில் தாங்கிக் கொண்டு என்னைப் பார்த்துக் குழம்பி நின்றாள்.

''என்ன இது வயசுப் பிள்ளையை நீங்கள் போட்டு அடிக்கற அக்ரமம்?' குரல் கேட்டுத் திரும்பினேன். என் பின்னால் ராதை நின்று கொண்டிருந்தாள்; அவள் முகம் கொதித்தது. இந்தச் சமயம் அவள் தன் முந்திய அழகின் முழுமையில் பொலிந்தாள். எனக்குச் சொந்தமாயிருந்த அந்த நாளின் அழகு.

இப்போது ராதை எனக்குச் சொந்தமில்லை. அவள் தன் குழந்தைகளின் தாய். அவர்களுக்குச் சொந்தம்.

நான் ஒன்றும் பதில் பேசவில்லை. நேரே என் அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டேன். இடுப்பின் ஈரத்தைக் களையாமலே நாற்காலியில் சாய்ந்தேன். உடலில் ஒரு தினுசான ஓய்ச்சல். என்னை மங்கிய இருள் சூழ்ந்தது. என்றுமே என் அறையில் வெளிச்சம் மட்டுத்தான். இந்தச் சமயம் எனக்கு இந்த இருள் வேண்டியிருந்தது. என்னையே எனக்குப் பார்க்க விருப்பம் இல்லாத சமயம் இது. இருளின் இதவு உடல் மேலேயே உணரும் சமயம் இது. இருளுக்கும் எனக்கும் என்றுமே இணைப்பு உண்டு. எத்தனை பேர் என்னைச் சூழ இருந்தும் நான் வரவர அதிகம் உணரும் தனிமையில் இந்தச் சின்னத்தின் துணையும் இல்லாவிடில் நான் என்ன ஆவனோ? வரவர எனக்கு ஏன் இப்படியெல்லாம் தோன்றுகிறது? வயது காரணமாய் உடல் நைவின்மேல் போடும் பழியைத் தவிர, மனத்திலேயே ஏதோ ரஸாயனம் நேர்ந்து கொண்டிருக்கிறது. இல்லை உடல் வேறு, என்று பிரித்துப் பேசுவதுதான் தவறோ? உடல் இல்லாது மனம் ஏது?

* * *

கீழே கூடத்தில் ரேடியோ ஏதோ சினிமாப் பாட்டைக் கதறுகிறது. பாட்டா அது? ஆபாச ஊளை! ஒரு கல்லைத் தூக்கிப் போட்டால் அடங்கிவிடும். ரிப்பேர் ஆகித் திரும்பி வரும்வரை ஒரு பத்து நாளேனும் நிம்மதி. ஆனால் அப்படியும் நிச்சயமாய்ச் சொல்வதற்கில்லை. கம்பெனிக்காரன் பதில் ரேடியோ தருவானாமே! ஓயாத இரைச்சலில் தான் இந்த வீட்டு வாழ்க்கை. ஒன்று இரைச்சல். இல்லை மொணமொணப்பு.

மகப்பேறு ஒவ்வொன்றுக்கும் எங்கள் உறவு விரிசல் கண்டு, ஒன்று, இரண்டு, மூன்று, நான்கும் ஆனது. ராதை

யும் நானும் நேர்ந்தது அறியாமலே, இரு கக்ஷிகளாகவே பிரிந்துவிட்டோம். அவள் இரைச்சலில் தன் ஆத்திரங் களுக்கு வாய்மொழி கண்டால், நான் ஊமையானேன். பிளவைச் செப்பனிட நான் முற்படவில்லை. பயன்? நாம் தான் நாளுக்கு நாள் சுட்டமண் ஆகிக் கொண்டிருக் கிறோமே!

''உங்கப்பா என்னடா காலத்தோடு ஒட்டின மனுஷ னேயில்லை. உத்தியோகம் பூண்றார்னுபேர், இன்னும் கைக் கடிகாரம்கூட இல்லை. காய்கறிக் கடைக்காரன்கூட கடிகாரம் கட்டிண்டுதான் சொத்தைக் கத்தரிக்காயை நிறுத்துப் போடறான். அதையும் உங்கப்பா வாய் பேசாமல் வாங்கிண்டு வந்துதான் இங்கு கொட்டறார். மாமனார் வீட்டில் வாங்கிப் போட்டால்தான் உண்டா? தானா வாங்கிப் போட்டுக்கொள்ள வக்கில்லையா? நாளாகவில்லையா? உங்கப்பாவின் மாப்பிள்ளையழைப் பின்போதே, இவர் வேட்டியைத் தட்டிச் சுத்திக் கட்டிண்டு காரிலிருந்து இறங்கினதை நான் மாடியிலிருந்து பார்த்தது. நான் நாலு பெத்தாச்சு. நாளுக்கும் மறக்காது. இன்னும் அந்தக்கோலம் நெஞ்சை அறுத்துண்டுதானிருக்கு. ஒரு சினிமா டிராமா ஆம்படையாளைத் தனியா அழைச்சுண்டு போனதுண்டா? கேட்டால், ''நீ வேணும்னா போயேன்!' நான் வேணது போறேன். இல்லை இவர் போகலியேன்னு நான் போகாமலிருக்க முடியுமா? நான் போறேன், என் பிள்ளைகளை அழைச்சுண்டு போறேன்; நீங்கள் தடுக்கலே என்பதா கணக்கு? உங்களோடு என்று எனக்கு என் பங்கு எங்கே?''

ராதையின் குரல்களே இப்படித்தான்.

''ஆள் கால், ஆடை முக்கால்னு உங்க அப்பா இன்னும் காலத்தோடு ஒட்டினால் நம் குடும்பம் இன்னும் முன்னேறலாம். என் தங்கை போல், நம் வீட்டிலும் ஒரு சமையற்காரனும் வாசலில் ஒரு காரும் நிற்கக்கூடாதா? இல்லை இரண்டுக்கும்தான் எனக்குத் தகுதியில்லையா?''

எனக்குத் தெரிந்து ராதைக்கு மூன்று ஆசைகள்.

அவளைக் காலையில் எழுப்பக் கூடாது.

அவள் செலவுக்குப் பணம் அவ்வப்போது முளைத்துக் கொண்டே இருக்க வேண்டும். அவளைக் கணக்குக் கேட்கக்கூடாது.

அவள் தங்கை செய்வதெல்லாம் அவள் செய்தாக வேண்டும்.

"ஒரு அசலாத்துப் பெண்ணைக் கழுத்தில் கயிற்றைக் கட்டி இழுத்துண்டு வந்துட்டா ஆயிடுத்தா? அவளைச் சந்தோஷமா வெச்சுக்க வேண்டாமா?"

"உங்க அம்மாவுக்குக் காரும், சினிமாவும்தான் முக்கியம். நான்கூட இல்லே" என்று நான் கேலி செய்தால் அதற்கும் பதில் வைத்திருப்பாள்.

"அப்படித்தான் இருந்துட்டுப் போகட்டுமே! ஊர் உலகத்தில் எல்லோரும் போகல்லியா, வரல்லியா? ஆம்படையான் செத்துப்போனவாள் எல்லாம் உடனே உடன்கட்டை ஏறிவிட்டாளா? நீங்கள் ஒரு பிள்ளை. உங்களை நம்பி உங்கம்மா வாழ்ந்தாப்போலே, நான் மூணுபேரை நம்பி வாழ்ந்திட்டுப் போறேன். மூணு பேரில் மூணுபேருமா பொல்லாதவனாயிருப்பான்கள்? உங்களை நம்பி என்ன கண்டேன்?"

"நான்தான் வெகுளி. லோலோன்னு கத்தி நானே ஓயணும். எல்லாத்துக்கும் மௌனம்தான் மருந்துன்னு உங்கப்பா அழுத்தமாயிருக்கார். எனக்குத் தெரியாதா? ஆனால் இனி நான் ஓயமாட்டேன்."

எனக்கும்தான் தெரிகிறது.

ப்ரேமையின் சின்னமாய் ராதையின் பெயரை இவள் ஏன் கொண்டாள்?

இதெல்லாம் இன்றைக்கு எனக்குத் தோன்றுவானேன்?

அன்று மாலை, ஏன் அன்றிலிருந்தே நான் வீடு திரும்ப வில்லை.

* * *

ராதையின் புழுக்கமும், அவள் பழியும், என் மௌனமும் சேர்ந்து நிச்சயமாய் என்னை ஏதோ ஒரு முனைமுகம் இழுத்துச் செல்கின்றன. அவள் கிளை தாவிட்டாள். எனக்குத் தாவக் கிளையில்லை. அதற்குப் பதில் என்னைக் கழுவலேற்றியது போல் என்னை ஊடுருவிவிட்ட வேர் மீது, என்மீது ஒரு விருக்ஷம் வளர்ந்து கொண்டிருக்கிறது.

மனம் ஒரு தோலானால் மனமும் உடல்தான்.
உலகமே உயிரின் கல்லறை.
என்மேல் கற்கள் அடுக்கியாகின்றன.
நான் தனியனாகிவிட்டேன்.
நாளும் கிழமையும் என்னைத் துறந்தன.

* * *

மறுநாள் மாலை: ராஜு ஆபீசுக்கு வந்தான், விஜியைத் தூக்கிக்கொண்டு.

"அப்பா!" குழந்தை என்னைக் கண்டதும் ஒரு தாவு தாவிவிட்டாள். அப்பம் போன்ற கைகளால் என் முகத்தைத் தொட்டுப்பார்க்கிறாள். அது அவள் சுபாவம்.

நான் மணியடித்து, பாபுவை ஒரு 'ஸெட் டிபனும், இரண்டு காப்பியும் வாங்கிவரச் சொன்னேன். விஜிக்கு ஒரு லாலிபாப்!

அப்படியென்றால் என்னவோ?

ராஜுக்கு முகம் சுண்டியிருந்தது.

"அப்பா என்னை மன்னிச்சிடுங்கோ!" இந்த மூன்று வார்த்தைகளை வெளியிட எவ்வளவு ஒத்திகை பார்த்திருப்பான்.

"ஓ ராஜூ I am also sorry. உன் அம்மா சொன்னாப் போல, உன்மேல் நான் ஏன் கை வைத்திருக்க வேணும்? நான் பெற்றதால் என் வளர்ப்பிலேயே உன்னை நான் உருவாக்கப் பார்ப்பது நியாயமா? ராஜூ நீ பெரியவனா யிட்டே. உன்னிடம் விட்டுப் பேசலாம் என்றே நினைக்கிறேன். இந்த மனித விதைக்குத்தான் இந்த மகத்துவம் உண்டு. ஒரே மரத்தில் மாங்காய் காய்க்கும், தேங்காய் பாளை விடும். அவரை பூக்கும், பாகல் படரும். இந்த உண்மை சமயத்தில் மறந்து விடுவதால்தான் வருகிறது துயரம், சண்டை, மனஸ்தாபம் எல்லாம்!"

"வீட்டுக்கு வாங்கோ அப்பா!" ராஜூ முனகினான். "சேகர் இந்த ஒருநாள் ராத்திரியில் உங்களைக் காணாமல் 'பக்'னு பாதி வாங்கிட்டான். வாய்விட்டால், அழுதால் கூடத் தேவலை. ஊமையடிப்பட்டுத் தவிக்கிறான்."

சேகருக்கு என்மேல் பட்சம் கூடத்தான். என்மேல் காலைப் போட்டுக் கொண்டால்தான் அவனுக்குத் தூக்கம் வரும்.

"கண்ணன் என்ன பண்ணுகிறான்?"

"கண்ணன் ரெண்டு தடவை 'அப்பா இன்னும் வல்லியா'ன்னு கேட்டான். அப்புறம் பந்தை எடுத்துக் கொண்டு ஓடிப்போயிட்டான்."

எனக்குத் தெரியும். கண்ணன் சமாளித்துக்கெண்டு விடுவான்.

எல்லோருமே சமாளித்துக்கொண்டு விடுவார்கள்.

நாள் ஆக ஆக, உடலில் உப்பும் தண்ணும் ஊற ஊற, சதை தடிக்கத் தடிக்க, எல்லோருமே எல்லாவற்றையுமே சமாளித்துக்கொண்டு விடுவார்கள்.

அம்மா என்ன பண்ணுகிறாள்?—என்று நான் கேட்கவில்லை.

கேட்க மாட்டேன்.

கண்ணனுக்குப் பந்து.

ராஜுவுக்கு சிகரெட்.

விஜிக்கு 'லாலி பப்பு'

ராதைக்குச் சினிமா.

சேகர்தான் பாவம்! கொஞ்சம் திண்டாடுவான்.

பிறகு அவனும் சரியாகி விடுவான்.

வாழ்க்கையே மறதியின் வெற்றிதானே.

நான் ராஜுவின் தோள்மேல் கை வைத்தேன்.

"ராஜு, Don't bother. நான் எங்கே காட்டுக்கா போய்விட்டேன்? எனக்குத் தோன்றும்போது வருகிறேன். நீங்களும் என் ரூமுக்கு வாருங்கள்! இன்று நேரமாகி விட்டது. நாளை காலை வா, உன் பேரில் பேங்கில் கணக்கு வைக்கணும். குடும்பத்தை இனி நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும். நீ வேலைக்குப் போக ஆசைப் படுவதாக உன் அம்மா சொன்னாள். நாளைக்கு உனக்கு ஒரு சிபாரிசு கடிதாசு தருகிறேன். உனக்கு வேலை கிடைக்கும்."

ராஜுவுக்கு முகம் மலர்ந்தது. உடனே அடக்கிக் கொண்டான்.

"என்னப்பா இதைவிடப் பெரிய சண்டையெல்லாம் வீட்டில் நடந்திருக்கு. அதைவிட நீங்கள் வீட்டைவிட்டு வெளியேறும்படியாக என்ன நேர்ந்துவிட்டது?

"நீ சொல்வது சரிதான். ஆனால் பெரிய வெடிக்கு தீவட்டியை வெச்சுத்தான் கொளுத்தணுமா? சின்னத் திரி போதாதா? எனக்கும் வயதாயிற்று. குடும்பத்தை விட்டு ஒதுங்க எனக்கு வேளை வந்துவிட்டது என்று வைத்துக் கொள்ளேன்! இளவெட்டுக்கள் உங்களுக்கெல்லாம்

எப்போ சான்ஸ் கிடைக்கிறது? அடடா பிடிடா இவளை! மசியைக் கொட்டிட்டாளே. முக்கியமான பேப்பரில்!''

''அப்பா, சாயந்தரமா வரப்போ 'லாலிபப்' வாங்கிண்டு வரீயா?''

*　　*　　*

என் அறையில் படுத்திருக்கிறேன்.

அறை மிகச் சிறிது. கைகளை நீட்டினால் இரு பக்கத்துச் சுவர்களும் இடிக்கின்றன ஆயினும் இது என் வளை.

ஜன்னலில் ஒரு மண் கூஜாவில் குடி ஜலம், கண்ணாடி டம்ளர். இன்றுதான் வாங்கினேன். காலை வீசி நடக்கும் தூரத்தில் Hotel de Mathur பண்டங்கள் அப்படி ஒன்றும் மதுரமாயில்லை. ஆயினும் கிட்ட இருக்கிறது. சாப்பிடப் போனாலும் போச்சு. சோம்பலாய் இருந்தால் திரும்பிப் படுத்துக்கொண்டாலும் போச்சு. என்னைக் கேட்பார் யாருமில்லை. நானே ராஜா, நானே மந்திரி, நானே சேவகன்.

ராதையின் பழகிய குரல் நினைவில் எழுகின்றது.

''எத்தனை நாள் நடக்கும் பார்த்துடறேன். நாக்குச் செத்துப்போனால் தானா வந்து சேர்றார். அவர் வீட்டுக்கு அவரை நான் அழைக்கணுமா என்ன? நாலு பேர் சிரிக்கணும்னுதானே நாலு பெக்கற வரைக்கும் காத்திருந்து உங்கப்பா லீலை நடத்தறார்!''

அதுவும் எனக்குத் தெரியாது. இப்போதைக்கு என் சிரிப்புத்தான் எனக்குக் கேட்டுக்கொண்டிருக்கிறது,

ஆனால் இன்னொன்றும் நினைவுக்கு வருகிறது.

குழந்தைகள் வருமுன், என் ராதை ஒரு சமயம் எங்கள் ஆலிங்கனத்தின் நெருக்கத்தைத் தடுத்ததென என் பூணூலைக் கோபித்து ''சூள்'' கொட்டி முதுகுப்புறம் தள்ளிவிட்டதும் ஞாபகம் வருகிறது.

இன்று மாலை 'லாட்ஜ்' வாசலில் வந்து தெருப்பக்கம் காற்று வாங்க நின்றேன். எதிர் வீட்டுக் குறட்டில் ஒரு பையன் பம்பரம் ஆடுகிறான், இல்லை ஆடப் பார்க்கிறான். சின்னப் பையன், நாலு ஐந்து வயதுக்குமேல் இராது. கயிற்றை இழுத்துப் பம்பரத்தில் சுற்றக்கூட அவனுக்குச் சக்தியில்லை. அவனிடம் போய் கையை நீட்டினேன். பையன் முறுக்கிக் கொள்ளவில்லை. உடனே கொடுத்துவிட்டான். ஜாட்டியைச் சுற்றிக்கொண்டே "அம்பி உன் பேர் என்ன?" என்று கேட்டேன்.

"சேகர்."

"ஓ! நீயும் சேகரா?"

பம்பரம் கயிற்றிலிருந்து விடுபட்டு ரோஷத்துடன் தரைமீது குதித்தது. குளவிபோல் கூவிற்று; கற்பூரக் கொழுந்து போல் தூங்கிற்று. பையன் முகமே கண்களாயின. ஏற்கெனவே கார்ட்டூன் பொம்மை மாதிரி தான் இருக்கிறான். பம்பரத்தை எடுத்து அவன் கையை விரித்து உள்ளங்கையில் விட்டேன். குறுகுறு—சேகர் வாயிலிருந்து உடைந்த குழாய் போல் சிரிப்பு பீறிட்டது. பம்பரம் படிப்படியாக வேகம் குறைந்து, கிழவன் தலை போல் ஆடிக் கையிலிருந்து கவிழ்ந்தது.

'தாத்தா தாத்தா நுன்னொண்ணா தடவை பண்ணுங்கோளேன்! தாத்தா தாத்தா! Please!"

ஓ கான்வென்டா?

அந்த நிமிஷத்திலிருந்தே நாங்கள் சினேகிதர்களாகி விட்டோம்.

நுன்னொண்ணு தரம்!"

" நுன்னொண்ணு தரம்!"

"சேகர்! சேகர்!" என்று குரல் கொடுத்துக்கொண்டே உள்ளிலிருந்து ஒரு பெண் வந்தாள். பையன் அவளிடம் ஓடிப்போய் அவள் இடுப்பைக் கட்டிக்கொண்டான்.

"அம்மா! அம்மா! தாத்தா நொம்ம நன்னா குத்து விடறார். நீ பாரேன்!"

இவள் இவனுக்குத் தாயாரா? அக்கா என்றாலே பொருந்தும். பையன் முகத்துப்பால் இவள் முகத்தில் இன்னும் காயவில்லை. இவளை எங்கேயாவது பார்த்திருக்கிறேனோ?"

அவள் புன்னகை புரிந்தாள்.

"சேகருக்குக் கொஞ்சம் இடம் கிடைச்சுட்டால் போதும், நேரே தலைமேல்தான் சவாரி."

நான் நெற்றிப் பொட்டைத் தேய்த்துக்கொண்டு நின்றேன். இவளை நான் எங்கு பார்த்திருக்க முடியும்?

"தாத்தா குத்து விடுங்கோ தாத்தா! அம்மா பார்க்கணும்!"

அவள் அவன் வாயைப் பொத்தினாள்.

"உஷ்! மாமான்னு சொல்லணும் சேகர்!"

அன்றிரவு நான் குளித்துவிட்டு, ஹோட்டலுக்குக் கிளம்ப சட்டையை மாட்டிக் கொண்டிருக்கையில்,

"தாத்—மாமா!"

திரும்பினேன்; அறை வாசற்படியில் சேகர் நின்று கொண்டிருந்தான், கையில் ஒரு தட்டுடன். அதில் ஒன்றன்மேல் ஒன்றாய்க் குவித்த இரண்டு மூன்று பொரித்த அப்பளங்கள்.

"அம்மா கொடுத்துட்டு வரச்சொன்னாள். ஈர அப்பலாம். இன்னிக்கு இடடாளாம்."

அவனைத் தூக்கிக்கொண்டேன். பையன் இறக்கை மாதிரியிருந்தான்.

"Thank you Sekar! Tell your Mummy I thank her!"

* * *

அவள் கணவனும் இரண்டு நாள் கழித்து என்னைப் பார்க்க வந்தான். பையனை அழைத்துக்கொண்டு "சுமாச்சுமா சேகர் பிடுங்கி எடுக்கிறான்." அவனுக்கு ராணுவத்தில் வேலை. "நினைத்த சமயம் எங்கே வேணு மானாலும் மாற்றலாம். பையன் படிப்பு பாழாய்ப் போவுது. பையன் உங்ககிட்ட ரொம்ப ஒட்டிக்கிட்டான் சார், எங்களுக்கே ஆச்சரியமா இருக்குது."

யாரும் என்னோடு ஒட்டினால் இப்போது கூச்சமா யிருக்கிறது. எந்தவித ஈடுபாட்டிலும் மாட்டிக்கொள்ள மனம் மருள்கின்றது. இப்போது ஒரு பெரும் ஈடுபாடி லிருந்து என்னைக் கழற்றிக்கொண்டு வந்திருக்கிறேன். ஆனால் இதை இவனிடம் சொல்ல முடியுமா? சொல்வதே ஒரு ஈடுபாடுதான்.

"அவளுக்கு ரொம்ப சந்தோஷம் சார், so to me. எங்க வீட்டில் பெரியவங்க யாரும் இல்லை. என் parents சின்ன போதிலேயே காலமாயிட்டாங்க. அவளுக்குத் தாயார் இல்லை. அவள் தகப்பனார் மறுபடியும் கலியாணம் பண்ணிக்கிட்டார். அவங்க எல்லாம் தூர தேசம்—"

கண்டவிடம் மாற்றலாகி, கண்டபேருடன் பழகி அவர்கள் பேச்சு இவனுக்குப் படிந்து, இவன் பாஷை இன்னதெனப் புரியாதபடி பாழ்பண்ணிக் கொண்டாச்சு.

இதையெல்லாம் இவன் ஏன் என்னிடம் சொல்கிறான்? இவர்களைப்பற்றி எதையும் அறிய நான் விரும்பவில்லை. யாரைப் பற்றியும் எதையும் அறிய நான் விரும்பவில்லை.

"உங்க மாதிரி ஒரு பெரியவங்க எதிர் வீட்டிலேயே எங்களுக்குக் கிடைச்சுது எங்க அதிர்ஷ்டம் ஸார். அப் பப்போ உங்கள் advice, guidence-"

**Oh my god!** இந்தத் தும்பைத் தலையும் நரை புருவமும் படுத்தும் பாடு!

"அதேமாதிரி உங்களுக்கும் என்னால்—எங்களால் ஏதாவது ஆகணும்னா **don't hesitate**—"

"உன்னால்—உங்களால் எனக்கு ஆகவேண்டியது நீங்கள் என்னைச் சும்மா விட்டுவிடுவதுதான். நான் வேண்டுவது தனிமை" என்று இவனிடம் சொல்ல முடியுமோ?

"ஓ அதற்கென்ன?" என்று சொல்லி எழுகின்றேன். அசட்டுச் சிரிப்பு சிரித்துக்கொண்டு என்னுள் வீற்றிருக்கும் சிரிப்பு என்னைப் பார்த்துச் சிரிக்கின்றது.

* * *

நான் தனிமை, தனிமை என்கிறேன்.

ஆனால் உண்மையில், உண்மையான தனிமையைச் சாதிக்க முடியுமோ?

தனியாயிருந்தால் மட்டும் தனிமை கிட்டிவிடுமோ? அதுவே முதலில் இருக்கிறதோ?

ஏனெனில், நான் எங்கு போனாலும், யாரை விட்டுத் தப்பி வந்தாலும் எப்பவும் என்னோடு இருக்கிறேனே!

எனக்கும் நான் நாஸ்திதான் தனிமை.

துறந்துவிட்டதால் மட்டும் தனிமை வருமோ? ஒன்றைத் துறந்தால் மற்றொன்று அதனினும் பெரிது இட்டு நிரப்ப வந்துவிடுகின்றது.

சகலமும் துறந்தவனுக்கு உலகமே உடைமை.

ஆகையால் சின்ன உடைமை, பெரிய உடைமை எனும் தாரதம்மியங்கள் தவிர உண்மையான தனிமையுமில்லை.

உண்மையான துறவுமில்லை.

இன்றிவு எனக்கு ஒரு வேடிக்மையான எண்ணம் தோன்றிற்று. முற்றிலும் வேடிக்கையுமல்ல; விஷமமானது தான். நான் தனியாக வந்து எம்மட்டும் தனிமையைச் சாதித்திருக்கிறேன் என அறிய ஆவல் கொண்டேன். இன்று என் இரவுச் சாப்பாட்டை இரந்துண்டால் என்ன? பிச்சையெடுக்க மனம் எம்மட்டில் துணிந்திருக்கிறது? ஹோட்டல் டிக்கெட் புஸ்தகத்தையும், பாங்கு புஸ்தகத்தையும், மணிபர்ஸையும், எதிர்வீட்டு உறவையும், உத்யோக பத்திரத்தையும் இத்தனை தைரியங்களின் கலவையான என் மமதையையும் எம்மட்டில் என்னால் மறக்க முடியும்?

தெருக்களைத் தாண்டி வெகுதூரம் நடந்தேன். வாசல்கள் சில திறந்திருந்தன. பல மூடியிருந்தன. எந்தப் படியை ஏறவும் மனம் துணிந்திருந்தால்தானே! நடந்து நடந்து நாக்குக்கூட வரண்டுவிட்டது. இன்று சோறு இல்லாவிட்டாலும் போகிறது. தாகத்துக்குச் சோதனையாக ஒரு சோடாக் கடைகூடத் தென்படவில்லை. நான் இப்போது அலையும் இடத்தில் தெருவிளக்குகூடச் சரியாக எரியவில்லை. விட்டு விட்டு அணைந்து ஏற்றிக் கொள்கிறது. வழி தப்பிவிட்டதோ? சந்தேகம் வந்து விட்டது. முன்னிலாவில் வெள்ளைத் துணி போர்த்த ஒரு உருவம் தெரிந்தது. சற்றுத் தயங்கி நின்றேன்.

திண்ணையில் சாய்ந்திருந்தவர் சட்டென எழுந்து உட்கார்ந்தார்.

''யாரைத் தேடறீங்க? வாங்க, வாங்க—உட்காருங்க—உட்கார்ந்து பேசுங்க—''

''நான்—நான்—எனக்கு''

விழிகளில் எரிநீர் உறுத்திற்று. இது கோபமா? அவமானமா?? பயமா??? உலகில் பிச்சை புகுந்த அத்தனை ஆண்டுகளின் அடையாளத் துயரமா????

இச்சமயம் ராதை என்னைப் பார்த்தால் என்ன சொல்வாள்? என்னை இடிக்க மாட்டாள்??

''இதெல்லாம் எத்தனை அனாவசியம்! தன் மனசில் தான் பெரிய புத்தன், பட்டினத்தார்னு எண்ணம்! தன் வீட்டுச் சோற்றைத் தான் சாப்பிடுவதை விட்டுவிட்டு, இதென்ன கௌரவப் பிச்சையா? வேண்டுதல் பிச்சையா?''

என்மேல் ஊர்ந்த ஆயிரம் தேள்களில் ஒன்று அவரைக் கொட்டி விட்டாற்போல் அவர் துள்ளி எழுந்தார்.

''சிவகாமி! ஆள் வந்தாச்சு, இலையைப் போடு!'' அவர் குரல் கணீரென்றது. ''வாங்க, கைகால் கழுவுங்க!''

வாழை இலையில் வட்டித்த சாதத்தின்மேல் நெய் ஊற்றிய இடம் லாந்தர் வெளிச்சத்தில் பளபளத்து என்னைப் பார்த்துச் சிரித்தது.

அந்த வற்றல் குழம்புக்கும், பருப்புத் துவையலுக்கும், கெட்டி மோருக்கும் இணை ருசி நான் இன்னும் காணப் போகிறேன்.

சாப்பாடு முடியும்வரை யாரும் பேசவில்லை.

கையலம்பிக் கொண்டதும் அவர் வெற்றிலைத் தட்டை யெடுத்து வந்தார்.

''நான் போடும் வழக்கமில்லை'' என்றேன்.

''பரவாயில்லை, தாம்பூலம் எடுத்துக்கோங்க.''

நான் வாங்கிக் கொண்டதும் தடாலென்று இருவரும் என் காலில் விழுந்து நமஸ்கரித்தனர்.

எனக்கு வாயடைத்தது.

அந்த அம்மா பேசினாள்.

''எங்களுக்கு எவ்வளவு சந்தோஷம் தெரியுங்களா? இன்னி மாலையிலிருந்தே இவர் சொல்லிட்டிருக்காரு. 'சிவகாமி! இலை போட அவசரமில்லை, விருந்தாளி வர

இருக்கு'ன்னு. என்ன இவரு இப்படிச் சொல்றாரே, நேரமாவுதே. நான் யோசனை பண்ணிட்டிருந்தேன்— நீங்களும் வந்தீங்க. ஆனால் இவர்கிட்டே எனக்கு இது ஒண்ணும் அதிசயமில்லீங்க. இவரு இப்படி ஏதாவது சூசனையா சொல்வாரு. சொல்றபடியே நடக்கும்.''

இவர்களிடம் எனக்கு அச்சமாயிருந்தது. பேச்சை மாற்ற, ''குழந்தைகள் எல்லாரும் தூங்கிவிட்டார்களா?'' என்று கேட்டேன்.

''கொளந்தைகளா?'' அவள் கணீரென்று சிரித்தாள். ''கடவுள் எண்ணம் வெக்கலீங்க. ஆனால் நாங்கள் அதைப்பத்திக் கவலைப்படல்லீங்க. இவர்தான் எனக்குக் கொளந்தை. நான்தான் அவருக்குக் கொளந்தை, எழுந்துட்டீங்களா? நேரமும் ஆவுது. சரி, போய் வாங்க...?''

கையும் பிடியுமாய் அகப்பட்டும், மன்னிக்கப்பட்ட திருடன்போல் நான் அவ்விடம் விட்டு அகன்றேன்.

சோதிப்பவன்தான் உண்மையில் சோதிக்கப் படுபவனும்.

* * *

இவளை எங்கோ பார்த்த மாதிரி நினைவில் ஏதோ இடறுகிறது. ஆனால் நிச்சயமாய் இவளை நான் இதற்கு முன் பார்த்ததில்லை. பார்த்திருக்கவே முடியாது.

இவர்கள் மூவர் மேலும் புரியாத சோகச்சாயை படர்ந்திருக்கிறது. இவர்களைப் பார்க்கும்போதெல்லாம் ஏதோ நல்ல கவிதையைப் படித்தபின் நெஞ்சில் அதன் வண்டலாய்த் தங்கும் கிலேசம் இறங்குகிறது. குளிர் தாங்காது ஒன்றுடன் ஒன்று ஒடுங்கிக்கொள்ளும் சிட்டுக் குருவி ஜோடியை நினைவூட்டுகின்றனர்.

இவள் எவ்வளவு சிறுகூடாய் இருக்கின்றாள்! இவ்வளவு குறுகிய வயிறு எப்படிச் சேகரின் கருவைத் தன்னில் அடக்கிச் சுமந்தது?

—இது எவ்வளவு முட்டாள்தனமான கேள்வி! சுமந்து தானே சேகர் உருவாகி வெளிவந்து பம்பரம் விளையாடு கிறான். தவிர இது என் கவலையா? இது எண்ணத்தின் அக்கப்போரன்றி வேறு என்ன?

அவர்கள் வீட்டில் செய்யும் பலகாரங்கள்—ஏன் சில சமயங்கள் அவள் கணவன் வாங்கி வரும் பொட்டலங் களில்கூடப் பங்கு பையன் மூலம் வரும்.

மறுக்கவும் முடியவில்லை. ஒரு தடவை திருப்பியனுப் பியதற்கு அவளே நேரே வந்துவிட்டாள். "ஏன் நான் கொடுத்து நீங்கள் வாங்கிக்கக்கூடாதா?" இதற்கென்ன பதில் சொல்ல முடியும்? தட்டை ஜன்னலில் வைத்துவிட்டுச் சென்றாள்.

இன்னொரு சமயம் 'தலைவலி' உடல் சுகமில்லை, என்று தட்டிக் கழிக்க முயன்றேன். அவ்வளவுதான். ஏன் சொன்னேன் என்று ஆகிவிட்டது. உடனே மாத்திரை, வெந்நீர், கஷாயம், மிளகுரசம் என்று எதை எதையோ தூக்கிக்கொண்டு இருவருமே வந்துவிட்டனர். அந்தப் பொய்யிலிருந்து கௌரவமாய்த் தப்புவதே பெரும் பாடாய்ப் போய்விட்டது.

சிறுமீன் போட்டுப் பெருமீன் பிடிக்கிறார்களோ என்று நான் கவலையுறும்படி அவர்கள் என்னிடம் கடன் கேட்கவில்லை. ஒரு தயவையும் எதிர்பார்க்கவில்லை.

மனிதன் எப்பவும் சந்தேகப்ராணி.

ஒன்று இல்லாவிட்டால் ஒன்று ஏதோ ஒரு தாக்ஷண்யச் சுழியில் மாட்டிக்கொண்டு தவிக்கிறோம்.

ஒன்று ஆத்திரத்தில் அழிகிறோம் அல்லது அன்பால் கொலை செய்யப்படுகிறோம்.

இத்தத் தாக்ஷண்யங்களைத் திருப்புவது எப்படி என்று மண்டையைக் குடைந்துகொள்வேன்.

பையனுக்குப் பிஸ்கட் ரோல் வாங்கித் தருவேன்.

ஒரு வெள்ளிக்கிழமை மாலை கதம்பம் வாங்கிக் கொண்டு அவர்கள் வீட்டுள் நுழைந்தேன்.

அவள் மட்டும்தான் இருந்தாள். அவள் கணவன் இன்னும் ஆபீஸிலிருந்து வரவில்லை. பையன் விளையாடப் போய்விட்டான் போலும்.

''வாங்கோ! வாங்கோ!!''

பூப்பந்தை அவளிடம் நீட்டினேன். அவள் கண்கள் விரிந்தன. ''எனக்கா?''

''பின்னே என்ன நான் சூட்டிக்கொள்ளவா?''

என்னிடமிருந்து வாங்கிக் கொள்கையில் அவள் கைச் சுண்டுவிரல் என் உள்ளங்கையில் பட்டது. உடல் பூரா ஊடுருவிய ஒரு பரவசத்தில் என் விழிகள் பிதுங்கி என் கையில் விழுந்துவிடும்போல் மண்டையில் ஒரு மின்னல்.

இரு கைகளையும் தூக்கிப் பூச்சரத்லைதக் கொண்டையில் சரிப்படுத்திக் கொண்டு அவள் நிற்கையில், ஜீராவில் செய்து வைத்த சின்னிப் பொம்மைபோல் எந்த நிமிஷம் கரைந்துவிடுவாளோ, கடலில் கரையோரம் நடுங்கும் அலை நுரைபோல் சிதறிக் காணாமல் போய்விடுவாளோ என்றுகூட ஒரு தினுசான வேதனை முதுகுத் தண்டில் ஏறி இறங்கி நெளிகின்றது. இவள் எப்படிப் போனால் எனக்கென்ன என்று ஏன் இருக்கமாட்டேன் என்கிறது?

* * *

இன்று ராதை வந்தாள்.

மூன்று மாதங்களுக்குப்பின், முற்றிலும் எதிர்பாராத சமயத்தில், ''நான் வரலாமா?'' என்று கேட்டுக் கொண்டே. திடீரென்று அவள் அப்படித் தோன்றியதும் அவளைப் பார்க்க, சினேக பாவனையில் அவளை வரவேற்க சந்தோஷமாய்க்கூட இருக்கிறது.

''என்ன அப்படிக் கேட்கிறாய்? வா, வா.''

''ஆமாம், நம் வீட்டில், நம் வீடாகையால் நம் வீடு என் வீடுகூட. ஆனால் இது உங்கள் இடமாச்சே! இங்கு அனுமதியில்லாமல் நுழையலாமா?''

அவசரமாய்த் தலையணைகளை உதறிவிட்டு ஜமக்காளத்தை விரித்தேன். உட்காருமுன் அவள் கண்கள் அறையின் நாற்புறத்தையும் துழாவின. அவள் மூக்கு நுனி சுருங்கிற்று. என்னையும் ஒருமுறை கண்ணோட்டம் விட்டாள்.

''ஐயாவுக்கு வெளிவாசம் ஒன்றும் வனவாசமா யில்லை, உடம்பு சிவப்பிட்டிருக்கே!''

''நான் அப்போ கறுப்பா என்ன?''

''ஓ! என் கறுப்பை நீங்கள் இப்படி ஞாபகப்படுத்தித் தானாகணுமோ?''

''இல்லை நானா தேடிக்கொண்டதுதானே! இல்லை உனக்குக்கூட கறுப்பு உதிர்ந்துதானிருக்கிறது. இடுப்பில் ஒரு 'டன்லப்' உருவாகிக் கொண்டிருக்கிறதே?''

''ஒண்ணுமில்லே...'' அவசரமாய் அந்த இடத்தைப் புடவையால் மூடிக்கொண்டாள். ''எங்களுக்கே நாற்பது வயதுக்குமேல் அப்படித்தான்.''

''நீ கொழுப்பைக் குறைத்துக்கொள்ள வேணும். வீட்டில் தினம் சப்பாத்திக் கிழங்கு நடந்துண்டிருக்கோன்னோ?''

''ஏன் நீங்கள் போய்விட்டால் தினம் வீட்டில் சுட்ட அப்பளமும் கொட்டு ரஸமும் இருந்தால் உங்களுக்குத் தேவலையா?''

பேச்சை மாற்றினேன். ''ராதை ஒரு பத்து நிமிஷத்தில் வந்துவிடுகிறேன். இங்கேயே இரு. உனக்குப் பிடித்தமான பேப்பர் ரோஸ்ட் மசாலா வாங்கி வருகிறேன் ''

அவள் புன்னகை புரிந்தாள். விருந்தாளியைக் கவனிக்க வேண்டியது நியாயம்தானே!''

ஆனால் நான் திரும்பி வருவதற்குள் அரை மணிக்கு மேல் ஆகிவிட்டது. நான் வாசலில் நுழைகையிலேயே இரு குரல்கள் கேட்டன.

''என்ன மாமா, மாமி உள்ளூரிலே இருக்காள்னு எனக்கு நீங்கள் ஒரு வார்த்தைகூட சொல்லவில்லையே. நீங்கள் ஓட்டலுக்குப் போய்த்தான் வாங்கி வரணுமா? நீங்கள் வாசலில் இருந்தே குரல் கொடுத்திருந்தால், சேகர் என்னிடம் சொல்லியிருப்பானே!''

''ஏண்டி கல்யாணி! மாமாவைப்பத்தி நானே இன்னும் தெரிஞ்சுக்க வேண்டியதிருக்கு. எனக்குமேல் நீ ஆசைப்படறையே!''

அந்தப் பெண் சட்டென்று ராதை பக்கம் திரும்பி னாள். ஆனால் ராதையின் கவனம் முழுவதும் அவள் கைக் காப்பி டம்ளரின் மேல் ஆழ்ந்திருந்தது. (எதிர் வீட்டுக் காப்பிதான் அது. நான்தான் வாங்கி வர வில்லையே! இன்று காலை கைதட்டி கண்ணாடி டம்ளர் உடைந்துவிட்டது.)

''மாமா நாங்கள் கோலிலுக்குப் போகிறோம். நீங்களும் வரேளா? கேட்க வந்தேன். வந்த இடத்தில் மாமியைக் கண்டேன்.''

''ஓ! மாமா இப்போ கோவிலுக்குக்கூடப் போறாரா, தேவலையே!''

''இல்லை, இதுவரை நாங்கள் அழைத்ததில்லை.'' கலியாணியின் குரலில் ஏதோ நிழல் படர்ந்தது. ''ஏன் நீங்களும் வாங்கோளேன் எல்லோரும் போவோமே!

''எனக்கேது அம்மா அவ்வளவு கொடுப்பனை? மாமா அந்த நாளிலிருந்தே என்னை அழைச்சுண்டு போயிருந் தால் நாங்கள் இப்படியா இருப்போம்! காசியிலிருந்து கதிர்காமம் வரை இதுவரை மூணு ரெளண்டு அடிச் சிருக்கமாட்டேனா? காசிக்கும் எட்டின இடம் ஏதாவது இருக்கா? நீங்கள் சொல்லுங்களேன்!''

''ஏன் இல்லை? கைலாசமேயிருக்கிறதே! ஆனால் அங்கு போனவர் திரும்பி வருவதில்லை'' என்றேன். கலியாணி எங்கள் இருவரையும் மாறிமாறிப் பார்த்தாள். ''சரி, இன்னிக்கு உங்களுக்கு ஒழியாது என்று தெரிகிறது. நான் வருகிறேன்'' என்று எழுந்தாள்.

எதிர் வீட்டுள் அவள் கட்டுள் அவள் மறையும் வரை ராதை அந்தத் திக்கையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

''எத்தனை நாளாக இந்த ஸ்வீகாரம்?''

''எனக்குத் தெரியாது. நீ சொல்லித்தான் தெரியணும். அவள் பேரே இப்போத்தான் எனக்குத் தெரியும். அதுவும் உன் மூலமா...?''

''இது இன்னொரு stunt ஆக்கும்!'' திடீரென்று தலையிலடித்துக் கொண்டாள். ''ஐய, இந்த ஆண் களுடைய சபலமே!—நன்னா நெற்றிக் கண்ணைத் திறவுங்கள். எனக்குப் பழகின கண்தானே! இப்படி யெல்லாம் செளகரியமாய் இருக்கணும்னு தானே இங்கு ரூம் எடுத்துண்டிருக்கேள். எனக்கு நீங்கள் எந்தச் சமா தானமும் சொல்லத் தேவையில்லை. நீங்கள் சொன்னா லும் நான் கேட்டுக்க அவசியமில்லை. நீங்கள் என்ன

சொல்வேன் என்பதும் எனக்குத் தெரியும். "பெண் மாதிரி என்பேன். பெற்றால்தான் பெண்ணா என்பேள். ஆனால் ஒண்ணு சொல்றேன், இது எல்லாத்துக்கும் அடிப்படை ஒன்றுதான். அதில்தான் இதெல்லாம் போய் முடியும்."

"எதில்?"

"சபலம்."

"Bore!"

"ஒப்புக்கொள்கிறேன். நான் வந்த காரியத்தைப் பேசலாமா?"

"ஓ! பிஸினெஸ் மேல்தான் வந்திருக்கிறாயா?"

"பின் நம்மிடையில் இனி வேறே என்ன இருக்கு? இந்த மாதம் முன்னூறு ரூபாய் கூட வேணும்."

எனக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"இந்த மாதமா? இந்த மாதத்திலிருந்தா?"

"அதுவும் சம்மதம்தான்."

"என் சம்பளம் ராஜு சம்பளம் இரண்டு வந்தும் போதவில்லையாக்கும்!"

"நீங்கள் என்னவோ தலையைக் கொய்து என் கையில் கொடுத்துவிட்டதாய் எண்ணிண்டிருக்கலாம். ஆனால் குடும்பம் பிரம்ம கபாலமாயிருக்கே! உங்கள் தலையை நீங்கள்தான் நிரப்பியாகணும்."

"என் தலை முன்னூறு ரூபாய் கேட்கிறதா!"

"தலை பெரிய தலையாச்சே' அதுவும் ஆறு மாதங்களுக்கு ஒருதடவை வெட்டிக்கிற தலை எப்படியிருக்கும்!'

"மட்டை உரிக்காத தேங்காய் மாதிரி, சிங்கத்தலை."

"இவ்வளவு பெரிய தொகைக்குத் திடீர்னு எங்கே போவேன்!"

''என்னைக் கேட்டால்? விஜிக்கு இன்னும் பத்து நாளில் பிறந்த நாள் வரது.''

எனக்கு எரிச்சலாய் வந்தது.

''என் இறந்த நாள் வந்தால் இன்ஷூரன்ஸ் பணம் வரும்—''

''வரலாம். அது என்னிக்கோ? அதுவும் அதுக்குள் நீங்கள் வேறு யாருக்காவது எழுதிவைக்காமல் இருந்தால். நீங்கள்தான் உறவு மனுஷாளை விட்டுட்டு, புதுசு புதுசா உறவு பிடிக்கறேளே? சரி நான் வரேன். விஜி என்னைத் தேட ஆரம்பிச்சுடுவாள். இன்னும் இரண்டு நாள் கழிச்சு ராஜூவை ஆபீசுக்கு அனுப்பறேன்.''

அவள் போன பின்னரும் நான் உட்கார்ந்த இடத்தை விட்டு எழாமல் எந்நேரமாயிற்றோ? என்ன யோசனையிலிருந்தேன் என்றுகூடத் திட்டமாய்த் தெரியவில்லை. ஆகையால் திடீரென ஒளி வெள்ளம் என்னைச் சூழ்ந்து கண்ணைப் பறித்ததும் கண்களைப் பொத்திக் கொண்டேன்.

''ஓ! I am sorry, உங்களை disturb பண்றேனா?''

நான் விழித்ததும் கலியாணியின் கணவன் வாசற்படியில் நின்று கொண்டிருந்தான்.

''நான் உங்களோடு கொஞ்சம் பேசலாமா?''

''இன்று என் ராசி என்ன ராசியோ?''

இப்பத்தான் ஒருத்தி பேசிவிட்டுப் போனாள்.

''வா அப்பா, உட்காரு என்ன விசேஷம்?''

அவன் முகம் சுண்டியிருந்தது.

''எனக்கு மாற்றலாகியிருக்குது, ஸார்! இன்னும் ஒரு வாரத்தில் கிளம்பியாகணும்.''

''ஓ!'' எனக்கு மார் லேசாக வலித்ததோ? அப்போ இனிமேல்—

ராதை எச்சரித்தது அப்போ சரிதானா?

''பணம் ஏதாவது முடையா?'' என்று கேட்டேன்.

''No, no, no!'' அவன் சிரிப்பின் அழுகையிலும் துக்கம் தொனித்தது.

''I am sorry.''

''நான் இப்போ மாறிப்போற இடமும் காயமில்லை. மறுபடியும் நாலு மாதத்துக்கொல்லாம் தூக்கிடுவாங்க. இந்தக் குருவிக்காரன் புளைப்பிலே இவளையும் பைய னையும் கூட எப்படிக் கட்டி இளுத்துக்கிட்டுப் போறது? இவளைப் பிறந்த வீட்டுலே விட்டுடப்போறேன்'' நான் ஒன்றும் பேசவில்லை. நான் பேச என்ன இருக்கிறது?

''அதுவும் தூரதேசமாப் போச்சு. அவருக்கு second wife. அந்தக் குழந்தை குட்டி வேறே. அதனாலே அவங் களையும் நான் குத்தம் சொல்ல முடியாது. ரொம்ப நாளா touch விட்டுப்போச்சு இல்லையா? இருந்தாலும் எனக்கு வேறே வழி என்ன இருக்குது? சொல்லுங்க.''

சற்று நேரம் எங்களிடையில் பேச்சு எழவில்லை.

நான் காத்திருந்தென்.

''ஸார், கலியாணி மூணு மாதமா ஸ்னானம் பண்ணலலே.''

பிறகு வார்த்தைகள் மளமளவெனக் கொட்டின.

''எனக்கு இதுதான் பெரிய worry. முதல் பிரசவமே ரொம்பக் கஷ்டமாப் போச்சு. வவுத்தைக் கிழிச்சுதான் எடுத்தாங்க. அப்பவே வீக்காப் போயிட்டா. Complications வேறே. புளைச்சதே புனர்ஜன்மம். மறு படியும் கருத்தரிச்சு அதுவும் ஸிஸரீயன் ஆச்சுன்னா ஆளுக்கே டேஞ்சர்னு doctors சொல்லிட்டாங்க. என் wife பாக்கறதுக்கு என்னவோ ஆளாயிருக்கா. ஆனால் ரொம்ப weak. இதோ அவளைக் கொண்டுபோய் அவள்

வீட்டில் விட்டப்புறம் எப்போ பார்க்கப் போறேனோ? இது நிச்சயமானதிலிருந்தே மனசு சரியாயில்லே. உங்க கிட்டேயாவது சொல்லிக்கலாம்னு வந்தேன்.''

நான் ஊமையானேன்.

எல்லோரும் தங்கள் கஷ்டங்களைச் சொல்லிக் கொள்ளத்தானே கடவுளைக் கல்லாக்கிக் கோவிலில் வைத்திருக்கிறது. கோயில் அமைதியின் இருப்பிடம் என்று கொள்பவர் கொள்ளட்டும். ஆனால் நான் அறிந்த மட்டில் ஆலயம் ஒரு துயரச்சந்தை.

அவன் போன பின்னரும் நான் இருந்த இடத்தை விட்டு நகரவில்லை. எனக்கு இப்போது புரிந்தது இந்தக் குடும்பத்தைச் சுற்றிக் கட்டிய சோக ரேகை, மயிரிழையில் கட்டித் தலைக்குமேல் தொங்கும் கத்தியின் கீழ், இரண்டாவது கர்ப்பப் பயங்கரத்தை நெஞ்சில் வைத்துக் கொண்டே வளையவரும் இவர்கள் வாழ்க்கை. ஸ்மரித்த பயம் தரிசனமும் ஆகிவிட்டபின் இவர்களுக்கு விமோசனம் ஏது? சின்னக் குழந்தைகளின் சொப்பு விளையாட்டுப்போல் ஆகிவிட்டது இவர்கள் குடித்தனம்.

ரயிலடிக்கு வழியனுப்ப நான் சென்றேன். இவர்களுக்குக் கடைசியாக நான் காட்டக்கூடிய தாக்ஷண்யம் இதுதானே!

அன்றைக்கென்று, ஆபீஸ் வேலை முடியும் தறுவாயில் எதிர்பாராத அவசர ஜோலி ஆகையால், நான் ப்ளாட்பாரத்தில் நுழையும்போதே முதல் மணி அடித்துவிட்டது. பிறகு அவர்கள் ஏறிய பெட்டியைக் கண்டுபிடிக்கச் சற்று நேரம். இப்படித்தானே சிறுகச் சிறுகச் சில விஷயங்கள் சில நேரங்கள் நம் உயிரை உறிஞ்சி விடுகின்றன.

''உங்களைப் பார்ப்போம் என்ற நம்பிக்கையையே விட்டுட்டோம்...''

"—"

"ஞாபகம் வெச்சிக்கோங்க, போய்ச் சேர்ந்ததும் எழுதறேன்."

'அவசியமாய்' என்றேன், சேகர் முதுகைத் தட்டிக் கொண்டே. ஏதோ இவன் கடிதத்திற்கு நாள் தவறாமல பதில் போட்டு விடுகிறாப்போல.

சேகருக்கு என் நினைப்பு அதிகம் இருப்பதாய்த் தெரியல்லே. அவன் இப்போது ரயில் சந்தோஷத்திலிருந்தான்.

அவள் ஒன்றும் பேசவில்லை. என்னையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். எப்போதைக் காட்டிலும் வெளுப்பாய் விளக்கு வெளிச்சத்தில் காட்டிய அவள் நெற்றியில் பெரிய குங்குமப் பொட்டு, பேசத் தவிக்கும் வாய் போன்று தன் உயிர் கொண்டு திகழ்ந்தது.

வண்டி நகர்ந்தது. கூட நான் நடந்தேன்.

திடீரென அவ்விழிகளினின்று கண்ணீர் புரண்டது. அதன் உதிர்களைத் துடைக்கக்கூட முற்படவில்லை. அவளிடம் செயல் இல்லை.

"இவ்வளவு இளகின மனதாயிருந்தால் உலகில் எப்படி வளைய வரது?' அவளைத் தேற்றும் முறையில் கேலி பண்ணினேன். பார்க்கப் போனால் நம் பழக்கம் இந்த மூனு மாஸமாத்தானே! இத்தனைக் கண்ணீரும் எனக்கா?"

"இல்லை. உங்களைப் பார்க்கும் போதெல்லாம் எனக்கு என் அம்மா நினைப்பு வரது. அவளுக்காகவும் கூட என்று வெச்சிக்கோங்களேன்."

"ஏன் உன் தாயார் என் முகஜாடையாயிருப்பாளா?"

"கொஞ்சம் கூட இல்லை."

'பின்னே?"

"அதுதான் எனக்குப் புரியவில்லை. ஆனால் உங்களைப் பார்த்தால் அம்மா நினைப்பு வரது."

வண்டி வேகம் எடுத்துவிட்டது.

"உன் அம்மா யார் மாதிரி இருப்பாள்?"

"என் தாய் என் ஜாடைதான்."

எங்கோ டெலிபோன் மணி அடித்தது. ஸ்டேஷன் மாஸ்டர் அறையில் இருக்கலாம்.

"உன் அம்மா பேர் என்ன?"

அவள் திடீரென புன்னகை புரிந்ததால், நனைந்த கன்னங்களின்மேல் அதன் ஒளி படருகையில் அவளிடம் ஏதோ அமானுஷ்யம மிளிர்ந்தது.

"அம்மாவின் சொந்தப் பேர் ஒண்ணு. ஆனால் அவள் தனக்கு வெச்சுண்ட பேர் வேறு ஏதோ, புது மாதிரி. அவள் பேர்—"

அவள் சொன்னது இஞ்சினின் பெருமூச்சில் கேட்க வில்லை. வண்டியுடன் நான் ஓடினேன்.

"உன் தாயார் பேர் என்ன?" என்று கத்தினேன். அவளும் உரக்கக் கூவினாள்.

"ஸநாதனீ"

அந்தத் தருணமே இஞ்சினின் ஊதல் காதைக் கிழித்துக்கொண்டு கிளம்பிற்று. செவிகளைப் பொத்திய படி நின்றவிடத்தில் நின்றுவிட்டேன். ரயில் என்னைத் தாண்டி இருளில் மறைந்தது.

இப்பொழுது புரிந்தது. இவளை முன்பின் பாராமலே இவளை எங்கோ பார்த்தாற்போல் இவள் நினைவு நெஞ்சில் இடறும் மர்மம். தாயின் குரலின் சாயை பெண்ணிற்கும் கொஞ்சம் அடித்தது.

ஸுநாதனி.

ஸ்டேஷன் மாஸ்டரின் அறையில் டெலிபோன் மணி யடித்தது.

ஆனால் அங்கு மட்டுமல்ல.

நினைவின் தேன்கூட்டில் வருடங்களின் மிதி காலடியில் புதைந்துபோன ஏதோ ஒரு பாதாள அறை யிலிருந்து மணி ஒலி கேட்கிறது.

ஸுநாதனி என்னைக் கூப்பிடுகிறாள்.

*  *  *

என் பேரிஷ்டம் என் அறையின் தனி விசேஷம் அதன் முழு இருட்டு. ஜன்னலின் பொருத்தம் காற்றுக்குப் பங்க மிலாது தெரு வெளிச்சம் துளிகூட உள் விழாது. என் உடலேனும் எனக்கிலாத நிலையை உயிரோடு இருள் மூலமேனும் பாவனையில் ருசிக்க என் அறை எனக்கு ஒரு வழி.

இம்முறையில் இருளே உன்னை ஒரு வழியில் புரிந்து கொண்டது சரியோ என எனக்கு நீ சொல்.

இல்லை, நீ சொல்லமாட்டாய். நான் எனக்குச் சொல்லிக்கொள்வதே நீ எனக்குச் சொல்வதுதான். நீ சொல்லமாட்டாய். இமையா உன் விழி கொண்ட உன் விலங்கு விழிப்புத்தான் உன் விளக்கம்.

அகன்ற சிறகுகளை விரித்து நீ என் மார்மேல் இறங்குவது உணர்கிறேன். உன் கழுகுக்கால்கள் என்னைக் கவ்வுகின்றன. பிறகு என்னை எங்கு எடுத்துச் செல்கிறாய்?

இச்சமயம் நான் உன் குஞ்சா? உன் இரையா? ஏனெனில் உன் குஞ்சும் உன் இரையும் உனக்கு ஒன்று தான். எதையும் விழுங்குவது உன் தன்மை. ஒன்று என்பதே உன் ஒரே குணம்; ஆகையால் அருங்குணம்.

நீ என்னைத் தின்ற விளைவாய் நான் என்னை இழந்து உன் ஒன்றில் ஒன்றி ஒன்றானேன்.

ஆனால் ஒன்று.

என்னை நீ தின்றதும் உன் வயிற்றில் தங்கியிருந்தேனெனில் நீ என்னை ஜீரணித்திருப்பாய். அப்போது உனக்கு நான் இரையானேன் என்று பொருள் கண்டேன்.

உன் வயிற்றில் தங்காது அங்கிருந்து நேரே உன் விழிக்கு வந்து அங்கு அமர்ந்து அண்டங்களை அகண்டமாய் உன் வாயில் கவ்வி, ஏந்திய வண்ணம் காக்கும் உன் காவலில் உன்னையும் தின்ற உன் குஞ்சானேன்.

இச்சமயம் உன்னோடு காலத்தையும் விழுங்கினேன்.

சென்று போனதற்கும் வந்து நிற்பதற்கும் வரப் போவதற்கும்.

இலக்கணமான அதனதன் சமயமுமாகும் அம்சம்.

நீயலால் எனக்கு ஏது தரும்? I Love you.

* * *

அது அந்த நாள்.

ஆபீஸில் எனக்கென்று ஒரு அறை, திரும்பும் நாற்காலி, டென்னிஸ்கோர்ட் போன்ற மேசை, தனி டெலிபோன்—ஆபீஸர் பதவிக்கு உயர்ந்த புது முறுக்கு, இன்னும் வாழ்க்கையில் நம்பிக்கை ஆட்டம் கொடுக்காத நாள்.

எல்லாம் ராஜு பிறந்த ராசி என்று ராதை வருவோர் போவோரிடம் பெருமையடித்துக்கொள்கிறாள். அப்பவே என் தகுதிக்கு என் உரிமையைக்கூட என்னிடமிருந்து ராஜுவின் பிறந்த ராசி மூலம் பறிக்க ஆரம்பித்தாகி விட்டது! ஆனால் அப்போது அப்படிப் படுகிறதா? நானும் அந்தப் பெருமையில் கலந்துகொள்கிறேன்.

மாலை ஆபீஸிலிருந்து வந்ததும், ராதை ஒரு மூட்டையை ஏந்தி வந்து என் கையில் திணிக்கிறாள். ஸோப்பு நுரைபோல் குழந்தையின் பால் சதை என்மேல் வாய்வரை எழும்பி, என் அணைத்த கைகளை நிறைத்து வழிகின்றது.

"நாம் மூணுபேரும் சேர்ந்து எப்போ போட்டோ எடுத்துக்கறது?" என் முகத்துள் அண்ணாந்து பார்க்கும் ராதை முகமே ஆப்பிள் மாதிரிதான் இருக்கிறது.

சில நாட்களாகவே தொடர்ந்து நேர்ந்துகொண்டிருக்கும் இந்தச்சடங்கு எனக்கு இன்னும் அலுக்கவில்லை. ஆனால் ராதையின் ஆசையை நிறைவேற்ற எனக்கு இன்னும் நேரம் கிடைக்கவில்லை. இன்றேனும் வீடு சேர்ந்ததும் ஒரு டாக்ஸியை அமர்த்திக்கொண்டு—

டெலிபோன் மணி அடித்தது.

"ஹல்லோ?"

"யார், மிஸ்டர் ஸாலிக்ராம்?" பெண் குரல்.

"Speaking."

"அந்தப் பக்கத்திலிருந்து நீண்ட பெருமூச்செழுந்தது.

"மிஸ்டர் ஸாலிக்ராம். excuse me, நீங்கள் ரொம்ப வேலையாயிருக்கிறீர்களா? Am I disturbing you?"

"அப்படியொன்றுமில்லை. இன்னும் பத்து நிமிடங்களில் வீட்டுக்குக் கிளம்ப வேண்டியதுதான்."

"அப்போ, இந்தப் பத்து நிமிஷங்களும் நமக்கே சொந்தம்தானே!"

"நீங்கள் யார் என்று தெரியவில்லையே!"

'ஆ!' கண்ணாடி டம்ளர் அடியில் உருளும் கரையாத ஐஸ்கட்டி போல் அடக்கிய அவுட்டுச் சிரிப்பு.

''என்னை உங்களுக்குத் தெரியாது. ஆனால் உங்களை எனக்கு நன்றாய்த் தெரியும். உங்களுடன் பேசுவதற்கு ஏறக்குறைய மூணு யாதங்களாய் என் மனத்தைத் திடம் பண்ணிக்கொண்டிருக்கிறேன் என்றால் நீங்கள் நம்புவீர்களா? நீங்கள் நம்பினால், நம்பாவிட்டால் எனக்கென்ன? என்னைப் பற்றிச் சொல்லிக்கொள்கையில் எனக்கு நான் தானே சாக்ஷி! ஆனால் தன்னிலும் பெரிய சாக்ஷி ஏது?''

''—''

''ஹல்லோ! ஹல்லோ!''

''Yes?''

''ஓ இருக்கிறீர்களா? சந்தடியே காணோமே, line கட் ஆகிவிட்டதோ என்று பார்த்தேன்.''

''இல்லை யோசனை பண்ணிக் கொண்டிருக்கிறேன். இவ்வளவு ருசியாய்ப் பேசத் தெரிந்தவர்களில் எனக்குத் தெரிந்தவர் யார்?'

''நான் சொல்லப் போவதில்லை..

''ஏன்?''

''நான் யார் என்று யோசித்துக்கொண்டிருக்க, உங்களுக்கு இன்றிரவு பூரா, ஏன், இன்றிரவிலிருந்தே உங்கள் ஆயுசு பூரா நேரம் இருக்கிறது. உங்களை ஒரு தயவு கேட்கிறேன். என்னை யாரென்று அறிய நீங்கள் முறபட வேண்டாம். மிஸ்டர் ஸாலிக்ராம்—உங்கள் பெயர் எவ்வளவு அழகாயிருக்கிறது! நீங்கள் என்னை வெட்கம் கெட்டவள் என்றுதானே நினைக்கிறீர்கள்?''

''இல்லை! இல்லை!!''

அந்தப் பக்கத்திலிருந்து பெருமூச்செழுந்து என்மேல் சுழன்று விளையாடிற்று.

''நீங்கள்—''

''என்னை 'நீங்கள்' என்காதீர்கள்.''

''நீ என்னோடு பேசலாம், என்னைப் பார்க்கலாகாதா?''

''நான் உங்களைப் பார்க்கா திருக்கிறேனே!''

''நான் உன்னைப் பார்க்கலாகாதா?''

''நான் அந்தக் கட்டத்தை விரும்பவில்லை.''

''ஏன்?''

''பார்த்த முகமே புளித்த முகம்தான்.''

''நான் இன்னும் உன்னைப் பார்த்ததில்லையே!''

''ஒரு தரம் பார்த்தாலும, பார்த்தபின், பார்த்த முகம்தானே! கண்டதைக் கண்டபின், அப்படிக் கண்டதாலேயே அதைக் காணாத முன் கற்பனையில் விளங்கிக் கொண்டிருந்த அதன் கற்பு நிலை சிதைந்துவிடுகிறது என்று சொல்வேன். ஆகையால் நீங்கள் என்னைப் பார்க்க நான் விடப்போவதில்லை.''

''இது ஒரு அனாவசியமான சீண்டல் இல்லையா?''

''உங்களுக்கு அப்படிப் படலாம். ஆனால் என் அரூபத்தை என்னால் இப்படித்தான் சாதிக்க முடியும்—சரி இன்று இது போதும். நாளை பேசுவோம்.''

நான் படபடவெனத் தட்டினேன். ஆனால் தொடர்பு அறுந்தாகி விட்டது.

யார் இவள்?

நாளை பேசுவாளா?

* * *

இன்று மாலை நாலரை மணியிலிருந்தே இருப்புக் கொள்ளவில்லை. என் வேலைகளைச் சுருக்கவே முடித்துக் கொண்டு விட்டேன்.

இந்த முள் ஏன் நகரமாட்டேன் என்கிறது? அவள் டெலிபோன் பண்ணுகிறேன் என்று சொன்னால் பண்ணுவாள் என்று நிச்சயமா? அவசியமா? சீ எனக்கு ஏன் இந்த அல்ப ஆசை! இன்னும் பத்து நிமிடங்கள் ஆனதுமே, **I will get out.** இன்றைக்கு நிச்சயமாய் குழந்தையைப் போட்டோ எடுத்—

டெலிபோன் மணியில் தனி கணீர். பதறி எடுத்தேன்.

''**Hello!**''

''ஓ நீயா?'' அவள் குரலைக் கேட்டதுமே எனக்கேன் இவ்வளவு மகிழ்ச்சி?

''ஏன், வேறு யாரையேனும் எதிர்பார்த்துக் கொண்டிருந்தீர்களா? **sorry**, போனை கீழே வைத்து விடட்டுமா?''

''இல்லை இல்லை. **don't cut the line please-please!!**''

''சும்மாச் சொன்னேன். இந்த வேளைக்கு நானும் தானே காத்துக் கொண்டிருக்கிறேன்!''

எனக்குத் தொண்டையை அடைத்தது.

''**Hello!**''

''இங்கேயேதான் இருக்கிறேன் உன் பேர் என்ன?''

''என் பெயருக்கேன் ஆசைப்படுகிறீர்கள்? 'நீயும் நானும்' எனும் உறவுக்குமேல் பெயர்கள் பெரிதா?''

''இது என்ன வேதாந்தமா, விரக்தியா? இப்படிப் பேசிக்கொண்டே போனால் இதற்கு முடிவேது?''

''ஆம். அலுப்பற்ற விஷயத்தின் முடிவற்ற விளிம்பில் நாம் நின்றுகொண்டிருக்கிறோம்.''

**Please**, உன் பெயர் என்ன?

''என் பெயர் என்னவென்று சொல்லலாம்? ஸீதா, லக்ஷ்மி, ராமசுப்பி, வாலாம்பாள் இந்த மாதிரி ஏதேனும் சொல்லவா?—

"Please உன் பெயர் என்ன?"

"இருங்கள் என் பெயர்—ஸுநாதனி."

"ஸுநாதனி?"

"இது எனக்கு இட்ட பேர் இல்லை என்று ஒப்புக் கொள்கிறேன். ஆனால் இச்சமயத்திற்கேற்ற பெயர் என்று உங்களுக்குத் தோன்றவில்லை?"

"ஸுநாதனி, உன்னிஷடம்."

"உங்கள் உச்சரிப்பில் என் பெயருக்கு உருவேறுவது எனக்கு இங்கே தெரிகிறது."

ஸுநாதனி, உன்னால் எப்படி இவ்வளவு அற்புத மாய்ப் பேச முடிகிறது?"

"கேட்பவருக்கும் கேட்பதற்கேற்ற படியும்தான் பேச்சும் வரும். உங்கள் மௌனம் என் பேச்சிற்கு உரைகல்; உங்களுடன் பேசுவதே நான் உரமேறத் தானே!"

"என்ன சுயநலம்!"

"சுயநலமில்லாவிடில் உங்களைத் தேடி ஏன் பேசு கிறேன்!"

"என்னிடம் அப்படி என்ன கண்டுவிட்டாய்?"

"அப்படிக் காரணங்கள் கேட்டாலும் எனக்கு சொல்லத் தெரியவில்லை. மூன்று மாதங்களுக்கு முன் உங்கள் வீட்டு மொட்டை மாடியில் மாலையில் நீங்கள் உங்களுக்கே பாடிக் கொண்டிருப்பதை நான் பின் தெருவில் என் வீட்டு மொட்டை மாடியிலிருந்து கேட்டேன். கண்டேன். இந்த அடையாளத்தை வைத்துக் கொண்டு என்னைத்தேடினால் நான் அகப்படமாட்டேன். நாங்கள் அந்த இடத்தைக் காலி பண்ணிவிட்டோம்."

"My god! உனக்கு என்னைப்பற்றி என்ன தெரியும்?"

''நீங்கள் கலியாணமானவர். உங்களுக்குச் சமீபத்தில் குழந்தை பிறந்திருக்கிறது.''

''இந்தத் தகவல்கள், நாம் ஒருவரையொருவர் பார்த்துக் கொள்ளாமலே பேசிக்கொண்டிருக்க, நீ எனக்கு வகுத்த யோக்யதைகளா?''

''இல்லை, நம் பேச்சின் உறவு அதன் வரம்பு மீறாமலிருக்க அத்துக்கள்.''

''ஸுநாதனி, எத்தனை நாள் இப்படியே ஓடும்?''

''இன்றைக்கு இரண்டாம் நாள்.''

''இந்த விக்ரமாதித்தன் சிம்மாஸனத்திற்கு இம்மாதிரி இன்னும் எத்தனை படிகள்?''

''உங்களுக்கு அலுப்பு வரும்படிப் பேசிக்கொண்டிருக்க மாட்டேன்.''

''இது சிறுபிள்ளைத்தனமாய் இருக்கிறது. நாம் இன்னும் சொப்பு வைத்தா விளையாடிக்கொண்டிருக்கிறோம்?''

''உங்களுக்குக் கோபம் வருகிறது. ஆண்களே இப்படித்தான். நான்—நான் இவ்வளவு தைரியமாய், வெட்கம் கெட்டு, உங்கள் முன்னிலையில் பேச முடியுமா? என்னதான் வெளிச்சமாயிருந்தாலும், ஆண் பார்வை என்மேல் படுகையில், கூச்சம் குறுக்கிட்டுவிடாதா? ஆத்ம நிர்வாணத்தைப் புலன்களால் புரிந்துகொள்ள முடியாது. அதையும் உடலின் ஆடையுரிப்பாய்த்தான் கண்ணுக்குக் காணத் தெரியும்.''

''வெட்கம் கெட்டதாய்த்தான் மனத்திற்கு நினைக்க முடியும்.''

''எனக்கென்னவோ இந்த நிலையில் பொய்ம்மை தான் தெரிகிறது.''

“உண்மையும் பொய்போலும்மே பொய்போலும்மே! நானும் ஏதோ ஒரு யோசனைதான் நடத்துகிறேன்?”

“ஒரு வழியாகச் சொல், நீ விரும்புவதுதான் என்ன?”

“உங்கள் நினைவில் என் குரல் சதா ஒலித்துக் கொண்டிருக்க விரும்புகிறேன். அந்த ஒலியின் தூண்டலாக உங்கள் எண்ணத்தில் எழும் உருவில், உங்கள் நெஞ்சின் ஓமகுண்டத்தில், அழிவற்ற இளமையில், ஜ்வலித்துக் கொண்டிருக்க விரும்புகிறேன்.”

எனக்குப் பிடரி சிலிர்த்தது

“என்ன குரூரமான ஆசை! எதிராளியின் வேதனை பற்றி நீ கொஞ்சமாவது நினைத்தாயோ?”

“வாழ்க்கையின் எந்த மகத்தான சம்பவத்தில் குரூரம் இல்லை? உயிர் பிறக்கையில் தாய்க்கு இரக்கம் பார்க்கிறதா, பார்க்க முடியுமா? அதேபோல் உயிர் பிரிகையிலும் உடலின் வேதனையை அனுசரிக்கிறதா? இப்போது நம்மில் நேர்ந்து கொண்டிருப்பது என்னென்று நினைக்கிறீர்கள்? நம் முதுகுகளைப் பிளந்துகொண்டு நாம் புதிதாய்ப் புறப்பட்டுக்கொண்டிருக்கிறோம். சாகாவரம் அடைவது பின் எப்படி?”

Line cut—

அவள் பேச்சின் வேகத்தில், அந்தக் குரலில் கக்கிய ஆவியில் டெலிபோன் புகையாததுதான் ஆச்சரியம்.

என் நெஞ்சில்

குபீர்.

ஜ்வாலையில் குங்கிலியம் கமழ்ந்தது.

தலையை இரு கைகளிலும் பிடித்துக்கொண்டு நான் உட்கார்ந்திருந்தது இன்னும் நினைவிருக்கிறது.

மணி 4-50, 4-55, 4-57, 4-58—

இன்றும் டெலிபோன் மௌனமாய்த் தானிருக்கிறது. இவளை இந்த நேரத்திற்கு எதிர்பார்க்கப் பழக்கி விட்டேன் என்பதை உணருகையில் எனக்குக் கடுங்கோபம் வந்தது. இன்று நான் தீர்த்துச் சொல்லிவிடப்போகிறேன், உன் கைப்பொம்மையாக இருக்க நான் விரும்பவில்லை என்று—

டெலிபோன் அலறிற்று.

எடுக்கலாமா வேண்டாமா? எடுக்கலாமா வேண்டாமா?

இவள் குரல் ஒலி என்னை எங்கே கொண்டுபோய் விடும்?

இவளிஷ்டப்படியே நான் ஆடினால் என்னைப் பைத்தியம் பிடிக்க அடித்து விடுவாளோ?

என் நெற்றியில் வேர்வை அரும்பிற்று. இன்று பல்லைக் கடித்துக்கொண்டிருந்தாலும் நாளைக்கு மோஹினிப் பிசாசு போல் தொடருவாள். இந்த வேளைக்குப் பதில், எதிர்பாராத வேளையில் பேசுவாள்.

நான் டெலிபோனை எடுக்கையில் முற்றிலும் என் வசத்தில் இல்லை.

Hello!''

''மிஸ்டர் சாவிக்ராம், நாளைக்கு எனக்குக் கல்யாணம். விடை பெற்றுக்கொள்கிறேன்.''

மீண்டும் அந்த மறக்க முடியாத வெற்றிச் சிரிப்பு.

டெலிபோனை அந்தப் பக்கம் வைத்தாயிற்று.

மூன்றுநாள் சோறு தொண்டையில் விக்கிற்று. பித்துப் பிடித்தாற்போல் வளைய வந்தேன்.

ஸுநாதனி.

* * *

மணி அடிக்கிறது.

நினைவு மீண்டுவிட்டாலும், ஸௌநாதனியின் அழைப்பு இல்லை என்று தெளிய நேரம் பிடிக்கிறது.

எங்கோ கடியாரத்தின் அலாரம்.

கண்ணைக் கசக்கிக்கொள்கிறேன். விழிகள் நனைந்திருக்கின்றன.

* *

நான் கண் விழித்ததும் இவ்வுலகத்தை சிருஷ்டிக்கிறேன்.

நான் தூக்கத்தில் அயர்கையில், என் சிருஷ்டியாகிய இவ்வுலகம் என் இமைகளின் குவிப்புள் ஒடுங்கி விடுகின்றது.

சாவில் இவ்வுலகத்தை அழித்து, என் சடலத்தையும் கழற்றிவிட்டு, பிரக்ஞையில் புகுந்து யோக நித்ரையில் ஆழ்ந்துவிடுவேன்.

என் கண்ணின் இமையுள், விழிப்பின் முதல் உணர்வாய்க் கவிந்த இருளின் முழுவே உனக்கு அஞ்சலி. உதயத்தின் முற்பொருள் நீ, உனக்கு அழிவில்லை.

# கறந்த பால்

ஸ்ரீமான் பாஸ்கரன், வழக்கப்படி, விடிவெள்ளி வேளையில் சிந்தாமணி படித்துறையில் ஸ்னானம் செய்து கொண்டிருக்கையில், தண்ணீரில் காலடியில் கெட்டியாகத் தட்டுப்பட்டு, அதை எடுத்துப் பார்த்தால்—விக்ரஹம். அன்று வெள்ளிக்கிழமை. பாஸ்கர் புல்லரித்துப் போனார்.

வீடு திரும்பியதும், ரேணு வழக்கம்போல் அப்போது தான் காப்பியடுப்பைப் பற்ற வைத்துக் கொண்டிருந்தாள். அவளின் குளியல் எல்லாம், காப்பிக்கடை ஆனபின் தான்.

பாஸ்கரிடம் ஒரு விசேஷம். தன்னை எடைக்கல்லாக வைத்துக்கொண்டு, மற்றவர்களும் தன் எடையையே, அவர்களுடைய செயலில் காட்ட வேண்டும் என்று எதிர் பார்ப்பதில்லை. கட்டாயப்படுத்துவதுமில்லை. என் அம்மா சின்ன வயதிலிருந்தே என்னை, ப்ராத ஸ்னானம், சந்தியாவந்தனம், ஸ்தோத்திரம், ஜபம் என்று வளர்த்து விட்டால் எல்லாரும் அப்படி இருக்க முடியுமா? பல் குத்திக் கொண்டே அடுப்பு பற்ற வைக்காமலிருந்தால் சரி, அஞ்சுக்கு இரண்டு பழுதில்லையானால் வண்டியை ஓட்டு! என்று வாய்விட்டே சொல்லமாட்டார்.

அம்மா, சரியாகப் பிள்ளை தலையெடுக்கற சமயத்தில், வந்த வழி போய்ச் சேர்ந்துவிட்டாள். பாஸ்கர் அவளுக்கு ஒரு மகவு. ஆகையால் அவள் மறைந்ததும் அவர் ஒண்டிக் கட்டையாகிவிட்டார்.

ரேணு புத்தியில் அல்லது தேவையான சமயங்களில், உடல் சுறுசுறுப்பில், எள்ளளவும் குறைந்தவளல்லள். சக்திகள் வரவழைத்தாற்போல், உள்ளிருந்து சமயத்துக்கு ஆஜர். ஆனால் அவசரம் என்ன தட்டுக்கெட்டுப் போறது? மணமாகி மூன்று வருடங்களாகின்றன. இன்னும் எதிரும் புதிருமாக இரண்டு பேர்தான்.

ரேணு மறுதாரம். அம்மா காலமான கையுடன், சுற்றியிருந்தவர்கள், இடம் பார்த்து, ஜாதகம் பார்த்து, பாஸ்கருக்கு மணம் செய்து வைத்தனர். மறு வருடமே, முதல் பிரசவத்திலேயே, அவர் மனைவி, தான் ஈன்ற மகவுடன், பூமிக்குத் தன் பாரத்தைக் குறைத்துக்கொண்டு விட்டாள்.

வீட்டில் ஃப்ரிட்ஜ், க்ரைண்டர், மிக்ஸி, gas இத்யாதி நவீன உபகரணங்களுடன் பாஸ்கர் தானே சமைத்து சாப்பிட்டு, உத்யோகத்துக்கும் போய்க்கொண்டு ஐந்து வருடங்கள் ஓடிவிட்டன. ஆனால் இப்படியே எத்தனை நாள் நடத்த முடியும்? என்றேனும் ஒரு நாள் அலுப்புத் தட்டாதா? நேற்றைய குழம்பை, ஃப்ரிஜ்ஜிலிருந்து எடுத்துச் சுடவைத்து சாப்பிட்டுக் கொண்டிருந்தால் என்றேனும் அது வாடை காட்டாதா? அதன்மூலம் தன் வாழ்க்கையிலேயே வாடை அடித்துக் கொண்டிருப்பது தெரியாமலா போய்விடும்? எல்லாமே நாமே அடுக்கி மூடி வைத்துக்கொள்கிற சமாச்சாரம்தானே!

அத்துடன் வயதும் ஆகிவிடவில்லையே!

இச்சமயம் அண்டையார் உதவியை அவர் நாடவில்லை. தினசரிப் பத்திரிகையில் 'மணமகள் தேவை' விளம்பரம் கொடுத்தார். கொடுத்ததுதான் கொடுத்தார்— இத்தனை பதில்களா வரும்? பாஸ்கருக்குச் சிரிப்பு வந்தது. அன்று மாலை, ஸ்னானம் செய்து, சந்தியாவந்தனம், காயத்திரி ஜபம் எல்லாம் முடித்துக்கொண்டு, குத்து

விளக்கை ஏற்றி, வந்த அத்தனை கவர்களையும் அடுக்கி அம்பாள் படத்துக்கெதிரே வைத்துத் தான் கண்ணை மூடிக்கொண்டு, அந்த அடுக்கிலிருந்து ஒரு கவரை எடுத்தார்.

விளைவு

ரேணு கொடுத்து வைத்தாள்.

அப்போது ரேணு ஹாஸ்டலில் இருந்துகொண்டு ஒரு சிறிய பள்ளியில் ஆசிரியையாக இருந்தாள். கொடுத்து வைத்தாள் என்பதில் சந்தேகமா? கணவன் தோற்றத்தில் குறைவா? உத்தியோகப் பதவியில் குறைவா? அவருடைய மேல் அதிகாரிகள் இரண்டு முறை அவரை வெளிநாடு போகக் கோரி, மறுத்து விட்டார். காரணம்? அவருடைய நேம, நிஷ்டை, அனுஷ்டானங்களுக்குத் தடை வரும் என்றுதான்.

போன இடம் எல்லாம் ஸ்னானத்திற்கு காவிரி கிடைக்காது. ஆனால் தினம், கோவில் தரிசனம் பண்ணாமல் அவரால் இருக்க முடியாது. ஹா, ஹூ என்று சாளிக்ராமம், கல்லுப் பிள்ளையார், ஆராதனை இதெல்லாம் வைத்துக் கொள்ளவில்லை.

அம்பாள் படத்துக்கு லலிதா சஹஸ்ரநாமம் சொல்லி, வெள்ளிக்கிழமைதோறும், பாயஸ நைவேத்யம் பண்ணி, அதைக் குழந்தைகளுக்குப் பங்கிட்டுக் கொடுப்பதில் இருக்கும் மகிழ்ச்சி, அனுபவித்தவருக்குத்தான் தெரியும். இதெல்லாம், அதனதன் ஐதீக வாசனையுடன் லண்டனிலோ, நியூயார்க்கிலோ கிடைக்குமா?

No, இந்த தங்கச் சங்கிலியை, அயல்நாட்டு வாசத்தில், சேதப்படுத்திக் கொள்ளவோ, கத்திரித்துக் கொள்ளவோ அவர் விரும்பவில்லை. இல்லை என்று அடித்தே சொல்லலாம். அவரால் முடியாது. சீலம் ரத்தத்தில் அப்படி ஊறிப் போயிருந்தது.

ஒவ்வொருத்தர் மாதிரி தினப்படியே பரபரப்பும், ஏதேனும் அசாதாரணம் நேர்ந்துகொண்டிராமல், பதற்ற மற்ற அவருடைய வாழ்க்கையில் இந்த விக்ரஹம் கிடைத்தது அவருக்கு ஒரு அபூர்வமான சம்பவம்தானே?

நன்கு விடிந்த காலை வெளிச்சத்தில் விக்ரஹத்தைச் சோதித்துப் பார்த்தார். சுமார் ஏழங்குல உயரத்தில், நல்ல கனம். பஞ்ச உலோகங்களும் சேர்ந்திருக்குமோ? அம்பாள் தவத்திலிருப்பதுபோல் ஒரு அசாதாரண பிரதிஷ்டை. வலது காலை ஊசி மேல் ஊன்றியபடி, முழு காஷாயத்தில், தியானத்தில் ஆழ்ந்து நிற்கிறாள். அப்பா! என்ன அழகு! என்ன பொலிவு!

இந்த வடிவம் வீட்டில் வைத்துக்கொள்ள உரியதா அல்லது கோவிலில் சேர்த்துவிடலாமா? என்று சந்தேகம் தோன்றிற்று. நாளைக்குத் தீர்மானம் பண்ணலாம் என்று நாளை, நாளையாகத் தள்ளிப்போய், கண்டெடுக்கப் பட்டவள் ராஜராஜேஸ்வரி படத்தடியில் தங்கிவிட்டாள்.

தினப்படிக்கு மஹாநைவேத்யம் நைவேதயாமி. சுக்ரவாரம் பாயஸம்.

காஷாயணி

காத்யாயினி

தபஸ்வினி

கன்யாகுமரி

தேவி வந்தே வந்தே

அவளுடைய ஆகர்ஷம் பிரமிக்கத்தக்கதாக இருந்தது. ஆபீசில் சிக்கலான ஃபைல் ஒன்றில் ஊன்றி இருக்கும் போது, பக்கங்களிடையே கரென்ஸி நோட்டில் water mark போல் அவள் வடிவம் தோன்றும். விஷயத்தின் கவனம் குலைந்து, சிந்தனை பூரா அவளிடம் நிலைத்து விடும். ஒரு தினுசான ஆனந்த நிலை. வியப்பு நிலை.

வெகு காலம் பூஜையில் இருந்து, நிறைய உச்சாடனங்கள் ஏறிய நிலையிலிருந்துதான் விக்ரஹம் வந்திருக்கிறது. அதில் சந்தேகமேயில்லை. இல்லையேல் எங்கிருந்து இத்தனை சக்தி? இதற்கு எதிரில் என்னுடைய ஆராதனை எம்மட்டு? ஃபைலில் மறுபடி கவனத்தைத் திருப்புவார்; என்ன ஆச்சரியம். அதன் சிக்கல் கலைந்து, தெளிவான முடிவு தோன்றும். அதைக் காட்டவேதான் வந்தாளா? அப்படித் தோன்றுகையிலேயே, ஒரு பரவசம், அடுத்து சன்னதி பயம்.

நள்ளிரவில் அழைப்பு விடுத்தாற்போன்ற உணர்வில் விழிப்பு வரும்.

பக்கத்தில் ரேணு முனகிப் புரள்வாள். சில சமயங்களில் தூக்கத்தில் வீறிடுவாள்.

அடுத்த நாள் 'ரேணு. என்ன துர் சொப்பனம் உனக்கு?' என்று விசாரித்தால், 'எனக்கு ஒன்றும் நினைப்பு இல்லையே' என்று விழிப்பாள். 'வீறிட்டுக் கத்தினேனா என்ன' என்று சிரித்து மழுப்புவாள்.

ரேணு சோம்பேறி. ஆனால் அழகி. அந்த ஜாலத்தில் தான் இவள்போன்ற பெண்கள் காலம் தள்ள வேண்டும். அதற்கு ரேணுவுக்கு இங்கு கஷ்டமில்லை. ஒரு மாமியார், இரண்டு நாத்தனார்மார்கள், நாலு ஓர்ப்படிகள் சேர்ந்த கூட்டுக்குடும்பத்தில் இவள் நிலை எப்படியிருக்குமோ? ஆனால் இதெல்லாம் உதவாத, ஒவ்வாத யோசனை. விட்டுத்தள்ளு.

குத்துவிளக்கை ஏற்றி பாஸ்கர் அமர்ந்துவிடுவார். எந்தக் கோயில் அல்லது மடத்தினின்று கழன்று வந்திருப்பாள்? காவிரியில் அகப்பட்டமையால் இவள் பூர்வோத்திரம், இந்த வட்டாரம்தான் என்று கொள்ள முடியுமா? இவள் பிரயாணம் இமயத்தில் ஆரம்பித்து, விந்தியம் தாண்டி ஏன் வந்திருக்க முடியாது? அதுவும் எத்தனை

நாள் பயணமோ? ஒரு நாளா, ஒரு வருடமா, எத்தனை ஆயுசுக்களோ? இவளை வடித்த சிற்பி எந்தக் காலம்? உண்மையில் இவள் வடித்தவளா? நித்யத்துவத்தின் அலைகள் ஒன்றில் சவாரி செய்துவந்து...

பாஸ்கர் மூர்ச்சையானார். பாஸ்கர் அப்படி ஒன்றும் கற்பனா சக்தி படைத்தவர் அல்லர். ஆகையால் இது போன்ற சிந்தனை, சிந்தனையினின்று தோற்றங்கள், தன்னிடமிருந்து எழுந்தன, எழக்கூடியவை என்பதை அவரால் தாங்கக்கூடியதாக இல்லை. முதலில் அவை அவருடையதா? இல்லை; அவள் வைக்கும் பொறி.

திடீரென்று பாஸ்கருக்கு உடல் பரபரத்தது. அடுத்த தருணம் ஏதோ அமானுஷ்யம், ஆச்சர்யம் நிகழப்போவது போன்ற உணர்வு. தியானத்தில் மூடியிருக்கும் அவள் கண்கள் திறக்கப்போகின்றனவா? உடல் நடுங்க குத்து விளக்கைத் தூக்கி விக்ரஹத்தின் முகத்துக்கெதிரே பிடித்தார். புன்னகையின் அரும்புதான் விரிந்திருந்தது.

பாஸ்கர் மாரைப் பிடித்துக் கொண்டார். அவள் கண் திறந்தால் நிச்சயம் என்னால் தாங்க முடியாது. விக்ரஹத்தைக் கையில் பிடித்துக்கொண்டு, பாஸ்கர் கங்கோத்ரியிலேயே ஸ்னானம் செய்தார். இங்கு இரு மலைச் சாரல்களிடையே குழந்தைபோல் தவழ்கிறாள். பின்னால்தான்—அல்லது முன்னாலா? சங்கரரின் சடைமுடிய இலக்கான உக்ரஹம். அடுத்து மானசரோவர் ஏரி. ஹரித்வாரில் கங்கையின் குளிரே முதல் தொடலில் நெருப்பாய்ச் சுட்டது. அடுத்து, யமுனையின் சுழித்த கொந்தளிப்பில் திணறினார். கங்கை எவ்வளவோ தேவலை. பிரம்மபுத்திராவின் அலைகள், அவரைச் சின்னாபின்னமாக்க முயன்றன. ஆனால் அவளிருக்கப் பயமேது? காவிரி, தாமிரவருணி, முதலைகள் பக்கம் போகாவிட்டால்,

குழந்தைகூட குளிக்கலாம். குற்றால நீர்வீழ்ச்சி, மேலே பாலருவி, தேனருவி, கடைசியாக கன்யாகுமரியில் முக்கூடல் கடல்.

உட்கார்ந்த இடத்திலேயே இத்தனை அனுபவமும். நினைப்பு மீண்டபோது கீழ்த்திசையில் விடிவு பொல பொல. கண்டது அத்தனையும் கனவா? தோன்றவில்லை. நனவா? சாத்யமில்லை. இடையில் என்ன அது? உடம்பில் துளி அசதியில்லை. உற்சாகமே தெரிந்தது.

பாஸ்கர் பூசை புனஸ்காரத்தில் மும்முரமாகி விட்டார்.

அவரால் அவளை ஆபீஸ் நேரத்துக்குக்கூட பிரிந்திருக்க முடியவில்லை இதுமாதிரியும் உண்டா? எனக்கு ஏன் இப்படி? என்று தன்னைத்தானே கேட்டுக்கொள்ளக் கூடத் தோன்றவில்லை. பூஜையில் கண்ணை மூடி அமர்ந்ததும் அவருடைய இதயக்கமலத்தில் வீற்றிருந்தபடி, பின்னணியில் எழும் உதயஜோதியில் அவள் ஜ்வலித்தாள். பாஸ்கர் தன் மனோபக்குவ நிலையில் ஒரு தடம் தாண்டி விட்டாரரா?

உடனே அவர் உச்சிக்குடுமி வைத்துக்கொண்டு, பஞ்சக்கச்சம் கட்டிக்கொள்ளத் தேடவில்லை. ஒருவேளை அப்படிச் செய்திருந்தால், அவருடைய உடல்வாகுக்கு மேனி சிவப்புக்கு நன்றாகவே இருந்திருக்கும்.

இங்கே பக்கத்தில் எங்கே நந்தவனம்? தேடி விசாரித்து, தானே மலர்களை குடலை பொங்க பறித்து, தொடுத்து, சார்த்தி, அழகு பார்த்து மகிழ்வார். அபிஷேகத் திரவியங்களைச் சேகரித்து, அன்பு பொங்கக் குளிப்பாட்டுவார். உயர்ந்த பட்டுத் துணியில், பக்தியுடன் ஒற்றி. துடைத்து, உடுத்தி, மலர் அணிவித்து, தூபதீபம் காட்டி, நேரம் போவதே தெரியவில்லை.

மகராஜி, அத்தனை ஆராதனைகளையும் ஏற்றுக் கொள்பவளாக இருந்தாள்!

அவர் உப்பு இல்லாமல் உபவாஸம் இருக்க முயல வில்லை. கிடக்கைக்கு மான்தோல் தேடவில்லை. அல்லது கட்டாந்தரையில் படுக்க ஆரம்பிக்கவில்லை. ஏன் என்றால் யாரேனும் கேட்டிருந்தால் எனக்கு அப்படி யெல்லாம் தோன்றவில்லையே! என்று உண்மையைத் தான் சொல்லியிருப்பார். அவருக்கு இதுபோல் ஆராதிப்பது பிடித்தது; ஆராதித்தார்.

தினம் முடியாவிட்டாலும், மாதம் ஒரு முறையேனும் அம்பாளுக்கு ஒரு சொம்பு நிறைய பாலாபிஷேகம் செய்து பார்க்க வேண்டும். இந்த ஆசையில் உள்ள நெஞ்சீரல் யாதெனில் சுத்தமான கறந்த பசும்பாலுக்கு எங்கே போவேன்? (குடம், பைப்பால் கிடைக்கலாம்.) இது கலப்பட யுகம். ஒரு செம்பு நிறைய நுரை வழிய ஒரே மாட்டுப் பசும்பால்...டவுனில் எங்கே போவேன்?

நாளடைவில் இந்த நெஞ்சீரல் விசிறிக்கொண்டு, வீசிக்கொண்டு, விபரீத ஆசைக்கனல் தகிக்கத் தலைப் பட்டது. நாமே ஒரு பசுமாடு வாங்கிவிட்டால் என்ன? பின் யோசனையில் டவுனில் வாடகை வீட்டில் மாடு வைத்துக்கொள்வது என்பது நடைமுறையில் சாத்யப் படுமெனத் தோன்றவில்லை.

ஆனால் அம்பாளுக்கு சுத்தமான பசும்பாலில் அபிஷேகம் செய்து விக்ரஹத்தின்மேல் பாலின் வெண்மை யின் வழிதலினின்று அவளுடைய சிரித்த முகம் வெளிப் படுவதைப் பார்க்க வேணுமே!

அந்த அழகைப் பார்ப்பதற்கு எந்தப் பாலையேனும் ஊற்றிப் பார்க்கலாமே என்று ஒரு சமாதானம் மனதில் எழுந்தபோதிலும் அதே மனம் ஏற்க மறுத்தது. இப்படி

யும் ஒரு சபலம், உறுத்தலாகக் கிளம்பி, அதுவே படிப்படியாக ஒரு வெறியாக மாறுவது தெரியாமலே மாறும் அந்த அவஸ்தையில் பாஸ்கர் மாட்டிக்கொண்டு விட்டார். அவஸ்தை நிலை, அவநிலையாக மாறிவிடுமோ போன்ற நிலை.

அவரைப் பார்த்து, தெரிந்தவர்கள் ஒருவருக்கொருவர் கண் சிமிட்டும் நிலை; பேர் எரிச்சலே படும் நிலை. குடிக்கக்கூடத் தண்ணி இல்லாமல் குடத்தைத் தூங்கிக்கொண்டு ஒவ்வொருத்தன் அலையறான் இந்த மனுஷன் சாமிமேல் கொட்டறானாம். பொம்மைமேல் கொட்டறத்துக்கு அவனும் குடத்தைத் தூக்கிக்கிட்டுப் பாலுக்கு அலையறானாம். எப்படியிருக்குது கதை!

"கூழுக்கு உப்பு இல்லை என்பாரும், பாலுக்குச் சர்க்கரை இல்லை என்பாரும்..."

பாட்டு எப்பவோ எழுதிப் போட்டாச்சு. இதுக்குத் தான்.

ரேணு? அவள் புருஷனை இப்படிப் புரளி செய்வது அவளுக்கு எப்படி இருந்தது? முதலில் இது என்ன அசட்டுக் கேள்வி. ஆனால் ரேணு விஷயத்தில் அந்தக் கேள்வி அசட்டுத்தனம்தானா? தோன்றக்கூடிய சந்தேகம் தான். கணவனுக்கேற்ற மனைவி. ஒருவர் வழியில் ஒருவர் குறுக்கிடுவதில்லை. இன்னிக்கு மஹா நைவேத்யத்துடன் வடை, பாயஸம் என்று ஒருமுறை சொல்லிவிட்டால் போதும். பூஜை மணி சத்தம் கேட்டவுடனேயே தாமாக வந்துவிடும். மனம் தெய்வ ஆராதனையில் முனைந்தவுடன் கடைகண்ணி, வீட்டு வேலை, நிர்வாகம் படிப்படியாக அவள் பங்குக்குச் சேர்ந்துவிட்டது.

அதனால் என்ன? இந்த நாளில்தான் பாதிக்குமேல் ஆண்பிள்ளை வேலைகளை பெண்கள் தானே கவனித்துக் கொள்கிறார்களே, தாங்களும் உத்யோகமும் பண்ணிக்

கொண்டு! அவள்பாட்டுக்குப் போவாள். வருவாள். எங்கு போனாய், ஏன் போனாய், எப்போ திரும்புவாய்—கேட்க மாட்டார். பாஸ்கர் சுபாவம் அப்படி. அவளும் தானாக, போன வந்த விவரங்களைச் சொல்லமாட்டாள். தேவை யில்லை. அனேகமாக இன்றைய எல்லாக் குடும்பங்களும் இப்படித்தானே நடக்கின்றன? அதில்கூடப் புதுமை ஏது?

ரேணு ரோசத்தைப்பற்றி அல்லவா கேள்வி! அநேக மாகக் கேள்விக்குப் பதில் 'ப்ளாங்கி' தான். அண்டை வீட்டு எதிர்வீட்டு சகவாசம் என்று ரேணு கொண்டாடு வதில்லை. அவளைத் தேடி வரும்படியாகவும் வைத்துக் கொள்வதில்லை. தனி ஜீவி? கிட்டத்தட்ட அப்படித்தான். மழுங்குணி மாங்கட்டை? அழுத்தக்காரி? ஆபத்தான கேள்வி. என்னைக் கேட்டால் நமக்கேன் பாடு என்று இருந்தாளா? இருக்கலாம். நமக்கேன் பாடு என்பதே நடைமுறைத் தத்துவமாக இந்நாளில் விளங்குகிறது.

ஒருநாள் வாடிக்கை பால்காரக் கிழவன் (எருமைப் பால்) வந்தான். ''சாமி, இன்னிக்கு சாயந்திரம் பசுமாடு வீட்டுக்குக் கொண்டுவந்து கறக்கறேன். ஒருவேளை தான். வாடிக்கைக்கார சேட் பம்பாய் போயிருக்கார். நாளை ப்ளேனில் திரும்பிவிடுவார். இஷ்டமா? ஒரு வேளை தான்.''

கிடைத்தவரை லாபம்.

'பரவாயில்லை. ஒண்ணரை லிட்டர் கறக்கும் ஜாதி மாடு. பால் தடிப்புத்தன்.'

வீட்டு வாசலில் ஒரு மூலையில் எருமை மாட்டைக் கிழவன் கறக்கிறான். அது தினப்படி வீட்டுச் செலவுக்கு. ரேணு பாத்திரத்துடன் அவன் எதிரே நிற்கிறாள்.

மறுகோடியில் பாஸ்கர் ஒரு எவர்சில்வர் தூக்குடன். (கொஞ்சம் பெரிய தூக்குதான்) கறவல் அத்தனையும் அப்படியே வாங்கிக்கொள்வதாகப் பேச்சு.

பால் நுரையோடு, குவளையில் உயர்ந்துகொண்டே வருவதைப் பார்க்கிறார். நுரை துளும்புகிறது. கொஞ்சம் குவளையினின்று தப்பி, காற்றில் அலைந்து பறக்கிறது. நன்றாய்ந்தானிருக்கும் போலிருக்கு.

—'சேட் நாளைக்கும் பம்பாயிலேயே தங்கிவிட்டால் எவ்வளவு நன்னாயிருக்கும்!'

—'சேட் பம்பாயிலேயே தங்கிவிடக்கூடாதா?'

பாஸ்கர் தனக்கு வந்த சிரிப்பை அடக்கிக்கொண் டார். எத்தனை வயதானால் என்ன? மனிதனைச் சுரண்டினால் அடியில் சிறுபிள்ளைத்தனம் தான்!

"ஆ! கறந்த பால் தேடற ஐயாவா? அது நீங்க தானா? வேறு யாரோன்னா பார்த்தேன்!"

பாஸ்கர் பதில் பேசவில்லை. அவருக்கு வழக்கம் கிடையாது. கிழவன் பிள்ளை fullஆ போட்டிருக்கிறான். பாஸ்கர் எப்பவுமே அனாவசியமாக வாயைக் கொடுக்க மாட்டார். அவருடன் சம்பாஷணை அநேகமாக ஒரு தலையாகத்தான் அமையும். அதற்குக்கூட ஒரு knack வேணுமில்லே?

"ஐயாகிட்டே ஒண்ணு சொல்லுணும்னு ரொம்ப நாளா எனக்குஎண்ணம். என் அப்பன் எதிரே இருக்கான். இருந்தாலும் சொல்றேன். நான் நல்லா போட்டிருக்கேன். எனக்குத் தெரியும். ஆனால் நான் போட்டிருக்கப்பத்தான் நான் சொல்ல நினைச்சதைச் சொல்ல முடியும். ஐயா, உலகத்திலே கறந்த பாலே கிடையாது. அடிச்சு சொல் றேன். கடவுளுக்கே அந்த எண்ணம் கிடையாது. அம்மா, நீ என்ன சொல்றே?"

ரேணு முகம் வெளுத்து, சிவந்து, நீலமாகி, மறுபடியும் வெளுத்து, இதென்ன டெக்னி கலர்—பாஸ்கருக்கு வியப்பு.

"ஐயா கறந்த பால்னா என்ன தெரியுமா? ஏமாந்தான் கொள்ளி."

அவளுடைய நெற்றி நரம்புகளில் பச்சைக்கொடி ஓடிற்று. விழிகளில் ஏன் அப்படி ஒரு திகில்?

''அம்மா, நாளைக்கு வெள்ளிக்கிழமை இல்லே?''

அவள் விழிகள் வெளியில் பிதுங்கிவிடும் போல் ஆகி விட்டன.

''அம்மா நாகம்மா என் உடன் பிறந்தா...''

புதிர் மேல் புதிர். ரேணுவுக்கு திடீர் களைப்பில் விழிகள் செருகின. சட்டென உள்ளே போய்விட்டாள். கிழவன் பாதி கறவலினின்று வெடுக்கென எழுந்து வந்து அணை கயிற்றினாலேயே பையனை வீறுவீறு என்று வீறினான்—''அடி செருப்பாலே; ஸுவர். உன்னை எவன் விளக்கம் கேட்டான்?''

பையன் வைதுகொண்டே எழுந்து ஓடினான். குவளை அப்படியே தரையில் உருண்டது.

''டேய் ராத்திரி நீ வீட்டுக்கு வரமாட்டே? அரிவாளோடு காத்திட்டிருக்கேன், வா.''

கிழவன் ஒல்லி. மூச்சு இரைத்தது. வயிறு முதுகோடு ஒட்டித் துருத்தி வாங்கிற்று.

பூமியில் பால் தேசப்படம் வரைந்து இன்னும் விரிந்து கொண்டே போயிற்று.

-'முழுத் தூய்மையான பண்டம் யாருக்குமே கிடையாது என்று ஆண்டவன் விதியோ?'-

''உன் முயற்சிகளை என்னிடம் கொண்டுவா. உன் முயற்சிகளில் நீ தோல்வியுற்றால் உன் தோல்வியை என்னிடம் கொண்டுவா.''

—இது கீதையினின்று ஒரு வாக்யம். ஆங்கில மொழி பெயர்ப்பினின்று பாஸ்கருடைய மனதில் சொந்தத் தமிழ் மொழிபெயர்ப்பு. கீதையுடன் அவருக்கு இன்னும் அதிக பழக்கமில்லை. ஆனால் இந்த அடி இப்போது தோன்று வானேன்.

கணவன் மனைவி இடையே பலப்பரீட்சை முறையில்லைதான். அவளும் அவருடைய அந்தக் கேள்விக்கு, ஒரே கேள்விக்குக் காத்திருந்தாள். இல்லை காத்திருந்தாளா?

அந்தக் கேள்வியைக் கேட்டிருந்தால், உடனே ஒரு நுனியைப் பிடித்து இழுத்தால் அத்தனை முடிச்சுகளும் அவிழ்வதுபோல் புதிர் பிரிந்திருக்கும். இல்லை பிரிந்திருக்குமா?

அவருடைய நடமாட்டத்தை, செயல்களை, அவள் விழிகள் தொடர்வதை, அவர் முதுகைத் துருவுவதை பாஸ்கர் உணர்ந்தார். என்னவோ நேர்ந்துகொண்டிருக்கிறது. ஆனால் பாஸ்கர் அந்தக் கேள்வியைக் கேட்க மாட்டார். தானாகக் கனியாததை தடியால் அடிக்கமாட்டேன்.

பாஸ்கர் மழுங்குணி மாங்கட்டையா? அல்ல அழுத்தக்காரரா? அல்ல. நமக்கேன்பாடு நடைமுறைத் தத்துவத்தின் கடைப்பிடிப்பா? இப்படி இருப்பது சரியில்லை என்று எனக்கே தெரிகிறது. ஆனால் ஏன் இப்படி இருக்கிறேன்? புரியவில்லையே!

சமையல்கட்டு வேலை முடிந்த பின்னர் ரேணு ஒரு தலையணையையும், ஜமக்காளத்தையும் எடுத்துக் கொண்டு பக்கத்தறைக்குச் சென்றுவிட்டாள். இது அவர்களிடையே புதுசு. இது ஒரு சவால்தான் அந்தக் கேள்வியைக் கேட்க. No, I won't. குறுக்கிடுவது வறட்டு கௌரவமா? எலியுடன் பூனை விளையாட்டா? ஈசுவரி நீதான் சஞ்சலத்தைத் தீர்க்கணும்.

நள்ளிரவில் எழுந்து பூஜையறைக்குச் சென்றார். குத்துவிளக்கில் சுடர் முத்தாட்டம் எரிந்துகொண்டு, அசைவற்று நின்று, அது எரிந்த ஒளியின் நிழலாட்டத்தில் அவள், அவளுடைய அற்புதமான மந்தஹாஸத்தைப் புரிந்துகொண்டு கண்களை மூடி தவத்தில் இருக்கிறாள்.

உள்ளே திரும்பிவிட்ட பார்வைக்கு அவளுக்கு என்ன தெரிகிறது? இல்லாவிட்டால் ஏன் இந்த அற்புதமான புன்னகை? மந்தஹாசினி.

அவள் கட்டை விரல் ஊசி முனையை அழுத்திக் கொண்டிருக்கிறது. பாஸ்கர் குனிந்து உற்று நோக்கினார். இன்றுதான் புதிதாகப் பார்ப்பதுபோல் தோன்றியது. இந்த விக்ரஹத்தைச் செதுக்கிய சிற்பியே ஒரு அவதார புருஷனாகத்தான் இருந்திருக்க வேண்டும். எவ்வளவு சன்னமான ஊசி! ஆனால் என்ன திடம்? தேவியை அவள் தவத்தில் அவளைத் தூங்கவிடாமல் ஸதா தவத்தில், தவமெனும் நெருப்பில் அவளைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. அப்போது ஊசி முனை அவள் தவ உலகத்தையே தாங்குமெனில், நம் கவலைகள் எவ்வளவு அற்பம்? அவளிடம் கொண்டுபோய் வைப்பதற்கே லாயக்கில்லை.

மறுநாள் ஆபீசிலிருந்து பாஸ்கர் திரும்புகையில் ரேணு வாசலில் காத்திருந்தாள். வாசற்கதவு பூட்டியிருந்த சாவியை அவரிடம் கொடுத்தாள். இதுவும் அவர்களிடையே புதுசு.

''வாங்கோ போகலாம்.''

எங்கே? ஏன்? கேட்கமாட்டார்.

இருவரும் நடந்தனர்.

யாரேனும் கவனித்திருக்கிறீர்களா? சில சமயங்களில் பார்வைக்கு ஒரு திடீர் பளிங்கு ஏற்படுகிறது. அல்லது அப்படித் தோன்றுகிறது. அதில் அதுவரை பலகால விஷயாதிகள் ஒரு புது பரிமாண அர்த்தத்தை, தோற்றத்தைக்கூட அடைகின்றன. ஆச்சர்யமாயில்லை? இதுவரை எப்படி இதற்கு நான் குருடாக இருந்தேன்?

இவள் முகத்தில் எப்படி இயற்கையே துடைத்து விட்டாற்போல் இந்த அதிசுத்தம்? அவள் கூந்தலைக் கொண்டையிட்டுக் கொண்டிருந்தாள். பொய்க்

கொண்டை போட்டிருந்தமாதிரி கூந்தலின் நிஜம். இப்படியே நடந்து கொண்டேயிருக்கலாமா?

அவர்கள்மேல் இறங்கிய ஏதோ ஒரு அமைதியின் சிற கனணப்பில் இருவரும் பேசவில்லை. ரேணு மெதுவாகத் தான் நடந்தாள், இரு சாரிகளையும் பார்த்துக்கொண்டு. சட்டை உரித்தாற்போன்று உடல்வாகில் அடக்கிய துடிப்பு. புலியின் சோம்பல் நடை. புதிதாகப் பார்ப்பது போலும்? அல்லது கடைசியாகப் பார்ப்பது போலுமா?

எவ்வளவு தூரம் நடந்திருப்போம்? அக்கறையில்லை. ரேணு திடீரென ஒரு வீட்டெதிரே நின்று கதவை மெது வாக விரல்கணுவால் தட்டினாள். கதவு திறந்தது.

ஒரு கப்பல் பாஸ்கரைப் பார்த்ததும், அந்த ஸ்திரீயின் முகம் மாறிற்று.

''நாகம்மா, இவர் தான் என் வீட்டுக்காரர்.''

''வாங்கய்யா, வாங்க. உள்ளே வாங்க—இந்தாங்க, இந்த விசுப் பலகையில் குந்துங்க.''

''நாகம்மா, டீ செய்து கொண்டு வா'' ஒரு கீச்சுக் குரல்.

இது யார்?

பாஸ்கர் உத்தரவு வரும் திசையில் திரும்பினார்.

விட்டத்திலிருந்து ஒரு கிளிக்கூண்டு ஊஞ்சலாடிற்று. அதன்மேல் துணி மூடியிருந்தது. பாஸ்கருக்கு சிரிப்பு வந்துவிட்டது. நாகம்மா சமையலறைக்குள் சென்றாள். இரண்டு வினாடிகளுக்கெல்லாம் சமையலறையிலிருந்து ஒரு மின்னல் சுடர் பாய்ந்து வந்து ரேணுவைக் கட்டிக் கொண்டது.

''இது லல்லி. இவருக்கு நமஸ்தே சொல்லு. எனக்கு நாகம்மாதான் பிரசவம் பார்த்தாள்.''

தோற்றுப்போயிருந்த மின்சாரம் அப்பொழுதான் மீண்டது. விசிறி சுழலத் தலைப்பட்டு, பாஸ்கர் நெற்றி வேர்வையை ஒற்றிற்று. உள்ளேயே கொஞ்சம் புழுக்கம் தான்.

''லல்லி என் தவறு—இல்லை, இல்லை.'' தவடையில் ஒரு கையால் மாற்றி மாற்றி தட்டிக்கொண்டாள். ''தவறு செய்தவள் நான். ஏமாந்துபோனவள் நான். சின்ன வயசில் பெத்தவா ரெண்டுபேரையும் இழந்துட்டு தனியாக வாழ நேரிடும். என் போன்றவர்கள் கதி, இப்படித்தான். என்னை ஏமாத்தினவரைக் குத்தம் சொல்லி என்ன பயன்? ஏமாந்தவள் நான். அன்னிக்கு கூடப் பார்த்தேன் அவனை. அவன் என்னைப் பார்க்கவில்லை. யாரோடேயோ போய்க் கொண்டிருந்தான் பெண்டாட்டியா? இன்னொரு ஏமாளியா? யார்கண்டது? ஒழுங்காய் வாழ்ந்தால் சரி. யாருக்குத்தான் ஆசை இல்லை? உங்கள் விளம்பரம் கண்டதும் வாழ்க்கையில் என் அந்தஸ்தை மீண்டும் பெற ஒரு சபலம். லல்லி பிரச்சனையை எந்தமாதிரி தீர்த்துக்கொவது என்று அப்போது தெரியாது. என்றேனும் ஒரு நாள்...அதுவரை நாகம்மா. அவ்வளவுதான், அந்த சமயத்துக்கு முக்யமாய் தெரிந்தது என் மீட்சி—அவ்வளவுதான்.''

ரேணு புன்னகை புரிந்தாள்.

நாகம்மா வெளியே வந்தாள். அவள் இரு கைகளிலும் ஏந்திய தட்டில் இரு கோப்பைகளில் இருந்து மணமான ஆவி பறந்தது.

பாஸ்கர் டீயை மெதுவாக அனுபவித்துப் பருகினார். ஜன்னலுக்கு வெளியே சர்வ நிசப்தம். சந்துதான், ஆனாலும் சர்வ சுத்தம்.

ரேணு டீ சாப்பிடவில்லை. அவள் கைகள் அவள் மடியில் அமைதியான சிறகுகளாய் ஒன்றன் மேல் ஒன்றாய் உறங்கிக் கொண்டிருந்தன.

அவள் காலடியில் லல்லி தானே தன்னுடன் ஏதோ பேசிக்கொண்டு ஏதோ விளையாடிக் கொண்டிருந்தாள்.

பாஸ்கர் எழுந்து நின்று—என்ன உயரம்!—குனிந்து லல்லியைத் தூக்கிக்கொண்டார். சாவியை ரேணுவிடம் மறுபடி ஒப்படைத்தார்.

''போவோமா?''

''Thanks நாகம்மா''—கூண்டுக்கிளி.

கூடத்தின் அந்தி இருளில், திடீரென பாஸ்கர் கன்னத்தில் உதடுகள் உராய்ந்தன. பாஸ்கர் மார்புள் பாறை ஏதோ உருகி உடைந்தாற் போன்ற பயங்கர இன்பம். கல்லலா? பனியா? நெய்யா? 'நீங்களா கறந்த பாலைத் தேடறேள்?'—அவள் விழிகள் ஸ்படிகத்தில் பளபளத்தன. கல் கண்ணீர் கசிந்தால் இவ்வளவு அழகா?

மறுநாள் மாலை பாஸ்கர், ஆபீசிலிருந்து திரும்பி, உடுப்புகளைக் கழற்றி, உடம்பைச் சுத்தி செய்து கொண்டு பூஜையறையில் நுழைந்தால்—

—விக்ரஹத்தைக் காணோம். ரேணு குத்துவிளக்கை ஏற்றிக்கொண்டிருந்தாள்.

''எனக்கு ரொம்ப நாளாகவே எண்ணம். இந்த மாதிரியான பிரதிஷ்டை, நமக்கு வழிபாடு வழி தெரியாமல் சம்சாரி வீட்டில் நீடித்திருப்பது சரியல்ல. அதனால் இன்று அவள் வந்த இடத்திலேயே கொண்டு போய் விட்டுவிட்டேன்.''

ஒரு கணம் ஒரு யுகம் கண்ணுக்குக் கண், கருவிழிக்குக் கருவிழி நேருக்குநேர் சலசல. பாஸ்கர் முதுகு திரும்பினார். அவருக்குத் தெரிகிறதோ இல்லையோ, முதுகுக்கு உசிதம் தெரியும்.

ஆமாம், அவள் சொல்லுவதும் வாஸ்தவம்தான். அடுத்து, கொடுத்து வைத்தவனுக்கு கண் திறந்துவிட அவள் போக வேண்டாமா?

அவர் கைவிரலுடன் இரண்டு பிஞ்சு விரல்கள் கோத்துக்கொண்டன.

''அப்பா...''

# தாய்

தாயின் மஹிமையை எத்தனைதான் பாடினாலும் பாஷை பற்றாது, வேதங்களே தவித்துக் கொண்டிருக்கின்றன. தெய்வம் உண்டா இல்லையா என்கிற சர்ச்சையும் சந்தேகங்களும் இன்னமும் பண்டித ரீதியில் ஆயிரம் வாத எதிர்வாதங்களுக்கிடையில் ஓய்ந்தபாடில்லை. ஆனால், தாயின் நிரந்தரம் பற்றி (உதவாக்கரை மகன் உள்பட) சந்தேகிப்பார் யாரும் இருக்க முடியாது.

தாயின் பெருமையை அறிந்துகொள்ள, பண்டிதமோ, பாண்டித்யமோ, பாடமோ வேண்டுமா? தும்பை அவிழ்த்துவிட்ட உடனேயே—துள்ளி ஓடிவந்து கன்று தன் தாயின் மடியில் முட்டும் மூர்க்கத்தில், உடனே தாய், கன்றை நக்கிக் கொடுக்கும் பரிவில், உடனேயே சுரந்து விட்ட பாலில், பேசாத பாஷைகள் எல்லாம் அலறி விடுகின்றனவே!

'அம்மே! அம்மே!! அம்மே!!!'

அம்மா எனும் சொல்லில் ப்ரணவாக்ஷரங்கள் அடங்கியிருக்கின்றன. ஸ்வரஸ்தானத்தில் மேல் 'மா' அம்மாவில் பேசுகிறது. விளம்பகால விஸ்தாரத்தில் 'ம்' எனும் மூச்சு ஒடுக்கத்தில் அவரோஹண விஸ்தரிப்பு பெரிது. 'அ' நேரே நாபி, மூலாதாரம் பூர்வ ஜன்மாக்களையும் பிணைக்கும் தொப்புள் கொடி நரம்பு அதிர்வு.

சொல்லிக்கொண்டே போகலாம். ஆனால் ஆறாம் அறிவு படையாத ஜீவராசிகள் உள்பட, உணர்ச்சியின் அடிவாரத்தினின்று, உயிர் தன் ஏக்கத்தை வெளிப்படுத்தும் வடிகாலாக அமைந்த ஓசையின் முதல் உரு 'அம்மா!'

லலிதா ஸஹஸ்ரநாமத்தில் முதல் நாமமே "ஸ்ரீ மாத்ரு நம!" அது மட்டுமல்ல. இன்னமும் ஓரிரு இடங்களில் ஆதிசங்கரர் இதே நாமத்தைத் திரும்பச் சொல்கிறார். அத்தனை பெரிய கலைஞன், கவி, அவருக்கு அந்த இடங்களில், அதைவிடச் சிறப்பான மாற்றுச் சொல் தோன்றவில்லை என்றே தோன்றுகிறது.

தாயின் அருமை பெருமையை வார்த்தை பூர்வமாகத் தரிசிக்க வேணுமானால் பட்டினத்தாரின் இரங்கலைப் படிக்க வேண்டும்!

**முன்னையிட்ட தீ முப்புரத்தில்**
**பின்னையிட்ட தீ தென்னிலங்கையில்**
**அன்னையிட்ட தீ அடிவயிற்றில்**

—இதைப் புலம்பலாக நினைக்காதீர்கள். அபசாரம் அபசாரம். அத்தனையும் அம்மாவுக்கு அர்ச்சனை. நெருப்புக்கு நாபி நெருப்பாலேயே ஆஹுதி.

சங்கரர் அம்பாளைக் கேட்கிறார்: "தாயே, ஸ்திரீயில் கெட்டவள் இருக்கலாம். ஆனால் தாயாரில் கெட்ட தாயார் என்று உண்டா?"

ஐயா, ஈதெல்லாம் வார்த்தை சாமர்த்தியமில்லை. அம்மாவைப் பற்றி நினைத்தாலே உணர்ச்சி மடை உடையும் நிலை

நம் தெய்வங்களைக் குடும்பஸ்தர்களாகவே ஆவாஹனம் செய்து, அந்த சமுதாய நெறிப்படிதான் வழிபடுகிறோம். சிவன், பார்வதி, பிள்ளையார்,

சுப்ரமண்யர், விஷ்ணு, லக்ஷ்மி, பிரம்மா, அப்பா, அம்மா, பிள்ளை, நாம் பழக்கப்பட்ட சமுதாய உறவுப்படிதான், ஆரம்பத்தில், நாம் தெய்வத்தையும் அணுக முடியும்.

சர்வேஸ்வரனே, இரு கைகளையும் ஏந்திக்கொண்டு நிற்க, தேவி அன்னபூரணி, உட்கார்ந்தபடி அகப்பையில் ஆண்டவனுக்குப் பிச்சையிடும் ஓவியத்தைப் பிராபல்ய மாகப் பார்த்திருப்பீர்கள். அம்மாவின் மாதாஸ்வரூபம் அழுத்தமாக இங்கு காண்பிக்கப்படுகிறது.

இங்கு ஒன்று சொல்கிறேன்; என் பெற்றோர்களில் நான் பாக்யம் செய்தவன். அவர்கள் எனக்கு ஒரு ஆத்மிக அனுபவம்.

இதோ பாருங்கள், பாரதி, நம் நாட்டின் பெருமை யைச் சொல்ல ஆரம்பிக்கும் விதத்தை!

**''எந்தையும் தாயும் மகிழ்ந்துகுலாவி யிருந்ததும் இந்நாடே**
**அவர்கள் முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து**
**முடிந்ததும் இந்நாடே**
**அவர் சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து சிறந்ததும்**
**இந்நாடே...**

ஆணும் பெண்ணுமாய் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் என்று சொல்லவில்லை. முதல் அடியிலேயே 'எந்தையும் தாயும்' என்று பெற்றோரை நெஞ்சில் பதித்து விட்டான். முந்தையர் ஆயிரம் ஆண்டாய் வழிவழி வந்தது இந்த தாய், தகப்பன், குழந்தை எனும் த்ரிமூர்த்தம் தான். மீண்டும் மீண்டும் எந்தையும் தாயும் நானும்தான் தோன்றி, மறைந்து, தோன்றிக் கொண்டிருக்கிறோம். குடும்பம் எனும் ஸ்தாபனம் வேறெதுவாய் இருக்க முடியும்?

அவர்கள் சிந்தையில் ஆயிரம் எண்ணமாய் வளர்ந்து, அவர்களை மகிழ்வித்து, அவர்கள் மனதை அடைத்துக் கொண்டு எது இருக்க முடியும்?

மகன்தான்.

சமுதாயத்தில் கூட்டுக் குடும்பம், ஏன், குடும்பம் என்கிற ஸ்தாபனம் உடைந்து போயாயிற்று. புருஷன், மனைவிக்கு அவரவர் தனித்தனி ஜோலியில், சுயநலத்தில், பணம் சேமிக்கும், அல்ல சம்பாதிக்கும் தீவிரத்தில், பிறந்துவிட்ட குழந்தைமேல் பாசம் பொழியவோ, அடிப்படையான கவனத்தைத் தரவோ அவர்களுக்கு நேரமில்லை, நாளடைவில் எண்ணமுமில்லை.

பாரதி சொல்லிய நாட்டுப் பற்று தொட்டிலில்கூட இல்லை. தாயின் மார்ச்சுரப்பில்தான்!

ஆகவே, அம்மா எனும் மந்திரச் சொல்லில் அந்த ப்ரத்யக்ஷ தெய்வத்தின் அஞ்சலியில் நாளைத் தொடங்குவோமாக!

அம்மா!

—வானொலிப் பேச்சு—"சான்றோர் சிந்தனை"

# அன்புள்ள ஸ்நேகிதிக்கு...

அமலி, ஐ லவ்யு. உனக்குத் தெரியாது. ஐ ஹேவ் ஆல்வேஸ் லவ்டு யு.

ஸூனோ இதை என் தோளில் பின்னாலிருந்து படிக்கிறதென்றால் படிக்கட்டும். ஐ டோன்ட் கேர். அவளும் ரகளை மாதிரி ஜூல் காட்டுவாளே ஒழிய, ஷி ஆல்ஸோ டஸின்ட் கேர். எனக்குத் தெரியும் வி டோன்ட் கேர். ஏதோ சின்டாக்ஸ் படிப்பதுபோல் தமாஷா இல்லை?

அன்புள்ள ஸ்நேகிதிக்கு, நீ எனக்கு வெறும் ஸ்நேகிதி தானா? ஆனால் வேறு எப்படி ஆரம்பிப்பது? 'மை டியர் லவ்' என்றே தொடங்கலாம். ஆனால் நம்மிடையில் சாரங்களை முழுக்கத் தட்டியாகவில்லை. தவிர இந்தத் தலைப்பில் கதிரில் ஒரு கதை படித்தேன். ஆகவே ஆரம்பம் சம்பிரதாயமாகவே இருக்கட்டும்.

அன்று ஆஸ்பத்திரியில் கண் ஆப்பரேஷன் ஆகியிருந்த என் சிநேகிதனைப் பார்க்கச் சென்ற இடத்தில் நர்ஸ் யூனிபாரத்தில் உன்னைக் கண்டபோது அதிர்ச்சி அடைந்தேன் என்று சொல்லவும் வேண்டுமா? உன் கருவிழியுள் சிறுவிழி சட்டென கண்ட சுருக்கத்தில், உன் கன்னங்களில் ஏறிய முலாமில் நீயும் என்னை அடையாளம் கண்டு கொண்டாய் என்று கண்டேன். ஆனால் அதை நீ வெளியே காட்டிக்கொள்ள விருப்பப்படவில்லை.

'ஆ! ஸிஸ், ஹியர் ஈஸ் தி என்வலப் ஃபார் யு.' என் சிநேகிதன் கப்போர்ட்மேல் கண்ணாடி தம்ளர் அடியில் சுட்டிக் காட்டினான்.

'ஓ. தேங்க் யு'. அதை எடுத்து உன் யூனிஃபாரம் பையில் திணித்துக்கொண்டு, விர்ரென்று போய்விட்டாய்.

'ஏய், இவள் க்ளீனா டிப்ஸ் கேக்கறாடா! கொடுத்தால் நானாக அல்லவா கொடுக்க வேண்டும்?''

'ஹவ் ஸோ?'

''நாளைக்கு மத்தியானம் 11 மணிக்கு உங்களை டிஸ்சார்ஜ் செய்துடுவாங்க. ஆனால் நைட் டியூட்டி முடிஞ்சு காலை 8 மணிக்கே நான் போயிடுவேன். 'தேங்க்யு.' அப்படின்ன வரிகளுக்கிடையே நான் படித்துக் கொள்ள வேண்டிய அர்த்தம் என்ன நீயே சொல்லு!''

முட்டையை உடைப்பதுபோல் என் கையிலிருந்த டார்ச்-ஆல் அவன் மண்டையில் ரெண்டு மொத்தலாம் போல் ஆத்திரம் வந்தது. நீ வாழ்ந்த வாழ்வு என்ன? நீ வாயில் தங்க ஸ்பூனுடன் பிறந்தவள் என்பதை அந்த சோமாரி கண்டானா? ஆனால் கேட்க எனக்கு உரிமை என்ன இருக்கிறது? அவன் கொடுக்கிறான். பேசுகிறான். நீ வாங்கிக் கொள்கிறாய், குறுக்கே நான் யார்? குமுறுவதோடு சரி.

அமலி, மூத்திர பாட்டிலும், பெட்பேனும் தூக்கும் கதி உனக்கு ஏன்? சமூகசேவை செய்கிறாயா? ராட்! காதில் பூ வைத்தாதே. சமூக சேவை செய்பவளுக்கு டிப்ஸ் ஏன்? எல்லாம் வயிற்றுப் பிழைப்புக்கு என்பதுதான் உண்மை. ஆனால் ஏன்? ஏன்?

குந்தித் தின்னால் குன்றும் குந்துமணி ஆகும் என்கிற பழமொழியா?

தாயோடு அறுசுவைபோம்
தந்தையோடு கல்விபோம்
மக்களோடு செல்வம்போம்

எனக்கு வயசாயிடுத்தோன்னோ? கொஞ்சம் பழமொழியில் பேசுவேன். உன் விஷயத்தில் மக்களுக்கு வழியில்லை. அன்லெஸ்—அன்லெஸ்...நோ. மனம் ஒரு சாக்கடை. எது எப்படி இருந்தாலும், அதைக் கேட்கவும் எனக்கு என்ன உரிமை? நல்லதையே நான் காண வேண்டும். பிகாஸ் ஐ லவ்யு, உன் விஷயத்தில் தந்தையோடு செல்வம் போம் என்று கொள்கிறேன்.

நாலைந்து வருடங்களுக்கு முன்.

உன் தகப்பனார் காலமான செய்தி பேப்பரில் வந்தது. மெப்புக்கு உனக்காக இத்தனை நாள் வளைய வந்திருக்கிறார். ஆனால் அவர் மரணத்துக்குக் காரணம் நமக்கல்லவா தெரியும்! இதயவிரிசல்—

அம்மா முன்னாலேயே போனாளோ பிழைத்தாள் என்று நீயே பேச்சுவாக்கில் என்னிடம் சொல்லியிருக்கிறாய். அஸைவம் கேஸ். பாவம் ஒரே பெண். யாருக்குத்தான் தாங்கச் சக்தியிருக்கும்? என்னென்ன ஆசையெல்லாம் வைத்திருப்பாள்?

இருந்திருந்து ஒரே மகவு அதுவும் பெண். அதை மீனாக்ஷி கல்யாணம் பண்ணி—பட்டணமே திரண்டது. பெண்ணையும் பிள்ளையையும் அமெரிக்காவிற்கு அனுப்பி வைத்த அடுத்த மாசமே பெண் பாக் அண்ட் பாகேஜ். பீரோ கட்டில், பர்னிச்சர் உள்பட திரும்பிவிட்டால் எல்லோருக்குமே தாங்கற சக்தி இருக்குமா? காதோடு காது வைத்த மாதிரி திரும்பினாலும் 'புசுக்'கை எத்தனை நாள் அமுக்கி வைக்க முடியும்? அங்கு என்ன நடந்தது? தாய், தகப்பன் தவிர மற்றவரெல்லாம் அவருக்குத் தோன்றியபடி வரிகளிடையே படித்துக்கொள்ள

வேண்டியதுதான். இஷ்டப்படிதான் படித்துக்கொண்டார்கள். படித்துக்கொண்டோம். முதலில் தாய்க்கும் தகப்பனுக்குமே எந்த அளவுக்குத் தெரியப்படுத்தினாயோ? உனக்கு இங்கேயே கொஞ்சம் இஷ்டராஜாங்கி என்றுதான் பெயர். ஒரு மகவு—அதுவும் பெண், செல்லப் பெண் அல்லவா? உன் அப்பா பெரிய டாக்டர். லயன்ஸ் கிளப் ரோட்ரி சேர்மன். எல்லாவிதங்களிலும் பிரமுகர். ஆனால் அவர் கதியே பிஸிஷியன் ஹீல்தைஸெல்ஃப் என்று ஆகிவிட்டதே!

உண்மை எப்பவுமே காயுள் விதை, மனிதனுள் விந்து போல் ஒளிந்துகொண்டுதான் இருக்கும். அதன் முழுத்தன்மை கண்டுபிடிக்கவே முடியாது. கண்டுபிடிப்பதற்கும் இல்லை அது.

ஃபர்னிச்சரை விற்பதாக பேப்பரில் விளம்பரம் கண்டு நான் உங்கள் வீட்டுக்கு வந்த சமயத்தில்தான் நேருக்கு நேர் முகம் பார்த்துக்கொண்டோம். அதை நான் மறக்கவேமாட்டேன். இதோ பார் அமலி. நம்மிடையே நடந்த எதையுமே நான் மறக்கவில்லை. என் நினைப்பெல்லாம் ஒன்வே டிராபிக்தான். ஆனால் புதையல்போல அவைகளை நான் பூதம் காக்கிறேன். இது வெறும் கடிதம் அல்ல. இத்தனை வருடங்களில் என் நினைப்பின் முனைப்பு. நுனியில் பட்டாசுத் திரி பற்றிக்கொண்டு விட்டது. எப்போ 'டுமீல்" எனக்கே பயம். நான் காலிங்பெல்லை அழுத்தி கதவு திறந்ததும் நான் பார்த்த முகம் அரைத்தூக்கம் கலைந்த முகமா? அழுத முகமா? அறியேன். நெற்றிப் பொட்டில் மயிர்பிரி பெரியதாக ஒன்று கலைந்து உள்ளே மின்விசிறிக் காற்றில் அலைந்தது. 'யெஸ்?'

''மிஸஸ்—?''

'நான் மிஸ்ஸுக்குத் திரும்பியாச்சு.'

''மிஸ் அமிர்தவல்லி.''

''அமிர்தவல்லியின் மறுகல் அமலி. அமளி என்றிருந்தால் இன்னும் பொருத்தமாயிருக்கும்.''

''.........''

''நெவர் மைண்ட்.''

''மிஸ் அமிர்தவல்லி.''

''கால் மி அமலி.''

''மிஸ் அமலி! உங்களிடம் கட்டில் விற்பனைக்கு இருப்பதாக அறிகிறேன். அதை நான் பார்க்கலாமா?''

''ஓ. பார்க்கலாமே!''

''விலை?'' என்று இழுத்தேன்.

''ஓ டோனட் பாதர். ஏதேனும் குடுத்தால் போச்சு. விலை நாம்—கேவாஸ். ஒரு பாட்டுக்கு உங்களுக்கு அது கிடைக்கும். உங்களுக்குப் பாட வராவிட்டால் ஒரு கழுதையின் கத்தலுக்கே அது கிடைக்கும்.

இவள் என்ன பேசுகிறாள்?

''ஆனால் கட்டில் சாத்திருக்கலாம்.''

''காத்திருப்பதா? எனக்கு இன்னும் ஒரு வாரத்தில் கல்யாணம்.'' என் கன்னங்களில் வெட்க ரத்தம் குறுகுறுத்தது.

''ஓ! கங்கிராட்ஸ். காத்திருக்கலாமென்றால் காப்பி குடிக்கும் நேரம் வரையில்.''

நம் இருவரின் சிரிப்பு ஒன்றோடொன்று கலந்தது.

''நீங்கள் பெல்லை அழுத்துகையில் நான் காப்பி தயார் பண்ணிக்கொண்டிருந்தேன். 'உள்ளே வாருங்கள்' சொல்லிக்கொண்டே நீ மேலாக்கை சரிப்படுத்திக் கொண்டாய். தற்செயலா அல்லது அதில் நான் சைகை

படிக்கவா? அதற்கெல்லாம் அப்போது நான் குருடு. ஏனெனில் நெஞ்சு வர்ணம் பூரா ஸுனோ—ஸனிதா ஃபார்யு—வியாபித்திருந்தாள்.

சோபாவில் நான் உட்கார்ந்தேன்.

கிச்சனிலிருந்து நீ வெளிவருகையில் உன் இரு கைகளி லும் நீ ஏந்திய இரண்டு பீங்கான் கோப்பையை சாசர் களில் கம்மென்று ஆவி பறந்தது. என் கோப்பையை நான் எடுத்துக் கொள்கையில், சூடோ, இசைகேடோ கோப்பை தவறி தரையில் கீழே விழுந்து உடைந்த சுக்கல்களை பீத்துக்கொள்ளி மாதிரி நான் பொறுக்க முயன்றபோது எப்படியோ என் கட்டைவிரல் ரேகையில் சிவப்பு புஷ்பித்து இதழ்கள் விரிந்தன. சட்டென உன் கைக் குட்டையைக் கிழித்து தரையில் மண்டியிட்டு நீ கட்டை விரலில்மேல் துணியைச் சுற்றிக் கொண்டிருந்தபோது—

அமலி காதல் பிறக்க நேரம், இடம், காரணம் என்றே கிடையாதா? என் பார்வைக்கு நேராக உன் முகம்கூட இல்லை. அது காயத்தின்மீது குனிந்திருந்தது. விர்ரென்று நடுவகிடு தன் பாதையை வகுத்துக்கொண்டு உச்சி மண்டையின் அடரில் மறைந்த அழகில் நான் என்னை, இழந்தேன். நீ என்ன தைலம் உபயோகிக்கிறாய் அமலி? காமினி ஹேர் ஆயிலா? அதன் மயக்கா? இல்லை இல்லை. உன் இளமையின் மணம். இல்லை அதுகூட இல்லை. உன் மணமே! அமலி முதலில் காதல் என்பதே என்ன? இந்த வார்த்தை இதிகாச காலத்தினின்று இன்று வரை காவியங் களிலும் கதைகளிலும், கவிதைகளிலும், வசனத்திலும், வாய் வார்த்தையிலும் வாங்கியிருக்கும் அடியும் பட்டி ருக்கும் எச்சிலும் கொஞ்ச நஞ்சமல்ல. ஆயினும் அதற்கு இன்னும் ஏன் விவஸ்தை இல்லை?

''மிஸ்டர் இந்தக் கட்டிலை நான் உங்களுக்கு விற்கப் போவதில்லை.''

''ஏன்?''

'எனக்கு இஷ்டமில்லை.''

''ஏனாம்?''

''சகுனம் சரியில்லை.''

''இதற்கெல்லாம் சகுனம் பார்க்கவேண்டியவன் நான் அல்லவா?''

''மிஸ்டர்—இன்றுகூட எனக்கு உங்கள் பெயர் தெரியாது அல்லவா? நாலு காசு மலிவுக்கு ஆசைப்படாதீர்கள். சனியன் பிடித்த கட்டில் நான் ஏதேனும் ஆஸ்பத்ரிக்கு—''

''ஓ... ப்ளீஸ்...ப்ளீஸ்...''

''நோ உங்களுக்குக் கட்டில் கிடையாது.''

''ஓ... ப்ளீஸ்...''

''என் நேரத்தை வீணாக்காதீர்கள். குட்பை.''

வாசற்கதவை சாற்றக்கூட கவலைப்படாமல் விர்ரென்று மாடியேறிப் போய்விட்டாய்.

டீப்பாயில் இன்னொரு காபி ஏடு புடைக்க ஆரம்பித்துவிட்டது.

காதல் என்பது சாம்பலா? அல்லது அதனுள் மறைந்துகொண்டிருக்கும் தணலா?

அறியாமல் சாம்பலை அள்ளிவிட்டு உள்ளங்கையில் சுறீல்!

அல்லது இரண்டுமேயா?

அல்லது பூமிக்குள் புதைத்து வைத்த ஸ்புடமா?

என் உள்ளேயே நீ புகுந்துவிட்டாய் என்று எனக்கு அப்போது நிச்சயமாய்த் தெரியாது.

தகி தகி தகி—

*  *  *

அடுத்தபடியாக நாம் சந்தித்தபோது ஏழெட்டு மாதங்கள், ஏன், ஒரு வருடமே ஆகியிருக்குமோ?

தாஸப்பிரகாஷ் ஐஸ்கிரீம் பார் உள்ளே நுழைந்த நான், ஒரு மேஜையில் உட்கார்ந்துகொண்டேன். ஐஸ்ட் காஃபி என்கிறார்களே எப்படி இருக்கும்? அசடு வழியுமா? மரியாதையாக ஹாட் காஃபியே சாப்பிட்டு விடலாமா?

'ஓ கட்டில் வாங்கும் சிநேகிதரா?' என் யோசனை வெடுக்கென்று கலைந்து தலை நிமிர்ந்தால் நீ! என் அழைப்பிற்குக் காத்திராமலே எதிரேயும் உட்கார்ந்து விட்டாய். உனக்கு முகத்தில் தனிச் சிவப்பு. 'கட்டில் வாங்கியாச்சா?'

'ஏன் உலகத்திலேயே உன் ஒரு கட்டில்தானா?',

'கொய்ட் ரைட், எத்தனை எத்தனையோ கட்டில்கள். ட்ரபிளும் அதுதான்.''

''இல்லை கீழே பாயில் படுத்தால் ஆகாதா?''

''உண்மை, உண்மை. இதைக் கட்டில் வாங்குமுன்பே தெரிந்துகொண்டால் நீங்கள் அதிர்ஷ்டசாலி. வாங்கிய பின் உணர நேர்ந்தால் பரிதாபத்திற்குரியவர்.''

''டாம் யு!''

உனக்கு எப்படித் தெரிந்தது? எனக்கு தொண்டையடியில் கசந்தது. ஏனெனில் அப்பொழுதுதான் எனக்கும் ஸுனோவுக்கும் இடையில் வேஷங்கள் ஒவ்வொன்றாய் படிப்படியாய்க் கலைந்துகொண்டிருந்தன.

எங்களுக்கு எத்தனை எத்தனை முகங்கள்! முகத்தினடியில் அதனடியில் இன்னொரு முகம்.

''என்ன சாப்பிடுகிறீர்கள்?''

"நீ வாங்கிக் கொடுத்து நான் சர்ப்பிடும் நிலை இன்னும் விரவில்லை. நீ என்ன சாப்பிடுகிறாய்?"

நான் எப்பொழுது நீக்கு நழுவினேன், நீ கண்டு கொண்டதாகவே தெரியவில்லை.

'அபபடியானால் வி வில் ஹேவ்...' நீ ஒரு பேர் சொன்னாய். சர்வர் உனக்குத் தனிப்புன்னகை காட்டி ஸ்பெஷல் சலாம் போட்டு பரபரப்புடன் சென்றான்.

உன் குறுக்குசுறும்பில், லேசாக உன் முகம் என் பக்கம் சாய்ந்த குனிவில் குப்!

ஓ! விஷயம் இந்த அளவிற்கு முற்றிவிட்டதா? ஆந்திராவில் ஸ்த்ரீகள் சுருட்டுப் பிடிக்கக் கண்டிருக் கிறேன். இங்கேயே சில நாகரீக மணிகள் சிகரெட்! ஆனால் அமலி நீ...நீ...

நீ வெறுமன சாப்பிடவா வந்தாய். எனக்கு ஏதோ எதிர் சவால் விடுகிறாய். நானும் மாட்டிக்கொண்டு விட்டேன். என் பர்ஸில் அன்றைய பில் பொசுங்கின. பொசுங்கலிலிருந்து தேற ஒரு மாதம் பிடித்தது.

"மிஸ்டர், கட்டில் துரோகம் என்று ஒன்று இருக் கிறது. முதலில் பிறவி எடுக்கிறோமே அம்மா வயிற்றி லிருந்து விழும் குழந்தை அது உயிருக்கு உலகம் இழைக்கும் துரோகம். அதிலிருந்து தேறிக்கொண்டே வந்தால் அடுத்து கட்டில் துரோகம். ஒவ்வொன்றாய் தெளியத் தெளிய ஞானம் என்கிறோம். ஆனால் ஞானம் ஐந்து பைசாவுக்குக்கூட பிரயோசனமில்லை."

நீதான் பேசினாயா? உனக்கு இவ்வளவு புத்திசாலித் தனம் உண்டா?

உன்னில் புகுந்துகொண்டிருக்கும் ஏதோ ஒன்றா? நீ போய் பார்த்து வந்த அமெரிக்காவா? அல்லது தீர்த்தமா? சங்கு தீர்த்தம், சர்வ தீர்த்தம், பாட்டில் தீர்த்தம்—

இதுபோல இன்னும் எதையுமே விட்டுக்கொடுக்காமல் சின்னதும் பெரிதும் சம்பந்தமும் அற்றதுமாய் தத்து வங்கள், அழகுகள், பேத்தல்கள்—

ஒன்று சந்தேகமில்லை. நீ அசடு இல்லை. நாம் பாரில் இருந்து வெளிவந்த பொழுது இரவே வந்துவிட்டது முற்றிய இரவு.

பூந்தமல்லி ரோடில் கார்கள் பறந்தன.

வெளிச்சங்கள் பிறந்தன. சிரித்தன.

உன் வீடு அங்கே பக்கம்தான். வீட்டுக் கதவுப் பூட்டை சாவி போட்டுத் திறந்தாய். ஏன் வீட்டில் ஒருவரு மில்லையா? நீ ஒண்டிதானா ராஜாங்கி! உள்ளே ஏற் கனவே விளக்கு எரிந்துகொண்டிருந்தது. நீ என் பக்கம் திரும்பினாய். உன் விழிகள் கருந் திராட்சைகளாய்ப் பளபளத்தன. என் தோள்மேல் கை வைத்தாய்.

தோள் குமிழியை உன் விரல்கள் பிசைந்தன.

''மாடிக்குப் போவோமா?'' உன் குரல் மூச்சாய் அடங்கிய செவியில் மோதிற்று.

''கட்டிலைப் பார்க்கிறீர்களா?''

''நான்...நான்...''

மூச்சுத் திணறிற்று. ''நான் இதுவரை ஸுனோவிற்கு துரோகம் செய்ததில்லை'' சிரித்தாய். ''ஆஹா! ஸோ நோ guts, உங்கள் ஸுனோவை நீங்களே வைத்துக்கொள்ளுங் கள்.'' என் மார்மேல் கை வைத்து என்னை வெளியே தள்ளினாய். கதவு படீரென்று என்மேல் மூடிற்று.

* * *

**கா**தல் என்பது புற்றுநோயா புற்று மண்ணா? உள்ளே பாம்பு பழமை ஆக ஆக குழல் விட்டுக்கொண்டு

படரும் உயரும் புற்று, அல்லது பாம்பு. அதை விட்டுப் போன பின்னர் அதன் மேலிட்ட மஞ்சளிலும் குங்குமத்திலும் ஆளை மிரட்டிக்கொண்டிருக்கும் ஐதீகமா?

ஸூனோவிற்கும் எனக்கும் இடையே எங்கள் உண்மை ஒவ்வொரு தோலாய் உரிய உரிய உன் இடம் என்னிடம் வலுவாகிக்கொண்டே வந்துவிட்டது.

ஒரொரு சமயத்தில் நீ வீணை வாசிப்பதுபோலவும், ஒரு ரோஜாப் பூவினை முகர்ந்துகொண்டு என்னைப் பார்த்துச் சிரிப்பது போலவும் இதுபோல ஏதேதோ பாவனைகள் மனம் அதன் பேதமையில் ஜோடனை செய்து பார்த்து மகிழ்ந்து அல்லது வேதனையுறும் அலங்காரங்கள். ஆனால் உன்னை நான் பார்க்கும் ஃபேவரட் போஸ் இதுதான். எதுகுல காம்போதியில் முசிறி ரிக்கார்ட்.

கடைசியாக அதில் ஒரு அடி வருகிறது,

ராஜாராஜ ராகவ பிரபோ
தியாகராஜ அர்ச்சிதப் பிரபோ

இரு கைகளையும் சிரம்மேல் குவித்து உன்னை மறந்து ஒரு காலில் நிற்கிறாய்.

அம்பாள் தபஸ் இருக்கிறாள்.

ஹே. இதய கமலவாசா! கவுரவர் சபையில் துச்சாதனன் துகிலுரிய கண்ணை மூடிவிட்ட த்ரௌபதி!

சமுதாயத்தைச் சீறும் அபினகாளி!

அமலி ஸரிமபநிஸா.

* * *

மறுபடி எப்போ அமலி? ஆ, இரண்டு மாதங்களுக்குப் பிறகு வுட்லாண்ட்ஸ் கார்டன் ரெஸ்டாரண்ட்.

நான் வெளியே வந்துகொண்டிருந்தேன். நீ உள்ளே நுழைந்துகொண்டிருந்தாய். இரண்டு வாலிபர்களிடையே அவர்கள் தோள்மேல் தொங்கிக்கொண்டு என்னவோ பேசிச் சிரித்துக்கொண்டு. நீ என்னைப் பார்க்கவில்லை. எனக்கு உன்மேல் நெஞ்சு குமுறவில்லை. துக்கம் தொண்டையை அடைத்தது. என்னென்ன விதமாய் அமெரிக்காவைப் பழி வாங்க முயன்றுகொண்டிருக்கிறாய் அமலி?

காதல் பாலூட்டி வளர்த்த பாம்பு. சமீபத்தில் 'காதல் எனும் துரோக நதி' என்று ஒரு சிறுகதையைப் படித்தேன். ரெட்ஸீ, ப்ளாக்ஸீ, டெட்ஸீ, நச்சுப்பொய்கை, தி கோல்டன் ரிவர் என்கிறார்போல் துரோக நதி. அசரீரி வாக்குப் போன்ற தலைப்பு. அப்படியும் இருக்குமோ அமலி?

நாளைக்கு, நாளைக்கு—'நாளை போகாமல் இருப் பேனோ—நான் அந்தத் தில்லை நடராஜனைக் காணாமல் இருப்பேனோ —கிட்டப்பா குரல் கணீர்!—

'கட்டுக்கழி படர்ந்த கருமுகில் காட்டுக்குள்ளே உன்னை விட்டுப் பிரிந்தேனடி கிளியே—வேதனைதான் பொறுக்கு தில்லை'—மறுபடியும் கிட்டப்பா.

எலும்பெல்லாம் மெழுகாகத் தளர்கிறது. நாளை நாளை என்று 25 30 வருடங்கள் இன்னும் கூடவோ என்னவோ!

வேலையில் எட்டு முறை இடம் மாற்றலாகிவிட்டது. இது தவிர 'கேம்ப்' இடம் இடமாய் சுற்றல்—இடையே.

ஸ்ரீகண்ட்

ஸ்ரீதர்

ஸ்ரீபால்

வெறும் ஸ்ரீயில் ஒரு பாலா.

ஒன்றிரண்டு பிரசவங்களுக்கு நான் பக்கத்தில் கூட இல்லை. கேம்ப்.

விசுவாமித்திரர் மேனகை ரவிவிர்மா படமொன்று பார்த்திருக்கிறாயா? ரிஷி ஒரு கையால் முகத்தை மூடிக்கொண்டு மறு கையால் ஒதுக்குகிறார். மேனகை எதிரே குழந்தையை நீட்டியவண்ணம் கேலி சிரிக்கிறாள். வேலைப்பாட்டில் என் கதி அப்படியிருந்தால் ஸுனோவுக்குத்தான் எப்படி இருக்கும்? யாரையும் குற்றம் சொல்லிப் பயனில்லை. ஏற்கனவே எங்களுக்குள் இனம் இல்லை. எந்த மண வாழ்க்கையிலும் இதுதான் படிப்படியாகத் தெளியும் யதார்த்தம். இனம் இல்லை.

குழந்தைகளும் பெரிதாகிவிட்டன. எல்லோரும் அம்மா ஜாடை அம்மா கட்சி. தன் கட்சியில் சேர்த்துக்கொண்டு விட்டாள். ஸுனோவுக்குத் தெரியும். சப்பாத்தியில் எந்தப் பக்கம் நெய் தடவி இருக்கிறது என்று. பெண்கள் எப்பவுமே ஆண்களைவிட நாள் ஏறஏற யதார்த்திகள்.

நான் நாயும் சீந்தாத காய்ந்த ரொட்டித் துண்டு. ஆனால் யார் மேலும் தப்பில்லை. பிறகு அன்று ஆஸ்பத்திரியில் உன்னைப் பார்த்ததுதான். அடுத்த முறை. ஆனால் இப்பொழுது குங்கிலியம் குபீரிட்டுவிட்டது. எரிகிறேன். நெஞ்சு மணக்கிறது. உடலெல்லாம் உள்ளே பரிமளம் புகைகிறது.

அமலி எங்கிருந்து எனக்குள் திடீரென்று இத்தனை ஈரம்? எண்ணெய் உண்மையில் நான் காயவில்லையா? ஆனால் ஒன்று. உடலுறவினால் நமக்கினிப் பயனில்லை. ரிஷிபஞ்சமி முழிக்காவிட்டாலும் நீ தாண்டியிருப்பாய். அன்று இழந்த சந்தர்ப்பத்தை இன்று மீட்க முடியும் என்று நம்பிக்கை என்னுள்ளே திரி வைத்துவிட்டது. இந்த நம்பிக்கையில் கட்டில் கிடையாது பாயும் கிடையாது.

தரையில் விரிக்கத் துண்டும் கிடையாது. வெறும் தரை. கட்டாந் தரை. கீழே பூமி. மேலே ஆகாசம். வேறென்ன வேண்டும் இனி நமக்கு?

காதல் என்பது இதயத்தில் தானே ஏற்றிக்கொண்ட அகல் சுடரோ?

ஒரு முடிவுக்கு வந்துதான் இதை எழுதுகிறேன். இன்று என்ன கிழமை? இன்று எட்டாம் நாள் வருகிற வியாழன் மாலை ஐந்திலிருந்து பழவந்தாங்கல் ஸ்டேஷனில் தாம்பரம் திக்கில் உனக்காகக் காத்துக் கொண்டு உட்கார்ந்திருப்பேன். நீ ஒரு பெட்டிகூட எடுத்து வரவேண்டாம். உன் நர்ஸ் யூனிபாரம் போதும். சட்டென்று உன்னை அடையாளம் கண்டுபிடித்துக் கொள்ள.

'தோ பார் அமலி, உன்னோடு வாழ்க்கையில் உடனே சொர்க்கத்தின் கதவுகள் திறந்து காத்திருக்கும் என்று நான் நினைக்கவில்லை. நினைக்கமாட்டேன். வேஷங்கள் இல்லாமல் உண்மையேனும் சற்று தலை தூக்குமல்லவா? தாம்பரம் போய் அங்கு ஏதேனும் ஒரு தூரப் பிரயாண வண்டியைப் பிடித்துவிடுவோம். எங்கேனும் ஒரு காட்டுப் பிரதேசத்தில் யாருக்கும் காணாமல் மறைந்துவிடுவோம். நம் இருவருக்கும் தவிர.

ஆம். உனக்கு நான் எனக்கு நீ துணை என்று கடைசியாகத் தெளியும் தோழமைதான் காதலின் உண்மை ஸ்வரூபமோ?

இத்தத் தப்பியோடும் பிஸினஸில் பைத்தியக்காரத் தனம் இருக்கிறது எனக்குத் தெரியும் ஆனால் கூடவே கொஞ்சம் ரொமான்சும் இருக்கிறது. இருந்தால் ஆகாதா?

நீ அப்படிப் பழவந்தாங்கல் ஸ்டேஷனில் இறங்காவிட்டால், வராவிட்டால் என் கடிதம் உன்னிடம் சேரவில்லை. மற்றொரு முறை நாளைக்கு இதே இடத்தில்,

என்றெல்லாம் என்னை ஏமாற்றிக்கொள்ள மாட்டேன். இதற்கெல்லாம் மறு சான்ஸ் கிடையாது. எனக்குத் தெரியும்.

காதல் மிக மிக ரோஷமுள்ளது. சிகரெட் துண்டை குதிகாலில் தேய்த்து நசுக்குவதுபோல் உன் நினைவை அறவே ஒழித்துவிட வேண்டியதுதான். இருக்கவே இருக்கிறாள். மீண்டும் ஸூனோ.

ஆனால் அப்படி முடியுமோ அமலி?

நான் காத்திருப்பேன்.

ஐ லவ் யு அமலி. உனக்குத் தெரியும் ஐ ஹேவ் ஆல்வேஸ் லவ்ட் யு.

# துளசி

பாட்டி நம்ம ஜாதியில் உனக்குக் கல்லறை கட்டுவதா யிருந்தால் தினம் மலர்கள் கொண்டுவந்து வணங்கி யிருப்பேன். ஆனால் உன்னை சுட்டெரித்து விட்டார் களே! அப்படியும் நான் சின்னப்பையன். உன் செல்லப் பேரன் கண்ணா கள்ளபிரான். அடுத்த நாள ஹஸ்தி பொறுக்கையில் உன் எலும்பு ஒன்றைத் திருடி நிஜார் பையில் போட்டுக்கொண்டு விட்டேன். தட்டையாய் தகடுமாதிரி அதை அன்று மாமலை மாந்தோப்பில ஒரு மரத்தடியில் புதைத்துவிட்டேன். நாளாகி நான் சம்பாதிக்கும்போது, அங்கு ஒரு சின்னக்கட்டிடம் கட்டுவேன்.

பரவாயில்லே எனக்கு நெய்ப்பந்தம் பிடிக்க மூணு பேராண்டிகள் இருக்கான்னு பாட்டி அப்பவே எப்பவோ சொல்லுவே. ஆனால் அதுக்கு அர்த்தம் எனக்கு முந்தாநேத்துதான் தெரிஞ்சது. ஆனால் நாலடி நடந்ததுமே பந்தம் அணைஞ்சுபோச்சு. தூக்கி எறிய சொல்லிட்டா. கடைசி வரைக்கும் நெய் கட்டுப்படி ஆகலையோ என்னவோ நாங்க உன்னோட வரத்துக்கும் மறுத்துட்டா. (பெரியவாளே இப்படித்தானே)

நீ கிளம்பினப்போ ஏதோ தேர்த்திருநாள் மாதிரிதான் ருந்தது. தெரு பூரா ரெண்டு பக்கத்து வீடுலேயும்

மனுஷா மரியாதையில் அசையாமல் நின்னுண்டிருந்தா. உனக்கு ஏற்பாடு ஆயிண்டிருக்கப்ப ஆத்துல எல்லாரும் அழுதா. ஆனா எனக்கு அழுகை வல்லே. நீ என்ன தூங்கற மாதிரிதானே இருந்தே!

முந்தாநேத்து முதல் நாள் ராத்திரி என்னை சுத்தி திடுதிடுன்னு ஓடறாப்பலயும் அழறாப்போலயும் சத்தம் கேட்டு முழிச்சுண்டு எழுந்து நானும் ரேழிக்கு ஓடி வந்தேன். அப்பத்தான் அப்பா உன் கண்ணை மெதுவா மூடிண்டிருந்தா. "உஷ்...அம்மா தூங்கறா அநாவஸ்யமா இந்த வேளையிலே கலாட்டா பண்ணி அவ நிம்மதியை கலைச்சுடாதீங்கோ." ஆனா அப்படி சொல்றபோதே அப்பாவுக்கு குரல் கம்மித்து. மோவாக்கட்டை நடுங்கித்து.

அதுக்கும் ஒரு வாரத்துக்கு முன்னாடி தாத்தா தெவசம் வந்ததே அப்ப நீ அப்பாகிட்டே சொல்லிண் டிருந்தது நெனவுக்கு வந்தது: "ஆமா நீயும் இருபத்தியாறு வருஷமா தெவசம் பண்ணிண்டு இருக்கே. நீ இறைக்கற எள்ளுக்கும், தண்ணிக்கும்தான் இன்னும் காத்திண்டிருக் காராக்கும். எனக்குத் தோணலைடாப்பா. எங்கையாவது இன்னொரு ஜென்மா எடுத்திருப்பார். ஆனா பெரியவா சொல்லிட்டுப் போயிருக்கா. நாம அவா சொன்னபடி பண்ணிண்டிருக்கோம். அப்படியே பண்ணிட்டுப் போயிடு வோம்!"

அப்பா கோணல் சிரிப்பு சிரிச்சுண்டு "எங்கே பொறந்திருப்பா?"

அப்பா பக்கத்தில் இருந்த என் காதைத் திருகி நீ "ஏன் இந்தக் காலிப் பயலாவே இருக்கக்கூடாது? ஜாடை அப்படியே உரிச்சு வெச்சிருக்கு." காதை வலிச்சது. ஆனா என்ன சந்தோஷமாயிருந்தது. ஆமா பாட்டி இந்த தடவை நீ என்ன, தாத்தா தெவசத்தோட நீயும் போயிட்யே. தாத்தா உன்னை அழைச்சுண்டுட்டார்னு இவாள்ளாம் சொல்லிக்கறா. அப்படித்தான் நடக்குமாம்.

பாட்டி! உன்னைத் தொட்டால் மெத்து மெத்துன்னு பஞ்சு மிட்டாயாட்டம் இருக்கு, அதிரச விள்ளல மாதிரி. தெவசம்னா ஒரே ஜாலி. முதல் நாளே ஊரிலேருந் தெல்லாரும் வந்துடறா. சித்தப்பா, பெரியப்பா, அத்தை, அவா அவா பொண்ணு பிள்ளைகள். ராத்திரி இட்டிலி. அரிசி உப்புமா. அந்தக் கூட்டமும் பேச்சும், சிரிப்பும், விளையாட எனக்கு என் வயசுப் பசங்க. அடுத்த நாள் பெரிய்ய கச்சட்டி நிறைய பழேது. தொட்டுக்கக் கீரைக் குழம்பு, சுத்திவர எங்களை உட்கார்த்தி வெச்சு நீ கையிலே போடுவையே. முன்பிடிக்கு பின்பிடி துணைன்னு நாங்களும் போட்டி போட்டுண்டு சாப்பிடுவோம். கடைசி யில, அடிக்குழம்பு ஆனைக்குட்டி யாருக்கு? எனக்குத்தான். செல்லப்பேரன் கண்ணன் இல்லையா? நீ வேணுன்னு பண்ணாட்டாலும் ரவுண்டுல முறை அப்படித்தான் வரும். தினமே திவசமாயிருந்தா எப்படியிருக்கும்னு நான் சொன்னபோது அம்மா என் தலையில அடிச்சா. நீ கோச்சுண்டே. ''என்னடி குழந்தைக்கு என்ன தெரியும்?''

பாட்டி என்னிக்குமே நாம ரெண்டுபேரும் ஒரே கட்சிதான்.

''பாட்டி, பாட்டி, உன் எலும்பை பொதைச்ச இடத்துல ஒரு செடி முளைச்சிருக்கு!...

துளசி,

நீ துளசி பாட்டியாமே!

உன் பேரையே நான் இப்பத்தான் தெரிஞ்சுண்டேன்.

பாட்டி எனக்குத் தெரியும்: நீ எங்கேயும் போகலை.

நீ எங்கே போவே?

* * *

பாட்டி செடியாக நீ வளர, வயசாக நான் வளர எண்ணம் பின்னோக்கிப் போகிறது. ஊஞ்சல் ஆட்டம் மாதிரி. கடிகாரப் பெண்டுலம் மாதிரி. ரொம்ப சீக்கிரம்

படர்ந்துட்டையே. சீக்கிரமே பெரும்புதர் ஆகிவிடுவாய் போலிருக்கிறதே. ஆனால் நீ துளசியாய் வாழறது உனக்கும் எனக்கும் மட்டுமே தெரிஞ்ச ரகசியம்.

பாட்டி, போகப்போக என்னுடைய குழந்தை நாட்களுக்கு—பிஞ்சு நாட்களுக்கே போக ஆசையாய் இருக்கு. அங்கு விட்டுட்டு வர மனசே இல்லை. என்னைச் சுத்தி எல்லாரும் மாறிண்டே இருக்கா. அப்பா சிடுசிடுக்கறா. அம்மா கடுகடுக்கறா. அண்ணன் வேலைக்குப் போறான். அநேகமா எல்லாருக்குமே எனக்காக நேரமில்லை. அவனவன் ஜோலி, அவனவன் நேரம், அவனவன் எண்ணம் என்று அவனவனுக்கு நேரம் போதவில்லை. யாருமே பழசு மாதிரி ஒருவருக்கொருவர் தன்னைப் பங்கிட்டுக்கொள்வதில்லை.

* * *

அப்பா "என்னடா கதைன்னும் கவிதைன்னும் கிறுக்கிண்டு வீண் பொழுது போக்கற? வயித்துப் பொழைப்பை கவனிடா. நீ சரபோஜின்னு உனக்குள் எண்ணமோ!"

பாட்டி உன் பேரக்குழந்தைகள் யாரையுமே நீ தூக்கினதில்லையாமே. ஆனா ஒருசமயம் நீ என்னைத் தூக்க நேர்ந்துபோச்சு. அது எனக்கே ஞாபகம்ருக்கு. ரொம்ப சின்னதிலேருந்தே ரொம்ப சின்ன சின்னதெல்லாம் ஞாபகமிருக்கு. என்னவோ கடிச்சுடுத்து. 'பாட்டி வலிக்குது வலிக்குதுன்னு' முனகினேன். (எப்பவுமே வாய்விட்டு அழுததில்லை. என் தலைவிதி) நீ என்னைத் தூக்கிண்டு 'ஒண்ணுமில்லேடா ஒண்ணுமில்லேடா எறும்புதான்னு' குலுக்கிண்டு கூடத்துல குறுக்கும் நெடுக்குமாக நடந்தே. 'எறும்புன்னா ஏன் இவ்வளவு அவஸ்த்தைப் படறேன்னு' அப்பா கேட்டா. "உஷ்...

எறும்பில்லேடா. குட்டித்தேள்! நான் பார்த்துட்டேன். குழந்தை வாய்விட்டு அழுதுட்டா தேவலை. மூனகறான். வயித்தை ஒட்டிக்கிறது.'' அப்படின்னா என்ன பாட்டி?

அம்மா எப்பவுமே என்னை எரிஞ்சு விழுவா. 'கண்ணன்கிட்டேயிருந்து ஒரு திங்கற பொருளை காப்பாத்தணும்னா வயித்திலேதான் வெச்சுக்கணும். வேற இடம் கிடையாது.' அப்ப நீ சொன்னே 'டேய் நீ அவ்வளவு கெட்டிக்காரனா. இதோ இந்த டப்பாவுல பேரிச்சங்கா, முந்திரிப் பருப்பு, காஞ்ச திராட்ஷை இருக்கு. நீ எப்படி எடுக்கறேன்னு பார்த்துடறேன்னு' தன் மடித் தலையணைக்கடியில் என் கண் எதிரேயே வைத்துக் கொண்டுவிட்டாய்.

சரி. வழக்கம்போல பாட்டிக்கு நான் பொடுகு எடுக்க ஆரம்பித்தேன். மத்தியானம் எனக்கு அது ஒரு வேலை. அம்பது பொடுகுக்கு ஒரு பைசான்னு கணக்கு. பாட்டியை தூங்க வைக்க அது ஒரு வழி.

பாட்டி லேசாய் குறட்டை விட்டா. knack ஆக கையை விட்டு டப்பா மூடியைமட்டும்—டப்பா அப்படியே இருந்த இடத்துலேயே—மூடியை மட்டும் கழட்டி கையை உள்ளே விட்டுட்டேன். அவ்வளவுதான். பாட்டியோட குறட்டை சத்தம் கேட்கலே. மூக்குலேருந்து புஸ்புஸ் ஸுன்னு மூச்சு பெரீசாய் வந்தது.

பாட்டிக்கு முழிப்பு வந்தப்ப டப்பா காலி. பாட்டி அசந்துபோனாள். சிரிச்சுண்டே என்னை அடிக்க துரத்திண்டு வந்தா. 'லொங்கு லொங்கு கொழ கொழா பாட்டி, பசுமாடு பாட்டி.' நான் சிரிச்சுண்டே ஓடினேன். 'கண்ணா, கள்ளபிரான்.'

* * *

அடச்சே! இதெல்லாம் ஒண்ணுமில்லே. இதுக்கப்புறம் ஒண்ணு நடந்ததே அதுதான் பாட்டி மறக்கவே முடியாது.

அன்னிக்கு தாத்தா தெவசம். சிறுசுகளை எல்லாம் சமையலுள்ளேயே விடமாட்டா. ஆனா நான் எப்படியோ உள்ளே நுழைஞ்சு ஒரு அதிரசத்தை எடுத்துக் கடிச்சுட்டேன். அம்மா பார்த்துட்டா.

ஒரேடியா பதறி வாயில் வந்தபடி என்னைத் திட்டிண்டே, அடிச்சுட்டா.— நான் அடி வாங்க என்ன தப்பு பண்ணினேன்னு தெரியலை. பார்த்தேன். எடுத்தேன். கடிச்சுட்டேன்.

''என்னடி சிவகாமி?''—பின்னாடிலேருந்து பாட்டி குரல் அமைதியாய் வந்தது. 'கடங்காரன் பாவத்தைத் தேடித் தந்துட்டாம்மா. அதிரசத்தைத் திருடிட்டான்'' என்னை நேராகப் பார்த்தாய். எனக்கு பயமாயிருந்தது,

''எடுத்தையா?''

வாயைக் குதப்பிண்டே தலையை ஆட்டினேன். ''என்னம்மா பண்றது. எல்லாம் மறுபடியும் முதல்லேருந்தே ஆரம்பிச்சாகணுமே!''

அம்மா குரல் நடுங்கித்து. அம்மா திகிலாயிட்டா.

என்மேல் வைத்த பார்வை விலகவில்லை. மாறவில்லை. பாட்டி! உனக்கு ஒரு மாதிரி ரவுண்டு முழி. லேசாய் கொய்யாக் காய்க்கு சிவப்பும் மஞ்சளுமா பூக்கிற மாதிரி முகம் மாறிற்று.

அந்த நேரத்தை கோலீ மாதிரி கையினாலேயே தடவ முடியும்.

''ம்...மேல் காரியம் நடக்கட்டும்'' என்று சொல்லி விட்டு அங்கிருந்து போய்விட்டாய். இப்போது

நினைத்துப் பார்க்கிறேன். பாட்டி! உன் மனம் எவ்வளவு பெரிய மைதானம். இல்லை. மைதானத்தின் மேல்வானம். வானத்தில் முழு நிலா.

பாட்டி இந்த சமயத்தைத் தொட்டு எனக்கு என்னென்னவோ தோணறது.

கிராமத்தில் வாய்க்கால் கரையில் கத்தாழைப்புதரில் வம்பாடும் மின்மினிகள்.

அம்பாளுக்குப் பட்டாடை உடுத்தினாற்போல் ஒரு முருங்கை மரத்தில் அடை அடையாய் அப்பின மின்மினிகள்.

சேரியில் சாமியை வரவழைக்கும். உடுக்குகள்.

முழங்கை தடிமனுக்கு சாரையோ நல்லதோ முழு நிலவில் பசும்புற்களிடையே சரசரசரேல்.

வானில், என்னவோ சொல்ல நட்சத்திரங்களின் தவிப்பு.

வயக்காட்டில் பம்ப் செட்டிலிருந்து பயிருக்கு பாயும் தண்ணீரின் சலசல.

நடுநிசியில் எங்கிருந்தோ ஏற்றப்பாட்டு.

திடீரென்று எனக்கே எதற்கென்று தெரியாமல் நெக்குருகி ஏக்கத்தில் ஒரு நெஞ்சத் தழுதழுப்பு.

இத்தனையும் யாரும் பார்க்காமல் நுகராமல் போகவோ வருகின்றன. போகின்றன? கதையாம், கவிதையாம். காதலாம். கன்னத்தில் பருவாம் என்று கரிப்பதைத் தவிர அவர்களுக்கு என்ன வேலை? அவா பெரியவா. வெட்கமாயில்லை!

பாட்டி, நீ துளசி. நீ ஔஷதம். நீ கஷாயம். நீ மணம். உன் காற்றுக்கு பாம்புகூட நடமாடாதாமே! உன் பேரைக்கொண்டே உனக்கு ஒரு அர்ச்சனையே தொகுத்து விட்டேனே.

பாட்டி, உனக்குத் தெரியாததில்லை. உனக்கு நேராததில்லை. பாட்டி நீ சமுத்திரம். உனக்கு காதல் நேர்ந்திருக்கோ? நேர்ந்திருக்கோன்னுதான் கேட்கிறேன். பண்ணிருக்கையான்னு கேட்கலை. அந்தக் காலத்தில் பண்ணுவதேது?

அந்தவரைக்கும் இப்ப காலம் மாறிப்போச்சு பாட்டி. அடேயப்பா இப்ப இதுகளுக்கெல்லாம் இருக்கும் துணிச்சல்...பெரியவர்கள் நிஜமாவே பயப்படுகிறார்கள். அப்படி பயப்படும்படி ஒன்றும் இல்லையானாலும்.

இப்பத்தான் ஒரு மாசமா நாங்க சந்திச்சிண்டிருக்கோம். எதுக்கு சந்திப்பு நேர்கிறதோ அதுவே எங்களுக்கு ஒரு முகூர்த்தம்.

நெருப்புக் கொட்டையைக் கீழேதேய்த்து சுட்டசுறீல், ஏதோ துளிர் விட்டமாதிரி ஆரம்பிச்சு இப்ப ஒரே தஹிதஹிப்பு வெள்ளமும் புயலுமாக எங்களை அடித்துக் கொண்டு போகிறது. தடுக்க முடியுமென்று தோன்றவில்லை. வயசுக் கோளாறோடு சேர்ந்த காதலின் தன்மையே இதுதானா?

ஏதோ முடிந்தவரை படிப்பை முடித்துவிட்டு வேலைக்குத் தேடி அலைந்துவிட்டு நான், வீட்டுக்குச் சுமை, எனக்குச் சுமை, ஒரு ஓஜோசி. பொழுதுபோகாத இளைஞன்.

அவள் எங்கள் போஸ்ட்மாஸ்டர் வீட்டிற்கு வந்திருக்கிறாள். சென்னையில் ஹாஸ்டலில் தங்கிப் படிக்கிறாள் அம்மா அப்பா டில்லியில் இருக்கிறார்களாம். கோடை விடுமுறையைத் தன் சிநேகிதி போஸ்ட்மாஸ்டரின் மகளோடு கழிக்க வந்திருக்கிறாள். மராத்தியாம். ஆனால் தமிழ் நன்றாகப் பேசுகிறாள்.

இதோ பாரு பாட்டி! தங்க எடை போட்டுப் பார்த்தால் அவளை அழகென்று சொல்ல முடியாது. நிறம்கூட மட்டுத்தான். ஆனால் முகத்துல, நடமாட்டங்

களில் ஒரு தனி குறுகுறுப்பு. ஆரோக்கியவதி. அவளுடைய சால்வார்கம்மீசுக்கு இங்கே ஏகப்பட்ட புருவங்கள் தூக்கியாச்சு. கிசுமுசு. ஆனால் அவள் Don't care master. நானும் ஒரு Don't care master தான். அதாவது என்னை யார் care பண்றா. அதனாலேயே எங்களுக்கு ஒரு பிடிப்பு ஏற்பட்டுப் போச்சு. பின்னே பொழுதுதான் எப்படிப் போவது?

இவ்வளவு சொல்றேனேயொழிய நாங்கள் ஒருவரை ஒருவர் தொட்டது இல்லை. வரம்பு மீறிப் பேசிக் கொண்டதுமில்லை. சத்தியமா நம்பினா நம்பு, நம்பாட்டி போ! ஆனா நீ நம்பாவிட்டால் யார் நம்பப்போறா? அநேகமா நாங்க துளசிப்புதர் சந்நிதானத்தில்தானே சத்திக்கிறோம். திருட்டுத்தனம் இருக்கத்தான் இருக்கு. தெரிஞ்சால் நம்பாத்தில் என்னைப் பொசுக்கி எடுத்துட மாட்டாளா? ஆனால் காதலின் அடையாளமே ருசியே, அதன் திருட்டுத்தனம்தானே.

இங்கே ஒருநாள் நான் தனியாக உட்கார்ந்திருந்த போது உலாவ வந்தவள், என்னோடு அவள்தான் முதலில் பேச்சுத் தொடுத்தாள். துளசி பற்றி ஏதோ கேட்டாள். பறித்துக் கொஞ்சம் வாயில் போட்டுக்கொண்டாள். ஒரு மாதிரி ஸட்ராங்கா நல்லா இருக்குதே என்று மகிழ்ந்தாள். ஒருவரைப்பற்றி ஒருவர் விசாரணையில் பேச்சு சும்மா மிதந்துகொண்டே சென்றது. என்னவோ மெட்டு முன கினாள். உடனேயே நான் கேட்காமலே அவளிடமிருந்து பாட்டு புறப்பட்டது. உனக்காகப் பாடினாள் என்றே நான் இப்போது கூறுவேன்.

அப்பா! என்ன குரல்! கொஞ்சம் புருஷ சாரீரம்தான். நெருப்புப் பிழம்பாகி அதன் இனிமை வழிந்து என்னை எரித்தது. என் இதயத்துள் வழிந்து அங்கேயே குளிர்ந்து இறுகிப்போனது. ஹிந்துஸ்த்தானி சங்கீதம் கற்றுக்

கொள்கிறாளாம். பாட்டி நீ சொல்லுவையாம் 'கூந்தல் உள்ள சீமாட்டி கொண்டையாக போட்டுக்கொள்ள லாம். வெறுமனே வாரி முடிச்சுக்கலாம். பின்னித் தொங்க விட்டுக்கலாம். இல்லை வெறுமனே அருவியாக அவிழ்த்து விடலாம். அவள் குரல் அப்படித்தானிருந்தது. எனக்கு சங்கீதம் தெரியாது. ஆனால் நெஞ்சு ஏதேதோ மொட்டுக் கட்டி பூத்து உதிர்ந்தது. மணம் கமழ்ந்தது. யமுனா பாயின் குரலுக்கு அந்த சக்தி இருந்தது.

இப்போது ஒன்று தெரிகிறது. கீதம் என்பது பாடு பவனுக்கு மட்டும் சொந்தமில்லை. பாடாதவனிடத்திலும் இருக்கிறது. அத்தனை ஜீவராசிகளிடமும் இருக்கிறது. நான் சொல்லும் கீதம் சங்கீதமே அல்ல. அது முழுநிலவு. அமாவாசை, உயிருள்ளது உயிரற்றது. இடம், காலம் பேதம் இவைகளின் எல்லைகளற்று எல்லாவற்றையும் பிணைக்கும் தொப்புள் கொடி ஆதலால் அவள்மேல் காதலாகினேன். இந்த நிலை தவிர்க்க முடியாதது. இது முதல் காதல். இதனுடைய கவித்துவமே அதன் ஊசிக் காதில் புகுந்துபுறப்படுவதுதான். இதைப்பற்றிப் பேசுகை யில் நினைக்கையில் அதில் அவள் கூட. இல்லை. அதைப் பற்றிப் பேசுகையில் என் பாஷையே மாறிப்போச்சு.

ஒரு மாலை அவள் சொன்னாள். ''நான் இன்னும் பத்துநாளில் இங்கு விட்டு கிளம்பிவிடுவேன். எனக்கு Bore ஆயிடுச்சு''. எனக்கு வயிற்றைச் சுருட்டிற்று. ஆகவே பத்து நாளில் இந்தக் கனவிலிருந்து விழித்துவிடுவேனா?

அவள் தொடர்ந்தாள் ''ஹாஸ்டலும் போர்தான். திருப்பித் திருப்பி செய்ததையே செய்துகிட்டு. ஆனா நான் அநேகமா டில்லிக்குத் திரும்பிடுவேன். எனக்குக் கல்யாணம் முடிச்சிருக்காங்க!''

''இதுவரை சொல்லவில்லையே கங்ராஜுலேஷன்ஸ்.''

இதுதானா உன் பதில்?''

''................................''

''இதுவரை நான் உன்னைப் புரிஞ்சுண்ட வரையில் நிஜம்மா சொல்லு நீ என்னை வாழ்த்தறயா?''

உன் முகம் என்னை நெருங்குகையில் உன் வங்கி வங்கி கூந்தலின் நடுவகிடு சீறிற்று.

உன் விழிகள் கணகணத்தன. அந்தத் தணலை என்னால் பொறுக்க முடியவில்லை.

தலை குனிந்தேன். 'என்னைவிட நீ அஞ்சு வயசு பெரியவள்' சம்பந்தா சம்பந்தமில்லாமல் இந்த எண்ணம், இப்போது மின் பூச்சி பறப்பானேன்?

''Mr. கண்ணன், நீங்க என்னோடு வந்துடுறீங்களா? கவலைப்படாதே! நீங்க ஒரு இடத்தில் நிலைக்கும் வரை உங்களை நான் சாளிக்க முடியும். நமக்கு நாம்தான் முக்கியம்.'' என் கையை அவள் கை பொத்திற்று. அவள் கையில் ஜுரம் தகித்தது.

''ஒரு பெண் வெட்கம்விட்டு ஒரு ஆண் பிள்ளையைக் கையைப் பிடித்து இழுக்கிறாள் என்று நீங்க நெனைச்சீங்கன்னா நான் உங்களைப் பற்றி நினைத்துக்கொண்டிருந்த அத்தனையும் பொய்யாகிவிடும். பொய்யே துரோகம்தான். சரி நாளைக்கு பதில் சொல்லுங்க.''

விர்ரென்று போய்விட்டாள்.

இருட்டிவிட்டது. மின்மினிகள் மினுக்க ஆரம்பித்துவிட்டன. பாட்டி நீதான் வழி காட்டணும். பாட்டி உனக்கு நேராததில்லை. உனக்குத் தெரியாததில்லை. நீ சமுத்திரம்.

ஆகாயத்திலிருந்து நக்ஷத்திரம் உதிர்ந்தது.

பாட்டி புரிஞ்சுண்டுட்டேன்.

அடுத்த நாள் அவள் வரவில்லை.

அதற்கடுத்த நாளும் வரவில்லை.

வரவேயில்லை.

என் பதிலுக்குத் தேவை ஏற்படவேயில்லை.

அவளுக்கே—அவள் கேள்விக்குப் பதில் அவளிடமே கிடைத்துவிட்டதோ என்னவோ?

"நீ எரிமலையிலிருந்து தப்பித்தாய்" அதுதானே பாட்டி நீ தெரிவித்தது.

ரெண்டு துளசி பறித்து வாயில் போட்டுக் கொண்டேன்.

என்ன ருசி!

என்ன நெடி!

என்ன மணம்!

என்ன பாஷை!

பாட்டி நீ ஔஷதம்.

பாட்டி நீ ரக்ஷை.

# வீம்புக்கு மருதாணி

இருபத்தி ஐந்து வருடங்களுக்கு முந்திக் கதை.

'அப்போது குடியிருந்த வீட்டில் எங்களைச் சேர்த்து இரண்டு குடித்தனங்கள். நாங்கள் வந்து ஒரு மாதத்துக்குப் பின் அந்தக் குடித்தனம் ஏறியது.

முற்றத்தில் மருதாணி மரம்.

ஸார், என்னிலும் பத்து வயதேனும் இளையவர். புது நாட்டுப் பெண். மாமியார், நாத்தனார், நாத்தனாருக்கு ஒரு பெண், சின்னஞ் சிறுசு.

நாத்தனாரும் மன்னியும் வெகு ஒற்றுமை. மாமியார் பசு. ஸார், தங்கைமேல் உயிர்.

உத்தியோக ரீதியில் காலையில் போனால், விளக்கு வைக்கும் நேரத்துக்குத்தான் திரும்புவார். அதிகமாகப் பேச மாட்டார். முசிடு இல்லை. குரலும் தூக்காது. பேச்சு, குரல், தோரணை எல்லாமே அமைதி. அழுத்தத்தில் அமைதி. Strong, Silent Male. அப்படியிருக்க எனக்கு ஆசை. ஆனால் அம்சம் இல்லையே!

துளசி, ஏதோ பள்ளியில் ஆசிரியையாக இருந்தாள். குடும்பத்துக்கு அவளால் இயன்றது குருவிக்கணக்கில் இருக்கலாம். ஆனால் குடும்பம் என்றால் எல்லாமும்தான் தேவையாயிருக்கிறதே! சுயகௌரவம் வேறே.

துளசி நல்ல நிறம். ஆனால் அழகு என்று சொல்வதற்கில்லை. அடர்ந்த ஆண் புருவம். சிறு கூடு. துருதுருவென்றிருந்தாள். அவள் வளைய வருவதைக் காண்கையில் எனக்குச் சூரியனின் கதிர் நினைப்பு வந்தது. காலைக் கதிரின் உற்சாகத்தோடு கலந்த மாலைச் சோகம்.

துளசியின் நெற்றி 'வெறிச்'சாயிருந்தது. ஆனால், கழுத்தில் சரடு தெரிந்தது. சரடு மட்டும்தான்? யார் வழிக்கும் யாரும் போகக்கூடாது; என் கொள்கை பார், கவனி, புழுங்கு, ஆனால் கேளாதே.

துளசி என்னோடு பேசுவதில்லை. Good. ஆண், பெண் இடையே அந்த ஒதுக்கம்தான் முறை எனும் கருத்தினன் நான். அந்தப் பரஸ்பர அத்துவில் ஒரு கலையழகு கண்டேன்.

பொதுவாக அந்தக் குடும்பம், பழகவும் கவனிக்கவும் சந்தோஷத்தை விளைவித்தது.

ஆனால்—இதுதானே. புல்லில் பாம்பு! எப்போது என்று நிச்சயமாகத் தெரியவில்லை. ஏரி அமைதி. காற்றில் அலண்டாற்போல்; அங்கே சலனம் உணர்ந்தேன். அது உடனே வெளிக் காட்டவில்லை. அதன் சுழல் வெகு ஆழத்தினின்று உள்ளேயே திரள் கட்டிக்கொண்டு, வெளித் தெரியவில்லை. கிசு...கிசு...கிசு...கிசு...குமையல்...

ஸார் முகத்தில் கல் இறுக்கம் கண்டது. அதைக் கண்டு மாமியாருக்கும், நாட்டுப் பெண்ணுக்கும் 'பேஸ்து' அடித்தது.

துளசிக்கு முகத்தில் காலைக் கதிரொளி கூடியது. லேசாகப் பாட்டு முனகல்கூட.

கூடிய சீக்கிரம் இரு குடும்பங்களின் மூதாட்டிகளிடையே விஷயம் உடைந்தது.

துளசியின் கணவன் வயணமில்லை. புதுக்குடித்தனத்தின் ஆறு மாதங்களுக்குள் நகைகள் காலி. அப்புறம் பண்டம், பாத்திரங்களின் படிப்படியான மறைவு. எங்கே போயின, எப்படிப் போயின? 'தெரியல்லியே மாமி!' இத்தனைக்கும் கெட்ட பழக்கங்கள் இருப்பதாகத் தெரியல்லே; சிகரெட் தவிர. ஆனால் இப்போ யார் பிடிக்கல்லே?

மளிகை, பால், அரிசி, வாடகை என்று எங்கும் பாக்கி வைத்துவிட்டுக் காணாமல் போய்விடுவானாம். இதுபோல் இதுவரை நான்கு முறைகள் ஆகிவிட்டன. "சாபம் மாமி! சாபம்" மாமி தலையில் அடித்துக்கொண்டாள்.

அண்ணா பொறுமைசாலி. பொறுமை, கடலினும் பெரிது. ஆனால் கடைசி முறையில் கரை புரண்டுவிட்டது. "இனிமேல் அவனுக்குச் செருப்பு." துளசியை எச்சரித்து விட்டார். பிறகு தங்கைக்கு ஆசிரியை வேலை தேடித் தந்தார். இங்கே குடித்தனம் வந்தபோது, குடும்பத்தின் நிலை இது.

இப்போ என்ன?

மூன்று வாரங்களுக்கு முன் துளசியின் கணவன், கண்ணில் பட்டானாம். பள்ளியின் தெருமுனையில் காத்திருந்து துளசியை மடக்கிச் சந்தித்து வாழ அழைக்கிறானாம். மீண்டும் மீண்டும்.

ஓஹோ. அதான் துளசியின் புது மலர்ச்சியா?

எங்கோ பஹாதூர், தூர் வானம் மௌனமாகக் குமுறுகிறது. இங்கே நெஞ்சு இடிகிறது. வான்விளிம்பில் மின்னல் படபடக்கிறது—தேவியின் விஷம கண்சிமிட்டல். ஆனால் அவளுடைய வேடிக்கை அவளுக்கே புரிகிறதோ?

அதோ வெகு எட்டத்தில் அலை திரள்கிறது. அதன் பெரிது இங்கே கரையிலிருந்தே தெரிகிறது. உருண்டு, திரண்டு, உயர்ந்து, விலகி, புடைத்து கரை நோக்கி வருகிறது. கரை நோக்கித்தானே வர வேண்டும்! அதன் விதி வேறு.

எது? வந்தும், கரைமீது மோதி—

ஒருநாள் அவர்கள் கூடத்தில் உடைந்தது.

துளசி அவள் குழந்தை கையைப் பிடித்துக்கொண்டிருந்தாள்.

"போயிட்டு வரேன் அண்ணா!"

அவர் அவளைக் கண்ணெடுத்துக்கூடப் பார்க்கவில்லை. வெற்றிலையில் சுண்ணாம்புத் தடவிக்கொண்டு இருந்தார்.

"பட்டுப் பட்டும், சொல்லச் சொல்லப் போறே. சரி. ஆனால் மறுபடியும் இங்கே படியேறமாட்டாய் என்றே எதிர்பார்க்கிறேன்; எக்காரணத்தைக் கொண்டும்..."

எனக்கு முதுகுத்தண்டு சில்லிட்டது. அந்த அமைதி, அந்த தோரணை, பொறுக்கியெடுத்த சொற்கள், ஊடே ஒரு menace.

பிள்ளை பக்கத்தில் நின்றுகொண்டிருந்த மாமி, பெண் பக்கம் நடந்தாள்.

அதற்கும் பிள்ளை முகம் நிமிரவில்லை.

* * *

ஒருநாள் தற்செயலாய் மாமியை மார்க்கெட்டில் சந்தித்தேன்.

"நீங்கள் எங்கள் வீட்டுக்கு வரக்கூடாதா? துளசியை ஆசீர்வாதம் பண்ணக்கூடாதா?"

பதில் சொல்லத் தெரியாமல், அசட்டுச் சிரிப்பு சிரித்தேன். "சௌக்யம்தானே?" என்றேன்.

"எல்லாம் உங்கள் ஆசீர்வாதம். துளசி, வாழ ஆசைப் படுவது நியாயமில்லையா? ஆனால் ஸேது ரொம்பவும் கஷ்டப்பட்டுட்டான்."

மாமியே இரண்டு பக்கமும் பேசிவிட்டாள். ஆனால் நியாயத்துக்கு இரண்டு முகம்தானா? நியாயமெனும் ஸ்படிக முப்பட்டகம்.

* * *

ஸார் வீடு மாற்றிக்கொண்டு போய்விட்டார். எனக்குத் தெரிந்தவரை, அவர் அப்படி அவசரமாகப் போகும்படி, இங்கே அவருக்கு வசதிக் குறைவு இல்லை. ஆனால் அவரவர் சௌகரியம், சௌகரியமே நியாயம்.

என்னவோ நினைப்பு வந்தது. இங்கு இருந்தவரை துளசி அடிக்கடி மருதாணி இட்டுக்கொள்வாள். எனக்கு ஒரு குழப்பம். அவளே பறித்து, அவளே அரைத்து அவளே இட்டுக்கொள்ளும் நிலைமையில், ஆட்டுக்கல்லிலோ, அம்மியிலோ மருதாணியை ஒரு கையால் தள்ளித் தள்ளி அரைக்கும்போதோ, அந்தக் கையில் பற்றிக்கொள்ளாதோ?

இல்லை. அழகுக்காக இட்டுக்கொள்ளவில்லை. ஏதோ ஒரு கனவைத் தன்னோடு இருத்திக்கொள்ளும் வீம்பில் இட்டுக்கொண்டாளோ? மருதாணிக் கனவு. கனவின் வீம்பு.

கனவின் வீம்பு

* * *

ஒரு நாள், வாசல் அறையில் நான் ஏதோ பைலைப் புரட்டிக்கொண்டிருக்கையில், ஜன்னல் வழி நிழல் தட்டிற்று. தலை நிமிர்ந்தால் வெளியே மாமி.

"இன்னிக்கு நீங்கள் கட்டாயம் வந்தே ஆகணும். துளசி உங்களை அவசியமாப் பார்க்கணுமாம். மறக்காதேங்கோ." நிற்கவில்லை. போய்விட்டாள்.

* * *

**Slum area** மீன் கடை இரைச்சல். நாற்றம்கூட. பல தரப்பட்டோர் குடித்தனங்களிடையே வளை போன்று அவள் இடம். வளை போன்று இருட்டு.

''மாமா வாங்கோ வாங்கோ, சத்தே குனிஞ்சு...'' ஆனால் நான் தலையில் இடிச்சுண்டாச்சு. ''ஐயோ ஸாரி, உட்காருங்கோ. என்ன சாப்பிடறேள்? காபி, ஹார்லிக்ஸ் **B.V?**''

அவள் பின்னாலிலிருந்து மாடி வேண்டாம் என்று அவசரமாக சாடை காட்டினாள். ஒருவரை ஒருவர் பார்த்துக்கொண்டு மௌனமாக நின்றோம். எந்நேரமோ?

சடக்கென்று அவள் முகம், அவள் கைக்குள் புதைந்தது. விக்கி விக்கி மாரே வெடித்துவிடும்போல்...

தலை நிமிர்ந்தபோது அவள் முகம் கொழுந்து விட்டெரிந்தது.

''எனக்கு அவசரமா ஐம்பது ரூபா வேணும்.''

நல்ல வேளையாக பர்ஸில் அவள் கேட்டது இருந்தது. ஏதோ அவசரச் செலவுக்கு அன்றுதான் புரட்டினேன். ஆனால் யார் தேவை முன்?

* * *

வெகு நாட்களுக்குப் பின்.

பிற்பகல் மூன்று மணி இருக்கும். சேத்துப்பட்டு மேம்பாலம் வழி போய்க்கொண்டிருந்தேன்.

ஸ்டேஷனுக்கு இறங்கும் இடத்தில், மூன்று ரௌடிகள் ஒருத்தியைச் சூழ்ந்துகொண்டு கலாட்டா பண்ணிக் கொண்டிருந்தார்கள். நான் ஒன்றும் சூரப்புலி இல்லை. என்னைக் கண்டதும் நழுவிவிட்டார்கள். ஒருகணம்

எங்கள் கண்கள் சந்தித்தன. ஆனால் அவள் அடையாளம் காட்டிக் கொள்ளாமல் 'விர்'ரென்று படிக்கட்டு வழியிறங்கி மறைந்து போனாள்.

* * *

மீண்டும் வெகுவெகு நீள இடைக்காலத்துக்குப் பின், மாலை வேளை மவுண்ட்ரோடு.

ஆபீஸ் விட்டு திரும்பிக்கொண்டிருந்தேன். முதல் தேதி சம்பளம். குழந்தைகளுக்கு 100 கிராம் சாக்லேட். என் பங்கு போகும் வழிக்கு—அதோ யார், எனக்கு நாலடி முன்னால்?

"துளசி!" வெடுக்கெனத் திரும்பினாள். என்னைப் பார்த்ததும் முகத்தில் சூரியன் புறப்பட்டது.

என்ன பேசுவதென்றே தெரியவில்லை. பேசாமல் கையை நீட்டினேன். ஐந்தாறு சாக்லேட்டுகள்.

ஒன்று எடுத்துக்கொண்டாள்.

"எல்லாம் உனக்குத்தான், கமலிக்கு வேண்டாமா?" இன்னொன்று எடுத்துக்கொண்டாள். "நான் வரேன் மாமா" சரசரவென 'ஜே ஜே'வில் மறைந்துவிட்டாள்.

ஏன், இந்த அவசரம்? என்னிடமிருந்து ஓட ஏன் இவ்வளவு கவலை?

வருடங்கள்.

நாங்கள் வீடு மாறி வேறு ரோந்துக்கே போய் விட்டோம். காலை ஆபீஸ் நேரம்.

அந்த 'பஸ் ஸ்டாப்'பில் நான் ஏறுவதில்லை. அதுவே என் 'ரூட்' இல்லை. வேறு ஜோலியாக அந்தப் பக்கம் வந்து இசைகேடாக மாட்டிக்கொண்டு விட்டேன்.

'மாமா, சௌக்யமா?'

வயது 18, 19 இருக்கும். தோளில் பை, கையில் டிபன் பாக்ஸ்.

''என்னைத் தெரியல்லியா? கமலி.''

''ஓ!''

கேட்க ஆயிரம் கேள்விகள், பேச ஆயிரம் வார்த்தைகள். ஒரே சமயத்தில் முந்திக்கொண்டு நாக்கு நுனிக்கும் போட்டியிட்டன.

''அம்மா சௌக்கியமா?'' கத்தினேன். அவள் என்ன சொன்னாளோ, சொன்னதை பஸ் தன்னோடு அடித்துக் கொண்டு போய்விட்டது. கையை ஏதோ பலமாக ஆட்டுவதுதான் தெரிந்தது.

ஜங்கிளில் திக்குத் தப்பி நின்றேன்.

தனக்கும் பயனின்றி, எதற்கும் பயனின்றி வெறும் வியர்த்தத்துக்கே ஒரு பிறவியில் உன் எண்ணம் என்ன, நியாயம் என்ன?

# அபூர்வ ராகம்

வீணையின் ஸ்வரக் கட்டுகளை விருதாவாய் நெருடிக் கொண்டிருக்கையில், திடீரென்று ஒரு வேளை யின் பொருத்தத்தால் ஸ்வர ஜாதிகள் புதுவிதமாய்க் கூடி ஒரு அபூர்வ ராகம் ஜனிப்பதுபோல், அவள் என் வாழ்க்கை யில் முன்னும் பின்னுமிலாது முளைத்தாள்.

இல்லாத சூரத்தனமெல்லாம் பண்ணி கோட்டையைப் பிடித்து ராஜகுமாரியைப் பரிசிலாய் மணந்த ராஜ குமாரனைப்போல் நான் அவளை அடைந்து விடவில்லை. நாங்கள் சர்வசாதாரணமாய், பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டு அவர்கள் மூன்று நாள் முன்னதாகவே வந்து நடத்திவைத்த முகூர்த்தத்தில் மணந்து கொண்டவர்கள்தாம். ஆகையால் இறுதி செய்யாத செயலையோ, நம்பாத விஷயங்களையோ தேடி அலைய வேண்டாம்.

நான்...

முதலில் என்னைப்பற்றிச் சொல்லிவிடுகிறேன்.

வாழ்க்கையில் என் லக்ஷியம் என்னவென்றால்— ஒன்றும் செய்யாமல் இருப்பதுதான்.

எனக்குக் கால்நடையாய் ஊர்களைச் சுற்ற வேண்டு மென்று ஆசை. மூட்டையில்லாமல், முடிச்சில்லாமல்

கண்டவிடத்தில் அகப்பட்டதைத் தின்று கையலம்பிவிட்டு, வாசல் திண்ணையிலோ, மரத்தடியிலோ படுத்துறங்கி விட்டு,

மேகங்களைக் குன்றுகள் தடுத்து குடங்குடமாய் மழை கொட்டும் மலைநாட்டின் கமுகுச் சோலைகளையும், மாடுகளைப்போல் மந்தை மந்தையாய் யானைகள் மேய்வதையும் பார்க்க வேண்டும். அசைவற்ற மனதின் அமைதி நிறைந்ததாய் பார்த்தவர்கள் சொல்லிக் கொள்ளும் கன்யாகுமரியின் கடற்கரையில், ஓங்கி நிற்கும் மணற்குன்றுகளில் ஒன்றின்மேல் உட்கார்ந்து கொண்டு, சூர்யாஸ்தமனத்தைப் பார்க்க வேண்டும் என்று ஒரு ஆசை.

நான் மொத்தத்தில் வேண்டுவது, ஒன்றும் வேண்டாம் என்பதே. இதனால் எனக்கு உலகத்தில் வெறுப்பு அல்லது ஞானப் பைத்தியம் பிடித்துவிட்டது என்று இல்லை. எனக்கு வாழ்க்கையில்தான் பற்று. அதை விட்டால் வேறு நம்பிக்கையில்லை. கண்கண்டதில் நம்பிக்கையில்லை. அதைத் தள்ளிவிட்டுக் காணாததைத் தேடி எப்படிப் போவேன்?

ஆனால் என் இஷ்டப்படி இவ்வுலகத்தை அனுபவிப்பதில்தான் எனக்கு ஆசை. இந்த மிருகத்தனம் என்னுடனே பிறந்துவிட்டதென்று நினைக்கிறேன்.

என்னுடலில் என் அப்பனின் மிருக ரத்தம் ஓடிற்று என்று நினைக்கிறேன். என் அப்பன் ஒரு உதவாக்கரை, ஓடுகாலி, சீட்டாட்டம், புகையிலை, கஞ்சாக்கூட உண்டாம். கிளியை வளர்த்துப் பூனைக்குக் கொடுத்த மாதிரி என் தாய் என் அப்பனுக்கு வாழ்க்கைப்பட்டு விட்டாள்.

என் அப்பன் தோற்றம் எப்படி என்றுகூட அறியேன். நான் வயிற்றில் ஆறுமாதமிருக்கையிலேயே வீட்டைவிட்டு ஓடிப்போனவன் இன்னமும் திரும்பி வரவில்லை.

என் தாய் இன்னமும் குங்குமம் அணிந்துகொண்டு தானிருக்கிறாள். இருந்தும் என் அப்பனின் கதி, நாங்களிரு வரும் ஒருவருக்கொருவர் வெளியிட்டுக் கொள்ளாது உள்ளூர வேதனைப்பட்டுக்கொண்டு என்றும் தீராததோர் சந்தேகம்.

எப்பவுமே அப்படித்தானாம். திடீர் திடீரென்று வருவது, அகப்பட்டதைச் சுருட்டிக் கொள்ளுவது, உடனே ஓடவேண்டியது. அப்படியும் எனக்குமுன் நான்கு பிறந்து இறந்துவிட்டன. நான் மாத்திரம் தங்கிவிட்டேன்.

பணத்தென்போ, மனிதத் துணையோ இல்லாது என்னை வளர்த்து, படிக்கவைத்து, உலகத்தாரோடு ஒருவனாய்ச் சமமாக்கிய மகத்தான பெருமை என் தாயைச் சேரும். அவளில்லாது நானில்லை.

இருந்தும், தன் கடமையைச் செய்யத் தவறி, நான் என் கண்ணாலும் கண்டிராத என் தகப்பனைத்தான் என் மனம் நாடிற்று. அடிக்கடி அவனைப்பற்றிச் சிந்திப்பேன். நான் தலையைச் சாய்த்துக்கொண்டு யோசிக்கையில் அப்படியே என் அப்பன் மாதிரியிருக்கிறதென்று அம்மா சொல்வாள்.

என் தாயிடத்தில் எனக்கு மரியாதை, நன்றி

ஆனால் என் அப்பனிடந்தான் ஆசை.

காரணம்? காரணமேயில்லாத சில வேடிக்கைகள் உலகத்தில் இருக்கின்றன. உலகத்தில் தன்னைப் படாத பாடு எல்லாம் படுத்தி வைத்த கடவுளிடத்தில் அம்மா வுக்கு அபார பக்தி, பூஜை, புனஸ்காரம், பட்டினி, பலகாரம், ஆசாரம், அனுஷ்டானம் எல்லாம் அமர்க்களம். நாள் கிழமை வந்தால் வயிற்றில் சோறு விழுவதற்குள் விழிகள் மலையேறிவிடும். அம்மா பட்டதில் கால்பங்கு கூட பட்டிராத எனக்கு மாத்திரம் ஏன் பக்தியில்லை.

அவளுக்கு எவ்வளவு மறு உலகத்தில் நம்பிக்கையோ அத்தனைக்கத்தனை என் மனம் இங்குதான் ஊன்றி நின்றது. எதற்குச் சொல்ல வந்தேன் என்றால், எப்படியோ அம்மா இருக்கும் வரை, அவளுக்கடங்கி சமர்த்துப் பிள்ளையாய் இருந்துவிட்டு, அவள் கடன் கழிந்ததும், உதறித் தோளில் போட்டுக்கொண்டு, ஊரை விட்டுக் கிளம்பிவிடக் காத்திருந்தேன்.

ஆயினும் அம்மா என்னைச் சும்மா விடும் வழியா யில்லை. ஜாதகங்களைப் போட்டுப் புரட்டிக்கொண்டு இருந்தாள்.

ஆரம்பத்தில் ஜயம் என்பக்கம்தான் இருந்தது. லேசில் ஜாதகம் ஒத்துக்கொள்ளவில்லை. (நம் ஜாதகம்தான் அலாதி ஜாதகமாயிருக்கிறதே!) அப்படியே ஒன்றிரண்டு பெண் பார்க்கப் போனவிடத்தில் குற்றங்குறை சொல்லித் தப்பித்துக்கொண்டேன். அம்மாவுக்கும் அலுத்துவிட்டது.

அப்புறம் ஒரு ஜாதகம் வந்தது. பொருத்தம் ஏதோ சுமார்தானாம். அம்மாவுக்கு அவ்வளவு திருப்தியில்லை. பெண் அமாவாசையில் ஜனனம். "பெண் பார்க்கப் போவோமா?" என்றாள். என் பதில்தான் எப்பொழுதும் என்னிடம் தயாராய் இருக்கிறதே 'பிடிக்கவில்லை' என்று. ஆகையால் பெண் பார்க்கப் போனோம்.

நீலம் உடுத்தி, இரை தின்ற பாம்புபோல் கனத்துப் பின்னல் முழங்காலுக்கும் கீழ் தொங்க, நிமிர்ந்த தலை குனியாது, சமயலறையினின்று வெளிப்பட்டு வந்து நமஸ்கரித்து மையிட்ட கண்களை ஒரு முறை மலர விழித்து, புன்னகை புரிந்து நின்றாள்; அவ்வளவுதான்.

அவள்தான் நான் கண்ட அபூர்வராகம்.

சில விஷயங்கள் நடந்துவிடுகின்றன. கால காரணங் களற்று அவை நேர்ந்ததற்கு நேர்ந்ததுதான் சாக்ஷி.

அம்மாதிரி முன்னும் பின்னுமற்றது, எங்கள் சந்திப்பும் வாழ்வும். அவள் அத்துடன் விடவில்லை. கணீரென்று "உப்பு சரியாயிருந்ததோ? நான்தான் பண்ணினேன்" என்றாள்.

அம்மாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவள் வீட்டாருக்குக்கூட முகம் மாதிரியாய்ப் போய்விட்டது. திடீரென்று எல்லோர் முகத்திலும் வழிந்த அசடைக் கண்டு எங்களிருவருக்குந்தான் சிரிப்புத் தாங்க முடியவில்லை. கையைக் கொட்டிக் கலகலவென்று நகைத்து சமயலறைக்குள் மறைந்தாள்.

அம்மாவுக்கு இந்த சம்பந்தம் பிடிக்கவில்லை "ஏண்டா? இவளைவிட எவ்வளவோ ரம்பைகளைத் தள்ளிவிட்டாயே. இவளிடம் என்னடா கண்டுவிட்டாய்? கன்னங்கரேலென்று தொட்டால்கூட ஒட்டிக்கொள்ளும் போலிருக்கிறாள்."

"ஏனம்மா, நான் சிவப்பாயிருக்கிறேனென்று என் நிழல் எனக்காகச் சிவப்பாயிருக்கிறதா? இல்லை, அது கறுப்பாயிருக்கிறதென்று அதைத் தனியாய் அறுத்துத் தான் எறிந்துவிடுகிறதா? அதுமாதிரி அவள் எனக்காக வென்றே பிறந்திருக்கிறாள்."

"அதுவும் அமாவாசையாய் பார்த்தா?"

"எத்தனையோ நாட்களில் ஒன்று."

"மயிர் எவ்வளவு நீளம் பார்த்தையா? வீட்டுக்கு ஆகாதென்று சொல்லுவார்கள்"

"அதெல்லாம் மயிர் கட்டையாயிருக்கும் பொம்மனாட்டிகள் அஸூயையில் சொல்லும் பேச்சு..." (சபாஷ்! எனக்குக்கூட இவ்வளவு சாமர்த்தியமாகப் பேச வருகிறதே!)

"பாடக்கூடத் தெரியவில்லையேடா."

"அவளே ஒரு ராகம், அவள் தனியாய்கூடப் பாடணுமா?"

"என்னடா வெட்கமில்லாமல் பிதற்றுகிறாய்? எல்லாம் கிடக்கட்டும் என்றாலும்—என்னதான் இந்தக் காலத்துப் பெண் என்றாலும்—பத்துப்பேர் நடுவில் கூடத்தில் லஜ்ஜையேயில்லாமல் பஜ்ஜிக்கு உப்புப் போதுமா என்று கேட்டுதே! ஏதேது இப்பவே இப்படி யிருந்தால் போகப்போக ஊரையே விற்றுவிடுவாள் போலிருக்கே...!"

"அவள் பேசவில்லை அம்மா—ராகம் பேசுகிறது. அபூர்வராகம். அரங்கேற்றுபடி கஷ்டம்தான். இதோ பார், நான் கலியாணம் பண்ணிக்க வேண்டுமென்றிருந் தால், அதுவும் உனக்காகத்தான் பண்ணிக்கணும், அவ ளைத்தான் பண்ணிக்கொள்வேன். இல்லாவிட்டால்..."

ஆகையால் எங்களிருவருக்கும் மணம் நடந்தது.

இனிமேல்தான் சிரமம்.

நாங்கள் இன்னமாதிரி இருந்தோம் என்று சித்தரிக்க மேற்கொண்ட இம்முயற்சி, கேவலம் ஒரு புருஷன் பெண்ஜாதியின் அந்தரங்க வாழ்க்கையை அம்பலமாக்கும் விரஸமாய் முடியுமா, அல்ல எங்கள் இளமையின் புதுமை யில் வாழ்க்கையையே ஒரு மஹா சங்கீதமாயும் அதில் அவளை ஒரு அபூர்வ ராகமாயும் பாவித்து, அதன் சஞ்சாரத்தை உருவாக்கும் வசன கவிதையாக அமையுமோ அறியேன்.

வாஸ்தவத்தில் இவ்வரலாற்றில் என் பாத்திரம் எவ்வளவு முக்கியமானதென்று எனக்கு இன்னமும் நிச்சய மாகவில்லை. நான் இப்பொழுதிருக்கிற மாதிரி அப்போ தில்லை. முன்னைவிட எனக்கு இப்போது 'நாகரீகம்' முற்றிவிட்டது! என் உடலில் ஓடிய என் அப்பனின் மிருக ரத்தம் சுண்டிவிட்டது. நானும் என் தாயின் இஷ்டப்படி

எல்லோரும்போல் ஆகிவிட்டேன். பாழடைந்த கோவிலில் மூலவர்மேல் எலியும் பெருச்சாளியும் ஓடுவதுபோல் என்மேல் பேரன் பேத்திமார் ஏறி விழுந்து விளையாடு கின்றனர். கடன், வியாதி, கவலை, குடும்பம் எல்லாம் பெருத்துவிட்டன. இத்தனைக்கும் இடையில் நான் அவளைப் பற்றி நினைப்பதுமில்லை. ஆயினும் ஏதாவது ஒரு சமயம், இப்பொழுது நடக்கும் ஏதேனும் ஒரு சம்பவம் பழைய நினைவுகளைக் கிளப்பிவிட்டு, நெஞ்சு படபடக்கையில், அது பழைய ரத்த வேகத்தின் சாயையோ அல்லது வயதான கோளாறுதானோ என்று சந்தேகமாயிருக்கிறது.

அபூர்வ ராகம், அதே வக்கரிப்பு, பிடாரன் கை பிடிபடாத பாம்புபோல், அபாயம் கலந்த படபடப்பு, ஸ்வரஸ்தானங்கள் பிடிபடாது, பழகப்பழக எல்லையே யற்றதுபோல், நடையுடை பாவனைகளில் சிந்தும் ஒரு கவர்ச்சி, வேட்டையில் வேடுவன் மேல் பாயத் திரும்பிய மிருகம்போல் பயந்த ஒரு முரட்டுத்தனம், சிலிர்சிலிப்பு.

அவள் அம்மாவை மயக்கிவிட்டாள். அம்மாவுக்கு வேண்டிய பணிவிடை, பக்தி, ஆசாரம் எதிலும் குறைய வில்லை. வந்த புதிதில் ஏதோ ஒரு விசேஷ தினத்தன்று படங்களுக்குப் பூச்சூட்டி விளக்கு ஏற்றி, எதிரில் நிவேதனங்களை வைத்துக்கொண்டு அம்மா, ஒவ்வொரு நாமமாய், அக்ஷர சுத்தமாய் சாவதானமாய்ச் சொல்லி அர்ச்சித்துக் கொண்டிருக்கையில், என் வயிற்றில் பசி எலிபோல் பிராண்டுகையில், அவள் கண்களை மூடி கற்பூரக் கொழுந்தென அசைவற்று நிற்கும் பரவசம் கண்டு பகீரென்றது. அம்மா ஏதோ காரியமாய்ப் பின் கட்டுக்குச் சென்றதும் சமையலறையில் நுழைந்தேன்.

"நான் ஒரு பாவி"—என்று ஆரம்பித்தேன்.

மூடுசூளையாய்ப் பேசுவதிலேயே எனக்கு ஒரு ஆசை, நான் இதுவரை அவளுடன் பளிச்செனப் பேசியதில்லை. மிருகங்கள் வாய் திறவாது ஒன்றையொன்று புரிந்து கொள்வது போல், நாங்கள் அர்த்தமற்ற, அல்ல அர்த்தம் மறைந்த வார்த்தைகளைப் பேசியே ஒருவரையொருவர் அர்த்தம் கண்டுகொள்வதில் ஒரு இன்பம.

"நான் ஒரு பாவி—" என்றேன். மறுபடிம் விழித்தாள்.

"இது ஒரு புண்ணிய நாடு, கரைக்காலம்மையார், மங்கையர்க்கரசி, சக்குபாய், மீராபாய், அகமுடையான் களைக் கரையேற்றிய புண்ணியவதிகள் பிறந்த நாடு" என்றேன்.

"என்னை மறந்துவிட்டீர்களே!" என்றாள்.

"ஆம், நான் ஒரு பாவி. நல்ல வழிகாட்ட ஒரு நல்ல மனைவியிருந்தும், கரையேற இயலாது தவிக்கிறேன். எனக்குக் கிடைத்திருக்கும் பாக்கியம் எனக்குத் தெரிய வில்லை. பசி கண்ணை மறைக்கிறது. என்னை ஆட்கொள்ளல் வேண்டும்."

"பக்தரே உம் பசியை மெச்சினேன். நான் தொழும் கடவுளை உமக்குக் காண்பிக்க யாதொரு ஆட்சேபணையு மில்லை."

"எங்கே? எங்கே? என் பூனைக் கண்ணுக்குத் தெரிய வில்லையே!" என்று இரு கைகளையும் நீட்டிக்கொண்டு, மிரளமிரள விழித்துப் பிரலாபித்தேன். "அவர் தூணிலு மிருப்பாரா? துரும்பில்தான் இருப்பாரா?"

"இல்லை, வெண்கலப் பானையிலிருக்கிறார்" என்று சிப்பல் தட்டை நீக்கி உள்ளிருக்கும் சக்கரைப் பொங்கலைக் காண்பித்தாள்.

''ஹாஹா! தரிசித்தேன்! என் வாயில் ஆனந்த பாஷ்பம் ஊறுகிறதே! சுருக்க அவரை இலையில் வட்டியுங்கள், வட்டித்துவிடுங்கள்! அவருடன் நான் கலக்க முடியாவிட்டாலும், அவர் என்னுடன் கலந்துவிடட்டும்.''

''பக்தரே, பதறாதீர்! புண்ணியவதிகளுக்கும் பசிக்கும் என்பதை மறந்துடாதீர்'' என்று அவள் என்னைக் கையமர்த்திவிட்டு, இரண்டு விரலால் ஒரு கவளம் வழித்து வாயில் போட்டுக்கொண்டு விரலைத் தொண்டை வரைக்கும் கொடுத்து சப்பிய பொழுதுதான் எனக்கு நிம்மதி ஆயிற்று. இதுவும் ஒரு மிருகம்தான்.

மிருகம்! மிருகம்!! எத்தனை தடவை சொன்னாலும் அலுக்கமாட்டேன்கிறது. உயர்ந்த ஜாதிக் காட்டுமிருகம். நின்றவிடத்தில் நிற்கமாட்டாள். உடலையும் உள்ளத்தையும் மிஞ்சிய வேகம் அவளை அலைத்தது.

நாவற் பழம்போன்று பளபளக்கும் கண்களும், இயற்கையாகவே காரியங்களிலும், உடலிலும் விறுவிறுப்பும் சிற்சில சமயங்களில் உலகத்தின் மெதுவைத் தாங்கப் பொறுமையற்று முகம் சுளிக்கையில் அதில் குறுகுறுக்கும் களையும்.

தொம்பங்கூத்தாடி சாட்டைபோல் தடித்து, முழங்காலுக்கும் கீழ் தொங்கும் பின்னலும்.

அபூர்வ ராகத்தின் ஜீவஸ்வரமாய் அவள் கூந்தல் விளங்கிற்று பின்னாது வெறுமென முடிந்தால் ஒரு பெரும் இளநீர் கனத்துக்கு கழுத்தை அழுத்திக் கொண்டிருக்கும். பின்னலை எடுத்துக் கட்டினால், கூடை திராக்ஷையை அப்படியே தலையில் கவிழ்த்தது போலிருக்கும். நாங்கள் எப்படியும் தெருவில் போனால், திரும்பிப் பாராதவர் இல்லை. அதுவே லஜ்ஜையை உண்டு பண்ணும். அம்மாவுக்கு அம்மயிரைப் பின்னப் பின்ன

ஆசை. விதவிதமாய்ப் பூ வாங்கி வைத்துப் பின்னுவாள். பின்னி முடிவதற்குள் தோள்பட்டை விட்டுவிடும். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் ஒரு பாடு. தலைக்கு மாத்திரம் எண்ணெய் தனியாய்த் தேய்த்து, துணி துவைப்பதுபோல் அம்மிக்கல்லின் மேல் கூந்தலைக் குமுக்கி ஒரு கட்டையால் எண்ணெய் விட அடித்து அலசுவாள். உலர மறுநாளாகும். கூந்தலை முடித்துப் படுக்க இயலாது. முடிச்சை அவிழ்த்துக் கட்டிலுக்கு வெளியே தொங்க விட்டுத்தான் படுக்க வேண்டும்

ஓரிரவு விழித்துக்கொண்டேன். மயிர் பெருந்தோகை யாய் படர்ந்திருந்தது. மெதுவாய்த் தொட்டேன். சரியாய் மூன்றங்குல ஆழத்திற்குக் கை அழுந்திற்று. விடிவிளக்கின் மங்கிய வெளிச்சத்தில் அதைப் பார்த்தால் ஏதோ எங்கேயோ, வறண்ட பூமியில் குன்றுகள் தடுத்துக் குடங்குடமாய்ப் பெய்ய ஏகமாய்த் தண்ணீரை ஏற்றிக் கொண்டு செல்லும் மேகம்போல்.

அவள் முகத்தில் தவழ்ந்த புன்னகையிலிருந்து அவள் விழித்துக் கொண்டு விட்டாளென்று கண்டேன். ஆனால் கண்ணைத் திறக்கவில்லை.

"என் கவி என்ன யோசனை பண்ணுகிறது?"

நான் அவளை ராகம் என்பதால் அவள் என்னைக் கவியென்று கேலி செய்வாள்.

"பெருத்த யோசனைதான்!"

"என்னவோ?"

"உன் மயிர் உன்னைவிடக் கறுப்பா, அல்லது நீ அதை விடக் கறுப்பா?"

கண்ணை விழிக்காது அவள் புன்னகை புரிவது எவ்வளவு அழகாயிருக்கிறது! சின்னக் குழந்தை தூக்கத்தில் சிரிப்பது போன்று.

''இந்த யோசனை கொஞ்சம் தாமதமாய் வருகிறது.'

''ஏனோ?''

''என்னைக் கட்டிக்கொண்ட பொழுதே தோன்றியிருக்க வேண்டாமா?''

''உன் கறுப்பின் இருள் என் மனதில் புகுந்து, அந்தச் சாயத்தில் என்னைக் குருடாக்கிவிட்டதே! ஆனால் எனக்கு வெளிச்சம் வேண்டாம். இவ்விருள் என் மனதில் எப்போதுமே நிறைந்து இருக்கட்டும்.''

நான் அவள் பக்கமாய்ச் சாய்கையில், அவள் வைர மூக்குத்தி ஜ்வலித்தது. தாழம்பூவின் மணம் மனத்தை மயக்கியது. மூடிய கண்ணைத் திறவாது, அவள் என் கையை நாடி, விரலோடு விரல் பின்னி இழுத்து மார்பின் மேல் வைத்துக்கொண்டாள்.

''பாருங்கள், நான் கறுப்பாயிருந்தாலென்ன? என் இதயம் உங்களுடையது மாதிரியேதான் துடிக்கிறது. வேணுமானால்...''

''நன்றாகத்தான் துடிக்கிறது. கறுப்பாயிருப்பவர்களின் ரத்தத்திற்கே படபடப்பு அதிகம் என்று சொல்வார்கள். நான் கறுப்பாயில்லையே என்றுதான் எனக்கு இருக்கிறது.''

''இரண்டுபேரும் ராகமாய்விட்டால் அப்புறம் ராகத்தை வாசிக்க யாராவது வேண்டாமா? அதனால் தான் என் கவி சிவப்பாயிருக்க வேண்டும். நான் ராகம்—கறுப்பாகத்தானிருப்பேன். என்னைக் கட்டி வாசிக்கும் என் கவி சிவப்பாகத்தானிருக்க வேண்டும். கவிக்கு ராகம் வேண்டுமென்றால் ராகத்திற்கும்தான் கவி வேணும்—''

''நாம் இருவரும் கொஞ்ச நாள் பிரிந்திருந்து பார்ப்போமே!'' என்றேன்.

இப்போது சொல்லிவிடுகிறேன். இதுதான் எங்கள் வாழ்க்கையின் அடிப்படையான பெருங்குறை. எங்கள் ஒற்றுமை.

சில ஒற்றுமைகள் இருக்கின்றன. நாசத்திற்கே வித்தான பயங்கரமான ஒற்றுமைகள். காற்றுடன் நெருப்பு, விளக்கோடு விட்டில், மூங்கிலோடு மூங்கில்.

அவள் கண்கள் திறந்தன. படுத்திருந்த போதிலும் பாய்ச்சலில் பதுங்கிய சிறுத்தைப்போல் ஜாக்கிரதை யானாள்.

''ஏன்? நான் என்னத்தைப் பண்ணிவிட்டேன்? என் மேல் என்ன கோபம்?'' என்று கேட்கவில்லை.

''வெறுமென, இருந்து பார்ப்போம்!'' என்றேன். உனக்கு உன் பிறந்த வீட்டிற்குப் போக வேண்டுமென்று இருக்காதா? நீ எனக்கு வைத்திருக்கும் சூனியத்திற்கு எவ்வளவு சக்தி என்று நான் அறிந்துகொள்ள வேண்டாமா?

எனக்கே சரியாய்ப் புரியவில்லை. அவளை ஏன் பிறந்த வீட்டுக்குப் போகச் சொன்னேன்?

ஒருவர் சக்தியை ஒருவர் ஆழம் பார்க்க வேணுமென் றிருக்கலாம்—மிருகங்கள் தங்கள் பலத்தை ஆராய்வது போல்.

அல்லது அவள் என் அருகில் இருப்பது கனிந்த தழலின் அழகைக் கையில் ஏந்தி அனுபவிக்க முயல்வது போன்றிருக்கலாம்.

இருந்தும், சொன்னதும் ஏன் சொன்னேன் என்று மனம் அங்கலாய்க்க ஆரம்பித்துவிட்டது. அவள் என்னைத் தகித்தாலும் அவளை விட்டுப் பிரிய மனம் வரவில்லை.

அரைக்கணம் ஒளி மங்கினாற் போலிருந்தது. இருந்தும் இங்குதான் இருப்பேன் என்று முரண்டவில்லை. அப்படிச் சொல்லமாட்டாளா என்று என் மனம் ஏங்கிற்று. ஆனால், அவள் விட்டுக் கொடுக்காமல், "அப்படியே போய்விடுகிறேன்" என்று விட்டுத் திரும்பிப் படுத்துக் கொண்டு விட்டாள்.

அம்மாவுக்கு அவள் ஊருக்குப் போகும் காரணம் தெரியாது. எங்களுக்கே தெரியவில்லையே! ஏதோர் சாக்குச் சொல்லி அவள் சகோதரனை வரவழைத்தாகி விட்டது. வாசலில் வண்டி நின்றது.

என் அறைக்குள் வந்து நின்றாள். நான் ஒரு புத்தகத்தை வைத்துக்கொண்டு, மனம் அதில் அழுந்தாது, மும்முரமாகப் படித்துக் கொண்டிருந்தேன்.

"வருகிறேன்" என்றாள்.

மயிரைப் பளபளக்க அழுந்தவாரி நெற்றியில் நடுவகிடு எழுமிடத்திலும், புருவங்களுக்கும் மத்தியில், குங்குமமிட்டிருந்தாள். பவழமாலை அகஸ்மாத்தாய் மேலாக்கின் வெளியே வந்திருந்தது. உள்ளங்கையிலும், கால்விரல் நகங்களிலும் அம்மா ஆசையுடன் இட்டிருந்த மருதாணி பற்றியிருந்தது. இந்நிமிஷங்கூட தடுத்தால், நின்று விடுவாள்.

"போவதற்கிருக்கிறாய். வருகிறேன் என்கிறாயே?" என்று விகடமாகக் கேட்கலாமா என்று தோன்றிற்று.

"நான் போவது நீ போகச் சொன்னதால்தானே!" என்று கேட்டுவிட்டால்? எப்படி என் தோல்வியை ஒப்புக் கொள்வேன்?

"ஏன் முகம் வெளுத்திருக்கிறது?" என்றேன்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. இப்போ வரும் சோப்பிலேயே சுண்ணாம்பு அளவுக்கு மிஞ்சிக் கலந்திருக்

கிறது. என் கறுப்புக்கூட வெளுக்கும்படியிருந்தால்... உங்களுக்கு ஏன் கண் சிவந்திருக்கிறது?'' என்று புன்னகை புரிந்தாள்.

''ஆமாம், தூசி விழுந்திருக்கும்'' என்று கண்ணை நன்றாய் கசக்கிக்கொண்டேன்.

''போய் வருகிறேன்.''

அவள் ஊருக்குப் போய் ஒரு வாரம் ஆகிவிட்டது. இதென்ன வாழ்க்கை இவ்வளவு சூன்யமாய்க்கூட இருக்க முடியுமா என்ன? எதைத் தொட்டாலும் எடுத்தாலும் நினைத்தாலும் அவள் உருவம் இடைமறித்துக்கொண்டு நின்றது—பளபளக்க வாரி முடிந்த மயிரும் நெற்றியில் நடுவகிடு எழுமிடத்திலும் இரு புருவங்களுக்கு மத்தியிலும் இட்ட பொட்டும், மேலாக்கின் வெளியே வந்த பவள மாலையும், உள்ளங்கையிலும் கைகால் நகங்களிலும் பற்றிய மருதாணியும்—

சோறு தொண்டையில் விக்கியது. உலகம் ஏன் இவ்வளவு சோபையற்றுவிட்டது? அல்லது எனக்குத்தான் இறக்கை ஒடிந்துவிட்டதா?

''என்னடா, நீயா கலியாணமே வேண்டாமென்ற பிள்ளை?'' என்று அம்மா கேலி பண்ண ஆரம்பித்து விட்டாள்.

''அதெல்லாம் ஒன்றுமில்லை அம்மா! வெய்யி லல்லவா!'' என்று மீசையை முறுக்கிக்கொண்டு சிரித் தாலும், என் சிரிப்பு என்னையே ஏளனம் பண்ணிற்று. இருப்புக் கொள்ளாது நடந்துகொண்டே சென்றேன், கால் இழுத்துக்கொண்டு போனபடி.

எதிரே ஒரு பிணம் வந்தது.

பிராமணப் பிணம். கொட்டுப்பாறை, பூப்பல்லக்கு ஒன்றுமில்லாது, சுட்டுப் பொசுக்குவதற்காக அவசர அவசரமாய் எடுத்துக்கொண்டு ஓடுகிறார்கள். முறுக்கான

வாலிபம். வயது இருபது இருபத்தி ஐந்துதானிருக்கும். ரொம்ப கிடக்கவில்லை. முகம் சுண்டவில்லை. தூங்குகிறாற்போல் இருந்தது. எந்த நிமிஷம் எங்கே யென்று சாவு காத்திருக்கையிலேயே, வாழ்க்கையில் சௌகரியமாயிருக்க முடிந்தும், ஒருவரையொருவர் பரீக்ஷை பார்த்துக்கொண்டு, விரல் வழி வழியவிட்ட தேன்போல், வாழ்நாளை நழுவ விடுகிறோம்.

என்னால் பிரிந்திருக்க முடியாது. அவளை எப்படி யாவது திருப்பி வரவழைத்துக் கொள்ள வேண்டும், என் தோல்வியை ஒப்புக்கொள்ளாது. சட்டென ஒரு யோசனை தோன்றிற்று. அசட்டு யுக்தியோ சமத்து யுக்தியோ, அப்பொழுது என்ன தெரிகிறது? நேரே தபாலாபீஸுக்குச் சென்று ஒரு தந்தியடித்தேன்.

''கடுஞ்சுரம்! அபாயம்! புறப்பட்டு வரவும்.''

நாளைக் காலை போய்ச் சேரும். அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வருவாள். பார்த்துப் பரிகசிக்கலாம். அப்படியே ரொம்பவும் கோபித்துக் கொண்டாலும் ஏதேனும் சமாதானம் சொல்லிக் கொள்ளலாம். எப்படியோ வந்துவிடுவாள்.

இரவு இத்தனை நாளாக இல்லாத நிம்மதியுடன் தூங்கினேன்.

நடு இரவில் கதவை யாரோ உடைத்தார்கள்.

''தந்தி ஸார்!''

தந்தி! வயிறு பகீர். தந்தி அனுப்புவதைப் போலல்ல, வந்த தந்தியை வாங்கியுடைத்துப் படிப்பது.

''பாம்பு கடித்துவிட்டது. புறப்படவும்.''

'அம்மா!'

அம்மா சுவாமி பிறையண்டை போய் கன்னத்தில் போட்டுக்கொள்கிறாள். இன்னும் அரைமணி நேரத்தில் வண்டி.

புலி புலி விளையாடப்போய் புலிய புலியே வந்தாச்சு.

நாங்கள் போய்ச் சேரும்வரை இருப்பாளா? அவளைத் தான் காண்போமா, அவள் உடலைக் காண்போமா?

வண்டியில் போகையில் கண்முன், மாலை கண்ட பிராமணப் பிணக்கோலம் மறுபடி சென்றது. இவ்வேளைக்கு அது சிதையில் எரிந்து சாம்பலாகிப் போயிருக்கும்.

அட மடயா, வாழ்க்கையோடு என்ன பரிக்ஷை? எந்த நிமிஷத்தில் எங்கேயென்று சாவு காத்துக்கொண்டிருக்கிறது விதி, வினையெல்லாம் ஒருபக்கம் இருக்கட்டும். நீ அவளை அவள் வீட்டிற்கு அனுப்பாமலிருந்தால், பாம்பு கடித்திருக்குமா?

ஏன் எங்கள் செயல்களெல்லாம் அர்த்தமற்று இருக்கின்றன?

வண்டியை விட்டிறங்கினோம். அவள் வீட்டிலிருந்து யாராவது வந்திருந்தாலும் வந்திருக்கலாம். குனிந்த தலை நிமிர மறுத்தது.

என்மேல் ஒரு பிடி விழுந்தது. அவளே தான். என்னை இறுகக் கட்டிக்கொண்டு கதறினாள். எங்களைச் சுற்றிக் கூட்டம் கூடிவிட்டதுகூட எங்களுக்குத் தெரியாது. நாங்கள் இங்கில்லை.

மாமனார் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தது. "என்னய்யா சுத்த மடையன் மாதிரி வேலை செய்திருக்கிறீர்? என் குழந்தை தவித்த தவிப்பு எனக்கல்லோ தெரியும்!"

"இதென்னா இது? எனக்கு ஒன்றுமே புரியல்லியே!" என்றாள் அம்மா. பாவம்! அவளுக்கு கொஞ்சங்கூடப் பிடிக்கவில்லை.

"என்னவா?— இதோ பாரும் உங்கள் பிள்ளை சமர்த்தை!" என்று தந்தியை அம்மா முகத்தெதிரே ஆட்டினார். "இரவெல்லாம் அழுது அழுது என் குழந்தை முகமெல்லாம் வீங்கிவிட்டது. அவள் பட்ட அவஸ்தையைப் பார்த்தால் ஏரோப்ளேன் இருந்தால்கூடப் புறப்பட்டு விடலாம்போல உடம்பு பரபரத்தது. இருந்தும் காலையில்தான் வண்டி. உங்கள் பிள்ளை கல் மாதிரி உடம்பை வைத்துக்கொண்டு ஸ்வாசமிழுத்துக் கொண்டிருக்கிறதென்று தந்தி அடித்தால் நன்றாயிருக்கிறதா? இவர் என்ன சின்னக் குழந்தையா?"

"சரிதானப்பா ரொம்ப ரொம்ப குதிக்கிறேளே? எனக்கு மாத்திரம் பாம்பு கடித்ததா? தந்தி நீங்கள்தானே அடித்தீர்கள் மறந்துபோச்சா?"

மாமனார் பின்னடைந்தார்.

"எல்லாம் நீ படுத்தின பாடுதானே!"

அம்மா முகத்தில் அருவருப்புத் தட்டிற்று, "என்னடா அம்பி? இந்தக் காலமே இப்படித்தானாடா?" என்றாள்.

ஏன் எங்கள் செயல்கள் அர்த்தமற்றுவிடுகின்றன?

சின்னக் குழந்தைகளுக்குச் சொல்ல, அவர்கள் மழு மூனதுடன் நம்பும் ராஜாராணிக் கதைபோல் எங்கள் வாழ்க்கை சிற்சில சமயங்களில் கடற்கரையில், சூரியனுடைய சப்தவர்ண ஜாலங்கள் மிளிர்ந்து, காற்றில் நடுநடுங்கும் அலை நுரை போன்ற நலுங்கிய அழகு

துக்கம் அதிகமானாலும் பைத்தியம்தான். சந்தோஷம் மிஞ்சினாலும் பைத்தியந்தான். பித்து பிடித்தவனும் பையத்தியந்தான். இவர்களில் நாங்கள் எவர்?

கோடை முடிந்து மாரி வந்துவிட்டது,

அம்மா, யாரோ நாலுபேர் தீர்த்த யாத்திரை போகிறார்கள் என்று சேர்ந்து கிளம்பிவிட்டாள். போகும் இடத்துக்குப் புண்ணியம் தேட வேண்டும். சாவிற்கு

எப்பொழுதும் தயாராயிருக்கவேண்டும். கடவுளிடத்திலே கணக்குச் சரியாய் ஒப்பித்தாக வேண்டும். இதெல்லாம் அம்மாவின் கொள்கை. இங்கிருக்கையிலேயே மறு உலகின் சிந்தைதான் அவளுக்கு. ஆகையால். நான் போக வேண்டும். ஆனால் என் காரணங்களே வேறு என்று புள்ளி போட்டிருந்த இடங்களெல்லாம் பார்க்க அம்மாவுக்குத்தான் வாய்ப்பு முதலில் கிட்டிவிட்டது. தென்னாடெல்லாம் சுற்றிய பிறகு காசி, கயா, பிரயாகை வரை போய் வருவதாகத் திட்டம். அம்மா எங்களைத் தனியாய் விட்டுச் சென்றதே விபத்தாய் முடிந்தது. மிருகங்களாகிய எங்களைக் கட்டியாள யாருமில்லை.

மழை, அந்த சமயம்போல்—ஆனால் எப்போது பெய்தாலும் அப்படித்தான் சொல்கிறோம்—எப்போதும் பெய்ததில்லை. தெருவில் வெள்ளம் முழங்காலாழத்திற்கு ஓடியவண்ணமிருந்தது. இரண்டு வாரங்களாக சூரியனைக் கண்டவரேயில்லை பகலிலும் இருள் கனத்துத்தேங்கிற்று. மழை விடாது பெய்துகொண்டிருந்தது. வீட்டிற்குள் அடைந்து கிடந்தோம்—கூட்டிலடைத்ததுபோல், மாடிக்கும் கீழுக்குமாய் அலைந்து வெதும்பினோம்.

பதினைந்தாம் நாளிரவு ஏதோ விளக்கண்டை உட்கார்ந்து படித்துக் கொண்டிருந்தோம். ஜன்னலும், கதவுகளும் படார் படார் என்று மோதிக்கொண்டன. புயல், மரங்களினூடே பாய்ந்து ஊளையிட்டது.

புத்தகத்தை அலுப்புடன் 'டப்' என்று மூடிவிட்டு, ''வெளியே போவோமா?'' என்றாள்.

''எங்கே போகிறது? சினிமா கினிமா எல்லாம் மழைக்குப் பயந்து மூடித் தொலைத்திருக்கிறானே!''

''கடற்கரைக்குப் போவோம்'' என்றாள்.

''போவோம்!''

புயலில் குடையைக் கொண்டு போகச் சாத்திய மில்லை. தூறல் முகத்தில் சாட்டை அடித்தது. தெரு விளக்கின் வெளிச்சத்தில் குடைக்கம்பி கனத்தில் பளபளத் துக்கொண்டு பூமிக்கும் வானத்திற்கும், ஜல்லி கட்டியது போன்றிருந்தது. தெருவில் ஜலம் பிரவாகமாய் ஓடியது. சாபம் பிடித்ததுபோல் தெரு வெறிச்சென்றிருந்தது. இந்த மழையில் எங்களைத் தவிர எவன் கிளம்புவான்? எதிர்க்காற்றில் முன் தள்ளிக்கொண்டு ஒருவரையொருவர் இறுகத் தழுவியவாறு ஜலத்தில் இழுத்து இழுத்து நடந்து சென்றோம்.

இடையிடையே இடியில் பூமி அதிர்ந்தது.

கடலில் அலைகள் மதில்கள்போல் எழுந்து, மனித னின் ஆசைக் கோட்டைபோல் இடிந்து விழுந்தன. எங் களை வாரி வாயில் போட்டுக்கொள்ள வேண்டுவதுபோல் துரத்திக்கொண்டு ஓடிவந்தன. ஏமாற்றமடைந்த அரக்கனின் ஆத்திரம்போல், அலைகளின் கோஷம் காதைச் செவிடுபடுத்திற்று. ஒரு அலை அவளைக் கீழே தள்ளிவிட்டது. வெறிகொண்டவள்போல் சிரித்தாள். ஜலத்தின் சிலுசிலுப்பு சதையுள் ஏறுகையில் நெருப்பைப் போல் சுறீலெனப் பொரிந்தது. புயலில் எங்கள் அங்கங் களே பிய்ந்துவிடும் போலிருந்தன.

திடீரென்று இடியோடு இடி மோதி ஒரு மின்னல் வானத்தின் வயிற்றைக் கிழித்தது. இன்னமும் என் கண் முன் நிற்கிறது அம்மின்னல். மறைய மனமில்லாமல் தயங்கிய வெளிச்சத்தில் நான் கண்ட காக்ஷி! குழுமிய கருமேகங்களும், காற்றில் திரைபோல் எழும்பி, குளவி யாகக் கொட்டும் மணலும், கோபக் கண்போல், சமுத்திரத்தின் சிவப்பும், அலைகளின் சுழிப்பும், அடி பட்ட நாய் போல் காற்றின் ஊளையும் பிணத்தண்டை பெண்கள்போல ஆடி, ஆடி! அலைந்து, அலைந்து, மரங்கள் அழும் கோரமும்!

இத்தனைக்கும் மூலகாரணிபோல் அவள் நிமிர்ந்து நின்றாள். அவள் ஆடை உடலிலிருந்து பிய்ந்துவிடும் போல் பின்புறம் விசிறி விரிந்து, காற்றில் தோகைபோல் விறைத்து நின்று படபடத்தது. பிதுங்கிய சிற்பமென அங்க அவயவங்கள் நிமிர்த்துக்கொண்டு நின்றன. மின்னலின் வழி, விசும்பினின்றிழிந்த விண்ணுலகத்தவள் போலிருந்தாள் ஜலமேறி அடையாய்க் கனத்த கூந்தல். காற்றின் மிகுதியில் நக்ஷத்திர வால்போல் சீறிற்று. இவ்வியற்கையின் இயக்கத்தில் அவளும் சேர்ந்து இழைந்து, புயலுடன் நின்றாள்.

மின்னல் மறைந்தது.

வெடவெடக்கும் குளிரில் பற்கள் கிலுகிலுப்பைக் கற்கள் போல் கடகடக்க ஆரம்பித்துவிட்டன. புயல் எங்களை வீட்டிற்குத் தள்ளிக்கொண்டு போயிற்று. உடலில் பிசினாய் ஒட்டிக்கொண்ட ஆடையைக் களைந்து வேறு உடுத்துவதற்குள் போதும்போதும் ஆகிவிட்டது.

காலையில் எழுந்திருக்கையிலேயே வெகு நேரமாகி விட்டது. உடல் கணுக்கணுவாய்த் தெறிக்கும் வலியில் எழுந்திருக்கக்கூட முடியவில்லை. அவள் எழுந்திருக்க வில்லை.

''கடற்கறைக்கு உலாவப்போனது எப்படியிருக் கிறது?'' என்றேன். கண்கள் மூடியபடியே புன்னகை புரிந்தாள். அவசரமாய் வேலைக்குப் போனேன்.

நான் மாலை திரும்புகையில் வீட்டில் சந்தடியில்லை. கட்டிலில் நான் விட்டுப் போனபடியே படுத்திருந்தாள். கண் திறக்கவில்லை. பகீரென்றது.

''என்னடி!''

நெற்றியில் கை வைத்தேன். மழுவாய்க் காய்ந்தது. மூச்சிருந்ததேயொழிய பேச்சில்லை. கருமான் பட்டறை போல் ஆவியடிக்கும் அனல் மூச்சு.

டாக்டர் வந்து என்னவோ புரட்டிப் புரட்டி பரீக்ஷை செய்து பார்த்தார். ஸ்மரணையற்று, போட்டது போட்டபடி கிடந்தது அந்த உடம்பு. நின்ற இடத்தில் நிற்காது துருதுருக்கும் உடம்பு!

"இது நீங்கள் ஒண்டியாய் சமாளிக்க முடியாது" என்றார். மூஞ்சியை முழநீளம் வைத்துக்கொண்டு, "ஆஸ்பத்திரி."

"ஆஸ்—பத்—தி—ரி?"

நேற்றிரவு வெறி பிடித்து விளையாடினோம். இன்று ஆஸ்பத்திரி!

"விஷயம் முற்றிவிட்டது ஸார். வீட்டில் பெரியவாள் யாராவது இருந்தால் வரவழையுங்கள்."

அம்மாவுக்குத் தந்தியா? நான் என்னுள் ஒடுங்கிப் போனேன்.

"ஆஸ்பத்திரியில்கூட கூட்டத்தில் கோவிந்தா ஆகி விடும். வீட்டில் பெரியவாள் யாராவது இருக்கட்டும். நான் வந்து பார்க்கிறேன், என்னவோ?"

உள்பிரக்ஞையிருக்கையிலேயே மண்டையில் சம்மட்டி யிலடிப்பது போலிருந்தது. அம்மாவுக்குத் தந்தியடிக்க விலாசத்தையும் பணத்தையும் அவரிடமே கொடுத்து விட்டுக் கட்டிலண்டை வந்து உட்கார்ந்தவன்தான், எத்தனை நாழி இப்படி இடம் பெயராது திக்பிரமை கொண்டு உட்கார்ந்திருந்தேனோ அறியேன்.

என்னில் என்னென்ன எண்ணங்கள் ஓடின அறியேன். வெளியே அடைமழை பெய்துகொண்டிருந்தது நினைவிருக்கிறது. எங்களுக்கு நம்பிக்கையிருக்கிறதோ யில்லையோ, ஒரு நாளும் தவறாது எரியும் சுவாமி விளக்கு இரண்டு நாளாய் எரியவில்லை. அது நினைவிருக்கிறது.

கண்ணெதிரில் கடுஞ்சுரம் அவள் பசுமையை உறிஞ்சு வதைப் பார்த்துக்கொண்டிருந்தேன். அது நினைவிருக் கிறது.

வைத்தியர் தினம் மூன்று தடவை வந்தார். ஒவ்வொரு தடவையும் அவர் முகம் சுண்டியது. அது ஞாபகமிருக்கிறது.

என் தோளைப் பிடித்துக் குலுக்கினார். ''தைரியமா யிருமய்யா. உமக்கு முதலில் ஒரு ஊசி போட வேண்டும் போலிருக்கிறது. இந்த மும்முரத்தில் ஒரு மருந்தும் ஒன்றும் செய்வதற்கில்லை. இன்று ராத்திரி தாண்டணும். நீர் கூடியவரைக்கும் தெம்பாயிரும். நீங்கள் இப்படி யிருந்தால் அப்புறம் படித்தவனுக்கும் படியாதவனுக்கும் என்ன வித்தியாசமிருக்கிறது?''

நாங்கள் படித்தவருமில்லை; படியாதவருமில்லை. நாங்கள் மிருகங்கள்.

''இளம் வயது— அதுதான் தாக்குப் பிடிக்கவேணும்— உங்க அம்மா வந்துவிட்டாரா?''

அம்மா, மாலை அஸ்தமன வேளைக்கு வந்தாள். என்னுடன் பேசவில்லை. கட்டிலில் படுத்திருந்தவள் முகத்தை ஒரேமுறை பார்த்தாள். நாடியைத் தொட்டாள். நேரே குழாயடிக்குப் போய் ஸ்னானம் பண்ணினாள். நெற்றிக்கிட்டுக் கொண்டு சுவாமி விளக்கையேற்றி வைத்து எதிரே உட்கார்ந்துவிட்டாள்.

பிறகுதான் எனக்கு உள் பிரக்ஞை வெளியிலும் சிறுகச் சிறுகப் பாவி நினைவு தொடர ஆரம்பித்தது.

இரண்டே நாள் ஜுரம் அந்த உடலை சக்கையாய் சப்பியெறிந்துவிட்டது. உருவம் கூடச் சிறுத்துவிட்டது. மூச்சு நூலிழைந்தது.

படுத்ததிலிருந்து அந்த வாயினின்று ஒரு முனகல்கூட எழவில்லை. மிருகம்போலவே நோயை மௌனமாய் அனுபவித்துக் கொண்டிருந்தாள். கூந்தல் கட்டிலிலிருந்து படுதாப்போலிறங்கி வீழ்ந்து முகம் கண்ணாடிபோல் ஒரேயடியாய்த் தெளிந்து போயிருந்தது.

அம்மா எழுந்து வந்து மருமகள் நெற்றியில் விபூதியை யிட்டாள். என்னை, ''நீ போய் படுத்துக்கொள்'' என்றாள். நான் சின்னக் குழந்தையைப்போல் பேசாமல், ரேழித் திண்ணையில் படுத்துக்கொண்டேன்.

மணி ஒன்று, ரெண்டு, மூணு, நாலு.

''அம்பீ!''

அடி வயிற்றில், நெருப்பை அப்படியே கொட்டிற்று. அதே சமயம், வாசலில் டாக்டரின் காரும் வந்து நின்றது. இருவரும் சேர்ந்து உள்ளே போனோம்.

அரைக் கண்ணாயிருந்த இமைகள் முழுவதும் மூடிவிட்டன. டாக்டர் நாடியைப் பிடித்துப் பார்த்தார். நன்றாகப் பரிசோதித்துப் பார்த்தார். அவர் முகம் மலர்ந்தது.

''ஐயம் ஸார்! கண்டம் தப்பித்தது ஸார்!''

அம்மா ஏதோ பேச முயன்று கையைத் தூக்கி ஜாடை காட்டினாள். வாய் திறந்து திறந்து கண்கள் பெருகின. சுவாமி பிறையண்டை போய் தடாலென்று விழுந்து விட்டாள்.

அது நினைவிருக்கிறது.

உடம்பு படிப்படியாய்த் தேறி வந்தது. அம்மா கைராசியிலும், அம்மா போடும் பத்தியத்திலும், அம்மா பண்ணும் சம்ரக்ஷணையிலும் உயிரற்றதுகூட உயிர் பெற்றுவிடும். அப்படித்தானே ஆயிற்று!

எழுந்து நடமாட மாதமாகிவிட்டது.

அன்றுதான், படுக்கையினின்று எழுந்தபின் முதன் முதலாகத் தலைக்குத் தண்ணீர் விட்டது.

பிற்பகல் மணி மூன்றிருக்கும். நான் கூடத்து ஊஞ்சலில் உட்கார்ந்திருந்தேன்.

பச்சைப் புடவை உடுத்தி, உலர வளர்த்திய கூந்தல், முழங்கால் வரை தொங்க, இன்னமும் பஞ்சடைப்பு முற்றிலும் மறையாத கண்களில் கனிந்த பார்வையுடன், ஆடி அசைந்து நடந்து என்னருகில் வந்து ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்துக்கொண்டு நின்றாள். வெற்றிலையைக் கன்னத்தின் ஓரத்தில் அடக்கிக்கொண்டிருந்தாள். பளபளக்கச் சிவந்திருந்த உதடுகளில் புன்னகை பரவியது.

கிடந்து தேறியது முதல் அவள் வசீகரம் முன்னிலும் பன்மடங்கு அதிகரித்திருந்தது. பழைய முரட்டுத்தனம் தணிந்து ஒரு தனி அடக்கமும் அமைதியும் வந்திருந்தன— கச்சேரி முடிவில், கார்வையும் மெருகேறிய குரலில் விஸ்தரிக்கும் ராகத்தின் கனிவைப்போல், நெருப்பில் நயம் துலங்கும் தங்கம்போல்.

நாங்கள் பேசவில்லை. பேச என்ன இருக்கிறது? இதயங்களில் அமைதி விளிம்பு கட்டி இருந்தது. அந்நிலையின் நிர்ச்சலனத்தினாலேயே, இந்த முத்திநிலை இப்படியே இருக்குமா என்ற சந்தேகம் உடனேயே உண்டாகி விட்டது. ஊஞ்சல் சங்கிலியைப் பிடித்திருந்த என் கைமேல், அவள் கை பொத்திற்று.

"குழந்தைகளா!"

அம்மா பூஜை அறையிலிருந்து கூப்பிட்டாள்.

என்ன காரணம் எங்களுக்கே தெரியவில்லை. சொல்லி வைத்தாற்போல், இருவரும் சேர்ந்தே நமஸ்கரித்தோம். அம்மா ஆசீர்வதித்தாள்.

"உட்கார்ந்து கொள்ளுங்கள். ஒன்று சொல்லத்தான் உங்களைக் கூப்பிட்டேன்."

நாங்கள் பேசாது காத்திருந்தோம்— சின்னக் குழந்தைகள் போல்.

"நீங்கள் இரண்டுபேருமே ரொம்பக் கஷ்டப்பட்டு விட்டீர்கள். சுவாமி புண்ணியத்தில், மலைபோல் வந்தது பனிபோல் நீங்கியது. என் குழந்தை பிழைத்தது அந்தத் திருப்பதி வெங்கடாஜலபதியின் கிருபைதான் தவிர வேறு என்ன சொல்ல இருக்கிறது? என்றைக்கும் ஒன்று வைத்துக் கொள்ளுங்கள். சுவாமிமேல் பாரத்தைப் போட்டுவிட்டு எதைச் செய்தாலும் அவர் பார்த்துக்கொள்வார். நாம் இவ்வளவாவது உண்டு உடுத்து உயிர் வாழ்வதே அவரால் தான். அவனன்றி ஒரு அணுவும் அசையாது. எப்பவும் அவனை நம்புங்கள். அவனை நம்பி வேண்டிக் கொண்டேன். இவள் பிழைத்தாள். ஆகையால் இப் பொழுது வேண்டுதலையை நிறைவேற்றிவிட வேண்டும். அவன் தன்னால் செய்யவேண்டியதைச் செய்துவிட்டான். நம்முடைய பிரார்த்தனைதான் பாக்கி. தெய்வத்திற்குச் செலுத்த வேண்டியதை முன்னைக்கு முன்னால் செய்து விட வேண்டும். அதை ஒத்திப்போடக் கூடாது. நான் தீர்மானம் பண்ணிவிட்டேன். ஞாயிற்றுக்கிழமை நல்ல நாளாயிருக்கிறது. திருப்பதிக்குப் புறப்படணும். இவள் மயிரை முடியிறக்குவதாக வேண்டிக் கொண்டிருக் கிறேன்!"

தலை சுழன்றது அம்மா இன்னும் ஏன் மூச்சு விடாமல் பேசிக்கொண்டே போகிறாள்?

ஓரக்கண்ணால் என் பக்கத்தில் உட்கார்ந்திருந்த வளைக் கவனித்தேன். அவள் புன்னகை உயிரற்று, அப்படியே உறைந்து போயிருந்தது. சிட்டுக்குருவி சிறகு போல் அடித்துக்கொள்ளும் இதயத்தின் பதைபதைப்பை அடக்க ஒரு கை மார்பை நாடிப்போயிருந்தது. இன்னொரு கை, குதிகால் சதையை, ரத்தம் கசிவதுகூடத் தெரியாது பிய்த்துக்கொண்டிருந்தது.

நாளை ஞாயிற்றுக் கிழமை—

இன்னும் இரண்டரை நாட்கள்தான் முழங்கால் வரை தொங்கும் மயிர்—அபூர்வ ராகத்தின் ஜீவஸ்ரம்—பிறகு?

இதென்ன கூந்தலுக்கா இவ்வளவு பிரமாதம், இன்னும் ஆறு மாதமோ ஒரு வருஷமோ போனால் தானே வளருகிறது. தவிர சுவாமிதானே சாகக் கிடந்தவளைக் காப்பாற்றிக் கொடுத்தார். அவருக்குச் சேர வேண்டிய தைச் செலுத்தித்தானே ஆக வேண்டும்! எல்லோரும் வேண்டிக்கொள்ளவில்லையா, இதென்ன புதிதா?

எல்லாம் புரிகிறது. ஆனால் இதெல்லாம் எங்களுக்கு வேண்டாம். நாங்கள் மிருகங்கள். அடுத்த நிமிடத்தில் எங்களுக்கு நம்பிக்கை கிடையாது. ஒவ்வொரு நிமிஷத் தையும் அந்தந்த நிமிஷத்திற்குப் பூராவாக அநுபவிப்பது தான் எங்களுடைய அடிப்படையான இயல்பு. வளைந்து கொடுக்கும் பழக்கம் எங்களுக்கில்லை. நாங்கள் அடங்க வேண்டுமெனில் எங்களை ஒடித்துத்தானாக வேண்டும்.

இந்த இரண்டு நாளும் நாங்களிருவரும் இதைப் பற்றிப்பேசவில்லை. அவள் தன் மனதிலிருப்பதை விட்டுக் கொடுக்கவில்லை. சற்றே காற்றடித்தாலும் சப்திக்கும் முறுக்கேறிய தந்தி போல் அவள் ஒரு புதுக் கலகலப்பாய் இருந்தாள். அவள் சிரிப்பில், கண்ணாடி உடையும் சத்தம் போல் ஒரு சிறு அலறல் ஒலித்தது. இதைத் தவிர மற்றதெல்லாம் பேசினோம், சிரித்தோம், கொம்மாளமடித்தோம். ஆயினும் இது தவிர வேறேதுவும் எங்கள் நினைவில் இல்லை.

எனக்குப் பேச வாயில்லையோ, அல்லது சொல்ல வகையில்லையோ, நான் தனியனாகிவிட்டேன். அவள் இப்படி வேண்டியில்லாத ஒரு வனப்பில் ஜ்வலிப்பதைத் தடுக்கவோ, தணிக்கவோ, வழியில்லாது வெறுமென பார்த்துத் தவித்துக் கொண்டிருந்தேன்.

மறுநாள் காலை வண்டி.

இரவில் அறையில் நுழைந்தேன். அவள் கண்ணாடி எதிரில் உட்கார்ந்துகொண்டு, மயிரை அழுந்தப் பளபளவெனச் சீவி வாரி முடிந்து கொண்டிருந்தாள். என் மனதில் என்னென்னவோ எழும்பிக் குழப்பிற்று. என்னைப் பார்த்துப் புன்னகை புரிந்தாள்.

''உங்களை ஒரு கேள்வி கேட்க வேண்டுமென ரொம்ப நாளாய் எண்ணம்'' என்றாள்.

''என்ன?''

''நான் கிடந்தபோது ஏதாவது ஜன்னியில் பிதற்றினேனா? அபஸ்வரம் பேசினேனா?''

''அபூர்வ ராகத்திற்கு அபஸ்வரம் கிடையாது'' என்றேன்.

''சரி நான் அப்பொழுது இறந்திருந்தால் நன்றா யிருந்திருக்குமோ?''

''இதென்ன கேள்வி!''

''பதில் சொல்ல முடியுமா, சொல்லத் தைரிய மில்லையா?''

''எப்படி நன்றாக இருந்திருக்கும்? அபூர்வ ராகத்தின் நிரடலான நிரவல் கட்டத்தில் ராகம் தவறில் அதைவிட அவமானம் உண்டோ?''

''ஆனாலும் பிடிப்பின் எடுப்பாய்ப் பூராவும் இருக்க முடியுமா?'' எதற்காக என்ன கேட்கிறாள் என்று புரிந்தும் புரியாது தவித்தேன். ''ராகம் தன் இயல்பு மாறாதவரை எப்படியிருந்தாலும் சுஸ்வரந்தான். இந்த மூடுமந்திரம் ஏன், பளிச்சென்று சொல்லேன்.''

கையில் சீப்பை வைத்துக்கொண்டு ஏற இறங்க என்னை ஒருமுறை மலர விழித்துப் பார்த்தாள். அங்கு ஆயிரம் கேள்விகள் குமுறின.

''இயல்பு என்று சொல்வதன் அர்த்தம் என்ன? பட்சிகளுக்குப் பறப்பதுதான் இயல்பு. இறக்கையை ஒடித்துவிட்டு இயல்பு மாறாதவரை பட்சி பட்சிதான் என்றால் என்ன சரி? ராகத்திற்கும் பட்சிக்கும் என்ன வித்தியாசம்? இரண்டிற்கும் மேல் சஞ்சாரம்தானே!''

''இப்போ என்னவென்கிறாய்?''

''ஒன்றுமில்லை. ராகத்தின் முடிவும் எடுப்பாய்த்தானிருத்தல் வேண்டும்.'' கொண்டையைப் போட்டுக்கொண்டு எழுந்தாள்.

''எங்கே''

''கீழே போகணும். இதோ வருகிறேன்...''

படுக்கையில் உட்கார்ந்தபடி யோசனையில் ஆழ்ந்தேன். வெளிப்படையாகச் சொல்லி ஆற்றிக் கொள்வதில் ஆறுதலுண்டு. இப்படி வெளிக்காண்பிக்காமலே உள்படும் வேதனைதான் சகிக்க முடியவில்லை.

நிம்மதியற்ற உறக்கத்தில் கண்கள் செருகின.

நாளைக் காலை எழுந்ததும் அம்மாவிடம் சொல்லி விடுகிறேன். திருப்பதிக்குப் போவது முடியாது. அம்மா சும்மாயிருக்க மாட்டாள். வீட்டில் ரகளை நடக்கத்தான் போகிறது. நடக்கட்டும். கண்டிப்பாய் நடந்தே தீரும். இருந்தும் வேறு வழியில்லை. இதனால் தெய்வ கோபத்திற்கு ஆளானாலும் சரி. இதற்காக அம்மாவிடமிருந்து கண் மறைவாய் இருக்கும்படி நேர்ந்தாலும் சரி, தெய்வத்தினிடமிருந்து ஓடும்படியிருந்தாலும் சரி. எங்கேயாயினும் இருவரும் போய்விடுவோம். இதற்காக எங்கள் சுபாவம் மீறி எப்படியிருக்க முடியும்?

அவளிடம் சொல்ல, அவளையெழுப்புவதற்காக அவள் பக்கம் கையை நீட்டினேன். அவள் இடம் வெறிச்சென்றிருந்தது. விழித்துக்கொண்டேன்.

அவளைக் காணோம். 'வருகிறேன்' என்று போனவள் இன்னும் திரும்பி வரவில்லை.

வரமாட்டாள் என்றும் எனக்கு உடனே தெரிந்து விட்டது.

எனக்குத் தோன்றியதே தீர்மானமாய் கடியாரத்தில் மணி அடித்தது. கூவிக்கொண்டே கீழே ஓடினேன். அம்மா விசுப்பலகையினின்று திடுக்கென்று விழித்துக் கொண்டு எழுந்தாள்.

''என்னடா?''

''அவளைக் காணோமே அம்மா?''

''என்னடா பேத்தறே?''

''அவளைக் காணோமே அம்மா!' அம்மா பரக்கப் பரக்க வாசலுக்கும் கொல்லைப்புறத்திற்கும் ஓடினாள்.

அவள் எங்கே அம்மா அகப்படப் போகிறாள்?

''என்னடா அம்பி உக்காந்துட்டே? தேடேண்டா. என்னாவது பண்ணேண்டா. ஐயோ! என் குழந்தையைக் காணோமேடா!''

எனக்கு பெரும் ஓய்ச்சல் கண்டுவிட்டது.

''பிரயோசனமில்லையம்மா, அவள் அகப்பட மாட்டாள். அவளுடைய உயிரற்ற உடலை நாம் காணக் கூட அவள் இசையாள். சுறா மீன்களுக்கு இரையானா லும் ஆவேனென்று, சமுத்திரத்திற்குள் நடந்து போய் விட்டாள். கடவுளுக்கு மயிரைக் கேட்டாய். உயிரையே கொடுத்துவிட்டாள் போ! அவள் சொல்லிக்கொண்டு தான் போனாள். எனக்குத்தான் தெரியவில்லை. ராகம் முடிந்துவிட்டது. இனி, வீணை வீணையாய் உபயோகப் படாது. அடுப்பில் வைக்கத்தான் சரி நான் என்னுள் இறந்துவிட்டேன்; இறந்தே போனேன். நீ எதைச் சொன்னாலும் கேட்கத் தயார்—''

# தரிசனம்

எனக்கு வயது பன்னிரண்டிலேயே கன்யாகுமரிமேல் காணாமலே காதல் கொண்டுவிட்டேன். நான் குமரன். அவள் குமரி. முதன் முதலில் காதல் வரும் வயதில் வரும் போதே மரங்களைச் சாய்க்கும் புயல் போன்ற காதல்.

காரணங்கள், எங்கள் குடும்பம் மூன்று தலைமுறை களாகவே சென்னைவாசிகள். எங்களுக்கு வெளிப் பிரயாணத்திற்கு வாய்ப்பு இல்லை. வசதியுமில்லை. வீட்டிலிருந்து வேலைக்கு. (வீட்டிற்குப் பெரியவர்களைச் சொல்கிறேன்) மாலை, வேலையிலிருந்து வீடு. சனி, ஞாயிறு மற்றும் விடுமுறைகளில் கடற்கரைக் காற்று.

அந்நாளில் கடற்கரையில் இவ்வளவு கூட்டமுமில்லை. கடுகு தெளித்தாற்போல் தூரத்துக்கு தூரம் கறுப்பும், சிவப்பும், வெள்ளையுமாய்ப் புள்ளிகள் அசையும், நகரும், ஆடும்.

உருளைக்கிழங்கு மஸாலா கறியும், வெங்காய சாம்பாரும் சம்பள வாரத்தில் சமைத்துவிட்டால், குழம்பைத் தாண்ட மாட்டோம். மோருக்கு லீவு. அன்று பூரா சாம்பார் சாதத்தை வெட்டுவோம். பள்ளி யில், மதியத்தில் அலுமினியத்தில் (எவர்சில்வராமே...! எப்படி இருக்கும்?) சம்புடத்தைத் திறந்ததும், குழம்பு

சாதத்தில் இரண்டு உருளைக்கிழங்குப் பத்தைகள் புதைந் திருந்தால் உவகைக்கு கேட்கவே வேண்டாம். நாக்கு சுரக்கையில் தாடை நரம்புகள் இழுக்கும். 'சுறீ'லெடுக்கும்.

அன்று உருளைக்கிழங்கின் விலை வீசை 5 அணா. 6 அணா.

முழுக் கத்திரிக்காயை வாயைப் பிளந்து, காரப்பொடி யைத் திணித்துப் பொன்னிறத்தில் எண்ணெயில் வதக்கி, மைசூர் ரசமும் வைத்துவிட்டால்—ஐயோ! ஐயோ! சொர்க்கம். இல்லை. எனக்கு சொர்க்கம் வேண்டாம். ரசமே போறும்.

எங்களை உருவாக்கிய அந்நாளையச் சமையல்கள். ருசிகள், பசிகள், நடப்பு, பெரியோர் சிறியோர், தாரதம்மியம், மட்டு மரியாதை, பேச்சு, அடக்கம், ஒளிவு, இலை, தழை, காய், பூமறைவு, ஆசைகள், கோபங்கள், அன்புகள், மயக்கங்கள் எல்லாமே வேறு.

(காலத்தோடு ஒத்துப் போகாது இந்தக் கிழங்குள்; என்றுமே இதுகளுக்கு 'அந்த நாளும் வந்திடாதோ?' பாட்டுத்தான்!)

பொறி கண்டது பொரிந்துவிடாது. கொழுந்து விட் டெரியக் கூசினாலும் தழல் கனிந்து தனக்கே ஒளிந்து வளர்கையில்.

எனக்கு எப்படித் தெரியும்?

இந்த நாள்தான், ஆண் பெண் அடங்கலாக எல்லாம் கெட்ட வெளிச்சம். நெஞ்சத்தின் ஈரத்தையே சுவர்க்கும் வெளிச்சத்தின் வெய்யிலாப் போச்சே!

''காதலா? கலியா? முளைச்சு மூணு இலை விடல்லே? பிஞ்சிலே பழுத்த வெம்பல், அதுவும் யார் மேல். அபராதம்! அபராதம்!! க்ஷமிக்ஷ்வா க்ஷமிக்கணும்.

முன்னால் வாயை அலம்பு. கை, கால் சுத்தி பண்ணிண்டு விபூதியிடு. உதிரி வித்தை வேண்டாம். குழைச்சு பட்டை பட்டையா. சுவாமி படத்துக்குத் தோப்புக்கரணம் போடு—இரு. விளக்கை ஏத்தறேன். அம்பாளை மன்னிப்புக் கேள். ஜகன்மாதா! பத்து நாளைக்குப் பயலுக்கு ராச்சோறில் மண்ணை வெட்டிக்கொட்டு. குடும்பத்தின் பேரைக் கெடுக்க எங்கிருந்துடா முளைச்சே? உனக்காக நானும் பிராயச்சித்தம் 108 காயத்ரி பண்றேன்—வேளை போறாத நேரத்தில் பாவி வேலை வைக்கிறான். அடியே வண்டைக்காய் வாங்கிண்டு வந்திருக்கேன். மறக்காமல் குழம்பில் வதக்கிப் போடு! போடறையா? போடறேன்னு சொல்லேன்! வாயில் கொழுக்கட்டையா அடைச்சிருக்கு?''

நல்ல வேளை!

இப்படியெல்லாம் கேட்பீர்கள்...மண்ணில் கழுத்து வரை புதைத்துத் தலையை இடறுவீர்கள் என்று தெரிந்து தான் என் காதலை உங்களிடம் தெரிவிக்கவில்லை. ஆமாம், கேட்கிறேன். காதலெனும் பேருக்கே இந்த பூச்சாண்டியா? அப்பா, அம்மா, தாத்தா, பாட்டி எல்லாம் நீங்கள் இரவு உங்களைக் காலைப் பிடிக்கையில் சொன்ன கதைதானே!

'நாளைக்கு நாளைக்கு' என்று நந்தனுக்குக் கண்டது என்ன? மூன்றே நாளில் கண்ணப்பன் முத்தி கண்டது என்ன? அவர்களுக்கு நேர்ந்தது எனக்கு நேரக்கூடாதா?

''அவாள் எல்லோரும் அவதார புருஷாள். லோகத் துக்கு காண்பிக்க வந்தவாள் (என்னத்தை?) அறுவத்தி மூணு நாயன்மார்கள். நீ கேவலம்—சீ எதிர்த்தா பேசுறே? மூடு வாயை. எழுந்திருந்தேன்னா விசிறிக்கட்டை பிஞ்சுடும்.''

அதனால்தான் உங்களைக் கேட்கவில்லை

ஆனால், அப்போ எல்லாமே வெறும் கதைதானோ? கன்யாகுமரிக்குப் போய் வந்த உறவினர்கள், தெரிந்தவர்கள், தெரியாதவர்கள், இரவு வேளைக்கு வாசல் திண்ணையில் ஒதுங்கிய பைராகிகள், யாத்ரிகள், கதை சொல்லி, மஹிமை சொல்லி, விசிறிவிட்ட வியப்பு, சென்னைக் கடற்கரையின் மாலைக் காற்றில் அந்திவானத்தின் வர்ண ஜாலங்களில், காலை வேலையில் கடல் விளிம்பில், சூரியனின் உதய வாயில், கரையோரம் ஓடத்தின் நிழலில், கட்டைமரத்தின் மேல் சாய்ந்தபடி சிந்தனையில் கொழுந்துவிட்டு, கண்டவர் கையோடு கொண்டுவந்த குங்குமம் கிளிஞ்சல் மாலை, சாய மண் என் கனவிற்கு கலவைகூட்டி, ஏக்கமாய்க் கட்டி, அதுவே அதிலேயே, அது வாய்ப்பந்தல் படர்ந்தது.

சூர்ய உதயம், அஸ்தமனம் இரண்டுமே குமரியில் காணலாமாமே!

அவள் மூக்குத்தியே மணிக்கூண்டாமே!

கன்யாகுமரி.

பேரிலேயே, பேருக்குள்ளேயே ஏதேதோ நீரோட்டங்கள் விளையாடுகின்றன. நெஞ்சை மீட்டுகின்றன.

அவள் குமரி! நான் குமரன்.

கடலோரம் கோவில், பாறை, பாறைகள், நெஞ்சிலும் பாறைகள். பாறைகளின் மேல் அலைகளின் மோதல்கள், சொல்லுள் அடைபடாது. என் கற்பனைக்கே சொந்தமான கதைகள், கவிதைகள். கதையின் நிழல்கள், நீழல்களின் காதைகள், கமகமப்புகள், கமகங்கள், இம்சைகள் சொல்ல முடிந்தவை, முடியாதவை. பேச்சில் முடிந்தவை, முடிந்தாலும் பங்கிட்டுக்கொள்ள மனம் வராதவை, சொல்லச் சொல்ல—இல்லை இல்லை தலை சுத்தறது.

சுற்றட்டும். மாரடைக்கட்டும். வெடிக்கவே வெடிக்கட்டுமே! உயிர் போகாதவரை மார்புள் விண்விண் கன்யாகுமரி. கடன்காரி.

இதற்காகத்தான். இதைத்தான் 'நெருப்பில் கை வைக்காதே' என்று பெரியவர்கள் கோபமெனும் பேரில் செய்த எச்சரிக்கையா?

ஆனால் என்னிஷ்டத்தில் என்ன இருக்கிறது?

மொட்டை மாடிமேல் கவிந்த வானத்தில் நக்ஷத்திரங்கள் என்னிடம் ஏதோ சொல்லத் தவித்து மூச்சு விடுகின்றன. இங்கு மட்டுமல்ல. இதே சமயத்தில் கன்யா குமரியையும் கவிந்துகொண்டிருக்கிறோம் என்றா?

அங்கு மாரிக்காலத்தில் மழை மேகங்கள் கடல்மேல், ஜலரஸம் ஓட, லொங்கு லொங்கென்று குடம் குடமாய், பழம் பழமாய் நாங்கள் தொங்குவதை நீ பார்க்க வேண்டாமா? அவள் அபிஷேக சுந்தரி. கடல் நீரில் குளிக்கும் கன்யாகுமரி.

சப்தரிஷி மண்டலம் நெஞ்சில் ஏர் பிடித்து உழுகிறது; புவனமே ஒரு ரஸகுண்டு. நம் அவ்வப்போதைய எண்ணங்களின், ஏக்கங்களின் வர்ணங்களை, சாயங்களை உள்ளுக்கு வாங்கிக்கொண்டு ஆசை காட்டிக்கொண்டு மினுமினுக்கிறது.

இரவு நேரத்தில் என்ன வெளிச்சம் எரிகிறது? சொக்கப் பானையா? இவ்வளவு பெரிய திருஷ்டி கழிப்பா? பிணமா? இத்தனை விதங்களில் நானா?

ஏன்?

ஏன்? ஏன்?? ஏன்???

எதிர்வீட்டிலிருந்து வீணையில் மோகனம் கிளம்பி நெஞ்சில் கொக்கி மாட்டியிருக்கிறது.

மோகனமா? கல்யாணியா? மோகன கல்யாணியா?

குங்கிலியச்சுடர் போன்று 'குபுக் குபுக்'—ஸ்வரப்பந்துகள் குபீரிடுகின்றன, குவிகின்றன, குலைகின்றன, குழைகின்றன, குமைகின்றன.

இந்த ராகமுமில்லை, அந்த ராகமுமில்லை. எந்த ராகமுமில்லை, ஆத்மாவின் ராகம் ஒரே ராகம்; அவரவர் உடன் கொண்டுவரும் அவரவரின் சொந்த ராகம். பிறவிக் காட்டில் மாட்டிக்கொண்டு திக்குத் தெரியாமல் எதிர்க் குரல் தேடி அலையும் அபயக் குரல்.

எதிர்வீட்டில் ஒரு பெண். வயது முப்பத்திரண்டாம். இன்னும் கல்யாணம் ஆகவில்லையாம். இங்கு நாங்கள் குடி வந்ததிலிருந்து நான் இன்னும் அவளை முகம் பார்த்ததில்லை. ஜன்னல் பக்கம் நிழல், மாடியில் துணி உலர்த்தவோ, கூந்தலை ஆற்றவோ, மாலை வேளையில் காற்று வாங்கவோ—ஊஹூம்.

அவளை அவள் பயிலும் வீணையின் இசையாய்த்தான் அறிவேன். தன் ஆவியின் கொந்தளிப்பை வீணையில் ஆஹுதியாய்ச் சொரிகின்றாள். அவள் தாபத்தின் தஹிப்புக்கு வீணை வெறும் வடிகாலாய் இல்லை. இன்று இவள் வாசிப்பைக் கேட்கையில் வீணை இவள் தலைவிதி. "என் வேளை வரும்போது என் சிதையில் என் வீணையை என் தலைவிதியை என்னோடு எரித்துவிடுங்கள், என் வேளையே! எப்போது வருவாய்?" என்கிற மாதிரி.

தன் கை பிடிக்க உகந்த புருஷனுக்குக் காத்திருந்து காத்திருந்து அவன் வராமல் கடைசியில் கல்யாணம் என்று ஆனால் போதும் என்கிற நிலைமைக்கு வந்தாகிவிட்டது. கன்யா—

—இனி குமரி இல்லை.

நாட்டில் பெண்களுக்குக் குறைவில்லை. பிள்ளைகளுக்கும் குறைவில்லை. ஆனால் தாலிமுடி ஏன் விழுவதில்லை?

ஏன்? 'ஏன்'களுக்கு முடிவே கிடையாதா?

என்றுமில்லாத் திருநாளாய் இன்றிரவு வெற்றிலை போட்டுக்கொள்ள ஆசை எழுந்தது. செல்லத்தைத் திறந்து ஒரு வெற்றிலையை எடுத்துத் தொடையில்

துடைத்தேன். நரம்புகளில் மஞ்சள் படர்ந்துவிட்டது. இன்று காலைதான் இளசு கண்டு மயங்கி, இளசுக்காகவே வாங்கினது.

ஆமாம். நான் என்ன வாழ்ந்தேன்? முதன் முதலாய் என்னைக் கன்னிக் காதல் சுட்ட வாய்மையில், வீட்டை விட்டு ஓடி நடந்தே கன்யாகுமரியை அடைவேன் என்று நினைத்த மூர்க்கமெல்லாம் எங்கே போயிற்று? அறுபத்தி நான்காவது நாயனாராக ஆவதற்குப் பட்ட ஆசையெல் லாம் என்னவாயிற்று?

அப்பா காலமாகி, ஹேமா வந்து, ஒண்ணு, ரெண்டு—எண்ணிக்கோ—மூணு, நாலு, அஞ்சு—குடும்பம் பெருகி, வீடு குறுகி, அம்மா காலமாகி, (அவளுடன் போனது என்னென்னவோ) வீடு இரண்டாகி—குடும்பம் என்றால் எத்தனையோ சோதனைகள், மேடுபள்ளங்கள் (என் முகத்தில் கூடத்தான். முக்கியமாய் முகத்தில்) தலை நரைத்து, புருவம் நரைத்து ("சொட்டுக் காப்பி குடிச்சுக் குடிச்சே முடாக்குடி ஆயாச்சு. மாசக் கடைசியில் காப்பிப் பொடி உதைச்சால் வீடு ஒரே ரகளை! கட்டுப்படியும் ஆகல்லே. ஏன் உதைக்காது"); கரடிப் புருவங்களின்கீழ் விழிகள் அனற்பிழம்பு, ("அதென்ன எப்போப் பார்த் தாலும் விறைப்பு முழி? நாட்டுப் பெண்ணாய் இந்த வீட்டுக்கு வந்தது மொதக் கொண்டு பாக்கறேன். ஒருநாள் கூட சுமுகம் கிடையாதா?") பசி விழிகள்.

—இன்னமும் கன்யாகுமரியைக் காணப் போகிறேன்.

கடைசியில்—காத்திருந்த தவம் பலித்ததம்மா என்று சொல்லவா?

ஒரு நாள் நான் குடும்பமாய் மூட்டை முடிச்சுடன் (ஒரு ஸ்டௌவ், ஈயம் முழுக்க இலாத பாத்திரங்கள் இரண்டு. காப்பிப் பொடி, அஞ்சறைப் பெட்டி) ரயிலில்

பிரயாணம் செய்துகொண்டிருப்பதைக் காண்கிறேன். இது எப்படி நேர்ந்ததென்றுகூட எனக்கு நிச்சயமாய்த் தெரியாது. உத்யோகச் சலுகை ஏதோ கிடைத்தது.

மதுரை தாண்டும் வரைகூட திகைப்பு சரியாய்த் தெளியவில்லை. அவளை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறேன் என்பதை நம்ப முடியவில்லை.

மதுரையில் மீனாக்ஷி.

தென்காசியில் லோகநாயகி (ஆமாம். இனிமேல் வட காசிக்குப் போகப் போறேனாக்கும்!) திருநெல்வேலியில்—மறந்து போச்சு.

நாகர்கோயில்...

கன்யாகுமரியில் கன்யாகுமரி.

விடுதியில் மூட்டை முடிச்சுகளை எறிந்துவிட்டு, கடலில் ஸ்னானம் செய்துவிட்டு, முன்னால் அவளையும் குழந்தைகளையும் போகவிட்டு நான் சற்றுப் பின் தங்குகிறேன். நெருங்க நெருங்க ஏன் ஒரு பயம்? திரும்பி விடலாமா?

இனிமேலா? நீ மட்டுமா? நடக்கிற காரியமா? அதற்குத் துணிச்சல் இருக்கிறதா? திரும்புதல் என்பதே கிடையாது. தெரியுமோன்னோ? திரும்புதல், மன்னிப்பு சென்று போனவை பரிகாரம், விடுதலை—ஏன், சொற்களே மாயமான்கள், மனிதன் துணை தேட அமைத்துக்கொண்ட கருவி. அவைகளின் அடிப்படை பயத்தின் மேல் மனித சுவர்க்கமே தாங்கி நிற்கிறது; பொய் மேல் எழுப்பிய பொய்க் கட்டிடம்.

காத்திருந்த வயது இத்தனை கழிந்தது கணக்குத் தெரியவில்லை. கோயில் வெளி வாசல் கடந்து ப்ராகாரம் தாண்டி, உள் வாசல் புகுந்து உள் ப்ராகாரத்தில் பாதி சுற்றி சன்னிதானத்தில் நுழைந்து, அவளுடன் நேருக்கு

நேர் ஆவதற்கு இருக்கும் இந்த சொற்ப நேரத்துக்கு வந்திருக்கும் கனத்தின் அழுத்தம், உள் பரபரப்புத்தான் தாங்க முடியவில்லை. ஒரு கையால் மார்பை அழுத்திக் கொள்கிறேன்.

திரும்பிவிடலாமா?

யாரோ எங்கோ சிரிக்கும் சப்தம்.

சன்னதியில் மின்விளக்கு கிடையாது. கர்ப்பக்ருஹத்தின் வாசல் ப்ரபை பூரா அடுக்கடுக்காய் அகல்ஜோதிகள் எரிகின்றன. அசப்பில், ஹோமகுண்டத்தின் நடுவே அவள் நிற்கிறாள்.

அபிஷேகம் நடந்து கொண்டிருக்கிறது.

இருளில் நெருங்கிய வெண்கல விளக்குகளின் சுடர் தரும் ஒளி, நிழலாட்டத்தின் செதுக்கலில் அவள் வெளிப்படுகிறாள்.

கற்பனையில் ஆவாஹனம் ஆகி, கவிதை (வெறும் சொற்கட்டுகள் அல்ல, இதயத்தின் அடிவார எழுச்சிகள்) ஊட்டி, அலங்கரித்து, உள் பார்வை காத்த உருவை, கேவலம் ஐம்புலன்களும் சேர்ந்த வெளிப்படையில் காண நேர்கையில் இத்தனை நாளையக் கனவு அந்தக் கணமே சிதைந்துபோகும் துக்கத்தைக் காட்டிலும் கொடுமை வேறு இல்லை—வேண்டாம்.

ஆனால் இங்கோ வேறு. புழு வெடித்துத் தட்டாரப் பூச்சி கிளம்புவது போல், கருப்பையில் பொத்திப் போற்றிச் சுமந்து வைத்திருந்த சிசு வெளியாகி, முதன் முதலாய்த் தாயின் கண்ணுக்குப் படுவது போல், நனவின் பொலிவு கனவையும் மீறிக் காட்டுகையில்—இந்த அனுபவத்தை விவரிப்பது எங்ஙனம்?

கண்டேன், உடைந்தேன். எனக்குக் கண்ட பயமே இதுதானோ? உன் விருப்பமும் இதுதானோ? உன் விருப்பத்தைத்தான் என் பயமாய்க் கண்டேனோ? ஏதேனும் தைரியம் சொல்லேண்டி—

சிற்பியின் செதுக்கல் முடிந்து முழுமை கண்டதும் அவனையே காலால் உதைத்து தள்ளிக் கொக்கரிக்கும் சௌந்தர்யம். கிணறு வெட்டப் பூதம். கல்லைச் செதுக்கிக் கன்யாகுமரி, கல்மேல் உளிபிடித்த கையை நடத்தியவளே நீதானோ? ஸஹிக்க முடியாத சௌந்தர்யம் என்றால் அது இதுதான்.

போதும் போதும் தேவி, உன் அழகைக் காண எனக்கு அருகதை ஏது என்று கண்ணைப் பொத்திக் கொண்டால், உள் இமையில் அவள் ஏற்கெனவே நின்று சிரிக்கிறாள்.

இத்தனை நாள் காத்திருந்து என்னைப் பார்க்கத் தானே இவ்வளவு தூரம் வந்திருக்கிறாய்!

அபிஷேகம் அந்த முடியிலிருந்து அந்த உடலில் வழிகையில் அந்தந்த திரவியத்தில் பளபளக்கிறாள், ஜ்வலிக்கிறாள், மினுமினுக்கிறாள். மிளிர்கிறாள், ஒளிர்கிறாள், அங்கங்கள் பிதுங்குகிறாள், உள்ளத்தைச் சூறையாடுகிறாள். பாலருவி முகத்தை வெளிச்சமாக்கி, தோள்களில் வழிந்து, மார்க்குலையில் இழிந்து அடிவயிற்றில் அலைபிரிந்து, சொரிந்து பாதங்களை நோக்கி இறங்குகிறது. குருக்கள் பரபரவெனத் தண்ணீரைச் சொம்பு சொம்பாய்க் கொட்டி அலம்பி, சட்டென சிலையின் ஒரு கையில் ருத்ராக்ஷ மாலையும் மறு கையில் கமண்டலத்தையும் கொடுத்துவிட்டார். ஆ, என்ன நேர்ந்துவிட்டது? தோற்றம் சட்டென மாறிவிட்டது.

தேவி திடீரென நீலச் சுடராகிவிட்ட விந்தையை என்ன சொல்ல? அபிடேகப் போதின் வெகுளியும் சிரிப்பும் எங்கே?

உடுக்கையும் மாட்டியாகி விட்டது.

கன்யாகுமரி காஷாயிணி.

பதினாறு வயது பச்சிளம் பாலா (இப்போதுதான் அரும்பு கட்டிய ஸ்தனங்கள்) திடீரெனப் பழுத்த தபஸ்வினி. அவள் தவத்தில் அவள் காய்ந்து கணகணக்கிறாள். முகத்தில் தவத்தின் கடுப்பு.

சீ—கிட்ட வராதே—என்னை யாரென்று நினைத்தாய்? நான் சிவசொத்து.

வியப்பில் ஆழ்கிறேன்.

உமையைப் பிரிந்த சிவம் அங்கு இமயமலைச் சிகரத்தில் தவமிருக்கிறான்.

இங்கு தென் கோடியில் அவனை அடைய இவள் தவம் கிடக்கிறாள். ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுக்க மாட்டார்கள். யார் முன்னால் தணிவது என்று இருவரும் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

காத்திருப்பது என்றால் என்ன?

இங்கு இத்தனை அழகும், அங்கு அத்தனை சௌகரியமும், ஒன்றுடன் ஒன்று ஒன்றா ஏங்கி, வரட்டு கர்வத்தில் வியர்த்தமாகப் போவதுதானா?

கப்பல்களைக் கவிழ்த்த கதைகளைத் தன்னுள் அடக்கிய அந்த மூக்குத்தி உண்மையில் கல்யாணமாகாமல் காத்திருக்கும் கன்னிகளின் ஏக்கம் ஒன்று திரண்ட கண்ணீர்ச் சொட்டு.

வீம்புத் தவம், வீண் தவத்தில் ஒருவருக்கொருவர் ஏன் அரண் கட்டிக் கொண்டேயிருக்கிறீர்கள்?

ஏன்?

அர்ச்சகர் அலங்காரம் செய்யத் திரையை இழுத்து விட்டார். 'ஏனா'கவே அவள் அதன்பின் மறைந்து போனாள்.

# கமலி

கமலாம்பிகே! ஜம்பு குருக்கள் துண்டை உதறிப் போட்டுத் திண்ணைமேல் உட்கார்ந்தார்.

பெயரைச் சொல்லிச் சொல்லி, அது மூச்சோடேயே கலந்துபோய், மூச்சும் நாமமும் வேறென்று நினைக்கவே மறந்துபோச்சு.

அம்மன் சன்னதிக்கு வெளியே சுவரை ஒட்டி ஒரு திண்ணை, அதில்தான் அவர் ஓழிந்த நேரங்களில் உட்காருவதும், சமயங்களில் இரவு படுப்பதும் வழக்கம். இன்று (பௌர்ணமி மட்டும்) நடு நிசியில், கர்ப்பக்ருஹத்தில் ஒரு சந்துவழி, சந்திரன் அம்மன் முகத்தை வியாபிக்கும்போது அவள் கண்கள் விழித்தெழுவதுபோல மாயங் காட்டுவதற்குக் காத்திருப்பார். அவருக்கு அது கண்கொளாக் காக்ஷி.

கமலாயதாக்ஷி.

ஏனோ தெரியவில்லை. மனது அலசிப் பிழிந்து உலாத்தினாப்போல், துல்லியமாய், லேசாய், குளுமை வழிந்து நிறைந்திருந்தது.

கைகளைக் கோர்த்து, தலைக்கு வைத்து மல்லாந்து படுத்தார். கண்ணுக்கு நேரே கூரையில் கல் தாமரை? இதவான மோனம் சூழ்ந்தது.

கோவிலுக்கடுத்தாற் போலேயே சொப்பாட்டம் வீடு. ஒரு சின்ன அறை, அதற்கேற்ற கூடம். இந்த இரண்டு கட்டைகளுக்குப் போதாதா?

அகிலா இரண்டாவது ஜாமத்தில் இருப்பாள். அவளுக்கு இப்போ கொஞ்சம் முடியல்லே. வயசாகல்லியா? இரண்டு பேருக்கும் வயசு வித்தியாசம் அஞ்சுக்குள். உறவு விட்டுப் போகாமல் இருக்க அவளுக்கு அஞ்சு வயசிலேயே போட்ட முடிச்சு. சட்டம் இருந்தாலும் கிராமத்துள் எட்டாது.

ஆனால் புத்ர பாக்யம் இல்லை. விரதங்கள் முழிச்சது தான் மிச்சம். யார்மேல் குத்தம்னு ஆராய விஞ்ஞானம் அந்த அளவுக்கு அப்போது வளரவில்லை. வளர்ந்திருந் தாலும் அதன் உதவியைத் தேடத் தோன்றியிருக்காது. நமக்கு ப்ராப்தி அவ்வளவுதான்; அகிலாண்டேசுவரியின் சித்தம், அதனால் நம் வசத்தில் என்ன இருக்கு?

உறவில் ஒரு பையனை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டார்.

பின்னால் தனக்கு வாரிசாயிருப்பான் என்று வரித்த பையன், ஒருநாள், கிழங்காட்டம் பொன் கட்டிய அவருடைய ருத்ராக்ஷ கண்டியை எடுத்துக்கொண்டு ராவோடு ராவாய் மறைந்தவன், போனவன் போயே போனாண்டி ஆனபின் ஆத்திரப்பட்டு, அழுது ஓய்ந்தபின், அகிலா ஒருமுறை கைகொட்டிச் சிரித்துவிட்டு, "இனி உங்களுக்கு நான் குழந்தை. எனக்கு நீங்கள் குழந்தை" என்று தேற்றினபோது, குருக்களுக்குப் புத்தி தெளிந்தது. ஆனால், இருந்த இடத்தில் தொடரப் பிடிக்கவில்லை. அன்று தென்னாட்டை உதறி வந்ததுதான், இங்கு வந்து நாற்பது வருடங்களுக்கு மேல் ஆகிறது.

இந்தக் கோவில் பெரிசு ஒழிய, ரட்சணையும் போஷணையும் போதாது. இன்னமும்தான். வந்த புதிதில், முதன் முதலாக அம்பாளை ஆள் உயரத்துக்கு, கிழிசல்

தோம்பும் பாவாடையில் கண்டதும், வயிறு ஒட்டிக் கொண்டது. இரண்டு கால பூஜை என்று பேர். நாட்டாமைக்காரிடமிருந்து தினம் இரண்டு படி அரிசி. அதுதான் சாமி நைவேத்யத்துக்கும் அவர் சம்பளத்துக்கும்.

தெய்வத்தின் தீன நிலை ஜம்பு குருக்களுக்குப் பலத்தைத் தந்தது. அல்லது அவருக்கே சமயத்துக்கு முகராசி வந்ததா? பார்க்க வேண்டிய இடங்களில், பார்க்க வேண்டியவர்களைப் பார்த்தார், கெஞ்சினார், அதட்டினார், கொஞ்சினார். முயற்சி ஓரளவுக்குத் திருவினை கண்டது. ஓரளவுக்குத்தான் அம்பாளுக்கு உடுக்கை மாற்ற முடிந்தது!

"கமலாம்பிகே! என் குழந்தே!"

ஆம், குழந்தைதான். மதமதவெனப் பதினாறு வயதுக் குழந்தை. வளர்த்திக்குக் கேட்பானேன்? தினே தினே எத்தனை நீராட்டல், எத்தனையெத்தனை ஸஹஸ்ரநாமங்கள் லக்ஷக்கணக்கில் சேர்ந்து அர்ச்சனையின் ஊட்டம்! சில சமயங்களில் தொங்கும் அகலில் சுடரின் நிழலாட்டத்தில் கல் ஓவியம் கண் திறந்தபடி சிரிப்பில் முன் பற்கள் இரண்டு லேசாய்த் தெரிவது போலும்—பரபரத்து நெருங்கி வந்து உற்றுப் பார்ப்பார். கல்லுக்கு அத்தனை நெகிழ்ச்சி ஸ்தபதியின் வெறும் கைத்திறன் மட்டுமல்ல, ஸ்வயார்ப்பணம். சிற்பி யாரோ? அவன் பேரும் அடையாளமும் தெரியாமல் இருப்பதால்தான் அவள் அநாதியாய், அத்தனை ஸெளந்தர்யவதியாய் விளங்குகிறாள்.

கமலாம்பிகை பற்றி அகிலாவுக்கு குருக்களின் படபடப்பு உண்டோ? யார் கண்டது? வெளியில் தெரியவில்லை. சுபாவத்திலேயே அவள் கொஞ்சம் கெட்டி. வளவளவென்றிருக்க மாட்டாள். சற்று விரக்தியானவள் கூட. கோவிலில், தேவி வழிபாடில் தன் கணவனின் உற்சாக ஈடுபாடுடன் அவள் இழையாவிட்டாலும் அவளுக்கும் பக்தி உண்டு. ஆசாரம் உண்டு.

குருக்கள் தூக்கத்தின் மெத்தான ஆலிங்கனத்தில் புரண்டு படுத்தார். செருகிய இமைகளின் கீற்றில் எட்ட ஒரு நீலப்பொறி தெரிந்தது. அது கிட்டக் கிட்ட நெருங்கு கையிலேயே பெரிதாகிக்கொண்டே வந்து, அந்த ராக்ஷஸச் சுடரின் தண்ணொளி கண் கூசிறறு. கண்ணைக் கசக்கிக் கொண்டு விழித்தபோது பொலபொலெனப் புலரும் வேளை, திண்ணையில் அவர் பக்கத்தில் வெகு நெருக்க மாய், அவர்மேல் இடித்துக்கொண்டு ஒரு உருவம் உட்கார்ந்திருந்தது. பதறி எழுந்தார்.

"நான்தான் அப்பா!" குரலில் ஆண் கார்வை. அவர் தோளைத் தொட்டாள். சிரித்தாள். 'ஏன் பயப்படறேள்?' பாவாடைத் தாவணியில் மதுமதவெனப் பதினாறு.

குருக்களுக்கு முகத்தின் அங்கங்கள் துடித்தன. வாயுள் நாக்குத் தடித்தது. இழுத்துவிடுமோ? "நீயா?"

"ஏன், நானாயிருக்கப்படாதா?"

கைகள் கூப்பிக்கொண்டன.

"ஜகன்மாதா, நீ என்னை அப்பா என்று அழைக்கும் விபரீதம் என்ன? அபராதம் ஏதேனும் நேர்ந்துநித்தா? மன்னிச்சுடு தாயே, மன்னிச்சுடு." கண்கள் துளும்பின.

"உம்—என்ன உளறல்? ஆசைப்பட்டு வந்திருக்கேன்!'

அவர் பார்வை அவரை அறியாமலே கர்ப்பக்ருஹத் துள் சென்றது.

"அங்கே என்ன இருக்கு, கல்தான்!" கைகொட்டிச் சிரித்தாள். "நான் இங்கேன்னா இருக்கேன், அப்பா நீங்கள் வளர்த்த நான். அப்பா, நீங்கதான் சொல்லணும். மனுஷாள் என்னைக் கல்லில் பார்க்கத் தயாராயிருக்காள், ஆனால் உயிரில் பார்க்க ஏன் பயப்படறாள்?' அவர் களுக்கே இஷ்டமில்லையா?"—அவள் கண்கள் பளபளத்தன. கண்ணீரிலா?

''தேவி, என்னை—எங்களை மன்னிச்சுடு''

''ஸ்ப்!'' கூம்பலில் உறைந்துபோன அவர் கைகளைப் பிரித்துவிட்டாள். அவளுடைய உடலின் உற்ற கறுப்பில் உள்ளங்கைகள் செந்தாமரை. வெள்ளை விழியோரங்களில் செந்நரம்புக் கொடி. உதடுகள் வெற்றிலைச் சிவப்பு. புருவ நடுவில் குங்குமம். நெற்றியில் சூர்யோதயம்.

''அப்பா, நான் பிறந்த வீட்டுக்கு வர ஆசைப் படறேன். என்ன முழிக்கறேள்? நான் உங்கள் வீட்டில் வந்து இருக்கப் போறேன். ஒருநாள்தான்'' —சுட்டு விரலைக் காட்டினாள்.

வாயடைத்துப் போனார். உள்ளே சந்தோஷம், பயம் இரண்டும் சேர்ந்த குழப்பம்.

''அப்பா, பொண்ணாப் பிறந்தால் பிறந்தாத்து ஆசை துப்புற விட்டுடாது.''

''பாண்டிய ராஜகுமாரி, நீ என்னை கேலி செய்கிறாய் ''

'கமலாம்பிகே, குழந்தே'ன்னு மூச்சுக்கு மூச்சு கூப்பிட்டது யார்?''

''அம்மா, என்னைக் கேட்கணுமா, என்னைக் கேட்காமலே என் வீட்டுக்கு நீ வந்து உட்கார முடியாதா?''

''வாய்ச்சொல் கௌரவம்னு ஒண்ணு இருக்கேப்பா! தவிர, நான் வெகுளி. என் கணவரின் எல்லையற்ற பொறுமையும் உங்களைப் போலோரின் எல்லையற்ற அன்பும் தான் நான் இந்த அளவுக்கு என் இஷ்டத்துக்கு வளரக் காரணம். பொறுமைக் கடல்னா அவர்தான். எனக்கு அது முற்றிலும் பொருந்தாது. நான் வெகுளி, இப்பவும் அவரைக் கேளாமல்தான் வந்திருக்கேன். அவர் தடுக்கவில்லை. உங்கள் விஷயத்தில் தடுக்கமாட்டார். என் குழந்தைகளிடம் எப்போதுதான், எப்படித்தான் நான் இருக்கிறது அப்பா?''

அவள் குரல் நடுங்கிற்று. ''அப்பா, நீங்கள் எல்லோரும் தெய்வத்தை உங்கள் தன்மையில்தான் படைத்திருக்கிறீர்கள். எனக்கும் ஏக்கம் உண்டு. கண்ணீர் உண்டு. அவருக்கு அதெல்லாம் இல்லை. அவருக்கு உருவமே இல்லை.''

சிரித்தாள். ''வாங்கோ போகலாம்.''

குனிந்த தலை நிமிராமல், அகிலா கோலத்தில் முனைத்திருந்தாள். பெரிய தாமரை. அடுக்கடுக்கான இதழ்களின் சிக்கலான கோடுகள். விரல்களின் நுனியி லிருந்து கோலமாவு, தீர்மானமான வளைவுகளில் சொரிந்தது.

இந்த வயதிலும் அகிலா நிறம் குன்றவில்லை. அழகா யிருந்தாள். அது, கண்ணைப் பறிக்கும் ஒரு தினுசான வெளிறிச் சிவப்பு, வயதுக்கு மயிர் நரைக்கவில்லை. வங்கிக் கூந்தல், இன்று, எண்ணெய்ஸ்நானத்தில் சற்று புஸு புஸு. தாடைகளில், கழுத்தில் இப்பத்தான் சுருக்கங்கள் தெரிய ஆரம்பித்திருக்கிறன. பட்டுப்புடவை யிலிருந்தாள். வெள்ளிக்கிழமை அல்லவா!

கோலத்தின் வெளி ஓரங்களைச் சரிபண்ணிவிட்டு பார்வை திரும்புகையில் பூவின் மையத்தில் இரண்டு பாதங்கள் நின்றிருக்கக் கண்டாள். கண்கள் மெதுவாய் மேனோக்க...

யாரிந்தப் பொண்ணு? எப்படிக் கோலத்துள் வந்தாள்?

''என் பாதங்களுக்கு அளவெடுத்த மாதிரியே இருக்கே அம்மா!''

அகிலாவின் விழிகள் வட்டங்களாயின. எனக்கு இவள் பேல் ஏன் கோவம் வரல்லே? வந்தவளின் கண்கள் அவள்

மேல் குனிந்து சிரிக்கையில் அகிலாவுக்கு என்னவோ பண்ணிற்று. (வயிறு திறந்துகொண்ட மாதிரி என்று சொல்லலாமா) கோலத்தில் சில கோடுகள் அழிந்திருந்தன.

அருகே கைகட்டி நின்ற குருக்கள்மேல் அவள் பார்வை திரும்பியது.

''அகிலா, இவள் நம்மோடு இருக்க வந்திருக்காள்.''

அகிலாவின் புருவங்கள் உயர்ந்தன. உடனே சமாதானப்படுத்திகிற மாதிரி, அவர், ''இவள் கணவன் வீட்டிலிருந்து வந்திருக்காள்.''

''கோவிச்சுண்டா?''

குருக்கள் முகம் மாறிற்று. ஓ, இப்படியும் ஒரு கோணம் இருக்கா?

அவள் சிரித்தாள். ''சுமாச்சுமா வந்திருக்கேன். ராத்ரி போயிடுவேன்.''

''ராத்ரி என்ன கணக்கு?''

''சூர்யோதயத்திலிருந்து அஸ்தமனம் வரை ஒரு பகலாகு மோன்னோ?''

அகிலாவுக்குப் புரியவில்லை.

''உள்ளே வா கண்ணு—இல்லே சத்தேயிரு, கோலத்தில் நிக்கறே. ஆரத்தி கரைச்சு கொண்டு வரேன்.''

அவள் தோளைத் தொட்டபடி, வாசற்படி தாண்டியதும், அவளுக்குக் கழுத்திலிருந்து கால்வரை—''ஜிவ் '—உயிர் வெளியே குதிக்கும்போல் பரபரப்பு, ஆனந்தம், பயம். கையை மார்க்குலையில் அழுத்திக்கொண்டாள்.

''ஏண்டிம்மா குழந்தே, மாப்பிள்ளையைக் கூட அழைச்சுண்டு வரப்படாதோ?''

''அவர் மாப்பிள்ளையாச்சேம்மா. அவர் எப்பவும் மாப்பிள்ளை முறுக்குத்தான். எனக்குப் பிறந்தாத்து எண்ணம் வந்துடுத்து, வந்துட்டேன்.''

"குழந்தை, நீ உறவு கொண்டாடச்சே, எனக்கு உன்னைப் பெத்த சந்தோஷமே வரது."

"ஏம்மா, பெத்தால்தான் உறவா? பாவனைதான் உறவு, ரெண்டுபேரும் சேர்ந்து நில்லுங்கோ, நமஸ்காரம் பண்றேன்."

"பண்ணடி கண்ணே, மகராஜியாயிரு."

அவர் கண்கள் பயத்தில் சுழன்றன. தடுக்க முயன்ற கைகளைச் சிரமப்பட்டு, பின்னுக்கு இழுத்துக்கொண்டார்.

நமஸ்கரிப்பில் குனிந்த அவள் முகம் நிமிர்கையில், கூடத்து ஜன்னல் வழி வெயில் பட்டு, முகமே சிவப்பாய் ஏற்றிக்கொண்டது.

ஜ்வாலாமுகி.

அகிலா கண்களைக் கசக்கிக்கொண்டாள். ஊஹூம் ஒன்றுமில்லையே. அந்தப் பெண் எழுந்து நின்றுகொண்டிருந்தாள்: "நீங்கள் இப்படி வாழ்த்தி வாழ்த்தித்தான் நான் வயசுக்குமீறிக் குதிரையா வளர்ந்துட்டேன்." 'ஹூம்'—மூக்கைச் சுருக்கிக்கொண்டாள். "கம்முனு வாசனை! அப்பா பசிக்குது."

அடுப்பு மேடைமீது இறக்கி வைத்திருந்த வெண்கலப் பானையின்மேல் தட்டை எடுத்தவுடன்,

"ஆ, சக்கரைப் பொங்கல்! எனக்கு உசிராச்சே! அம்மா, அத்தனையும் எனக்குத்தானே?"

"ஆமாண்டி செல்லம், உனக்கேதான். வெள்ளிக்கிழமை, பௌர்ணமியாச்சே! நைவேத்யத்துக்குப் பொங்கல் வெச்சேன். அப்பா ஸ்நானம் பண்ணிண்டிருக்கார். நிமிஷமாகக் கோவில் பூஜை பண்ணிட்டு வந்துடுவா—ஆ—என்னடி பண்ணறே?"

அவள் பொரிக்கப் பொரிக்கப் பொங்கலை விரலால் வழித்து வாயில் கப்பி, விரல்களைச் சப்பினாள்.

'திக்'கென்றது. அகிலா குருக்களைத் தேடிச் சென்றாள். அவர் கிணற்றடியில் ஸந்தியாவந்தனம் பண்ணிக்கொண்டிருந்தார்.

"யார் இந்தப் பெண்? இவளை எங்கே பிடிச்சுண்டு வந்தேள்?"

"என்ன ஆச்சு?"

"நைவேத்யத்தை ருசி பார்த்து, எச்சில் பண்ணி வழிச்சு முழுங்கிண்டிருக்கா."

"ஓ!" குருக்களுக்கு ப்ரமை பிடித்தாற்போல் ஸ்தம்பித்து, உடனே சிரித்துவிட்டார்.

"இதிலே என்ன சிரிக்கக் கண்டுட்டேள்?"

குருக்கள் சமாளித்துக்கொண்டு "இதோ பார் அகிலா பொறுத்துக்கோ. இன்னி சாயங்காலம் வரைக்கும்தான்."

"இதென்ன ரெண்டுபேரும் சாயந்திரத்துக்குக் கண்டம் வெச்சிப் பேசறேள்! அவளை வெள்ளிக்கிழமை அதுவுமா யார் போகச் சொல்றா?"

"அகிலா, அவள் நம் இஷ்டத்திலில்லை. நாம்தான் அவள் இஷ்டத்திலிருக்கிறோம்."

"இதென்ன பாஷை, என்ன புதிர்?"

"சாயந்தரம் வரைக்கும்தான்"—கெஞ்சினார்.

ஒன்றும் புரியவில்லை. பொட்டைத் தேய்த்துக் கொண்டு அகிலா உள்ளே சென்றாள். கூடவே பிடரி குறுகுறுத்தது. பயம்?

அவள் டப்பாக்களைத் திறந்து, உள் பார்த்து மூடிக் கொண்டிருந்தாள்.

''என்னம்மா தேடறே?''

''பசிக்கறதம்மா!''

அகிலாவின் பார்வை அடுப்பு மேடைமேல் சென்று திக்கிட்டது.

''பெண்ணே, உன்பேர் என்ன?''

''கமலா.''

''சரி, வா காமலா, இந்த மணைமேல் உட்கார். வெள்ளிக்கிழமை, ஒரு கை எண்ணெய் தலையில் வைக்கறேன். சற்றுப் பொறு, சமையலாயிடும்.''

''ஆமாம், எத்தனை நாள் வேணுமானாலும் பட்டினி கிடப்பேன். பசிக்கணும்னு நெனச்சேன்னா தாங்கவே முடியாது என் பசி ஒருத்தி பசி மட்டுமல்ல. எத்தனையோ பசிகள்.''

என்ன உளறுகிறாள்? வெண்கலப் பானை காலி. இன்னுமா பசி? அதென்ன பசி? அச்சரியம். கூடவே பயம்.

கூந்தலின் அடர்த்திக்கும் நீளத்துக்கும் எண்ணெய் பற்றவில்லை. எண்ணெய்க் காப்பில் கருங்காலி சிற்பம் போலப் பளபளத்தாள்.

சுவரில் மாட்டியிருந்த படத்தெதிரே— அவள் நின்றாள்.

அகிலாவின் பட்டுப் புடவையில், கோடாலி முடிச் சிட்டுக் காடாய்ப் படர்ந்த கூந்தல், நெற்றியில் குழைத்துப் பட்டையாயிட்ட விபூதி (அவள் வீட்டுப் பழக்கமாம்) நடுவில் குங்குமம். அசைவற்ற சுடராய்த் தியானத்தில் நின்றாள்.

குத்துவிளக்குச் சுடர் அவளைக் கண்டு அஞ்சினாற் போல் பின்வாங்கி, முதுகு நெளிந்து ஆதரவு கண்டாற் போல நிமிர்ந்து பிதுங்கிற்று. உதடுகள் செதுக்கலில்

அசலனமாய், மோவாய் நடுவே குழிவு. அகிலா அதிசயித்து நின்றாள். அறியாமல் கைகள் கூப்பிக் கொண்டன. பார்க்கப் பார்க்க இவளிடம் ஏதேதோ புதுப்புது அழகுகள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. அப்படியே கல்லாகிவிட்டாளா? பயம் வந்துவிட்டது. ''கமலா! கமலா!!'' அவள் தோளைத் தொட்டு அசைத்தாள்.

விழிகள் மெல்லத் திறந்து, அவளை அணைத்தன.

அகிலாவுக்கு நெஞ்சு விம்மிற்று. ''என்ன அம்மா—?'' அவள் அவளை அணைத்துக்கொண்டாள். அகிலா பொட்டென உடைந்துபோனாள். விக்கி விக்கி அழுதாள். இத்தனை நாள், தனக்குத்தானே ஒப்புக்கொள்ளாமல், தன்னுள் சிறை கிடந்த தாய்மையின் தவிப்போ? குருக்கள் இல்லை. கோவிலுக்குப் போயிருந்தார்.

அவர் கோவிலிலிருந்து திரும்பியபோது, அவர் முகம் ஒரு தினுசாக மஞ்சள் பூத்து வெளிறிட்டிருந்தது.

''என்ன ஆச்சு?''—அகிலா பதறிப் போனாள்.

அவர் உதடுகள் நடுங்கின. வாய், ஏதோ சொல்ல முயலும் முயற்சியில் தோற்றன.

அவர் கண்கள் அவளை நாடின. அகிலாவின் கேள்விக்குப் பதில் அங்கேதான்...கமலா பொட்டெனச் சிரித்தாள். அவள் விழிகள் கூத்தாடின.

''ஒண்ணுமில்லேம்மா, அப்பா அனாவசியமா மிரண்டு போயிருக்கார். காரணம் இங்கிருக்க, எங்கேயோ தேடினால்? சரி சரி, ரொம்பப் பசிக்கிறது. அப்பா, சோத்து மூட்டையை அவிழுங்களேன். அம்மா, எனக்கு ஊட்டி விடறியா...?'' சிரித்தாள். பருப்புஞ் சாதத்துலே நெய்யும் சர்க்கரையும் கலந்து. இது போதாது, நிறையப் பிசை. எல்லாருக்கும் சேர்த்துப் பிசை. ஒரே பாத்திரதில்.''

சிரித்தாள். பற்களில் நக்ஷத்ரங்கள் மின்னின. அகிலா கண்ணைக் கசக்கிக்கொண்டாள். ஒண்ணுமில்லியே!

அவள் வாயில் கவளத்தைப் போட்டதும் அகிலா ஒரு அசாத்ய பரவசத்தில் ஆழ்ந்தாள். திடீரெனச் சுரப்பில் தன் ரவிக்கை நனைந்ததை உணர்ந்தாள். அவளுக்கு அது ஆச்சர்யமில்லை. ஊட்டக் கேட்டது ஆச்சர்யம் இல்லை. எதுவுமே ஆச்சர்யமில்லை. ஒரே அன்பு வெள்ளத்தில் மூழ்கிப்போனாள்.

இப்ப நான் உங்களுக்கு ஊட்டறேன், "அ...ஆ... அப்பா, வாயைத் திறவுங்கோ..."

ஆ, மதுரமே! ஒரே கலம். எச்சில், தீண்டல், ஆசாரம், பூஜை, புனஸ்காரம் என்ன வேண்டிக்கிடக்கு? எல்லாமே ஒரே அன்பு வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போயின.

முதன் முத்தத்தின் எச்சிலில் ஆரம்பித்து
உயிர் முத்து வைத்த வித்திலிருந்து கடைசியில்
கடைவாயில் வழியும் எச்சில்வரை
தலைமுறை தலைமுறை எச்சில்
இல்லாவிடில்
இப்புவனமே ஏது?

வந்தவள் சொன்னாளா? நெஞ்சில் தானே தோன்றியதா? ஒரே ஆனந்த மூர்ச்சையில் எந்நேரம் மூழ்கியிருந்தனரோ?

தோட்டத்தில் கிணற்றடியில் பலா மரத்தில், கூட்டில், இரையைத் தாங்கிவரும் தாயைக் கண்டு குஞ்சுகள் ஆர்ப்பரிக்கின்றன.

தூரக் காட்டில் தேன் குருவி பகு சொகுசில் பூவுக்குப் பூ அந்தரத்தில் நின்று தேனை உறிஞ்சுகிறது.

மேகங்களற்ற நிர்ச்சலமான நீலத்தில் வெள்ளித் தாம்பாளம் கண் கூச தகதகக்கிறது. இல்லை, இது அவள் அபய கரத்தில் ஜ்வலிக்கும் மோதிரத்தின் முகப்பு.

நண்பகல் சொக்கல்.

நேரம் முதிர முதிர, அவள் வதங்கலுற்றாள். வேர் கழன்ற இலைபோல் கொஞ்சங் கொஞ்சமாய்த் துவண்டு...

"என்ன குழந்தை ஒருமாதிரி ஆயிட்டே, உடம்பு சரியில்லையா?"

"அவர் நினைப்பு வந்துவிட்டதம்மா."

"என்ன அதுக்குள்ளேயுமா? சாயந்தரம்தான் போப் போவதாச் சொல்லிண்டிருக்கே! வெள்ளிக்கிழமையுமதுவமா."

"அவர் நினைப்பு வந்துட்டதம்மா. நினைப்பு வந்தால் விடாதம்மா. நொடியும் யுகம் அம்மா."

"நீ என்ன சொல்றேன்னு விளங்கல்லியே!"

"புரியறதுக்கு ஒண்ணுமில்லேம்மா. அவர் பொறுமை கடலினும் பெரிது. கோபம் கடல் பற்றி எரியும்போல். நான் போகணும்.

அகிலாவுக்குப் பயத்தில் உடல் சிலிர்த்தது.

"நீ வந்த அதிசயம் என்ன, போற சுருக்கு என்ன? ரெண்டுமே எனக்கு அப்பாற்பட்டது. சரி வா, பின்னி விடறேன்." இதுமாதிரி சடையைப் பின்ன எத்தனையோ கொடுத்து வெச்சிருக்கணும். இது கூந்தலா, காட்டாறா, பின்னப் பின்னச் சோம்பிக்கொண்டே. தடுமனாய்ப் பாம்பு நீண்டது.

"கமலா, என் பட்டுப் புடவையிலேயே அவரிடம் போ, என் நினைவாயிருக்கட்டும்."

"ஐயையோ அதெல்லாம் வேண்டாம். எப்படி வந்தேனோ அப்படித்தான் போகணும். அவர் அப்படி."

இப்படியும் ஒரு புருஷன். அவன்மேல் இவளுக்கு இத்தனை மோகம்! ஒண்ணும் புரியல்லே. "சரி வா, போகலாம்."

''நீங்கள் வேண்டாம், எப்படிப் போனேனோ அப்படிப் போயிடறேன். அப்பா வேணும்னா கோவில் வரை வரட்டும். அவர் சுவாமி சன்னதியில் இருப்பார்.''

அகிலா அவர்களைப் பார்த்துக்கொண்டே நின்றாள். தானே தன்னை விட்டுப்போவது போலிருந்தது.

அப்பாவும் மகளும் இடைவழியில் பேசவில்லை. குருக்கள் நெஞ்சில் ஏதேதோ குமுமிற்று. சொல்லவில்லை.

த்வஜஸ்தம்பத்தண்டை அவரைக் கையமர்த்தினாள். ''போயிட்டு வரேனப்பா...''

உள் ப்ரகாரத்துள் ஆவலுடன் ஓடினாள்.

''அப்பா! அப்பா!'' அலறல் கேட்டு குருக்கள் உள்ளே ஓடினார்.

''அப்பா, அப்பா! அவரைக் காணோமே!''—இரண்டு கைகளையும் விரித்தவண்ணம் அவள் கதறுகையில், பிரமிக்கத்தக்க அழகில் பொலிந்தாள்.

ஐயர் எட்டிப் பார்த்தார். கர்ப்பக்ருஹத்தில் லிங்கத்தைக் காணோம்.

'ஆண்டவா ஆண்டவா!' கதறிக்கொண்டே வெளியே ஓடினாள். குருக்களும் கத்திக்கொண்டே தொடர்ந்தார். ''இங்கே லிங்கம் இல்லை. அம்மன் சன்னதியில் மத்யானத்திலிருந்தே மூலவர் இல்லை. ஐயோ என்ன செய்வேன்!''

''என்ன செய்வேன்! என்ன செய்வேன்!'' அழுது கொண்டே, தன்னை அழுத்திய துக்கத்தைத் திமிறிக் கொண்டு குருக்கள் விழித்தெழுந்தார். உடல் பூரா வேர்வை ஸ்நானம். கண்ணைக் கசக்கிக்கொண்டார். எழுந்து உட்கார்ந்தார். கனவின் பீதி தெளியவில்லை. இருக்கிறாளா? இருந்தஇடத்திலிருந்து எட்டிப்பார்த்தார்.

கர்ப்பக்ருஹத்தில், சந்து வழி, சாய்வாட்டில், அவள் முகத்தில் நிலாவின் வியாபகத்தில் சிரித்துக்கொண் டிருந்தாள்.

# ஒரு முத்தம்

இரவு ஒரு கனாக் கண்டேன். கனவில் உருவில்லை, ஆளில்லை...அங்கும் இருள்தான். இருளில் ஒரு முத்தம் என் வாய்மேல் பதிந்தது. கனவே அவ்வளவுதான். கனவு கண்டு கலையக்கூட நேரமில்லை. அதனால் நனவா என்று நினைத்தால் அதனினும் அசட்டுத்தனம் இல்லை.

நனவாயிக்கலாகாதா? வெட்கம் கெட்ட அசட்டு ஏக்கம். எப்படியிருக்க முடியும்? யாராயிருக்கலாம்? நினைக்கக்கூட வழியில்லை. பிரம்மச்சாரிக் கட்டை. ஹாஸ்டல் வாசம் சகவாசங்கள் ஏற்கெனவே மட்டு அதிலும் அந்த சைடு கிடையாது. சங்கோசம். ஆனால், முத்தம் தந்தவளை (ஏன் எப்பவுமே அவள்?) மனம் உருக் கூட்டப் பார்க்கிறது முடியாத காரியம். தெரிகிறது, ஆனாலும்—You fool! கனவுதானா எனச் சந்தேகிக்கும்படி முத்தத்தின் அழுத்தமான பதிவு, அதரங்களில் கசிந்த ஈரம், அதே சமயத்தில் அந்தக் கதகதப்பான மெத்து— உடல் சிலிர்க்கிறது. அதுவேதான் என்னை எழுப்பி விட்டதோ என்னவோ?

காலை விழிப்பிலேயே (விழிப்பா, விழிப்பிலா? ஒரு அனுஸ்வரத்தில் ராகமே மாறும்போல பொருள் நயம் விளிம்பில் நலுங்குகிறது) ஒரு அழகுதான். கண் வைத்ததும் சித்திரம் உயிர்க்கின்றது, இமைச் சிமிழ்கள், இதழ்கள்

விரிவது போலும் மெ...து...வா...ய்த் திறக்கின்றன. உடனேயே கண்ணுக்குப் பட்ட காக்ஷியுடன் ஸ்மரணை கலக்கும் ஜாதுவில் இன்றைய ஓவியம் உருக்கூட, அவ்வப் போது அதன் சாயங்கள் தோயத் தலைப்படுகின்றன.

இதழ்களில் தோய்ந்த கனவின் சாயத்தின் ஈரம் படுக்கையிலிருந்து எழுந்திருக்க மனம் இல்லை.

ஜன்னலுக்கு வெளியே, விழிக்கு மெத்தடமாய்த் துல்லிய நீலத்தில் வான் மிதக்கிறது. நீலத்தில் தொடங்கி நேரம் ஏற ஏற வானத்தில் ஹோலி. மஞ்சள், ஊதா, சிவப்பு என கெட்டி சாயங்கள். அலைகளிலிருந்து கடுகு, தக்காளி, வெங்காயம், மஜந்தா ரோஸ், குங்குமம், ஆரஞ்ச் என மறு சாயங்கள் மேலும் மேலும் கொப்புளித்த வண்ணம் ஒரே வர்ண ரகளை. இன்று சூர்ய ரதப் புறப்பாடு அமர்க்களம் போல்.

நெஞ்சு துளும்புகிறது;

முத்தம் தந்த செளந்தர்யலகரி.

அம்மா தந்த முத்தம் நினைவின் அலைகளில் எழுகின்றது. எப்பவோ தோன்றி ஆழத்தில் எங்கேயோ புதைந்து இன்று மேலெழ அதன் வேளை.

இரண்டு குழந்தைகளுக்குத் தாயாயும், அம்மா அவளும் எங்களுடன் ஒரு குழந்தை. தொட்டதற்கெல்லாம் சிரிப்பாள். பால் பொங்கினால்—அதற்கு அன்று அப்படிச் சிரித்தாள். அதில் சிரிக்க என்ன இருக்கிறது என்று எனக்கு இன்னும் புரியவில்லை. காரியம் தலைக்குமேல் கிடக்கும் போட்டது போட்டபடி. எங்களோடு விளையாட வந்து விடுவாள். தாயக்கட்டான், புளியங்கொட்டை பல்லாங் குழி, கண்ணாமூச்சி, விடுகதை, கதை சொல்லல்...

'ஆமாம், காரியம் என்னிக்கு இல்லை? செஞ்சாலும் ஓயப் போறதில்லை. இந்த சந்தோஷம் கிடைக்குமா?'

ஒருநாள். அந்த நாள் அம்மா முத்தம் தந்த நாள்.

தற்செயலில் என் இடது மணிக்கட்டில் வலது விரல் நுனிப்பட்டு—ஆச்சரியமாயிருந்தது. அப்படியே கையைக் காதண்டை கொண்டுபோய் ஒட்டுக் கேட்டேன். காதுக்குத் தெரியல்லே. ஆனால், விரலடியில்—

''அம்மா! அம்மா!'' கை உள்ளே என்னவோ 'டக் டக்'—

அம்மா சிரித்தபடி, முன்றானையில் கையைத் துடைத்துக்கொண்டே வந்தாள். பிரிகள் கலைந்து சற்றுப் பரட்டையாகிவிட்ட அவளது நெற்றி மயிர் மாலை மஞ்சள் வெயில் பட்டுப் பொன்னாய்ச் சுடர் விட்டது.

என் கையைப் பிடித்துப் பார்த்துவிட்டு ''அதுக்கு நாடின்னு பேர்.''

''அப்படீன்னா?''

''உயிர் துடிப்புன்னு அர்த்தம்.''

''அப்படீன்னா?' ''நாடி அடிச்சுண்டு இருக்கும்வரை உயிர் இருக்குன்னு அர்த்தம்.''

''அடிக்காட்டி?''

உதட்டைப் பிதுக்கிச் சிரித்தாள்.

''உன் கையைக் கொண்டா, பாக்கறேன்!''

அவள் மணிக்கட்டில் என் விரல் நுனியை வெச்சுப் பார்த்தேன்.

''எனக்கு ஒண்ணும் கேக்கலியே.''

''உனக்குப் பார்க்கத் தெரியல்லே'' அவளே பார்த்துக் கொண்டாள். முகம் மாறிற்று. மறுபடியும் பார்த்துக் கொண்டாள், இந்த முறை நேரமாக.

''அப்பா வராளா பாரு'' அப்பா வரல்லே. ஆனால், வர நேரம்தான்.

அப்பா ஆபீசிலிருந்து வந்தார். அப்புறம் டாக்டர் வந்தார். எங்களை விரட்டிட்டா.

அப்பா, டாக்டரை வாசல்வரை கொண்டுபோய் விட்டுவிட்டு வந்தார்.

மத்யான சாதம் மிச்சம் கொஞ்சம் இருந்ததை அப்பா தான் பரிமாறினார். எங்களுக்குப் பசிச்சுது. கடையிலிருந்து ரொட்டி அண்ணாதான் வாங்கிண்டு வந்தான். இரண்டு துண்டு கூடப் பிடுங்கிண்டான். அம்மா ரூமிலிருந்தே வரல்லே. நாங்கள் அங்கே போகக் கூடாதுன்னு அப்பா உத்தரவு போட்டுட்டார். அப்பா நல்லவர் தான். ஆனால், சொன்னால் சொன்னது தான்.

அம்மா தூங்கினான்னு நினைக்கிறேன். அப்பா வெளியிலே வந்து கூடத்துலே சாமி படங்களைப் பார்த்துண்டு நின்னுண்டிருந்தார், பின்னாலே கை கட்டிண்டு.

பக்கத்து ரூமிலே எங்களுக்குப் படுக்கை. அண்ணா சக்கையா தூங்கினான். நான் படுக்கையில் பிரண்டுண்டிருந்தேன். கால் தூக்கம், அரைத் தூக்கம் கன்னத்தில் ஒரு ரோஜாப்பூ அழுந்தினாப் போல மெத்துனு...

''அம்மா! அம்மா!'' கழுத்தை இறுக்கிக் கட்டிண்டேன். தாலி தொங்கி, மூக்கு குறுகுறு—''உஷ்''— தன்னை மெதுவாய் விடுவித்துக் கொண்டாள்.

''சமத்தாயிரு.''

போயிட்டா.

அதுவும் கனவு மாதிரிதான் இருந்தது. ஆனால், கனவு இல்லை.

விடிஞ்சதுமே ஊரிலேருந்து பாட்டி, தாத்தா வெயிலானப்புறம் அம்மாவின் அம்மா, அண்ணா— இவாள்லாம் எப்படி வந்தா? ஏன் வந்தா திடீர்னு...

யார் வந்து என்ன?

ஒருவேளை நாடி விளையாட்டு விளையாடாமல் இருந்தா, அம்மா இருந்திருப்பாளோ?

ஆனால். அம்மா தந்த முத்தம்—

என்னிடம் பத்திரமாயிருக்கு.

பழங்கணக்கு ஓயாத கணக்கு. அசை போடப் போட அதிகரிக்கும் கணக்கு.

மனமில்லாமல் படுக்கையை விட்டு எழுகிறேன். ஞாயிறுக்கு மறுநாள் திங்கள் எப்பவுமே ஆபீஸ் நுகத்தடிக்குக் கழுத்தைக் கொடுக்க மனமில்லா கசக்கும் நாள்.

திடீர்ப் பொடியில் சோம்பேறிக் காபி கலக்கிறேன். பிடிக்கவில்லை. குடிக்காமலும் முடியவில்லை. வீட்டுக் காபி வீட்டுச் சோறுக்கு நினைப்பு எடுத்து அடக்க முடியாவிட்டால் இரண்டு மாதங்கள், மூணு மாதங்களுக்கு ஒருமுறை அண்ணா வீட்டுக்கு, மன்னி சமையல் மிகவும் நன்றாயிருக்கும்.

நேற்று இரவு ரயிலடிக்குப் போயிருந்தேன் மன்னி, குழந்தைகள், அண்ணாவை வழியனுப்ப. கடைசி நேரத்தில் அண்ணா பயணத்துக்குக் கொசிராய் ஒட்டிக் கொண்டான். ரயிலடியிலேயே ஒரு லீவு மனு எழுதி தன் ஆபீசில் சேர்த்துவிடும்படி என்னிடம் கொடுத்துவிட்டான். "மன்னி தீபாவளிக்குப் பிறந்தகம் போகிறாள். நானும் கூடப் போய்விட்டால் எனக்குத் தீபாவளி செலவு மிச்சம் பாரு. மாப்பிள்ளை பழசானாலும் மாமனார் சும்மா விட்டுவிடுவாரா?" என்று மன்னி எதிரேயே சொல்கிறான். தவிர "மச்சினிகள் குறுகுறு" என்று என்னைக் கண் அடிக்கிறான்.

அவனுக்குள் மிக்க சாமர்த்தியமாகவும் வேடிக்கை யாகவும் பேசுவதாக எண்ணம். அண்ணாவின் 'றாமணாக் கள்' சரிப்படாமல்தான் அவனுக்குக் கலியாணமான சுருக் கிலேயே நான் ஹாஸ்டலில் இடம் பார்த்துவிட்டேன்.

அப்பாவும் தடுக்கவில்லை.

இப்போதெல்லாம் அப்பா எதற்குமே ஆக்ஷேபம் தெரிவிப்பதில்லை. இல்லை, தன் அபிப்பிராயமே தெரி விப்பதில்லை.

எனக்குத் தோன்றுகிறது. நாளடைவில் அவர், அவரிடம் எங்களுக்கிருந்த 'அத்து' மட்டும் இருத்திக் கொண்டு மற்றபடி எங்கள் இடத்துக்கே விட்டுவிட்டார். அதனாலேயே எங்களுக்கு அவரிடம் அச்சம் அதிகரித்தது.

அண்ணாவுக்குக் கலியாணமான சில நாட்களுக்கெல் லாம் அப்பா எங்களைத் தன் அறைக்குக் கூப்பிட்டார்.

மன்னியையும் சேர்த்துத்தான்.

"Look here, Boys, உங்கள் தாயார் போன பின்னர் உங்களுக்கு மாற்றாந்தாய்க் கொடுமை நேர்ந்ததென்று உங்கள் வாயிலும், பிறர் வாயிலும் பட வேண்டாம் என்றே நான் மறுமணம் செய்துகொள்ளவில்லை நானே சமைத்துப் போட்டு, நானே உங்களை வளர்த்தேன். நான் செய்தது சரியா அல்லது சரியாக உங்களை வளர்த்தேனா என்று இப்போது ஆராய்வதில் அர்த்தமில்லை. நீங்கள் இருவருமே ஊன்றிக் கொண்டாகிவிட்டது. உங்கள் பொறுப்புகள் உங்களுடையது. என்னைக் கேட்காத ஆலோசனைகளை, புத்திமதிகளை நான் வழங்கமாட் டேன். இதைச் சொல்லவே அழைத்தேன். நீங்கள் போகலாம்."

நெடுநாளைக்குப் பிறகு நான் அப்பாவிடம் கேட்டது நீண்ட பேச்சுதான். 'சினிமா டயலாக்' என்று கிசுகிசுத்து அண்ணா தோளையிடித்தான். ஆனால், எனக்குச் சொல்லத் தெரியவில்லை. ஏதோ துக்கமாயிருந்தது.

இதற்கு இரண்டு வாரங்களுக்குப் பின் அப்பாவைக் காணவில்லை. மிரண்டு போனோம். தானே பறக்கத் தூக்கியெறிந்த குஞ்சுகளைப்போல.

மன்னி ஆருடம் பார்த்தாள். 'மாமனார் உயிரோடு தானிருக்கிறார். நன்றாயிருக்கிறார். இன்னும் இரண்டே வாரத்தில் தானே வந்து சேர்ந்துவிடுவார்!'

ஆச்சு. நிகில் பிறந்து ஐந்து வருடங்களுக்குப் பின் முகேஷுக்கு இப்போ மூணு நடக்கிறது.

அப்பாவும் இன்னும் வரப்போகிறார்; அப்பா இனிமேல் வரமாட்டார்.

அம்மாவின் மறைவுக்குப் பின்னரே, கண்ணெதிரே எங்களுக்குத் தெரியாமலே அப்பா படிப்படியாக மாறி விட்டார். அம்மா போனது அவருக்கு ஊமை அடி.

இப்படிக் காணாமல் போக, அம்மா போனவுடனேயே திட்டம் போட்டு ஒதுங்கிவிட்டார் என்றே நினைக்கிறேன்.

ஆகவே, சின்ன வயதிலேயே எங்களுக்கு—எனக்கு அம்மா இல்லை. அப்பா இருந்தும் இல்லை.

வண்டி புறப்படும் வரை நான் வெளியே நின்றபடி உள்ளே அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கையில், இருந்தாற்போல் இருந்து முன்பின் சம்பந்தமில்லாமல் மன்னி:

"அம்பி, எப்போத்தான் கலியாணம் பண்ணிக்கப் போறேள்? வயசாயிண்டு வரல்லியா? உங்களுக்கா இல்லா விட்டாலும் எனக்காவேணும் பண்ணிக்கோங்களேன்.'"

"ஏன், உனக்குப் புதுப் புடவை வருமேன்னு பார்க்கறியா"—அண்ணா.

"அம்பி எனக்கு இப்படித் தனியாகக் குடித்தனம் பண்ணி அலுத்துப்போச்சு. ரெண்டுபேரும் ஒண்ணாயிருப்போம். இன்னும் சத்தே பெரிய வீடா நானே பார்க்கறேன். பிரிய நேர்ந்தால் நீங்கள் அண்ணன் தம்பியால் நேரணுமே அன்று, நாங்கள் ஓரகத்திகள் ஒற்றுமைக்கு நான் உத்தரவாதம்."

உள்ளூரச் சிரிப்பு வந்தது. இதோ அண்ணா 'றாபணா' பண்ணுகிறான்.

"நீ மனப்பால் குடிச்சுண்டேயிரு. அவனுக்குப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்ட வரன் தேவைப்படவில்லை. காதல் பண்ணி முடிந்தால் பரீக்ஷையும் வைத்துத் தேர்ந்தெடுக்கப் போறான். மேனாட்டில் கலியாணத்துக்கு முன் ஒருவரையொருவர் புரிந்துகொள்வதற்காகச் சேர்ந்து கூடக் கொஞ்சகாலம் வாழ்கிறார்களாம். என்ன அம்பீ, அப்படித்தானே?"

எரிச்சலாய் வருகிறது. என்ன பண்ண முடிகிறது?

"ஆமாம். உன்னைப்போல் அதிர்ஷ்டம் எல்லாருக்கும் வாய்க்குமா" என்றேன்.

மன்னி குறுக்கிட்டு, "அம்பி, அப்படியெல்லாம் சொல்லாதேங்கோ. நான் சொல்றேன், உங்களுக்கு அதிர்ஷ்டம் காத்திண்டிருக்கு. ஊரில் எங்கள் வீட்டுக்கெதிரேயே ஒரு பெண் உங்களுக்காகவே வளர்றா. படிப்பு சுமார்தான். ஆஹா, ஓஹோன்னு செய்ய முடியாது. பெண்ணுக்கு அப்பா, அம்மா இல்லை. அண்ணன்தான் செய்யணும். அவன் உத்யோகம் சுமார்தான். வீட்டுக் காரியம் மாங்குமாங்குனு செய்வாள். என் சமையலை நீங்கள் மெச்சிக்கறேள். அவள் கைப் பக்குவத்துக்கு என்ன சொல்லப்போறேளோ? மருந்து வெச்சமாதிரி பின்னா

லேயே சுத்துவேள். பார்க்கவும் லக்ஷணம்.வெள்ளிக்கிழமை எண்ணெய் தேச்சுண்டால் ஒரு பாடு. கூந்தலைக் கட்டையால் அடிச்சுத்தான் கசக்கணும். அத்தனை அடர்த்தி. அத்தனை நீளம். அவளைப் பண்ணிண்டேள், ஒரு பெண்ணுக்கு வாழ்வு கொடுத்த புண்ணியமும் கட்டிப்பேள்.''

நல்லவேளை...வண்டி நகர ஆரம்பித்துவிட்டது. நான் வண்டியோடு கூடவே கொஞ்சதூரம் ஓடவில்லை. பின் தங்கி விட்டேன்.

இன்று, ஆபீசில் என் 'ஸீட்' சேவிங்க்ஸ் பாங்க் லெட்ஜர்கள்.

கொஞ்சநாட்களாக எனக்கு நிரந்தரமான இடமில்லை. இந்தக் கிளைக்குப் புதிதாக மாறி வந்திருக்கிறேன். எங்கெங்கே ஆள் துண்டு விழுகிறதோ அங்கே நான் முட்டுக் கொடுக்க வேண்டும்.

இன்று என் 'பாக்யம்' ரோஸலின் மார்வாவுக்குப் பக்கத்து 'சீட்.'

''ஆஹ்ஹா! நீங்களா? ஸோ, என்னை என் ஆபத்துக்களிலிருந்து மீட்க, The hero has come!''

''உங்களுடைய ஆபத்துக்கள் என்னவோ?''

''இந்த லெட்ஜர்ஸ்தான்!'...அந்தக் கட்டைப் புத்தகங்களை கைவீசிக் காட்டிச் சிரித்தாள்.

''இதுங்களைவிட ஆபத்துங்க வேணுமா என்ன?''

ஓ...ரோஸலின் மார்வா வேலையில் படுமோசம். ஆனால்' 'படா' சாமர்த்தியசாலி. இப்படித்தான் 'ஜாலக்' காய்ப் பேசி, தன் வேலையைப் பிறத்தியார் தலையில் போட்டுத் தன் காரியத்தைச் சாதித்துக்கொள்வாள் தகுடு தத்தக்காரி.

ஆனால், நான் மசிவதாயில்லை. ஏற்கெனவே மோசமான 'லெட்ஜர்'களை என் பங்குக்குப் போட்டிருக்கிறது. தவிர இன்று எனக்கு 'மூட் அவுட்.'

"என்ன பேச்சே காணோம்? The 'Strong Silent' man. eh?"

நான் குனிந்து என் வேலையில் முனைந்தேன். ஆனால் ஓடவில்லை. பக்கங்களுக்கும் என் பார்வைக்கும் குறுக்கே ஏதேதோ நினைவு முகங்கள் மிதந்தன. பேச்சுக்கள் உட்செவியில் ஒலித்தன.

'ஒரு பெண்ணுக்கு வாழ்வு கொடுத்த புண்ணியத்தைக் கட்டிப்பே.'

"ஹூம், நன்றாயிருக்கிறதே மன்னி, உங்கள் பேச்சு. புண்ணியம் சம்பாதிக்கக் கட்டிக்கணுமா? அப்படித்தான் கலியாணங்களெல்லாம் நடக்கின்றனவா?"

"எண்ணெய் தேய்ச்சுண்டால் ஒரு பாடு. கூந்தலைக் கட்டையால் அடிச்சுத்தான் கசக்கணும்.'

"அம்பி சார், முளிச்சுக்கோங்க!"—யாரோ தோளைத் தட்டினார் (யார், அவள்தான்).

நிமிர்ந்தேன். காதளவு முரட்டு மீசை, மேட்டு விழிகள். ராணுவச் சீருடையில் புன்னகை புரிந்தார், உரமான, ஒழுக்கமான பல் வரிசை.

"'Day—dreaming, young man?"

"'Quite natural. You know, he is a bachelor.'"

(எனக்காகப் பரிந்து பேசுகிறாளாம்.)

கஸ்டமர் வாய்விட்டுச் சிரித்தார். "understandable"

அவர் போன பின்னர்:

"என்ன, முறைச்சுப் பார்க்கறீங்க?"

"............"

"பேசமாட்டீங்க...ஆனால், பார்ப்பீங்க இல்லையா?" புன்னகை புரிந்தாள்.

அவள் உதடுகளின்மேல் என் பார்வை உரைந்தது. கீழுதடு சற்று தடிப்பு. ஆனாலும் சித்திரம் தீட்டினாற் போல் வாய். செக்கச் செவேல் 'பூ.'

(இதுவாயிருக்குமா Absurd, Idiot!)

அவள் கண்கள் கவலை கொண்டன. "என்ன லிப்ஸ்டிக் அளிஞ்சுட்டுதா?" பையை எடுத்து அதில் பதித்த கண்ணாடியில் முகத்தைப் பார்த்துக்கொண்டாள்.

"நிமிசத்துலே பயமுறுத்திட்டீங்களே! You naughty man!"

இனி இப்படியே பொழுதைப் போக்கிவிடுவாள். தெரிந்துவிட்டது.

தீபாவளி ஸ்வீட்ஸ் பெட்டிகள் இரண்டு மூன்று வந்தன.

"அம்பி ஒண்டிக்கட்டை...இத்தினியும் வெச்சுக்கிட்டு என்ன செய்யப் போறீங்க?"

"You are welcome" அவளிடம் கொடுத்தேன்.

"அதுக்காக ஒண்ணுகூட வெச்சுக்கலியா? ஒண்ணு வெச்சுக்குங்க."

"எனக்குத் தேவையில்லை. ஆமா, நீங்க என்ன செய்யப்போறீங்க? உங்கள் பங்கு வேறே இருக்கு!"

"வேண்டியவங்களுக்குக் கொடுப்பேன். நல்ல பேர் கட்டிப்பேன். வாங்கிக்க மனுசாளாயில்லே?" சட்டென முகம் சிடுத்துப் பெட்டிகளை என் பக்கம் தள்ளினாள். "இல்லே, வித்துடுவேன்."

சமாதானம் பண்ணி பெட்டிகளை அவளிடம் திணித்தேன்.

சாதாரணமாக ஒரு மனோதத்துவக் கோட்பாடு; கனவு என்பதை அடி ப்ரக்ஞையில் புதைந்து கிடக்கும் அந்தரங்க ஆசாபங்கங்கள், ஏக்கங்கள் தங்களை நிறைவேற்றிக் கொள்ளும் வடிகால் என்று. அப்படி யானால் கனவில் (யார்?) தந்த முத்தம் எதன் அடையாளம்?

இத்தனைபேர் என்னைச் சுற்றிலும் இருக்கிறார்கள். கஸ்டமர்கள் நெரிகிறார்கள். வங்கிக்கு வெளியே ரோடில் வாகனங்கள் பறக்கின்றன. ஆனால், நெஞ்சில் வெறிச் சோடி நிற்கிறேன்.

என்னைத் தனியென்று எந்த நியாயத்தில் சொல்லிக் கொள்ள முடியும், சமுதாயத்தின் நடுவிலேயே இருந்து கொண்டு? என் இஷ்டப்படி இருக்கத்தானே ஹாஸ்ட லுக்கும் வந்தேன்?

ஆனால் அண்ணா, மன்னி, குழந்தைகளைப் பார்க்கும் போது குடும்பத்தின் அடைக்கலத்துக்குத் திரும்பி விடலாமா என்று மனம் அடித்துக்கொள்கிறது. எட்டு வருடங்களாகத் தனி அறை, ஓட்டல் சாப்பாடு, வயிற்றுப் புண்ணுக்கு மாத்திரை...

மன்னி, தனிக்குடித்தனம் அலுத்துவிட்டதென்கிறாள், குடும்பம் பெருகிய பின்னும்...

தனிமை—அப்பா, உங்களுக்கு அலுக்கவில்லையா? அலுத்திருந்தால் திரும்பி வந்திருப்பீர்களே!

வெளியூரிலிருந்து வந்தவர்கள் பார்த்தமாதிரி இன்னும் பேசுகிறார்கள்.

''உன் தகப்பனார் ரிஷிகேசில் இருக்கிறார். முக்கியமாக உன்னை ரொம்ப விசாரிச்சார்.''

''அம்பி, என்னன்னு சொல்வேன், மதுரை கோவில் வாசலில் பரதேசிக் கோலத்தில் பிச்சையெடுத்துண்டிருக்

கார். என்னைப் பார்த்துத் தலையைத் திருப்பிக்கொண்டார். எனக்கும் அப்படித்தானிருந்தது. இப்படியிருக்க அவருக்கென்ன தலையெழுத்தா? ஏன் அப்படியிருக்கார்?''

சொல்பவர்க்கென்ன?

''இமயமலைச்சாரலில் ஒரு பனிக் குகையில், அவதூதராகப் பார்த்தேன்.''

முன்னால் இந்த ஆசாமி, இமயமலைச் சாரலில் பனிக் குகைக்குப் போக என்ன நிமித்தம்?

யார் கேட்பது?

ஆனால் அப்பா, நீங்கள் வரமாட்டீர்கள். ஏனெனில் நீங்கள் சுயநலக்காரர்.

நேரம் நகர்ந்தது. குறுகிய சீசாவுள் மணலின் மெது மெதுச் சரிவு.

டிபன் ரூமில். என் டிபன் டப்பாவைத் திறந்ததுமே புளிப்பு வாடை என்னையே பின்வாங்கச் செய்தது.

''என்ன ப்ரதர், தயிர்சாதமா...கள்ளுலே பிசைஞ்சு கொடுத்தாங்களா?''

அவசரமாய் டப்பியை மூடினேன்.

''Leave him alone!'' இவளுக்கு என்மேல் ஏன் இவ்வளவு பரிவு தானம்?

''ஹாஸ்டலில் என்ன கட்டிக்கொடுத்தாங்களோ அதைத்தானே கொண்டார முடியும்! எங்கே ஏந்திருச்சிட்டீங்க? உக்காருங்க. எங்கேயும் போவேணாம். இன்னிக்கு நீங்க நம்ம கெஸ்ட். நான் டிபன் காரியர்லே கொணந்திருக்கேன். காரியர் சாப்பாடு எப்பவும் மிஞ்ச மிஞ்சத்தான்—ஏன் தயங்கறீங்க... இன்னிக்கு விஜ்தான். முள்ளங்கி சாம்பார், உருளைக்கிளங்கு புட்டு. ப்ளீஸ், எனக்காக...சத்தியமா நீங்க நினைக்கறது இல்லே—எங்களுக்குப் பாவ புண்ணியம், வெள்ளிக்கிழமை உண்டு.''

பேசிக்கொண்டே இலையைப் பாதியாகக் கிழித்துப் பரிமாறிவிட்டாள்.

சாதத்தின்மேல், அவள் விட்ட சாம்பார், சாதத்துள் பரவலாக இறங்கியதைப் பார்க்க நன்றாய்த்தானிருந்தது. ஒரு கவளம் போட்டுக்கொண்டேன். உம்ம்—Not bad, not at all bad

"எப்படி இருக்குது...பார்ப்பார வீட்டுச் சமையலாட்டம் இருக்கா? ரெண்டு தலைமுறைக்கு முன்னாலே கன்வர்ட் ஆவறதுக்கு முன்னாலே நாங்க அய்யமாரு."

அப்பவே நாக்கில் 'சுருக்.'

பிடுங்கி எடுத்தேன்...வெள்ளை வெளேரென்று பொடி முள். அதன் பிரதிபலிப்பாய் எண்ணம் உள் ஊறினதும் உடனே எழுந்த குமட்டலைத் தாங்க முடியாமல் பாத்ரூமுக்கு ஓடினேன். எல்லோரும் என்னைத் திரும்பிப் பார்த்தனர். அவள் சிரிப்பு துரத்திற்று. திரும்பிப் பார்த்தேன். மேல் வரிசையில் இரண்டு தெற்றிப் பற்கள் தெரிந்தன.

இன்று இவள் என்னைச் சாப்பிடுவதாகத் தீர்மானம் பண்ணிவிட்டாள்.

"What a funny man you are!"

மௌனமாய்ச் சற்று நேரம் நடந்தோம். அவள் வீடு என் வழியில் இல்லை. ஆனால், 'ஷாப்பிங்' செய்யணுமாம். "நாளைக்கு தீபாவளியில்லே?"

"உங்களுக்கும் தீபாவளிக்கும் என்ன சம்பந்தம் மிஸ் மார்வா?"

"நான் மிஸ் இல்லை."

"சரி, மிஸஸ் மார்வா..."

"நான் மிஸஸ்ஸுமில்லை."

இதென்ன புதிர்? என்னத்தை விளக்கம் கேட்பது?

பெருமூச்செறிந்தாள்.

"தனிமை பயங்கரம் மிஸ்டர் அம்பி."

என்ன சொல்வது தெரியவில்லை.

"மிஸ்டர் மார்வா சிங்கப்பூர் போய் வருசம் பத்தாச்சு"

"ஏன்?"

நகைத்தாள். "சம்பாரிக்கத்தான். உங்களவங்ககூடத் தான் போவல்லியா...துபாய், குவாயிட், மஸ்கட்."

"போறாங்க. மூணு வருடங்களுக்கு ஒருமுறை தாய், தகப்பன், பெண்டாட்டி பிள்ளைங்களைப் பார்க்க வராங்க."

"இவர் வரல்லே. கடிதாசுகூடக் கிடையாது."

"நான் இப்படிக் கேக்கறேன்னு நினைக்காதீங்க மிஸஸ் மார்வா... ஆள் உயிரோடு இருக்காரா இல்லையா?"

"எல்லாம் கல்லுகுண்டாட்டம் இருக்கான்." வார்த்தைகளைத் துப்பினாள்.

நான் மேலே கேட்க விரும்பவில்லை. மேலே கேட்கத் தேவையில்லை.

"அம்பீ. வீட்டுக்கு வாங்களேன். காபி சாப்பிட்டுப் போலாம். நான் காபி நல்லா செய்வேன், பிராமின்ஸ் மாதிரியே."

"சாம்பார் சேஞ்ச மாதிரியா? **sorry**, என் பஸ் வந்துட்து. வரேன்."

எனக்கு பஸ் இல்லை. நான் நடைதான். ஆனால், ஏறிவிட்டேன். எனக்குப் பயமாயிருந்தது. இவள் என்னைச் சாப்பிடுவதாகத் தீர்மானித்துவிட்டாள்.

அடுத்த நிறுத்தத்தில் இறங்கி நடந்தேன். கால் போன வழி. இந்தப்பக்கம் வந்ததாக ஞாபகம் இல்லை. இடம் புதிதாக இருந்தது. ஒரு சந்தில் திரும்பியதும், இடமே வெடுக்கெனத் தனியாகத் துண்டிக்கப்பட்டாற் போல் சந்தடியும் இரைச்சலும் சட்டென அடங்கி, ஏன் நிசப்தமே குடிகொண்ட ஒரு குறுஞ்சாலை பிறந்து வளர்ந்தது. மந்திரக்கோல் மஹிமை போலும், புயல் நடுவே அமைதி. சாலை நடுவே ஒழுங்கான இடைவெளி களில் மரங்கள். இரு பக்கங்களிலும் மதில்களின் பின் னால் தோட்டங்கள், தோப்புக்கள் நடுவே தெரிந்தும் தெரியாததுமாய்ச் சின்னதும் பெரிதுமாய்ப் பங்களாக்கள், காட்டேஜ்கள் பதுங்கின. 'போஷ்' ஏரியா போலும், இல்லை, பூராவே தனியார் சொத்தோ? வரலாமோ கூடாதோ? ஏதோ சைகையால்தான் இங்கு இழுக்கப்பட் டிருக்கிறேன். காலைக் கனவு தொடர்கிறதா? நப்பாசை.

அட, கல் பெஞ்ச் வேறேயா? அமர்கிறேன். அந்திக் காற்று சாமரம் ஆடி நெற்றி முத்தை ஒற்றுகிறது.

முத்தத்தின் மூச்சு.

என்ன சங்கடம்... இந்த முத்தம் நெஞ்சு முள்ளில் மாட்டிக்கொண்டு மாயமான் காட்டுகிறது; என்னைத் தன் பின் விளிக்கிறது. இங்கேதான் எங்கோ மாவும் தென்னையும் சூழ்ந்து இந்த சிலந்திக் கூட்டினுள் சிறை யிருக்கிறாள்.

"என் ராஜகுமாரா! வா! வா!"

No, no, இது இந்தச் சமயத்தின் சொக்குப்பொடி. தெரிகிறது.

ஆனால், தொண்டையை அடைக்கிறது.

அந்தரத்தில் பூமி தன் அச்சில் யுகாந்த காலமாய்ச் சுழலும் தனிமையை உணர்ந்த திரண்ட சோகம். அதன் அத்தனை ஜீவராசிகளுக்கும் பங்காகும்போது நேரும்

வேதனையின் ரூபிணிதான் என் இளவரசி. கனவில் என் உதட்டில் பதிந்த முத்தம் அவள் அனுப்பிய சேதி. சேதியின் மர்மம் என் இதய நரம்பைச் சுண்டும் சோகஸுகா நாதத்தின் விண்விண்ணில் தத்தளிக்கிறேன்.

பெஞ்சின்மேல் தாழ்ந்த பூவரச இலைகளினூடே ஒரு நக்ஷத்ரம் என்னைச் சிந்திக்கிறது.

இரு கைகளையும் அதை நோக்கி நீட்டுகிறேன். "என் எண்ணத்தின் ப்ரதிஷ்டாவந்தி, வா! என்முன் பிரத்யக்ஷமாகு!"

இலைகள் சலசலத்தன. அந்த சலனத்தின் நக்ஷத்ரத்துள் அவள் கலைந்தாள்.

ஒற்றைப் பக்ஷி வானில் தன் ஜோடியைத் தேடிக் கொண்டே எட்ட மறைந்தது.

ஊஹூம். அந்தத் தருணம் என் தோளைத் தொட்டு விட்டுப் போய்விட்டது. இனி வராது.

மறுபடியும் வெட்டோ வெறிச்சுத்தான். அங்கு, இங்கு, எங்கும் இனி அதுதான்.

எழுந்து நடக்கிறேன். கால் வந்த வழி.

ஒரு திருப்பத்தில் நெடுஞ்சாலையின் போக்குவரத்து இரைச்சல், ரொட்டி அடுப்பு அனல்போல் முகத்தில் மோதுகிறது.

கடைகண்ணிகள், வாஹனங்கள், ஜன நடமாட்டம் இரவைப் பகலாக்கிவிட்டது.

நாளைக்குத் தீபாவளி.

ஜவுளிக் கடைகளில் இன்னும் கூட்டம் வழிகின்றது.

பக்ஷணக் கடைகளில் கூட்டம் நெரிகின்றது.

பட்டாசுக் கடைகளில்—சொல்லவே வேண்டாம்.

எங்கும் தீபாவளி! பேரம் அதன் கடைசி நேரத்தின் சுறுசுறுப்பில் பிதுங்குகிறது.

வீட்டு வாசல்களில் விஷ்ணு சக்கரங்கள், அதிர் வெடிகள், ஊசிப்பட்டாசு சரங்கள், அவுட் வாணங்கள்; தெருவெல்லாம் புகை, கந்தக நாற்றம், கலியாண கோலம்.

ஆனால், நான் மட்டும் 'வெறிச்.'

நடக்கிறேன்.

நட, நட, நட.

பூமியின் விளிம்புவரை தொடுவானம் எட்டும்வரை காலம் முடியும்வரை

நடந்து முடியும்வரை

நடந்து கொண்டேயிரு.

No use, விடிமோக்ஷமே கிடையாது.

இன்று வருவாளா?

முத்தம் தருவாளா?

தன்னைக் காண்பித்துக்கொள்வாளா?

எனக்குப் பைத்தியம் பிடித்துக்கொண்டிருக்கிறதா? இருப்புக் கொள்ளவில்லை.

அறைக்கு வெளியே மொட்டை மாடிக்கு வருகிறேன்.

வானம் இருண்டிருக்கிறது.

அங்குமிங்குமாய்த் தெரியும் ஒன்றிரண்டு நக்ஷத்ரங்களும் மூழ்கிக் கொண்டிருக்கின்றன.

''என்னைக் காப்பாற்று!''

'அம்மா! இல்லை.' மழை துளிக்கிறது.

இரண்டு சொட்டுக்கள் என் முகத்தில் விழுகின்றன.

என் கைப்பிடிக்க என்று வருவான் எனக் காத்திருக்கும் கன்னியின் கண்ணீர்த் துளி.

'பளிச்'சென நெஞ்சில் வெளிச்சம் ஏற்றிக்கொண்டது.

உள்ளே போய் ஒரு பேப்பரை எடுத்துக் கடிதம் எழுதினேன்.

வரிகள் வளர வளர கனம் லேசாயிற்று.

"மன்னிக்கு."

நான் சம்மதம். எனக்காகக் காத்திருக்க வேண்டாம். நீங்கள் என்ன சொன்னாலும், எது செய்தாலும் சரி, ஆனால் சுருக்க சுருக்க; வழி இப்பத்தான் தெரிந்தது. தெரிந்துகொண்டே இருக்கிறது."

# அலைகள் ஓய்வதில்லை

ஓடத்தடி காலியில்லை என்று எட்டத்திலிருந்தே தெரிந்ததும் பெரும் ஏமாற்றமும் கோபமும் வந்தது. ஆனால் என்ன செய்யமுடியும்? வாடகைக்கா எடுத்திருக்கிறேன்? வந்த வழியே திரும்பிப் போய்விடலாமா? ஆனால் கால்கள் கெஞ்சின. பிரசிடென்சி காலேஜ் மணிக் கூண்டிலிருந்து சாந்தோம் மாதா கோவில் தாண்டி அலையோரமா இவ்வளவு தூரம்—கிட்டத்தட்ட எலியட்ஸ் பீச்—இந்த வயதில் சுலபமாயில்லை. சற்று உட்கார்ந்து ஆசுவாசப்படுத்திக் கொண்டுதான் கிளம்பணும்.

அதுவரை அவள் அவரைப் பார்க்கவில்லை. அலைகளைப் பார்த்துக்கொண்டிருந்தாள். கரைக்கு ஏறுகையில் அந்த இடம் சற்று செங்குத்தாய், சிரமமாய்த்தானிருந்தது. நெட்டையில் உயரம் கூடுதலாய்த் தோன்றிய அவரைக் கண்டதும், எழுந்திருக்க ஆரம்பித்தாள்.

''நோ ப்ளீஸ்'' அவசரமாய்த் தடுத்து நிறுத்தினார். ''இங்கே உட்கார்ந்து கொள்கிறேன்.''

இடம் விடும் பாவனையில் (இடத்துக்கா குறைச்சல்?) தான் உட்கார்ந்திருந்த இடத்திலேயே தன்னை ஒடுக்கிக் கொண்டாள். அமர்ந்தார். அருகில் இல்லை.

முழங்கால்களைக் கட்டியபடி, அவள் அலைகளைப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

வயது முப்பது, முப்பத்திரண்டு இருக்கலாமா? முகம் அப்படி அழகில் சேர்த்தியில்லை. ஆனால் பெரிய பேரீச்சம்பழ விழிகள். படு ஒல்லி. வயதாகிவிட்டாற் போல் வாய் வார்ப்பில் கடுப்பு. சலித்துப்போன அவயவங்கள். நெற்றியில் ஒன்றும் காணோம் ஆனால் இந்நாளில் அதை வைத்துக்கொண்டு ஒன்றும் சொல்ல முடியாது. நீண்டு அடர்ந்த கூந்தலினின்று, தடித்த பிரிகள் இரண்டு, காற்றில் நெற்றிப் பொட்டில், நெற்றியில் ரோஷமாய் ஒன்றையொன்று துரத்தின.

இருவரும் கடலைப் பார்த்துக்கொண்டிருந்தோம். அவள் பேச முன்வரவில்லை. முன்வருபவளாயில்லை.

அவளும் என்னைக் கணித்துக்கொண்டிருப்பாள் கண் என்மேல் இல்லாவிட்டாலும். அந்த சாமர்த்தியம் அவாளுக்குத்தான் உண்டு.

கடல் விளிம்பில் தொடுவானத்தில் புகை மண்டலம். கப்பல் உள்ளே வருகிறதா? வெளியே போகிறதா?

இதுவரை கப்பலில் பிரயாணம் செய்ததில்லை. இனிமேல் எங்கே போகப்போகிறேன்? முதலில் போக்கிடம் ஏது? ஆனால் காயிதக் கப்பல்கள் எத்தனை விட்டிருக்கிறேன்! வாய்க்கால் கரையோரம், சிறுவனாய்க் கவிழ்ந்து படுத்து, என் கப்பல்கள் எத்தனை கவிழ்ந்திருக்கின்றன! வாய்க்காலின் சிற்றலைகூடத் தாங்காது மூழ்கியிருக்கின்றன! மழையில் நனைந்த சிட்டுக்குருவிகள்! பொலிவிழந்து, சலித்து, மூழ்கிவிட்டாலே தேவலை என்கிற வகையில் தண்ணீரில் தவித்துக்கொண்டு...ஹூம், இப்போது விடுவதற்கு என்னிடம காயிதக் கப்பல் இல்லை.

அலைகள் திரண்டு, சீறிச் சுழன்று, தம்மையே கடைந்துகொண்டு நுரை கக்கிக்கொண்டு கரையில் வந்து மோதி அறைந்து, விரிந்து, குலைந்து மீள்கின்றன. இவை களின் படையெடுப்பு ஓயாதது. சீற்றமும் தணியாதது. தோல்வியும் மாறாதது.

ஆனால் எப்பவும் அப்படியில்லை என்று ரோஷத் துடன் மறுப்பதுபோல், ஒரு பெரும் அலை, தாவித் துள்ளிக் கரையேறி, அவர்கள் உட்கார்ந்திருந்த இடத்தில் பரவிற்று. இருவரும் அவசரமாய் எழுந்து அதன் நனைப்புக்கு எட்ட, ஒருவருக்கொருவர் சற்றுக் கிட்ட நகரும்படி ஆனபோது அவர்களிடையே சமயம் சற்றுத் தளர்ந்தது.

அவர்களைத் துரத்திய அலை மீள்கையில், தன் உடன், மணல் திட்டில் கொஞ்சம் சரித்துக்கொண்டு போயிற்று.

"எவனுமே தனித்தீவு அல்லன்.
தீவின் விளிம்பில் ஒருகட்டி மண் உதிர்ந்தாலும்
அந்த மட்டில் தீவின் முழுமை சிதைந்தது.
ஆகவே யாருக்காக ஆலயமணி அடிக்கிறது
என்று கேட்டு அனுப்பாதே.
உனக்காகவே முழங்குகிறது."

"ஜான் டன்."

தனக்குத்தான் சொல்லிக்கொண்டாள்... ஆனால் அவர் காதுக்கு எட்டிவிட்டது. ஆச்சரியத்தில் அவர் முகம் மலர்ந்தது.

"பேஷ், பரவாயில்லையே! என்ன படிச்சிருக்கே?"

பதில் இல்லை. இஷ்டமில்லை போலும்.

"உத்யோகம் பண்ணறியா?"

தலை அசைந்த விதத்திலிருந்து அது 'ஊமா' 'ஹூமா' நிச்சயமாய்த் தெரியவிலலை.

சுற்றுமுற்றும் பார்த்தார். சுண்டல் விற்கிறமாதிரி ஒருத்தன்கூடக் காணோம். எவனும் வரமாட்டான். அவர்கள் மட்டுமே. துணைக்குக் கட்டு மரங்கள், ஓடம், அந்தண்டை சவுக்குத் தோப்பு, இந்தண்டை அலைகள்.

''இவ்வளவு தூரம் ஏன்? கதை, கவிதை எழுத வந்தையா?''

அவள் புன்னகைகூடப் புரியவில்லை. முகம் 'வெறிச்'.

''ஏம்மா, இன்னும் சற்று நேரத்தில் இருட்டிவிடுமே, இங்கே நீ தனியா இருக்கலாமா?''

அவரைப் பார்த்துக்கொண்டிருந்தாள், பார்த்துக் கொண்டேயிருந்தாள். விழிகள் நிறைந்தன. விழியோரங் களிலிருந்து இரு சொட்டுக்கள் புறப்பட்டுக் கன்னங்களில் வழிந்து மோவாயினின்று உதிர்ந்தன. பதறிப்போய் விட்டார். சங்கடமாகிவிட்டது. சற்றுப் பயமுமாகி விட்டது. மோஹினிப் பிசாசு என்கிறார்களே...

''லுக், உன் மனசைப் புண்படுத்தணுங்கற எண்ண மில்லை. எப்படிப் புண்படுத்தினேன்னும் தெரியவில்லை.''

அலைகளைப் பார்த்துப் பெருமூச்செறிந்தாள்.

செந்திட்டு வந்துவிட்டது. கன்யாகுமரியில்தான் சூர்யோதயமும் அஸ்தமனமும் ஒரே இடத்தில். சூரியன் கனிந்த ராக்ஷஸ ஆரஞ்சிப்பழம். மேற்கே பிரம்மாண்ட மான கணப்புச் சட்டி. ஆனால் இந்தக் கணப்பில் கோப மில்லை, தஹிப்பில்லை. சிவந்த பழக்கனிவு. சிவந்த சாறு மணல் திட்டுகள், மரங்கள் அலைகள்மீது பெய்தது. இன்னும் கொஞ்ச நேரம்தான் மாஜிக். இதோ கிழக்கு இருண்டுபோச்சே! அங்கு கறுப்பு மசி கொட்டிவிட்டது. கடல் விளிம்புக்கப்பால், இருள் மதில்கள், கோட்டைகள் எழும்ப ஆரம்பித்துவிட்டன.

எழுந்து நின்றாள். அவளுடைய பின்னல், சாட்டை யாய்த் தடித்துத் தொடைக்கும் கீழ் தொங்கியது.

அவரும் எழுந்துகொண்டார். மணலில் பாதம் புதைந்து நடப்பது பிரயாசையாய்த்தானிருந்தது. ஆனால் அந்த அளவுக்கு நடை நேரமும் மணலும் நீண்டன. அல்ப சந்தோஷம். ஆனால் சந்தோஷம்.

கட்டடம், வாகனங்கள், சாலை வெளிச்சங்களின் எல்லைக்குள் புகுந்ததும், ஏதோ பேச வாயெடுத்து அவள் பக்கம் திரும்பினால், அவளைக் காணோம். திகைத்து நின்றார். எப்போது மறைந்தாள்? போய் வரேன் என்று சொல்லிக்கொள்ளக் கூடயில்லை. கோபம் குறுகுறு—

''சுண்டல், சூடான சுண்டல் வேணுமா ஸார்?''

கேலி பண்ணுகிறானா? எரிச்சலாய் வந்தது. உடனேயே துக்கமாய் வந்தது.

நடந்தார்.

ஆச்சு, இரைச்சல் பண்ணைக்கு வந்தாச்சு. அதற்கு வீடு என்று பேர். ஸ்லாட்டர் ஹவுஸ். கூடம் தெரிந்தது. ஓஹோ, இன்று வெள்ளிக்கிழமையா? கேட்கவே வேண்டாம். தமிழில் சேதிக்கப்புறம்தான் சோறு.

(''அவசரமானால் எடுத்துப் போட்டுக்கோங்கோ. சாப்பிட்டபின் எல்லாத்தையும் நினைவா அழுத்தி மூடி வையுங்கோ.'')

இன்றைக்கு நான் எடுத்துப் போட்டுக்கொள்ளப் போவதில்லை. இந்த அலட்சியம் தாங்கும் நிலையில் இல்லை. அறையுள் போய் விளக்கைப் போடாமல் சாய்வு நாற்காலியில் சாய்ந்தார்.

என் படம் படுத்துவிட்டது. இருளில்தான் ஒளிந்து கொள்ள வேண்டும்.

இன்று நடந்ததெல்லாம் கனவா? அப்படி என்ன நடந்துவிட்டது? பேசக்கூடயில்லை. நான்தான் மனம் தாங்கவில்லை, நாலு வார்த்தை கொட்டினேன்.

நடந்தது கனவாயிருக்க விரும்பவில்லை. கனவை இழக்கவும் விரும்பவில்லை.

ஏன் அப்படி ஒட்டி உலர்ந்துபோயிருந்தாள்? சாப்பிட்டாளா இல்லையா? பட்டினியா? காசு கொடுத்திருந்தால் வாங்கியிருப்பாளா? தவறாக அர்த்தம் பண்ணிக்கொண்டு விட்டால்! அழகில்லை அங்கமில்லை. நெஞ்சை உறுத்துகிறாள்.

கூடத்திலிருந்து ஆரவாரம் அலைமோதியது. ஒளியும் ஒலியுடன் இவர்களும் ஆடுகிறார்களா?

ரவிக்கை முடிச்சுக்கடியில் தெரிந்த வயிறு முதுகுடன் அப்படியா தோய்ந்திருக்கும்? இப்படியெல்லாம் பார்க்க எனக்குத் தோணலாமா? தோன்றினால் அதற்குப் பால் உணர்வு என்று பெயர் சூட்டிவிடுகிறதா?

அனுதாபம், பரிவு, அபிமானம் எல்லாவற்றையும் மனோதத்துவத்தில் சில்லரையாக மாற்றி அத்தனையும் ஃப்ராயிடா? அப்புறம் என்னதான் இருக்கிறது, எதற்குத் தான் நாடி துடிக்கிறது?

இன்று என் அருமைப் பேத்தி கீர்த்தியிடம் ''நோ மேன் இஸ் ஆன் ஐலண்ட்'' என்று அடியெடுத்துக் கொடுக்கிறேன். ஜான் டன் என்று சொல்கிறாளா பார்க்கணும். மாட்டாள்; எனக்குத் தெரியும். 'இருக்கிற பாடமே தலை முழுகறது. இங்கே உங்கள் ஜான் டனுக்கு, வேறே இடமா? தாத்தா, அதெல்லாம் உங்கள் காலம்' என்று தலையிலடித்து உட்கார வைத்துவிடுவாள்.

இல்லை, இப்படியெல்லாம் நினைக்கிறபடியே இல்லாமல், கடற்கரையில் பிசினஸா?— சீ, நாக்கே அழுக, எது எப்படியிருந்தாலும் நீ அப்படி நினைக்கலாமா? கிழமே, சாக்கடை ஸ்னானம்னா உனக்குத் தனிப் பிரியம் போல இருக்கு.

நாளைக்கு வருவாளா?

மனைவி, மக்கள், பேத்திவரை எடுத்தாச்சு. என் அக்னிகள் தணிஞ்சாச்சு. இன்னுமா ரொமான்ஸ்?

அக்னிக்கும் இதற்கும் சம்பந்தமில்லை. ரொமான் ஸுக்கு வயதில்லை.

என்றைக்கும் நமக்கு நாமேதான் எதிரி. முகத்தைக் கைகளில் புதைத்துக்கொண்டார். அம்பா, காப்பாற்று.

அலைகள் நாய்கள் போல் ஒன்றுடனொன்று சண்டை யிட்டுக்கொண்டு குரைத்துக்கொண்டு நள்ளிரவு தந்த தனித்த சினத்தில், தம்மைத் தாமே திரித்துக்கொண்டு, துரத்திக்கொண்டு, அலங்கோலமாய்க் கரைக்கு வந்து விழுந்து உருண்டு புரண்டன. அலைகளின் மூர்க்கம் இப் போது தாராளமாய்க் கரையை நனைத்து ஓடமும் அலை களின் படையெடுப்பில் இடம் நகர்ந்தது.

ஓடத்தடி காலி இல்லை என்று எட்டத்திலேயே தெரிந்ததும், அவர் நடை விரைந்தது. கால்கள் அவரை இழுத்துச் சென்றன. அவள் மலர்ந்த முகம் வரவேற்றது.

''Hello!''

அவள் முழங்கால்களைக் கட்டியபடி, அவர் நின்ற படி, ஒருவரையொருவர் பார்த்தபடி...

''உக்காருங்க, ஏன் நிக்கறீங்க?'' சற்று கனத்த ஆனால் மிருதுவான குரல்.

''பரவாயில்லேங்க. உக்காருங்க. இங்கே''—இடம் விட்டாள். ''நாம் டெலிபோனிலா பேசப்போறோம்?'' சிரித்தாள்.

முற்றிலும் மாறியிருந்தாள். கூந்தலில் ஊதாப் பூச்சரம் தொங்கிற்று. நெற்றியில் ஊதாப்பொட்டு. வெள்ளைப்புடவை. நேற்றைய சோகைபோய், காயித லாந்தர் போல் ஏதோ உள்ளொளியில் அவள் புறம்

பிரகாசித்தது. நேற்றுபோல் அத்தனை வற்றலாய்த் தெரியவில்லை. இன்றைய உற்சாகமே சதைப்பற்றைத் தந்ததோ? ஆனால் வற்றல்தான்.

துல்லியமாய்க் கழுவிய கிளாசில் ஊற்றிய பானம் போல், நெஞ்சில் ஏதோ விளிம்பு உயர்வது உணர்ந்தார். இதற்கும் அவளுக்கும் கூட சம்பந்தமில்லை. இன்று நான் நிறைந்திருக்கிறேன். ஐயாம் ஹேப்பி.

''நேற்று நான் உங்களிடம் சரியாயில்லை.'' கனிந்த பேரீச்சம்பழ விழிகள்.

''ஓகே, இட் இஸ் ஆல் ரைட். மனசு எப்பவும் ஒரே மாதிரியிருக்கா?''

''அப்படியில்லீங்க. நேற்று என் மனது என் வசத்திலேயே இல்லை.''

''அனாவசியமா நான் ஏதும் தெரிஞ்சுக்க விரும்பவில்லை.''

''அப்படியில்லீங்க. நீங்க நேற்று இங்கே வந்து இருந்ததுக்கு தாங்க் பண்ணவே இன்னிக்கு வந்தேன்.''

''நான் வருவேன்னு உனக்கு நிச்சயமா?''

''அப்படித் தோணிச்சு. நம்பிக்கைதான்.''

அவருக்கு மனம் குளிர்ந்தது.

''நேற்று நான் மூட் அவுட். நேத்தி மாதிரி எனக்கு வருசத்துக்கு ஒருமுறை. இல்லை ஆறு மாசத்துலே அடுத்தடுத்து இல்லை, எப்போன்னே தெரியாது வரும். நேத்திக்கு ரொம்ப மோசம்.

''காரணம்?''

''பத்து வருடங்களுக்கு முன், என் வீட்டுக்காரர் இதே இடத்தில், கண்ணெதிரே தண்ணிலே மூழ்கிப்போனார்.''

'திடீரென்று காற்று 'சில்.'

''கையை நீட்டி நீட்டி ஆட்டறார். என்னவோ கத்தறார். காத்துலே அடிச்சுட்டுப் போயிடிச்சு கை கொடுக்க முடியல்லே. அலை அடிச்சுட்டுப் போயிட்டுது. என்ன செய்வேன்? தலைமேலே தண்ணி மூடிட்டுது. உதவிக்குப் பக்கத்துலே யாருமில்லை. நாங்க மாத்திரம். தனியே வந்திருக்கக்கூடாது. ஆனால் நான் காரணமா? சொல்லுங்க?''

அவள் கைகள் அவர் கைகளைப் பற்றிக்கொண்டன. உள் வலியில் புருவங்கள் நெரிந்தன. திடீரென்று அழகாகி விட்டாள். நடுவகிடின் இருபக்கங்களிலும் கூந்தல் வங்கி வங்கியாய்ச் சரிந்தது.

கைகளை இழுத்துக் கொண்டாள். ''மன்னிச்சுக்குங்க.'' கண்களைத் துடைத்துக்கொண்டாள். நெற்றி மேட்டில் சஞ்சலம் தவித்தது.

''அப்புறம் இந்தப் பேய் பிடிக்கும் பாருங்க, அது வரும்போதே தெரியும். ஒரு விதமா எனக்குள் இருட்டிப் போவும். கன்னங்கரேல்னு கறுப்பா, வாயைப் பிளந்து, என்னை விழுங்க வரும். உடனே போய் வாசலைத் தாளிட்டு உள்ளே வந்து படுத்துடுவேன். ஒண்ணுமே தோணாது. பகலோ, இரவோ, ஒரே இருட்டு. சோறு தண்ணி போவாது. முதல்லே செய்யவே முடியாது. ஒரு நாளோ, அஞ்சு நாளோ, கிழிச்ச நாராட்டம் பாயில் விழுந்து கிடப்பேன். செவியிலே அலை சத்தம். அத்தோட போற அவருடைய அலறல்—''

அவள் முகத்தில் வேர்வை கொட்டிற்று. மூச்சு இரைத்தது. அவர்களைப் பற்றி அக்கறையேயில்லாமல் அலைகள் இரைந்து கொண்டிருந்தன. கடல் விளிம்பிலிருந்து இருள் கரைநோக்கி வந்து கொண்டிருந்தது. இன்று என்ன சுருக்கா?

''ஒருவழியா என்னைப் பிடிச்ச கறுப்பு படிப்படியா அடங்கி, எழுந்திருச்சுப் பார்த்தால் வேளை தெரியாது. தள்ளாடிப் போய் தாளைத் திறந்து பார்த்தால் வாசல்லே கட்டிவிட்டிருக்கும் பையிலே நாலு நாள் பால் உறையிலே புளிச்சுகிட்டுக் கிடக்கும்.''

முறுவலிக்க முயன்றாள் முடியவில்லை.

''ஆனால் வரவர இந்த பிளாக்ஹுட் சமாளிக்கறதா யில்லே. அந்த அலறல் சத்தம் அர்ஜென்ட் ஆயிட்டுது. நேத்து ரொம்ப மோசம். பத்து வருடமா இங்கே நான் வல்லே நேற்றுத்தான் வந்தேன், இந்த அலையுள் நடந்து போயிட. நல்லவேளை, நீங்க வந்தீங்க. பத்து நிமிஷம் தள்ளியிருந்தால் என்ன ஆயிருக்குமோ?''

அந்த முகத்தின் துயரத்தைப் பார்க்கத் தைரியமில்லை. மடியில் கிடந்த தன் கைகளைப் பார்த்துக்கொண்டிருந் தார். ''மறு குற்றம், முதல் குற்றத்தைச் சரியாக்கிவிடாது. நான் வந்தது காரணமோ, உனக்குத்தான் மனம் மாறிற்றோ, இப்போது நீ உயிரோடிருப்பதற்கு நான் அம்பாளுக்கு நன்றி செலுத்துகிறேன்.''

அவருக்குக் குரல் தழுதழுத்தது. அவர் கைமேல் அவள் கை பொத்திற்று. அவள் விழிகள் நிறைந்திருந்தன. கன்னங்கள் சிரித்தன. நேரம் உருண்டை முத்து. வார்த்தை கள் அழகிய கிளிஞ்சல்கள்.

''நாம் இங்கே இருக்க வேண்டாம்.'' இருவரும் எழுந்தனர்.

''ஆமாம், அலை அழைக்கிற மாதிரி இல்லை?'' என்றாள்.

பூட்டைத் திறந்து, வீட்டுள் அவரை முந்திக்கொண்டு, இரு கைகளையும் தாழ்த்தி, ''என் இல்லத்துக்கு நல்வரவு தாருங்கள்'' என்றாள்.

இடம் மிகச் சிறியது. சின்ன அறை. அதனுள சின்-ன்-ன சமையலறை அத்துடன் சரி. ஆனால் படு சுத்தம். அது அது அதன்தன் இடத்தில். இல்லா விட்டால் புழங்க முடியாது. சுவர்மேல் சாற்றியிருந்த ஈஸிசேரை விரித்துப் போட்டு, இரு கைகளையும் காட்டினாள். அமர்ந்தார். என்னேரம் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டிருந்தரோ? மன நிறைவில் பேச்சுக்கிட மில்லை.

"ஏன் நிக்கறே? உட்காரேன்."

பெருமூச்செறிந்தாள். 'இதோ ஒரு மினிட், வந்துட றேன்.' சமையலறைக்குள் சென்றாள்.

"என்ன வாடகை?"

சமையலறையிலிருந்தபடியே, ஏன் கேக்கறீங்க? இருநூற்றிஐம்பது. வரமாதம் 25 கூட்டறான்."

"கட்டுப்படியாகுமா?"

"சமாளிக்கலாம். அவருக்கு வங்கியிலே வேலை. அவர் இறந்ததும், கருணை மனுவிலே எனக்கு வேலை போட்டுக் கொடுத்துட்டாங்க. பத்து வருடம் சர்வீஸும் போட்டாச்சி."

"அப்படின்னா சொந்த வீடு கட்டலாமே? வங்கி, கடன் கொடுக்குமே!"

ஆவி பறக்கும் இரு கோப்பைகளுடன் வெளிப் பட்டாள். ஒன்றை அவரிடம் தந்துவிட்டு, அவர் காலடி யில் உட்கார்ந்துகொண்டாள்.

"ஒண்டிக்கட்டை வீட்டைக்கட்டி, என்ன செய்யப் போறேன்? யாருக்கு எழுதி வைக்கப் போறேன்?"

' உறவு மனுஷாள் யாரும் இல்லையா?" சற்றுநேரம் சும்மாயிருந்தாள். பிறகு,

"எனக்கு ஒரு வயதில் ப்ளாட்பாரத்தில் துணியில் சுற்றிக் கிடந்தேனாம். யாரோ எடுத்துப்போய் அனாதை இல்லத்தில் சேர்த்துட்டுப் போயிட்டாங்க. அந்த முகத்தைக்கூட நான் அப்புறம் பார்க்கல்லே."

திடுக்கென்று ஆகிவிட்டது. அந்த மூச்சுத் தேம்பலில் அவள் முழுக்கதையே தெரிந்து போயிற்று. அவள் விரித்துச் சொல்லித் தெரிந்துகொள்ள வேண்டாம்.

"குழந்தை ஏதேனும்—?" தயங்கினார்.

"ஒண்ணு பிறந்தது. மூணாம் மாசம் அம்மையிலே ரெண்டு கண்ணும் போச்சு. அப்புறம் அதுவும் போயிட்டது. போனதே மேல்."

இனி மேலே கேட்பதே கொடுமை. ஏதேனும் கேட்டால் ஏதேனும் சொன்னால்? வாழ்க்கையில் ஏன் சிலர், துக்கத்துக்கென்றே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்? அவனுடைய சோதனைக் கூடத்தில் இப்படியும் ஒரு ஆய்வா? 'இன்னும் எவ்வளவு தாங்குவாய்?' இத்தனைக்கும் அவன் அநாதபந்து. ஆனால் அவனே அநாதை!

"என் கதையை விடுங்க. நான் யாராலும் வேண்டப்படாதவள். நீங்க எப்படியிருக்கீங்க? பையன்கள் எப்படி இருக்காங்க? மருமவ வந்துட்டுதா?"

அவர் வாய் ஏதோ பதில் சொல்லிற்று. மனம் எங்கோ வேலை செய்தது. ஏன் இப்படித் தன்மேலேயே தீர்ப்பு சொல்லிக்கொள்கிறாள்? நோ, ஐ வாண்ட் டு பீ வாண்டட். மிக மிக விரும்புகிறேன். என்னுடைய உபயோகத்துக்காக இல்லாமல், கைம்மாறு எதிர் பார்க்காமல், என்னை எனக்காகவே விரும்பணும். நான் அன்பு தரவும், அன்பு பெறவும் ஆவாஹனம் வேண்டும். குழந்தைக்கு பொம்மைபோல். பொம்மை என்பதைக்கூட மறந்துவிட்டு குழந்தை எப்படி பொம்மையுடன் பேசு

கிறது? வாழ்க்கையில் மேக் பிலீவ் இருந்தாலும் இருந்து விட்டுப் போகட்டும். எப்படியேனும் பரஸ்பரம் ஆதரவு, துணை கிடைக்கணும். இந்த பரஸ்பரம் எங்கிருந்து கிடைத்தாலும் அதுவே கொடுப்பனை. வாழ்க்கைக்கு அர்த்தம்—

—அவர் மீண்டபோது, அவளும் மௌனமாயிருந்தாள். அவரைப் பார்க்கவில்லை. முகம் தரைமேல் தாழ்ந்து, அமைதியின் வளர்ப்பில், உள்நோக்கில், சலன மற்றுத் தெளிந்திருந்தது.

இருவரும் என்னேரம் இந்த சமாதியில் இருந்தனரோ, ஒரே சம்புடத்தில் இரண்டு ஜின்டான் மாத்திரைகள். அதனதன் தனிமணம் கமழ்ந்துகொண்டு, அதில் நிறைந்து...

''பியூட்டிஃபுல்'' வார்த்தை மூச்சாய் வந்தது. கண்கள் பனித்திருந்தன. ''எனக்கு இப்படி இருந்ததில்லை.'' நீண்ட பெருமூச்சு கிளம்பிற்று. ''உங்கள் வருகை எனக்கு ஆசீர்வாதம்.'' அவர் பாதங்களைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டாள். அவருக்கு சிலிர்த்தது.

''வரேன்.''

பெருமூச்செறிந்தாள்.

''கவலைப்படுவாங்க.''

''கவலைப்பட அதிர்ஷ்டம் பண்ணியிருக்கணும். ''வந்துட்டீங்களா அப்பா? இன்னேரம் எங்கே போயிருந்தீங்க'ன்னு அதட்ட, கொடுப்பனை வேணும். பாருங்க, நான் ஆபீசிலிருந்து வீடு திரும்பினால், இந்த நாலு சுவர் தான் பார்க்கணும்'' சிரித்தாள்.

''நாளைக்கு வரேன்.''

''நிச்சயமா?''

''அவசியம் வருவேன்.'' அவளுக்காக அவர் மனம் பரிதவித்தது.

“எப்போ?” (குழந்தைபோல்!)

“இன்று வந்த நேரத்துக்கு.”

எழுந்து நின்றார். அவளும் எழுந்துகொண்டாள். சட்டென்று எட்டி அவள் உதடுகள் அவர் கன்னங்களை ஒன்றின.

மின்சாரம் மெத்தென்றுதான் தொடும்.

அவரை ஆகாயத்தில் தூக்கி எறிந்து நக்ஷத்ரங்களிடையே மாட்டிக் கொண்டுவிட்டார்.

அவர் தன்னில் இல்லை. செல்லும் திக்கும் வழியும் ஆடி, சிறகுகள்மீது மிதந்து சென்றார்.

அவளுக்கு விஜிடபிள் கட்லெட் செய்ய வரும். அவர் வரவேளைக்குச் சூடாயிருக்கணும். வரவேளைதான். கட்லெட்டில் பல் அழுந்தறப்போ சூடு, பல் இகுருக்கு அத்தினி சுகமாயிருக்கணும்.

டிபனைத் தயார் செய்துவிட்டு, தெரு வாசலுக்கு இருமுறை சென்று வந்தாள். பிறகு சூடு இறங்காமல் இருக்க, கட்லெட் ஏனத்தைக் கொதிக்கிற வெந்நீரில் இறக்கி மூடினாள்.

டிகாஷன் எப்பவோ இறங்கி, பாலும் புடைச்சுப் போச்சு. மறுபடியும் தெருவுக்கு வந்து பார்த்தாள். சொன்ன நேரம் எப்பவோ கடந்துவிட்டது. அஸ்தமன இருள் இறங்கிவிட்டது. உள்ளே வந்தாள்.

சுவர்க்கடிகாரத்தில் வினாடிகள் தாளித்துக்கொண்டிருந்தன.

சுவரோரமாய்ச் சாய்ந்து முழங்கால்களைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்துவிட்டாள்.

இப்பவும் வரலாம். எப்பவேனும் வரலாம். பல்லி சப்தித்தது.

ஊன்றிய செவிக்கு அலையிரைச்சல் எட்டக் கேட்டது.

அலைகள் ஓய்வதில்லை.

# சூடிக் கொண்டவள்

தோட்டத்தில் செம்பருத்திச் செடிகள் இரண்டு. வேறு தாவரங்கள் ஏதேதோ பயிர் செய்ய முயன்றும், மண் ஏற்றுக் கொள்ளவில்லை. இந்தச் செம்பருத்திச் செடிகளில் மட்டும் தினம் மூன்று நான்கு பூக்களுக்குக் குறைவில்லை. ஒரொரு சமயம் ஏழு, எட்டுகூடப் பூத்துத் தள்ளி விடும்.

அம்பாளுக்குச் செம்பருத்திப் பூ விசேஷமாமே! சில நாட்களாக லலிதா சஹஸ்ரநாமம் படிக்கிறேன்.

* * *

Gone ரிலிஜியஸ்? உன் உதட்டுக் குழியில் புன்னகையின் குமிழ் தெரிகிறது. பக்தி பொங்குமளவுக்கு மனம் களங்கமற்று இல்லை. இருக்கப் போவதுமில்லை, தெரிகிறது. வட்டம் ஆரம்பித்துப் புள்ளிக்குத் திரும்பி, அதில் முடியப் போகிறதென்று நினைக்கிறேன். முறைதானே!

அன்று அம்மா, தன் மடியில் என்னை இருத்தி, என் கைகளை ஒன்று சேர்த்துக் கூப்பி, "ஓம்மாச்சி" சொல்லித் தந்தாள்.

இன்னமும் அம்மா மடி கிடைக்குமா? நானும் ஆசைப் படலாமா?

அடுத்து அம்பாளின் மடிதான் அடைக்கலம். அங்கு இடம் என்ன சுலபமா? இருந்தாலும்—

ஓம் புவனேஸ்வரியே நம:

இதைக் காலட்சேப மேடையாக மாற்றுவதாக எண்ணமில்லை. அதற்கு என்னிடம் சரக்கு இல்லை. எனக்கு எந்தத் தகுதியும் இல்லை. குங்குமத்தால் அர்ச்சிக்கவோ, மலர்களைத் தூவவோ—ஊஹூம். வடமொழி எழுத்து வாஸனைகூடக் கிடையாது. முதுகு நிமிர்ந்து இரண்டு மணிநேரம் தொடர்ந்து உட்காரக்கூடத் திராணி இல்லை. ஆனாலும் உட்காருகிறேன். சில நாட்களாக லலிதா சஹஸ்ரநாமம் படிக்கிறேன்.

ஓம் மாத்ரே நம:

ஆரம்பமே அம்மா.

ஆனால் இன்று— இடறி இடறி, நாமாக்களை எழுத்துக் கூட்டிப் படித்துக் கொண்டே வருகையில், திடீரென்று நான் தனியாயில்லை.

ஆனால் பூஜை அறையில் நான் மட்டும்தான். எனக்குத் திடீரென ஒரே பரபரப்பு.

அவள் விளக்கில் இறங்கி, குத்து விளக்கின் தலையில் சூட்டியிருந்த செம்பருத்திப் பூவை எடுத்துத் தன் கூந்தலில் செருகிக் கொண்டது போல—முகம் காட்டவில்லை—தலையின் பின்புறம்—அதையும் ஸ்தூலமாகக் காண்பதென்பது அத்தனை சுலப சாத்தியமா? சிரமமாகக்கூடச் சாத்தியமா? முதலில்—'சாத்தியமா?'

* * *

பிரமை? ஒப்புக் கொள்கிறேன், பிளட் பிரஷர்? இது வரை இல்லை. "ஹம்பக். புரளி, காதில் பூ சுத்தறே." வாயடைத்து விடுகிறது. தரப்பு பேச வாதங்களுக்கு எங்கு போவேன்? ஃபான்டஸி? இருக்கலாம். ரொமாண்டிக் இமாஜினேஷன்? மறுக்கப் போவதில்லை. அதற்கு வயது உண்டா?

என் பங்கில் ஒன்று மன்றாடுகிறேன். தானாக எழுந்த தோற்றம்தான். எண்ணத்தை முறுக்கி நான் வரவழைக்க வில்லை "எப்படியும் முன்னால் முறுக்கி இருப்பாய். முறுக்காமல் இருந்திருக்க முடியாது." சரி, வலுக் கட்டா யத்தில் மட்டும் வந்துவிடுமா? எப்படியும் இந்த வடிவத்தில் நினைக்கவில்லை.

"அது உன் ஸப் கான்ஷியஸ்."

இருக்கலாம். இருந்துவிட்டுப் போகட்டுமே! எதையும் நான் நிரூபிக்க வரவில்லை. எனக்கு நேர்ந்ததை அல்லது நேர்ந்த மாதிரி இருந்ததைச் சொன்னேன். இதுவும் நான் சொல்வதுதான். ஆனால் நேர்வதில் 'மாதிரி' என்பது கிடையாது. நேர்ந்தது நேர்ந்ததுதான். நம்பு என்று சொல்ல நான் யார்?

உருவகம், கனவு, ப்ரமை, ஹம்பக், ஃபான்டஸி இன்னும் என்னென்னவோ, உள்ளத்தின் அவஸ்தையில் உள்ளனவே. இன்றியமையாமையே.

ஆனால், விசாரணை, ருசு, நிரூபணை, தீர்ப்பு, நிபந்தனை. இதையெல்லாம் கடந்து, அறியாத, புரியாத நிலைகளும் இருக்கின்றன என்கிற தடத்தில் சம்மதம் காண்போமா?

ஒன்று நிச்சயம், அவளே இருக்கிறாளா? அது அவளா? அவனா? சர்ச்சையை விற்பன்னர்களுக்கு விட்டு விட்டால், மிஞ்சுவது என்ன? எண்ணத்தின் அழகு. எண்ணத்தில் அழகு என்று சொல்கிறேன், ஒருவேளை இதுவேதான் அவளாகத் தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறதோ?

ஒரு சமயம் அவள்.

ஒரு சமயம் அவன்.

* * *

**சிந்தா நதி தீரே, சிந்தா விஹாரே!**

# இந்திரா

மாலை ஆபீஸ் முடியும் நேரத்துக்கு ஸ்ரீனிவாஸன் என்னிடம் வந்தான். ''நீங்கள் இன்று வீட்டுக்கு வரணும்.''

''என்ன விசேஷமோ?''

''என் மனைவிக்கு ஆறுதல் சொல்லணும்; எங்கள் முதல் குழந்தை காலமாகிவிட்டதற்கு.'' இது நான் எதிர்பாராதது. என் ஸ்வரம் இறங்கிற்று.

''இதோ பார், சீனு. இதற்கெல்லாம் எனக்கு என்ன தகுதி? பெரியவாள் சமாச்சாரம், ஆணுக்கு ஆண், பெண்ணுக்குப் பெண்.''

''No. you are a writer. You are gifted ''நீங்கள் தான். I want it please.''

சீனிவாஸன் இதுபோல் அடிக்கடி ஆங்கிலத்துக்கு நழுவி விடுவான். நன்றாகவும் பேசுவான். கெட்டிக்காரன் Push உள்ளவன். உத்தியோகத்தில் எனக்கு மூன்று வருடம் ஜூனியர்.

G. T. இல், தெருப் பெயர் மறந்துவிட்டது. ஏறக்குறைய நாற்பது வருடங்கள் ஆகின்றன. வளைக்குள் வளைபோல் குடித்தனங்கள் நிறைந்த ஒரு நீண்ட வீட்டினுள், கடைசி வளையுள் அழைத்துச் சென்றான். வாசற்படியண்டை உட்கார்ந்திருந்த ஒரு யுவதி என்னைப் பார்த்ததும் வெடுக்கென எழுந்தாள்.

"இந்திரா, This is the famous லா. ச. ரா."

வந்த கோபத்தைச் சிரமப்பட்டு அடக்கிக்கொண்டேன். முதலில், அப்போது நான் famous இல்லை. ('இப்போ மட்டும்?' என்று கேட்டுவிடாதீர்கள். மேலே சொல்லணும்) இரண்டாவது, இதுபோன்ற அறிமுகம் எனக்குப் பிடிப்பதில்லை. ஆயினும் அவன் படும் பெருமையை, சந்தோஷத்தைக் கெடுக்க முடியுமா?

இருவரும் அவர்கள் குல முறையில், காலில் விழுந்து, ஐந்து முறை கும்பிட்டுக் கும்பிட்டு, 'சேவி'த்தனர்.

இந்திரா—இட்ட பெயரா, அழைக்கும் பெயரா, இன்னமும் அறியேன். அவ்வளவு இளவயதில், அந்த 'ஐயங்கார்' கட்டுக்கும் சுயமான துரு துருப்புக்கும்—'ரம்மியம' என்ற வட மொழிக்கு அதே ஓசை ருசி, பொருள் நளினத்துடன் நேர்த்தமிழ் தெரிந்தவர் சொல்லுங்களேன்!

அறிவுபூர்வமாக சம்பாஷிக்கத் தெரிந்து, மரியாதையும் தெரிந்து, பெண்மையின் பிகு குறையாமல், இன்முகம். பண்பு, உபசரிப்பும் கூடிவிட்டால்,—அதெல்லாம் புண்ணிய சமாச்சாரம், எல்லாருடைய அதிர்ஷ்டமல்ல.

அவள் என் கதைகளைப் படித்தவள் அல்லள். ஆனால் நேரம் போனதே தெரியவில்லை.

நான் சாப்பிடுவதற்கு இலை வாங்கச் சீனு போனான். போகும்போது எனக்கு ஜாடைகாட்டிவிட்டுப் போனான்.

'தக்குணுண்டு சாமிக்குத் துக்குணுண்டு நாமம்'—ஒரு குட்டி அறைக்குள் ஒரு குஞ்சான் அறை. அவர்கள் ஆண்ட இடம் அவ்வளவுதான்—உள் அறையில் எட்டிப்

பார்த்தேன். குழந்தையை மடியில் போட்டுத் தூங்கப் பண்ணிக்கொண்டிருந்தாள். இது பெண். நறுவலாகத் தான் இருந்தது. இன்னும் ஆறு மாதம் ஆகியிருக்காது.

என்னைப் பார்த்ததும் புன்னகை புரிந்தாள்.

''என் பெற்றோருக்கு நான் ஐந்தாவது பிறப்பு!'' என்றேன். எங்கானும் ஆரம்பிக்கணுமே! முன்பின் பீடிகையில்லாமல், இதுவும் ஒரு 'பாணி'தான், இல்லை?

''அப்படியா? அப்போ தங்கள் குடும்பம்—'' சட்டெனக் குழப்பத்தில் அவள் முகம் மாறிற்று. ''இல்லை தேவரீர் மூத்தவர்னு அவர்...'' என்று இழுத்தாள்.

'நான் ஐத்தவாது என்று சொன்னேனே தவிர, எனக்கு முன்னதெல்லாம் தக்கித்து என்று சொல்ல வில்லையே! அப்புறம், திலோமம் பண்ணி, தவங்கிடந்து, விரதமிருந்து ராமேசுவரம் போய் அடியேன் ராமாமிருதம் ஏன் பிறந்தேன்னு இருக்கு.''

''அப்படிச் சொல்லக் கூடாது.

அவள் குரல் நடுங்கிற்று.

''தமாஷுக்குக் கூடச் சொல்லக்கூடாது!'' என்று மீண்டும் அடித்துச் சொன்னாள்.

நான் தமாஷுக்குச் சொல்லவில்லை என்று அவள் எப்படி அறிவாள்?

''நான் சொல்ல வந்தது அது அல்ல. வேறு. 'நட்ட தெல்லாம் பயிரா? பெத்ததெல்லாம் பிள்ளையா?'ன்னு அம்மா சொல்வாள். அதையேதான் உன்னிடம் சொல்ல வந்தேன்.''

அவள் புரிந்துகொண்டுவிட்டாள். உடனேயே அவள் கன்னங்களில் வழிந்த கண்ணீர் எனக்குச் சற்று அதிசய மாகத் தானிருந்தது. ஆனால் நான் விடவில்லை. தொடர்ந்தேன்.

"அந்தக் குழந்தை குறை ப்ரசவமா, நிறை ப்ரசவமா, இருந்து போச்சா, உடனேயே போச்சா, எதுவும் அறியேன். இப்போ நீ அழுவது சுமந்த கனத்துக்கா, வளர்த்த பாசத்துக்கா, உனக்குத்தான் தெரியும். துக்கங்களை ஒப்பிட்டுப் பார்ப்பது முறையல்ல. அவரவர் துக்கம் அவரவருடையது. ஆனால் இப்போ உன் மடியில் ஒரு குழந்தையிருக்கிறது. அது உன் முகத்தைப் பார்த்துச் சிரிக்க, நீ அதன் முகத்துள் குனிந்து சிரிக்க..."

இதெல்லாம் நானா? எனக்கும் இப்படிப் பேச வருமா?

அப்புறம் இரண்டு மாதங்களுக்கொரு முறை, அங்கு போவேன். என் வீட்டுக்கு நான் அவர்களை அழைக்கவில்லை. நான் அழைக்காமல் அவர்கள் எப்படி வருவார்கள்?

கீதாவுக்கு முதல் ஆண்டு நிறைவு வந்தபோது, நான் சீனுவிடம் பணம் கொடுத்து, குழந்தைக்கு ஏற்றபடி, காஞ்சிபுரம் பட்டுத் துண்டு வாங்கிக் கொள்ளச் சொன்னேன்.

திணறிப் போனார்கள். எப்படியும் அந்த நாளிலும் அது ஒரு கணிசமான ஐட்டம் அல்லவா?

அது சரி, ஐயாவுக்கு எங்கிருந்து இந்தத் தாராளம்? குழந்தை மேல் பாசம் பொங்கிற்றோ? இல்லை கொல்லையில் காசு மரமா?

திருவல்லிக்கேணியில் அதுவும் வாடகை வீட்டில் கொல்லைப்புறமா? இடமும் ஏவலும் நன்றாப் பார்த்துக் கேட்டேளே? அந்தக் குழந்தையை நான் தொட்டது கூட இல்லை.

அப்போ? கர்ண பரம்பரையாக்கும்!

கர்ணனைப்பற்றிப் பேச்சு எடுத்ததால் சொல்கிறேன்; கொடுப்பது என்பது கருணையால் மட்டும் அன்று, குழந்தையை மூட்டை கட்டி ஆற்றில் விட்ட தொட்டிலிலிருந்து, கடைசியில் உயிர்விட்ட தேர்த்தட்டுவரை, கர்ணன் வாழ்க்கையில் வஞ்சிக்கப்பட்டவன். தாயாரிலிருந்து, மனைவியிலிருந்து, தெய்வத்தால்வரை. அம்சங்களுக்குக் குறைவு இல்லை. சாபங்களுக்கும் குறைவில்லை. தாய்மூலம் தன் உண்மை தெரிந்தும், கடைசிவரை வெளிப்படுத்த முடியவில்லையே! உண்மையும் துரோகம். துரோகம் தவிர—அப்பா, வேண்டாம்.

ஏன் கொடுத்தான்?

வாழ்க்கை மேல் வெறுப்பு, தன் மேலேயே வெறுப்பு, கூடவே ஒரு இறுமாப்பு. விதியே, உன் கை வரிசை இவ்வளவுதானா? இதற்குமேலும் உன்னால் முடியுமா?

கொடுப்பதில் ஒரு பழிவாங்கல் இருக்கிறது. யாரை? என் விதியை, நான் வந்த வழியை எடுத்துக்கொள். எடுத்துக்கொள், எல்லாவற்றையும் எடுத்துக்கொள். நான் கொடுக்கக் கொடுக்க, எனக்கு விஷய விரக்தி கூடக் கூட, உனக்கு அபஜெயம்.

அந்த மனநிலையில் இருந்தேன் என்று வைத்துக் கொள்ளுங்களேன். இத்தனை கசப்புக்குக் காரணம்? எதற்கு? சொல்வதில் பயனில்லை. அதனால் நிலைமை மாறப் போவதில்லை. அதனாலேயே சொல்லத் தேவையுமில்லை.

* * *

1951 வாக்கில் எங்கள் வங்கி பெரிய வங்கியோடு இணைந்தபோது, Retrenchment கோடரி ஸ்ரீனிவாஸன் மேல் விழுந்தது. பிறகு அவன் பிஸினஸ்ஸில் புகுந்து

விட்டான். ஒரு அச்சுக் கூடம் சின்னதாக ஆரம்பித்தான். உத்தியோகம் அவனை விட்ட வேளை, அவனுடைய நல்ல காலத்தின் துவக்கமாக அமைந்துவிட்டது.

சீக்கிரமே வீடு கட்டி, குரோம்பேட்டைக்குப் போய் விட்டான். எங்கள் சந்திப்புக்கு வாய்ப்புக்களும் குறைந்து போயின. எப்போதேனும் ரயிலில் சந்தித்தால் உண்டு. எங்கள் தண்டவாளங்கள் மாறிவிட்டன. எங்களுக்கு ஒருத்தருக்கொருத்தர் நேரமில்லை.

கண்ணில் படவில்லை, மனதிலும் படவில்லை.

நான் உத்தியோகத்தில் உழன்று மாற்றல் ஆகி, அங்கு உழன்று, முறையாக ஓய்வு பெற்றுச் சென்னைக்குத் திரும்பி ஆச்சு ஒன்பது வருடங்கள்.

நான்கு வருடங்களுக்கு முன் ஒரு கல்யாணப் பத்திரிகை வந்தது, ஒரு பத்திரிகை ஆபீஸிலிருந்து திருப்பப்பட்டு. வதுக்களின் பெயர்கள், அழைப்பவர் பெயர் எல்லாமே புதுசு.

ஆனால் ஊன்றிப் படித்தபோது—

என் சகோதரியும் லேட் எஸ். ஆர். ஸ்ரீனிவாஸனின் இரண்டாவது புத்திரியுமான சௌபாக்கியவதி வேதாவை...

எஸ். ஆர். ஸ்ரீனிவாஸன்? லேட்? என்னைவிடப் பத்து வயது இளையவன். என்ன அக்ரமம்! ஆனால் அவன் தானா?

கல்யாணம் மைலாப்பூரில். நான் அடைந்த நேரம், மத்தியானச் சாப்பாடு முடிந்து, வரவேற்புக்கு முன், சந்தடி சற்று ஓய்ந்த நேரம்.

நறுவலாக ஒரு ஸ்திரீ முப்பது வயதிருக்கலாம். எதிர்ப் பட்டாள்.

''கல்யாணப் பெண்ணின் தாயாரைப் பார்க்க முடியுமா?''

''என்னோடு வாங்கோ.''

சாமான் அறைக்கெதிரில் முன்றானையை விரித்துப் படுத்திருந்த—

''அம்மா, உன்னைப் பார்க்க யாரோ மாமா வந்திருக்கார்.''

—உருவம் எழுந்தது. பாவம், அசதி.

''யாரது? ஓ!''

முகம் அரவிந்தமாகும் அந்த அற்ப நேரத்துள் நிகழும் கற்ப காலத்துக்கு என்னிடம் வார்த்தை இல்லை.

அப்படியேதான் இருக்கிறாள்.

''என்னடி கீதா? லா. ச, ரா. வைத் தெரியல்லியா?''

அந்த சந்தோஷ நேரத்தில் ஸ்ரீனிவாசனைப் பற்றிய நினைவு தவிர்க்க முடியாது.

ஆனால் கல்யாண வீடு. கண்ணீர் சிந்தக்கூடாது.

கண்ணீர் பளபளக்கும் விழிகளில் சிரிப்புடன் கீதா:

''மாமா! நீங்கள் என் ஆண்டு நிறைவுக்குக் கொடுத்தேளே, பட்டுப் பாவாடை— பத்திரமா என் பெட்டி அடியில் இருக்கு.''

பூமி கிடு கிடு.

சிந்தா நதியில் மிதந்து வந்த ஒரு அகல் விளக்கு.

**My dark Gazelle of the night!**

என் இரவின் கரிய மானே!

இரவு கண்ட விரிசல் போலும், மின்னல் கிளை பிரிந்த உன் கொம்பு விலாவில் ஏறி, நான் வீழ்ந்த மூர்ச்சையி னின்று மீண்டபோது, உந்தன் முன்னங் குளம்புகள் என் மார்மீது உணர்ந்தேன்.

உன் மூச்சின் நெருப்பு, குங்கிலியத்தின் குபீர் குபீரில் உன்னைச் சூழ்ந்த இருளை எரித்து, அந்த வெளிச்சத்தில் நீ விட்டு விட்டு வெளிப்பட்டு, உடன் உடன் மறைகையில்.

என் கன்னத்தில் உன் மூக்கு ஈரத்தின் உராயலில்,

உன் நக்கலில்,

மீண்டும் நான் மூர்ச்சையில் மூழ்காமல்,

—நில் நில் நினைவே, மாறி மாறி நீ விழுவதும், எழுவதும்,

இழப்பதும் என் அவமானம்.

இச்சமயம் மானாக வந்திருக்கிறாள், விடாதே விடாதே. உன் மார் மேல் குளம்புகளைச் சிக்கெனப் பிடி!—

குளம்புகள் மார்பினின்று இறங்கிவிட்டன.

என் கைகள் இருளைத் துழாவுகின்றன.

விலாவை ஒரு கையால் பிடித்தபடி எழுந்து உட்காருகிறேன். அருவி என் கைமேல் வெம்மையில் கொட்டுகிறது.

ஆனால் உயிர் போகேன்.

உயிர் போயினும் நினைவு போகேன்.

குங்கிலியத்தின் குபீர் குபீர் ஜ்வாலை கம்கம் கமகம.

உன் மூச்சு விட்டு விட்டுக் காட்டும் வெளிச்சத்தில் தொடர்கிறேன்.

கருமுகில் காட்டுக்குள் நுழையுமுன் ஒருமுறை என்னைத் திரும்பிப் பார்க்கிறாய்—நெஞ்சு பகீர்.

பளப்பள கரும் திராக்ஷைப் பெரும் விழிகள் என்னைக் கவ்வி விழுங்கித் துப்பி

அடவியுள் மறைந்து போனாய்

என் செல்வமே! என் உயிரே!

தொடர்கிறேன். கல்லில், முள்ளில் தட்டுத் தடுமாறி இடறி விழுகிறேன் எழுகிறேன் தொடர்கிறேன்.

இது கர்ப்ப இருள். ஆயினும், என் இமையுள், உன் மூச்சு அனல் கக்கிய கலிக்கத்தில் புறத்தில் கண்டதைக் காட்டிலும் பரிமாணம் பிதுங்குகிறாய்.

சதைப் பிடிப்பான தொடைகள்

நெஞ்சை அள்ளும் பிருஷ்டத்தின் மேல் வால் முளை, ஓயாத துடிப்பில் விளிக்கிறது.

என் அகத்தின் இருளே! உன் உயிரின் பிரிவே! நான் எதிர் நோக்கும் என் மரணானந்தமே!

என்னை உன்னோடு அழைத்துச் செல்லாயோ!

—உஷ், எங்கே போகிறாய்? போவது போலும் பொய் காட்டுகிறாய்!

நீ எங்கேயும் போகவில்லை. எங்கேயும் போக முடியாது.

நானும் உனை அடைய இயலேன், நீ அடைவதற்கில்லை.

என் உண்மையைக் கடைந்து, அதன் நேர்த்தியைச் சுவைக்கவே காத்திருக்கிறாய்.

காதலின் பந்தம், தன்மையே பரஸ்பரம் இதுதான்.

அவரவர் இதயக் கலசத்தைக் குடைந்து அதனுள் அமுதமே உன் உணவின் குறைந்த பட்சத் தரம். உன் உடல் புள்ளிகள் ஒவ்வொன்றும், நீ கொள்ளையாடும் கலசங்களினின்று தெறித்து, தெறித்த இடத்தில் ஊறிப்போன அமுதத் துளிகள்.

என் மரணமே! என் அமரமே!

மூச்சு, அசைவு, நினைப்பு, உணர்வு—இவை உயிர்ச் சக்தி உடலில் நிலவும் அடையாளங்களன்றி இவை மட்டுமே உயிர்ச் சக்தி ஆகா. அது எந்த விதம் வருவது, உருவெடுப்பது, புறப்படுவது, அதன் இஷ்டம். இந்நிலைகளின் கோர்வை—இவை என் வாழ்வின் ஜபமாயிருக்குமே அன்றி, தீர்வைக்கு அதற்குமே என்றுமே அப்பால் என்று கண்டும் இன்னும் சக்திக்குச் சலிப்பில்லை.

என் உயிர்ச் சக்தியே!

ஏன், மான் மேல் ஆசை கொள்ளலாகாதா? அது வக்கிரமா?

உயிரினம் ஒன்று விடாது, அசலனத்திலிருந்து தாவரம் வரை, தாவரத்திலிருந்து உயர் மனிதம்வரை ஒவ்வொன்றிலும் ஸ்த்ரீ இருக்கிறாள் என்பது சக்தியின் ஸத்யம்.

உயிர்ச்சக்திக்குத் தோன்றிய உருவுக்கும், அது கிளைக்கும் அதிர்வுகளுக்கும் தடை கட்டச் சாத்தியமா? வடிவம் என்பதே ஒரு வடிகால்தானே!

ஆசை, பாசம், காமம், காதல், வேட்கை, பிரியம், ப்ரேமை, ராக், LOVE, Passion, கலை, தாபம், காவியம், கற்பனை, யுகம், யோகம், ஆக்கல், ஆகல், அழித்தல், அழிதல்—உன்னுள் வெகுண்டெழும் வேகத்தின் சாயல்கள், சாயங்கள், சாயைகள்; உன் மண்டையில் ஊறிக்கொண்டிருக்கும் மாணிக்கத்தின் பிம்பங்கள், இதயத்தில் புத்தியைக் கூர் தீட்டுகையில் உயிர்ச் சாணையிலிருந்து பறக்கும் பொறிகள். வடிவமே அந்தச் சாணை.

நட்ட கல்லைத் தொழுவாய், உயிர் குடிக்கும் பாம்புக்குப் புற்றில் பால் வார்ப்பாய், வடிவம் உன் இனம் தாண்டி இருக்கலாகாதா? இது மட்டும் வக்கிரமா? வக்கிரத்துக்குப் புத்தியின் இலக்கணத்தை உடைப்பில் எறி.

விண் விண் விண்—இதயத்தின் பொளியலே! என் உயிருக்குக் கண்ட புற்றே! பிரிய பாந்தவி!

மாரீச! எழுந்திரு. அம்பு பட்டு நீ விழுந்த இடத்திலிருந்து உன் மருமான் உன்னை மீட்டானா? அப்படி விவரம் இருப்பின் அதை நான் அறியேன். உனை ஒன்று கேட்கணும். எனக்கும் மான்ரோக் கண்டு இருக்கிறது. ஆனால் என் ரோகம் ஸீதையின் மோகத்தைக் காட்டிலும் மகத்தானது. என் மான் மாரீசமற்றது. ஆகவே எனைப் பிடித்திருக்கும் ஏக்கத்தின் மேல் ஆணையாக, எழு என்றால் எழு, ஆ!

மாரீச, இது உனக்கும் எனக்கும் இடையேதான். இது ராமாயணத்தில் காண முடியாது—எட்டவும் கிட்டவுமாய் அவனுக்கு நீ ஆசை காட்டினபோது ஒரு சமயமேனும்

அவள் உனைத் தொட நேர்ந்ததா? அவள் உன்னைத் தொட்டிருந்தால், நீ அவளுக்குக் கிட்டியிருந்தால்? சிந்திக்காமல் இருக்க முடியவில்லை—ராமகாதையே திசை திரும்பியிருக்கும்.

அல்லவா?

குளம்போசை என்னுள் கேட்கிறது. உயிர் துள்ளுகிறது. **Heart attack?**

ஹிந்தோளம், மால்கோஷ், மால்கவுன்ஸ், சந்த்ர ஹான்ஸ், ஸாரமதி—என்று கட்டான்களைக் காட்டி உதறும் ஒரே கோலத்தைக் கேட்டுக் கேட்டுச் செவி பொளிந்துவிட்டது. ஆனால் நீ ராக ரத்ன மாலிகா.

**My immortal wound!** என் ஜுரமே!

பிதற்றல், பேத்தல்—இத்தனையும் ஜன்னி, அப்படித் தானே!

ஜன்னியில்லாமல், காவியங்கள் உண்டாகியிருக்க முடியாது.

லலிதா ஸஹஸ்ரநாமம், ஸௌந்தர்யலகரி, சியாமளா தண்டகம், மேக சந்தேசம், அபிராமி அந்தாதி, பராபரக் கண்ணி, பத்ரகிரிப் புலம்பல்—அம்மையே! அப்பா! ஒப்பிலா மணியே! அன்பினில் விளைந்த ஆரமுதே!

தேவி! என் பாவி!

**Mysticism**—காதலின் மஹோன்னத தத்துவத்தில் காதற் பொருள்—அது மானாயிருந்தாலென்ன, மனிதையாயிருந்தால் என்ன?

**MY dark Gazelle of the Night!**

சிந்தா நதியில் தட்டிய நிழல்கள்.

# மோனாம்பரி

எத்தனையோ இடையூறுகளினூடே, வாரம் ஒரு நாள் மோனத்தில்—என் போதாத முயற்சியிலும், சுவாரஸ்யமான அம்சங்கள் சில வெளிப்படுகின்றன.

முதலில், பேச்சு எத்தனையோ விஷயங்களில்—ஒரு தலையசைப்பு, ஒரு விழி அசைப்பு, ஒரு நெற்றிச் சுருக்கத்தில் போகும் சமயங்கள்—தேவையே இல்லை எனத் தெரிகிறது. பேசப் பேச, விஷயம் நீர்த்துப் போகப் போக, பேச்சுக்கென்றே பேச்சு என ஒரு விரஸமான இரைச்சல் தான் மிச்சம். உண்மையில் பேசவேதான் அப்படி என்ன விஷயம் இருக்கிறது? சிந்தித்துப் பார்க்கில் சந்தேகமாகத் தான் இருக்கிறது. அது அது அதனதன் அளவில் எனும் ஆரோக்கிய விதியில் பேச்சு எப்பவுமே பத்தியத்தில் இருப்பது நலம் என்றே தோன்றுகிறது.

மோனம் ஒரு இயற்கையான நிலை என்று ரமண வாக்கியமாகப் படித்த ஞாபகம். நாக்கும் வாயும் படைத்து, சுற்றி என்னைப் போல் மக்களையும் படைத்து, பேச்சையும் படைத்து, பேசாதே என்றால் யார் கேட்பர்?

ஆனால், பேச்சு அடங்கி, வாய்க்கு ஓய்வு கூடுகையில், முகத்தில் அமைதியில், ஒரு சிற்பியின் செதுக்கல் நேர்த்தியே ஏற்படுமோ?

மோனம் ஊற ஊறப் பேச்சில் மனம் குறைகிறது.

உண்மையிலேயே பேச என்ன இருக்கிறது?

*　　　*　　　*

சில நாட்களாகவே, இரண்டு செம்பருத்திச் செடிகளும், வெறி பிடித்தாற்போல, பூத்துத் தள்ளுகின்றன.

ரோஜாவுக்கு எங்கே போவேன்?

இந்தச் செடிகளையும் நான் நடவில்லை.

இந்த வீட்டில் நான் கால் வைத்தபோது, இவைதாம் செஞ்சிரிப்புடன் என்னை வரவேற்றன.

பக்கத்து வீட்டுத் தோட்டத்திலிருந்து, இவ் வீட்டு ஜன்னல் வழி, ஜாதி மல்லி மணம் பந்தலினின்று மயக்கம் தரும் வேகத்தில் மோதுகிறது.

சொந்தம் கொண்டாடி யாரும் இந்த மணத்தை இங்கிருந்து பெயர்த்துக்கொண்டு போக முடியாது.

முகராதே என என் மூக்கையும் பிடிக்க முடியாது.

மல்லி சிரிக்கிறது—

நான் மணப்பது உனக்காகவும் இல்லை, என்னைச் சொந்தம் கொண்டாடும் அவனுக்காகவும் இல்லை.

எனக்காகவும் இல்லை.

பின் எதற்காக?

அதுதான் மோனே ஆச்சர்யம்

அடுத்து—

தூரதிருஷ்டிக் குழாயின் மறு நுனியிலிருந்து பார்ப்பது போலும், சில சமயங்களில் சுற்றியிருப்பவை யெல்லாம், சுற்றத்தார் அடங்க, எல்லாமே எட்ட எட்ட—ஆம்,

இவைகள், இவர்கள் யாவுமே எனக்குத் தெரிந்தவை, தெரிந்தவர் தான். ஆனால், இவர்கள் யாவர்? இவர்களுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? இந்தக் கேள்வி கிலேசத்தில் இல்லை, கோபத்தில் இல்லை, விரக்தியில் இல்லை, ஆனால்—ஒரு வியப்பு.

அப்படியானால், இப்போது என்னை இங்கே, எப்படிப் பிடித்துப் போட்டிருக்கிறது?

* * *

நாற்பத்திரண்டு.

அம்பாளுக்குப் பிரீதி, அவளுக்குச் சாத்தப் போவதை எண்ணுதல் ஆகாது.

சாஸ்திரமோ, வழக்கோ, அதன் வழி ஒரு நம்பிக்கை, அதன் அடிப்படை பயம், இப்படித் தடுத்தாலும் எண்ணுவது என் இச்சையில் இல்லையே! பூக்கள், தாம் பூக்கின்றன; ஆனால், அவைகளின் மலர்ச்சி என் சாதனை போல எண்ணுகிறேன்.

42, 43...

இவைகளைக் கொண்டு அவளை அலங்கரிப்பதைவிட, இவைகளைப் பறிப்பதில் ஒரு த்ரில்லே இருக்கிறது.

தேடித் தேடி...

காம்புக்கடியில் நாசூக்காக உள்ளங்கையைத் தாங்கிக் கொடுத்து, அடுத்து கொஞ்சம் நெகிழ்த்து, கட்டை விரலும், நடு விரலும் உபதேச முத்திரையில், காம்பின் மேல் நுனி சந்தித்து, 'கிள்ளினேன்' என்றால் சொல்லின் கொடூரம் சுள்ளென்கிறது—செடியினின்று கழற்றி, எவர்ஸில்வர் குடலையில் போடுகிறேன் என்பதைவிட, விடுகிறேன்.

தேடித் தேடி...

'மலர்ந்த பின் பூவைச் செடியில் விட்டு வைக்கலாகாது. அதற்காகச் செடியை ஒட்டவும் மொட்டை அடிக்கலாகாது.

இப்படியும் ஒரு சாஸ்திரம் பேசியாகிறது'

தேடித் தேடி...செடியின் அடர்த்தி நடுவில், என் பூவைக் காண்கையில் ஒரு தனிக் களிப்பு. இப்படி ஒவ்வொரு பூவும் ஒரு தனித் தரிசனம். அ...ஹ்...ஹா...! அகப்பட்டுக்கொண்டாயா? ஆம், அது பின்வாங்குகிறாப் போல், ஒரு கூச்சம் ஒவ்வொரு சமயத்துக்கும் உணர்கிறேன். ஒவ்வொரு பறித்தலும் ஒவ்வொரு சமயம், தனித் தனி விதி.

பூப்பறிப்பா? வேட்டையா? அவளைத் தேடலிலிருந்து, அவளுக்குக் காணிக்கையாகும் இம் மலர்களைப் பறிப்பது உள்பட, வாழ்க்கையிலே இந்த வேட்டை உறவு இல்லாத இடமே கிடையாதா?

சோக ஸுகா புஷ்ப ஹரணம்.

செந்நுரை போல் பூக்கள் குடலையில் பொங்கி உயர்கின்றன.

தேடித் தேடி...

**The Hunter and the Hunted.**

கைக்கு எட்டியும் எட்டா உயரத்தில் ஆசை காட்டும் ஒரு பூவைப் பறித்தே ஆக வேண்டும் என வந்துவிட்ட ரோசத்தில், குடலையைக் கிணற்றுச் சுவர்மேல் வைத்து விட்டு, அவசரமாகத் திரும்பின இசைகேடில் ஏனம் சாய்ந்து, நல்ல வேளை, கிணற்றுள் விழவில்லை. ஆனால் அத்தனை பூக்களும்—

ஒரு கணம் பிரமை பிடித்து நிற்கிறேன்.

So, இன்றைய பூஜை இப்படித்தானா?

கிணற்றுள்ளிருந்து நீர் மட்டத்தில் மிதந்தபடி குலுங்கிக் குலுங்கிப் பூக்களின் மோனச் சிரிப்பு என்னுள் எதிரொலிக்கின்றது.

* * *

**மோ**னத்தில் ஒன்று கண்டு பிடித்தேன்.

என் குரல் தாண்டி, இன்னொரு குரல் கேட்கிறது. அதுவும் என் குரல்தான். ஆனால், இது குகையினின்று கேட்கிறது.

இதயக் குகையின் இருளில் என்னுடைய திரவியங்கள், என்னிடமிருந்தே, மோனத்தின் பத்திரத்தில், மோனக் குரலின் பாராவில் காக்கப்படுகின்றன.

என் வாழ்நாள் முழுதும் சிறுகச் சிறுக, படிப்படியாக என் மூலம் சேர்ந்திருக்கும் என் பிறவியின் பெருமை;

என் ஆன்மாவின் பொன்வண்டு;
என் உயிர் நிலையின் புழுக்கள்;
என் நட்சத்திரத்தின் மின் மினி.

நான் குரலாகக் கேட்பது என் ஆன்மாவின் பொன் வண்டின் ரீங்காரமோ?

என் சேமிப்பு ஆயினும், இவை என் சொத்து அல்ல. அத்தனையும் மோனாம்பரம்.

Oh thou silence, my mistress eternal, eventual.
ultimate
Outside thy closed corridor I stand,
Waiting to lay at thy threshold
The dark flower of my life
In all its being and bloom
Which is all I have got
In this my life.

* * *

மாலை அந்தியாக மாறிக்கொண்டே வருகிறது.

என்னை வீட்டுக்குக் காவல் வைத்துவிட்டு, எப்பவோ எல்லோரும் கொலுப் பார்க்க, கொலுவுக்கு அழைக்கப் போய்விட்டனர்.

கூடத்தில் உட்கார்ந்தபடி, கொலுவுக்கு எதிரே—எனக்கு அம்மாவின் நினைப்பு வந்துவிட்டது. அம்மா எப்படிப் பாடுவாள்!

இந்நாளில் கொலுவுக்கு யார் பாடுகிறார்கள்? டேப் தான் இருக்கிறதே!

அம்மாவின் குரல் புல்லாங்குழல் போன்றது. ஒரு திகட்டலான இனிமை.

ஒரு பக்கம் வெள்ளிச் சிறகு, மறு பக்கம் பொன் சிறகு கூடிய ஒரு பட்சி பறப்பது போன்ற குரல்.

போச்சு அந்த நாள் எல்லாம். தொண்டையை அடைக்கிறது. மூக்கு உறிஞ்சிற்று. நல்ல வேளை, யாரும் இல்லை.

'கி—றீ—ச்.' கேட் திறக்கிறது.

அடுத்த சில கணங்களில் வெளியிருளினின்று கூடத்தில் தோன்றினாள் என்றே சொல்ல வேண்டும். வாட்டசாட்டமான உடல் வாகு.

'யாரும் இல்லையா?' என்று கேட்கும் சைகையில் கையை ஆட்டினாள். உருண்டை முகம், மேட்டு நெற்றி.

'யாரும் இல்லை' என்ற பதிலில், என் மௌன விரதத்தில் கை விரித்தேன்.

சுற்று முற்றும் பார்த்தாள். விளக்கேற்றி வைக்கக் கூட நேரமில்லாமல் போய்விட்டார்கள்— சுண்டல் தண்டலுக்கு, புடவைகளை வியக்க.

குத்து விளக்கடியில் கிடந்த தீப்பெட்டியை எடுத்துக் குச்சியைக் கிழித்து விளக்கேற்றினாள். சுடர் திரியில் குதித்ததும் நிழல்கள் விதவிதமாக நர்த்தனம் புரிந்தன.

நானும் ஸ்விட்சைப் போட்டேன். ஆனால் current off. கூடம் கர்ப்பக் கிரஹமாக...

என்னைத் தோளைத் தொட்டுத் தன் பக்கம் திருப்பினாள். வாதாம் பருப்பைப் போன்ற மேட்டு விழிகள் என்னைத் துருவின. உக்ரமான முக வார்ப்படம்தான்.

என் காலில் விழுந்து, நெற்றி தரையில் இடிக்க, நமஸ்கரித்து, எழுந்து போய், வெளியே மறைந்தாள்.

''க்ர்ர்—றீ—ச்!''

புல்லரிப்பில், என் பலம் அனைத்தும் அவள் தன் நமஸ்காரத்தோடு வாங்கிக்கொண்டு போய்விட்டாற் போல், சாறு பிழிந்த சக்கையாக, நாற்காலியில் சாய்ந்தேன்.

விளக்கும் வந்தது. மோன அம்பரத்தினின்று பிதுங்கிய ஒரு தருணம்.

தருணத்தின் தருணி.

மோன தர்சினி.

இன்பமாயிருக்கிறது.

பயமாயிருக்கிறது.

சிந்தா நதி தீரே மோன விஹாரே......

இத்தனை நாள் கழித்து இந்தக் கடிதம் வருவது கண்டு உனக்கு ஆச்சரியமாயிருக்கலாம். கொஞ்ச காலமாகவே விஷயங்களின் அநிச்சயம் எனக்கு உறைக்க ஆரம்பித்து விட்டது; அதில் இத்தனை வருடங்கள் நம்மிடையே மௌனத்தையும் சேர்த்துத்தான். மன்னிப்பில் எனக்கு நம்பிக்கையில்லை. மன்னித்ததால், இழைத்த தவறு சரியாகிவிடுமா? தவிர மன்னிக்க நான் யார்? அவரவர் கர்மா அவருடையது.

ஆனால், என் அந்திம காலத்தில் யாருடனும் சமாதானமாய்ப் போய்விட விரும்புகிறேன். என் கடைமூச்சுக்களில் எந்த முள்ளும் நிரட வேண்டாம். என் கனம் லேசாக இருக்க வேண்டும்.

ஆகவே சில நாட்கள் இங்கு, எங்களுடன் கழிக்க உனக்கு விருப்பமானால் வா. அவளையும் அழைத்துக் கொண்டுதான்.

பி.கு. என்னை ரேழியில் கிடத்தியிருக்கிறது என்று இல்லை. வளைய வந்து கொண்டிருக்கிறேன்.''

''கோமு, மதுவை வரச்சொல்லி எழுதிவிட்டேன்.''

துளசி மாடத்தில் செடிக்குப் பூச்சூட்டிக் கொண் டிருந்த கை ஒருகணம் நின்று, மீண்டும் சிசுருஷையைத் தொடர்ந்தது.

''ரதி, மதுவை அவன் ஆம்படையாளுடன் வரச் சொல்லி எழுதிவிட்டேன்.''

முறத்தரிசியில் ஒன்று, அரை கல், மண்ணைத் தேடிக் கொண்டிருந்தவள், முகம் நிமிர்ந்தாள். அவள் பார்வை அவர்மேல் கனிந்தது.

அவர்கள் வருமுன் பூஜையை முடித்துக்கொள்ள வேண்டும் என்று உட்கார்ந்தும், தீப உபசார சமயம், தெரு முனையில் 'ஹார்ன்' சத்தம் கேட்டது. அடுத்த நிமிடம் கார், வாசலில் பெரிய செம்மண் கோலத்தைத் தொட்டுக்கொண்டு நின்றது. சற்று நேரத்துக்கெல்லாம் பூஜையறை வாசலில் நிழல் தட்டிற்று.

''நமஸ்காரம் பண்றோம் அப்பா.''

சுவரோரம் சார்த்தியிருந்த தம்பூரா மேல் பல்லி ஒன்று சுவரிலிருந்து குதித்து ''ரொய்ஞ்ஞ்'' நெஞ்சோடு மோதலில் இதயம் குலுங்கிற்று. பயத்தில் இடதுகையால் மார்பை அழுத்திக் கொண்டார். வலதுகையில், உத்தரணியில் அபிஷேக தீர்த்தம் நடுங்கிற்று.

இடது உள்ளங்கையில் வலதைத் தாங்கிக் குழித்து, மது காட்டிய ஜாடை ப்ரகாரம் செய்யமுயன்று, தோற்று, தீர்த்தத்தை ஏந்தி, சத்தமாக உறிஞ்சிக் குடித்து, முகம் நிமிர்ந்து, அவர் முகத்துள் சிரித்தாள். மஞ்சள் வெள்ளையில் வரிசையான பற்கள்.

''Hello Father!''

தபேலா மேல், பட்டைப் போட்டு வாசித்தாற் போன்று, குரலில் லேசான 'பூம்!'

அவர் கண்கள் அவர்களுக்குப் பின்னால் அல்ல அண்டையில் ஆவலுடன் தேடின. மதுவுக்கு அந்த ஜாடை தெரிந்துவிட்டது.

"ப்ராப்தம் இல்லை அப்பா!" அவன் பார்வை அவர் மேல் நெகிழ்ந்தது பத்து வருடங்கள்—லேசா? பத்து வருடங்கள் என்ன, எத்தனை வருடங்களானாலும் அவர்களிடை தனி பந்தத்தை அழிக்க முடியாது. இத்தனை நாள் கழித்தும், அதன் குங்கிலியம் குபீரிடுவதை இருவரும் உணர்ந்தனர்.

உன் பேர் என்ன அம்மா?"

"My name is Lucy, but Iam Janani."

இது மதுவின் ட்ரமாடிக்ஸ். மது ஒரு 'ஜாலக்' பேர்வழி. அவன் செயல்களில் எப்போதுமே ஒரு லேசுப் பொடி மணக்கும். சொக்குப் பொடி. ஒரு த்வனி பேசும். 'இது மது' என்று. மது, சூதன்.

இந்த யௌவன வரத்தை மது எங்கே பெற்றான்? பத்து வருடங்களுக்குக் கிள்ளியெறியும்படிக்கூட அதிகப்படி சதை? ஊஹூம். நெற்றி கொஞ்சம் உயர்ந் திருக்கலாமோ? அதுகூட நிச்சயமில்லை. டேப் வைத்து அளந்தால்தான் தெரியும். உடம்பு அதே 'சிக்'. அதே சுறுசுறுப்பு. சிரித்தால் இன்னும் கன்னம் குழிந்தது.

என் அருமை மது.

"அப்பா, உங்கள் உடம்புக்கு என்ன?"

அவர் செவி அவனை வாங்கிக் கொள்ளவில்லை. கவனம் முழுதும் அவளைத் தொடர்ந்தபடி இருந்தது. குழந்தைகளுடன் குழந்தையாய் விளையாடிக்கொண் டிருந்தாள்.

புடவை சரியாய்க் கட்ட வரவில்லை. அவளுக்கு அது பாந்தமாயுமில்லை. மதுவே கட்டிவிட்டிருப்பானோ? மார்த்துணி சரிந்து விழுவது தெரியவில்லை. அது பற்றி அவளுக்குச் சட்டையுமில்லை.

குழந்தைகளுக்கு அவளை அலுக்கவேயில்லை. அவள் மேல் ஏறுவதும், கழுத்தைக் கட்டிக்கொண்டு தொங்குவதும், தடவித் தடவிப் பார்ப்பதும், முகத்தின்மேல் விரல் நுனியால் விளம்புவதும்—அந்தப் பறங்கிச் சிவப்பு அவர்களுக்குப் புரியவில்லை. பிரமிப்பு—இல்லை, திகைப்பாயிருந்தது. முரளி திடீரென அவள் தோளைக் கடித்தே விட்டான். பார்த்துவிட்ட ரதி ஓடிவந்து, முரளியை அவள் கடியிலிருந்து பிடுங்கி, முகத்தில் மாறி மாறி அறைந்தாள்.

''குழந்தையை ஒன்றும் செய்யாதீர்கள். Can you find some dettol or tincture benzoine for me?''

தோளில் பற்கள் பதிந்து ரத்தம் கசிந்தது.

மருந்தைத் தேடி ஓரகத்திகள் இருவரும் ஒன்றாய்ச் சென்றனர். வந்தவள், ரதியின் தோள்மீது ஸ்வாதீனமாய்க் கையைப் போட்டுக்கொண்டாள்.

''அப்பா, உங்களுக்கு உடம்புக்கு என்ன?''

''ஊங்—? ஓ—ஒன்றும் இல்லையே, அப்படி ஏதேனும் தெரியறதா என்ன?'' தன்னை ஏற இறங்கப் பார்த்துக் கொண்டார்.

''இதென்ன கேள்வி அப்பா? என்னைப் பழி வாங்க வேண்டாம்.''

''மது நீ எப்படி இருக்கே? உன் கலியாணம் சந்தோஷமாயிருக்கிறதா?''

மது சற்று நேரம் அவரை உற்று நோக்கிவிட்டுப் புன்னகை புரிந்தான்.

''அப்பா, நீங்கள் ஒரு சமயம் என்னிடம் என்னைப் பற்றிச் சொல்லி இருக்கிறீர்கள். உனக்கு உன் சந்தோஷம் ஒன்றுதான் குறி. யார் எப்படியானும் போகட்டும். கோபத்தில் சொன்ன வார்த்தைதான். ஆனால், அதில்

எவ்வளோ உண்மையிருக்கிறது. சந்தோஷத்துக்குத்தான் வாழ்க்கை. பிரசினைகள் வந்தால் அந்தந்த சமயத்துக்கு ஏற்றபடி நடந்துட்டுப் போறோம். அதுவும் adjust ஆகி விடும். இதுதான் என் தத்துவம்.''

''மது நீ மாறவில்லை. இதுதான் என் கேள்விக்குப் பதிலா?''

''ஆமாம். ஆனால், உங்களுக்கு இன்னும் வெளிச்சமா வேணுமானால் சொல்றேன். நாங்கள் கலியாணம் செய்து கொள்ளவில்லை. லோகரீதியில், பாபத்தில் வாழ்கிறோம். அதற்காக நாங்கள் பச்சாத்தாபப்பட வில்லை. சந்தோஷமாகவேயிருக்கிறோம்.''

ஒரு புழுதிக் காற்று எழும்பிற்று. தோட்டத்தில் புழுதியில்லை. வேப்பமரத்தினின்று பூக்கள் அடையாய் அவர்கள் மேல் சொரிந்து, தலையில், உடம்பில் அங்கு மிங்குமாய் ஒட்டிக்கொண்டன.

ஒரு மோனம் தன்மேல் இறங்குவது உணர்ந்தார்.

நான் அறிந்து கொள்கிறேன்.

தெரிந்து கொள்கிறேன்.

புரிந்து கொள்கிறேன்.

நான் ஏதும் சொல்லத் தேவையில்லை. சொல்ல என்னிடம் ஏதும் இல்லை.

சாக்ஷியாய் நிற்கிறேன்.

''இப்படி நாங்கள் இருப்பதற்கும் நீங்கள்தான் காரணம்.''

அவர் கண்கள் நொந்தன. ''குதிரை கதையாயிருக் கிறது. பழி வேறேயா?''

''உங்களைக் குற்றம் சொல்லவில்லை அப்பா. 'என் பெற்றோரின் சம்மதம் பற்றி நான் கவலைப்படவில்லை.

ஆனால், அப்பாவின் ஆசி நமக்கு வேணும்' என்றாள், என்கிறாள், 'எங்கள் சமுதாயத்தில் காதலில் விழுவதும், விடுபடுவதும் சர்வசகஜம். உங்களில் அப்படி அல்ல. நான் உன்னைக் கலியாணம் செய்துகொண்டால், உனக்கு மனைவி மட்டும் அல்ல, உங்கள் குடும்பத்துப் பெண் ஆகி விடுகிறேன். எங்களுக்கும் உங்களைப் போலவே எடுத்துக் கொள்ளும் சத்யங்கள் இருக்கின்றன. ஆனால், எங்களுக்குத் தாலியில்லை. உங்கள் ஜாதியில் தாலியைக் கழற்ற முடியாது. கழற்றுவதாய்க் காட்டுவதெல்லாம் சினிமாவுக்குத்தான். உங்களுக்கும் நாட்டின் ஸ்வதந்தரத் துடன், விவாகரத்து சட்டம் வந்திருக்கிறது. 'எல்லா நாடு களுக்கும் இருப்பதுபோல எங்களுக்கும் என்பதற்குத்தான். Imitative. ஆனால், அது உங்கள் பண்பாட்டில் கிடையாது. எனக்குத் தாலி வேண்டும். அப்பாவின் சம்மதம் இல்லாவிட்டாலும் அப்பாவின் ஆசி வேண்டும்.'

'அதென்ன சம்மதமில்லாமல் ஆசி? ஆசி வேறே, சம்மதம் வேறேயா?' கேட்கிறீர்களா? கேட்காவிட்டாலும் சொல்கிறேன். சம்மதம் என்பது நீங்கள்—ராமநாராயண் சர்மா என்கிற தனிப்பட்ட மனிதனின் சொந்த எண்ணம், இஷ்டம். ஆசி என்றால், அது 'ஸர்வே ஜனோ ஸுகினோ பவந்து'வில் சேர்ந்தது அப்பா! ஆசீர்வதிக்கையில் நீங்கள் மட்டும் இல்லை. நம் வழி முன்னோர்கள், பரம்பரை, மனித வர்க்கமே நல்லது சொல்கிறது. ததாஸ்து. எல்லாரும் நல்லாயிருக்கணும். Something to do with விசுவப்ரேமா. உங்கள் ஆசி உங்களைவிட மிகப் பெரிது. இது நான் சொல்லவில்லை, அவளுடைய வியாக்யானம். அவள் நிறையப் படித்திருக்கிறாள். நிறைய நம்பிக்கை உடையவள். நம்முடைய கலாசாரத்தில் Ph.D வாங்கி யிருக்கிறாள். அவள் காலேஜில் Professor. இன்னொரு ph. D யில் இறங்கியிருக்கிறாள். என்ன தெரியுமா? லா.ச.ரா.வின் எழுத்துக்கள்!'' சிரித்தான்.

''விஷயத்துக்கு வருகிறேன். அம்மா கொடுத்து, நீங்கள் வாங்கி என்னிடம் கொடுத்தால், நான் அவள் கழுத்தில் கட்டுவேன். இல்லாவிட்டால் எங்களுக்கு வேண்டாம். இது ஒன்று ransom இல்லை. கட்டாயம் இல்லை. தாலி ஒரு சின்னம்தான். வாழ்க்கையே ஒரு சின்னம்தானே! ஆனால் அவள் விரும்புகிறாள். ஆனால், கிடைத்தால்தானே உண்டு? இல்லாவிட்டால் என்ன செய்வது?

சொல்கிறாள்: 'தாலி கட்டாமலே நாம் கட்டில் இருப்பது நாம் ஒருவருக்கொருவர் ருசு. ஆனால் தாலி கட்டினால் அதை அவ்வப்போது தொட்டுப் பார்த்துக் கொள்வதில் எவ்வளவு தைரியம், சந்தோஷம் தெரியுமா?' அவள் வாதங்கள், எனக்கு சில சமயங்கள் புரிவதில்லை. ஒரு மாதிரி லூஸ், Sentimental இதோ வருகிறாள்.''

சிரித்துக்கொண்டே வந்து அவர்களுடன் உட்கார்ந்தாள்.

''இந்தப் பத்து வருடங்களில் உங்கள் இடையே பேசுவதற்கு நிறைய விஷயங்கள் இருக்கும் அல்லவா?'' சிரித்தாள். அவளுடைய ஜாக்கிரதையான, தயங்கிய இலக்கண பாஷை வேடிக்கையாயிருந்தது. மனதைத் தொட்டது.

''பேச்சு என்ன, உன்னைப் பற்றித்தான். பத்து வருஷங்களின் சப்ஜெக்டே நீதானே!''

அவள் சிரிக்கையில் விழியோரங்கள் சுருங்கின. விழிகள் நீலக் கடல்கள் பழுத்த கதிர்களின் மஞ்சள் பொன்னில், அவள் கேசம் மாலை வெயிலில் சோபித்தது. கனத்த, தடித்த, கட்டை இரட்டைப் பின்னல்கள் தோளைத் தொட்டுக் கொள்வது போல்தான் எட்டின. நெற்றிப்பொட்டில் பிரிகள் அலைந்தன. அழகி அல்ல. மது இவளிடம் என்னத்தைக் கண்டான்? ஆனால்—ஆனால்—ஏதோ—சொல்லத் தெரியவில்லை. ஒரு மிருக காந்தம்—

"நீங்கள் வாழ்ந்துகொண்டிருக்கும் நிலையில் குழந்தை பிறந்திருந்தால்— ஏன் இனியும் பிறக்கலாமே!"

"I don't know. அப்போது என் கணவர் ஏதேனும் யோசனை சொல்வார். ஆனால், நான் மலடு, டாக்டர் சொல்லிவிட்டார்."

"அவர் அப்படிச் சொன்னது உனக்குக் கஷ்டமாயில்லையா?"

"சில நாட்களுக்கு இருந்தது. அப்புறம்—அப்புறம் you know, we get over things" மறுபடியும் சிரிப்பு. "அம்பாள் கன்யாகுமரியாயிருக்கிறாள். அதே சமயம் அவள் ஜகன்மாதா. எங்கள் மேரி, கன்னிமாதா, நான் எங்களை நியாயப்படுத்திக் கொள்ளவில்லை. உள்ளதைச் சொல்கிறேன்."

திடீர் என்று வெளிச்சமாய்த் தோன்றினாள். ஒரு தனிப் 'பளிச்'. கண்ணைக் கசக்கிக்கொண்டார். கண்ணும் இடக்குப் பண்ண ஆரம்பிச்சாச்சா?

—"இதோ வருகிறேன் முரளி—என்னை மன்னியுங்கள். குழந்தை அழைக்கிறான்."

அவசரமாய் எழுந்து ஓடினாள். புடவை தடுக்கி விழ இருந்தாள். வெட்கம், அடக்கம் தெரியாது. பழக்கமில்லாத புடவை கட்டிய இம்சை நடை. அவர் பார்வை அவளைத் தொடர்ந்தது.

"அப்பா உங்களுக்கு உடம்புக்கு என்ன? இதோ பாருங்கள், உங்கள் கண்களில் ஒரு மருட்சி தெரிகிறது. என்னை ஏமாற்ற முடியாது. நீங்கள் நினைத்துக்கொண்டு இருக்கலாமோ என்னவோ, இந்தப் பத்து வருடங்களில் நம்மிடையே எந்த மாறுதலும் கிடையாது. வராது. அவள், எனக்கு நேர்ந்த ஒரு மகத்தான விபத்து. அதற்கும் நம் உறவுக்கும் எந்தவித சம்பந்தமும் பண்ணாதீர்கள்.

உங்களிடம் சொல்லி உங்கள் சம்மதத்தைப் பெற ஆறு வருடங்கள் காத்திருந்தோம். இடையில் எங்களிடையில் எந்த தப்பும் நேரவில்லை. நாங்கள் சொல்லத்தான் முடியும். நம்புவது உங்களிஷ்டம். அவளைப் பற்றி நான் உங்களிடம் பிரஸ்தாபித்ததுமே, உங்கள் கோபத்தைக் கண்டதுமே, எங்களுக்கு வரம் கிடைக்காதென்று தெரிந்துவிட்டது. அவளிடம் சொன்னதும், 'மது, என்னால் இனி பிரிந்திருக்க முடியாது. அவர் ஆசி கிடைக்கிற போதுதான்.' பிறகு துணிந்து விட்டோம். அதைத் துணிச்சல் என்று கூட சொல்ல முடியாது. வெகு இயல்பாய்த் தொடர்ந்த அடுத்த கட்டம், பத்து வருடங்கள் ஆச்சு. இப்பவும் சொல்கிறேன். 'தீயினுள் விரலை வைத்து விட்டேன் நந்தலாலா.' அதுதான் அது. நாங்கள் மீளமுடியாது. மீள விரும்பவில்லை.

இன்னமும் சொல்கிறேன். தன்மையில் அவள் ஆணா, பெண்ணா என்றுகூட என்னால் நிர்ணயிக்க முடியவில்லை. அவளிடம் எதிர்பாராத சில அசாத்ய பரிவுகள், பணிவுகள், துணிச்சல்கள், எதிர்மாறுகள், மூர்க்கங்கள், சமயங்கள் இருக்கின்றன. சரி, நீங்கள் என்னையே கறந்து கொண்டிருக்கிறீர்கள், உங்கள் உடம்புக்கு என்ன?''

''மது மூணு மாதங்களுக்கு முன் ஒரு நாள், நடுப்பகலில் திடீரென்று மழையிருட்டு கண்டது. மொட்டை மாடியில் உலர்த்தியிருந்த துணிகளை, உடனே எடுத்துவரக் கத்தினேன். எல்லாரும் என்னை ஆச்சரியமாய்ப் பார்த்தனர். அடுத்த கணமே எனக்குள் தெரிந்துவிட்டது. உச்சி வெயில் பட்டை வீறிக் கொண்டிருந்தது.

போன மாதம், அதே மாதிரி இன்னொரு அசடு நிகழ்ந்தது. மொட்டை மாடியிலிருந்து வடாத்தைத் துணியோடு தூக்கி வரச் சொன்னேன். 'அப்பாவைப்

பாரேன்!'—என்னைப் பார்த்துச் சிரித்தனர். ஆனால் இது இனி சிரிக்கும் விஷயமில்லை என்று எனக்குத் தெரிஞ்சு போச்சு.

கண் டாக்டரிடம் காண்பித்ததில், கண்ணில் ஏதும் கோளாறு தெரியவில்லை. நரம்பு நிபுணருக்குச் சிபாரிசுக் கடிதம் கொடுத்தார். தனியாத்தான் போனேன்.

எல்லாப் பரிசீலனைகளும் நடந்தன.

மூளையில் சிக்கலான இடத்தில் ஒரு நரம்பில் அடைத்துக் கொண்டிருக்கிறது. அதனால்தான் பார்வை அடைப்புகள். என் வயது ரண சிகிச்சையை அனுமதிக்க வில்லை. மருந்து மாத்திரைகளில், என் அதிர்ஷ்டத்தில், clot கரைந்தால் அல்ல ஒதுங்கினால் உண்டு. இல்லாவிட் டால் நான் எதற்கும் தயாராயிருக்கணும். நிரந்தரமாய்ப் பார்வை இழப்பு, stroke, Thrombosis.''

''இதோ பாருங்கள் இதெல்லாம் நேரணும்ங்கற அவசியமில்லை. இப்படியே வண்டி ஓடிக் கொண்டிருக் கலாம். அதே சமயத்தில், எப்பவேணுமானாலும்—அவள் மேல் பாரத்தைப் போட்டுவிட்டு இருங்கள்—''

''மது, நான் யாரிடமும் சொல்லவில்லை. இப்போ உனக்கு மட்டும்தான் தெரியும்.''

''அண்ணாவிடம்? அவனுக்குத் தெரிய வேண்டாமா?''

கசந்த புன்சிரிப்பில் அவர் கீழுதடு பிதுங்கிற்று.

''அவனிடம் சொல்லியும் ஒன்றுதான், சொல்லாமலும் ஒன்றுதான். சொன்னால் என்ன சொல்வான் தெரியுமா? நானே சொல்கிறேன். 'டாக்டர் செலவை ஏற்றுக் கொள்ளலாம். என்னால் வேறென்ன செய்ய முடியும்?' அவனுடைய பயங்கர யதார்த்த வாதத்தில் மனிதத் தன்மையையே இழந்துவிட்டான். கடவுள் எப்படி எப்படியோ படைக்கிறார். இதோ பார் மது, நீ அவளிடம் கூட சொல்லவேண்டாம்.''

''சரியாப் போச்சு.'' மது வாய்விட்டுச் சிரித்தான். ''உங்கள் உடம்பைப் பற்றி அறிந்துவர விரட்டினதே அவள்தான். 'அப்பா சரியில்லை, அவருக்கு உடம்புக்கு என்னவோ' என்று என்னைக் கசக்கிப் பிழிந்துவிட்டாள். அப்பா, அவளுடைய antanaeவுக்கு tremendous pick up. அவளைப் பற்றி ஆச்சரியப்படுவதையே நான் விட்டு விட்டேன்.''

அவன் போன பின்பும், அவர் அங்கேயே உட்கார்ந் திருந்தார்.

தெரிந்த முகங்கள், மறந்த முகங்கள் என ஒன்றொன் றாய்த் தோன்றி ஒன்றோடொன்று குழைந்து, கனத்து, நினைவோட்டத்தின் ஆழத்தில் அமிழ்ந்து போயின. தான் ஏதோ விளிம்பில் நின்றுகொண்டு, தன்னையே கவனிப்பது போன்றதொரு விரக்தி, தெளிவு. அற்புதமான அமைதி.

வானில் ஒற்றைப் பறவை
பறந்து சென்றது.
பத்திரமாய்க் கூடு போய்ச் சேர்
நெஞ்சு முகடுவரை மெத்து
மெத்தென ஆசி.

வான், ஒவ்வொரு நக்ஷத்ரமாய்
விழிக்க ஆரம்பித்து விட்டது.

திரண்டு கொண்டிருக்கும் இருளில் மங்கலாய் உருவக் கோடு.

'கோமு.'

எலுமிச்சை இலைகள் சலசலத்து கம்மென்று மணம்.

இன்று வெள்ளிக்கிழமை.

ஒரு பெரிய நக்ஷத்ரம் வானில் உதயம், கற்கண்டுக் கட்டி போல்

''உன்னிடம் மஞ்சள் சரடு இருக்கும்.''

இங்கிருந்து ஜன்னல் வழி பூஜை அறையில் குத்துவிளக்கின் சுடர் தெரிகிறது. இடுப்பளவு உயரத்துக்கு விளக்கு. வயது நூறுக்கு மேல் இருக்கும். வழிவழியாய் நின்று கொண்டிருக்கிறது,

''மஞ்சளைக் கோர்த்து.''

''மாங்கல்யமே இருக்கு.''

''உத்தமமாப் பேச்சு. ஆம், ஏது அதிகப்படி?''

''அம்மா கண் மூடுமுன் என்னிடம் கொடுத்தாள். 'கொடுப்பனையிருந்தது, மாப்பிள்ளையின் சஷ்டியப்த பூர்த்தி கலியாணம் பார்க்க. இதை சதாபிஷேகத்துக்கு வெச்சுக்கோ. ஆகி வந்தது'ன்னு''

''ஓ, அப்படியா?''

பாவம், கோமதி!

அறையின் ஜன்னலோரமாய் அவருடைய கட்டில். இந்த வேளைக்கு நிலா, ஜன்னலைத் தாண்டிவிட்டது. நிலா நிழலுக்கும் இரவின் வெளிச்சத்துக்கும் குழப்பமாய், ஒரு மங்கல் சூழ்ந்திருந்தது.

தூக்கம் வரவில்லை. பஞ்சுமிட்டாய் போல் நினைவு லேசாய் மிதந்தது. கற்கண்டுக் கூர் நெஞ்சில் சுரண்டினாற் போல், ஒரு இனிப்புக் கசிந்தது.

பூஜையறையில் தாலிக்கட்டு நடந்தபோது, சிரிப்பே வந்துவிட்டது. அடக்கிக் கொள்ளக் கொஞ்சம் சிரமப் படுத்திவிட்டது. ஹோமம், ப்ரதக்ஷணம், அக்னிசாக்ஷி, தாரை வார்த்தல், அம்மி மிதித்தல், அருந்ததி பார்த்தல்—இத்யாதி சடங்குகள், சிரத்தைகள் எல்லாம், இவர்களின் காதல் எனும் புயலில் பஞ்சாய்ப் பறந்து போச்சே! எல்லாம் கேலிக்கூத்து, சொப்பு வெச்சு விளையாடற மாதிரி. முகூர்த்தமாவது, மண்ணாங்கட்டியாவது, என் னேரமும் நன்னேரம்தான். அடிப்படையில் எல்லாமே பயத்தின் ஆட்சி. ஓம்பாச்சி, பூச்சாண்டி.

தெய்வமென்றால் பயமாயிருக்கிறது. எண்ணம் கச்சா சரக்கு. அதிலிருந்து நாம் நூற்று, நெய்து, உயிர்த்த தெய்வத்துக்குப் பயப்படுகிறோம். ஆனால் அந்தத் தெய்வத்தை, அவளாகப் பார்க்கையில் தென்பாயிருக்கிறது, இது என்ன மர்மம்? அவள் மர்மமானவள், கவர்ச்சி உடையவள், அழகி, நித்ய கல்யாணி என்கிற எண்ணங்களிலேயே இஷ்ட ஸ்வரூபமாகி விடுகிறாள். ஆனால் இதுவும் நம்மையே நாம் ஏமாற்றிக் கொள்வதுதானா? இந்த 'அவள்' தான் வாழ்க்கையின் ஸாதகம், சாதனையா?

''க்-றீ-ஈ-ஈ-ச்.''

கதவு.

''யார்?''

''நான்தான் Father.''

''ஓ!—''

உயரமாய் உடல்கட்டாய், துடிப்பாய், ஏதோ அமானுஷ்யமாய்—கட்டிலண்டை வந்து—

நின்றாள்.

''உன் பக்கத்தில்தான் ஸ்விட்ச். போடு.''

போட்டாள். மின்சாரம் 'அம்பேல்'. இருள் இன்னும் அடர்த்தியாகச் சூழ்ந்து கொண்டது.

''மது?''

''தூங்குகிறார்.''

''என்ன விசேஷம், நீ மட்டும் தனியாய், இந்த வேளைக்கு?''

''உங்கள் ஆசீர்வாதத்தைப் பெறுவதற்கு வந்திருக்கிறேன்.''

புன்னகைத்தார். 'ஆசீர்வாதம், நமஸ்காரம், அக்ஷதை ஸஹிதம், எல்லா சாங்கோபாங்கமாய் அப்பவே ஆச்சே! இப்போ இது என்ன, நாளைவரை தாங்காதா?''

''அப்படியில்லை Father. நினைத்தேன். வந்து விட்டேன்.

''குழந்தாய், நான் ஆசீர்வாதம் மறுக்கவில்லை. ஆனால் தம்பதி சேர்ந்து வந்து நமஸ்கரித்து, ஆசீர்வாதம் பெறுவதுதான் எங்களில் வழக்கம்.''

''I know. இப்போது நான் எனக்காகவே வந்திருக்கிறேன், Father. மது உங்கள்மேல் வைத்திருக்கும் அன்பு அபாரமானது. அதில் நான் பங்கு கேட்கவில்லை. அந்த உறவே வேறு. பங்கு கேட்கமாட்டேன். என் பங்கிற்கு உங்கள் ஆசியைக் கேட்கிறேன். பங்கு என்பது சரியில்லை. எனக்கு உங்கள் ஆசி வேண்டும். Bless me. மண்டியிடுகிறேன். Bless me Father.''

அவள் தலைமீது கையை வைத்ததும் உள்ளங்கை வழி உஷ்ணமும் விறுவிறுப்பும் உடல் பூரா பரவுவதை உணர்ந்தார். சுகமான, இதமான உஷ்ணம், மண்டை வரை... தான் உருகுவதுபோல...உடனேயே கண்கள் இருண்டன. இருளின் ஆலிங்கனம் அவரைத் தன்னுள் இழுக்க ஆரம்பித்துவிட்டது.

# இன்று, நேற்று, நாளை.

## அவள்

இன்று—

காலை விழித்ததும், கீழிறங்கி பல் விளக்கி, முகமலம்பி பொட்டிட்டுக்கொண்டு முதற்காரியம் விளக்கையேற்றி யதும், சுடரிலிருந்து ஒரு பொறி பறந்து வந்து வாயுள் புகுந்து, அதை அவள் உயிருடன் விழுங்கிவிட்டாற் போலிருந்தது. அது மார்புள் இறங்கிய இடமெல்லாம் பரபரத்து, இதயத்தில் தங்கிய இடம் அரித்தது.

இன்று—

சில சமயங்களில், ஒரு வாக்கியமோ, வார்த்தையோ பதமோ, அதன் வேளைக்குமுன் முளைத்துவிட்டதால், பொருள் விளங்காது, அதனாலேயே பொருள் அற்ற தாய்த் தோன்றிக்கொண்டு, அதன் வேளை வருமளவும், வேளையில்லாத வேளைகளிலும் திடீர்திடீரென முளை தெரிந்து உடனே மறைந்து, நெஞ்சுக்குழியில் இடறி இடறி, ஏதோ பின்வரும் அதன் வேளையின் அடையாள மாய் விளையாடும். அதுபோல் அவள் விழுங்கிய பொறி இதயத்தில் தங்கிய தருணமே— ''இன்று'' என்ற பதம் பிறந்து அன்று பூராவும் அவளை அரிக்க ஆரம்பித்தது.

இன்று என்ன?

அது புரிந்துவிட்டால், பிறகு 'இன்று' ஏது?

இன்று மார்கழி பத்து.

தான் எழுந்ததே தாதன் ஊதிப் போனபின் தான்.

வென்னீரில்தான் குளித்தாலும் குளிர் வெடவெட—

இன்று தெரு நிறைந்த கோலம். அதன் நடுவே பதித்த பூசனிப்பூ மனம் நிறைந்த மஞ்சள்.

இந்தத் தடவை வாங்கியிருக்கும் பசுமஞ்சள் எப்படிப் பற்றுகிறது! அதுவும் இன்று—ஜலம் துளித்த தன் தோள்களையும் காலின் கண்டச்சதையையும் பார்த்துக்கொண்டாள். பொன்போல் தகதகத்தன.

தால்ச்சரடு மஞ்சள் பட்டதும் தங்கச்சரடு!

அடுப்பில் ஏற்றிய வெண்கலப்பானை, தங்கப்பானை போல பளபள—இன்று என்ன, நான் தொட்டதெல்லாம் பொன்னா? அதுதான் 'இன்றா?'

''வாசனை என்ன கூரையைத் தூக்கறது? நெய் மணமா, கை மணமா?'' என்று கேட்டுக்கொண்டே மாமனார் வருகிறார். நடை அவரைக் குடிபோல் தள்ளுகிறது. அதுவும் இப்போ அதிகம்.

''சரி சரி, பல்லை விளக்கியாகல்லே. அதுக்குள்ளேயும் மோப்பம் பிடிச்சாறதா?'' என்று கேட்டுக்கொண்டே பின்னாலேயே அத்தை வருகிறார்.

''நான் பல்லை விளக்கியாகல்லே. நீ வாயைக் குழப்பியாகல்லே'' என்று மொணமொணத்தபடி கிழவர் கிணற்றடிக்குப் போகிறார். மாமாவுக்கு இருக்கே 'பேச்சிலே இந்த இடக்கு!' டேயப்பா அத்தைக்குப் பல்லெல்லாம் திடீரென்று அடுத்தடுத்து விழுந்து போனதை இப்படித் தான் சொல்லிக் காட்டணுமாக்கும்!

''அடியே சிரிக்காதேடி, சிரிச்சால் அழற மாதிரி இருக்குடி!''

மாமா அத்தையைக் கேலி செய்வது அவளுக்கே சில சமயங்கள் கோபம் வரும். ஆனால் அத்தைக்கு அதுக்கெல்லாம் ஏன் ரோஸம் வரவில்லை? அதெல்லாம் அத்தைக்கு யானைமேல் கொசுமாதிரி. கிழவரின் கீழ் வெட்டு அத்தைக்கு காதே கேட்டதோ யில்லையோ? வயசானாலே காது மந்தமாயிடுமாமே!

ஆனால் திடீர் என்று ஒரு நாள், அத்தை சம்பந்தமே இல்லாத சமயத்தில்:

''குந்தை, நாம்தான் பெரியவாள்'' என்றார்.

அவளுக்குச் சட்டென்று புரியவில்லை.

''நம் ஸ்திரீ வர்க்கத்தைச் சொல்றேன். ஆண்கள்—தகப்பனிலிருந்து ஆம்படையான் உள்பட கைக் குழந்தை வரை—குழந்தைகள் செல்லக் குழந்தை, அசட்டுக் குழந்தை, பிடிவாதக் குழந்தை; நாம்தான் ஸஹிச்சுண்டு, தள்ளீண்டு போகணும் என்கிற பாடமாகத்தான் சிருஷ்டியிலேயே, தாய்மையின் பதவியை நமக்குக் கொடுத்திருக்கு. சாண் பிள்ளை யானாலும் ஆண்பிள்ளைன்னு பழமொழி. ஆறடி யானாலும் குழந்தைன்னு நான் சேத்துக்கறேன். அவா பேச்சில் நமக்குப் பிடிக்காததை நாம் காதி லேயே வாங்கிக் கொண்டால்தானே வம்பு? பெண் கள், சமயத்தில் கொஞ்சம் செவிடு, கொஞ்சம் குருடு, கொஞ்சம் மக்காயிருந்தால்தான் குடும்பமே நடக் கும்—ஆனால் கொஞ்சங் கொஞ்சந்தான், ஞாபக மிருக்கட்டும்—ரஸத்தில் கொத்தமல்லியைக் கிள்ளிப் போட்டாப்போல. அதிகமாப் போனால் பச்சை வாசனை—''

முகத்தில் ஆவியடித்தது.

"அத்தை, தயாராயிடுத்து; நைவேத்யம் பண்ணுங்கோளேன்—"

வெண்ணீருள்ளிலிருந்து அத்தையின் குரல்: "நீயே பண்ணு." நான் இன்னும் தயாராகல்லே—"

"எனக்கென்ன அத்தை தெரியும்? மாமாவைப் பண்ணச் சொல்லுங்கோ."

"சரிதான், அவர் காட்டற கையை நீ காட்ட முடியாதா? நீ பண்ணி வெச்சதைத்தானே அவா காட்டறா? அதை நீயே காட்டினால் ஆகாதா? காட்டு காட்டு."

இலையில் பொங்கலை வட்டித்ததும், அதிலிருந்து ஆவி பறக்கையில், முழிமுழியாய் முந்திரி அங்குமிங்குமாய்த் தெரிகையில், அதுவும் பார்க்க ஒரு அழகாய்த்தானிருக்கு. மாமாவுக்கு வாய் ஊறி, எச்சில் இலையிலேயே சொட்டிவிட்டது.

நெஞ்சில் திடீரென ஒரு பரிதவிப்பு அலைமோதறது.

(அத்தை சொன்னது இதுதானோ?)

மாமா, நெய் பளபளக்கும் பக்கமாய், விரலால் வழித்து முகம் நிமிர்ந்து, வாயுள் விட்டுக்கொள்கிறார்.

"பேஷ், பேஷ்! இத்துடன் ஒரு சட்னியோ, கத்தரிக்காய்ப் புளிப்பச்சடியோ இருக்கணுமாம், ஏர்வை எப்படியிருக்கும் தெரியுமோ?"

"அது என்னதான் நெஞ்சீரலோ!"— கேட்டுக்கொண்டே அத்தை வருகிறார்.

"புலிப் பாலைக் கொண்டு வாயேன், கறக்கறத்துக்கு முன்னாலே வரியை எண்ணினாயோன்னு ஏதாவது ஒரு 'தொசுக்கு'த்தான். எப்படித்தான் உங்களைத் திருப்திப் படுத்துவதோ?"

அத்தை குளித்துவிட்டு ஈரப்புடவையுடன் வந்திருக்கிறார். பளிச்சுனு கம்பீரமாய், பொன்மலை மலையுச்சியினின்று நுரை கக்கிக்கொண்டு பெருகும் அருவிபோல் நரைக் கூந்தலின் சரிவு. அதுவும் பல் போனபின் இன்னும் ஒரு சுற்றுக் கூடப் பெருத்திருக்கார்.

அம்மா குதிர் போல;

அய்யா கதிர் போல.

இன்று—

சமையல் சற்றே முன்னே பின்னே ஆகலாம்? காலையில் மார்கழிப் பொங்கல் டிபனாயிடுத்து—என்று சொல்லிக்க வேண்டியதுதான்.

இதோ இப்படி அப்படி, அடுக்குள்ளுக்கும் உக்கிராண உள்ளுக்கும், கிணற்றடிக்கும் நாலு நடை ஆவதற்குள், வெய்யில் கூடத்துக்கு இறங்கிடறது. தாமரைக் கோலத்தைத் தொட என்னேரம்!

நேரம் ஆச்சோ இல்லையோ, வயிறு பசிக்கிறதோ இல்லையோ, சமையல் ஆச்சோ இல்லையோ!

''ஆச்சா? ஆச்சா??''

என்று கேட்டுக்கொண்டே மாமா வந்துவிடுவார்.

''இதென்ன அக்ரமம்? என்னிக்கும் ஒரே அவசரம் தானா? குழந்தை ஒண்டியாத் திண்டாடறாளே என்கிற இரக்கம் கூடக் கிடையாதா?''

''வீட்டில் ரெண்டு பொம்மனாட்டிகள் இருந்துண்டு வருஷமா சமையல் ஆகிறதாம்! ஆனவரை போடுங்கோ. இரக்கமாம் இரக்கம். நீங்கள் பண்ணிப் போடுவதற்குள் நான் பிதுர்க்களுடன் சேர்ந்துவிடுவேன் போல இருக்கே. இப்போத்தான் சாதம். அப்புறம் எள்ளும் தண்ணியும் தாண்டி!''

மாமாவுடன் அவளே—ஏன், அத்தையும் கூடத்தான்—காரணம் இல்லாது பேசுவதில்லை. காரணம் நேராமலே பேச்சு தானே நின்றுவிட்டது. கேட்டால் கேட்டதற்குப் பதில் மனுஷனுக்கு இப்போதெல்லாம் திடீர் திடீரென வரும் கோபங்களுக்கும், உடனே அந்தக் கோபம் மாறும் சிரிப்புக்கும் வேளையும் காரணமும் நிர்ணயிக்க முடிவதில்லை. அத்தைக்கே விளங்குவதில்லை. அம்மா திரி சமயங்களில் புன்சிரிப்பில் உதட்டைப் பிதுக்கிக்கொண்டு, மேல் சஞ்சாரத்தில் சாரீரம் தோற்ற சங்கீத வித்வான் போன்று கையை உயரத் தூக்கிவிடுவாள்.

அத்துடன் மாமாவுக்கு காணாததைக் கண்டதுபோல ஏன் இந்த ஆவலாதி? பரக்கப்பரக்க, சுடச்சுட, இந்தத் தாடையில் ஒரு அதுக்கல், அந்தத் தாடைக்கு ஒரு தள்ளு, உடனே 'கபக்'—ஈசுவரா, மோர்க்குழம்பில் சேப்பங் கிழங்கு தொண்டையில் அடைக்காமல் இருக்கணுமே, என்னதான் மாவாய் வேக வெச்சிருந்தாலும், அத்தைக்கு சிரமமில்லாமல் இருக்கணுமேன்னு!

"ஊம்—ஊம்—ரஸம்! ரஸம்!! கலத்தைப் பார்த்துப் பரிமாறுங்கோளேன்!"

பிள்ளையைப் பார்த்து:

"என்னடா, நான் எழுந்திருக்கப்போறேன், நீ இன்னும் பருப்பு தாண்டல்லையா? சாதம் சாப்பிடறையா, பூத்தொடுக்கறையா?"

அவளுக்கே தோன்றுகிறது. இலைச்சாதத்தைக் கையில் எடுத்துக் கொடுக்கலாமா, வாயிலேயே ஊட்டி விடலாமா?

"அ—ஆ அம்!"

அத்தை சொன்னது இதுதானா?

ஏன் இப்படி பரப்ரம்மமாய் இருக்கார், சாப்பாட்டி லேயே நினைவில்லாமல்! நான் எவ்வளவு நன்றாய்ப் பண்ணினால் என்ன? எதைப் போட்டாலும சாப்பிடும் மனுஷனுக்கு!

"மோர்!—மோர்!!"

"இதென்ன ரயில்வே ஸ்டேஷனா? இருங்கோ, ஒரு நிமிஷம்!"

கிணற்றடியில் துணி துவைத்துக்கொண்டிருக் கிறாள். உச்சி வெய்யிலில்—வாழைக் கொல்லையின் பசுமை, வானத்தின் நீலம், கிணற்றடி சிமிட்டிமேல் ஜலத்தின் பளபளப்பு தனியாய்ப் பிதுங்குகின்றன.

வெய்யிலின் வெள்ளித் தகடு கண் கூசுகிறது.

இவனேதான் காலையில் பொன்னாயிருந்தான்.

உள்ளே, அத்தைக்கு மாமா புராணம் படித்துக் காட்டிக் கொண்டிருக்கிறார். அவர் குரல் கணீரென்று தாழ்டி தாண்டி இங்கு வந்து எட்டுகிறது.

கிணற்றுப் பக்கமாய் வில்லாய் வளைந்து முதுகு நிமிர்ந்த தென்னை மரத்தினின்று காத்தான் உஷாராய் இறங்குகிறான். ஒருகையில் ஒரே கொத்தில் மூன்று இள நீர்கள் தொங்குகின்றன.

உள்ளே மாமா:

"திக்விஜய பராக்ரமத்தில் கைலையங்கிரிவரை
போய்விட்ட தேவிக்கெதிரே பகவானானவர்
அந்தரத்தில் வ்ருஷபாரூடனாய்த் தோன்றியவுடனே
பிராட்டியின் மூன்றாவது ஸ்தனம் மறைந்தது.
தேவி வெட்கம் அடைந்தவளாய்த்
தலை குனிந்தாள்."

கல்மேல் குனிந்து துணியைக் குமுக்கிக் கொண்டிருந்தவள் இவ்வசனம் கேட்ட அத்தருணமே நிமிர்கையில், தற்செயலாய் தன் கண்ணோக்கு தன் கழுத்துக்குக் கீழ் விழுகையில் ரவிக்கையின் கழுத்து விளிம்பில் விம்மி வழிந்த முலைகளின் வாய்க்காலில் பட்டதும் ஒரு பெரும் விதிர் விதிர்ப்பு உடலை ஊடுருவிற்று. கல்மேல் இரு கைகளை ஊன்றிக் கொண்டிராவிடின் விழுந்திருப்பாள். குப்பென உடல் பூரா வேர்வை விட்டது. குனிந்த தலை நிமிரவில்லை. திடீரெனச் சூழ்ந்துகொண்ட கும்மிருட்டில் மின்னல் கிளைபிரிந்து மறைந்தது. மண்டையுள் ஆவி பறந்தது.

*"கு—கூ! கு—க்—கூ! —கூகூ!!!"*

எங்கோ மரப்பொந்திலிருந்து ஏதோ ஒரு பறவை.

அவளைக் கேலி செய்ததா?

அல்ல; உலகத்தின் உற்பவசோகத்திற்குத் தன் குரலைக் கொடுத்ததா?

மாலை வருகிறது.

ஆசையுடன் வாசல் வழி எதிர்பார்த்திருந்த விருந்தாளி ஓசைப்படாமல் கொல்லை வழியோ, பக்க வழியோ வந்து கூடத்தில் அமர்ந்து விட்டாற்போல், வந்தது தெரியாமல் வருகிறது. கரைத்துக் கழித்துக் கொட்டிய ஆரத்தி போன்று மாலை ஒளியின் செம்பிழம்பு தோட்டத்திலும் ஒட்டிலும் சுவர்களிலும் வழிகின்றது.

**மஞ்சளையும் சுண்ணாம்பையும் கலந்து கரைத்த மங்கல ஆரத்தி.**

**காலையின் மஞ்சள் வெய்யிலும்**
**உச்சியின் வெள்ளை வெய்யிலும்**
**கலந்த விளைவுதான் மாலையின் மங்கல ஆரத்தி வெய்யிலா?**

**அப்படியானால் தினமே திருமணந்தானா?**

**இன்றுதான் இது எனக்குப் புரிகின்றதா?**

அடுக்களையின் நீழல்கள் சூழ்ந்த இருளில் அடுப்பில் ஆடும் நெருப்புக் கொழுந்துகளில் சிவப்பு விட்டுவிட்டுக் கக்குகின்றது நெருப்பே, தான் சுண்டச்சுண்ட எரிந்து வடிக்கும் சத்துத்தானோ சிவப்பு?

**சீதை குளித்த நெருப்பு.**

**நெருப்பின் புனிதம் சீதைக்கா**

**சீதையின் புனிதம் நெருப்புக்கா?**

சமையல் முடிந்து, அடுக்களையின் புழுக்கம் போக முகம் கழுவி, கண்ணாடி பார்த்துக் குங்குமம் இட்டுக் கொள்கையில், பொட்டு வழக்கமான அளவுக்கு, சற்றுப் பெரிதாக விழுந்துவிட்டது. இட்டதைக் குறைக்க மன மில்லை. இன்று இப்படியே இருந்துட்டுப் போகட்டும்; இன்று நெருப்பை இட்டுக் கொண்டிருக்கிறேன்—அப்படித் தோன்றியதுமே இட்டவிடம் சுட்டாற் போலிருந்தது.

பிறகே, அவளுக்குத் தன் முழுவசத்தில் இருந்ததாய்த் தோன்றவில்லை.

'இன்று' 'இன்று'—என்று இறக்கைகள் அவள் கால் களில் தாமே பொருந்தி, பாதங்களைத் தரையில் பதிய விடவில்லை. ராச்சாப்பாடு, அது ஆனபின் அடுப்பை மெழுகி, அடுக்களையை அலம்பி, இதுபோல் நடக்க வேண்டி, இதர காரியங்கள், அவைகளில் தன் ஈடுபாடு—எல்லாமே திரும்பத் திரும்ப நடக்கும் தினசரி வாசனை யில், தம்மைத் தாமே உந்திக்கொண்டு நிறைவேறி முடிவடைந்தன போல் தோன்றிற்று.

**ஆச்சு, கொல்லைக் கதவையும் அடைச்சாச்சு.**

**ஊரோசை எப்பவோ அடங்கிவிட்டது.**

கிழவர், கட்டையைத் திண்ணையில் நீட்டிவிட்டார்.

குறட்டை கிளம்பிவிட்டது.

ஒரு கையில் விடிவிளக்கு, மறு கையில் சொம்புடன் மாடிக்குக் கிளம்பினாள் ஜகதா.

கூடத்தில் சூழ்ந்த கும்மிருட்டில் ஊஞ்சல் சங்கிலி கிறீச்சிட்டது.

கை விளக்கின் துணை வெளிச்சத்தில் ஊஞ்சலில் அத்தை உரு, கடல் நடுவே பாறைபோல் தெரிகின்றது. இத்தனைக்கும் நான் கடலைக் கண்டதில்லை; பாறை பார்த்ததில்லை. ஆனால் கண்டால்தான் உண்டோ? தோன்றினாலே கண்கூடும் தாண்டிக் கண்டதுதானே!

பாறையெதிரே சென்று மௌனமாய் நிற்கின்றாள்.

பாறையில் செதுக்கி அங்கிருந்து வீசும் பார்வையில் இவர் அத்தையுமில்லை, நான் மருமகளுமில்லை; கற்பங் கற்பமாய் ஆணுடன் பெண் கூடி மனித குலத்தை ஈன் றெடுக்கும் மாதர்குல சக்தியின் பாறையிது. இந்தப் பாறையினின்று, என் பங்கை வாங்கிக் கொள்ளும் பாறை யின் சக்தி நான்.

விளக்கையும் பாலையும் அத்தையின் கையிலே கொடுத்து நமஸ்கரித்து, எழுந்து மறுபடியும் வாங்கிக் கொண்டு மாடி வழி திரும்புகிறாள்.

இன்றைய மாடிக்கு இத்தனை படிகளா என்ன?

எத்தனை இருந்தாலும் என்ன, எங்கிருந்தாலும் இன்று நான் சிகரத்திலிருக்கிறேன்.

இன்று, நான் என் விசுவரூபத்திலிருக்கிறேன்.

இன்று நான் என் திக்விஜயத்திலிருக்கிறேன்.

இன்று எனக்குத் தெரியும். அவர் இன்னும் தூங்க வில்லை.

அவர் தூங்கமாட்டார். தூங்கினாலும் என் சக்தி தூங்க வொட்டாது. தீர்மானமாய், சந்தேகமறத் தெரியும்.

இந்த உணர்வுதானோ இன்று இன்று என்று. இன்று காலையிலிருந்து என்னை நச்சரித்துக் கொண்டு திரண்டிருக்கும் 'இன்றி'ன் பொருள் விளக்கம்? இது என்னை ஆட்கொண்டபின், நானே என்னிடத்தில் இல்லை. என் செய்கைகளை நானே கவனிக்கிறேன்.

இதோ விளக்கையும் பாலையும் வட்ட மேஜைமீது வைத்துவிட்டுத் திரும்புகிறேன்.

இருளில் எனக்காக விழிகள் காத்திருக்கின்றன. அவை என்னை விழுங்குகையில் நான் என்னை, என் முழுமனதுடன், உடனே முழு அவாவுடன், உடனே அடுத்து என்னை மறந்து, இழப்பது இதோ தெரிகின்றது. என் மார்த்துணி சரிகின்றது.

இன்று நான் என் மூன்றாம் ஸ்தனத்தை இழந்தேன்.

அன்று அவளுக்கு வெட்கம் கண்டது.

இன்று எனக்கு வெட்கம் விட்டது.

கால் தடுக்கி மெத்தையில் அவர்மேல் அப்படியே விழுகிறேன்!

இடைத்துணி நெகிழ்கின்றது. ஆயினும் எனக்கு ஏன் முகம் கவிழவில்லை?

ஒருவரோடொருவர் பின்னிப்புரண்டு பிணைந்து இருவரும் ஒன்றாகி, அவ்வொன்றும் அன்று என்ற ஒன்றலில், மூச்சோடு மூச்சு கோர்த்து வாங்கும் மூச்சிறைப்பில் யார் மூச்சு யாருடையது? மூச்சுத்தானா, அல்லது பூமி தன் அச்சுப் பிசகிப்போச்சா? கண் திறந்திருப்பதற்கும் மூடியதற்கும் வேறு தெரியாமல் திகைக்கடித்து எங்கும் ஒன்றாய அவ்விருளில், இருள் தோற்றுவிக்கும் தோற்றங்களில் கண்ணுக்குள்,

வெள்ளிமணிகளின் கிண்கிணி
மலரின் செங்குழை
ஈரத் திரியில் நீலச்சுடர்ப் பொறி
மீனின் அடிவயிற்றின் ஒளிமருட்சி
எண்ணாயிரம் நட்சத்திரச் சொரி

—தெரிகின்றன.

அங்கத்தில் அங்கம் அழுந்தி, இருகூறு ஒன்றோடொன்று பொருந்தி எப்படியேனும் ஒன்றாய், அந்த ஒன்றும் அன்று என இழைந்துவிடத் தவிக்கும் இப்பேரிணைப்பின் அவஸ்தையில், என்னதான் அழுந்தியும், என்னதான் இழைந்தும், இருகூறு இருகூறுதான் என்று உணர்ந்த பிளவின் ஏக்கம் நெஞ்சைப் பிளந்துகொண்டு எங்களிருவரிடமிருந்து ஒரே சமயத்தில் கிளம்பிய கேவலில், இன்று, நாளை, இரவு, பகல் என வேளையைக் கீறும் நினைவு தன் குமிழி வெடித்து என்னுள் புகுந்த உயிர் வெள்ளத்தில் நான் மூழ்கிப்போய், மூழ்கிக் கொண்டிருக்கையிலேயே எங்கள் இருகூறால்தான் இப்பேருறவு, இப்பேருறவால் இப்பேரிழைவின் இப்பெருவெள்ளம் என இத்தனையும் புரிந்துகொண்ட அத்தனையும் இவ்வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போகும் தருணத்தில் ஒன்று, தன் புதிர்விட்டு நெஞ்சில் பதிந்தது. இன்று இன்றாய் என்றிலிருந்தோ அன்றன்றாய் சேர்ந்து இருந்து கொண்டே இருக்கும்.

இன்று

என்பது:

நானே தான்.

# அவன்

நேற்று—

இரவு, மோருக்கு சாதம் கொண்டு வந்தவள், திடீரென சிப்பல்தட்டைக் கீழே வைத்துவிட்டு கொல்லைப்புறம் ஓடின 'திடுதிடு' கேட்டு அம்மாவும் பின்னாலேயே போனாள். இலையில் கை காயும் இம்சை முதன் முதலாய் நேற்றுத்தான் தெரிந்தது. கிணற்றடியில் மறுக்கி மறுக்கி அவள் கமறுகையில், இங்கு எனக்கு அடிவயிற்றில் பந்து பந்தாய் சுருட்டுகிறது. இலையில் ஆறிப்போன சாதம் வேல்வேலாய் சிலிர்த்துக்கொண்டது. இது என்ன பயம்?

'மருமகள் ராஜாத்தி, மாமியார் தோழிப் பெண்'— என இவள் முன்வர, அம்மா அவள் தோளைப் பிடித்து நடத்திவர, இருவரும் ஒழுங்கையறைக்குச் சென்று, சற்று நேரம் கழித்து அம்மா மாத்திரம் திரும்பி வருகிறாள். என் கண்ணில் எழுந்த வினா அம்மா உதடுகளில் கொக்கியாய் மாட்டிக்கொண்டு புன்னகையில் இழுக்கிறது.

''எல்லாம் நல்லதுதான்: நேர வேண்டியதுதான் கிரமப்படி நேர்ந்திருக்கு. மோருக்கு சாதம் வேறே போடட்டுமா?''

கையை உதறிக்கொண்டு எழுகிறேன். வேண்டியில்லை.

மாடியறைதான் என் வளை; என் கூடு; என் அரண். எத்தனை வெளிச்சமானாலும் அங்கு மாத்திரம் தொங்கும் இருள்தான் என் தஞ்சம்.

கட்டிலில் விழுகிறேன்.

திடீரென என்னை மல்லாக்கப் புரட்டி இரு கைகள் இறுக அணைத்தன. நெஞ்சடியில் கல்லிட்ட ஸ்தனங்கள் அழுங்கி விம்முகின்றன—திமிறத்திமிற வாயில் ஒரு முத்தம். உதட்டில் தணல் தீய்ந்தது.

அந்த ஆலிங்கனத்தினின்று விடுவித்துக் கொண்டு அறையினின்று வெளியேறி, மொட்டை மாடியில் குட்டித் திண்ணையில் குந்தி, நெற்றிப் பொட்டை இரு கைகளாலும் பிடித்துக் கொண்டேன். மண்டை திகுதிகுவென எரிந்தது.

''எல்லாம் நல்லதுதான்.''

மூடுசூளை யில்லாவிட்டால் அம்மா அம்மாயில்லை.

ஆனால் இப்படித்தான் சொல்லணும போலும்;

''நேர வேண்டியதுதான் நேர்ந்திருக்கு.''

ஆனால், எதுவுமே, தான் நேர்ந்ததுடன் நில்லாது. அதே சமயத்தில் எல்லோருக்கும் தனித்தனியாய் வேறு நேரும் இத் தனித்தனி மயத்தின் தன்மை யாது? ஒரே சம்பவத்தில் யாரும் எப்படிப் பாதிக்கப்பட்டவர்களாகிறோம்?

ஆனால், இதுவும் தெரியாமல் இல்லை உயிருக்கு உயிர் உடல் இரண்டும் ஒருப்பட்டு கருவுற்று உருப்பெற்று முழுப்பட்டதும் வெளிப்பட்டு, யுகம் யுகமாய் நேர்ந்து நேர்ந்து வடுப்பட்ட உண்மைதானே இப்பவும் நேர்ந்துவிட்டது! ஆயினும் எனக்கென்று ஏற்பட்டது எனக்கேன் பழகிப் போகவில்லை? என் பத்திரம் எப்படித் திடீரென்று என்னின்று கழன்றுவிட்டது? அது போனால்தான் போகட்டுமே என்று ஏன் மனம் சமாதானமடைய முடியவில்லை?

ஆனால் ஸ்திரீகள் எப்படியோ, இப்படித் தங்களுக்கு நேர்வதை சடுதியில் ஏற்றுக்கொண்டு விடுகிறார்கள். இதை வரவேற்கிறார்கள். இல்லாவிட்டால்,

"'எல்லாம் நேர வேண்டியதுதான் நேர்ந்திருக்கு?"— என்று தன் இனத்தின் வெற்றியை அம்மா இப்படி என் முகத்திலேயே வீசுவாளா? இப்படிச் சொல்லிவிட்டு உடனே உதட்டைப் பிதுக்கிய அவள் கோணச் சிரிப்புக்கு வேறென்ன பொருள்? 'இனி நீ தப்ப முடியாது' எனும் கொக்கரிப்புத்தானே அது?

நம்மைவிட உண்மையைக் கண்டவர்கள் இவர்கள் தானோ?

உண்மையும் இதுதானோ?

அன்று நேர்ந்தது நேர்ந்தபோது, அதன் விளைவு இப்படி என்று அப்போது எனக்கு எப்படித் தெரியும்? நானே இவளை இவளாகவே நினைக்கவில்லை. நானும் நானாயில்லை. இருளில் திடீரென மூக்குத்தி சுடர் விட்டதும் அரைத் தூக்கத்தின் அரைமயக்கத்தில் ஏற்பட்டது, ஏதோ தியானத்தின் தரிசனம் என்ற நினைவின் போதையினின்று இன்னும் முற்றிலும் என்னால் மீள முடியவில்லை.

நான் ஏமாந்து போனேன்.

ஆம், இதுவே என் வேதனை.

ஏமாந்து போக என்றுமே பழக முடியாது.

ஒருத்தி ஏமாற்றி; ஒருவன் ஏமாந்து, அல்ல ஒருவள் ஏமாற்றி

ஒருத்தி ஏமாந்து, நிச்சயமாய் இருவரும் ஏமாந்து ஏமாந்து—

உலகம் இயங்குவதே இப்படித்தான் என்பதை நினைத்துப் பார்க்கையில்

உலகம் சமாதானம் அடைந்துவிடுகிறது. ஆனால் மனம் அமைதியடைய மறுக்கின்றது.

உலகம் ஒரு உண்மை; ஆயினும், அதன் தனித் தனி நியாயம் வெவ்வேறு.

இதோ கூரையுச்சியில் பூனை தன் வாயை நக்கிக் கொண்டு செல்கின்றது, உலகம் தெரிந்து ரகஸ்யமாய், எதையோ திருடித் தின்றுவிட்டு, திருப்தியாய். ஆனால் இதேபோல் காட்டிலோ கூட்டிலோ புலி தன் வாயை நக்கிக்கொண்டு நடந்தால் இப்படிச் சொல்வோமோ? புலிப்பசி ஓயாப்பசி என்று புழுங்குவோம். என் திகைப்பு, என் பசி என்னவென்று புரியாமலே தவிக்கிறேன். எனக்கு என் நியாயம் கிடைக்கவில்லை.

ஆனால்:

"நேர வேண்டியதுதான் நேர்ந்திருக்கு."

நேற்று—

* * *

நேற்றையப் போலிருக்கு

ஆனால் நேற்றைக்கின்னிக்குத் தழைஞ்சுட்டாள்.

ஆனால் சளைக்கல்லே.

தான் சுமப்பது தன்னோடு இன்னொரு உயிர்னு காட்டிக்காமல, தூக்குவது தண்ணீர்க் குடம்போல் தன்னால் முடிந்தவரை, முடியாதபோதும் சுறுசுறுப்பாய் வளையவராள். இதில் எம்மட்டு வீறாப்பு, எந்த அளவுக்கு சஹிப்புன்னு தெரியாதபடி என்னையும் ஏமாத்தப் பாக்கறாள்.

ஆனால் கிணத்தடியில் அவள் விட்டுச் செல்லும் அடிச் சுவடில் நாளுக்கு நாள் கன அழுத்தம் எனக்குச் சொல்றதே! மாதம் அஞ்சுக்கு வயிறு பெரிசு, பிறக்கப் போறது பெண்தானோ என்னவோ? குனிஞ்சால் ஒரு இறைப்பு. நிமிர்ந்தால் ஒரு மேல் மூச்சு.

''உட்காரு மூச்சு வாங்கிக்கோ; மிச்சத்தை நான் செய்யறேன்''னா கேக்கமாட்டேன்கறா... அதெல்லாம் ஒண்ணுமில்லே அத்தே, சித்தே நேரத்தில் சரியாய்ப் போயிடும்''னு எனக்கு சவால் விடறாள். தன்னை விட்டுக் கொடுத்துக்கக்கூடாதாம்! அதென்ன ரோசமோ? அப்படியேதான் இவளை உக்காத்திவெச்சு செய்ய எனக்குத்தான் உடம்பு லகுவா இருக்கா? மனமிருந்தாலாச்சா? உடம்பு ஒத்துழைக்க வேண்டாமா? நாளுக்கு நாள் உடம்பு ஊதற வேகம் பதினெட்டு முழம் போதல்லே. முறையா, பிராணன் மூக்காலோ காதாலோ கண்ணாலோ வாயாலோ பிரியாமல், ஒரு நாள் 'டொப்'புனு வெடிச்சுடுவேனோன்னு எனக்கே பயமாய் இருக்கு.

பொம்மனாட்டி கஷ்டம் புருஷாளுக்குத் தெரியறதா? அவாளுக்கு அஞ்சும் மூணும் அடுக்கா வேண்டியிருக்கு. வேளைக்கு ஒண்ணு குறையப்படாது. அப்படியே குறைச்சுப் போட்டாலும் நமக்கும்தான் மனசு கேக்கறதா?

இதோ ஆச்சு; நாள் கிட்டக்கிட்ட நெருங்கிடுத்து. வளைகாப்பும் சீமந்தமும் ஆச்சுன்னா, பிறந்த வீட்டுக்குப் போயிடுவாள். அப்புறம் என்ன பண்ணுவேன்! வேலைக்கு நான் பயப்படல்லே. போட்டதைச் சாப்பிடுவான் பிள்ளை; கவலையில்லை. அவருக்கும் இனி ராத்திரி மோருஞ்சாதமோ புழுங்கலரிசிக் கஞ்சியோதான்; மத்தவைதான் உடம்புக்கு ஒத்துக்கல்லியே!

பிறந்த வீடு, இதோ இதே தெருக்கோடிதான். ஆனாலும், பிரிவு கஷ்டமாயிருக்கு.

நேற்று மாதிரியிருக்கு—

பாவாடையும் சட்டையுமாய் வந்தாள். இப்போ வயிறும் பிள்ளையுமாப் போய், தையல் நாயகி புண்ணி

யத்தில், தாயும் குழந்தையுமா திரும்பி வரப்போறாள் என்கிறதை நினைச்சுப் பாக்கறபோது நெஞ்சு உடம்பு கொள்ளல்லே.

மனமறிஞ்சு, இதம் தெரிஞ்சு நடக்கறதுங்கறது வரப்ரசாதம்தான். வந்த புதுசில், பழகறதுங்கறது பாசாங்கில் ஆரம்பிச்சாலும் பாசத்தில் முடியறப்போ, அதில் சம்பந்தப்பட்டவாளின் பாக்கியமும் கலக்காமல் மந்திரத்தில் விழற மாங்காய் ஆயிடுமா அது?

நேற்று—

நான் என்னவோ எனக்கு நினைப்புக்கு வர வேளை யெல்லாம் நேற்று நேற்று என்கிறேன். அது நேற்றோ இன்னிக்கோ? எனக்கு சிரிப்புகூட வரது.

நேற்று பாதிராத்திரி; மாடியிலிருந்து இறங்கிவந்து, நான் தூங்கிப்போயிட்டேன்னு நினைச்சுண்டு, என் கால் மாட்டில் கிடந்த போர்வையை விரிச்சு என்மேல் போர்த்திவிட்டுப் போனாளே, அது பாசத்தினால் இல்லை, வேஷக்காரியம்னு மலையாட்டம் மாரிலே கையை வெச்சிண்டு நான் மனமாரச் சொல்ல முடியுமோ? அப்படியே சொன்னாலும், அப்படிச் சொல்ற நாக்குக்கு நரம்பில்லையானாலும் உடலுக்கு முன்னால் மார் 'பட்டு'னு வெடிச்சுடாதா! எதற்காகக் கீழிறங்கி வந்தாளோ அந்நேரம் குட்டி எனக்காகத்தானே வந்தாள் என்று நினைக்க நினைக்க மார் சுரக்கும்போல் தவிக்கிறது.

"அத்தை நீங்கள் ஏன் இப்படி சபலத்தில் அவஸ்தைப் படறேள்? மசக்கைன்னு எனக்குத் தனியா இதைத் தின்கணும் அதைத் தின்கணும்னு ஆசை தோணல்லே நம் ஆத்துலே ஒண்ணேணும் குறைவாயிருந்தால்தானே! ஆனால் நீங்கள் கேக்கறதுனாலே தோணறது, ஒரே ஒரு ஆசை; சின்ன ஆசைதான். கொஞ்ச நாளாவே நேர்ந்துக் கிறதில்லே. உங்களுக்கு சிரமமில்லாட்டா, எனக்கு ராவேளை நீங்களே சாதம் போடுவேளா? நானே போட்

டுண்டு நானே தின்கறப்போ தவிட்டைத் தின்கறாப் போல் தொண்டையை அடைக்கிறது. எனக்கு எதுவுமே உங்கள் கைபட்டால் தனி ருசி. எனக்கு இப்பவே அமிர் தத்தின் ருசியைவிட அன்பின் மணம்தான் தேவையா யிருக்கு—''

அப்படியே நான் அவளைக் கட்டிண்டுட்டேன். எனக்கு அழுகை வந்துடுத்து. இதுகூடத் தெரியாமல் நான் எப்படி இவ்வளவு மௌட்டீகமாயிருந்துட்டேன்?

சின்னச்சின்ன விஷயங்கள்தான். நினைவில் சேகரிக் கவும் சௌகரியமான விஷயங்கள். ஆனால் உன்னிப் பார்க்கப் பார்க்க, அலுக்காமல் விரியும் சக்தி அதுகளுக் குத்தான்.

நேற்று சாயந்திரம் விளக்கேற்றினதும் வழக்கம் போல் என்னை நமஸ்கரித்தாள்.

''நன்னாயிரு மகராஜியா! நமஸ்காரம் பண்ண வரவாளை தடுக்கப்படாது. ஆனால் இந்த சிரமத்தை இனிமேல் நீ தினமும் படணுமா?''

நெருப்பிலே விழுந்துட்ட மாதிரி அவள் புருவம் நிலை கொள்ளாமல் தத்தளிச்சது பார்க்க சங்கடமாயிருக்கு. இந்த மாதிரி சமயங்களில் அவளை நேர்முகம் பார்க்கக் கொஞ்சம் அச்சமாத்தானிருக்கு. அம்பாள் முகத்தை அர்த்தஜாம கற்பூர ஹாரத்தியில் பார்க்கறாப்போல்.

''என்ன அத்தை விளையாட்டுக்குச் சொல்றேளா, நிஜமாவேவா?''

எனக்கு ஏண்டாப்பா சொன்னோம்னு ஆயிடுத்து.

''இத்தனை நாள் சொன்னேனா?'' என்றேன்

இந்த மழுப்பல் சமாதானம் ஆகுமா, அதுவும் அவளுக்கு!

''அப்போ, ஏன் இப்போ சொன்னேள்?''

"எல்லாம் நல்லதுக்குத்தான்னு வெச்சுக்கக்கூடாதா? உன்னுள்ளெயே இப்போ ஒரு உலகம் வளந்துண்டிருக்கு"

புன்முறுவல் பூத்தாள்.

"தவிர ஒவ்வொரு நமஸ்காரத்திலும் வணங்கறவாளுக்கு வணங்கப்பட்டவாளுடைய பலத்தில் ஒரு பங்கு போய்ச் சேர்ந்துடறது, தெரியுமோன்னோ?"

அவள் முறுவல் மாறவில்லை.

"உங்களுக்கு இன்னும் தனியாய்ப் பலம் வேணுமா? தாங்கறத்துக்கு நாங்கள் இருக்கோமே போதல்லையா?"

"மலை மாதிரி, இந்தச் சரீரத்தையா? நீங்களா? தனியாவா? ? ?"

"அத்தை நீங்கள் மலையில்லை; எங்கள் குடை"

"டேயப்பா! உன்னை ஜெயிக்கவே முடியாது!"

"அப்படியானால், அதுவே உங்கள் ஆசிர்வாதமாயிருக்கட்டும்"னு உடனே விழுந்து நமஸ்கரித்தாள். ஒண்ணு— ரெண்டு— மூணு— நாலு— அஞ்சு, அவள் மூர்க்கம் எனக்கு நிஜமாவே உடம்பு ஒஞ்சுவர மாதிரி ஆயிடுத்து.

சின்னச் சின்ன விஷயம்.

உண்மையில் சின்னதுதானா?

வேடன் சுட்ட வெடியில் கலைஞ்சுபோன பக்ஷிக் கூட்டம் மாதிரி ஏதேதோ அர்த்தங்கள், அற்புதங்கள், வார்த்தையில் மாட்டிண்டு, கேட்டவாளுக்கும் சொன்னவாளுக்கும்கூட, முழுக்கப் புரியாத தினுசில் இறக்கையடிச்சுண்டு தவிக்கறதுகள். முழுக்க அடையாளம் கண்டுகொள்றதுக்குள்ளே நாக்கில் கரைஞ்சு போயிட்ட தித்திப்பு மாதிரி இந்த நிலை, அனுபவிக்கிறதுக்கு ஆகாசத்தில் மிதக்கிற மாதிரியிருக்கு.

'டேயப்பா!'

நேற்று—

உச்சி வெய்யிலுக்கு ஒரு குருவிக்காரி பிச்சைக்கு வந்தாள், தகரக் குவளையைத் தட்டிக்கொண்டு, வாய்க்கு வந்ததைப் பாடிக்கொண்டு, அதுக்குத் தக்கபடி ஆடிக்கொண்டு.

''டேக்கு மைனா டேக் டேக்
லேலேலே லெல்லே லேலே
லேலேலே லெல்லே லேலே
லாலி லல லல்லாலிலீலீலால லல்லாலலீ
லல்லாலக்கடி லல்லாலக்கடி லல்லாலக்கடி லேலேலே
நன்னாலக்கடி நன்னாலக்கடி லல்லாலக்கடி
நா நா நா!''

வயசுப் பெண். தன் மெட்டில் தானிழைஞ்சு போய் அவளுக்கு வெறியாட்டம் கண்டுடுத்து. கையும் காலும் தனக்குத்தான் தலையாட்டமா தலை தெரியாமல் இயங்கறது. தொப்புளுக்குக் கீழே பாவாடை இறங்கிப் போச்சு. மாருக்கு ஏறிப்போன ரவிக்கைக்குள்ளே கூட்டுக்குள்ளே குருவியாட்டம். குடத்துவிளிம்பிலே ஜலமாட்டம், குத்துமலை தளும்பறது. பாசிமணி மாலை கழுத்தில் மூலைக்கொண்ணா குதிக்கறதுகள். அவள் ஆட்டத்தைப் பார்த்து அத்தையும் நானும் குலுங்கக் குலுங்க சிரிச்சு சிரிச்சு வயிறு வலிச்சுப் போச்சு.

''மூலைப் பழையதில் உப்புக்கல்லை கரைச்சுக் கொண்டு வந்து இவளுக்கு ஊத்து.''

நான் ஊத்தஊத்த, அவள் உறிஞ்சிஉறிஞ்சிக் குடிச்சும் குவளை வழிஞ்சுபோச்சு, தடிச்சி! இருந்தாப்போல

யிருந்து என் கைச் சட்டியைத் தொட்டுட்டா. அத்தைக்கு கனகோபம் வந்துடுத்து. அத்தைக்கு கோபம் வந்து, நான் இப்பத்தான் பார்த்தேன்.

"ஹத்து, திமிர்பிடிச்ச கழுதை! ஓடு, இந்த இடத்தை விட்டு!"

புறங்கையால் வாயைத் துடைச்சுண்டு எழுந்தவள் திடீர்னு இடுப்பைப் பிடிச்சுண்டு உட்கார்ந்துட்டா.

"என்னடி, மாய்மாலம் பண்ணறே? நடையைக் கட்டறையா இல்லையா?"

ஆனால் குருவிக்காரிக்குக் காது கேக்கல்லே. அவளுக்கு இப்போ காது கேக்க முடியாது. முகம் தீடீர்னு வெளிறிட்டுப் போச்சு. முகத்தில் வேர்வை 'குப்குப்'புனு கொப்புளிச்சு வழிஞ்சு பூமியில் சிந்தறது. இடுப்பிலே உடம்பு மத்தாய் கடையறது. நெற்றியிலே மயிர் வழிஞ்சு கண்ணைக் குத்தறது. முழி ரெண்டும் மேட்டுலே சொருகிப்போச்சு.

"ஐயோ! அம்மா!!"—

எனக்கு ஒண்ணும் புரியல்லே. ஆனால் அத்தைக்குப் புரிஞ்சுபோச்சு. கண் விரிஞ்சிபோச்சு. கன்னத்துச் சதையைக் கொத்தா ரெண்டு கையிலும் கெட்டியா பிடிச்சுண்டுட்டார்.

"அடிப் பாவி!"

"அட ராமா!!"

"குட்டி, ரேழி உள்ளை அவசரமா ஒழி!"

ஒழிக்கக்கூட நேரமில்லை. சாமான்களை அப்படி அப்படியே ஓரமாய் நகர்த்தி நடுவிலே இடம் பண்றதுக்குள்ளே, அத்தை குருவிக்காரியைத் தாங்கிண்டு உள்ளே வந்துட்டார், இடுப்பிலே ஒரு கை கொடுத்து அவள் கையைத் தன் கழுத்திலே சுத்திண்டு.

"ஊம் ஊம், நீ வெளியிலே நட! உனக்கிங்கே என்ன வேலை?"

"வீல்"னு குருவிக்காரி போட்ட ஒரு அலறலில் வீடே அதிர்ந்துபோச்சு. அடுத்தாப்போலேயே 'குவா'ன்னு ஒரு புதுக் குரல்—குஞ்சுக் குரல், கொசிர்க் குரல், மொட்டுக் குரல், ஒழுங்கையுள் இருளை வெட்டிண்டு அதிலிருந்து வெளிப்பட்டதும் என் உடம்பு ரோமமெல்லாம் குடைக் கம்பியா விறைச்சுப்போச்சு.

தெருவே 'கொல்'னு ஆயிடுத்து.

மாமா உள்ளே நுழையறபோதே, "...ம் பேரன் பிறந்தானா?"ன்னு பல்லைக் கடிச்சுண்டு கேட்டுண்டே நுழையறார். ஆனால் இதுக்கெல்லாமா அத்தை கிணுங் கறவர்?

"இதோ, நீங்கள்தான் பாருங்களேன்!"

குழந்தையை ஏந்திண்டு அறைவாசல் படிக்கு வந்து அத்தை பொக்கைவாய்ச் சிரிப்போடு நிக்கறார்.

என் காலடியிலே பாம்பு. அத்தை குழந்தையைத் தூக்கற மாதிரியில்லை. குழவியைத் தூக்கற மாதிரிதான் அத்தையின் கை தாங்கறது. கிள்ளினால், கிள்றத்துக்கு விரலுக்கிடுக்கிலே சதை சேராது. இப்பவே அவ்வளவு அழுத்தம். கறுகறுன்னு மயிர் கண்ணிலே வழியறது. ஜெவஜெவன்னு உடல். ஆனால், பிறந்தவுடன் எந்தக் குழந்தைதான் கறுப்பாயிருக்கு?

பத்ரகாளி!

அன்னிக்கு விளக்கு வெக்கற நேரத்துக்கு அவள் புருஷன் தேசிங்குராஜன் ("ஊஷியோ ஊஷீ!") தலை முண்டாசும் குத்து மீசையும் அரைக்கோவணமுமாய் தேடிண்டு வந்துட்டான். அவளும் கிளம்பிட்டாள்.

அண்டா நிறைய வென்னீர் வெச்சு, தாயையும் குழந்தையையும் குளிப்பாட்டி, அத்தை சொல்படி சாதமும் ரஸமும் வெச்சு ஆவி பறக்கக் கிளறி, பிள்ளை பெற்றாள் ஆசைப்பட்டுத் தொட்டுட்ட சட்டியிலேயே நிரப்பிக் கொடுத்து, கூடவே கல்லாட்டம் ஒரு பழம் புடவை, குழந்தைக்குப் பழந்துணி, கையில் ஒரு அரை ரூபாய்க் காசையும் கொடுத்து அனுப்பிச்சுட்டு, அப்புறம்தான் அத்தை ஸ்னானம் பண்ண கொல்லைப்புறம் போனார்.

கிளிஞ்சல் சுண்ணாம்பு மாதிரி மாமா கூடத்தில் கொந்தளிக்கிறார்:

''ஆத்துக்காரன் அரையை மூட வேட்டியில்லாமல் காற்றில் பறக்கறானாம்; இவள் கும்பகோணத்தில் கோதானம் பூதானம் பண்ணற இந்த அக்ரமத்தைக் கேக்கறத்துக்கு யாருமில்லையா?''

கோபம் வந்தால் கூடவே பிராசமும் எப்படி வரது?

ஆனால் அத்தையா இதுக்கெல்லாம் கிணுங்கறவர்? அது கோவர்த்தன மலை. கோவர்த்தனத்தின் அடியில் ஒண்டினவாளுக்கெல்லாம் நிழல்.

அன்றிரவு வேலை முடிஞ்சு படுக்கையான பின்னும் எனக்கென்னவோ கிடக்கை கொள்ளவில்லை. கீழே இறங்கி வந்தேன். குத்து விளக்கில் எண்ணெய் அதிகமோ என்னவோ, நின்னு எரியும் சுடரில் கூடம் முழுக்க புஷ்பம் போல் மெத்துனு. இருளோடு கலந்த மென்மையான தொரு வெளிச்சம்.

ஊஞ்சல் சங்கிலி முனகித்து.

மெதுவாய்ப் போய், கால்மாட்டில் உட்கார்ந்து அத்தை காலை லேசாய்த் தொட்டேன்.

என் அம்மாவின்மேல்விட அதிக ஆசை பொங்கும் இந்த ரூபத்தை நான் அம்மா வென்பேனா? அத்தை யென்பேனா? சில சமயங்களில் எனக்கு ஒண்ணுமே புரியமாட்டேங்கறது. இப்போ இருக்கிற நெஞ்சடைப்பில் எல்லாமே ஒண்ணாத்தான் இருக்காப்போல இருக்கும்.

அத்தை கண்ணைத் திறவாமலே புன்னகை பூக்கறார். அவர் கைகளைப் பற்றி, என் கன்னங்களில் ஒத்திக்கறேன்.

''அத்தை! அத்தை!! எனக்கு பிள்ளைப்பேறை நீங்களே பண்ணுங்கோளேன்!''

ஏன் அப்படிக் கேட்டேன்? எனக்கே தெரியாது. அந்த நிமிஷம்வரை அந்தமாதிரி கேட்கப்போறேன்னு எனக்குக் கனவிலும் தெரியாது; அத்தையின் கைமகத்து வம்னு நான் நினைக்க வேண்டியிருக்கு.

''ஓஹ்ஹோ!''

அந்த த்வனியில் ஆச்சரியமா? கேலியா? பரிவா?

என்ன தெரியறது? மேருவைக் கண்டறிஞ்சது யார்?

அத்தை மெதுவாய் என் பிடரியை வருடுகிறார்; குறு குறுக்கிறது. இதமாயும் இருக்கு. உறக்கம் வராப்போல இருக்கு. அத்தை என் பேச்சை, மனசை தன் கைமகத்து வத்தால் மாத்தப் பார்க்கிறார்.

''அத்தை, நான் இங்கேயே இருக்கேனே!''

''அடி அசடே, உனக்கென்ன வீடில்லையா? தாயில் லையா? முதல்பேறு முறையா உங்காத்தில்தான் நடக்கணும்.''

''அங்கே போனால் மாத்திரம் என்ன என் பிள்ளையை நான்தானே பெறணும்! நம்ம வீட்டுச் சரக்கு நம் வீட்டிலேயே பிறந்தால் ஆகாதா?''

''தர்க்கம், நியாயம் எல்லாம் பிரமாதமாய்த் தானிருக்கு. ஆனால் சம்பிரதாயம், வழக்கம், முறைன்னு நமக்கு முன்னால் பெரியவாள் எல்லாம் தொன்று தொட்ட ஏற்பாடா பண்ணிட்டுப் போயிருக்காளே, அதெல்லாம் பிசகுன்னு ஒரு நிமிஷத்தில் தூக்கியெறிஞ்சுட இந்த விஷயத்தில் என்ன அவசரம் வந்துடுத்து? நீ ஏன் கேக்கறேன்னு எனக்குத் தெரியும். இன்னிக்கு மத்தியானம் நடந்த விஷயத்தில்—அவள் குருவிக்காரியா யிருந்தால் என்ன, குபேர சம்பத்தாயிருந்தால் என்ன? நம் ஸ்திரீ வர்க்கத்தின் மானம் அடமானம் மீட்கவேண்டிய அவசியம் நேர்ந்துபோச்சு. அது மாதிரி உனக்கு நேரணுமா? அவளுக்கும் உனக்கும் ஈடா? அங்கு நீ பெற்றால் என்ன? நான் வந்து பார்க்க மாட்டேனா!''

என் பிடரியில் அத்தை கை எவ்வளவு சுகமாயிருக்கு! எனக்கு தூக்கம் வரது. என்னையறியாமல் என் தலை ஆடி, அத்தை கைமேல் சாயறது; அப்புறம் நினைவில்லை.

# அது

நாளை—

நாளை என் வேளை. நான் வெளிப் புறப்பட்டு விடுவேன்.

வேளை கூடின சமயத்தில் எங்கு என் தாயோ—அது அவள் வீடோ, அத்தை வீடோ, எதிர் வீடோ, கிணற்றடியோ, நடுத்தெருவோ, அது என் கவலையில்லை; அந்த சமயத்தில் அது அவள் இஷ்டத்திலுமில்லை. வேளை கூடினதும் வெளிப் புறப்பட்டுவிடுவேன். மழையும் மகப் பேறும் மஹாதேவனுக்கே தெரியாது.

நேற்றாம், இன்றையாம், நாளையாம்! கர்ப்பத்தில் சிரிக்கிறேன். சிரிக்காமல் என்ன செய்வது? நான் சிரித்தால் வெளியிலிருப்பவர், ''பார், பார், குழந்தை புரள்றது தெரியறது பார்!'' என்று அவர்கள் மூக்கின்மேல் விரல் வைப்பது அவர்கள் குரலில் தெரிகின்றது. இங்கே இப்போ சிரிக்கிறேன். ஆனால் நாளை அழுதுகொண்டே தான் வெளிவரப் போகிறேன். இதை நினைக்க, இன்னும் அதிகமாக சிரிப்பு வருகிறது.

இருளின் மகவு ஒளி.

புற்றினுள் பாம்பு.

எந்தையும் தாயும் நெஞ்சு நெகிழ்ந்து, ஒன்று கலந்து தம்மை மறந்த தருணம் கருவில் தங்கியதிலிருந்து நான் அமர்ந்த தவத்தில் பொருளாகும் பதத்திற்கு இட்ட மறு பெயர் காலம். தவத்தின் இருக்கை கலையும் சமயங்கள் இறப்பு, பிறப்பு; இரண்டுக்கும் இடையே இரவும் இரவியும் வகுத்த நேற்று, இன்று, நாளை. காலம் என்பதே இவ்வளவுதானே!

ஆயினும், இதுதான் என் வியப்பு: கருவின் இருளில் தேறும் இத்தெளிவு, நாளை ஏன், நான் ஒளியில் வெளி வருகையில் மறைந்துவிடுகின்றது?

அதற்கும் பதில் இவ்விருள்தான் அருள வேண்டும். இருளில் இல்லாத பதில் இல்லவே இல்லை.

வியப்பின் அடித்தடம் சந்தேகம்.

ஒவ்வொரு வியப்பும் ஒரு பிறவி. ஒவ்வொரு பிறவியும் சந்தேகத்தின் பரீக்ஷை; தேக வழி சந்தேகத்தின் தெளிவு.

இந்தத் தெளிவு வரும், வரும், என நம்பி, எப்போது வரும் எனக் காத்திருக்கும் வேளை, நாளை நாளையென எத்தனை பிறவிகள்! அத்தனைகளினூடே தருணத்தின் எத்தனை மகத்தான தவம்!

உடலே பீடம்: செயலே தவம்.

கருவின் நிழலில், தருணப் பொறிமேல் விழும் பிறவியின் வரிகளாய் இவ்வளவும் காண்கிறேன். ஆயினும் உதரத்தின் இருளினின்று, நான் ஒளியில் வந்து விழுந்த தருணமே, என்மேல் என் முற்பிறவி, இப்பிறவி, பிற் பிறவி, மற்பிறவிகள், தாமே உரித்த சட்டைகளாய் விட்டுச்சென்ற சந்தேகங்கள் கவிகையில், திக்கு மருண்டு, கர்ப்பத்தின் இருளுக்கே மீள அழுகின்றேன்.

ஆனால் மீள முடியாது. என் தாயும் நான் உரித்த சட்டைதான்.

ஆனால் இங்கேயும் தங்கிவிட முடியாது.

இப்பவே இட நெருக்கடி. நான் வெளிவரும் வேளை ஒரு கணங்கூட தாண்டாது.

என்னை வாங்கிக்கொள்ள உலகம் காத்திருக்கின்றது.

ஆனால் உலகமும் ஒரு கர்ப்பம்தான். அதுவும் முடிந்த வரைதான் தாங்கும். அடுத்தாற்போல் தோள் கொடுக்க சாவு காத்திருக்கிறது.

எங்குமே தருணம் தங்க முடியாது. தங்க இடம் தேடி, தருணம் தவிக்கும் வியப்பேதான் தவமோ?

மறுபடியும் கேள்வி, மறுபடியும் சந்தேகம், மறுபடியும் பிறவி, ஓயாத தவம். என் தவத்தின் தூய்மைக்கு நான் உரித்த சட்டைகளே சாக்ஷி.

என் சட்டைகள் என் தாய்கள்.

அம்மா!

உன்னை அழைக்கும்போதே உருக்கம் தாளாது பிண்டம் புரள்கிறேன்.

அம்மா! உனக்கு என் முதல் அஞ்சலி.

உன் உயிருடன் என் உயிரையும் சுமக்கின்றாய். என் சுமைகீழ் உன்னால் நிற்கவும் முடியவில்லை, உட்காரவும் முடியவில்லை. நிலை கொள்ளவில்லை. ஒரு மாதமாகவே நீ துயிலிழந்தாய். உன்னால் நான் வளர்கிறேன் எனும் உன் ஆசையே நீ என் இமையில் தீட்டிய மையாகி, அது காட்டும் சித்திரம்தான் நான் நாளை விழிக்கப் போகும் உலகம்.

என்னை எனக்குத் தந்ததல்லாமல் நான் வாழ என் உலகையும் எனக்குத் தந்தாய். என்னை உண்டாக்கியதி லிருந்து என்னைச் சுமந்து சுமந்து, நாளை வரை உன் நெற்றியில் கொப்புளித்திருக்கும் வேர்வையின் ஒவ்வொரு துளிக்கும் நான் ஒரு பிறவியெடுத்து, அதற்குள் உன் பிறவி எங்கேயோ அங்கு உன்னை அறிந்து வந்து உனக்கு உழைத்தாலும் உனக்கு நான் பட்ட கடன் கழியாது. தருணத்தின் தவமே, 'நேற்று,' 'இன்று,' 'நாளை' என்று என்றும் ஓயாத கடனைத் தீர்ப்பதுதானே!

இன்று, நேற்று, நாளை.

தருணத்தின் விஸ்தரிப்பு.

கர்ப்ப சயனத்தினின்று நான் எழுகையில் என் தாயின் மடியினும் பெரிய தன் மடியில் என்னை ஏந்தக் காத்திருக்கும் பூமிக்கு என் அஞ்சலி.

சடலத்தினின்று என்னை விடுவித்து என் தவத்திற்கு என்னைப் புதுப்பிக்கும் சாவுக்கு என் அஞ்சலி.

அஞ்சலியில் குவிந்த கைகளுடனேயே நான் புறப்படுகிறேன்.

—'புத்ர' நாவலிலிருந்து ஒரு பகுதி.

# தாயம்

உமா :

இன்று பிற்பகல் மயிலாப்பூர் போயிருந்தேன். உள்ளே நுழைஞ்சதும் நுழையாததுமா அம்மா, "மாப்பிள்ளை இப்பத்தான் போனார். அவர் இந்தப் பக்கம் எட்டிப் பார்த்தே வருஷம் மூணுக்குமேல் ஆறது. என்ன விசேஷம்? ஒரு கேஸரி கிளறி, பஜ்ஜி போட்டுத் தரலாம்ன்னு பார்த்தால் இன்னிக்கு ரவையும் கடலைமாவும் கடையிலே இல்லே. தெரிஞ்சுண்டே மனுஷன் வந்தாரோன்னு எனக்கு அவர்மேலே ஆத்திரம் வந்தது. கடையிலே வாங்கினால் கடலைமாவா அது? வெறும் பட்டாணி மாவு தோச்சுப் போட்டால் எண்ணெய் பொங்கி வழியும். நம்ம வாங்கி அரைக்கற மாதிரி ஆகுமா?"

"சரி சரி... நீ அவரிடம் பஜ்ஜியைப் பத்தித்தான் பேசிண்டிருந்தையா? இல்லை, நீ போட முடியாத பஜ்ஜியைத் தின்ன அவர் வந்தாரா?"

"நான் உன்னைக் கேட்டால், நீ என்னைக் கேக்கறே. வராத மனுஷன் வந்தால், விஷயமில்லாமல் வருவாரா? அதுவும் இந்த மாப்பிள்ளை?"

"அட, உனக்கு எத்தனை மாப்பிள்ளை, இந்த மாப்பிள்ளையைத் தனியாகக் குறிக்க? சரி, என்ன விசேஷம்?"

"அதுதான் தெரியல்லியே! ஆனால் என்னவோ சொல்லத்தான் வந்திருக்கார். அதுக்குள் சொல்லலாமா வேண்டாமா—ரெண்டு மனசு போலவோ? 'உமா சௌக்கியமா'ன்னு கேட்டேன். ஏதோ ஒண்ணு ஆரம்பிக்கணுமே! 'ஏன், அவள் இங்கே வந்துண்டு போயுண்டு தானே இருக்காள்... அவள் சௌக்கியம் உங்களுக்குத் தெரியாதா?'ன்னார். இடக்கன். நேர்க்கேள்விக்கு நேர்ப் பதில் சொல்லிட்டுப் போகட்டுமே... ஆனால் வம்பு அடிக்கற ஆளுமில்லே. யோசனை பண்ணிப்பண்ணி மண்டையைக் குடையறது."

"அப்படியா? எனக்குப் புதுசாயிருக்கே! பேச்சுன்னா அலைவையே!"

"உமா, நீ இன்னும் கொஞ்சம் மரியாதையாயிருக்கலாம்னு உனக்குத் தோணல்லே?"

"எல்லாரும் பிறத்தியாருக்குத்தான் வாத்தியாரம்மா!"

"உமா, சற்றே நிதானத்தில் இரு. உன் சுபாவம் எனக்குத் தெரியும்னாலும் அவரிடமும் இப்படித்தான் நடந்து இருப்பாயா?"

"இது என்ன பயமுறுத்தல்?" எனக்குக் கோபமாயும் இருந்தது. பீதியாவும் இருந்தது. அப்பா இருந்த நாளில், அவர் உத்தியோக முறையில், 'Witness Turned Hostile' என்பார். அதுமாதிரியா ஏதேனும்...

"நான் என்ன பயமுறுத்தி, நீ உக்கிராண உள்ளே ஒளிஞ்சுக்கறது?" அம்மா சிரிச்சாலும் அவள் புருவ நெரிசல் இன்னும் நீவவில்லை. கூடவே சீண்டிவிட்டேனோ?

"என்னவோ குருவித்தத்தல் மாதரி, முன்னுக்குப்பின் தாக்கல் மோக்கல் இல்லாமல் பேச்சு தாவிண்டே போச்சு. ரொம்பநாள் கழிச்சு சந்திக்கிறோம். பேச்சு சகஜமா

வரதா? அதுவும் மாமியாரும் மாப்பிள்ளையும்! நான் என் அமரிக்கையில் கதவு மூலையில் நின்னுண்டு பேச, அவர் கூடத்தில் ஊஞ்சலில் உட்கார்ந்திருக்கார். பேச்சுவாக்கில் சொன்னார்: 'நான் நாலு தங்கைகளோடு பிறந்தேன். உங்கள் வீட்டில் நாலு உடன்பிறந்தார், நடுவில் ஒரு பெண்—இரண்டுக்கும் வித்தியாசம் இருக்காதா?'

'தாராளமா'ன்னேன் பதிலுக்கு.

'அவள் இன்னும், அப்படித்தான் இருக்காள்...'

எனக்கு 'சுருக்'குன்னுது. 'ஆமா, இத்தனை வருஷம் கழிச்சு, நான் உமாவைப் பத்திச் சொல்லி, நீங்கள் புது சாகத் தெரிஞ்சுக்க என்ன இருக்கப் போறது?'

இந்த வார்த்தை எப்படி, எந்த சம்பந்தத்தில் என் வாயிலிருந்து வந்ததுன்னு எனக்கே தெரியல்லே. நான் இப்படிச் சொன்னதும் அவர் என்னை ஒரு மாதிரியாப் பார்த்தார். ஏதேனும் தப்பிதமாய் பேசிட்டேனோ? எனக்கு 'திக்'குன்னு ஆயிடுத்து.

'லக்ஷத்தில் ஒரு வார்த்தை. நான் ஏதோ யோசனை கேட்க வந்தேன். நீங்கள் உபதேசமே பண்ணிட்டேள்! வரேன்.'

'கிர்ர்'னு எழுந்து போயிட்டார். 'புதுப்பால் வந்தாச்சு, டிகாக்ஷன் இறங்கிண்டிருக்'குன்னு ஒரு வார்த்தை சொல்லத் தோணல்லே. நேரமேயில்லை... நான் வாசலுக்கு வரதுக்குள், அவர் முனை திரும்பிட்டார். ஆமாம்; உங்களுக்குள் என்னடி, உமா?''

''என்னவாம் என்ன? எலிக்கு ஜட்டி கட்டல்லே, குழாயில் தண்ணி சொட்டறது, செம்பருத்திப் பூவைப் பறிக்காமலே தரையிலே உதிர்ந்து கிடக்கு''ன்னு வேடிக்கை பேசற மாதிரி மழுப்பிட்டு—ரொம்ப நேரம் தங்கல்லே— உடனேயே கிளம்பிட்டேன். இருந்தால் பிடுங்கியெடுத்துடுவாள்.

ஓஹோ, என்னை முந்திண்டுட்டாரா? மாமியாரை மத்தியஸ்துக்கு. No...No மாட்டவே மாட்டார். அந்த அளவுக்கு அவரை எனக்குத் தெரியாதா? ஆனால் நானும் மெனக்கெட்டு, இதே காரியமாத்தானே இன்னிக்கு இங்கே வந்தேன்! ஆனாலும் இன்னதுதான் நடந்ததுன்னு விரல் வெச்சு சொல்லிக்கற மாதிரி ஒண்ணும் கிடைக்கல்லியே? குணங்களின் மோதல்னா உருக் கிடைக்காமல் இப்படித் தான் இருக்குமோ?

இதெல்லாம் அடிப்படையில் எப்போ, எங்கே ஆரம்பிச்சுது? நினைவை முட்டிமுட்டிப் பார்த்துக்கறேன். நூல்நுனி கிடைச்சால்தானே இழுக்கலாம்! இழுத்தால் தானே சிக்கு வழி பிரியும்! எவ்வளவு பெரிய சிக்கு ஆயிடுத்து? இனி பிரிஞ்சவரைக்கும்தானோ? ஒண்ணு, இருக்கிற முடிச்சோடு சமாளிக்கப் பார்க்கணும். இல்லை, இந்த இடத்தோடு வெட்டி எறியணும். வெட்டி எறியறதா? அப்புறம் மிச்சமே என்ன இருக்கப்போறது? அம்மாடி, பயமாயிருக்கே! இனிமேல் அலியாவது, நுனியாவது?

Be honest with yourself—நான் காலேஜ் படிச்சேன் என்பதற்காக, இது ஒரு கோட்பாடின் உச்சரிப்பாய்க் காட்டிக் கொள்ளலாம். ஆனால் இதையே நான் மனசாட்சியின் குரல்னு சொல்லிக்கொள்ள முடியுமா? இதனால் நான் புதுமைப்பெண் ஆகிவிடுவேனா?

எங்கள் இடையே பேச்சு அனேகமா அறுந்து போச்சு. அவர் காரியத்தை அவர் பார்த்துக்கறார். என் காரியத்தை நான். எனக்குச் சௌகரியப்பட்டபடி. ஆமாம்; அது அதுக்கு அதனதன் வேலைன்னு. அவருடைய கட்டுப்பாடு ஒழுங்கெல்லாம் என் சுபாவத்துக்கு ஒத்துவர சமாச்சார மில்லே. அவர் துணியை அவரே தோய்ச்சுக்கறார். அவருடைய சமையலை அவரே பண்ணிக்கறார்.

கும்மட்டியில்...கட்டம் அந்த அளவுக்கு முத்திப்போச்சு. ஆமாம்; ஒருநாள், 'சாப்பிடறதுன்னா இப்போ சாப்பிடணும். போட்டுட்டுப் போறேன். அப்புறம் எனக்கு வேலையிருக்கு'ன்னேன். வேலையென்ன வேலை? டி.வி.யில் சிவாஜி. அவருக்குப் புருவம் தூக்கித்து. ஒண்ணும் பேசல்லே. படம் முடிஞ்சு நான் எதிர்வீட்டிலிருந்து வந்தால், அவர் இலையில் தனக்குப் பரிமாறிண்டிருக்கார். சாதம், குழம்பு, கறி எல்லாம் ஆவி பறக்க, என்னை நிமிர்ந்துகூடப் பார்க்கல்லே.

எனக்கு ஆத்திரம். அந்த நிமிஷத்தின் உஷ்ணத்தில், 'ஓஹோ, அப்படியா? எத்தனை நாள் நடக்கப்போறது பார்த்துடறேன்'னேன்.

இன்னும் பார்த்துண்டேயிருக்கே.

அன்னிக்கு டி.வி.யும் நன்னாயில்லே. போனதுதான் மிச்சம். ஒரு பாசமலர் என்ன, ஒரு பாகப்பிரிவினை என்ன, ஒரு பாலும் பழமும் என்ன...அந்த சிவாஜியை இனி காணப் போறோமோ? சிவாஜியே அந்த சிவாஜியை இனி கண்டுக்க முடியுமோ?

நடுராத்திரியில் திடுக்கென விழிப்புவந்து,படுக்கையில் எழுந்து உட்கார்ந்தேன்.சிவாஜியைப்பத்தி நினைச்சுண்டதெல்லாம் ஒருவேளை எனக்கே பொருந்துமோ? அதனால்தான் நினைப்பே அப்படி வந்ததோ? அவனைச் சொல்லும் சாக்கில் என்னையே சொல்லிக்கிறேனோ?

எட்டிப் பார்க்கிறேன். ஆபீஸ் அறையில் விளக்கு எரியறது. ஃபைலா? புஸ்தகமா? சிந்தனையா? எதிலே ஆழ்ந்தாலும் மனுஷன் தன்னை மறந்தான்.

* * *

இன்னிக்கு லேடிஸ் கிளப்பிலிருந்து வீடு திரும்பறப்போ ராத்திரி நேரமே ஆயிடுத்து. அங்கேயும் என்ன? பேரென்னவோ கேரம், பூப்பந்து, லைப்ரரின்னு பேரு.

ஆனால் அசல் என்னவோ அரட்டைதான்! கொள்ளைப் பசி. ஏதேனும் எனக்காகப் பொங்கித் தொலைச்சுக்கணும்—காரியம்னாலே வெறுப்பாயிருக்கு.

உள்ளே நுழைஞ்சதும் சமையலறையிலிருந்து வெளிப்பட்டு என்னிடம் ஒரு தம்ளரை நீட்டினார்.

Hot சேமியா பாயஸம், முந்திரிப் பருப்பு முழுசா, குங்குமப்பூ—ஆமாம் மிதந்துண்டு—நெய் சுமா கமாளிக்கறது.

ருசிச்சேன். "H—im—Tops... ரொம்ப தாங்க்ஸ். இன்னிக்கு என்ன விசேஷமோ?"

"ஒரு Celebration. இன்னியோடு 52 வாரம் பூர்த்தி, Not Out..."

எனக்குத் 'திக்'குன்னது. அத்தனை நாள் ஆயிடுத்தா?

"ஒரே நிமிஷத்தில் தேவாமிர்தத்தையே விஷமாக்க உங்களால்தான் முடியும்!" என்றேன்.

'கசப்பது பாயஸம் அல்ல. என் எண்ணமும் அல்ல. ஒருவேளை, உனக்குப் படும் யதார்த்தமோ என்னவோ? உனக்கு அப்படித் தோன்றினால், குடிப்பதோ—தொட்டி முற்றத்தில் கொட்டுவதோ உன் இஷ்டம்தானே!"

கோபமே தெரியாத Matter of fact voice!

இந்த மனுஷனுடன் ரோசம் கட்டுப்படி ஆகாது. ஆனால் கோபம் மட்டும் இருக்கு. ஒரு பக்கம் ருசி பிடிச்சிழுக்கறது. பசியோ பிராணன் போறது. எதிரே குடிக்காமல் எடுத்துண்டு உள்ளே போயிட்டேன்.

**ரவி :**

தாரகராமன் ஸார் ஒரு நேர்த்தியான மனுஷன். நான் சொல்கிறேன்— A Real Son of a Gun—அவர் இல்லாது இப்போ எவ்வளவு கஷ்டமாயிருக்கு. இருந்த

வரை அவர் ஸீனியர், அவரிடம் நான் ஜூனியர் என்றா பழகினோம்? எங்கள்வரை நாங்கள் எப்பவும் Chums தான், இப்போது இருந்தால் தாட்சண்யம் இல்லாமல் நியாயம் சொல்லக்கூடிய மனுஷன் அவர் ஒருத்தர் தான். ஆனால் நானும் வேறு யாரை அறிவேன்?

வரவர என் நெஞ்சுள் தினம் ஒரு கோர்ட் நடக்கிறது. நானே நடத்தும் எதிர்த்தரப்பு வாதத்தில் அவர் குரலைத் தேடுகிறேன்.

"புருஷன், மனைவிக்கு இடையே—**No Thank you D-the Divorce Laws.** ரவி, நீ ஒண்ணு கவனித்திருப்பாய். நான் Divorce Cases எடுத்துக்கறதில்லே. சமாதானமாப் போவையோ வெட்டி மடிவையோ—உங்கள் பாடு! மத்யஸ்தத்துக்குக்கூட என்னிடம் வராதீர்கள், எல்லாமே பரம ஒற்றுமையா அமைஞ்சுடறதா? ராமனுக்கும் சீதைக்குமே ஒற்றுமையில்லே என்கிறேன்...அதற்கு என்ன சொல்லப் போறே?

"அப்படி முழு ஒற்றுமை அமையவும் கூடாது. தராசு ஆடிண்டேயிருக்கணும். அதுதான் வாழ்க்கை. விவாக ரத்து சட்டம் இருக்கிறது என்பதனாலே—அக்கினி சாக்ஷி, அம்மி மிதிக்கறது, அருந்ததி பார்க்கறது எல்லாத்துக்கும் அப்புறம் என்ன அர்த்தம் இருக்கிறது ஐயா? ஒவ்வொன்றாய் போய்க்கொண்டிருக்கிறது என்று சொல்லிக் காட்டுபவர் சொல்லட்டும்...அவர்கள் வழக்கெடுத்துக்கொண்டு இந்த மடிசஞ்சி பிராம்மணனிடம் வர வேண்டாம்!

"கல்யாணம் அவசியம், அத்தியாவசிம்கூட. ஆனால் கல்யாணம் ஒரு ஏற்பாடு. அவ்வளவுதான்! சமுதாயத்தின் சத்திய ஏற்பாடு. **Marriages are not love Heaven So, do not fall in love with your wife.** அதேசமயம் அவளுக்குத் துரோகம் பண்ணாதே. அதுதான் நான் சொல்வேன்.

**There is love**. ஆனால் அது ஒரு சக்தி. அது பலத்தைத் தான் தருமோ அழிக்கத்தான் அழிக்குமோ அறியேன். ஆனால் உறவுக்கு அது ஒத்ததல்ல...''

கோர்ட்டில் வழக்காடும்போதுகூட இதுபோலத்தான் ஒரு மாதிரியா, வெடுக்கு வெடுக்கெனப் பேசுவார், பாலிஷ் இல்லாததுபோல். ஆனால் சட்டத்தில் நிபுணன். **Approach, Argument, Summing up** எல்லாமே ரத்னச் சுருக்கம். இதில் சத்து இவ்வளவுதான். மிச்சம் எல்லாம் சுத்தி வளைச்ச வெட்டிச்பேச்சு என்கிற மாதிரி, **Cut and right** ஆக இருந்ததனாலேயே அவரிடம் கேஸ்கள் குவிஞ்சு கிடந்தன என்று சொல்லும்படியில்லை.

**'Oh I got along!'** அவர் வண்டியும் நன்றாய்த்தான் ஓடிக் ொகாண்டிருந்தது. **Company Law**வில் அவரை மிஞ்சக் கிடையாது.

ஒருநாள்—ஒருநாள் என்ன, எனக்கு அது அந்தநாள், அவர் சேம்பர்ஸில்—

''இன்று மாலை நானும் மாமியும் உன் வீட்டுக்கு வர தாயிருக்கோம். **Oh I know**—நீ முழிக்க வேண்டாம். உன் தாயார் **Invalid**—நீதான் சமைக்கிறாய், அவளுக்கு வேண்டியதையெல்லாம் நீதான் பண்ணுகிறாய் என்று தெரியும். நீ ஒரு சிரமமும் படாதே. நாங்கள் சம்பந்தம் பேச வரோம். இந்தப் பெண் பார்க்கும் படலத்தைக் கட் பண்றேன். நீதான் உமாவைப் பார்த்திருக்கையே?''

பார்த்திருக்கிறேனா!

அடுத்து என் தோள்மேல் கை வைத்துக்கொண்டு கண்சிமிட்டியபடி,

''ரவிச்சந்தர், இது உனக்கும் எனக்கும் இடையே. **They think you are a fine catch. And you are, you know!** உன் தங்கைகளைக் கல்யாணம் பண்ணிக்கொடுத்துட்டே.

கடமைகளைச் செய்துட்டே...உனக்கு இக்கு பிடுங்கல் கிடையாது. ஆனால் உமா ஒரு Tough Assignment. உன் இஷ்டம். நான் கட்டாயப்படுத்தமாட்டேன். Up to you.''

சார் ஒண்ணும் சமஸ்கிருதத்தில் பேசவில்லை, ஆனால் அவர் எச்சரிக்கையை ஏற்கும் நிலையில் நான் இல்லை.

அம்மாவிடம் தெரிவித்ததும் கண்ணீரே விட்டுட்டாள். ''ரவி, நீ பட்ட சோதனைக்கு, அம்பாள் கண் திறந்துட்டாள்டா... இனி நான் நிம்மதியாக கண் மூடுவேன்.''

**In the name of all that is beautiful.** நான், உமாவைப் பார்த்திருக்கிறேன், ஆனால் ஏதோ ஸன்னிதானம் என்கிற முறையில். ஆனால் எனக்குக் கிடைக்க இவ்வளவு அருகே இருக்கிறாள் என்று கனவில்கூட நினைத்திருப்பேனா? **What a jolt!**

சாம்பசிவனும் அவர்களுடன் வந்திருந்தான். அவன் தான் S.K.C. பண்ணினான். ''என்ன மாப்பிள்ளே!'' என்றே அவர்களுக்கெதிரேயே அழைத்துவிட்டான். அவனுக்கு அங்கே அவ்வளவு சுதந்தரம் உண்டு.

சாம்பசிவன் இந்த சமயத்துக்கு விஸ்தாரமாவே நினைப்புக்கு வருகிறான். ஏன்? புரியவில்லை.

''சாம்பசிவன் திறமையெல்லாம் பத்து வருஷத்துக்கு முன்னாடியே போச்சு. இப்போ அவன் சமையலா செய்யறான்? என்னத்தையோ பொங்கிப் போடறான். நாங்களும் தின்று வைக்கிறோம் பழைய வாஸனைகளை ஞாபகப்படுத்திண்டு!''

ஸார் என்ன வேணுமானாலும் சொல்லிக்கட்டும். நான் அங்கு போக நேரிடும்போதெல்லாம், அவன்

கொண்டு வந்து வைக்கும் டிபனும் காப்பியும் A 1. எனக்குத் தேவையும்கூட. இல்லாதவனுக்குத்தான் பசியும் கூடுதலாகக் காண்கிறது.

வீட்டை விட்டுப் பதினைந்து வயதில் ஓடி வந்து ராவுக்கு இவர்கள் வீட்டுத் திண்ணையில் ஒதுங்கினவனை தாரகராமனின் தாயார், முகம் பார்த்து உள்ளே அழைத்துச் சென்று அன்னமிட்டதுடன் அன்று தங்கி னவன்தான்...

(''எங்கேடா போறே?'ன்னா காசிக்காம். காசிக்குப் போற வயசைப் பாரு! நானே இன்னும் போன பாடு இல்லே!''—பெரிய பித்தளைப் பீப்பாய் போல் பாட்டி குலுங்கக் குலுங்கச் சிரிக்க நானே கேட்டிருக்கிறேன்!)

சமையலே பாட்டியிடம்தான் கற்றுக்கொண்டேன். அவனைப் படிக்க வைக்க இவர்கள் எவ்வளவோ முயன்றும் அவனுக்குப் படிப்பு ஏறவில்லை. 'கரண்டி ஆபீஸ் எனக்குப் போதும்' என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டான்.

ஸாருக்கும் அவனுக்கும் பிடிப்பு கூட. ஏறக்குறைய இருவரும் சமவயது.

''என்னை ரொம்ப நாளைக்குப் பேரைச் சொல்லித் தான் அழைத்துக் கொண்டிருந்தான். 'கட்சிக்காரன், பெரிய மனுஷா நாலுபேர் வந்திருக்கிற சமயத்தில் மானத்தை வாங்காதேடா' என்று எல்லாரும் சொல்லிச் சொல்லி ரொம்பக் கஷ்டப்பட்டுத்தான் நாலுபேர் நடுவில் அவன் வாயில் நான் 'ஸார்' ஆக மாறினேன்...ஆனால் அவனை நம்ப முடியாது!''—அவுட்டுச் சிரிப்புச் சிரிப்பார்.

சாம்பசிவன் கல்யாணமே பண்ணிக்கொள்ளவில்லை. அதிலும் இவர்கள் பாச்சா பலிக்கவில்லை.

''அதெல்லாம் எதுக்கம்மா? பெண்டாட்டி வந்துட்டா அப்புறம் என்னைத் தனிக்குடித்தனம் வெச்சுடுவேள்... உங்களையெல்லாம் துறக்கணும். எனக்குக் கொஞ்சற துக்கு குழந்தைகள் வேணும்னா, உங்கள் பையனின் பசங்கள் இருக்கான்களே! இந்த சந்தோஷத்துக்கு கொடுத்து வெச்சிருக்கணும். என்னை ரொம்பக் கெடுபிடி பண்ணினேள்னா, என் காசிப் பயணம் ஒத்திதான் போட்டிருக்கு!' என்று பாதி தமாஷ். பாதி மெய்யாக—

ஒருநாள் நானும் அவனும் தனியாயிருக்கையில் கேட்டடன்: ''ஏன் சாம்பு, நீ பிரம்மசாரியா, கல்யாணம் ஆகாதவனா? உனக்கு செக்ஸ் தேவைப்படவில்லையா?'' நாங்கள் சகஜமாகவே பழகினோம்.

''சொல்லித்தான் ஆகணுமா?'' என்னை ஒருமாதிரி யாகப் பார்த்தான்.

''சொல்லேன், என்ன ஆகிவிடப் போறது?'' ஆனால் அவன் பார்வை அலரிப் போயிருந்தது,

''சரி சொல்றேன். நான் வீட்டை விட்டு ஓடிவந்ததே அதே காரணம்தான். இவாளுக்குக்கூட உண்மை தெரி யாது. உன்னிடம் சொல்றேன்.

நான் இப்போ சொல்ற கட்டத்தில், என் வீட்டில், ஒண்டுக் குடித்தனமா ஒரு ஜோடி வந்தது. குழந்தைக் குட்டியில்லை. மாமிக்கு முப்பது வயசிருக்கும்—வாட்ட சாட்டமாயிருப்பாள்.

ஒரு மத்தியானம் வீட்டில் எங்கள் இருவரைத் தவிர யாருமில்லை.

'சாம்பு, தாயக்கட்டான் ஆடலாமா?

ஆட்ட சுவாரஸ்யம். காய் நகத்தற சிக்கலான யோசனையில் மாமி எழுந்து போனதுகூடத் தெரியல்லே. கதவுத் தாழ்ப்பாள் விழற சத்தம் கேட்டுத் தலை நிமிர்ந்தால்—

சாம்பு கண்களைப் பொத்திக் கொண்டான். அந்தத் தருணம் அவனை இப்போது ஊடுருவுகையில் உடல் பூரா ஒருமுறை அவனுக்குக் குலுங்கிற்று.

''அவள் என்னை அழிச்சாள்; நான் பஸ்மமாப் போனேன்னுதான் சொல்லணும். அந்தக் காரியத்துக்கு, அதுவும் அவளோடு, நான் இன்னும் தயாராகல்லே... என்னவோ அருவருப்பா, அசிங்கமா அந்த 'ஷாக்'தான் மிச்சம். அந்தச் செய்கையில் எனக்கு எந்தப் பங்குமில்லை.

அவளுக்குக் காரியம் முடிஞ்சதும் அவள் ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டே,

'சாம்பு நீ No Good. ஆனால் எனக்கு யாருமே No Good. என் அதிர்ஷ்டம்...சாம்பு, நீ சமத்தாயிருப்பேன்னு நினைக்கறேன். இல்லாட்டா, உன் பாடுதான் கஷ்டம். விவகாரம்னு வந்தால் உன்னை நம்புவாளா? நான் சொல்றதை நம்புவாளா? நீயே யோசனை பண்ணிக்கோ.'

என்னைச் செல்லமாகக் கன்னத்தில் தட்டினாள்.

அப்புறம் எனக்கு வீடே கிலி ஆயிடுத்து. எந்த சமயத்தில் என்ன பண்ணுவாளோ என்கிற பயத்தோடு அங்கே என்னால் வாழ முடியல்லே. வீட்டை விட்டு ஓடி வந்துட்டேன். அன்னி தாயக்கட்டானை ஆயுளுக்கும் என்னால் மறக்க முடியாது. அது தாயக்கட்டானே அல்ல. நான் மாட்டிக்கொண்டு, இன்னமும் வெளியேற முடியாமல் தவிக்கும் சிலந்திவலை! ரவி, நீ இப்போ சொல்லணும்.'' என் கைகளைப் பற்றிக்கொண்டான். ''நான் பிரம்மசாரியா, கல்யாணமாகாதவனா?''

அவன் விழிகளைப் பார்க்க சகிக்கவில்லை. தலை குனிந்தேன்.

தாரகராமன் இறந்து அவன் அதிக நாளில்லை. ஆறு மாதங்களுக்குள் ஒருநாள்—ஒரே நாள் ஜுரம்...நான்தான் கொள்ளி இட்டேன். அப்படித்தான் அவன் கடைசி இஷ்டம். ஆயுளுக்கும் கிளைக்க முடியாதபடி பஸ்பமாகி விட்டவனுக்கு என் கொள்ளி அதிகப்படி. அதனால்தான் அவன் இஷ்டம் அப்படியோ?

* * *

**உமா :**

"ஹல்லோ, உமா ஸ்பீக்கிங்...அங்கே யாரு? ஓ ராதா என்ன விசேஷம்? ஓ! நோ, தாங்க்யூ. Don't feel like it. Not in the mood, sorry, some other time...வெட்சுட்டுமா? Bye; Bye..."

'ஷாப்பிங்காம்...'

I hate shopping.

I hate T.V.

I hate pictures.

I hat myself

above all

I hate you—you...

* * *

எப்போ எங்கள் பாதை பிசகிப் போச்சு? இன்னும் வெளிச்சமாத் தெரியல்லே. எப்படியும் மாமியாரும் ஸ்ரீதரும் இருந்தவரை மேலுக்கு வரல்லே.

மாமியாரின் அந்திம காலத்துலே அவர்தான் எல்லாம் செய்தார். எல்லாம்னா, எல்லாமே...ஆமாம். யாராவது ஒருத்தர் செய்யணும்! அம்மாவுக்குப் பிள்ளை செய்யறார் செஞ்சுட்டுப் போகட்டுமேன்னு நான் எனக்கு சமாதானம் சொல்லிண்டாலும், அம்மாவுக்குப் பணிவிடை விஷயத்

தில் நான் இன்னும் ஆதரவாக இருந்திருக்கலாமோன்னு இப்போ தோண்றது. ஆனால் வியாதியஸ்தாளைக் கவனிக்கறது படு Bore. 'நீ ஒருநாள் படுக்கமாட்டியா... உனக்கு ஒருத்தர் செஞ்சாக வேண்டாமா?' என்கிற கேள்வி எனக்கே தெரியறது. அதென்னவோ சொல்லத் தெரியல்லே.

சொல்லத் தெரியாமல் இல்லை. உன்னையே நீ ஏமாத்திக்கறே... இந்த வயசில் நீ இப்படி சொல்லிண்டால் யாருமே சிரிப்பா. இது என்ன தெரியுமா? பிறரைப் பற்றியே எண்ணம் இல்லாத அப்பட்ட சுயநலம்.

அம்மாவின் கடைசி சமயத்தில் நான் பக்கத்தில் இல்லை. அவர் தான் ஒருவாரமா, அம்மாவின் படுக்கையண்டை விட்டு அசையாமல், அன்ன ஆகாரம்கூட மறந்துட்டு...

தற்செயலா அன்னிக்கு மயிலாப்பூர் போயிட்டேன். ஆமாம்; தினமும்தான் அம்மாவுக்கு அப்படியிருக்கு. அதற்காக காரியங்கள் நின்னுட முடியுமா? அங்கேகூடக் கேட்டா: 'என்னடி இந்த சமயத்தில் நீ அங்கேதானே இருக்கணும்?' நான் ஒன்றும் பதில் பேசல்லே. மறுநாள் காலையே ஆள் வந்துட்டான். வீட்டில் மத்தவாளோடு சேர்ந்துதான் போனேன்.

எனக்குப் பிணம்னாலே பயம். ஆனால் இதை இவா கிட்டகூட என்ன சொல்லிக்க முடியும்...இந்த உண்மைக் காரணத்தை?

* * *

அவர் எதுவுமே என்னைக் கேட்டுக்கல்லெ. அதுவே குத்திப் பிடுங்கறது. பாவி, ரெண்டு அடிவேணும்னா என்னை அடிச்சுடேன்!

* * *

அப்புறம் இந்த ஸ்ரீதர் பண்ணின துரோகத்தை...

பெற்ற ஒரு பிள்ளையும் சம்பாதிக்கறேன்டா ராஜான்னு வாயில்கூட சரியா பேர் நுழையாத வெளி நாட்டுச் சீமைக்குப் போயிட்டான்னா, எனக்கு இருக்கற ஒரு பிடிப்பும் போயிடுத்து. போய் வருஷம், அஞ்சாறது. மாசம் ஒரு கடிதாசு என்னவோ வரது—என் பேருக்குத் தான் வரது, அவரும் என்ன எழுதினான்னு கேக்கல்லெ. அவர் கேக்கல்லே நானும் காண்பிக்கல்லே. அங்கேதான் என்னவோ ஒரு வரட்டு கௌரவம் தடுக்கறது. அவர்தான் கேட்டால் என்ன? அவருக்கு ஆபீஸ் அட்ரெஸ்ஸுக்கு தனியாப் போடறானோ என்னவோ? அப்படி ஒன்றி ரண்டு அவர் என் டேபிள்மேல் வெச்சுட்டுப் போயிருக் கார். என்னிடம் அந்த பரஸ்பரம் இல்லேன்னு தானும் காண்பிக்கறதை நிறுத்திண்டிட்டாரோ என்னவோ? ஆனால் எனக்குத் தெரியும். பிள்ளைக்கும் அப்பாவுக்கும் தான் என்னைக் காட்டிலும் ஒப்புறவு ஜாஸ்தி.

ஆனால் அவருக்கு தனியாக போடுவான்னு தோணல்லே. எனக்கு எழுதறபோதே அப்பா, அம்மா வுக்கு நமஸ்காரம்னு சேர்த்துப் போட்டுடறான். தபால் செலவும் கொஞ்சமாவா இருக்கு? ஸ்ரீதர் இதெல்லாம் பாக்கறவன்தான். ஆள் சுபாவத்திலேயே கெட்டி. ஹூம்.

"நீங்கள் சொல்லக்கூடாதா...இவன் இப்படிக் கரை தாண்டிப் போய்த்தான் ஆகணுமா? நமக்கு இருக்கிறது இவனுக்குப் போதாதா?"ன்னு நான் விக்கி விக்கி அழுத போது இவர், "அவனுக்கு வயசாகல்லியா...நீ இப்போ சொல்றதெல்லாம் ஏற்கெனவே அவனுக்குத் தெரியாதா? நான் தனியா எடுத்துச் சொல்ல மாட்டேன். அவனுக்குத் தோணினதை அவன் செய்யறான். அவன் விதியை அவன் நூற்றுக்கறான், அதுதான் முறை. உனக்கு நான், எனக்கு நீ, மிஞ்சறோமா பாரு...

அப்போது என்னை அணைச்சாற்போல் என் தோள் மேல் அவர் கைப்பட்ட இடத்தைத் தொட்டுப் பார்த்துக்கறேன். பிரயோசனம்...? அது அந்த நாள்.

எந்த நாள்? அதுதான் புரியல்லை. நானா நெனைச்சுக்கற நாளோ?

அது அது அப்படி அப்படி விட்டுப் போச்சுன்னா விட்டுப் பொனதுதான். அப்புறம் ஒட்றதுன்னா சதையோடு சேர்ந்து வளர்றது கிடையாது. கோந்து, Fevicol போட்டு ஒட்டிக்கற சமாசாரம்தான்...அதுதான் பயமாயிருக்கு.

'No sun in life

No fun in life

Life is not for fun, my gal

It may be a big joke

But certainly on fun.'

இதை நான் சொல்லவில்லை. என்னிடம் இந்தபாஷை ஏது?' ஆனால் நள்ளிரவில் விழிப்பு வந்து, இனி தூக்கத்தில் இமைகள் மூடாது எனத் தெரிந்தபின், ஜன்னல் வழி நிலவு மயக்கும் முழுநிழல் அரைஒளி முக்கால் இருள் நிலையில், நிலைக்கண்ணாடியிலிருந்து என் முகம், எனக்கே புது முகமாக—அப்பவும் என்னிடம் சொல்லவில்லை. இவ்வார்த்தைகளைச் சிரிக்கிறது. ஜன்னல் கம்பிகளின் நிழற்கோடுகளே புலியின் வரிக்கோடுகளாக மாறிக் காட்டும் மருள் நேரம்.

ஸ்ரீதர், இந்த நேரத்தில் நீ என்ன பண்ணிக்கொண்டிருப்பாய்? உன் ஊரில் இப்போ பகலா, விடிவேளையா? தனியாயிருக்கே. அம்மாவை நினைக்கிறாயோ? சிகரெட், சிகரெட்—? இந்தப் பழக்கம் எல்லாம் இங்கிருக்கும்போது உனக்கு இல்லை. ஆனால் தனிமையைக் கொல்லும்

சாக்கில் தானே இந்தப் பழக்கம் ஆரம்பிக்குமாமே...? ஆனால் சிகரெட் இப்போ யார் பிடிக்கல்லே? அதைக் கெட்டபழக்கம், பாபம் என்று சொன்ன நாளெல்லாம் போயிடுத்து, அத்தோடு நிக்கறயா...இல்லை. இன்னும் வேறு ஏதானும்?

நானா நெனச்சுக்கறேன், நானே என்னைப் புண் படுத்திக்கறேன். நானே அனாவசியமா அநியாயம் நினைக்கிறேன். எனக்கே தெரியறது. ஆனால் மனசு என்கிறது அதற்குத் துணையுமில்லாமல்—சும்மா இருக்க மாட்டன்கறதேடா... என்னடா செய்வேன், என் மகனே? சுருக்க வந்துடேன்! முடியல்லேடா!

* * *

இன்று பிற்பகல் சுமார் மூணுக்கு பழைய ட்ரங்கை—எதுக்குன்னுகூட மறந்துபோச்சு. இப்போ கொஞ்ச நாளா அடிக்கடி Current Off-னு மெழுகுவத்திக்கா...? கொசு உபத்ரவம் பொறுக்காமல் டார்ட்டாய்ஸ் பாக்கெட்டுக்கோ?வேலைக்காரிக்குப் பழம்புடைவைக்கா? இல்லை. அது அது அப்பப்போ அகப்படறப்போ எல்லாத் தூக்குமேவா? ட்ரங்கைக் குடையறப்போ. ஒரு ப்ளாஸ்டிக் தம்ளரில் பித்தளைத் தாயக்கட்டை ஒரு ஜோடி, சோழி, புளியங்கொட்டை, ஒரு சாக்பீஸ் உள்பட...இது இங்கே எப்படி வந்தது? அம்மாவின் வேலையாத்தான் இருக்கும்.

மாகாளிக்கிழங்கு ஊறுகாயோடு Biz பவுடர்! வடாத்துடன், கருவேலம் பட்டைப்பொடி! (இங்கே தேய்க்கறது பேஸ்ட். ஆனால் அது பற்றி அவளுக்குக் கவலையில்லை.) விளக்குக்குப் பஞ்சுத் திரிக்கட்டு, இதுமாதிரி அப்பப்போ அனுப்புற சீரோடு இதுவும் வந்து இங்கு அடைச்சிருப்பேன்.

வாசற்கதவு Bell சத்தம் கேட்டுப்போய்த் திறந்தால் இவர் நிக்கறார். ஆனால்... 'இதென்ன கூத்து?' ஆச்சரியத்தில் பின்னடைந்தேன்.

அம்முகத்தில், லேசாக லஜ்ஜையின் திட்டு, நான் கதவைத் திறந்திருந்த இடைவெளிக்குள் உடம்பை இடுக்கிக்கொண்டு உள்ளே வந்தார். "கையில் என்ன? ஆ, **How Strange!** ஒரு ஆட்டம் போடுவோமா?"

"இது எந்த சாமிக்கு வேண்டுதலை? எந்தக் காரிய சித்திக்குக் காணிக்கை? ஸ்னானம் ஆச்சா, இனிமேல் தானா?"

எனக்கு ஒரு பக்கம் சிரிப்பு; கூடவே வெறுப்பு. இதென்ன கோணங்கித்தனம்? ஆனால் ஆசாமி இடிச்ச புளி, ஏதோ காரணம் இருக்கணும்.

"ஸ்னானம் பண்ணலாம். ஆனால் முன்னால் ஒரு தாயக்கட்டான் போடலாம்..."

"அதுக்கென்ன அவசரம்? ஸ்னானம் கூடப் பண்ணாமல்?"

என்மேல் படாது; என் கை தம்ளரைப் பிடுங்கிக் கொண்டு, உடனே தாழ்வாரத்தில் உட்கார்ந்து கட்டானை வரைய ஆரம்பித்துவிட்டார். நானும் எதிரே உட்கார்ந்தேன். திடீரென இவரிடம் ஒரு ஈர்ப்புசக்தியை உணர்ந்தேன்.

"உன் கையில் தாயக்கட்டையைப் பார்த்தவுடன் என் தலையையும், நம் தலைவிதியையும் இணைத்த ஏதோ ஒரு சேதியை—நம்மை மீறிய சக்திகள் அனுப்பியிருக்கும் சேதியைப் படிக்கிறேன்—"

கேலியில் என் கீழ் உதடு சுருண்டது; "என்னைச் சினிமாப் பித்துனு கேலி செய்வதில் குறைச்சலில்லே. ஆனால் எனக்குக்கூட இப்படி ஒரு சினிமா டயலாக் தோணாது!"

"Perhaps So...வாழ்க்கையில் சில நெருக்கடி கட்டங்கள் நேர்கையில், வேஷங்கள் உரிந்து அந்த சமயம் நிர்வாணம் ஆகும்போது, அது Unreai ஆக Melodramatic ஆகப்படத்தான் செய்கிறது. அப்படிப்பட்ட ஒரு கட்டத்துக்கு நாம் வந்திருக்கிறோம், கொஞ்ச நாட்களாகவே—உனக்குத் தெரியவில்லையா?"

குரலில் ஓர் அசாதாரண நிதானம். அமைதி வாயடைத்துபோனேன்.

"என்றேனும் ஒருநாள் நாம் இந்த வேளையை நேருக்கு நேர் சந்தித்துத்தானே ஆக வேண்டும்...? வேளை வந்துவிட்டது."

எனக்கு உடம்பு பூரா 'ஜில்.' This Man Means Business இந்த மனிதன் திடீரென அன்னியனாகிவிட்டான். நடுக்கூடத்தில் உட்கார்ந்திருக்கையிலேயே, ஏதோ ஒரு வகையில் மேல்கூரையைப் பிரிக்கிறான்...இந்த மனிதன் அஞ்சத் தக்கவனாகிவிட்டான்.

அஞ்சுகையிலேயே மனம் ஏதோ ஒரு விடுதலையில் துள்ளிற்று. என் உண்மையைச் சந்திக்கப் போகிறேன். காத்திருந்த இத்தனை நாட்களும் ஒரு வழியா பின்னால் போச்சு...அப்பாடா! உங்கள் பயமுறுத்தல் இப்பவோடு சரி.

"Yes உமா... இந்தப் பொய்மையைக் கலைச்சாகணும். நாம் விவரங்களுக்குள் போய் அலசிக்கொண்டு ஒருவரையொருவர் குற்றம் சொல்லிக்கொண்டு, ஒருவரையொருவர் இன்னமும் ரணமாக்கிக் கொண்டிருக்க வேண்டாம். கட்டம் முற்றிப்போச்சு. நாம் கணவன்—மனைவியாக வாழவில்லை. ஒருவரையொருவர் பலப் பரீட்சையில் இறங்கிவிட்டோம். இது கணவன் மனைவி

யிடையே வரக்கூடாது. ஆனால் வந்துவிட்டது. யார் மேல் தப்போ யார் மேலானும் இருந்து விட்டுப் போகட்டும். ஆனால் வந்துவிட்டபின் பரீட்சை நடநதே ஆகணும். நடக்கட்டும். இதற்கு ஒரு முடிவு கண்டா கணும். அதற்காகத்தான் இப்போ சொக்கட்டான் ஆடப் போகிறோம், பணயத்துக்கு''

''பணயமா?''—ஆச்சரியத்தில் நிமிர்ந்தேன்.

''Yes.''

''அஞ்சு பைசா, பத்து பைசா?''

''ஏன், அதைவிடப் பெரிதாக உன்னால் நினைக்க முடியல்லையா?''

''ரூபாய்.''

புன்னகை புரிந்தார்.

''பெரிய ரூபாய்க்கு நான் எங்கே போவது? என் நகைகளைக் கேக்கறேளா?''

பெருமூச்செறிந்தார். ''ஆட்டத்தைத் துவங்குவோம். முடிந்து, கெலிப்பு தோற்பு நிச்சயமான பின் சொல் கிறேன்.''

''நலமே. Childish.''

''அதென்ன அவ்வளவு சுலபமாகச் சொல்லிட்டே?'' கட்டானின் நடுக்கோடுகளையும் மலைகளையும் பட்டை தீட்டிக்கொண்டு அதைத் தெளிவாக்குவதில் அவர் கவனம் ஆழ்ந்து—

அந்த நெற்றியில் அகலமும் கறுகறு புருவங்களும், புருவமத்தியில் ஒரு வடு—செதுக்கினாற்போன்ற அந்த வாயும்—இப்பத்தான் பளிச்செனத் தெரியறது. Mr. G. ரவிச்சந்திரன், You are a Handsome Man...

"இந்த விளையாட்டின் பரம்பரை வேதகாலத்தையே அல்லவா தொடறது! பரமேஸ்வரனும் பார்வதியுமே கைலாசத்தில் ஆடினதாக ஐதீகம் பேசறது. பாரதக் கதை யின் அச்சே, இந்தச் சொக்கட்டான் ஆட்டத்தில்தானே சுழல்கிறது! பொறுக்கவா? கோர்க்கவா?" சினிமாப் பிரியர்களின் Favourite moment அல்லவா? Enough-முதல் ஆட்டம் சாமிக்கு..." கட்டை உள்ளங்கைகளில் பரபர வென்று தேய்த்து உருட்டினார். பன்னிரண்டு—இரண் டுக்கும் Blank Side. Facelesa. சுவாமி ஆட்டம் Correct. இப்போ நீ?"

"ஆடினேன். ஆடிவிட்டுக் கை கொட்டினேன்.

"எடுத்தவுடனேயே தாயமா? Beginner's Luck!"

எடுத்து ஆடினேன். மறுபடியும் தாயம்.

"Good Good! தாயம் என்கிறது லேசான சமாச் சாரமா? தாயமோ தலைவிதியோ..."

"இதுக்கென்ன அவ்வளவு பெரிய வார்த்தை!?"

"Why not? ஒவ்வொரு தாயமும் காய்க்கு ஒரு பிறவி. Then the Excitement! அடுத்து விழப்போகும் தொகையின் மர்மம் கட்டைக்குள் அடக்கம். No wonder, it is the Game of Life itself. மறுபடியும் தாயமா? So your luck holds on?"

எனக்கு மூன்று காய்கள் இறங்கிய பின்னர்தான் அவருக்கு முதல் தாயமே விழுந்தது. அப்புறம் நேரம் பொறுத்துக் கட்டைகளுக்கு மனமே இல்லாதுபோல் இன் னொரு தாயம். ஆனால் அவர் காய் இறங்கி வெளி வந்ததும் என் காய் காத்துக்கொண்டிருந்தது. பன்னி ரண்டு, ரெண்டு, இரண்டுக்கு வெட்டி, பன்னிரண்டுக்கு முதல் பழம் ஏறினேன்.

அவருக்கு அடுத்த ஆட்டத்திலேயே இரண்டு தாயங்களும், ஒரு மூச்சில் சொல்லி அடங்காத மாதிரி நீண்ட தொகையும்—

எனக்கு ஆட்டத்தில் சூடும், ரோஷமும் பிடித்து விட்டன. கட்டைகளை வீசிப் போட்டேன். நெருக்கிப் போட்டேன். அவர் காய்களை என் காய்கள் வெட்டின. வீழ்த்தின. துரத்தின, மடக்கின, தப்பின...pincer moves.

எதிர்க்காய்களை வெட்டும் ஒவ்வொரு சமயமும் என்னுள் ஒரு குரூர மகிழ்ச்சி பொங்கிற்று. இத்தனை நாட்கள் என்னுள் அடக்கி வைத்திருந்த ஆத்திரம் வடிகால் கண்டது. இந்த மனுஷனை ஒரு பழம்கூட ஏற விடக்கூடாது. முழுக்கப் பழிவாங்கணும். அப்போத்தான் எனக்குக் கூந்தல் முடிச்சமாதிரி. ஆனால் அப்படி இவன் உனக்கு என்ன தீங்கு செய்தான். I don't know. I don't care... இவனுடைய ஆணவத்தை பூரா அழித்தாகணும்... கட்டைகளும் என் பங்கில் இருந்தன

The hunter and the prey. ஒன்றையொன்று ஒன்றுக்கொன்று எது எந்த சமயத்தில் இடமாற்றம்? இதுதான் த்ரில். என்னை வெறி பிடித்துக்கொண்டது. பலப் பரீட்சையாம்! உங்கள் இஷ்டப்படியே, உங்கள் நிபந்தனைப்படியே. You are having it.

என் கடைசிக் காயைப் பழமெடுத்து தாயக்கட்டைகளை வீசி எறிந்தேன்.

''ஐயா, ஆட்டம் இழந்தவரே, இப்போது என்ன சொல்கிறீர்கள்? உம்முடைய பணயத்தைக் கக்கும்!''

''உள்ளே போய்க் குத்துவிளக்கை ஏற்றிக்கொண்டு வா!''—குரல் வெகு அமைதி.

''படம் தொடர்கிறதா.''

''இல்லை, விளக்கேற்ற நேரமாகிவிட்டதே!''

ஆம்! இப்போத்தான் எனக்குத் தெரிந்தது. இத்தனை நேரமாகி விட்டதா? விளக்கை ஏற்றிக்கொண்டு வந்தேன்.

''தாயக்கட்டானின் நடு மலையில் வை.''

சொன்னபடி.

எழுந்து நின்றார். திடீர்னு என்ன உயரம்?

''உமா, இந்த வீடு—வாசல்—இதில் அடங்கிய சகல சொத்துக்கள் மேலும் என் சுய சம்பாதனையில் வாங்கிப் போட்டிருக்கும் நிலபுலன், என் பாங்க் பாஸ்புக், எல்லாமே உனக்குச் சொந்தம்... என்றுமே இவை உன்னுடையவைதான். நம் உறவு சகஜமாக இருந்தால் நம்முடையது என்கிற முறையில் இருந்திருக்கும். ஆனால் இப்போதிலிருந்து எல்லாம் உனக்கு மட்டுமே சொந்தம். இவைமேல் எனக்கு இனி எந்த உரிமையும் இல்லே...'' என்பதற்கு அடையாளமாக தன் மழித்த தலையைத் தடவிக்கொண்டார். ''இந்த நிமிஷத்திலிருந்து, நான் இன்னும் இங்கு நின்றுகொண்டிருப்பது உன் தயவு, உன்னிடம் கேட்காத அனுமதி...''

''அப்படின்னா? எனக்கு ஒண்ணும் புரியல்லியே?'' உண்மையிலேயே திகைப்பாயிருந்தது.

உள்ளங்கைகளை விரித்தார்.

''I am going away... பலப்பரீக்ஷை முடிந்தது.''

—வார்த்தைகளின் கனம் அந்தக் குரலின் அழுத்தத்தில், என்னுள் அமிழ்கையில், அர்த்தம் தோய்கையில், என் முழங்கால்கள் என் கீழ் இற்றன. காலடியில் பூமி வாய் திறந்தது.

''No! No!! No!!!'' என்னுள் கற்கள் இடிந்து அகளுடன் நான் சரிந்து அவர் முழங்கால்களைக் கட்டிக் கொண்டேன்.

"எனக்கு நீங்க வேணும்! நீங்கள் வேணும்!! நீங்கள் தான் வேணும்!!!"

—அடிவயிற்றிலிருந்து இந்தக் கதறல், மடையுடைந்த இந்தக் கண்ணீர்ப் பெருக்கு, அதில் என் குளிப்பு... தினம் என்னளவாய் இத்தனை நாட்களாகக் கல்லாய்க் கனத்து விட்ட என் இதய பாரம் இந்தக் கண்ணீர் ஸ்னானத்தில் அதன் கரையல் அம்மாடி—இதுவரை எதற்கேனும் அழுத தாகவே எனக்கு நினைவில்லே... எல்லாமே புதுமை. அழுகை இத்தனை மகத்தான அனுபவமா?

கன்னத்தில் கண்ணீர் புரண்ட வண்ணம் அவரை அண்ணாந்து நோக்கினேன்.

பனிப்படலத்தில் தெளிவு மங்கிய மலைச்சாரல்போல் ஏதோ வகையில் முடிவற்றவனாய் பயமாயிருந்தான். ஆனால் நான் மலையின் அடிவாரத்தில் இருந்தேன். அதுவேதான் என் தைரியம்! என் உண்மை இவரன்றி வேறு எது?

குத்துவிளக்கின் வெளிச்சத்தில்—

தாயக்கட்டைகள் விழுந்திருந்த நிலையில்,

தாயம்—

கண் சிமிட்டிற்றோ?

# பாற்கடல்

நமஸ்காரம், க்ஷேமம். க்ஷேமத்திற்கு எழுத வேணு மாய்க் கேட்டுக்கொள்கிறேன். நீங்களோ எனக்குக் கடிதம் எழுதப் போவதில்லை. உங்களுக்கே அந்த எண்ணமே இருக்கிறதோ இல்லையோ? இங்கே இருக்கும்போதே, வாய் கொப்புளிக்க, செம்பில் ஜலத்தை என் கையிலிருந்து வாங்க, சுற்றும் முற்றும் திருட்டுப் பார்வை, ஆயிரம் நாணல் கோணல். நீங்களா கட்டின மனைவிக்கு கடிதம் எழுதப்போகிறீர்கள்? அதனால் நானே முந்திக்கொண்ட தாகவே இருக்கட்டும். அகமுடையான் உங்கள் மாதிரி யிருந்தால்தானே. என் மாதிரி பெண்டாட்டிக்குப் புக்க கத்தில் கெட்ட பேரை நீங்களே வாங்கி வைக்க முடியும்? 'அவள் என்ன படிச்ச பெண், படிச்ச படிப்பு எல்லாம் வீணாய்ப் போகலாமா? ஆம்படையானுக்குக் கடிதாசு எழுதிக்கறாள்!' என்று வீட்டுப் பழைய பெரியவாள், புதுப் பெரியவாள் எல்லாம் என் கன்னத்திலிடிக்காமல், தன் கன்னத்திலேயே இடித்துக்கொண்டு, ஏளனம் பண்ண லாம்! பண்ணினால் பண்ணட்டும், பண்ணட்டும்; நான் எழுதியாச்சு. எழுதினது எழுதினதுதான். எழுதினதை நீங்கள், தலை தீபாவளியுமதுவுமாய், அவ்வளவு தூரத்தி லிருக்கிறவர், படித்தது படித்ததுதான். எழுதினதைப் படித்தபின், எழுதினவாளும், படித்தவாளும் குற்றத்தில் ஒண்ணுதானே? வேறு எதிலும் ஒற்றுமையிருக்கிறதோ இல்லையோ?

இதென்ன முதல் கடிதமே முகத்தில் அறையற மாதிரி ஆரம்பிக்கிறது என்று தோன்றுகிறதோன்னோ? சரி, நான் அசடு, போங்கோளேன்; திருப்திதானே? நான் வெகுளி, எனக்கு மனசில் ஒண்ணும் வைத்துக்கொள்ளத் தெரியாது. அப்பாகூட அடிச்சுப்பார்: "ஜகதா கிட்டே யாரும் அசதி மறதியாக்கூட ஒரு ரகஸ்யத்தைச் சொல்லிடாதேயுங்கள். ஒருத்தர்கிட்டேயும் சொல்லக் கூடாது என்றால் ஒரு கடிதாசுத் துண்டிலாவது அதை எழுதி எறிந்துவிடுவாள். இல்லாவிடில் அவளுக்கு மண்டை வெடித்துவிடும். ஜகதா அவ்வளவு ஆபத்தான மனுஷி." ஆமாம், அப்படித்தான் வைத்துக்கொள்ளுங்கள், நான் பின் யாரிடத்தில் சொல்லிக்கொள்வது. தலை தீபாவளிக்கு என் கணவர் என்னுடன் இல்லாத கஷ்டத்தை? என் அப்பா அம்மாவுக்கு எழுதலாமா? எழுதினால், புக்காத்து விஷயங்களைப் பிறந்த வீட்டுக்கு விட்டுக் கொடுத்தேன் என்கிற பொல்லாப்பைக் கட்டிக்கவா? நான் அசடாயிருக்கலாம்; ஆனால் அவ்வளவு அசடு இல்லை. அப்புறம் எனக்கு யாரிருக்கா; நீங்களே சொல்லுங்களேன்!

தீபாவளிக்கு இரண்டு நாளைக்கு முன்னால் அம்மா வந்திருந்தாள், ஆசையா பெண்ணையும் மாப்பிள்ளையையும் தலை தீபாவளிக்கு அழைத்துப் போகணும் என்று. நீங்கள் ஊரில் இல்லை, இருக்கவும் மாட்டேள் என்று தெரிந்ததும் அவள் முகம் விழுந்ததைப் பார்க்கணுமே, எடுத்து மறுபடியும் சேர்த்து ஒட்ட வைக்கிற தினுசாய்த் தானிருந்தது.

"சரி, மாப்பிள்ளைதான் இல்லை. ஜகதாவைக் கூட்டிக்கொண்டு போகிறேனே! நாங்களும் பிரிஞ்சு கொஞ்ச நாளாச்சு. உங்களிஷ்டப்படி கல்யாணமாகி நாலாம் நாள் கிருஹப் பிரவேசத்துக்கு விட்டதுதானே!" என்று சொல்லிப் பார்த்தாள்.

ஆனால் அம்மா (உங்கள் அம்மா—இப்போ எனக்கு இரண்டு அம்மான்னா ஆயிட்டா!) ஓரக் கண்ணால் என்னைப் பார்த்துண்டே, ''என் பிள்ளை எப்போ அங்கே வர முடியல்லியோ உங்கள் பெண் இங்கேயே நாலு பேரோடு ஸல்லோ புல்லோன்னு இருந்துட்டுப்போறாள்! இனிமேல் எங்கள் பெண்ணும்தானே! அப்புறம் உங்களிஷ்டம். அவளிஷ்டம். இங்கே ஒருத்தரும் கையைப் பிடிக்கிறதாயில்லே!'' என்றார்.

இதென்ன கன்றுக்குட்டிக்கு வாய்ப்பூட்டைப் போட்டுப் பாலூட்டற சமாசாரமா? என்னை அம்மா ஆழம் பார்க்கிறது தெரியாதா, என்ன? நான் ஒண்ணும் அவ்வளவு அசடு இல்லை. இந்த வீட்டிலேயே யார் பளிச்சுனு பேசறா? இங்கேதான் பேசினதுக்குப் பேசின அர்த்தம் கிடையாதே! எனக்குத் திடீர்னு சபலம் அடிச்சுண்டது, என் கையொட்டின தம்பி சீனுவைப் பார்க்கணும்னு. ஒரு நிமிஷம் என்னைப் பிரிஞ்சு இருந்ததில்லை. காலையில் கையலம்பி நனைஞ்ச சட்டையை மாத்தறதிலிருந்து, ராத்திரி தொட்டிலில் அவன் படுக்கையை விரிக்கிற வரைக்கும் அக்காதான் எல்லாம் பண்ணியாகணும். இப்போ குழந்தை என்ன பண்றானோ? ஆனால் நான் இங்கேயே இருக்கேன்னு சொல்லிவிட்டேன். அம்மா கண் தளும்பிற்று. அம்மா பேசாமே போயிட்டாள். நான் கொஞ்ச நாழி திக்பிரமை பிடிச்சு நின்றேன். அம்மா குஞ்சிரிப்புடன் என்னை ஒரு நிமிஷம் ஆழ்ந்து நோக்கி விட்டுக் காரியத்தைப் பார்க்கப் போயிட்டார். அவருக்கு உள்ளூற சந்தோஷம். எனக்குத் தெரியும், நான் பரீக்ஷையில் ஜெயித்துவிட்டேன் என்று. என்ன பரீக்ஷை? பெண்ணாய்ப் பிறந்தபின் ஸ்வதந்திரம் ஏது என்கிறது தான்.

ஆமாம்; நான் கேட்கிறேன்—இதென்ன உத்தியோகம். ஒரு நாள் கிழமைக்குக்கூட பெற்றவர் உற்றவர்கூட

இல்லாமல்படிக்கு? என்னதான் 'காம்'பில் கிளம்பிப் போனாலும் சமயத்துக்கு லீவு வாங்கிக்கொண்டு திரும்பி வர முடியாதா?

ஆனால் எனக்கே தெரிகிறது; பெண்கள் என்ன, புருஷர்களுக்குந்தான், என்ன சுதந்திரம் இருக்கிறது? எங்களுக்கு வீடு என்றால் உங்களுக்கு உத்தியோகம் பார்க்கப் போனால் யார்தான் விடுதலையாயிருக்கிறார்கள்? எல்லோரும் சேர்ந்து ஒரு பெரும் சிறையிலிருக்கிறோமே, இந்த உலகத்தில்! பணக்காரன் தங்கக் கூண்டில். இந்த இரண்டு ஸ்திதியிலுமில்லாமல் நம்மைப்போல் இருக்கிறவர்கள் இதிலுமில்லை; அதிலுமில்லை; காலை ஊன்றக் கூட ஆதாரமில்லாமல், அந்தரத்தில் தவித்துக்கொண்டிருக்கிறோம். இல்லாவிடில் இந்தச் சமயத்தில் நாம் பிரிந்து நீங்கள் எங்கேயோ இருப்பானேன்? நான் ஏங்கி உருகித் தபித்துக்கொண்டு! உத்தியோகத்தை உதறிவிட்டு ஓடி வந்துவிட முடிகிறதா? நான் ஒண்ணும் அவ்வளவு அசடு இல்லை. மனஸு வெச்சேன்னா எல்லாம் எனக்குத் தெரியும். இப்போ மனஸு வெச்சிருக்கேன்!

ஆனால் அதற்காக என்னோடு பேசக்கூடாது என்று இருந்ததா? போகிற சமயத்தில் என்னிடம் வந்து, ''ஜகதா, நான் போயிட்டு வரட்டுமா?'' என்று என்னிடம் ஒரு வார்த்தை சொல்லிக்கொண்டு போனால், தலையைச் சீவிவிடுவார்களா? அதையும்தான் பார்த்துவிடுகிறது; என்ன ஆகிவிடும்? சாந்தியைத் தைக்குத் தள்ளிப்போட்டு விட்டாலும் வாய் வார்த்தைகூட பேசிக்கக்கூடாது என்றால் பிள்ளைகள் கலியாணம் பண்ணிக்கொள்வானேன்? இந்த வீடே வேடிக்கையாய்த்தானிருக்கிறது. நீங்கள் எல்லாம் இப்படியிருக்கிறதால்தானே நாங்கள் எல்லாம் வெட்கம் கெட்டவர்களாகி விடுகிறோம்!

ஆனால் அம்மாவே சொல்லியிருக்கிறாள். கூட்டுக் குடித்தனம் என்றால் அப்படித்தானிருக்கும் என்று. அவளும் சம்சாரி வீட்டில்தான் வாழ்க்கைப் பட்டாளாம். இடம் போதாத வீட்டில் நாலு ஜோடிகள் வாசம் பண்ணுமானால் என்ன பண்றது? வீட்டுக்கு விருந்தாளி வந்தூட்டால் கேட்கவே வேண்டாம். திடீர்னு ஒரு ஜோடியின் ஒரு படுக்கை தானாகவே திண்ணையில் வந்து விழுந்து விடுமாம். சீட்டைப் போட்டுக் குலுக்கினாற் போல் யார் படுக்கை என்று போட்ட பிறகுதான் தெரியுமாம். சொல்லவும் முடியாது, மெல்லவும் முடியாது; திருடனுக்குத் தேள் கொட்டின மாதிரி வாயை மூடிண்டிருக்க வேண்டியதுதான். அம்மா சொல்றப்போ எனக்கு சிரிப்பாய் வரும், இந்தச் சம்பந்தம் பண்ணுவதற்கு முன்னால் அப்பாகூடச் சொன்னார்: "இதென்னடி, இது அவ்வளவு உசிதமோ? ஒரே சம்சார வீடாயிருக்கிறது. பையன் நாலுபேருக்கு நடுவில் நாலாமவனாயிருக்கிறான். இன்னும் கலியாணத்துக்கு ஒன்று இரண்டு பெண்கள் காத்திருக்கிறாப் போலிருக்கிறது."

"இருக்கட்டும், இருக்கட்டும், நிறையக் குடித்தனமாயிருந்து நிறையப் பெருகட்டும். நாளாவட்டத்தில் இதுதான் நம் பெண்ணுக்கு நல்லதா விளையும், பாருங்கோ. இப்போ நமக்கு என்ன குறைஞ்சு போச்சு? எடுத்தவுடனே இக்கு பிடுங்கல் இல்லாமல், கையை கோத்துண்டு போனவாளெல்லாம் கடைசியில், உலகம் தெரியாமல். எது நிலைச்சுது தெரியாமல், நாயும் பூனையுமா நாறிண்டிருக்கிறதை நான் பார்த்துண்டுதானே இருக்கேன்! பையன் நல்லவேளையா நாலாம் பிள்ளையாத்தானே இருக்கான்? என் மாதிரி, என் பெண், வீட்டுக்கு மூத்த நாட்டுப்பெண்ணாய் வாழ்க்கைப்பட வேண்டாமே?"

அம்மா அப்படிச் சொல்றப்போ நன்னாத்தானிருக்கு; நாவலில் கதாநாயகியாயிருக்க யார்தான் ஆசைப்பட

மாட்டார்கள்? ஆனால் தனக்கென்று வரப்போத்தானே தெரியறது? நிஜம்மா நீங்கள் அன்றைக்கு ஆதரவாய் எனக்கு ஒரு வார்த்தைகூட இல்லாமல் வண்டியிலேறிப் போயிட்ட பிறகு, எனக்கு அழுகையா வந்துவிட்டது. என் நெஞ்சின் பாரத்தை யாரிடம் கொட்டிக்கொள்வேன்? எல்லாரும் எனக்குப் புதிசு, வாயில் முன்றானை நுனியை அடைச்சுண்டு கிணற்றடிக்கு ஓடிப்போயிட்டேன்.

எத்தனை நாழி அங்கேயே உட்கார்ந்திருந்தேனோ அறியேன்.

"என்னடி குட்டீ, என்ன பண்றே?"

எனக்குத் தூக்கிப் போட்டது. அம்மா எதிரே நின்னுண்டிருந்தாள். உங்கம்மா செக்கச்செவேல் என்று நெற்றியில் பதக்கம் மாதிரி குங்குமமிட்டுக்கொண்டு கொழ கொழன்னு பசுப்போல் ஓரொரு சமயம் எவ்வளவு அழகாயிருக்கிறார்!

"ஒண்ணுமில்லையே அம்மா!" என்று அவசரமாய்க் கண்ணைத் துடைத்துக்கொண்டேன். ஆனால் மூக்கை உறிஞ்சாமல் இருக்க முடியவில்லை.

"அடாடா! கடுஞ் ஜலதோஷம். மூக்கையும் கண்ணையும் கொட்டறதா? ராத்திரி மோர் சேர்த்துக்காதே." (கபடும் கருணையும் கண்ணில் கூடி அம்மா கண்ணைச் சிமிட்டும்போது, அதுவும் ஒரு அழகாய்த்தானிருக்கிறது!) "என்னவோ அம்மா, புதுப் பெண்ணாயிருக்கே; உன் உடம்பு எங்களுக்குப் பிடிபடற வரைக்கும், உடம்பை ஜாக்கிரதையாப் பார்த்துக்கோ— அட; குட்டி இதென்ன இங்கே பாருடீ!"

அம்மா ஆச்சரியத்துடன் கிணற்றுள் எட்டிப் பார்த்தார். அவசரமாய் நானும் எழுந்து என்னென்று பார்த்தேன்; ஆனால் எனக்கு ஒன்றும் தெரியவில்லை.

"ஏ குட்டி, எனக்குத்தான் கண்சதை மறைக்கிறதா? கிணற்றில் ஜலம் இருக்கா?"

"இருக்கிறதே!"

"குறைஞ்சிருக்கா?"

"இல்லையே, நிறைய இருக்கே!"

"இருக்கோன்னோ? அதான் கேட்டேன்; அதான் சொல்ல வந்தேன், கிணற்று ஜலத்தை சமுத்திரம் அடித்துக்கொண்டு போக முடியாதுன்னு! நேரமாச்சு. சுவாமி பிறையின் கீழ் கோலத்தைப் போடு—" என்று குஞ்சிரிப்புடன் சொல்லிக்கொண்டே போய்விட்டார்.

நான் கிணற்றடியிலேயே இன்னும் சற்று நேரம் நின்றிருந்தேன். நெஞ்சில் சின்னதாய் அகல் விளக்கை ஏற்றி வெச்ச மாதிரியிருந்தது. மேலே மரத்தில்'ருந்து பவழமல்லி உதிர்ந்து கிணற்றுள் விழுந்து கொண்டிருந்தது. தும்பையறுத்துக்கொண்டு கன்றுக்குட்டி முகத்தை என் கையில் தேய்த்துக் கொண்டிருந்தது.

இந்த வீட்டில் யார்தான் பளிச்சென்று பேசுகிறார்கள்? வெளிச்சம் எல்லாம் பேச்சில் இல்லை. அதைத் தாண்டி அதனுள்தான் இருக்கிறது.

ஆனால் ஊமைக்கு மாத்திரம் உணர்ச்சி யில்லையா? அவர்களுக்குத்தான் அதிகம் என்று சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆனால் நீங்கள் அசல் ஊமையில்லையே, ஊமை மாதிரிதானே! எனக்கு 'ரெஸ்பெக்டே' இல்லையோன்னோ? ஆமாம், அப்படித்தான் போங்கோ!! நான் உங்களுக்கு இப்போ கடிதம் எழுதவில்லை. உங்களுடன் கடிதத்தில் பேசிக் கொண்டிருக்கிறேன். இல்லை. கடிதாசியில் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். என் யோசனை என்னுடையது. அதை யாராலும் தடுக்க முடியாது.

என்னாலேயே தடுக்க முடியாதே, நான் என்ன செய்வேன்? நான்தான் அப்படிச் சொல்லிவிட்டேனே, என் நெஞ்சிலிருக்கிறதை அப்படியே கொட்டிவிடுவேன் என்று!

எனக்கு மாத்திரம் தெரியாதா, நீங்கள் நெஞ்சில் முள் மாட்டிண்ட மாதிரி, கண்டத்தை முழுங்கிண்டு, முகம் நெருப்பாய்க் காய, வாசலுக்கும் உள்ளுக்குமா அலைஞ்சது? அப்போ உங்களுக்கு மாத்திரம் என்னோடு பேச ஆசையில்லை என்று நான் சொல்ல முடியுமா? அதை நினைத்தால்தான் எனக்குத் துக்கம் இப்போகூட நெஞ்சை அடைக்கிறது. என்ன பேச வேண்டும் என்று நினைத்தீர்களோ? அதைக் கேட்கும் பாக்கியம் எனக்கு இல்லை. இதற்கு முன்னால் நீங்கள் யாரோ, நான் யாரோ? பரதேசிக் கோலத்தில் படி தாண்டி உள்வந்து நீங்கள் என் கை பிடித்ததும் ஜன்மேதி ஜன்மங்கள் காத்திருந்த காரியம் நிறைவேறிவிட்டாற்போல் எனக்குத் தோன்றுவானேன்?

அப்படிக் காத்திருந்த பொருள் கைக்கூடிய பின்னரும், இன்னமும் காத்திருக்கும் பொருளாவே இருப்பானேன்? இன்னமும் ஜன்மங்களின் காரியம் நிறைவேறவில்லையா? இப்பொழுது நெருப்பு என்றால் வாய் வெந்துபோய் விடாது. தாலி கட்டின வீட்டில் அடித்து விழுகிறாயே என்று கேட்காதேயுங்கள். இப்போ நான் சொல்லப் போவதைத் தைரியமாகத்தான் சொல்லவேணும். நீங்கள் எங்கேயோ 'காம்ப்' என்று தூரதேசம் போய் விட்டீர்கள். இந்த நிமிஷம் எந்த ஊரில், எந்த ஹோட்டலில், சத்திரத்தில், எந்தக் கூரையை அண்ணாந்து பார்த்தபடி என்ன யோசனை பண்ணுகிறீர்களோ? நானும் புழுங்கிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் திரும்பி வருவதற்குள் எனக்கு எதுவும் நேராது என்று என்ன நிச்சயம்? நினைக்கக்கூட நெஞ்சு கூசினாலும், நினைக்கதான் செய்கிறது. உங்களைப் பற்றியும் அப்படித்தானே? அந்தந்த நாள் ஒரு ஒரு ஆயுசு என்று கழியும் இந்த நாளில், நாமிருவரும்,

இவ்வளவு சுருக்க, இவ்வளவு நாள் பிரிந்திருக்கும் இந்தச் சமயத்தில், நம்மிருவரிடையிலும் நேர்ந்திருக்கும் ஒரு ஒரு பார்வையிலும், மூச்சிலும் தாழ்ந்த ஒன்றிரண்டு பேச்சுக் களும், நாடியோ, அகஸ்மாத்தாவோ, ஒருவர் மேல் ஒருவர் பட்ட ஸ்பரிசமோ, நினைவின் பொக்கிஷமாய்த் தான் தோன்றுகிறது. நாங்கள் அம்மாதிரி பொக்கிஷங் களைப் பத்திரமாய்க் காப்பாற்றுவதிலும் அவைகளை நம்பிக் கொண்டிருப்பதிலும்தான் உயிர் வாழ்கிறோம்.

என் தகப்பனாருக்கு வாசலில் யாராவது வயதான வர்கள் போனால், அவரை அறியாமலே அவர் கைகள் கூம்பும். "என்னப்பா?" என்று கேட்டால் சொல்வார், "அம்மா இந்தக் கிழவனார் வயது நான் இருப்பேனா என்று எனக்கு நிச்சயமில்லை. காலமோ அல்பாயுசுக் காலமாயிருக்கிறது. இந்த நாளில் இத்தனை வயசு வரைக்கும் இருக்கிறதே, காலத்தையும் வயசையும் இவர்கள் ஜயம் கண்ட மாதிரிதானே? இவர்களுடைய அந்த வெற்றிக்கு வணங்குகிறேன்." அவர் வேணுமென்றே குரலைப் பணிவாய் வைத்துக்கொண்டு அப்படிச் சொல்கையில் ஏதோ ஒரு தினுசில் உருக்கமாயிருக்கும்.

ஏன், அவ்வளவு தூரம் போவானேன்? இந்தக் குடும்பத்திலேயே, ஆயுசுக்கும் ரணமாய், தீபாவளிக்குத் தீபாவளி தன்னைத் தானே புதுப்பித்துக் கொள்ளும் திருஷ்டாந்தம் இல்லையா? நீங்கள் இப்போது நால்வரா யிருப்பவர்கள். ஐவராயிருந்தவர்கள் தானே!

கடைசியில் எதைப் பற்றி எழுத வேண்டுமென்று நினைத்திருந்தேனோ, அதுக்கே வந்துவிட்டேன். நீங்கள் இல்லாமலே நடந்த தலை தீபாவளிக் கொண்டாட்டத் தைப் பற்றித்தான்.

அம்மாவைப் பார்த்தால் ஒரு சமயம் பிரமிப்பாய்த் தானிருக்கிறது. அந்த பாரி சரீரத்துடன் அவர் எப்படிப் பம்பரமாய்ச் சுற்றுகிறார், எவ்வளவு வேலை செய்கிறார், ஓய்ச்சல் ஒழிவில்லாமல்! சிறிசுகள் எங்களால் அவருக்குச் சரியாய்ச் சமாளிக்க முடியவில்லையே! மாடிக்குப் போய் அவர் மாமியாருக்குச் சிசுரூஷை பண்ணிவிட்டு, மலம் முதற்கொண்டு எடுக்க வேண்டியிருக்கிறது— வேறொருவரையும் பாட்டி பணிவிடைக்கு விடுவதில்லை—உங்கள் அப்பாவுக்குச் சிசுரூஷை பண்ணிவிட்டு......அப்பாவுக்கு என்ன, இந்த வயசில் இவ்வளவு கோபம் வருகிறது! ஒரு புளியோ, மிளகாயோ, துளி சமையலில் தூக்கிவிட்டால், தாலத்தையும் சாமான்களையும் அப்படி அம்மானை ஆடுகிறாரே! அவரைக் கண்டாலே மாட்டுப் பெண்களுக் கெல்லாம் நடுக்கம். அழகாயிருக்கிறார், வழித்த கழி மாதிரி, ஒல்லியாய், நிமிர்ந்த முதுகுடன்; இந்த வயசில் அவர் தலையில் அவ்வளவு அடர்த்தியாய்த் தும்பை மயிர்! கண்கள் எப்பவும் தணல் பிழம்பாவே யிருக்கின்றன. அம்மா சொல்கிறார்: ''என்ன செய்வார் பிராம்மணன்? உத்தியோகத்திலிருந்து ரிடையர் ஆன பிறகு பொழுது போகவில்லை. ஆத்தில் அமுல் பண்ணுகிறார். ஆபீஸில் பண்ணிப் பண்ணிப் பழக்கம்! இனிமேல் வளைக்கிற வயசா? வளைத்தால் அவர் 'டப்'பென முறிஞ்சு போவார். நான் பொத்தைப் பூசனிக்காய், 'பொட்'டென உடைஞ்சு போவேன். நாங்கள் இருக்கிற வரைக்கும் நீங்கள் எல்லாம் ஸஹிச்சுண்டு போக வேண்டியதுதான். இந்த மாடியி லிருக்கிற கிழவியை வந்த இடத்துக்குச் சேர்க்க வேண்டிய பொறுப்பு ஒண்ணு இருக்கு. அப்புறம்—''

''ஏன் அம்மா இப்படியெல்லாம் பேசறேள்?'' என்பார் மூத்த ஓர்ப்படி.

''பின்னே என்ன, நாங்கள் இருந்துண்டே யிருந்தால், நீங்கள் உங்கள் இஷ்டப்படி எப்போ இருக்கிறது?''

''இப்போ எங்களுக்கு என்னம்மா குறைச்சல்?''

அம்மாவுக்கு உள்ளூறச் சந்தோஷந்தான். ஆனால் வெளிக் காண்பித்துக் கொள்ளமாட்டார். ''அது சரிதாண்டி, நீ எல்லோருக்கும் முன்னாலே வந்துட்டே. பின்னாலே வந்தவாளுக்கெல்லாம் அப்படியிருக்குமோ? ஏன், என் பெண்ணையே எடுத்துக்கோயன்; அவளுக்குக் காலேஜ் குமாரியா விளங்கணும்னு ஆசையாயிருக்கு. இஷ்டப்படி வந்துண்டு போயிண்டு, உடம்பு தெரிய உடுத்திண்டு... நான் ஒருத்திதான் அதுக்கெல்லாம் குந்தகமாயிருக்கேன். அவள் பிறந்ததிலிருந்தே அப்பா உடன் பிறந்தமார் செல்லம். நான் வாயைப் பிளந்தேன்னா முதன் முதலில் பிள்ளையாருக்குத் தேங்காய் உடைப்பவள் அவள்தான். என் வயிற்றுப் பிண்டமே இப்படியிருந்தால், வீட்டுக்கு வந்தவா நீங்கள் என்ன என் பேச்சைக் கேட்டுடப்போறேள்?''

''இல்லேம்மா; நாங்கள் நீங்கள் சொன்னத்தைக் கேட்கறோம்மா...'' என்று ஏகக் குரலில் பள்ளிப் பையன்கள், வாய்ப்பாடு ஒப்பிப்பது போல், கோஷ்டியாய்ச் சொல்லுவோம்.

''ஆமா என்னமோ சொல்றேள்; காரியத்தில் காணோம். என்னைச் சுற்றி அஞ்சுபேர் இருக்கேள். முதுகைப் பிளக்கிறது; ஆளுக்கு அஞ்சு நாள்—ஏன், நானும் செய்யறேன். என் பெண் செய்யமாட்டாள்; அவள் வீதத்தை நான்தான் செஞ்சாகணும். ஆளுக்கு அஞ்சு நாள் காலையிலெழுந்து காப்பி போடுங்களேன் என்கிறேன். கேட்டதுக்குப் பலன் எல்லோரும் இன்னும் அரை மணி நேரம் அதிகம் தூங்கறேள்.''

எங்களுக்கு ரோஸமாயிருக்கும். இருந்து என்ன பண்ணுகிறது? அம்மாவை எதிர்த்து ஒண்ணும் சொல்ல

முடியாது. நாங்கள் 5½மணிக்கு எழுந்தால் அவர் ஐந்து மணிக்கு எழுந்து அடுப்பை மூட்டியிருப்பார். ஐந்து மணிக்கு எழுந்தால் அவர் 4½மணிக்கு எழுந்து காப்பியைக் கலந்துகொண்டிருப்பார். நாமரை மணிக்கு எழுந்தால் அவர் 4 மணிக்கு; இந்தப் போட்டிக்கு யார் என்ன பண்ண முடியும்?

"வாங்கோ, வாங்கோ; காப்பியைக் குடிச்சிட்டுப் போயிடுங்கோ, ஆறி அவலாய்ப்போய் அதை மறுபடியும் சுட வைக்காதபடிக்கு; அதுவே நீங்கள் பண்ற உபகாரம். நான்தான் சொல்றேனே; நான் ஒண்டியா யிருந்தப்போ எல்லாத்தையும் நானேதானே செஞ்சாகணும்; செஞ்சிண்டிருந்தேன். இப்போ என்னடான்னா கூட்டம் பெருத்துப் போச்சு: வேலையை ஏலம் போட்டாறது. ஊம். ஊம்...... நடக்கட்டும்...நடக்கட்டும் எல்லாம் நடக்கிற வரையில் தானே? நானும் ஒருநாள் ஓஞ்சு நடு ரேழியில் காலை நீட்டிட்டேன்னா, அப்போ நீங்கள் செஞ்சுதானே ஆகணும்? நீங்கள் செஞ்சத்தை நான் ஏத்துண்டுதானே ஆகணும்? மடியோ விழுப்போ ஆசாரமோ அநாசாரமோ—"

அம்மா அவர் காரியத்தைப்பற்றிச் சொல்லிக்கட்டும். எல்லாமே அவரே செஞ்சுண்டாத்தான் அவருக்குப் பாந்தமாயிருக்கிறது. எங்களைப் பெற்றவர்களும் ஏதோ தங்களுக்குத் தெரிஞ்சதை எங்களுக்குச் சொல்லிதான் வைத்திருக்கிறார்கள். எங்களுக்குத் தெரிஞ்சதை, எங்களால் முடிஞ்சவரை நன்றாய்த்தான் செய்வோம். ஆனால் அவர் ஆசாரத்தைப் பற்றிப் பெருமைபட்டுக் கொள்வதில் கடுகளவு நியாயம்கூடக் கிடையாது. ஜலம் குடிக்கும்போது ஒரு வேளையாவது பல்லில் டம்ளர் இடிக்காத நாள் கிடையாது; இதை யாராவது சொன்னால்—இதற்கென்று கொஞ்சம் தைரியமாய் மூத்த ஓரகத்திதான் கேட்கமுடியும்—ஒப்புக்கொள்ள மாட்டார்.

''எனக்குக் காது கேட்கல்லையே!'' என்றுவிடுவார். இதென்ன காதுக்குக் கேட்காவிட்டால் பல்லுக்குத தெரியாதா என்ன?

உங்கள் தங்கை எங்கேயாவது திரிந்துவிட்டு, ரேழியில் செருப்பை உதறிவிட்டு, காலைக்கூட அலம்பாமல் நேரே அடுப்பங்கரையில் வந்து ''என்னம்மா பண்ணியிருக்கே?'' என்று வாணாயிலிருந்து ஒற்றை விரலால் வழித்துப் போட்டுக் கொண்டு போவாள். அதற்குக் கேள்விமுறை கிடையாது. அதுக்கென்ன செய்வது? நான் அப்படியிருந் தால், என் தாயும் என்னிடம் அப்படித்தான் இருந்திருப் பாளோ என்னவோ? ஆனால் அம்மா ஏதோ, தன் வார்த்தை செல்றதுன்னு சொல்விக்கலாமே ஒழிய, இவ் வளவு பெரிய சம்சாரத்தில் இத்தனை சிறுசுகள், பெரிசுகள் விதவிதங்களினிடை உழல்கையில், எந்த சீலத்தை உண்மையா கொண்டாட முடியும்?

ஒரொரு சமயம் அம்மா சொல்வதைப் பார்த்தால், என்னவோ நாங்கள் அஞ்சுபேரும் வெறுமென தின்று தெறித்து வளைய வருகிற மாதிரி நினைத்துக் கொள்ள லாம. ஆனால் இந்த வீட்டுக்கு எத்தனை நாட்டுப் பெண் கள் வந்தாலும், அத்தனை பேருக்கும் மிஞ்சி வேலையிருக் கிறது. சமையலை விட்டால், வீட்டுக் காரியம் இல்லையா, விழுப்புக் காரியம் இல்லையா, குழந்தைகள் காரியம் இல்லையா, சுற்றுக் காரியம் இல்லையா? புருஷாளுக்கே செய்யற பணிவிடைக் காரியங்கள்,...... ...இதெல்லாம் காரியத்தில் சேர்த்தியில்லையா? இந்த வீட்டில் எத்தனை பேர்கள் இருக்கிறார்களோ அத்தனை பந்திகள். ஒவ்வொருத்தருக்கும் சமயத்துக்கு ஒரு குணம். ஒருத்தருக்குக் குழம்பு, ரஸம், மோர் எல்லாம் கிண்ணங் களில் கலத்தைச் சுற்றி வைத்தாக வேண்டும்; ஒருத்தருக்கு எதிரே நின்றுகொண்டு கரண்டி கரண்டியாய்ச் சொட்டி யாக வேண்டும். நீங்களோ மௌன விரதம்! தலை

கலத்தின்மேல் கவிழ்ந்துவிட்டால் சிப்பலைச் சாய்க்கக்கூட முகத்துக்கும் இலைக்கும் இடையில் இடம் கிடையாது; ஒருத்தர் சதா சளசளா வளவளா. கலத்தைப் பார்த்துச் சாப்பிடாமல் எழுந்த பிறகு இன்னும் பசிக்கிறதே, ரஸம் சாப்பிட்டேனோ? மோர் சாப்பிட்டேனோ?' என்று சந்தேகப்பட்டுக்கொண்டே இருப்பார். குழந்தைகளைப் பற்றியோ சொல்ல வேண்டாம்.

எல்லோர் வீட்டிலும் தீபாவளி முந்தின ராத்திரி யானால் நம் வீட்டில் மூணு நாட்களுக்கு முன்னதாக வந்துவிட்டது. அரைக்கிறதும், இடிக்கிறதும், கரைக் கிறதுமாய் அம்மா கை எப்படி வாஸிக்கிறது? மைஸூர்ப் பாகு கிளறும்போது கம்மென்று மணம் கூடத்தைத் தூக்குகிறது. நாக்கில் பட்டதும் மணலாய்க் கரைகிறது. அது மணல்கொம்பா, வெண்ணையா? எதை வாயில் போட்டாலும் உங்களை நினைத்துக்கொள்வேன். நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்? மௌனம் ஒன்றைத் தவிர வேறெதைத் தனியாய் அநுபவிக்க முடியும்? மௌனம் கூட ஒரு 'ஸ்டே'ஜிக்குப் பிறகு அநுபவிக்கிற விஷயமில்லை. வழியில்லாமல் ஸஹித்துக்கொள்ளும் சமாசாரம்தான். உங்களுக்கும் எனக்கும மௌனமா யிருக்கிற வயசா? நெஞ்சக் கிளர்ச்சியை ஒருவருக் கொருவர் சொல்லச் சொல்ல, அலுக்காமல், இன்னமும் சொல்லிக்கொள்ளும் நாளல்லவா? நீங்கள் ஏன் இப்படி வாயில்லாப் பூச்சியாயிருக்கிறேள்? நீங்கள் புருஷாள்— உங்களுக்கு உண்மையிலேயே விரக்தியிருக்கலாம். நான் உங்களைவிடச் சின்னவள்தானே! உங்கள் அறிவையும் பக்குவத்தையும் என்னிடம் எதிர்பார்க்கலாமா? உங்களுக் காக இல்லாவிட்டாலும் எனக்காகவாவது என்னுடன் நீங்கள் பேசணும். எனக்குப் பேச்சு வேணும், உங்கள் துணை வேணும்... ஐயையோ, இதென்ன உங்களைக் கை யைப் பிடித்து இழுக்கிற மாதிரி நடந்து கொள்கிறேனே!

என்னை மன்னிச்சுக்கோங்கோ, தப்பா நினைச்சுக்கா தேங்கோ. ஆனால் எனக்கு உங்களையும் என்னையும் பற்றித் தவிர வேறு நினைப்பில்லை, 'நானும் நீயும்' எனும் இந்த ஆதாரத்தை ஒட்டின சாக்குத்தான் மற்றதெல்லாம் எனக்கு. இதைப் பற்றிச் சிந்திக்க ஆரம்பித்துவிட்டால் எழுத வந்ததுகூட மறந்துவிடுகிறது.

ஆனால்,' 'நானும் நீங்களும்' என்று எல்லாம் எண்ண வும் எழுதவும் சுவையாயிருந்தாலும் குடும்பம் என்பதை எங்கே ஒதுக்கிவைக்க முடிகிறது, அல்லது மறந்துவிட முடிகிறது? குடும்பம் என்பது ஒரு க்ஷீராப்தி. அதிலிருந்து தான் லக்ஷ்மி. ஐராவதம், உச்சஸ்ரவஸ் எல்லாம் உண்டா கிறது. குடும்பத்திலிருந்து நீங்கள் முளைத்ததனால்தானே எனக்குக் கிட்டினீர்கள்? ஆலகால விஷமும் அதிலிருந்து தான்; உடனே அதற்கு மாற்றான அம்ருதமும் அதில் தான். ஒன்றுமில்லை, அல்ப விஷயம்; இந்தக் குடும்பத் திலிருப்பதால்தானே, தீபாவளியை நான் அநுபவிக்க முடிகிறது! நீங்கள் எங்கேயோ இருக்கிறீர்கள்.

எனக்குத் தோன்றுகிறது. நானும் நீயுமிலிருந்து பிறந்து பெருகிய குடும்பத்தில் நானும் நீயுமாய் இழைந்து மறுபடியும் குடும்பத்துள்ளேயே மறைந்துவிட்ட நானும் நீயின் ஒரு தோற்றமான சாக்ஷிதான் தீபாவளியோ? குடும்பமே நானும் நீயாய்க் கண்ட பின், இரண்டிற்கும் என்ன வித்தியாசம்?

எனக்கு இப்படித்தான் தோன்றிற்று. தீபாவளிக்கு முதல் ராத்ரி கூடத்து ஊஞ்சலில் புது வேஷ்டிகளும் புடவைகளும் சட்டைகளும் ரவிக்கைகளும் போராய்க் குவிந்திருப்பதைப் பார்த்ததும் ஏன் இத்தனை துணிகளை யும் நானே உடுத்திக் கொண்டுவிட்டால் என்ன? பொம்ம னாட்டி துணிகளை நானும் புருஷாள் துணிகளையும், உங்களுக்காக நானே! நீங்கள்தான் இல்லையே. எல்லாமே இந்த விசுவரூப நானும் நீயுக்குந்தானே?

அம்மா ஒரு மரச்சீப்பில் கரும்பச்சையாய் ஒரு உருண்டையை ஏந்திக்கொண்டு என்னிடம் வந்தார்.

''குட்டீ, சாப்பிட்டுட்டையா?''

''ஆச்சு அம்மா.''

''தின்ன வேண்டியதெல்லாம் தின்னாச்சா?''

''ஆச்சு—'' (அந்தக் கோதுமை அல்வாவில் ஒரு துண்டு வாங்கிட்டால் தேவலை. நான்தான் துண்டு போட்டேன். ஆனால் கேக்கறதுக்கு வெக்கமாயிருக்கே!)

''அப்படியானால் உக்காந்துக்கோ, மருதாணி யிடறேன்.''

அம்மா என் பாதங்களைத் தொட்டதும் எனக்கு உடல் பதறிப்போச்சு. ''என்னம்மா பண்றேள்?'' அம்மா கையிலிடப் போறாராக்கும் என்று நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால் என் பேச்சு அம்மாவுக்குக் காது கேட்கவில்லை. என் பாதங்களை எங்கோ நினைவாய் வருடிக் கொண்டிருந்தார். வேலை செய்தும் பூப்போன்று மெத்திட்ட கைகள்; எனக்கு இருப்பே கொள்ளவில்லை. அம்மா திடீரென்று என் பாதங்களைக் கெட்டியாப் பிடித்துக் கொண்டு அவைமேல் குனிந்தார். அவர் தோளும் உடலும் அலைச் சுழல்கள்போல் விதிர்ந்தன. உயர்ந்த வெண் பட்டுப்போல் அவர் கூந்தல் பளபளத்தது. என் பாதங்களின் மேல் இரு அனல் சொட்டுக்கள் உதிர்ந்து பொரிந்தன.

''அம்மா! அம்மா!'' எனக்கு அழுகை வந்துவிட்டது. அதுவே ஒட்டுவாரொட்டி. எனக்கும் தாங்கிக்கிற மனசு இல்லை.

''ஒண்ணுமில்லேடி குட்டி பயப்படாதே.'' அம்மா மூக்கை உறிஞ்சிக்கொண்டு கண்ணைத் துடைத்துக்கொண்டார். ''எனக்கு என்னவோ நினைப்பு வந்தது. எனக்கு ஒரு

பெண் இருந்தாள். முகம் உடல்வாகு எல்லாம் உன் அச்சு தான். இப்போ இருந்தால் உன் வயசுதான் இருப்பாள். என் நெஞ்சை அறிஞ்சவள் அவள்தான். மூணு நாள் ஜுரம், முதல் நாள் மூடிய கண்ணை அப்புறம் திறக்கவே யில்லை. மூளையில் கபம் தங்கிவிட்டதாம். இப்பொத்தான் காலத்திற்கேற்ப வியாதிகள் எல்லாம் புதுப்புது தினுசாய் வரதே! பின்னால் வந்த விபத்தில் அவளை மறந்து விட்டேன் என்று நினைத்தேன். ஆனால் இப்போத்தான் தெரியறது உண்மையில் எதுவுமே மறப்பதில்லை. எதுவுமே மறப்பதற்கில்லை. நல்லதோ கெடுதலோ அது அது, சரப்பாட்டின் சத்து ரத்தத்துடன் கலந்துவிடுவது போல், உடலிலேயே கலந்துவிடுகிறது. நாம் மறந்து விட்டோம் என்று மனப்பால் குடிக்கையில், 'அடி முட்டாளே! இதோ இருக்கிறேன், பார்!' என்று தலை தூக்கிக் காண்பிக்கிறது. உண்மையில் அதுவே போகப் போக நம்மைத் தாக்கும் மனோசக்தியாய்க்கூட மாறி விடுகிறது. இல்லாவிட்டால் என் மாமியாரும் நானும், எங்களுக்கு நேர்ந்ததெல்லாம் நேர்ந்தபின் இன்னும் ஏன் இந்த உலகத்திலே நீடிச்சு இருந்திண்டிருக்கணும்?''

இதைச் சொல்லிவிட்டு அம்மா அப்புறம் பேசவில்லை. தன்னை அமுக்கிய ஒரு பெரும் பாரத்தை உதறித் தள்ளி னாற் போல் ஒரு பெருமூச்செறிந்தார்; அவ்வளவுதான். என் பாதங்களில் மருதாணி இடுவதில் முனைந்தார். ஆனால் அவர் எனக்கு இடவில்லை. என் உருவத்தில் அவர் கண்ட தன் இறந்த பெண்ணின் பாவனைக்கும் இட வில்லை; எங்கள் இருவரையும் தாண்டி எங்களுக்குப் பொதுவாய் இருந்த இளமைக்கு மருதாணியிட்டு வழி பட்டுக்கொண்டிருந்தார். இந்த சமயத்துக்கு அந்த இளமையின் சின்னமாய்த்தான் அவருக்கு நான் விளங்கி னேன்; எனக்கு அப்படித்தான் தோன்றிற்று. இப்படியெல் லாம் நினைக்கவும் எனக்குப் பிடிக்கும். அதனால்தான் எனக்கு அப்படித் தோன்றிற்றோ என்னவோ?

இந்த வீட்டில் சில விஷயங்கள் வெகு அழகாயிருக்கின்றன. இங்கே நாலு சந்ததிகள் வாழ்கின்றன. உங்கள் பாட்டி, பிறகு அம்மா—அப்பா, பிறகு நாங்கள்—நீங்கள், பிறகு உங்கள் அண்ணன் அண்ணிமார்களின் குழந்தைகள். ஆனால் இங்கே எல்லா உயிரினங்களின் ஒருமையின் வழிபாடு இருக்கிறது. இங்கே பூஜை புனஸ்காரம் இல்லை. ஆனால் சில சமயங்களில், இந்த வீடு கோவிலாகவே தோன்றுகிறது. மலைக்கோட்டைமேல் உச்சிப்பிள்ளையார் எழுந்தருளியிருப்பது போல் பாட்டி மூன்றாவது மாடியில் எழுந்தருளி யிருக்கிறார். அங்கிருந்து அவர் செலுத்தும் ஆட்சி எங்களுக்குத் தெரியவில்லை. பாட்டிக்குத் தொந்தரவு கொடுக்கலாகாது எனக் குழந்தைகளுக்கு மூன்றா மாடிக்கு அனுமதி கிடையாது. அது அம்மா தவிர வேறு யாரும் அண்டக்கூடாத ப்ராகாரம். ஆறுகால பூஜைபோல், அம்மா பாரி சரீரத்தைத் தூக்கிக்கொண்டு, குறைந்தது நாளைக்கு ஆறு தடவையாவது ஏறி இறங்குகிறார். பாட்டிக்கு ஆகாரம் தனியாய் அம்மாவேதான் சமைக்கிறார். அது கஞ்சியா, கூழா, புனர்ப்பாகமா, சாதமா—எதுவுமே எங்களுக்குச் சரியாத் தெரியாது அதை ஒரு தட்டிலே, நிவேதனம் மாதிரி, இலையைப் போட்டு மூடித் தாங்கிக்கொண்டு, முகத்திலும் காலிலும் பளிச்சென பற்றிய மஞ்சளுடன், நெற்றியில் பதக்கம் போல் குங்குமத்துடனும், ஈரம் காயத் தளர முடிந்த கூந்தலில் சாமந்திக் கொத்துடனும் அம்மா மாடியேறுகையில் எனக்கு உடல் புல்லரிக்கிறது.

சில சமயங்களில் அம்மா அப்பா இரண்டு பேருமே மேலே போய் ஒன்றாய்க் கீழிறங்கி வருகிறார்கள், ஸ்வாமி தரிசனம் பண்ணி வருவதுபோல். ஒரு சமயம் அவர்கள் அப்படி சேர்ந்து வருகையில் 'சடக்'கென்று அவர்கள் காலடியில் விழுந்து நமஸ்காரம் பண்ணிவிட்டேன். அம்மா முகத்தில் ஒரு சிறு வியப்பும் கருணையும்

ததும்புகின்றன. அப்பாவின் கன்னங்களில் இறுகிய கடினம்கூடச் சற்று நெகிழ்கிறது.

''என்னடி குட்டீ, இப்போ என்ன விசேஷம்?''

எனக்கே தெரிந்தால்தானே? உணர்ச்சிதான் தொண்டையை அடைக்கிறது; வாயும் அடைச்சுப் போச்சு. கன்னங்களில் கண்ணீர் தாரை தாரையாய் வழிகிறது. அன்புடன் அம்மா முகத்தில் புன்னகை தவழ்கின்றது. என் கன்னத்தைத் தடவிவிட்டு இருவரும் மேலே நடந்து செல்கிறார்கள். அம்மா தாழ்ந்த குரலில் அப்பாவிடம் சொல்லிக் கொள்கிறார்:

''பரவாயில்லை பெண்ணைப் பெரியவா சின்னவா மரியாதை தெரிஞ்சு வளர்த்திருக்கா.''

அதனால் ஒன்றுமில்லை. என்னவோ எனக்குத் தோன்றிற்று, அவ்வளவுதான். இந்தச் சமயத்தில் இவர்களை நான் நமஸ்கரித்ததால், மேலிருந்து இவர்கள் பெற்று வந்த அருளில் கொஞ்சம் ஸ்வீகரித்துக் கொள்கிறேன். சந்ததியிலிருந்து சந்ததிக்கு இறங்கி வரும் பரம்பரை அருள்.

எங்களுக்கெல்லாம் எண்ணெய்க் குளி ஆன பிறகு மாடிக்குப் போன அம்மா, வழக்கத்தைவிடச் சுருக்கவே திரும்பி வருகிறார். சமாசாரம் தந்தி பறக்கிறது. ''பாட்டி கீழே வர ஆசைப்படுகிறார்.'' அப்பாவும் அம்மாவும் மேலேறிச் செல்கிறார்கள். நாங்கள் எல்லோரும் சொர்க்கவாசல் தரிசனத்திற்குக் காத்திருப்பது போல் பயபக்தியுடன் மௌனமாய்க் காத்திருக்கிறோம். சட்டென நினைப்பு வந்தவனாய் ஒரு கொள்ளுப்பேரன் வாண்டு 'ஸ்டூலை' வைத்து மேலேறி, மாடி விளக்கின் ஸ்விட்சைப் போடுகிறான்.

திடீரென மாடிவளைவில் பாட்டி தோன்றுகிறார். விமானத்தில் சுவாமியை எழுப்பினாற் போல் நாற்காலியில் அவர் இருக்க, அம்மாவும் அப்பாவும் இரு பக்கங்களிலும் நாற்காலியைப் பிடித்துக்கொண்டு வெகு ஜாக்கிரதையாய், மெதுவாய், கீழே இறங்குகிறார்கள், பிறகு பத்திரமாய் அப்பா பாட்டியை இரு கைகளிலும் வாரித் தூக்கிக் கொண்டுபோய் மணைமீது உட்கார்த்தி வைக்கிறார். அப்பா பிடித்துக்கொண்டிருக்க, அம்மா. பதச்சூட்டில் வெந்நீரை மொண்டு மொண்டு ஊற்றி, பாட்டி உடம்பைத் தடவினாற்போல தேய்க்கிறார். நாங்கள் எல்லோரும் சுற்றி நின்று பார்க்கிறோம்.

இது ஆதாரனை இல்லாது எது? ஆமாம், பாட்டியின் உடல் நிலை அடிக்கடி குளிப்பதற்கில்லை, எந்த சாக்கில் மாரில் சளி தாக்கிவிடுமோ எனும் பயம். உத்ஸவருக்கு விசேஷ நாட்களில் மாத்திரம் அபிஷேகம் நடப்பது போல், பாட்டிக்கு, நாள், கிழமை, பண்டிகை தினம் போதுதான், சர்வ ஜாக்கிரதையாய்க் குளிப்பாட்டு நடக்கும். சற்று அழுத்தித் தேய்த்தால் எங்கே கையோடு சதை பிய்ந்து வந்துவிடுமோ எனும்படி உடல் அவ்வளவு நளினம். அந்த உடலில், மானம் வெட்கம் எனும் உணர்ச்சி விகாரங்களுக்கு எங்கே இடம் இருக்கிறது? எந்த நேரத்தில் இந்த உடல் விலங்கைக் கழற்றி எறியப் போகிறோம் என்றுதான் அந்த உயிர் காத்துக் கொண்டிருக்கிறதே! மரம் சாய்ந்துவிட்டாலும் வேர்கள் பூமியிலிருந்து கழலமாட்டேன் என்கின்றன. பாட்டி நூறு தாண்டியாச்சென்று நினைக்கிறேன். வருடங்களின் ஸ்புடத்தில், அங்கங்கள், சுக்காய் உலர்ந்து, உடலே சுண்டிய உருண்டை ஆகிவிட்டது.

பாட்டியின் உடம்பைத் துவட்டி அவர்மேல் புடவையை மாட்டி நாற்காலியில் வைத்துக் கூடத்து வெளிச்சத்துக்குக் கொண்டு வருகிறார்கள். நாங்கள்

எல்லாரும் நமஸ்கரிக்கிறோம். பாட்டிமேல் கல்லைப் போல் மௌனம் இறங்கிப் பல வருஷங்கள் ஆகிவிட்டன. வாதத்தில் கைகால் முடங்கி நாக்கும் இழுத்து விட்டபின் கண்கள் தாம் பேசுகின்றன. கண்களில் பஞ்சு பூத்து விட்டாலும், குகையிலிட்ட விளக்குகள் போல், குழிகளில் எரிகின்றன. நான் தலை குனிகையிலே எனக்குத் தோன்று கிறது: இவர் இவரா, இதுவா? கோவிலில் நாம் வணங் கிடும் சின்னத்திற்கும், இவருக்கும் எந்த முறையில் வித்தியாசம்? கோவிலில்தான் என்ன இருக்கிறது?

—''ஐயோ ஐயோ—'' என ரேழி அறையிலிருந்து ஒரு கூக்குரல் கிளம்புகிறது. என்னவோ ஏதோ எனப் பதறிப் போய், எதிரோலமிட்டபடி எல்லோரும் குலுங்கக் குலுங்க ஓடுகிறோம். 'வீல்' என அழுதபடி குழந்தை அவன் பாட்டி மேல் வந்து விழுகிறான். ''என்னடா கண்ணே!'' அம்மா அப்படியே வாரி அணைத்துக் கொண்டார். சேகர் எப்பவும் செல்லப் பேரன். இரண்டாமவரின் செல்வமில்லையா?

''பாட்டி! பாட்டி!'' பையன் ரோஸத்தில் இன்னமும் விக்கி விக்கி அழுகின்றான். ''அம்மா, அடி அடின்னு அடிச் சூட்டா—''

''அடிப் பாவீ! நாளும் கிழமையுமாய் என்ன பண்ணீட்டாடா உன்னை!'' அம்மாவுக்கு உண்மையிலே வயிறு எரிந்து போய்விட்டது, கன்னத்தில் அஞ்சு விரலும் பதிஞ்சிருந்ததைப் பார்த்ததும்.

''காந்தீ! ஏண்டி காந்தீ!!''

ரேழியறை ஜன்னலில், காந்திமதி மன்னி உட்காந் திருந்தாள். ஒரு காலைத் தொங்கவிட்டு ஒரு காலைக் குந்திட்டு, அந்த முட்டிமேல் கைகளைக் கோத்துக் கொண்டு, கூந்தல் அவிழ்ந்து தோளில் புரள்வதுகூட

அவளுக்குத் தெரியவில்லை. அவள் கண்களில் கோபக் கனல் வீசிற்று. உள்வலியில் புருவங்கள் நெரிந்து, கீழ் உதடு பிதுங்கிற்று. அம்மாவைக் கண்டதும் அவள் எழுந்திருக்கக்கூட இல்லை.

''ஐயையோ!'' என் பக்கத்தில் சின்ன மன்னி நின்று கொண்டிருந்தாள். முழங்கையைப்பிடித்துக் காதண்டை, ''காந்தி மன்னிக்கு வெறி வந்திருக்கு'' என்றாள்.

காந்தி மன்னிக்கு இப்படி நினைத்துக் கொண்டு, இம் மாதிரி முன்னறிக்கையில்லாது குணக்கேடு வந்துவிடும். மூன்று மாதங்களுக்கு ஒரு முறையோ, ஆறு மாதங்களுக்கு ஒரு முறையோ மூன்று நாட்களுக்குக் கதவையடைத்துக் கொண்டு விடுவாள். அன்ன ஆகாரம், குளி ஒன்றும் கிடையாது. சந்திரனை ராகு பிடிப்பதுபோல் பெரிய மனச்சோர்வு அவளைக் கவ்விடும். அப்போது அம்மா உள்பட யாரும் அவள் வழிக்குப் போக மாட்டார்கள்.

காந்தி மன்னியின் வாழ்வே தீராத் துக்கமாகி விட்டது. சின்ன மன்னி அப்புறம் என்னிடம் விவரமாய்ச் சொன்னாள். என்னால் நிஜமாகவே கேட்கவே முடிய வில்லை. காதையும் பொத்திக்கொண்டு கண்ணையும் இறுக மூடிக்கொண்டு விட்டேன். அந்தக் காக்ஷியை நினைத்துப் பார்க்க முடியவில்லை. உங்கள் இரண்டாவது அண்ணா, தீபாவளிக்குச் சீனி வெடி வாங்கப்போய்ப் பட்டாசுக் கடையில் வெடி விபத்தில் மாட்டிக்கொண்டு விட்டாராமே! எந்த மஹாபாவி சிகரெட்டை அணைக் காமல் தூக்கி எறிந்தானோ, அல்லது வேறு என்ன நேர்ந்ததோ?

வெடித்த வெடியில் கடை சாமான்கள் பனைமர உயரம் எழும்பி விழுந்தனவாமே! அண்ணாவுக்குப் பிராணன் அங்கேயே போய்விட்டதாம்; அண்ணாவுக்கு

முகமே இல்லையாம். சில்லுசில்லாய்ப் பேந்துவிட்டதாம். முகமிருந்த விடத்தில் துணியைக் போட்டு மூடிக்கொண்டு வந்தார்களாம்.

சேகர் அப்போ வயிற்றிலே மூணு மாசமாம். இப்போ சேகருக்கு வயது ஏழா, எட்டா?

நிஜம்மா கேக்கறேன்; இந்தக் கஷ்டத்தை நீங்கள் எல்லோரும் எப்படி ஸஹிச்சிண்டிருந்தீர்கள்? அம்மாவும் அப்பாவும் எப்படி இதிலிருந்து மீண்டார்கள்? நீங்கள் எல்லாரும் முதலில் எப்படி உயிரோடிருக்கிறீர்கள்? காந்திமதி மன்னி கருகிப் போனதற்குக் கேட்பானேன்? இது நேர்வதற்கு முன்னால், அவள்தாள் ரொம்பவும் கலகலப்பாய், எப்பவும் சிரிச்ச முகமாயிருப்பாளாமே!

இப்போக்கூட, அந்த முகத்தின் அழகு முற்றிலும் அழியவில்லை. அவள் சீற்றம் எல்லாம் அவள் மேலேயே சாய்கையில், நெருப்பில் பொன் உருகி நெளிவது போல, தன் வேதனையின் தூய்மையில்தான் ஜ்வலிக்கிறாள். அவளுக்கு அவள் கதி நேர்ந்தபின், மற்றவர் போல் தெறித்துக்கொண்டு பிறந்தகம் போகாமல், எங்களோடு ஒருவராய், இதுவரை இங்கேயே அவள் தங்கியிருப்பதிலும் ஒரு அழகு பொலிகின்றது.

அவளை அவள் கோலத்தில் கண்டதும் அம்மாவுக்குக் கூடச் சற்றுக் குரல் தணிந்தது.

''ஏண்டி காந்தி, இன்னுமா குளிக்கல்லே? வா வா, எழுந்திரு— குழந்தையை இப்படி உடம்பு வீங்க அடிச்சிருக்கையே, இது நியாயமா?''

''நியாயமாம் நியாயம்! உலகத்தில் நியாயம் எங்கே யிருக்கு?''

காந்திமதி மன்னி குரலில் நெருப்பு கக்கிற்று.

"அதற்குக் குழந்தை என்ன பண்ணுவான்?"

"பாட்டி! பாட்டி? நான் ஒண்ணுமே பண்ணல்லே. ஊசி மத்தாப்பைப் பிடிச்சண்டு வந்து 'இதோ பாரு அம்மா'ன்னு இவள் முகத்துக்கெதிரே நீட்டினேன். அவ்வளவுதான்; என்னைக் கையைப் பிடிச்சு இழுத்துக் குனியவெச்சு முதுகிலேயும் மூஞ்சிலேயும் கோத்துக் கோத்து அறைஞ்சுட்டா, பாட்டீ!"—பையனுக்குச் சொல்லும்போதே துக்கம் புதிதாய்ப் பெருகிற்று. அம்மா அவனை அணைத்துக் கொண்டார்.

"இங்கே வா தோசி, உன்னைத் தொலைச்சு முழுகிப்பிடறேன்! வயத்திலே இருக்கறபோதே அப்பனுக்கு உலை வெச்சாச்சு. உன்னை என்ன பண்ணால் தகாது?"

அம்மாவுக்குக் கண கோபம் வந்துவிட்டது.

"நீயும் நானும் பண்ணின பாபத்துக்குக் குழந்தையை ஏண்டி கறுவறே? என் பிள்ளை நினைப்புக்கு, அவனையாவது ஆண்டவன் நமக்குப் பிச்சையிட்டிருக்கான்னு ஞாபகம் வெச்சுக்கோ, ஏன் இன்னிக்குத் தான் நான் பார்த்துண்டையா துக்கத்தை கொண்டாடிக்க? நானும்தான் பிள்ளையைத் தோத்துட்டு நிக்கறேன். எனக்குத் துக்கமில்லையா? நான் உதறி ஏறிஞ்சுட்டு வளையவல்லை?"

மன்னி சீறினாள். "உங்களுக்குப் பிள்ளை போனதும் எனக்குக் கணவன் போனதும் ஒண்ணாயிடுமோ?"

நாங்கள் அப்படியே ஸ்தம்பிச்சுப் போயிட்டோம். அம்மாவை நேரிடையாகப் பார்த்து இப்படிப் பேசறவாளும் இருக்காளா? இன்னிக்கு விடிஞ்ச வேளை என்ன வேளை?

அம்மா ஒன்றும் பதில் பேசவில்லை. குழந்தையைக் கீழேயிறக்கிவிட்டு நேரே போய் மருமகளை வாரி யணைத்துக் கொண்டார்.

மன்னி பொட்டென உடைந்து போனாள். அம்மா வின் அகன்ற இடுப்பைக் கட்டிக்கொண்டு குழந்தைக்கு மேல் விக்கி அழுதாள். அம்மா கண்கள் பெருகின. மருமகளின் கூந்தலை முடித்து நெற்றியில் கலைந்த மயிரைச் சரியாய் ஒதுக்கிவிட்டார்.

"காந்தி, இதோ பார், இதோ பாரம்மா—"

சேகர் ஒரு ஊசி மத்தாப்பை அம்மாவுக்கும் பாட்டிக்கும் முகத்துக்கு நேர் பிடித்துச் சிரித்துக்கொண் டிருந்தான். அவன் கன்னத்தில் கண்ணீர் இன்னும் காயவில்லை.

எங்களில் ஒருவர் விலக்கில்லாமல் எல்லோருக்கும் கண்கள் நனைந்திருந்தன.

குடும்பம் ஒரு பாற்கடல். அதிலிருந்துதான் லக்ஷ்மி ஐராவதம், உச்சஸ்ரவஸ் எல்லாம் உண்டாயின. அதிலிருந்து முளைத்துத்தான் எனக்கு நீங்கள் கிட்டினீர் கள். ஆலஹால விஷமும் அதிலிருந்துதான் உண்டாகியது; உடனே அதற்கு மாற்றான அமிருதமும் அதிலேயே தான்.........

